


# பொன் விழா மலர்

## சைவ சித்தாந்த மகா சமாஜம்.

(1955)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## சைவ சித்தாந்த மகா சமாஜம்

# பொன்விழா மலர்


சைவ சித்தாந்த மகா சமாஜம்

192, லாயிட்ஸ் ரோட், சென்னை-14

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை, சென்னை - 14

1955

விலை ரூபா ஒன்று

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# அணிந்துரை

ச. சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ., எல். டி.

சைவ சமயம் அளப்பரும் தொன்மையும் மேன்மையும் உடையது. பிற சமயங்களையும் நீதி வழுவா நெறிமுறையில் தன்னோடிணைத்துக்கொள்ளும் பெருந்தன்மை வாய்ந்தது. சமயங்கடந்த மோன சமரசத்தைத் தன்னுச்சியில் கொண்டிலகுவது. அநுபவம், அளவை, ஆகமம் என்னும் பிரமாணங்களை ஏற்று எக்காலத்திற்கும் பொருத்தமான சமயமாய் இலகும் மாட்சியுடையது.

வேத சிவாகமங்களையும், 12 திருமுறைகளையும், 14 சித்தாந்த சாஸ்திரங்களையும் பிரமாணமாகக் கொண்டுள்ள இம்மாபெரும் சமரச சமயம் தமிழகத்தில் 'சுத்தாத்துவித சைவ சித்தாந்தம்' என்னும் சிறப்புப் பெயருடன் விளங்குவது. சைவக் கோட்பாடுகளின் மாண்பு மலை போன்றிருப்பினும், மக்கள் வாழ்க்கையில் சிற்சில சமயங்களில் இச்சைவம் ஒளி குறைந்திருந்ததைச் சரித வாயிலாக அறிகிறோம். அப்படி ஒளி மழுங்கிய காலத்தில் நம் பரமாசாரியர் நால்வர் முதலியோர் அவதரித்துச் சைவங்காத்தருளினர்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் அதற்கு முன்னும் ஆங்கில ஆட்சிச் சூழ்நிலையினாலும், நம் சமுதாயத்தின் அன்பு அறிவு ஆற்றற் குறைவினாலும் அந்நிய மொழிக்கும் நாகரீகத்துக்கும் அடிமைப்படும் அஞ்ஞான மோகம் அதிகரித்தது. சீரிய பாரதப் பண்பாட்டைப் புறக்கணிக்கும் புன்மை தோன்றியது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஸ்ரீ ராமலிங்கர் போன்ற மகா புருஷர்கள் தோன்றி இப்புன்மையைப் போக்கி நன்மை பெருக்க அருந்தொண்டாற்றினர். வாழ்விற் கண்ட குறைகளைத் தவிர்த்து இச் சமுதாயத்தை மீண்டும் செந்நெறியில் நிறுத்தும் தொண்டு புரியத் திருவருள் தூண்டுதலால் தோன்றியது இச்சைவ சித்தாந்த மகா சமாஜமும். இது, கரையேறவிட்ட நகரில், நம் சமுதாயத்தை இத்தலைமுறையில் சமயத்துறையிற் கரையேற்றிவிடுதற்கவதரித்தவராய் விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஞானியார் அடிகள் திருமடத்தில், அதே ஆர்வமுடைய பேரறிஞர் மறைமலையடிகளால் 1905-ல் தொடங்கப் பெற்றது.

கடந்த ஐம்பதாண்டுகளாகச் சைவப் பணி பல புரிந்து வந்துள்ள இம் மகா சமாஜத்தின் பொன்விழா இச் சிதம்பர தலத்தில் நிகழ்வது சாலப் பொருத்தமுடைத்து. அவ்விழாவின் ஓர் அங்கமாக இப்பொன்விழா மலர் வெளிவருகின்றது.

இம்மலரில், இச்சமாஜத்தின் வரலாறும் தொண்டுகளும் முதற்கண் குறிக்கப்பட்டுள்ளன. 45 அறிஞர் எழுதிய அரிய கட்டுரைகள் இதழ்களாய் இலகுகின்றன. இவை, திருமுறைகள் சித்தாந்த சாத்திரங்களின் கருத்துக்கள், சைவ இலக்கிய ஆராய்ச்சிகள், பிற நாட்டு நல்லறிஞர் சைவத்திற்குத் தந்துள்ள

பாராட்டுரைகள், சைவ வளர்ச்சிக்கான காரியங்கள், மற்றும் பல விழுமிய பொருள்கள் இவைகளைப் பற்றிச் செம்மையாக எழுதப் பெற்றவை. நல்லோர் பலரும் விரும்பிப் படித்துப் பெரும் பயனடைதற்கு உரியவை.*

இவைகளை எழுதி உதவிய அறிஞர்கட்கும், இம்மலரை வெளியிடுதற்குப் பேரார்வத்துடன் பொருள் வழங்கியும் அவசியமான பிற பல பணி புரிந்தும் உதவிய அன்பர்கட்கும், பதிப்பித்த இரண்டு அறிஞர்கட்கும் இச்சமாஜத்தின் நன்றி உரியது.

நாம் வாழுமிக்காலம் அரசியல் சுதந்திரம் நமக்குக் கிடைத்துள்ள நற்காலம். பல நாட்டார் தொடர்பும் பெரிய அளவில் விரைந்து வளர்ந்து வரும் விஞ்ஞான காலம். இப்போது, பலர் கருத்துக்களும் வந்து மோதும் இப்புது யுகத்தில் நம் அருமைச் சைவத்தின் எதிர்கால நிலை எப்படியிருக்குமோ என்று மூதறிஞர் சற்றுக் கவலையோடு ஆலோசிக்கத் தலைப்பட்டுள்ளனர். கால் நூற்றாண்டுக்கு முன்பு ஒருமுறை நம் தமிழகச் சைவப் பெரியார்கள் ஒன்றுகூடி நாட்டில் நம் சமயம் எந்நிலையிலுள்ள தென்பதைக் கவனித்து, சைவக் கோட்பாடுகளையும், சைவத்தை நம் சமுதாயத்தில் தாழாது காத்தற்குரிய வழிமுறைகளையும் பற்றி ஆராய்ந்து தம் கருத்துக்களை 20 தீர்மானங்களாக வெளியிட்டனர். †இவை எதிர்காலத்திலும் சைவத்தைக் காப்பதற்குப் பயன்படக்கூடியவை.

உலகமெங்கும் சமாதானமும் சகோதரத்துவமும் வளர வேண்டுமென்று எல்லா நாடுகளிலும் பொது மக்கள் அவாவுகின்றனர். எல்லாச் சமயங்களின் அடிப்படையான நோக்கமும் இஃதாகத்தான் இருக்கும் - இருக்க வேண்டும். நம் நாட்டுச் சமயம், பண்பாடு இவற்றை அறிந்த மேல்நாட்டுப் பேரறிஞர்களிற் பலர், சில காலமாக உலக சமாதானத்திற்குச் சிறப்பு வகையில் வழிகாட்ட வல்லது நம் பாரதத் திருநாடென்று மதித்து இதனை அன்புடன் நோக்குகின்றனர்; நேரில் வந்து காண்கின்றனர். ஆனால், 'உலகத்திலுள்ள பிற சமயங்கள் யாவும் வேரழிந்தொழிந்து போகவேண்டும்; எனது மதமொன்றே எங்கும் பரவி ஆட்சி புரிய வேண்டும்' என்னும் விரிவிலா அறிவினால் விளைந்த வேட்கையும் ஒருபுறம் பலமாக வேலை செய்கிறது. இது வளருமானால் அன்பும் சாந்தமும் உலக சகோதரத்துவமும் அலக்கணுற்று மாயும்; நம் நாட்டுச் சுதந்தரமும் பொலிவிழக்கும். இத்தருணத்தில், எம்மதமும் சம்மதம் எனக்கொள்ளும் நம் சநாதன சன்மார்க்கம், சமரச சைவம் வைணவம், பாரதப் பண்பாடு இவை மக்களிடையே புத்துணர்ச்சியூட்டுந் தகுதியுடன் மறுமலர்ச்சி பெற்றெழுந்து

---

* சமாஜத்தின் 48-ம் ஆண்டுவிழாத் தலைவர் திரு. வட்டுக்கோட்டை நாகலிங்கம்பிள்ளை, J. P. முதலிய மற்றும் சில அறிஞர்களனுப்பிய கட்டுரைகள் உரிய பொழுதிற் கிடைக்காமையால் அவற்றை இம்மலரில் சேர்க்க இயலவில்லை. இவை "சித்தாந்த"த்தில் பின்பு வெளியிடப்பெறும்.

† அநுபந்தம் பார்க்க. (பக்கம் 220).

வழி காட்டி நாட்டை உய்விக்க வேண்டும். இதற்கான தொண்டுகளை இந்து சமுதாயமும் திறம்படச் செய்ய இன்னே தொடங்க வேண்டும். முதற்கண், தனிமனிதன் வாழ்க்கையில் சத்தியமும், அன்பும், ஒழுக்கமும், தெய்வ பக்தியும், கடமையுணர்ச்சியும் நாடொறும் பெருகுதலை நாடவேண்டும். இப் பண்புகளுடன், யோகமும், தவமும், தியானமும் இவற்றின் தெய்வீக விளக்கமும் பண்டுபோல் இன்றும் நாட்டில் ஆங்காங்குச் சிறந்தோங்க வேண்டும் என்று பரமனைப் பிரார்த்திக்க வேண்டும். மாணவ சமுதாயத்தில் நல்லொழுக்கமும், தெய்வ நிச்சய புத்தியும், பாரதத் திருநாட்டின் உயரிய பண்பாட்டிற் பற்றும், நாட்டு முன்னேற்றத்தில் ஆர்வமும் வேர்க்கொண்டு வளரும் வகையில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும். மேலும், நம் எளிய சகோதரர்கள் வாழும் சேரிகள், குப்பங்கள், சிற்றூர்கட்கெல்லாம் தொண்டர்கள் சென்று தொடர்ச்சியாகச் சமயப் பிரசாரமும் தரித்திர நாராயண சேவையும் செய்வது மிகவும் அவசியமான கடமை என்று இந்துக்களனைவரும் உணரவேண்டும். இத் தொண்டுகளை நன்முகச் செய்யும் தகுதி பெற்ற இந்து மதத் தொண்டர்கட்குப் போதிய ஊதியம் அளித்து அவர்களை ஆயிரக்கணக்கில் நியமிக்க வேண்டும். இதற்கு நம் கோயில்களும், மடங்களும், செல்வர்களும், ஏனைய பொது மக்களும் தத்தம் மனச்சான்று குறிக்குமளவில் ஒழுங்காகப் பொருளுதவி, அதனை நம் சமாஜம் போன்ற மதிப்பிற்குரிய தாபனங்கள் வாயிலாக மேற்குறித்த பணிகட்குப் பயன்படுத்த வேண்டும். இத்துறையில், கிறிஸ்துவர், இஸ்லாமியர் போன்ற பிற மதச் சகோதரர் பலர் வழிகாட்டிகளாயுள்ளார்கள்.

இங்ஙனமெல்லாம் சமயத்துறையிலும் சமுதாயத் துறையிலும் இந்துக்கள் கட்டுப்பாடாய்ப் பெருத்த அளவில் பணி புரியாது வறிதே கிடப்பராகில், நம் சமயங்களும் சமுதாயமும் எதிர்காலத்தில் சுருங்கிப் பொலிவிழந்துவிடக்கூடும். இந்துக்களுட் காணும் உட்பிரிவுகள் இப்பணி புரிதற்குத் தடையாயிருக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை. "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே; நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே." இத்தேவைகளை யுணர்ந்து இந்து மூதறிஞர் சிலர் இப்போது சங்கங்கள் வாயிலாகப் பெருந்தொண்டாற்ற முற்பட்டிருக்கிறார்கள்.

ஐம்பதாண்டுகளாக அருந்தொண்டு புரிந்து வந்துள்ள இம்மகா சமாஜமும் இக்காலத்தின் தேவைகளை நன்குணர்ந்து தனித்தோ, ஒத்த நோக்கமுடைய பிற சங்கங்களுடன் இணைந்தோ, பெரிய அளவில் சேவை செய்தல் பெருஞ் சிறப்பாயிருக்கும்.

அம்பலவாணர் திருவருள் முன்னின்று நம்மையும், நம் நாட்டையும், உலகையும் உய்விப்பதாக. "என்றும் இன்பம் பெருகும் இயல்பினால் ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கு"வதாக.

திருச்சிற்றம்பலம்.

## சைவ சித்தாந்த மகா சமாஜச் செயற்குழுவினர்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ.,எல்.டி., அவர்கள் |
| துணைத்தலைவர் | : | ,, அ. சோமசுந்தரம் செட்டியார், எம்.ஏ. ,, |
| | | ,, க. வஜ்ஜிரவேல் முதலியார், பி. ஏ., எல். டி. ,, |
| செயலாளர் | : | ,, ச. சிவகுமாரன், எம்.ஏ. ,, |
| துணைச்செயலாளர் | : | ,, சு. இளவழகன் ,, |
| பொருட்காப்பாளர் | : | ,, ம. சி. நித்தியானந்தம் ,, |
| பத்திராசிரியர் | : | ,, ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி. ஏ., பி. எல். ,, |
| உதவிப் பத்திராசிரியர் | : | ,, புலவர் முருகவேள், பி. ஓ. எல். ,, |
| செயற்குழு உறுப்பினர் | : | ,, பாரிப்பாக்கம் கண்ணப்பமுதலியார் ,, |
| | | ,, வே. தியாகராய முதலியார் ,, |
| | | ,, மு. நாராயணசாமி முதலியார் ,, |
| | | ,, சி. வா. கிருஷ்ணமூர்த்தி முதலியார் ,, |
| | | ,, நே. த. கிருஷ்ணசாமி முதலியார் பி. ஏ., பி. டி. ,, |
| | | ,, ம. சி. சம்பந்த முதலியார் ,, |
| | | ,, டி. வேங்கடாசல முதலியார் ,, |
| | | ,, சி.என்.சிங்காரவேலு முதலியார்,பி.ஏ. ,, |
| | | ,, ச. நடேச முதலியார் ,, |
| | | ,, பூ. ஆலாலசுந்தரம் செட்டியார்,எம்.ஏ. ,, |
| | | ,, வித்துவான்-அ. ரா. சங்கரனார் ,, |
| | | ,, மு. வடிவேலாயுதனார், எம். ஏ. ,, |

### பொன்விழா வரவேற்புக் குழுவினர்

தலைவர் : திரு. ஆடீர்-எம். இரத்தினசபாபதிப் பிள்ளை அவர்கள்

செயலாளர் : திரு. எஸ். இரத்தினசாமி செட்டியார் அவர்கள்

# உள்ளுறை


| தலைப்பும் எழுதியோரும் | பக்கம் |
|---|---|
| அணிந்துரை—ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி. ... | iii |
| சைவ சித்தாந்த மகா சமாஜச் செயற்குழுவினர் ... | vi |
| உள்ளுறை ... | vii |
| 1. கடவுள் வணக்கம்—பொன்மலிந்த திருமுறைப் பாசுரங்கள் ... | 1 |
| 2. பொன்மலர் நாற்றமுடைத்து—மயிலைகிழார் இளமுருகனார் ... | 4 |
| 3. சைவசித்தாந்த மகாசமாஜ வரலாறும், 50 ஆண்டுத் திருத்தொண்டும் (சுருக்கம்)—ராவ்பகதூர் - சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல். ... | 5 |
| 4. ஆண்டுவிழாவின் தலைவர்கள் பட்டியல் ... | 18 |
| 5. சமாஜத்தொண்டர் யார் எவர் (Who is Who)—கோவைகிழாரும் மயிலைகிழாரும் தொகுத்தவை ... | 21 |
| 6. முதல் தொண்டர்—அ. கு. காமாட்சி அம்மையார், எம். ஏ. ... | 35 |
| 7. சொல்வேந்தரின் நல்விருந்து—க. வடிவேலாயுதம், எம். ஏ. ... | 39 |
| 8. நம்பியும் நகைச்சுவையும்—பூ.ஆலாலசுந்தரஞ்செட்டியார்,எம்.ஏ. ... | 43 |
| 9. சிற்றின்பத்துறையில் பேரின்ப நெறி—வித்துவான் - செ. வேங்கடராம செட்டியார் ... | 48 |
| 10. திருக்கோவையாரில் ஒரு செய்யுள்—சு. குமாரசாமி ... | 55 |
| 11. ஒரு பண்டைத் திருமுகம்—வித்துவான் - பாலூர். கண்ணப்ப முதலியார் ... | 58 |
| 12. திருமுருகாற்றுப்படையில் உவமைகள்—அ. தா. ப. திருஞான சம்பந்தன் ... | 64 |
| 13. காரைக்காற் பேய்—கோ. பாலசுந்தர நாயகர், எம். ஏ. ... | 67 |
| 14. நடமாடும் நம்பன்—சே. த. இராமலிங்கம்பிள்ளை, பி.ஏ., பி.டி. ... | 71 |
| 15. மழையோ மழை!—இராஜரத்தினம் அம்மையார், எம்.ஏ.,எல்.டி. ... | 74 |
| 16. ஊசியும் நூலும்—வ. பா. தாமரைக்கண்ணியார் ... | 78 |
| 17. திருமுறைகளில் இசை—சங்கீதம் - ப. சுந்தரேசன் ... | 82 |
| 18. "அவையே தானே ஆதல்"—வித்துவான் - மு. அருணாசலம் பிள்ளை ... | 89 |
| 19. உலக வழக்கிலும் ஆணவம் ஆளப்படுகின்றதே—வித்துவான் - ஆ. சிவலிங்கனார் ... | 97 |
| 20. மன்னவன் மகன்—புலவர்மணி - வித்துவான். மு. இரத்தின தேசிகர் ... | 99 |
| 21. சிவஞான சித்தியார்—வயிநாகரம்.வே.இராமநாதன் செட்டியார் ... | 102 |
| 22. உண்மை விளக்கம்—சிவக்கவிமணி - C. K. சுப்பிரமணிய முதலியார், பி. ஏ. ... | 106 |
| 23. சித்தாந்த முத்தி—ராவ்சாஹிப்-நல். முருகேச முதலியார், பி.ஏ. ... | 110 |
| 24. கட்டளைகளும் சிறு சாத்திர நூல்களும்—தி. கி. நாராயணசாமி நாயுடு ... | 113 |

25. முடிந்த முடிபு—சைவப் புலவர் - P. A. நடேச பிள்ளை ... 115
26. தொடர்ச்சி—முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் ... 122
27. சைவ சமயம்—புலவர் - முருகவேள், B. O. L. ... 126
28. திருச்சிற்றம்பலம் யாது ?—வித்துவான் - ந. ரா. தேவராசன் ... 132
29. ஒருகுறள் எடுத்த பெரிய வடிவம்—வல்லை - பாலசுப்பிரமணியம், பி. ஏ. ... 137
30. சங்ககாலத்தில் சிவன்—அ. மு. பரமசிவானந்தம், B. O. L., M. Litt. ... 141
31. காஞ்சிபுரத்தில் தமிழ் மாபாடியத் தலைவர்—வீ. திருஞான சம்பந்த முதலியார் ... 145
32. சைவ சமயம் தமிழ் நெறியே—வித்துவான் - சி. அருணை வடிவேலு முதலியார் ... 146
33. சைவத்தொண்டு—ஜி. வரதராஜன், பி. ஏ. ... 153
34. அரியானை—வித்துவான் - G. சுப்பிரமணியப் பிள்ளை, M. A., B. L. ... 158
35. அயல்நாட்டவரும் சைவ சித்தாந்தமும்—சாம. இராமலிங்கம், எம். ஏ. ... 162
36. சித்தாந்த சைவத்தின் முதற்பொருளும் அணையும் நெறியும்—க. வச்சிரவேல் முதலியார், பி. ஏ., எல். டி. ... 169
37. திரு ஐந்தெழுத்து—டாக்டர் - அ. சிதம்பரநாத செட்டியார், எம். ஏ., பிஎச். டி. ... 171
38. பேராசிரியர் சுந்தரம்பிள்ளையும் சைவமும்—டாக்டர் - வ. ஆ. தேவசேநாபதி, எம். ஏ., பிஎச். டி. ... 176
39. தில்லைக்கலம்பகம்—வித்துவான்-வை.சுந்தரேச வாண்டையார் ... 179
40. பத்தாம் அடியார்—ராவ்பகதூர் - தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ. ... 181
41. மெய்யன்பு—சுவாமி மதுரானந்தா ... 183
42. பழைய நினைவுகள்—க. ராமநாதன் செட்டியார், பி.ஏ.,பி.எல். ... 186
43. திருவார்த்தையுள் ஒரு வார்த்தை—ச. சிவகாமி அம்மையார் ... 191
44. ஓர் தேவாரத் தரும்பொருள்—சித்தாந்த பிரசங்காமிர்தம் - பூ. சமரபுரி முதலியார் ... 196
45. கதிரவனும் கம்பரும்—நீ. கந்தசாமி ... 200
46. பகுத்தறிவும் சமயச் சின்னங்களும்—ந. ரா. ஆடலரசு ... 203
47. தம்பியரின் தன்மை—ச. கா. சீரங்கம் ... 210
48. Appreciation of Saiva Siddhanta by Western Scholars—Compiled by T. K. Narayanaswami Naidu ... 214
49. மலரும் மணமும்—ச. சிவகுமாரன், எம். ஏ. ... 216
50. அநுபந்தம்—சைவப் பெரியார் தனிக்கூட்டத் தீர்மானங்கள் முதலியன ... 220
51. நமக்கு இனி வேண்டுவது யாது ?—ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி. ஏ., பி. எல். ... 225

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## சைவ சித்தாந்த மகா சமாஜம்

# பொன்விழா மலர்

## கடவுள் வணக்கம்

### பொன்மலிந்த திருமுறைப் பாசுரங்கள்

**ப**ன்னிரு திருமுறைகளுள் பொன் என்று தொடங்குவனவும் பொன் என்ற குறிப்புள்ளனவுமாக நூற்றுக்கணக்கான பாசுரங்கள் உள்ளன. இவற்றையெல்லாம் தொகுத்து வெளியிட்டால் இப் பொன் மலர் அளவு கடந்து விரியும் என்றெண்ணி, திருவாசகம் திருகோவையார் திருவிசைப்பா திருப்பல்லாண்டு எனும் தொகுதிகளுள் ஒவ்வொன்றும், ஏனைய 1—7, 10—12 திருமுறைகளுள் ஒவ்வொன்றுமாகப் பதினன்கு பாசுரங்களே இப் பொன்விழா மலரின் கடவுள் வணக்கச் செய்யுட்களாக இடம் பெற்றுள்ளன.

திருச்சிற்றம்பலம்

1. பொன்றி ரண்டன்ன புரிசடை புரளப் பொருகடற்
பவள மொடழல் நிறம் புரையக்
குன்றி ரண்டன்ன தோளுடை யகலங்
குலாய வெண்ணூலொடு கொழும்பொடி யணிவர்
மின்றி ரண்டன்ன நுண்ணிடை யரிவை
மெல்லிய லாளையோர் பாகமாப் பேணி
அன்றிரண் டுருவ மாயவெம் மடிகள்
அச்சிறு பாக்கம தாட்சி கொண்டாரே. —முதல் திருமுறை

2. பொன்னேர் கொன்றை மாலைபுரளு மகலத்தான்
மின்னேர் சடைகளுடையான் மீயச் சூரானைத்
தன்னேர் பிறரில்லானைத் தலையால் வணங்குவார்
அந்நேரிமை யோருலக மெய்த லரிதன்றே. —2-ம் திருமுறை

3. பொன்னிற நான்முகன் பச்சை யானென் றிவர் புக்குழித்
தன்னையின் னானெனக் காண்பரிய தழற் சோதியும்
புன்னைபொன் தாதுதிர் மல்குமந்தண் புகலிந்நகர்
மின்னிடை மாதொடும் வீற்றிருந்த விமலனன்றே. —3-ம் திருமுறை

4. பொன்னவில் புன்சடை யானடி யின்னிழல்
இன்னருள் சூடி யெள்காது மிராப்பகல்
மன்னவர் கின்னரர் வானவர் தாந்தொழும்
அன்னவர் ஆரூர் அரநெறி யாரே. —4-ம் திருமுறை

5. பொன்னொத்த நிறத்தானும் பொருகடல்
தன்னொத்த நிறத்தானும் அறிகிலாப்
புன்னைத்தாது பொழிற் புகலூரரை
என்னத் தாவென என்னிடர் தீருமே. —5-ம் திருமுறை

6. பொன்னியலும் மேனியனே போற்றி போற்றி
பூதப்படை யுடையாய் போற்றி போற்றி
மன்னிய சீர்மறை நான்குமானாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
உலகுக் கொருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. —6-ம் திருமுறை

7. பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுண் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லா லினியாரை நினைக்கேனே. —7-ம் திருமுறை

8. பொன்னியலுந் திருமேனி வெண்ணீறு பொலிந்திடு மாகாதே
பூமழை மாதவர் கைகள் குவிந்து பொழிந்திடு மாகாதே
மின்னியல் நுண்ணிடையார்கள் கருத்து வெளிப்படுமாகாதே
வீணை முரன்றெழும் ஓசையில் இன்பம் மிகுத்திடுமாகாதே
தன்னடி யாரடிஎன் தலைமீது தழைப்பன ஆகாதே
தானடியோம் உடனே உய்யவந்து தலைப்படு மாகாதே
இன்னியம் எங்கும் நிறைந்தினிதாக இயம்பிடு மாகாதே
என்னைமுன் ஆளுடை ஈசன்என் அத்தன் எழுந்தருளப் பெறிலே.
—8-ம் திருமுறையுள் திருவாசகம்

9. பொன்னனை யான்தில்லைப் பொங்கர வம்புன் சடைமிடைந்த
மின்னனை யானருள் மேவலர்போன் மெல்விரல் வருந்த
மென்னனை ஆய்மறியே பறியேல் வெறியார் மலர்கள்
இன்னன யான் கொணர்ந்தேன் மணந்தாழ் குழற்கேய் வனவே.
—8-ம் திருமுறையுள் திருக்கோவையார்

10. செம்பொனே பவளக்குன்றமே நின்ற
திசைமுகன் மால்முதற் கூட்டத்
தன்பரானவர்கள் பருகும் ஆர்அமுதே
யத்தனே பித்தனே னுடைய
சம்புவே யணுவே தாணுவே சிவனே
சங்கரா சாட்டியக் குடியார்க்
கின்பனே யெங்கும் ஒழிவற நிறைந்தே
மிருக்கையி லிருந்த வாறியம்பே.
—9-ம் திருமுறையுள் திருவிசைப்பா

11. மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய்மண்டபத் துள்ளே
புகுந்து புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறி தந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.
—9-ம் திருமுறையுள் திருப்பல்லாண்டு

12. பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே. —10-ம் திருமுறை

13. பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மேனி பொலிந் திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
வீழ்சடை வெள்ளிக் குன்றந்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மால்விடை தன்னைக் கண்ட
என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ண
மாகிய ஈசனுக்கே. —11-ம் திருமுறை

14. பொன்மலைக் கொடியுட னமர்வெள்ளி யம்பொருப்பில்
தன்மையாம்படி சத்தியுஞ் சிவமுமாஞ் சரிதைப்
பன்மை யோனிகள் யாவையும் பயில்வன பணிந்தே
மன்னு மாதவர் தம்பிரான் கோயில் முன்வந்தார். —12-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

# பொன்மலர் நாற்றமுடைத்து

**மயிலைகிழார் இளமுருகனார்**

நமது சமாஜம் வெளியிடுகின்ற இப் பொன்மலர் நாற்ற முடைத்து, வண்டுடைத்து, தேனுமுடைத்து. பண்டை மறை வண்டு இதில் அரற்றுகின்றது, பசுந்தேன் ஞானம் இதில் ஒழுகு கின்றது, சிவகந்தம் இதில் பரந்து வீசுகின்றது. இம்மலர் அருட் கதிரோன் திருவருள் பெற்று ஒளிவீசும் முறையில், அன்பர்கள் இருதய கமல முகைகள் எல்லாம் கண் திறக்கின்றன.

சைவத்திற்கும் பொன்னிற்கும் நெருங்கிய தொடர்புண்டு. சிவபெருமான் திருவடி முதல் திருமுடிவரையில் பொன் நிறைந் துள்ளது. பொற்பாதம், பொன்னார் திருவடி, பொற்கழல்கள், பொன்னரை ஞாண், பொற்புரி நூல், பொன்னிலங்கு திரள்தோள், பொன் திரண்டன்ன புன்சடை முதலியன திருமுறைகளுள் புகழ் பெற்றன. அவன் அடியார்கட்கு அளிப்பதும் பொன். கழுமலவூரர்க் கம் பொன் ஆயிரம் கொடுத்தான். அவருக்கும் அப்பருக்கும் திருவீழி மிழலையில் நாடோறும் பொற்காசளித்தான். சுந்தரருக்குத் திருமுது குன்றத்தில் நிறைய பொன் அளித்தான். ஆற்றிலிட்டுத் திருவாரூர்க் கமலாலயத் திருக்குளத்தில் எடுத்தபோது மாற்றுரைத்துக் காட்ட வும் நேர்ந்தது. திருப்புகலூரில் செங்கற்களைப் பொற்கற்களாக்கினான். வேறு பல வகைகளிலும் பொன் தந்தான்.

பொன்னார் மேனியன் புகழும், அவன் பொற்பாத கமலங்களைச் சிரமேற் கொள்ளும் மெய்யடியார்கள் திருத்தொண்டும், அவர்கள் வாழ்க்கையிற் கொண்டுள்ள பொன்னொழுக் துண்மைகளும், அவர் கள் இல்லறத்திற்குப் பெருமையளிக்கும் பொற்பாவையர் இயல்பு முதலியனவும், இன்ன பல பொன்போன்ற செம்பொருள்களும் இப் பொன்மலரில் மிளிர்கின்றன. இப் பொன்மலர் பொன்னம் பலவன் தூக்கிய திருவடிக் காணிக்கையாக அளிக்கப் பெறுகின்ற மையால், இதைப் பயில்வோர் அனைவரும் பொன்னும் மெய்ப் பொருளும் போகமும் திருவும் பெற்று நீடூழி வாழ்வர். வாழ்க பொன்மலர், எங்கணும் வீசுக சிவகந்தம், ஆழ்க தீயது, எல்லாம் அரன் நாமமே சூழ்க.

<u>பகுதி – I</u>

# சைவ சித்தாந்த மகா சமாஜ வரலாறும், 50 ஆண்டுத் திருத்தொண்டும்

## (சுருக்கம்)

ராவ்பகதூர் - சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி. ஏ., பி. எல்.

**1. தோற்றுவாய் :—** சைவ சித்தாந்த மகா சமாஜம் தோன்றி 50 ஆண்டுகள் ஆகின்றன. பெருமை பொருந்திய அந்த நிகழ்ச்சியை நமது நாட்டவர்கள் கொண்டாடி முன் நிகழ்ந்த செயல்களை எடுத்துரைத்துப் பாராட்டி, அந்த வகையில் பின் நிகழவேண்டியவற்றை வற்புறுத்தி ஊக்கம் விளைவிப்பதே நாம் செய்யவேண்டிய பொருத்தமான செயல். அதற்காக ஒரு பெருவிழாவைப் "**பொன்விழா**" என்ற பெயரில் நடத்தவேண்டியது நமது கடமை. எந்தப் பெருமை பெற்ற புனித தலத்தில் முதல் ஆண்டில் பேரவை கூட்டி வினையாற்றினேமோ, அதே புனித தலத்தில் 50-ம் ஆண்டுப் பொன் விழாவை நடத்துவது பொருத்தம் என்று செயற் குழுவினர் முடிவு கட்டியுள்ளார்கள். முதல் ஆண்டு விழாவில் ஈழநாட்டுப் பெரியார் ஒருவர் தலைமை வகித்துச் சிறப்புற நடத்தி வைத்தார். பொன் விழாவிற்கு அதே ஈழநாட்டுப் பெரியார் மற்றொருவர் தலைமை வகிப்பது மிகவும் பொருத்தம் அல்லவா? மேலும் முதல் ஆண்டுவிழாவின் புகழ்பெற்ற தலைவரின் பெருமை மிகுந்த மருகரே இப் பொன்விழாவில் தலைமை வகிப்பது என்றால் அது பெருமகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சி தானே! ஈழநாட்டுத் தமிழ்ப் பெரு மக்களில் இவ்விருவருமே அரசாங்கத் தொடர்பில் மிகவுயர்ந்த நிலையில் இருப்பவர்கள். இவ்வாறு பல வகைகளிலும் சிறப்புற்ற பொன்விழாவில் ஒரு சிறந்த விழா மலர் வெளியிடுவதும் ஒப்பற்ற பெருஞ் சிறப்பாகும். அம் மலர் நீண்டகாலத்திற்குப் பல மக்களுக்கு பயன்படக்கூடிய அமைப்பில் இருக்கவேண்டும் என்பது பொதுமக்களின் கருத்து. அந்த முறையில் இந்த மலர் வெளி வருகின்றது.

**2. சைவத்தின் தொன்மை :—** உலக சமயங்களில் சைவ சமயம் மிகுந்த தொன்மை வாய்ந்தது. சைவ சமயத்தில் வழிபடும் மூர்த்தியின் திருவுருவங்கள் எப்போது தோன்றின என்று கூற இயலாது. தென்னாட்டில் உள்ள மிகத் தொன்மையான நூல்களில் அவ்வுருவங்கள் கூறப்பட்டிருக்கின்றன. சங்க நூல்களில் முழுமுதற் கடவுள் "பிறவா யாக்கைப் பெரியோன்" என்றும், "விரிசடை புனைந்த அவிர்சடைக் கடவுள்" என்றும் பாராட்டப்பட்டிருக்கின்றனர். வடநாட்டில் ஆரியர் புகுவதற்குமுன் இருந்த சிந்து நதி நாகரிக காலத்தில் சிவ ஆராதனை இருந்தது. சிவலிங்கங்களும், வேறு விக்ரகங்களும் சின்னங்களும் இருந்தன. இவைகள் 8000 ஆண்டுகளுக்கு முன்னரே மண்ணுள் புதைபட்டுக் கிடந்தன.

அண்மையிலே பண்டைய நாகரிகத்தைப் பற்றி நடந்த ஆராய்ச்சியின் பலனுக ஆப்பிரிக்காவிலும் அமெரிக்காவிலும் இலிங்க ஆராதனை இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அரபிப் பாலைவனங்களிலும் தெற்குப் பெசிபிக் தீவுகளிலும் இந்தச் சைவ ஆராதனை இருந்ததற்குச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன. ஆகவே, சைவ சமயமும் சைவ சின்னங்களும் மிகத் தொன்மையான காலத்திலிருந்தே போற்றப்பட்டு வந்திருக்கின்றன என்று கூறுவது மிகையல்ல.

இங்ஙனம் உலகிலேயே மிகத் தொன்மை வாய்ந்த இந்தச் சிவ வழிபாடு தென்னுட்டில் மிகச் சிறந்து வளர்ச்சி அடைந்து வந்தது. ஏனைய நாடுகளில் இவ்வழிபாடு நின்றுவிட்டது. தமிழ் நாட்டிலோ அது ஓர் ஒப்பற்ற சமயமாக வளர்ச்சி யடைந்து ஞானக் களஞ்சியமாகப் பெருகி, மிகச் சிறந்த கொள்கைகளால் மிளிர்ந்து ஓங்கிநின்று உலகச் சமயங்களுள் உயர்தனி நிலையில் இன்றும் உயிருடன் இருந்து வருகின்றது.

**3. கோட்பாடுகள் :**—சைவ சமயம் மிகவும் வளர்ச்சி பெற்ற சமயம், ஆகையால் அதில் காணும் கோட்பாடுகள் மிகவும் உயர்ந்தவை. அக்கோட்பாடுகளைப் புகட்டும் நூல்களும் மிக வுயர்ந்த முறையில் எழுதப்பட்டுள்ளன. அவற்றை இக்காலப் பிறசமய அறிஞர்களும் பெரிதும்மதித்து எழுதியுள்ளனர். விஞ்ஞான அறிஞர்களும் அக் கோட்பாடுகளின் உயர்ந்த போக்கை மெச்சி ஆதரிக்கின்றனர். இக் கோட்பாடுகளைத் திரட்டி வகுத்துப் போற்றி இருக்கும் உயர்ந்த முறை தனிச் சிறப்புடையதென்று கூறலாம். அவைகள் திருமறைகளின் முடிவாக அமைந்திருக்கின்றன. அவ்வாறு பரிணமித்துள்ள முடிந்த முடிபுகளின் தொகுதிக்கே “சித்தாந்தம்” என்றுபெயர். இச்சித்தாந்த உண்மைகள் எவராலும் மறுக்க முடியாத உயர்ந்த நிலையில் விளங்குகின்றன. அவைகளைத் திருமந்திரமும், மெய்கண்ட சாத்திரங்களும் நூல் வடிவில் தந்துள்ளன. அச் சித்தாந்த உண்மைகளை மேல்நாட்டு அறிஞர்கள் பலர் இன்னும் செவ்வையாக உணரவில்லை. அவர்களில் தமிழை நன்கறிந்த ஒருசிலரே—சில ஆங்கிலேயரும், இரண்டொரு ஜெர்மானியருமே—அவைகளைத் தங்கள் மொழிகளில் பெயர்த்தெழுதிப் புகழ்ந்திருக்கிறார்கள். அவர்களும் அவற்றைச் செவ்வையாக ஆராய்ச்சி செய்தவராகார். நம் தேசத்திலும் வடநாட்டு மக்களுக்குச் சித்தாந்தம் புரியாது. “அத்துவிதி”கள் அதைத் தீர ஆராயாமல் குறை கூறுவர். ஆகவே, இந்திய சமய ஆராய்ச்சி செய்த பெரிய அறிஞர்களும் சித்தாந்தத்திற்கு மிகக் குறைந்த இடம் தந்திருக்கிறார்கள். ஒரு பெயர் பெற்ற ஆசிரியர் அத்துவிதத்திற்குத் தம் நூலில் தந்துள்ள அளவில் சித்தாந்தத்திற்கு நூற்றில் ஒரு பங்குதான் தந்திருக்கின்றார் என்றால், அதில் அவர் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார் என்று உணரலாம்.

**4.** நமது நாட்டில் சைவம் வளர்ந்த பெருமை பொதுமக்கள், ஆராய்ந்து மகிழத்தக்க தொன்றாகும். படித்த சில பெரியோர்களே

யன்றிப் பெரும்பான்மை மக்கள் சைவத்தில் உள்ள தூய உண்மைகளை அறியவில்லை. பொதுவாக மக்கள், "சைவர்" என்றால் அவர்கள் ஒரு சிறு கூட்டத்தினர் என்றும், பொதுமக்களோடு அளவளாவி அவர்களைத் தம் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளாத குறுகிய மனப்பான்மை உடையவர் என்றும், மரக்கறி யுணவையே உண்பவர்கள் என்றுந்தான் கருதியிருக்கிறார்கள். வேறு சிலர் திருநீறும் உருத்திராட்சமும் அணிபவர்கள்என்றும், ஆலயங்களில் பூசை செய்து விழாக்களில் கலந்துகொண்டு ஆடம்பரம் செய்கிறவர்கள் என்றும் எண்ணுகிறார்கள். இப்படிப்பட்ட ஆசாரங்கள் மட்டுமே சைவம் ஆய்விடமாட்டா. அவைகள் மேற்பூச்சுக்கள்தான். நெஞ்சகத்தில் இறை வழிபாடு செய்துகொண்டு இறை பணியில் எப்பொழுதும் நின்று எல்லா வுயிர்களிடத்தும் அன்புபூண்டு சித்தாந்தக் கோட்பாடுகளை நன்கு அறிந்து, அவைகளை நடைமுறையில்—வாழ்க்கையில் கொண்டுவந்து வாழ்பவரே உண்மைச் சைவராவர். இவ்வாறு முன்னாளில் எண்ணிலா அன்பர்கள் உலகில் பிறந்து சைவ வாழ்வை நடத்திக் காட்டிச் சென்றிருக்கிறார்கள். இத்தகைய சைவமே உண்மைச் சைவம். இதனையே நமது நாடு போற்ற வேண்டும். இக்கொள்கைகளைப் பாமர மக்களிடமும் நன்கு பரப்பி அவர்கள் எல்லாரையும் உண்மைச் சைவர்கள் ஆகச் செய்வதே ஆன்றோர் கருத்து ஆகும்.

•

**5.** சங்க காலத்தில் சைவக் கொள்கைகள் தென் நாட்டில் சிறப்புற்றோங்கி இருந்தன. வடநாட்டுக் காஷ்மீரத்திலும் இக்கொள்கை நன்கு வேரூன்றி இருந்தது. அது ஒரு சிறப்பு முறையில் வளர்ச்சி யடைந்தது. பாவலர்களுக்குள்ளேயே பரவியிருந்தது. அது தற்போதும் அங்கே போற்றப்பட்டு வருகின்றது. ஆனால் இடை நாட்டில் பௌத்தம், சமணம், வைணவத்தின் பல திரிபுகள், சாக்தேயம் இவைகள் மிகப் பரவி யிருந்தமையால் சைவ சித்தாந்தத்தின் மேன்மைக் கொள்கைகள் பரவவில்லை. தென்னாட்டில்தான் சைவம் ஒரு பரந்த நிலை பெற்றுத் தனி வளர்ச்சி உற்று மேலோங்கிற்று. சங்க காலத்திற்குப் பிறகு சில நூற்றாண்டுகள் சமண பௌத்தங்களால் சைவம் குறைந்து இருந்தது. அப்பர், சம்பந்தர் முதலானோர் அவதரித்து ஆறு ஏழு நூற்றாண்டுகளில் சைவத்திற்கு மறுமலர்ச்சி தந்தார்கள். பிறகும் திருமுறை ஆசிரியர்கள் பலர் தோன்றித் தம் இன்னிசைப் பாடல்களால் சைவம் பரப்பினார்கள். சோழர் பேரரசில் சைவக் கொள்கைகள் கோயில் அமைப்புகளோடு இணைந்து முன்னேறின. 10 முதல் 15-ம் நூற்றாண்டு வரையில் தோன்றிய சைவப் புலவர்கள் பலர் சைவத்தை வளர்த்தார்கள்; பிறகு கருநாடக ஆட்சியும் முகம்மதிய ஆட்சியும் தென்னாட்டில் தோன்றின. அதுகாலை சைவ மடங்கள் தோன்றி சைவத்தை வளர்த்தன. ஆங்கிலேயர் வந்த பிறகு சைவ சங்கங்கள் தோன்றி அச்செயலில் ஈடுபட்டன. பத்தொன்பதாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் கணக்கற்ற சங்கங்கள் தோன்றின. மாநாடுகளும் சொற்பொழிவுகளும் மல்கின. அவைகளில் பெரும் புலவர்களும் பேச்

சாளர்களும் ஈடுபட்டுச் சைவத்தைப் பரப்பினார்கள். ஆனால், ஒற்றுமையும், ஆராய்ந்து முடிவுகட்டிய திட்டமும், படிப்படி உயர்ந்து சென்று தொண்டாற்றவல்ல ஆர்வமும் அவர்களிடம் இல்லாமல் சங்கங்கள் மேற்கொண்ட பணிகள் போதுமான பயன் அளிக்கவில்லை.


**6.** இப்படி யிருக்கையில் 20-வது நூற்றாண்டு பிறந்தது. தமிழ் நாட்டில் ஆங்கிலப் பயிற்சி முன்னேறியது. மேல்நாட்டில் சமயக்கொள்கை எவ்வாறு பரப்பப்படுகிறது என்பதைப் பலர் உணர்ந்தார்கள். மேலைநாட்டிலிருந்து வந்த கிறிஸ்தவர்கள் இந் நாட்டில் தங்கள் கொள்கைகளை எவ்வாறு புகுத்துகிறார்கள் என்பதையும் கண்டார்கள். சைவத்தைப் பாமரர்களுக்குள் பரப்ப வேண்டும் என்றால் தாராளக் கொள்கையும், ஒற்றுமையுணர்வும், பிணைந்துதொண்டாற்றும் மனப்பான்மையும் தம்தொண்டில் இருக்க வேண்டும் என்றுங் கண்டார்கள். தனித்தமிழ் அறிஞர்கள் செய்யும் தனிப்பெருங் கைங்கரியத்தைக்காட்டிலும் ஆங்கிலமும் தமிழும்கற்ற பெரியோர்களுடன் கூடிச் செய்யும் கைங்கரியமே அதிக வெற்றி தரும் என்றுங் கண்டார்கள். இவ்வாறு உயர்ந்த சிந்தனை கொண்ட பெரியார்கள் பலர் சேர்ந்து தொண்டு செய்யக் கங்கணம் கட்டிக் கொண்டார்கள். அவர்களில் சிறந்த பெரியார்கள் மறைமலையடிகள் என்று புகழ்பெற்ற சுவாமி வேதாசலம் அவர்களும், வழிக்கறிஞரும் சித்தாந்தப் பேராசிரியருமான நல்லசாமிப்பிள்ளை அவர்களும், சொல்வன்மை மிக்க ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் அவர்களும், கல்யாண சுந்தர யதீந்திரர் முதலியோராவர். இப்பெரியார்கள் தீர ஆராய்ந்து ஒரு சிறந்த முடிபுக்கு வந்தார்கள். நாட்டில் பல சிறு சங்கங்கள் யாதொரு பிணைப்பும் இன்றிச் சின்னஞ் சிறிய அளவில் திருத்தொண்டு செய்வதைக்காட்டிலும் ஒரு பெரிய நடுநிலையம் ஏற்படுத்தி அதனோடு மற்ற எல்லாச் சங்கங்களையும் இணைத்து ஒரு சிறந்த ஒற்றுமைப்பாட்டோடு தொண்டு புரிவதே வெற்றிக்கு வழி என்று கண்டார்கள். இந்த உயரியநோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு தான் சைவ சித்தாந்த மகா சமாஜம் என்ற பெயரால் ஒரு நடுநிலையம் திருப்பாதிரிப்புலியூரில் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருமடத்தில் 7—7—1905-ல் நிறுவப்பட்டது. இப்படித் தோன்றியதுதான் இச் சைவ சித்தாந்த மகா சமாஜம்.

**7.** சமாஜத்தின் நோக்கங்கள் பல. ஒவ்வோராண்டிலும் பெரிய மாநாடும், செயன் முறை ஆய்வுகளும், இடையிடையில் வேண்டிய காலங்களில் சிறப்பு மாநாடுகளும் குறித்த செயல்களைப் பற்றிய ஆய்வுகளும் கோரப்படும். திங்கள்தோறும் நாட்டுப்புறங்களில் சிறு மாநாடுகளும் ஆய்வுக் கூட்டங்களும் வைக்கப்பெறும். சைவ நூற்பதிப்புக்களும் ஆராய்ச்சித் துண்டுப் பதிப்புக்களும் தமிழிலும் பிறமொழிகளிலும் - சிறப்பாக ஆங்கிலத்திலும் - சமயப் பிரசாரத்திற்காக வெளியிடப்படும். சித்தாந்த அறிவு பரப்புவதற்காக ஒரு திங்கள் வெளியீடு நிறுவப் பெறும். கூடிய மட்டிலும் இலவசப் பதிப்புக்கள் நிரம்ப வெளிவரும். எல்லா வட்டங்களிலும்



திருக்கோவலூராதீனம்

ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்



மறைமலை அடிகள் என வழங்கும் ஸ்வாமி வேதாசலம்



ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை



சர். பொன்னம்பலம் இராமநாதன்

ஊர்களிலும் கிளைச் சமாசங்களும் இணைச் சங்கங்களும் தொடக்கி வேலை நடத்தப்படும். மாணவர்களுக்குச் சமயப் புலமைத் தேர்வுகள் வைத்துப் பத்திரங்களும் பரிசுகளும் வழங்கப் பெறும். தகுதியுள்ள மக்களைப் பிரசாரகர்களாகத் தெரிந்தெடுத்து நாடு முழுவதும் சமயப் பிரசாரம் செய்யப்படும். திக்கற்ற தாழ்த்தப்பட்ட மக்கள் பொருட்டு சேரிப் பணி செய்யப்படும். கோடைக்கால வகுப்புகளை ஏற்படுத்தி முறையாகச் சித்தாந்த பாடங்கள் போதிக்கப்படும். பொது மக்களுக்கே யன்றி சிறப்பாக இளைஞர்களுக்கும் மாதர்களுக்கும் மாநாடுகள் நடத்தப்பெறும். இப்படிப் பல வகைப்பட்ட தொண்டுகள் புரிந்து சமயப் பிரசாரம் நடத்தப்படும். இந்த நோக்கங்களோடு தொடங்கப் பெற்ற சமாஜம் பதிவு செய்யப்பெற்றுள்ளது. அது 1905 முதல் வேலை செய்யத் தொடங்கியது.

**8.** முதல் ஆண்டில் அதாவது 1905-ல் சுவாமி வேதாசலம் (மறைமலையடிகள்) செயலாளர் ஆக அமைந்து தம் கடமைகளை வெகு நன்ருக இயற்றினர். அங்கத்தினர்களைச் சேர்த்து வருவாய்களைப் பெருக்கிச் சமாஜத்தை உருவாக்கினர். அவர்களுக்கு உதவியாக ஏனைய சைவப் பெரியார்கள் துணையிருந்து தொண்டாற்றினர்கள். சமாஜத்தை நல்லதொரு நிலையம் ஆக்குவதற்குச் சுவாமிகள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் மிக அரியவை. ஓர் ஆண்டு முழுவதும் தொண்டு செய்த பின்னர் ஒரு மகாநாடு கூட்டவும் சமாஜத்தின் ஆண்டு விழா நடத்தவும் முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டது. அதனைச் சைவ இராசதானி ஆகிய 'கோயில்' என்ற தனிப் பெயரில் போற்றப்படும் புனிதத் தலமாகிய சிதம்பரத்தில் நடத்த எண்ணி ஈழநாட்டுப் பெரியார் ஸர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களைத் தலைமை கொள்ளச்செய்து ஆக்க வேலைகள் செய்யப்பட்டன. அப்போது செய்த முயற்சியின் பலனாக 1906 டிசம்பர் திங்கள் தில்லையில் திருஆதிரை நாளை ஒட்டி வெகு சிறப்பாக மாநாடு நடைபெற்றது. பொதுவாகவே திருவாதிரைத் தரிசனத்திற்குத் தென்னடு, ஈழம் முதலிய இடங்களிலிருந்து நூறாயிரக் கணக்கில் மக்கள் வருவது உண்டு. அந்த முறையிலும் சமாஜக் கூட்டம் வெகு சிறப்பாக நடைபெற்றது. சைவ ஆராய்ச்சியில் மிகத் தேர்ச்சி பெற்ற ஸர். இராமநாதன் அவர்கள் தம் அரிய சொற்பொழிவை ஆங்கிலத்தில் வெளியிட்டார். அதனைப் புகழ்ந்து அக்காலத்துத் தினத்தாள்கள் பாராட்டுரைகள் எழுதின. மாநாடு சைவத்திற்கு ஒப்பற்ற சேவை செய்யத் தொடங்கிவிட்டது.

**9.** சமாஜத்தின் தலைமை ஏற்றுக்கொண்டு முதல் மகாநாட்டை நடத்தித் தந்த ஸர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் சீரிய புகழானது சமாஜத்திற்கு நல்ல தொடக்கமும் ஊக்கமும் கொடுத்தது. பொதுவாக ஈழநாட்டு மக்களே தமிழுக்கும் சைவத்திற்கும் பெருந்தொண்டு செய்கிறவர்கள். பல ஆண்டுகளாகவே யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் அவர்கள் தில்லையில் ஒரு சபையும், அச்சகமும் வைத்து அரிய பெரிய சைவ நூல்களைப் பிழையறப் பதிப்பித்தும் சைவக் கொள்கைகளை அழகிய உரைநடை நூல்களாக வெளியிட்டும்

பெருந்தொண்டு செய்திருக்கின்றார்கள். இனி, சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் தொல்காப்பியம், இலக்கண விளக்கம் முதலிய பெரும் நூல்களை அச்சு வாயிலாக வெளியிட்டுத் தொண்டு புரிந்திருக்கின்றார்கள். அவர்களைப் போலவே முதலியார் சபாரத்தினம், அம்பலவாண நாவலர், முதலிய பல ஈழநாட்டுப் பெரியோர்கள் சைவத் தொண்டு செய்து வந்திருக்கிறார்கள். அந்த வகையில் மிகச் சிறந்த பெரியார் இராமநாதன் ஆவார். ஆங்கிலம், சட்டம், இவைகளில் சிறந்த தேர்ச்சி பெற்றுப் பெரிய வழக்குரைஞர் ஆகி அதில் பெரிய அலுவலரும் ஆகித் தமிழ், சைவம் இருவகைகளிலும் ஆராய்ச்சிகள் பல செய்து விவிலிய நூல்களுக்குச் சைவக் கண் கொண்டு உரை எழுதிக் கணக்கற்ற விரிவுரைகளை நிகழ்த்தியுள்ளார். அன்னார் சைவ மாநாட்டைப் பெருமை பெற நடத்தி வைத்ததில் அனேக கோட்பாடுகளை அருமையாகத் தொகுத்துப் பேசியிருக்கின்றார். அந்த வகையில் முதல் மாநாடு மிகவும் சிறப்புடன் தொடங்கிற்று.

**10.** முதல் மாநாட்டைப் போலவே இரண்டாம் ஆண்டு விழாவும் சைவ மாநாடும் தில்லை நகரிலேயே நடைபெற்றன. அப்போது தலைமை வகித்தவர் பெயர் பெற்ற தமிழ் வள்ளல் உயர்திரு. பாண்டித்துரைத்தேவர் ஆவர். அவர் பாலவநத்தம் குறுநில மன்னரே யன்றி பரம்பரையாகத் தமிழ் வளர்த்த பெருமான். அவரது தந்தையார் பொன்னுசாமித்தேவர் தமிழ்ப்புரவலராய் இருந்தது மன்றி, தனிப்பாடல் திரட்டு போன்ற பல நூல்களை வெளியிடுவதற்குக் காரணமாக இருந்தவர். பாண்டித்துரைத் தேவரோ மதுரையில் தமிழ்ச்சங்கத்தை மீண்டும் தோற்றுவித்து அதற்குத் தலைவராகிச் சிறந்து விளங்கினார். மேலும் தமிழ் நூல்கள் பலவற்றையும் வெளிவரச்செய்து தமிழ்ப் பாவலரை ஆதரித்தார். தமிழுக்காகப் பன்னூற்றிரட்டும் சைவத்திற்காகச் சைவ நெறித்திரட்டும் இயற்றிய புலவர் பெருமான் இவரே ஆவர். அன்னார் தலைமையில் இரண்டாம் ஆண்டு மாநாடு வெகு நன்றாக நடைபெற்றது. மூன்றாவது மாநாடு நாகையிலே சைவத் திருவாளர் ஜெ. எம். நல்லசாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வழக்கறிஞர் ஆகவும் நீதிபதியாகவும் இருந்த அப்பெருமான் சைவசித்தாந்த நூல்களை ஆங்கிலப் படுத்தித் தமிழ்ப் பெருமையும் சைவப் பெருமையும் மேல்நாடுகளுக்குத் தெரியும்படி செய்தவர். அவரது புலமைத் திறனும் ஆய்வுத் திறனும் தமிழ்நாட்டில் வேறெவர்க்குண்டு என்று கேட்கும்படியான உயர்ந்த நிலையில் திகழ்ந்தவர். அன்னாருடைய ஊக்கம் இல்லாதிருக்குமாகில், சைவ உலகம் தற்போது அடைந்துள்ள மேல் நிலைமை அடைய வாய்ப்பு இருந்திருக்காது. அப்பெரியார் தலைமையில் நடந்த மாநாடு வெகு அரிய செயல்களைச் செய்தது. ஆக இந்த முதல் மூன்று ஆண்டுகளும் சைவம் தழைத்து ஓங்க நின்ற பெரு மக்கள் அக்காலத்துச் சைவ மன்னதி மன்னர்களாகத் திகழ்ந்தார்கள். அன்னார் தாலாட்டச் சமாஜக் குழவி செழித்து வளர்ந்தது.

**11.** இனி, நான்காம் மாநாடு சைவத் திரு. கனகசபைப் பிள்ளை அவர்கள் தலைமையில் திருச்சிராப்பள்ளியிலும், ஐந்தாம் மகாநாடு சைவத்திரு. சர். கே. பி. புட்டண்ண செட்டியார் அவர்கள் தலைமையில் இராமநாதபுரத்திலும் நடந்தன. திரு. கனகசபை அவர்கள் ஈழநாட்டுப் பெரியாராய் உயர்ந்த அலுவலராக இருந்தவர். தமிழிலும் சைவத்திலும் மிக்க ஈடுபாடுடையராய் விளங்கியவர். சர். கே. பி. புட்டண்ண செட்டியார் மைசூர் சீமையில் மிக உயர்ந்த அமைச்சராகத் திகழ்ந்தவர். வீர சைவ மரபில் தோன்றிச் சைவத்தைப் பெரிதும் போற்றி வந்த பேரறிஞர். அவருடைய திறத்தை அறிந்த ஆங்கில அரசியலார்கள் அவருக்கு மிக உயர்ந்த பட்டங்களை அளித்திருக்கிறார்கள். அன்னாருடைய தலைமையுரை மிகச் சிறந்த கருத்துக்களைக் கொண்டது.

இவ்வாறு முதல் ஐந்து ஆண்டுகளிலும் சமாஜமென்னும் குழந்தையைப் போற்றி வளர்த்த ஐம்பெரும் சைவத் தொண்டர்களுக்கெல்லாம் ஊக்கம் அளித்துத் திருத்தொண்டுபுரிந்த புண்ணியர் தவத்திரு. சுவாமி வேதாசலம் என்ற மறைமலையடிகளே. இவர்கள் சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்து, துறவு பூண்டு தமிழுக்கும் சைவத்திற்குமே தொண்டுபுரியத் தம் வாழ்நாளை அர்ப்பணம் செய்திருக்கிறார். அன்னார் சமாஜத்தின் முதற் செயலாளராக ஐந்து ஆண்டுகள் வரை இருந்து நற்றொண்டு புரிந்திருக்கிறார். சமாஜச் செயல்கள் யாவற்றையும் அன்னாரே கவனித்தும், மாநாடுகளைக் கூட்டியும், அறிக்கைகளை விடுத்தும், தொகைகளை வாங்கியும் ஓயாமல் பாடுபட்டார். முதல் ஐந்து ஆண்டுகளில் சமாஜம் வளர்ச்சியுற்றதற்கு அன்னாரே முக்கிய காரணமாக விளங்கினார். இதை நாம் நினைவு கூர்ந்து அப்பெரியார்க்கு என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

**12.** சமாஜத்தின் ஆறாம் (1911) ஆண்டில் திரு. J.M. நல்லசாமிப் பிள்ளையவர்கள் இரண்டாம் முறையாகத் தலைமை வகித்து நல்லதொரு ஊக்கம் தந்தார்கள். அதுவே சென்னையில் முதல் முதலாக நடைபெற்ற சமாஜ விழா. அந்த ஆண்டில் சமாஜச் செயலாளராகத் திரு. இ. ஆதிமூல முதலியார் பணி ஆற்றினார். அடுத்த ஆண்டான 7-ம் ஆண்டில் (1912) திரு. T. பொன்னம்பலம் பிள்ளை என்ற ஈழநாட்டு அறிஞர் தலைமை வகித்துக் காஞ்சியில் வெகு சிறப்புடன் செயலாற்றினார். அப்போது திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை செயலாளர் ஆனார். அதன் பயனாக சமாசப் பணிக்கு ஒரு புத்துயிர் அளிக்கப்பட்டது. சித்தாந்தம் என்ற பெயரில் ஒரு உயரிய திங்கள் வெளியீடு நிறுவ வேண்டும் என்று சொல்லியது நடைமுறையில் கொண்டுவரப்பட்டது. அதற்கு அஷ்டாவதானம் பூவை. கல்யாண சுந்தர முதலியார் அவர்கள் ஆசிரியராக அமர்ந்தார்கள். அன்னாரே ஆறு ஆண்டுகள்வரை ஆசிரியராக இருந்து அரிய கருத்துக்களை வெளியிட்டு நாட்டில் சைவத்திற்காக உயரிய தொண்டுபுரிந்தார்கள். அங்கத்தினர் தொகை பெருகச் செய்து சமாஜ வருவாய் மிகுதிப்படுத்தி வைத்தார்கள். காஞ்சிப் பேரவை மிகச் செழிப்பாக நடை

பெற்றது. சமாஜத்தின் பெயர் நாடெங்கும் பரவியது. பல கிளைச் சங்கங்களும் இணைச் சங்கங்களும் தோன்றின. பல பெரியார்கள் பிரசார வேலைகளில் ஈடுபட்டார்கள். திருவாளர்கள் - விச்சூர் முத்துக்குமாரசாமி முதலியார், பொ. முத்தையபிள்ளை, திருவாரூர் - தியாகராச ஞானியார், திருக்கோவலூர் - ம. ரா. குமாரசாமிப் பிள்ளை, திரு.வி. கல்யாணசுந்தர முதலியார்—முதலியோர்கள் செய்து வந்த பிரசாரம் மிகவும் போற்றத்தக்கது.

**13.** சமாஜத்தின் 8-ம் ஆண்டு (1913) முதல் 15-ம் ஆண்டுவரை அது நல்ல வாலிபப் பருவம் அடையத் தொடங்கிற்று. உயர்ந்த சைவ அறிஞர்கள் சமாஜத் தலைமை பூண்டு திகழ்ந்தார்கள். அதற்கு ஏற்ப திரு. கி. குப்புசாமி முதலியார் குன்ரு ஊக்கத்துடன் ஐந்து ஆண்டுகள் தொண்டாற்றினர். எட்டாம் ஆண்டில் வேலூரில் தவத்திரு. ஞானியார் அடிகள் மிகச் சிறப்புடன் தலைமை வகித்து செயலாற்றினர்கள். தொடக்கத்திலேயே (1905) அடிகள் சமாஜப் பணியில் ஈடுபட்டிருந்தும், முதன் முதலாகத் தலைமை வகித்தது எட்டாம் ஆண்டில்தான். அதன் பிறகு, ஆறு தடவை தலைமை வகித்து இருக்கிறார்கள். அத்தனை முறை வேறு எந்தப் பெரியாரும் தலைமை வகித்ததில்லை. 1914-ல் அவர்கள் தலைமை வகித்தபோது சமாஜ மாநாடு அடிகளார் ஊராகிய திருப்பாதிரிப்புலியூரருகில் கூடலூரில் நடைபெற்றது. தாம் இறைவன் திருவடி அடையும் மட்டும் அன்னரைப்போல் சமாஜத்தில் ஈடுபட்ட பெரியார்கள் வேறெவரும் இல்லை. அவர்கள் சமாஜத்திற்கு உயிர்நாடிபோல் விளங்கினர்கள்.

பிறகு தஞ்சையில் ஸ்ரீமத் அம்பலவாண நாவலரும், மயிலையில் ஸ்ரீ முதலியார் சபாரத்தினமும் தலைமை வகித்தார்கள். இவர்கள் இருவரும் சிறந்த யாழ்ப்பாண அன்பர்கள். 1917-ல் செம்பியத்தில் ஆசிரியர் அஷ்டாவதானம் கல்யாணசுந்தர யதீந்திரரும், 1918-ல் கும்பகோணத்தில் ஸ்ரீ சுவாமிநாத பண்டிதரும், 1919-ல் திருப்பனந்தாளில் ஸ்ரீமத். சொக்கலிங்கத் தம்பிரானும், 1920-ல் மாயூரத்தில் ஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் இரண்டாம் முறையும் தலைமை வகித்தார்கள். இந்த ஆண்டுகளில் திரு. குப்புசாமி முதலியாரும், திரு கா. சுப்பிரமணியம் பிள்ளையும் செயலாளர்களாகவும் அமைந்தனர். திரு. கலியாணசுந்தரர் ஆறு ஆண்டுகளும், திரு. குப்புசாமி முதலியார் இரண்டு ஆண்டுகளும் **சித்தாந்த** ஆசிரியர்களாக இருந்தார்கள். முதல் உலகப் பெரும்போர் நடந்தும் தளராத ஊக்கத்துடன் சமாஜம் வேலை செய்தது. 1916-ல் புதிதாக மாணவர்களுக்குச் சித்தாந்தத் தேர்தலும் பரிசுகளும் ஏற்படுத்தப்பட்டன. மேலும் நிலையக் கட்டிடத்திற்குத் தொகை சேர்க்க முயற்சியும் செய்யப் பட்டது. ஆனல் வேலை நடைபெறவில்லை.

**14.** சமாஜத்தின் 16-வது ஆண்டு (1921) முதல் 23-ம் ஆண்டு (1928) வரை அது சிறிது அயர்ந்து இருந்தது; **சித்தாந்த** வெளியீடே நின்றுவிட்டது. செயலாளராக ஓராண்டு திரு. வா. தி. கோவிந்த

ராச முதலியாரும், பிறகு திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரும் தோன்றி அதனை வளர்த்தார்கள். 16, 17, 18, 20. 21, 23-ம் ஆண்டு களிற் சென்னையிலும், 19-ம் ஆண்டு திருப்பாதிரிப்புலியூரிலும், 22-ம் ஆண்டு புதுச்சேரியிலும் மாநாடுகள் நடைபெற்றன. 17-ம் ஆண்டில் மீண்டும் சர். பொ. இராமநாதனவர்களும், 20-ம் ஆண்டில் மறைமலையடிகளும் தலைமை வகித்தது மட்டும் குறிப்பிடத்தக்கவை.

1921-ம் ஆண்டில் செயலாளர் பணியை ஏற்றுக்கொண்ட ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் 1943-ம் ஆண்டு வரை தொடர்ந்து அரும் பணியாற்றி யுள்ளார்கள். அவர்கள் சிறந்த வாலிபத் தொண்டர். ஆகவே சமாசத்திற்குப் புத்துயிர் கொடுத் தார்கள். 1928-ல் மணி. திருநாவுக்கரசு முதலியார் சித்தாந்தத்தை ஆசிரியராக ஓராண்டு நடத்தினர். பிறகு 1929-ல் திரு.ம.பா.முதலியார் ஆசிரியராக அமர்ந்து 1935 வரை பணி ஆற்றினர்கள். அப்போது திருமுறைகள், சங்க நூல்கள், காப்பியங்கள், திருப்புகழ் முதலிய சிறந்த நூல்கள் அடக்கவிலைப் பதிப்புகளாக வெளிவந்தன. இந்த வகையில் சமாஜம் தமிழுக்கும், மொழிக்கும் அரும்பெரும் பணி செய்தது.

மாநாடுகளில் ஞானியார் அடிகள், பண்டிதமணி கதிரேசச்
செட்டியார் ச. சச்சிதானந்தம் பிள்ளை, நெல்லையப்பப் பிள்ளை, ந. மு.
வேங்கடசாமி நாட்டார், திரு. வி. கலியாணசுந்தரனார், தவத்திரு.
விபுலானந்த அடிகள், ந. சிவகுருநாத பிள்ளை, C. K. சுப்பிரமணிய
முதலியார், கோவை ம. இராமச்சந்திர செட்டியார், ம. பாலசுப்பிர
மணிய முதலியார், எஸ். வையாபுரி பிள்ளை, T.S. கந்தசாமி முதலியார்
T. P. மீனாட்சிசுந்தரனார், O. P. ராமசாமி ரெட்டியார், தவத்திரு.
குன்றக்குடி அடிகள் முதலியோர்கள் தலைமை வகித்தார்கள்.
K. இராமநாதன் (1944)—1946) க. அரங்கசாமிமுதலியார் (1947-53)
திரு. ச. சிவகுமாரன் (1953-55) இவர்கள் செயலாளர்களாகப் பணி
யாற்றினர்கள். அண்மையிலே சிறப்பாக அடுத்தடுத்து 48, 49, 50
ஆண்டுகளின் சமாஜப் பெருவிழாக்களில் ஈழநாட்டுப் பெரியார்கள்
ஈடுபட்டது போற்றத்தக்கது. இவற்றுள் முதலிரண்டு ஆண்டுகள்
திரு. நாகலிங்கம் பிள்ளையவர்களும், சர். கந்தையா வைத்தியநாதன்,
அவர்களும் தலைமை தாங்கினர். இப்போது விழாவிற்கு அமைச்சர்
கனம். நடேச பிள்ளையவர்கள் தலைவராயமைந்திருக்கிறார்கள்.
முதலாம் ஆண்டுவிழாவிற்கு சர். P. ராமநாதனவர்கள் தலைவராய்
வீற்றிருந்தார்கள் என்பதை நினைக்க ஒரு பொருத்தம் தோன்றி
மகிழ்ச்சி தருகிறது.

**15.** 22-ஆண்டு காலம் செயலாளராகப் பணி ஆற்றிக் கொண்
டிருந்த திரு.ம.பா. முதலியார் 1944-ல் ஓய்வு பெற்றுக்கொண்ட பின்,
1944 முதல் 1946 வரை திரு. கா. இராமநாதன் செட்டியாரும்,
(1946-53) திரு. K. ரங்கசாமி முதலியாரும் செயலாளராகப்
பணி செய்தார்கள். 1953-ல் திரு. ச. சிவகுமாரன் செயலாளராக
அமர்ந்து தொண்டாற்றிக்கொண்டிருக்கின்றார். திரு. ம. பா. முதலி
யார் சித்தாந்தத்திற்கு 9-ஆண்டுகள் வரை ஆசிரியராக இருந்தும்

பல அடக்கவிலைப் பதிப்புக்களை வெளியிட்டும் வந்திருக்கின்றார்கள். அவ்வாறு வெளியிட்ட பிரதிகள் நூறாயிரக் கணக்கில் உள்ளன. மேலும் திங்கள் மாநாடுகளும், மாணவர்கள் தேர்ச்சிகளும் நடத்தி வந்திருக்கின்றார். திரு. இராமநாதன் செட்டியார் பணிபுரிந்த காலத்தில் கோடைக்கால வகுப்புக்களும் சேரிப்பணிகளும் தொடங்கி நடத்தினர். திரு. அரங்கசாமி முதலியாரும் அதைத் தொடர்ந்து நடத்தித் திரு. சிவகுமாரன் வசம் ஒப்புவித்திருக்கிறார்.

சித்தாந்த ஆசிரியர் பணியை 1936-ல் திரு. ம. பா. முதலியார் விட்டுவிட, ஓராண்டு திரு. எ. சோமசுந்தரம் செட்டியாரும், 4-ஆண்டுகள் திரு. வி. உலகநாத முதலியாரும், ஓராண்டு திரு. P. R. சாமிநாதனும், மீண்டும் ஓராண்டு ம. பா. வும், ஈராண்டு ச. சச்சிதானந்தம் பிள்ளையும், 7-ஆண்டுகள் திரு. C.M. இராமச்சந்திர செட்டியாரும் நடத்தி வந்தனர். பிறகு ம. பா. முதலியார் அப் பணியை மீண்டும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

இரண்டாவது பெரும் போரில் நேரிட்ட நெருக்கடியில் சித்தாந்தம் அளவில் குறுகிவிட்டது. பிறகு பணி ஏற்றுக்கொண்ட C. M. R. செட்டியார் அதனை 48 பக்கங்கள் கொண்டதாகப் பெருக்கி, விஷயங்களைப் பல பகுதிகளாகப் பிரித்துப் பல படங்களையும் வெளியிட்டார். இந்த வகையில் சித்தாந்தம் பத்திரிகை சைவத்திற்குப் பணி செய்து வருகிறது.

**16. சைவ இளைஞர் இயக்கம் :—** முதல் 25-ஆண்டுகளும் பெரியவர்கள் மட்டும் சமாஜப் பணியாற்றி வந்தார்கள். 1930-ம் ஆண்டில் சைவ இளைஞர்களும் சைவ மங்கையரும் இப் பணியிற் பங்குகொள்ள வந்தார்கள். அந்த வகையில் மகாநாடு மூன்று பகுதிகளாகப் பணி செய்யத் தொடங்கிற்று. ஆடவர்கள் மாநாட்டில் வரவேற்புக் கழகம் அமைத்ததுபோல் இளைஞர் மாநாட்டிலும் பெண்கள் மாநாட்டிலும் தனித்தனி வரவேற்புக்கழகங்கள் அமைக்கப்பெற்றன. மூன்று நாட்களிலும் திருத்தொண்டு மூன்று பிரிவுகளாகத் தொழிற்பட்டது. இளைஞர் மாநாட்டில் திருவாளர்கள் கா. சுப்பிரமணிய பிள்ளை, ச. சச்சிதானந்தம் பிள்ளை, கீ. இராமலிங்க முதலியார், ஜி. கல்யாணம் பிள்ளை, பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், தி. கி. நாராயணசாமி நாயுடு, மு. அருணாசலம், பு. ர. சாமிநாதன், அ.மு. பரமசிவானந்தம், அ.ச. ஞானசம்பந்தம், இரத்தினம், அருணாசல தேசிகர் முதலியோர் தலைமை வகித்துப் பணி ஆற்றினார்கள். இளைஞர்கள் தாங்கள் எடுத்துக்கொண்ட பணியில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டார்கள். இளைஞர் தலைவர்கள் பெரும்பாலும் ஆங்கிலம் கற்ற தமிழ் ஆசிரியர்களாகத் திகழ்ந்தது போற்றத்தக்கது. நாட்டில் இளைஞர்களிடையே சிறப்பாகப் புலவர் பட்டம்பெற்றவர்களிடையே எங்கும் தன் மதிப்புக் கொள்கைகள் பரவிவந்த நாளிலும் பல இளைய ஆசிரியர்கள் அச் சூழலில் விழாமல் மிக்க அன்புடன் சைவத்தைப் போற்றி வந்தது மிகவும் பாராட்டத்தக்க செய்தியாகும். அந்த மாநாடுகளில் செய்த தீர்மானங்கள் மிக உருக்கமாகவும் செயல்

முறைக்கு ஏற்றவையாகவும் இருந்தன. அவர்கள் இவ்வாறு தவிராது 25-ஆண்டுகள் பணி செய்து வருகிறார்கள்.

**17. மங்கையர் இயக்கம் :—** இளைஞர் இயக்கம் தொடங்கின 1930-வது ஆண்டிலேயே திருமதி கிருஷ்ணவேணியம்மையாரால் சைவமங்கையர் மாநாடு தொடங்கப்பெற்றது. மங்கையர் மாநாட்டிற் கென்று தனியாக வரவேற்புக் கழகமும் அமைக்கப் பெற்றது. மங்கையர் நல்லுணர்ச்சியோடு பணி ஆற்றினார்கள். மங்கையர் களுக்கு என்று தனிப்பொழுதும் மேடையும் ஒதுக்கிவைக்கப் பட்டன. நாளுக்கு நாள் அவர்கள் ஒத்துழைப்பும் பெருகிக் கொண்டே வந்தது. மங்கையர் மாநாட்டில் தலைவர்களாகத் திரு மதிகள் R. S. சுப்புலட்சுமி அம்மையார், சரோஜினி அம்மையார், தாணு அம்மாள், பண்டிதை அசலாம்பிகை அம்மாள், ஈ. த. இராஜேசுவரி, க. ர. ஆதிலட்சுமி அம்மையார், நீலாவதி ராமசுப்ர மணியம், புஷ்பம் நடராசன், அ. கு. காமாட்சி, சிவகாமி அம்மாள், பத்மாசனி அம்மாள், இராசரத்தினம்மாள், சு. இராசேசுவரி அம்மையார், ஈசுவர வடிவு அம்மாள், மரகதம் சிவபூஷணம், பாகீரதியம்மையார் முதலியோர் பணியாற்றினார்கள். அவர்களு டைய தலைமை உரைகளில் சைவத்திற்காக மங்கையர் செய்யக் கூடிய பணிகளைப்பற்றி உருக்கமாகப் பல நன்மைகள் உரைக்கப்பட் டுள்ளன. மங்கையர் மாநாட்டில் மங்கையர் மட்டுமே பேசியிருப் பினும், ஆடவர் மாநாட்டில் மங்கையர் தலைவிகளும் பங்கு எடுத்துக் கொண்டனர். இவ்வொற்றுமையினால் சமயத்தொண்டு பெருகி வளம் பெற்றது. இடையே சில ஆண்டுகளில் மங்கையர் மாநாடு கூட்டங்கள் கூட்ட வசதிகள் இல்லாமல் போய்விட்டன. ஆனால் 38-வது ஆண்டுமுதல் நாளதுவரை தவிராமல் மங்கையர் மாநாடுகள் நடைபெற்று வருகின்றன.

**18. சிறப்புக் கூட்டங்கள் :—** ஆண்டுக்கூட்டங்களைத் தவிர, திங்கட் கூட்டங்களும் அவ்வப்போது நடைபெற்ற செய்திபற்றி முன்னமே கூறியுள்ளோம். இவைகளைத் தவிர சில முக்கிய அவசரச் செய்திகளுக்காகச் சிறப்புக் கூட்டங்களும் கூட்டப் பெற்றன. அவற்றில் சிலவற்றைக் கூறுவோம். 7—7—1905 ல் திருப்பாதிரிப் புலியூரில் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் அடிகள் சமாஜத்தைத் தொடங்கி வைத்தது முதற் சிறப்புக் கூட்டமாகும். 16-ம் ஆண்டில் (1921) குடந்தை மகாமகத்தின்போது ஸ்ரீ சாமிநாத பண்டிதர் தலைமையில் ஒரு சிறப்புக் கூட்டம் கூடிற்று. 22-ம் ஆண்டில் ஜூலையில் ஞானி யார்அடிகள் தலைமையில் சைவர் முன்னிருக்கும் பணியைக் குறித்து ஒரு சிறப்பு மாநாடு கூடிற்று.

சமாஜம் தனது 24-ம் ஆண்டில் (1929), பெரியதோர் அறிவுத் தொண்டைச் சிறப்புற ஆற்றிச் சைவ உலகிற்கோர் பேருபகாரம் செய்தது. அக்காலத்தில் தன்மதிப் பியக்கம் எழுப்பிய சிக்கல்களைப் பற்றியும் பிற சில பூசல்களைப் பற்றியும் தக்கார் ஆராய்ந்து உண்மை யான முடிபுகளைத் தெளிவாக எடுத்துரைத்து நல்வழி காட்டவேண்


டிய அவசியம் இருந்தது. அதற்காகச் சைவ அறிஞர் தனிக்கூட்டம் ஒன்றைக் கூட்டவிரும்பி, முதலில் **சைவப்பெரியார் தனிக்கூட்டத்தின் அவசியமும் வேலையும்** என்னும் தலைப்பில், சமாஜ உதவித் தலைவர் எழுதிய ஒரு விண்ணப்பத்தை அச்சிட்டு சைவ அறிஞர்கள் பலர்க்கு அனுப்பியது. ஆராய்ச்சியைத் தூண்டி நெறிப்படுத்துதற்காக 25 வினாக்கள் அதிற் குறிக்கப்பட்டன. 1929 மார்ச்சு 29, 30, 31-ம் தேதிகளில் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தலைமையில் திருநெல்வேலியில் **சைவப்பெரியார் தனிக்கூட்டம்** ஒன்றுகூடியது. அதில் நடந்த ஆராய்ச்சிகளில் 35 சபைகளிலிருந்து வந்த பிரதிநிதிகள் 90 பேர் கலந்துகொண்டனர். ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், மறைமலையடிகள், சர். டி. என். சிவஞானம் பிள்ளை, திரு. டி. இலக்குமணப் பிள்ளை முதலிய 18 அறிஞர்களும், இரண்டு சங்கங்களும் தங்கள் கருத்துக்களை எழுதியனுப்பி யிருந்தனர்.

சைவப் பெரியார் தனிக்கூட்டம் தனது கருத்துக்களை 20 தீர்மானங்களாக வெளியிட்டது. இத் தீர்மானங்களைப் பற்றிய சமாஜக் காரியதரிசி ம. பாலசுப்பிரமணியனார் எழுதிய விளக்கக் குறிப்புகளும் சித்தாந்தத்தில் தரப்பெற்றன. பின்பு, அதே ஆண்டு மே மாதத்தில் 16-ம் தேதிமுதல் ஆறுநாள் திருப்பாதிரிப் புலியூரில், ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் ஆதரவில் உயர்திரு. மறைமலையடிகள் தலைமையில் பெருஞ் சிறப்புடன் சைவர் மாநாடு நடைபெற்றது. நெல்லைக் கூட்டஞ் செய்த தீர்மானங்கள் நன்கு விளக்கப்பெற்று சில சிறு திருத்தத்துடன் இம்மாநாட்டில் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. இப்பெரு முயற்சிகளால், சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளும், சமய ஒழுக்கங்களும், செய்ய வேண்டிய சமயப் பணிகளும் இவையென பொதுமக்கள் எளிதில் அறிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

25-ம் ஆண்டில் திருவிரும்பூளையில் நடந்த கும்பாபிஷேகத்தின் போது, தவத்திரு. வாலையானந்தர் தலைமையில் ஒரு கூட்டமும், கிழக்கு மருதூரில் திரு. வி. க. தலைமையில் வெள்ளிவிழாக் கூட்டமும் நடைபெற்றன. இவற்றின் விளைவாகத்தான் சைவ இளைஞர், சைவ மங்கையர் மாநாடுகள் வளம் பெற்றன.

29, 30-ம் ஆண்டுகளில் மீண்டும் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் தலைமையில் சிறப்புக் கூட்டங்கள் நடந்தன. இவைகள் பெரும்பாலாக, நாட்டில் முன்னேறி வந்துகொண்டிருந்த தன்மதிப்பியக்கம் நாத்திக வாதம் இவைகளைப் பற்றி ஆராய்ந்தன. இக் கூட்டங்களினால் பல நன்மைகள் பிறந்தன என்பதற்கு ஐயமில்லை.


**19. சிறப்புச் செயல்கள் :**—ஒவ்வொரு மாநாட்டிலும் வரவேற்புரைகள், வரவேற்புப் பாக்கள், தலைமை உரைகள் முதலியவைகள் அச்சிடப்பெற்றுப் படிக்கப்பட்டன. பிறகு நிறைவேறின தீர்மானங்களும் வெளியிடப்பட்டன. இவைகளை எல்லாம் தற்



திரு. வி. க.




கனம் - எஸ். நடேசப் பிள்ளை - பொன்விழாத் தலைவர்



ச. சச்சிதானந்தம் பிள்ளை



ம. பாலசுப்பிரமணிய முதலியார்



சி. எம். இராமச்சந்திரன் செட்டியார்



அ. சோமசுந்தரம் செட்டியார்

போது தொகுத்து ஒரு தனி நூலாக வெளியிட்டால், மக்களுக்குச் சைவ வரலாற்றை அறிய ஒரு சிறந்த சான்று நூலாக அது பயன் படும்.

மேலும் அவ்வப்போது வேறு சில சிறப்புக் கூட்டங்களும் நிறைவேறின. சமாஜம் போற்றியளித்த ஊக்கத்தினால் பல அரிய நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்தன. ஆங்கிலத்தில் பல சைவ நூல்கள் வருவதற்கும் சமாஜமே ஒரு தூண்டுகோலாக இருந்தது. மணிப்பிரவாளமாயிருந்த தமிழ்ப் பேச்சில், சமாஜத்தின் சீர்திருத்த முறையினால் நல்ல தனித் தமிழ் நடை தோன்றியது. மறைமலையடிகளும் திரு. வி. க. அவர்களும் உரைநடைக்கு எடுத்துக்காட்டுக்கள் ஆனார்கள். இந்தத் திருத்த முறையைத் தலைமை உரைகளைக் கொண்டே அறியலாம். 35-ம் ஆண்டில் (1940) மயிலத்தில் நடந்த கூட்டத்தில் தமிழ் நாட்டு நான்கு பெரிய சைவ மடங்களும் பங்கு எடுத்துக்கொண்டு தங்கள் பிரதிநிதிகளை அனுப்பி வைத்தார்கள். இது பெருஞ் சிறப்பாகும். சைவ ஆதீனங்களில் ஞானியார் மடத்து அடிகள் பெரும் பங்கு எடுத்துக் கொண்டதுபோல், பிற் காலத்தில் குன்றக்குடித் திருவண்ணாமலை மடத்து அடிகள் பெரும் பங்கு எடுத்துக்கொண்டார்கள். மதுரை மாநாட்டிற்குத் திரு ஞானசம்பந்தர் மடத்து அடிகளார் வரவேற்புத் தலைவராக இருந் தார்கள். சீகாழியில் நடந்த அர்ச்சகர் மாநாட்டில் எல்லா மடாதி பதிகளும் கோயில் அர்ச்சகர்களும் பங்கு எடுத்துக்கொண்டார்கள். கோவை மாநாட்டில் சிறப்பாகக் கலைக் கண்காட்சி ஏட்டுப்பிரதிகள் முதலியன பொருட்காட்சிச்சாலையில் வைக்கப்பட்டன. மேலும் பல ஆண்டுகளாக யாழ்ப்பாணத்துச் சைவ சகோதரர்கள் தமிழகத்தில் பங்கு எடுத்துக்கொண்டதைத் தவிர, இலங்கையிலும் யாழ்ப்பாணம் கொழும்பு முதலிய இடங்களிலும் மாநாடுகள் கூட்டி நன்கு நடத்தி னது போற்றத்தக்கது. சமாஜத்தின் தொண்டுகளினால் ஊக்கம் பெற்று மற்ற பல சங்கங்களும், சமயச் சபைகளும் நன்றாக உழைக் கத் தொடங்கின.

**20. முடிபுரை:**—சுருக்க அளவில் சமாஜச் செயல்களை மேலே கூறினோம்; விரித்து எழுத இடமின்மையே காரணம். மாணவர்களுக்கும் பிரசாரகர்களுக்கும் சித்தாந்த வகுப்புக்களை வைத்துச் சமய ஞானம் உண்டுபண்ணுவதற்காக 1944 முதல் 1950 வரை 7 ஆண்டுகள் கோடைக்கால வகுப்புக்கள் நடத்தப்பட்டன. அவைகளில் சித்தாந்த ஆசிரியர்களாகத் திருவாளர்கள் க. வச்சிர வேலு முதலியார் (பாபநாசம்), மு. கதிரேசன் செட்டியார் (தில்லை), ஔவை - சு. துரைசாமி பிள்ளை (வித்தியாலயம்), டி. எஸ். கந்தசாமி முதலியார் (குன்னூர்), ரா. சண்முகசுந்தரம் செட்டியார் (ஒத்தை), முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் (கோவை) முதலியோர்கள் பணி புரிந்தார்கள். இந்த வகுப்புக்களினால் விளைந்த நன்மைகளைக் கண்டு, இந்து அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தாரும் நெல்லையில் வகுப்பு நடத்தினார்கள். இந்த வகையில் சமாஜம் பணி செய்தது. இந்த ஆண்டில் (1955) பொன்விழா நடைபெறுகிறது. முதல் ஆண்டு

(1906) சிதம்பரத்தில் ஈழநாட்டுத் தலைவர் சர். பொன்னம்பலம் இராமநாதனார் தலைமை வகித்ததுபோல் இந்த ஆண்டிலும் ஈழநாட்டு மற்றொரு தலைவர்—அதே பெரியாரின் மருகர்—கனம். அமைச்சர்- நடேசம் பிள்ளை அவர்கள் தலைமை வகிக்கின்றார்கள். இதுவும் மகிழ்ச்சிக்குரியதே. சைவ சித்தாந்த மகா சமாஜம் ஐம்பது ஆண்டு களாய் செய்துவந்துள்ள உயர்ந்த தொண்டு இனியும் பல்லூழி காலம் செழித்தோங்கி உலக நலம் பெருக்கப் பணியாற்றுமாறு அம்பலவாணர் அருள் புரிவாராக.

பொன்விழா மலர் வெளியீட்டுக் குழுவினர் சார்பாக

**கோவைகிழார்.**

---

# ஆண்டுவிழாவின் தலைவர்கள் பட்டியல்

## ஆண்டுவிழாக்கள் நடந்த இடங்கள், தலைவர்கள்

தொடக்கம் : **7-7-1905—திருப்பாதிரிப்புலியூர்**

[பெயர்களின் முன்னும் பின்னும் உயர்திரு, அவர்கள் என்று சேர்க்கவும்]

**சைவர், இளைஞர், மங்கையர் மாநாட்டுத் தலைவர்கள்**

1. 1906—சிதம்பரம், ஸர். பொன்னம்பலம் இராமநாதன்
2. 1907— ,, பாண்டித் துரைத்தேவர்
3. 1908—நாகப்பட்டினம், ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை
4. 1909—திரிசிராப்பள்ளி, ஸர். எ. கனகசபை
5. 1910—இராமநாதபுரம், ஸர். கே. பி. புட்டண்ண செட்டியார்
6. 1911—சென்னை, ஜே. எம். நல்லசாமி பிள்ளை
7. 1912—காஞ்சிபுரம், டி. பொன்னம்பலம் பிள்ளை
8. 1913—வேலூர், ஞானியார் சுவாமிகள்
9. 1914—கூடலூர், ,,
10. 1915—தஞ்சாவூர், அம்பலவாண நாவலர்
11. 1916—மயிலாப்பூர், முதலியார் சபாரத்தினம
12. 1917—செம்பியம், கல்யாணசுந்தர யதீந்திரர்
13. 1918—கும்பகோணம், சுவாமிநாத பண்டிதர்
14. 1919—திருப்பனந்தாள், சொக்கலிங்கத்தம்பிரான் சுவாமிகள்
15. 1920—மாயூரம், சுவாமிநாத பண்டிதர்
16. 1921—சென்னை, பி. எம். சிவஞான முதலியார்
17. 1922— ,, ஸர். பொன்னம்பலம் இராமநாதன்
18. 1923— ,, பி. சுப்பையா முதலியார்
19. 1924—திருப்பாதிரிப்புலியூர், ஞானியார் சுவாமிகள்
20. 1925—சென்னை, மறைமலையடிகள்
21. 1926— ,, பி. சுப்பையா முதலியார்
22. 1927—புதுச்சேரி, ஞானியார் சுவாமிகள்
23. 1928—சென்னை, ஸர். டி. என். சிவஞானம் பிள்ளை

24. 1929—திருவெண்ணெய்நல்லூர், ஞானியார் சுவாமிகள்
25. 1930—தைமீ—சென்னை, சைவ மங்கையர் மாநாடு—இராஜம்மாள்
,, சித்திரைமீ—சைவ இளைஞர் மாநாடு—திருவிடைமருதூர் - கா. சுப்பிரமணிய பிள்ளை
,, ஆவணிமீ—கிழக்கு மருதூரில் வெள்ளிவிழா, திரு. வி. க. தலைமை
,, மார்கழிமீ—சென்னை, பண்டிதமணி - மு. கதிரேசச் செட்டியார், ஆர். எஸ். சுப்பலட்சுமியம்மையார், ச. சச்சிதானந்தம் பிள்ளை
26. 1931—தூத்துக்குடி, ச. சச்சிதானந்தம் பிள்ளை, சாமிவேலாயுதம் பிள்ளை, திருவரங்க நீலாம்பிகையம்மையார்
27. 1932—கூவம் (திருவிற்கோலம்), மா. வே. நெல்லையப்பப் பிள்ளை, தி. கு. கி. நாராயணசாமி நாயுடு, பண்டிதை கிருஷ்ணவேணி யம்மையார்
28. 1933—கருந்திட்டைக்குடி (கரந்தை), ந. மு. வேங்கடசாமி நாட்டார், தீ. கந்தசாமி பிள்ளை, சரோஜினி மாணிக்கவாசக அம்மையார்
29. 1934—திருவதிகை, திரு. வி. கலியாணசுந்தர முதலியார், கீ. இராம லிங்க முதலியார், டி. என். தாணு அம்மையார்
30. 1935—திருவண்ணாமலை, சுவாமி விபுலானந்தர், ஜி. கலியாணம் பிள்ளை, பண்டிதை அசலாம்பிகையம்மையார்
31. *1936—காஞ்சிபுரம், ந. சிவகுருநாதபிள்ளை,பூ. ஆலாலசுந்தரஞ்செட்டியார்
32. 1937—வேலூர், ஞானியார் சுவாமிகள், அ. சிதம்பரநாதன் செட்டியார்
33. 1938—கோவை, ச. சச்சிதானந்தம் பிள்ளை, சொ. அ. மணிவாசகம்
34. 1939—குன்றக்குடி, சி. கே. சுப்பிரமணிய முதலியார், வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார்
35. 1940—மயிலம், சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், மு. அருணசலம் பிள்ளை
36. 1941—திரிச்சிராப்பள்ளி, ஞானியார் சுவாமிகள், ரா. சண்முகசுந்தரம் செட்டியார்
37. 1942—சீகாழி, பண்டிதமணி - மு. கதிரேசன் செட்டியார், கா. இராம நாதன் செட்டியார்
38. 1943—மதுரை, திரு. வி. கலியாணசுந்தர முதலியார், ஈ. த. இராஜேசு வரியம்மையார், பு. ர. சாமிநாதன்
39. 1944—பள்ளத்தூர், ம. பாலசுப்பிரமணிய முதலியார், க. ர. ஆதிலட்சுமி யம்மையார், லெ. பெ. கரு. இராமநாதன் செட்டியார்
40. 1945—சிவகாசி, சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், நீலாவதி இராம சுப்பிரமணியம்மையார், அ. மு. பரமசிவானந்தம்
41. 1946—திருச்செங்கோடு, எஸ். வையாபுரிப் பிள்ளை, புஷ்பம் நடராஜன் அம்மையார், கி. சிவராமன்
42. 1947—கோவை, சாத்தூர் கந்தசாமி முதலியார், அ. ச. ஞானசம்பந்தம், அ. கு. காமாட்சியம்மையார்
43. 1948—யாழ்ப்பாணம், ம. பாலசுப்பிரமணிய முதலியார், சிவகாமி அம்மை யார், கா. பொ. இரத்தினம்
1949—ஆண்டுவிழா இவ்வாண்டில் இல்லை.

---

*சைவ மங்கையர் மாநாடு 1936 முதல் 1942 வரை நடைபெறவில்லை.

44. 1950—ஜனவரிமீ—கொழும்பு, தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, ஆழ்வார் பிள்ளை, பத்மாசனி அம்மையார்
45. 1950—டிசம்பர்மீ—இராமநாதபுரம், ச. சச்சிதானந்தம் பிள்ளை, குன்றக்குடி அடிகளார், ஆர். இராசரத்தினம் அம்மையார்
46. 1951—குன்றக்குடி, ஓ. பி. இராமசாமி ரெட்டியார். சு. இராஜேசுவரி அம்மையார், முத்து வேங்கடாசலம் ஐயர்
1952—ஆண்டுவிழா இல்லை
47. 1953—ஏப்ரில்மீ—ஈரோடு, குன்றக்குடி யடிகளார், அ. ச. ஞானசம்பந்தன், ஈசுவர வடிவம்மையார்
48. 1953—டிசம்பர்மீ—சென்னை, வட்டுக்கோட்டை நாகலிங்கம் பிள்ளை, மரகதம் சிவபூஷணஅம்மையார், வ. ஆ. தேவசேனபதி பிள்ளை
49. 1954—விருதுநகர், ஸர். கந்தையா வைத்தியநாதன், பாகீரதியம்மையார், சி. இராமலிங்க முதலியார்
50. 1955—சிதம்பரம், சு. நடேச பிள்ளை, அ. கு. காமாக்ஷி அம்மையார், க. வெள்ளைவாரணனர்.

## விசேஷக் கூட்டங்களின் தலைவர்கள்

1. 7-7-1905—திருப்பாதிரிப்புலியூர், ஞானியாரடிகள்—தொடக்கம்
16. 1921—கும்பகோணம், சாமிநாத பண்டிதர்—மகாமகம்
20. 1925—சென்னை, ஸர். பி. இராமநாதன்
22. 1927—சென்னை, ஞானியார் சுவாமிகள்
24. 1929—நெல்லை, ச. சச்சிதானந்தம் பிள்ளை
,, 16, 21-5-1929—திருப்பாதிரிப்புலியூர், சாமி வேதாசலம்
25. 5-6-1930—இரும்பூளை, வாலையானந்தர்
22-2-1930—சென்னை, இராஜம்மாள்—சைவ மங்கையர்—தொடக்கம்
18-4-1930—திருவிடைமருதூர், கா. சுப்பிரமணிய பிள்ளை—சைவ இளைஞர் தொடக்கம்
29-8-1930—கிழக்கு மருதூர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் —வெள்ளிவிழா
29. 21-9-1934—மயிலை, ஞானியாரடிகள்
30. 19-7-1935—சென்னை, ஞானியாரடிகள்
32. 1937—பெங்களூர், திவான்பகதூர்கே. தெய்வசிகாமணி முதலியார்

## கோடை வகுப்புத் தலைமையாசிரியர்கள்

1. 1944—பாபநாசம், வச்சிரவேலு முதலியார், சிவகுருநாதர்
2. 1945—தில்லை, பண்டிதமணி - மு. கதிரேசன் செட்டியார்
3. 1946—ஸ்ரீவில்லிபுத்தூர், ஔவை துரைசாமிப் பிள்ளை
4. 1947—வித்தியாலயம், ஔவை துரைசாமிப் பிள்ளை
5. 1948—குன்னூர், டி. எஸ். கந்தசாமி முதலியார்
6. 1949—ஒத்தை, இரா. சண்முகசுந்தரஞ் செட்டியார்
7. 1950—கோவை, முத்து. சு. மாணிக்கவாசகனர்.

### சமாஜச் செயலாளர்கள்

1. 1905—10—சுவாமி வேதாசலம் (மறைமலையடிகள்)
2. 1910—11—இருக்கம். ஆதிமூல முதலியார்
3. 1911—12—ச. சச்சிதானந்தம் பிள்ளை
4. 1912—17—கி. குப்புசாமி முதலியார்
5. 1917—20—கா. சுப்பிரமணியம் பிள்ளை
6. 1920—21—வா. தி. கோவிந்தராச முதலியார்
7. 1921—43—ம. பாலசுப்பிரமணிய முதலியார்
8. 1944—46—கா. இராமநாதன் செட்டியார்
9. 1946—53—க. அரங்கசாமி முதலியார்
10. 1953—55—ச. சிவகுமாரன்

### சித்தாந்தம் பத்திராசிரியர்கள்

1. 1912—18—பூ. கல்யாணசுந்தர யதீந்திரர்
2. 1918—20—கி. குப்புசாமி முதலியார்
3. 1921—27—பத்திரிகை நடைபெறவில்லை.
4. 1928—36—ம. பாலசுப்பிரமணிய முதலியார்
5. 1937—அ. சோமசுந்தரம் செட்டியார்
6. 1938—42—திரு. வி. உலகநாத முதலியார்
7. 1943—பு. ர. சாமிநாதனார்
8. 1944—ம. பாலசுப்பிரமணிய முதலியார்
9. 1945—46—ச. சச்சிதானந்தம் பிள்ளை
10. 1947—53—சி. எம். இராமச்சந்திரன் செட்டியார்
11. 1954—55—ம. பாலசுப்பிரமனிய முதலியார்

---

# சமாஜத்தொண்டர் யார் எவர்
# (Who is Who)

கோவைகிழாரும் மயிலைக்கிழாரும் தொகுத்தவை

**அம்பலவாண நாவலர்:**—தஞ்சையில் 1915–ல் சமாஜ ஆண்டுவிழாத் தலைவர், ஈழநாட்டு வட்டுக்கோட்டையில் 1860–ல் தோற்றம். நல்ல பேச்சாளர். உமாபதி சிவம் இயற்றியதாகக் கூறப்படும் "பௌஷ்கர விருத்தியை" வடமொழியில் அச்சிட்டவர்.

**அரங்கசாமி முதலியார், க., B. A.:**—சமாஜச் செயலாளராக ஏழாண்டுகள் (1946—1953) தொண்டு செய்தவர், ஞானியார் சுவாமிகள் சீடர், மிகச் செம்மையான சமய வாழ்க்கை நடத்துபவர், பழநியில் நல்ல பணி செய்பவர்.

**அருணாசலம் பிள்ளை, மு. M. A.,:**—1940–ல் மயிலத்தில் இளைஞர் மாநாட்டுத் தலைவர், சிலகாலம் "சித்தாந்தம்" உதவி ஆசிரியர், சங்க இலக்கியம்,

சித்தாந்த சாத்திரம் முதலிய சமாஜ வெளியீடுகட்குச் சிறந்த தொண்டு செய்தவர். திருச்சிற்றம்பலம் என்னும் தமது ஊரில் ஆதாரப் பயிற்சிப் பள்ளி ஒன்றை நிறுவி நடத்துபவர். "முக்கூடற்பள்ளு" முதலிய பல நூல்களை வெளியிட்டவர்.

**ஆதிமூல முதலியார், இருக்கம் :**—1911, 1912-ல் சமாஜச் செயலாளர். "சைவம்" என்னும் பத்திரிகையின் ஆசிரியர். பல ஆண்டுகள் சிவனடியார் திருக்கூட்டத்தைச் சிறப்பாகச் சென்னையில் நடத்தியவர். இக்கூட்டத்தின் தல யாத்திரைகளைப் பற்பல முறை செம்மையாக நடத்திப் புகழ்பெற்றவர்.

**ஆலாலசுந்தரம் செட்டியார், பு. M. A. :**—1936-ல் காஞ்சிபுரத்தில் இளைஞர் மாநாட்டுத்தலைவர். தாம்பரத்திலுள்ள சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியர். ஆலய வழிபாட்டில் மிக்க பற்றுடையவர். தமிழ்ப் பாடபுத்தகங்கள் பலவற்றின் ஆசிரியர். பல ஆண்டுகளாகச் சமாஜச் செயற்குழு உறுப்பினர்.

**இரத்தினசபாபதி முதலியார், ஆ. அ. :**—1937-ல் சமாஜ விசேஷ மகாநாடு ஒன்றை மிகச் சிறப்பாகப் பெங்களூரில் நடத்தியவர், பெங்களூர் "குகன் அச்சுக்கூட" உரிமையாளர், பிள்ளையார் சதுர்த்தியை ஒட்டி அரிய விழாவும் பல சொற்பொழிவுகளும் அடியார்கட்கு அன்னமளித்தலும் பல ஆண்டுகள் தொடர்ச்சியாக நடத்தி, 1950-ல் இறையடி அடைந்தவர்.

**இரத்தினம், கா. பொ. M. A., B. O. L., :**—1948-ல் யாழ்ப்பாணத்தில் நடந்த சமாஜ விழாவில் இளைஞர் மாநாட்டுத் தலைவர். இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர். இலங்கையிலும் தமிழ்நாட்டிலுமுள்ள பல பத்திரிகைகட்குக் கட்டுரைகள் எழுதுபவர். திருவள்ளுவர் திருநாள் வைகாசியில் கொண்டாடவேண்டும் என்று விடாது கிளர்ச்சி செய்பவர்.

**இராமசாமி ரெட்டியார், ஓமந்தூர் :**—1951-ல் குன்றக்குடியில் சமாஜ ஆண்டுவிழாத் தலைவர், முன்னாள் சென்னை முதலமைச்சர், சட்டசபை உறுப்பினர், வடலூரில் கல்வி நிலையம் முதலிய பல தாபனங்களை நிறுவி நடத்துபவர்.

**இராமச்சந்திரன் செட்டியார், சி. எம். B. A., B. L., F. R. G. S. :**—1940-ல் மயிலத்திலும், 1945-ல் சிவகாசியிலும் சமாஜ ஆண்டு விழாக்களின் தலைவர். சென்னை அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தில் கமிஷனராக 1940–45-ல் பல அரிய திட்டங்களை வகுத்தவர். கோயம்புத்தூர் ஜில்லாவில் பல ஆண்டுகள் ஜில்லா கல்வி சபையின் தலைவராகப் பணி செய்தவர். கோவைத் தமிழ்ச்சங்கத்தைச் செம்மையாக நடத்திவருபவர். பேரூர் சாந்தலிங்க அடிகள் கல்லூரிக் கழகத்தின் சார்பில் தமிழ்க் கல்லூரியை நடத்துபவர். பல ஆண்டுகள் "கொங்கு மலர்", "சித்தாந்தம்" ஆசிரியராக இருந்தவர். "கோயில் பூனை" முதலிய பல நூல்களின் ஆசிரியர். கொங்குநாட்டு வரலாறு, கொங்கும் சமணமும் என்ற வரலாற்று நூல்களையும் பல செய்யுள் நூல்களையும் ஆங்கில சிலநூல்

கட்டுரைகளையும் எழுதியவர். ராவ்பகதூர், சைவ ஞாயிறு, செந்தமிழ்ச் சித்தாந்தப் புரவலர் முதலிய பட்டங்கள் பெற்றவர், இவருடைய வாழ்க்கைத் துணைவியாரும் புதல்வர்களும் நல்ல சைவப் பற்றுடையவர்கள்.

**இராமநாதன் செட்டியார், கா. B. A., B. L.** :—1942–ல் சீகாழியில் இளைஞர் மாநாட்டுத் தலைவர், 1944–46–ல் சமாஜச் செயலாளர், இராம கிருஷ்ண மடத்தில் நிரம்பிய பற்றுடையவர், சமாஜ விழாக்களில் சேரிப் பணியை வற்புறுத்தி நடத்தியவர், மலாய் நாட்டுக் கோலாலம்பூரில் தற் போது சட்டசபை உறுப்பினராகவும், தனவணிகர் துணைவராகவும், வழக்கறிஞராகவும், வருமானவரி நிபுணராகவும் தொண்டு செய்பவர், "என் பிறந்தோம்?" முதலிய நூல்களின் ஆசிரியர், சைவத்திற்கும் தமிழிற்கும் இடைவிடாது பணி புரிபவர்.

**இராமநாதன் செட்டியார், லெ.பெ.கரு.**:—1944–ல் பள்ளத்தூரில் இளைஞர் மாநாட்டுத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர், தமிழிசைச் சங்கத்தின் செயலாளர். பல தமிழ் நூல்களின் ஆசிரியர்.

**இராமநாதன், ஸர். பொன்னம்பலம், KC. C. M. G. Kt.** :—1906–ல் சிதம் பரத்திலும் 1922–ல் சென்னையிலும் சமாஜ ஆண்டு விழாக்களில் தலைமை வகித்தவர், யாழ்ப்பாணத்தில் இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வரன் கல்லூரி என்பனவற்றைத் தொடங்கி மிகச் சிறப்பாகச் சைவம் வளர்க் கும் முறையில் நடத்தியவர். இலங்கையில் சிறந்த அரசியல்வாதியாக உரிமைப்போரைத் தொடங்கி நடத்தியவர், யாழ்ப்பாணத் தமிழ்மக்களுக்கு எண்ணிறந்த வகைகளில் உதவி செய்தவர். பகவத்கீதைக்கு ஓர் ஆங்கில உரையும் விவிலிய நூலுக்கு ஆராய்ச்சி உரையும் இயற்றி வெளியிட்டவர். சமய குரவர் முதலிய சைவப் பெரியார்கள் காலத்தை 4000, 5000 ஆண்டுகட்கு முன் என்று விவரிப்பதில் ஊற்றம் உடையவர், சிறந்த வழக்கறிஞராக இலங்கையிலும், சில வழக்குகளில் சென்னையிலும் முன் நின்று வெற்றி பெற்றவர். சென்னை ராஜ்யத்தில் கோடைக்கானல் மலையில் குறிஞ்சி ஆண்டவர் கோயில் ஒன்றைக் கட்டி அதற்கு மூலதன மும் வைத்தவர். இக்கோயிலிலிருந்து பார்த்தால் பழனி மலையும் மலை மீதுள்ள பழனியாண்டவர் கோயிலும் நன்கு தெரியும்.

**இராமநாதன் செட்டியார், மயிநாகரம், வே.** :—1939–ல் குன்றக்குடியில் சைவ இளைஞர் மாநாட்டுத் தலைவர், பாலகவி முதலிய பல பட்டங்கள் பெற்றவர். இடைவிடாது சைவத்திற்குக் கட்டுரைகள் சொற்பொழிவு கள் வாயிலாகத் தொண்டு புரிபவர்.

**இராமலிங்க முதலியார், கி. M. A.,** :—1934–ல் திருவதிகையில் இளைஞர் மாநாட்டுத் தலைவர். பல ஆண்டுகள் நகராண்மைக் கழகங்களில் கமிஷன ராக இருந்து ஓய்வு பெற்றபின் தருமபுர ஆதீனத்துக் கீழ்த்திசைக் கல்லூரித் தலைவராகத் தற்போது பணிபுரிபவர். தூய தமிழ்ச் சொற் களைக்கொண்டே எழுதுவதில் மிக்க ஆர்வமுடையவர்.

**இராமலிங்கம், சாம. M. A.,** :—1954–ல் விருதுநகரில் இளைஞர் மாநாட்டுத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்த தத்துவ

விரிவுரையாளர். சென்னை சாது அச்சக உரிமையாளர்களின் நெருங்கிய உறவினர்.

**இராஜா கிராமணியார் :**—சென்னையில் 1916–ல் தமது சொந்த செலவில் சமாஜ ஆண்டுவிழாவை நடத்தியவர். பிறகு பல ஆண்டுகள் சமாஜச் சமய வகுப்புக்களைச் செம்மையாகத் தமது செலவில் நடத்திவைத்தவர்.

**உமாமகேசுவரன் பிள்ளை, த. வே. B. A., B., L. :**—1933–ல் கரந்தையில் நடந்த சமாஜ ஆண்டுவிழாவை மிகச் செம்மையாக நடத்திவைத்தவர். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை உயிருக்குயிராகத் தமது வாழ்நாள் முழுமையும் நடத்தியவர். திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகளின் அந்தரங்க சீடர்களுள் ஒருவர். தமிழவேள், ராவ்சாகிப் முதலிய பல பட்டங்கள் பெற்றவர். தமிழிலும் சைவத்திலும் எல்லையிலாப் பேரன்பு பூண்டவர்.

**உலகநாத முதலியார், திரு. வி. :**—சில ஆண்டுகள் (1938–42) "சித்தாந்தம்" ஆசிரியராகப் பணிபுரிந்தவர் சாது அச்சுக்கூட உரிமையாளர், தமிழ் நாடெங்கும் புகழ்பெற்ற திரு. வி. க. அவர்களுடைய தமையனர். அடக்க விலைப் பதிப்புக்களாக நமது சமாஜம் வெளியிட்ட பல்லாயிரம் பிரதிகளை அச்சுப் பிழை இன்றிச் செம்மையாகப் பதிப்பித்தற்குத் துணைபுரிந்தவர்.

**கதிரேசச் செட்டியார், மு. :**—1930–ல் சென்னையிலும் 1942–ல் சீகாழியிலும் நடைபெற்ற சமாஜ ஆண்டு விழாக்களின் தலைவர். வடமொழியிலும் தமிழிலும் சிறந்த புலவர். மகாமகோபாத்யாயர் பண்டிதமணி முதலிய பட்டங்கள் பெற்றவர். திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை ஆகிய திருவாசகப் பகுதிகட்கு விரிவான உரை இயற்றியவர், "கௌடில்யன் அர்த்த சாஸ்திரம்" "ம்ருச்ச கடிகா" முதலிய வடமொழி நூல்களைத் தமிழில் மிக அழகாக மொழி பெயர்த்தவர். "சுலோசனை," "உரைநடைக் கோவை" முதலிய நூல்களின் ஆசிரியர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பல ஆண்டுகள் தமிழாசிரியராகவும் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராகவும் விளங்கியவர், கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் கிரம்பிய பற்றுடையவர். சைவசித்தாந்த சபைகள் பலவற்றில் தலைமை வகித்தவர்.

**கந்தசாமிப் பிள்ளை, நீ. :**—1933-ல் சமாஜ விழாவில் இளைஞர் மாநாட்டுத் தலைவர். கரந்தைத் தமிழ்ச் சங்கத்துச் செயலாளராகப் பல ஆண்டுகள் தொண்டு புரிந்தவர். கல்வெட்டு ஆராய்ச்சியில் பற்பல உண்மைகளைக் கண்டவர். "திருப்பள்ளி எழுச்சி" உரை முதலிய பல சிறு நூல்களை வெளியிட்டவர். கட்டிடங்கள், கற்சாலைகள், பாலங்கள் முதலியன ஆக்கும் துறையில் வல்லுநர்.

**கந்தசாமி முதலியார், டி, ஸ். M. A. :**—1947-ல் கோயம்புத்தூரில் ஆண்டு விழாத் தலைவர். திருக்குறள், சிவஞானபோதம், பெரியபுராணம் முதலியவற்றில் நுட்ப ஆராய்ச்சி செய்தவர். காசிப் பல்கலைக் கழகத்தில் திருப்பனந்தாள் காசிமடத்து ஆதரவில் 1949-ம் ஆண்டில் சைவ சித்தாந்த விரிவுரைகள் நிகழ்த்தியவர். "தயாள பாக்" இயக்கத்தில் ஈடுபட்டவர். சாத்தூரில் சிறந்த வழக்கறிஞராக விளங்கியவர்.

**கலியாணசுந்தர முதலியார், திரு. வி.** :—1930-ல் கிழக்கு மருதூரில் சமாஜ வெள்ளி விழாவிலும், 1934-ல் திருவதிகையிலும், 1943-ல் மதுரையிலும், சமாஜ ஆண்டு விழாக்களிலும் தலைமை வகித்தவர். 'காங்கிரஸ்' இயக்கத்தில் எஸ். ஸ்ரீனிவாச அய்யங்காரோடு தமிழ்நாட்டில் பல சுற்றுப்பிரயாணங்கள் செய்தவர். சென்னை வெஸ்லியன் கல்லூரியில் சிலகாலம் தமிழாசிரியராக இருந்தவர். "தேசபக்தன்" எனும் தமிழ் தினத்தாளின் ஆசிரியர், "நவசக்தி" எனும் வாரப்பத்திரிகையைத் தொடங்கிப் பல ஆண்டுகள் நடத்தி, வெ. சாமிநாத சர்மா, கல்கி கிருஷ்ணமூர்த்தி, சங்குசுப்ரமணியம், சக்திதாசன் முதலியவர்களை நல்ல எழுத்தாளர்களாக்கியவர். "பெண்ணின் பெருமை" "மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்", "உள்ளொளி", "சைவத்தின் சமரசம்", "முருகன் அல்லது அழகு", முதலிய பற்பல அரிய நூல்களை இயற்றியவர், நல்ல தமிழ்நடையில் பேசவும், எழுதவும் வசதியாக நூற்றுக்கணக்கான நல்ல தமிழ்ச் சொற்களைத் தமிழுலகுக் களித்தவர். பெரியபுராணத்தை இருமுறை பல ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு வெளியிட்டவர். சமண சமயத்திற்கும், சைவத்திற்கும் உள்ள தொடர்பு, இயற்கை வாழ்வின் பெருமை, மார்க்ஸ் தோற்றுவித்த பொதுவுடைமைக் கொள்கை முதலியவற்றை அடிக்கடி வற்புறுத்துபவர், திருக்குறள் 20 அதிகாரங்கட்குப் புதிய புதிய உரைகள் கண்டவர். தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டு அவர்கள் சார்பில் எதிர்த்துப் போராடிச் சில வேலை நிறுத்தங்களை வெற்றியாக நடத்தி முடித்தவர். சக்ரவர்த்தி இராஜகோபாலாசாரியார், பனகால் ராஜா, டாக்டர் சுப்பராயன் ஆகிய முதலமைச்சர்களோடு நெருங்கிய நட்புக்கொண்டவர். மகாத்மா காந்தியின் ஆங்கிலச் சொற்பொழிவுகளை அவ்வப்போதே மேடையில் தமிழில் திறமையாக மொழிபெயர்த்தவர். யாழ்ப்பாணம் மேலைப்புலோலி சதாவதானம் கதிரைவேற் பிள்ளையவர்கள் சீடராகத் தொண்டுபுரிந்து அருட்பா மருட்பா வழக்கில் ஈடுபட்டு அவ்வழக்கின் வெற்றியைச் சிறப்பாகச் சிதம்பரம், காஞ்சிபுரம் முதலிய பல இடங்களில் கொண்டாடியவர். சைவ சித்தாந்த சாத்திரங்களை மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியாரிடம் கற்றவர்.

**கலியாணசுந்தர யதீந்திரர்.** :—அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியார் என்பவரும் இவரே. 1917-ல் செம்பியத்தில் சமாஜ ஆண்டுவிழாவில் தலைமை வகித்தவர். திருவான்மியூர்ப் புராணம் முதலியவற்றின் ஆசிரியர். தாயுமானசுவாமி பாடல்கட்கு மெய்கண்ட விருத்தியுரை எழுதியவர். "சித்தாந்தம்" பத்திரிகையை 1912-ல் தொடங்கி 1918-வரை ஆசிரியராக இருந்து நடத்தியவர். நூற்றுக்கணக்கான மாணவர்கட்குச் சித்தாந்த சாத்திரங்களைப் போதித்தவர்.

**கலியாணம் பிள்ளை, ஜி. M. A.** :—1935-ல் திருவண்ணாமலையில் சைவ இளைஞர் மாநாட்டுத் தலைவர். மாயூரம் பண்டிதர் சபாபதிப் பிள்ளையவர்களின் பேரனர். பல ஆண்டுகள் சமாஜ உதவிச் செயலாளராகவும், உதவிப் பத்திராசிரியராகவும் பணிபுரிந்தவர், ஞானியார் சுவாமிகள் சொற்பொழிவுகள் சிலவற்றைச் சுருக்கமாக எழுதி வெளியிட்டவர். கோடை வகுப்பு ஒன்றை ஸ்ரீவில்லிபுத்தூரில் நடத்திவைத்தவர். திருப்புகலூர், அச்சிறுபாக்கம் முதலிய தல வரலாறுகளைக் கல்வெட்டுக்களோடு

எழுதி வெளியிட்டவர். திருவாசகத்திற்குச் சொல்லகராதி தொகுத்தவர். இராமநாதபுரம் கலெக்டர் ஆபீஸில் தற்போது ஹுஜூர் சிரஸ்ததாரராக இருப்பவர்.

**கனகசபை, ஸர். A.** :—1909-ல் திரிசிராப்பள்ளியில் சமாஜ ஆண்டு விழாவில் தலைமை வகித்தவர். "The Tamils 1800 years ago" முதலிய ஆராய்ச்சி நூல்களை எழுதிய ஈழநாட்டுப் பெரியார்.

**குஞ்சிதபாதம், வை. வித்வான்.** :—1953-ல் சித்தாந்தம் உதவி ஆசிரியர். மறைமலையடிகள் மருமகனுர், சென்னையில் பல கோயில்களில் ஊதியம் பெற்றுச் சமயப் பிரசாரங்கள் செய்பவர். நுங்கம்பாக்கம் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர்.

**குப்புச்சாமி முதலியார், கி** :—1912-1917-ல் சமாஜச் செயலாளர். 1919-1920-ல் சித்தாந்தம் ஆசிரியர். சித்தாந்த சாத்திரம் பதினுன்கின் மூலத்தை அடக்கவிலைப் பதிப்பாக வெளியிட்டவர். திருக்குறள் பரிமேலழகர் உரையைத் தமது விளக்க உரையோடு சேர்த்து மூன்றுபாகமாகப் பதிப்பித்தவர், சென்னையில் போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் ஆபீஸிலும், கஸ்டம்ஸ் கலெக்டர் ஆபீஸிலும் உள்ள எழுத்தாளர்கட்கும், திருவள்ளுவர் ஆலயத்திலும் திருக்குறள் விரிவுரை நிகழ்த்தியவர், சிவஞானசித்தியார் விரிவுரையை வாரத்திற் கொருமுறையாக மூன்று ஆண்டுகள் திருமயிலையில் நடத்தியவர். 'P. ORR & Sons'-ல் உத்தியோகம் வகித்தவர். சிவஞானபோத விளக்கம் முதலியவற்றைத் தொடர்ச்சியாகச் சித்தாந்தத்தில் வெளியிட்டவர்.

**குன்றக்குடி அடிகளார்.** :—1950-ல் இராமநாதபுரத்தில் இளைஞர் மாநாட்டிலும், 1953-ல் ஈரோட்டில் சமாஜ ஆண்டு விழாவிலும் தலைமை வகித்தவர். "அருள் நெறித்திருக்கூட்டம்" என்பதை நிறுவிப் பற்பல ஊர்களில் கிளைகளைத் தாபித்து வார வழிபாடு முதலிய வழிகளில் சமயப் பிரசாரம் செய்பவர்.

**கோவிந்தராஜு முதலியார், வா. தி.** :—1921-ல் சமாஜச் செயலாளர். மலாய் நாட்டில் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றவர். தமது வாழ்க்கைத் துணைவியாரோடு ஆலயவழிபாடு, சொற்பொழிவு முதலியன செய்தவர்.

**சச்சிதானந்தம் பிள்ளை, ச. B.A., L.T.** :—1931, 1938, 1950-ம் ஆண்டுகளில் முறையே தூத்துக்குடி, கோயம்புத்தூர், இராமநாதபுரம் சமாஜ ஆண்டு விழாக்களில் தலைமை வகித்தவர். மாவட்டக் கல்வி அதிகாரியாகவும், அண்ணமலைப் பல்கலைக் கழகப்பதிவாளராகவும் இருந்தவர். காசிப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியவர். "சித்தாந்தம்" பத்திராசிரியராக இரண்டாண்டுகள் இருந்தவர். பல ஆண்டுகளாக வாரந்தோறும் பல நாட்களில் பல சபைகளின் சார்பில் பல சமயச் சொற்பொழிவுகள் செய்து வருபவர். 1955-ல் சமாஜச் செயற்குழுத் தலைவர். வாரவழிபாட்டில் பற்றுடையவர்.

**சண்முகசுந்தரம் செட்டியார், ரா.** :—1941-ல் திருச்சியில் சைவ இளைஞர் மாநாட்டுத் தலைவர். கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார் மாணவர். C.K.

சுப்பிரமணிய முதலியார் பெரியபுராண உரை வெளியீட்டிற்குப் பல தொண்டுகள் புரிந்தவர். சென்னை நகராண்மைக் கழகத்தில் உத்தியோகம் வகிப்பவர். "திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி" உரையை எழுதி, சமாஜப் பொன்விழாப் பதிப்பாக வெளியிட்டுள்ளவர்.

சபாரத்தினம்.:—திருமயிலையில் 1916-ல் சமாஜ ஆண்டுவிழாத் தலைவர். இலங்கையில் Dy. Fiscal வேலை பார்த்தவர். இலங்கை அரசாங்கத்தால் "முதலியார்" எனும் பட்டமளிக்கப் பெற்றவர். சைவ சித்தாந்தத்தை ஆங்கிலத்தில் "Essentials of Hinduism" எனும் நூலாக எழுதி வெளியிட்டவர்.

சமரபுரி முதலியார், பு.:—"சித்தாந்தம்" உதவி ஆசிரியராகச் சிலகாலம் இருந்தவர். யாழ்ப்பாணம் சுவாமிநாதபண்டிதருடைய சீடர். M.S.M. ரயில்வேயில் எழுத்தாளர். சைவப் பிரசாரகராகச் சென்னை அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தினரால் நியமிக்கப்பெற்று தொண்டு செய்தவர். சென்னையில் பல ஆலயங்களில் சொற்பொழிவு நிகழ்த்துபவர்.

சாமிநாத பண்டிதர்:—1918-ல் கும்பகோணத்திலும், 1920-ல் மாயவரத்திலும் ஆண்டு விழாக்களிலும், 1921-ல் மகாமக விசேஷ மாநாட்டிலும், தலைமை வகித்தவர்; சென்னையில் ஒரு அச்சுக்கூடம் நிறுவி, சிவஞான பாடியம், தேவாரம் தலமுறை முதலிய நூல்களை வெளியிட்டவர். கலப்பு மணம், தீண்டாதார் ஆலய நுழைவு முதலிய கொள்கைகளைக் கண்டிப்பவர்.

சாமிநாதன், பு. ர. M.A., L.T.:—1943-ல் மதுரையில் இளைஞர் மாநாட்டுத் தலைவர். ஞானியார் சுவாமிகள் மாணவருள் ஒருவர். 1943-ல் "சித்தாந்தம்" பத்திராசிரியர். அண்ணாமலை நகர் R. C. T. உயர் நிலைப்பள்ளியின் தலைமையாசிரியர். தமது வாழ்க்கைத் துணைவியார் இராசேசுவரியம்மையாரோடு தமிழ்நாட்டின் பல பகுதிகளில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துபவர்.

சிதம்பரநாதன் செட்டியார், அ. M.A. Ph.D.:—1937-ல் வேலூரில் இளைஞர் மாநாட்டுத் தலைவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர். சில ஆராய்ச்சி நூல்கள் இயற்றியவர்.

சிவகுமாரன், ச. M.A.:—1953-முதல் இற்றைவரை சமாஜச் செயலாளர். தமிழிலும், சைவத்திலும் சிறந்த பற்றுடையவர். பெரிய புராணம், கம்பராமாயணம், முருகன் புகழ் நூல்கள் முதலியவற்றில் பல பொருள்கள் பற்றி விரிவுரை அழகாக நிகழ்த்துபவர். சென்னை Binny and Company-ல் உயர்ந்த உத்தியோகம் வகிப்பவர்.

சிவகுருநாதன் பிள்ளை, ந. தூத்துக்குடி.:—1936-ல் காஞ்சீபுரத்தில் சமாஜ ஆண்டு விழாவில் தலைமை வகித்தவர். சோமசுந்தர நாயகர் சீடருள் ஒருவர். தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையை ஏற்படுத்தி 60 ஆண்டுகட்கு மேலாக நடத்தியவர். சிவஞான சித்தியார் நூலாராய்ச்சி எழுதி வெளியிட்டவர். சைவப்பிரகாச அச்சகம் நிறுவி மேற்பார்வையாளராகப் பணிபுரிந்தவர். சைவ சித்தாந்த சாத்திரங்களைப் பாடமாகப் பலமுறை

நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகட்குப் போதித்தவர். 1000 பிறை கண்டவர்.

**சிவஞானபாலைய சுவாமிகள் :**—1940-ல் தமது சொந்த செலவில் மயிலத்தில் சமாஜ ஆண்டு விழாவை நடத்திவைத்தவர், சைவ மடங்கள் எல்லாவற்றின் பிரதிநிதிகளையும் வரவேற்று அன்போடு உபசரித்தவர், திருக்கோயில் நிர்வாகத்தை மிகச் செம்மையாகக் கவனிப்பவர், மடத்தின் சார்பில் முதன் முதலாகத் தமிழ்க் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தி நடத்துபவர்.

**சிவஞான முதலியார், P.M. :**—1921-ல் சென்னையில் சமாஜ ஆண்டு விழாவில் தலைமை வகித்தவர். சிறந்த வழக்கறிஞர், திவான்பகதூர் பட்டம் பெற்றவர்.

**சிவஞானம் பிள்ளை, ஸர். டி. என். :**—1928-ல் சென்னையில் சமாஜ ஆண்டு விழாவில் தலைமை வகித்தவர், சென்னை அரசாங்கத்தில் சில ஆண்டுகள் அமைச்சராயிருந்தவர். திருநெல்வேலி, திருச்செந்தூர் இருப்புப் பாதையை ஏற்படுத்தியவர்.

**சிவராமன், கி. M. A. :**—1946-ல் திருச்செங்கோட்டில் இளைஞர் மாநாட்டுத் தலைவர். ஓராண்டு சித்தாந்தம் உதவியாசிரியர். காசிப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த ஆசிரியராக இருப்பவர்.

**சின்னசாமி ரெட்டியார். மு. :**—1929-ல் திருவெண்ணெய் நல்லூரில் தமது சொந்த செலவில் சமாஜ ஆண்டு விழாவை நடத்தியவர், பல ஆண்டுகள் பல சமாஜ மாதக் கூட்டங்களை நடத்தியவர், 'மெய்கண்டாரும் சிவஞான போதமும்', 'திருவெண்ணெய்நல்லூர்ப் பெருமை', 'முருகன் முந்நூல்' முதலியவற்றைத் தமது செலவில் சமாஜப் பதிப்புக்களாக வெளியிட்டவர், தமது ஊரில் ஓர் உயர்நிலைப்பள்ளியை நடத்துபவர், சமாஜ ஆண்டு விழாக்கள் முதலியவற்றிற்குத் தவிராது வருபவர். சஷ்டி விரதத்தை மாதந்தோறும் அநுட்டிப்பவர்.

**சுப்பிரமணிய முதலியார், சி. கே. B. A, :**—1939-ல் குன்றக்குடியில் சமாஜ ஆண்டு விழாத் தலைவர், சிவக்கவிமணி முதலிய பட்டங்கள் பெற்றவர், பெரிய புராணத்திற்கு மிக மிக விரிவான உரை எழுதி வெளியிட்டவர். "மாணிக்கவாசகர் அல்லது நீத்தார் பெருமை", "சேக்கிழார்" முதலிய நூல்களின் ஆசிரியர். வழக்கறிஞர். கோவைத் தமிழ்ச் சங்கம் முதலியவற்றின் சார்பில் சமயப்பணி செய்பவர். திரு அஞ்சைக்களத்தில் சுந்தரர் திருநாளை ஆடி சுவாதியில் பல ஆண்டுகளாக நூற்றுக்கணக்கான தொண்டர்களோடு சிறப்பாக நடத்துபவர்.

**சுப்பிரமணியம் பிள்ளை, கா. M. A., M. L. :**—1930-ல் திருவிடைமருதூரில்முதன் முதலாகத் தொடங்கப்பெற்ற சைவ இளைஞர் மாநாட்டுத் தலைவர். சமாஜச் செயலாளராக மூன்றாண்டுகள் (1917-1920) பணிபுரிந்தவர். தாகூர் சட்ட விரிவுரையாளர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகச் சில ஆண்டுகள் இருந்தவர். பற்பல நூல்களின் ஆசிரியர்.

**சுப்பையா முதலியார், ரி.** :—1923, 1926-ம் ஆண்டுகளில் சென்னையில் சமாஜ ஆண்டு விழாக்களில் தலைமை வகித்தவர், மாவட்ட நீதிபதியாக இருந்து திவான்பகதூர் பட்டம் பெற்றவர்.

**சோமசுந்தரம் செட்டியார், அ. M. A.** :—சில மாதங்கள். "சித்தாந்தம்" உதவி ஆசிரியராகவும் ஆசிரியராகவும் பணி செய்தவர், சமாஜ அடக்கவிலைப் பதிப்புக்கள் பலவற்றிற்குப் பொருளுதவி செய்தவர், 8, 9 திருமுறைகட்குக் குறிப்புரை எழுதி வெளியிட்டவர், ருக்மிணி குக்கர் எனும் சமையல் சாதனத்தைக் கண்டுபிடித்து உரிமை பெற்றவர், பலவகை அறங்கட்குப் பொருள் அளிப்பவர்.

**ஞானசம்பந்தம், அ. ச. M. A.** :—1947-ல் கோவையிலும் 1953-ல் ஈரோட்டிலும் இளைஞர் மாநாட்டுத் தலைவர், சென்னைப் பச்சையப்பர் கல்லூரித் தமிழாசியர். குன்றக்குடி அடிகளாரோடு நெருங்கிய தொடர்பு பூண்டவர்.

**ஞானியார் சுவாமிகள் (சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்) திருப்பாதிரிப்புலியூர்** :—சமாஜத்தைத் தோற்றுவித்த ஞானத் தந்தையார் இவரே. இவர் திருமடத்திலேயே 1905-ம் ஆண்டில் சமாஜம் தொடங்கப்பெற்றது. இப்பெரியார் வடமொழி தமிழ் மொழிகளில் வல்லுநர். மிகச் சிறந்த சைவப் பேரறிஞர், கல்லாப் பெண்ணுக்கும் அறியாப் பேதைக்கும் புரியும்படி எளிய நடையில் அரிய நுட்பங்களை விளக்கிப் பல மணி நேரங்கள் தொடர்ந்து பேசும் ஆற்றல் மிக்கவர். 1913 (வேலூர்), 1914 (கூடலூர்), 1924 (திருப்பாதிரிப்புலியூர்), 1927 (புதுச்சேரி), 1929 (திருவெண்ணெய் நல்லூர்) 1937 (வேலூர்), 1941 (திருச்சிராப்பள்ளி) ஆக மொத்தம் எழுமுறை சமாஜ ஆண்டு விழாக்களில் தலைமை வகித்தவர். 1927–ல் சென்னையில் நடத்த சமாஜ விசேட மாநாட்டில் தலைமை வகித்து இறந்துபோன "சித்தாந்தம்" பத்திரிகையை மீண்டும் உயிர்ப்பித்தவர். 1934, 1935, 36, 37, 39 ஆம் ஆண்டுகளில் சென்னையில் சமாஜ விசேஷ மாநாடுகளில் தலைமை வகித்தவர். 1929-ம் ஆண்டில் திருப்பாதிரிப்புலியூரில் ஒரு பெரிய சைவ மாநாட்டைக் கூட்டி அதில் சைவ சமய உண்மைகளை நன்கு ஆய்ந்து செப்பம் செய்தற்குப் பெருந்துணைபுரிந்தவர். நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகட்குச் சமய நூல்களைப் போதித்தவர்.

**தியாகராச முதலியார், வே** :—"சித்தாந்தம்" உதவி ஆசிரியராகச் சில காலம் தொண்டு புரிந்தவர், திரு. வி. க. அவர்களுடைய அணுக்கத் தொண்டர், சென்னை இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் உயிர்நாடி.

**திருநாவுக்கரசு முதலியார், மணி** —:1928-ஆண்டில் சித்தாந்தம் ஆசிரியர், மறைமலையடிகள் சீடர், பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர்.

**துரைசாமி பிள்ளை, ஔவை சு.** :—சமாஜம் நடத்திய கோடை வகுப்புக்களில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் "சிவஞான போதம்," "ஞானாமிர்தம்" முதலிய நூல்களைப் பல ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு வெளியிட்டவர். சிறந்த பேச்சாளர், சில ஏட்டுச்சுவடிகளை சமாஜத்திற்கு அளித்தவர்.

**தெய்வசிகாமணி முதலியார், கி.** :—பெங்களூரில் 1937-ல் விசேஷ மகாநாட்டில் தலைமை வகித்தவர், கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைப் பதிவாளராக உத்தியோகம் வகித்தவர், சென்னைத் தமிழ்ச்சங்கம் தாபித்தவர், சமாஜ மாதக்கூட்டங்கள் பலவற்றை ஊக்கத்தோடு நடத்தியவர். இவருடைய மணிவிழாவை நமது சமாஜம் சிறப்பாகக் கொண்டாடிற்று.

**தேவசேனாபதி, வ. ஆ. M. A. Ph. D.** :—1953-ல் சென்னையில் சமாஜ இளைஞர் மாநாட்டில் தலைமை வகித்தவர். சைவ சித்தாந்த ஆராய்ச்சி செய்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் Ph. D. பட்டம் பெற்றவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் தத்துவ ஆராய்ச்சி ஆசிரியாகத் தற்போது இருப்பவர்.

**நடேச பிள்ளை, சு. B. A., B. L.** :—தஞ்சையில் ஒரு சிறந்த சமயாநுபவம் மிக்க ஞானியின் பேரனார். சமாஜப் பொன்விழாத் தலைவர். ஸர். பி. இராமநாதனுடைய மருமகனார். இலங்கையில் அமைச்சர் பதவி வகிப்பவர். இராமநாதன் கல்லூரியை நடத்துபவர். தமிழிசையில் சிறந்த பற்றுடையவர், ஆண்டுதோறும் சென்னையில் நடைபெறும் தமிழிசை மாநாடுகளில் கலந்துகொள்பவர்.

**நல்லசாமிப் பிள்ளை, J. M.** :—1908-ல் நாகையிலும் 1911-ல் சென்னையிலும் சமாஜ ஆண்டு விழாக்களில் தலைமை வகித்தவர். மெய்கண்ட சாத்திரங்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர். " சித்தாந்த தீபிகை " எனும் பத்திரிகையைப் பல ஆண்டுகள் ஆசிரியராக இருந்து நடத்தியவர். "Studies in Saiva Siddhantha" முதலிய நூல்களை வெளியிட்டவர். சமாஜத்தை 1905-ம் வருடம் நிறுவிய பெரியார்களுள் ஒருவர். சில ஆண்டுகள் வெளியூர் நீதி மன்றங்களில் நீதிபதியாக இருந்தவர்.

**நாகலிங்கம்—வட்டுக்கோட்டை** :—1953-ல் சென்னையில் சமாஜ ஆண்டு விழாவில் தலைமை வகித்தவர், யாழ்ப்பாணத்து வழக்கறிஞர், கொழும்பு திருவிளங்க தேசிகரிடம் சித்தாந்த சாத்திரங்களைப் பயின்றவர்.

**நாராயணசாமி நாயுடு, T. K.** :—1932-ல் கூவத்தில் சமாஜ இளைஞர் மாநாட்டில் தலைமை வகித்தவர், தமது சொந்த செலவில் " சங்க இலக்கியம் " " சீவகசிந்தாமணி ", " சிவகுமாரர்கள் தேவாரம் ", " சங்க நூற் புலவர் பெயரகராதி " முதலியவற்றை வெளியிட்டவர், கல்வெட்டாராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிடுபவர், திரு.வி.க. அவர்களுடைய சீடர்.

**நாராயணசாமிப் பிள்ளை, T. M.** :—1941-ல் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற சமாஜ ஆண்டு விழாவிற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் அமைத்தவர். சென்னை அறநிலையப் பாதுகாப்புத் தலைவராகவும் " பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் " தலைவராகவும் இருந்தவர். தற்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக இருப்பவர். ஆலய வழிபாட்டில் பற்றுடையவர்.

**நெல்லையப்பப் பிள்ளை, மா. வே.** :—1932-ல் கூவத்தில் சமாஜ ஆண்டு விழாவில் தலைமை வகித்தவர். உமாபதிசிவம் திருமுறைத் திரட்டின் உரையாசிரியர். திருமுறைப் பாசுரங்கள் பலவற்றிற்கு அருமையான உரைகள் வெளியிட்டவர்.

**பரமசிவானந்தம், அ. மு. B. O. L., M. Litt.:**—1945-ல் சிவகாசியில் சமாஜ இளைஞர் மாநாட்டில் தலைமை வகித்தவர். " சுந்தரர் நாடகம் " முதலிய பல நூல்களின் ஆசிரியர். " தமிழ்க்கலை " எனும் பத்திரிகையைத் தொடங்கிச் சில ஆண்டுகள் நடத்தியவர், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக இருப்பவர்.

**பாண்டித் துரைத்தேவர், :**—1907-ல் சமாஜ ஆண்டு விழாத்தலைவர், மதுரை தமிழ்ச்சங்கம் நிறுவியவர். " சைவமஞ்சரி ", " பன்னூல் திரட்டு " முதலியவற்றை வெளியிட்டு, " செந்தமிழ் " எனும் பத்திரிகையைத் தொடங்கியவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டமளிப்பை ஏற்படுத்தியவர்.

**பாலசுப்பிரமணிய முதலியார், ம. B. A., B. L. :**—1944-ல் பள்ளத்தூரிலும், 1948-ல் யாழ்ப்பாணத்திலும் சமாஜ ஆண்டு விழாக்களில் தலைமை வகித்தவர். சமாஜச் செயலாளராக (1921—43) 22 ஆண்டுகள் தொடர்ந்து தொண்டாற்றியவர். பன்னிரு திருமுறைகளையும், பதினன்கு சாத்திரங்களையும், " சங்க இலக்கியம் ", " சீவகசிந்தாமணி ", "நாலாயிர திவ்ய ப்ரபந்தம் ", "ஆண்டாள் திருப்பாவை" முதலிய பல நூல்களையும் அடக்கவிலைச் சுத்தப் பதிப்புக்களாகப் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் அச்சிட்டு வெளியிட்டவர். "அப்பர் நாடகம்","திருவிழாவின் அர்த்தம்", " சிவஞான போதம் மொழிபெயர்ப்பல்ல என்பதற்கு 120 காரணங்கள்", " சிவஸ்தல யாத்திரை மஞ்சரி " முதலிய பல நூல்களின் ஆசிரியர். " சித்தாந்தம் " பத்திரிகையின் ஆசிரியராக மும்முறை பல ஆண்டுகள் இருந்தவர், தற்போதும் பத்திராசிரியராக இருப்பவர். சைவத்திலும் வைணவத்திலும் நல்ல ஆராய்ச்சி செய்து சொற்பொழிவுகள் நிகழ்த்துபவர். காசி பல்கலைக்கழகத்தில் 1950-ல் சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியவர். சிற்சில காரணங்களால் சமாஜத்திலிருந்து விலகியிருந்த சைவப் பெரியார்கள் சிலரை மீண்டும் சமாஜத்தில் சேர்ப்பித்தவர். 1921-ல் சமாஜத் தொண்டுகள் மிகக் குன்றிப் பெயரளவில் சமாஜம் நின்ற நிலையை மாற்றி மீண்டும் அதை மிக உயரிய நிலைக்குக் கொண்டுவந்தவர். மயிலைகிழார் இளமுருகனார், மயிலை மாதவதாஸன் என்போரும் இவரே.

**பொன்னம்பலம் பிள்ளை, T. :**—1912-ல் காஞ்சிபுரத்தில் சமாஜ ஆண்டு விழாத் தலைவர். திருவிதாங்கூரில் எக்சைஸ் கமிஷனராக இருந்து நெல்லை மாவட்டத்தில் சிவசைலத்தில் தமது வாழ்க்கையை நடத்தியவர். ஈழ நாட்டுப் பெரியார்.

**மாசிலாமணி முதலியார், வா. தி. :**—சமாஜ மாதக்கூட்டங்களைப் பல ஆண்டுகளாக வாலாஜாபாத்தில் நடத்துபவர், சமாஜ ஆண்டு விழாக்கட்குத் தவிராமல் வருபவர், வாலாஜாபாத் இந்துமத பாடசாலை, வள்ளலார் மாணவர் இல்லம் முதலியவற்றைச் சிறந்த முறையில் நடத்துபவர், சமாஜத் தொண்டுகள் பற்பலவற்றில் ஈடுபட்டவர்.

**மீனட்சிசுந்தரம் பிள்ளை, தெ. பொ. M. A., B. L., M. O. L. :**—1950-ல் கொழும்பு நகரில் சமாஜ ஆண்டு விழாத்தலைவர். பன்மொழிப் புலவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராய் இருந்து

தற்போது சென்னை மாகாணக் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராய் இருப்பவர். சென்னை வேதாந்த சங்கத்தின் சார்பில் தொடர்ந்து பல ஆண்டுகள் வித்துவான் வகுப்பு நடத்துபவர். பற்பல ஆராய்ச்சி நூல்களின் ஆசிரியர். தருமபுர ஆதீனம் முதலிய மடங்களோடு நெருங்கிய தொடர்புடையவர்.

**முருகவேள், புலவர் B.O.L.** :—1954, 1955-ல் சித்தாந்த உதவிப் பத்திராசிரியர். முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர். மறைமலையடிகள் சீடருள் ஒருவர்.

**முருகேச முதலியார், நல்.** :—1953-54-ம் ஆண்டுகளில் சமாஜ நிர்வாக சபைத் தலைவர். அரசாங்கத்தில் டிபுடி செக்ரட்டரியாக உழவு, உணவுப் பகுதியில் பதவி வகிப்பவர். ராவ் சாகிப் பட்டம் பெற்றவர். சோமசுந்தர நாயகர் நூல்களிலும், பாம்பன் சுவாமிகள் நூல்களிலும் பற்றுடையவர்.

**முருகேச முதலியார், புரிசை.** :—முத்தமிழ்ப் பெருஞ் சொற்கொண்டல் முதலிய பட்டங்கள் பெற்றவர். திருவண்ணாமலையில் 1935-ல் சமாஜ ஆண்டு விழாவைத் தமது சொந்த செலவில் நடத்தியவர். பெரியபுராணம், கந்தபுராணம், கம்பராமாயணம், மகாபாரதம், திருக்குறள் முதலியன பற்றிச் சொற்பொழிவு முறையிலும் புராணப் பிரசங்க முறையிலும் இடைவிடாது விளக்குபவர்.

**வச்சிரவேல் முதலியார், க. B. A., L. T.** :—1937-ல் பெங்களூரில் விசேஷ மாநாட்டில் இளைஞர் பகுதியில் தலைமை வகித்தவர். மெய்கண்டார் கழகச் சார்பில் பல ஆண்டுகளாகச் சித்தாந்த சாத்திர வகுப்புக்களை நடத்தி வருபவர். "திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே" முதலிய நூல்களை இயற்றியவர். காசிப் பல்கலைக் கழகத்தில் 1951-ல் சைவ சித்தாந்த விரிவுரையாற்றியவர். ஞானியார் சுவாமிகள் சீடருள் ஒருவர்.

**விபுலானந்த அடிகள், B.Sc.** :—1935-ல் திருவண்ணாமலையில் சமாஜ ஆண்டு விழாவில் தலைமை வகித்தவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 3 ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகவும் இலங்கை பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராகவும் இருந்தவர். இராமகிருஷ்ண மடத்தின் துறவிகளுள் ஒருவர். "யாழ் நூல்" வெளியிட்டவர்.

**வேங்கடசாமி நாட்டார், ந. மு.** :—1933-ல் கரந்தையில் சமாஜ ஆண்டு விழாத் தலைவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர். "கபிலர்", "நக்கீரர்" முதலிய நூல்களின் ஆசிரியர். அகநானூறு திருவிளையாடற் புராணம் முதலிய நூல்கட்கு உரை வெளியிட்டவர்.

**வேதாசலம், சுவாமி, (மறைமலையடிகள்)** :—1905-ம் ஆண்டில் ஞானியார் சுவாமிகள் திருமுன்பு நமது சமாஜத்தைத் தோற்றி வைத்தவர்களுள் ஒருவர். ஐந்து ஆண்டுகள் சமாஜச் செயலாளராக சமாஜ விழாக்களை மிகச் சிறந்த முறையில் நடத்திவைத்தவர். பல ஆண்டுகள் "ஞானசாகரம்" எனும் பத்திரிகையை நடத்தியவர். "மாணிக்கவாசகர் காலம்" எனும் விரிவான ஆராய்ச்சி நூலும், திருவாசகம் அகவல்கள் நான்கிற்கும், பட்டினப்பாலை முல்லைப்பாட்டு முதலிய சங்க நூல்கட்கும் உரை இயற்றியவர். சோமசுந்தர நாயகரின் தலை மாணாக்கர். வடமொழி சிறிதும் கலவாத தனித்தமிழ் நூல்கள் பலவற்றை இயற்றியவர். 1929-ல்

திருப்பாதிரிப்புலியூரில் மிகச் சிறப்பாக நடைபெற்ற சைவர் மாநாட்டில் தலைமை வகித்துப் பல தீர்மானங்களைத் திருத்தமான முறையில் செப்பம் செய்தவர்.

**வேலாயுதம் பிள்ளை, சா.சி. B. A., L. T.** :—தூத்துக்குடியில் 1931-ல் இளைஞர் மாநாட்டில் தலைமை வகித்தவர். திருக்குறள் சொல்லடைவு எனும் நூலை வெளியிட்டவர். சிவபூஜையில் மிக்க ஆர்வமுடையவர். தஞ்சை மாவட்டத்தில் பல உயர்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியராகப் பணி செய்தவர்.

**வைத்தியநாதன்—ஸர்கந்தையா** :—விருதுநகரில் 1954-ல் சமாஜ ஆண்டு விழாத் தலைவர், இலங்கை அமைச்சர்களுள் ஒருவர். சிறந்த சமயப் பற்றுடையவர்.

**வையாபுரிப்பிள்ளை, ச. B. A., B. L.** :—1946-ம் ஆண்டில் திருச்செங்கோட்டில் சமாஜ ஆண்டுவிழாத் தலைவர். சென்னைப் பல்கலைக் கழகத்திலும் திருவிதாங்கூர் பல்கலைக் கழகத்திலும் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பேரகராதியை வெளியிட்டு முடித்தவர். சங்க இலக்கியம் முதலிய பல சமாஜ வெளியீடுகட்கு அரிய தொண்டாற்றியவர். ஏட்டுச் சுவடிகளைப் பரிசோதித்துச் செம்மையான பாடங்களைத் தீர்மானிப்பதில் இணையற்ற பேரறிஞர். பல நிகண்டுகளைத் தமது செலவில் வெளியிட்டவர். கம்பராமாயணத்தில் சிறந்த ஆராய்ச்சி செய்துள்ளவர். தற்போது நாலாயிர திவ்யப்ரபந்தத்தைத் திருத்தமான பாடங்களோடு வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ளவர்.

## சமாஜத் தொடர்புடைய சில பெண்மணிகள்

**அசலாம்பிகை அம்மையார்—பண்டிதை.** :—1935-ல் திருவண்ணாமலையில் மங்கையர் மாநாட்டுத் தலைவியர். காந்திபுராணம் முதலிய நூல்களை இயற்றியவர்.

**ஆண்டாள் அம்மையார்.** :—பல ஆண்டுகள் சமாஜத்தின் மங்கையர் பகுதியின் செயலாளராக இருந்தவர். காசிவாசி செந்திநாதய்யர் அவர்களிடம் முறையாக சமயப் பாடங்கேட்டவர். சமாஜ விழாக்களில் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தியவர்.

**ஆதிலக்ஷ்மியம்மையார், க. ர.** :—1944-ல் பள்ளத்தூரில் மங்கையர் மாநாட்டுத் தலைவர். ஞானியார் சுவாமிகளிடம் பாடங்கேட்ட நுண்பொருள்களைத் தொகுத்துக் கந்தரனுபூதிக்கும் திருப்போரூர் சந்நிதிமுறைக்கும் உரை வெளியிட்டவர். பல ஆண்டுகள் சமாஜச் செயலாளராகவிருந்த திரு. அரங்கசாமி முதலியார் அவர்களது வாழ்க்கைத்துணைவியாராகப் பழநியில் நல்ல சமயப்பணி செய்பவர்.

**இராஜம்மாள், எம்.** :—1930-ல் சென்னையில் முதன் முதலாகக்கூடிய சமாஜச் சைவ மங்கையர் மாநாட்டில் தலைமை வகித்தவர். அமைச்சர் S. முத்தையா முதலியார் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார்.

**இராஜரத்தின அம்மையார், M. A., L. T.** :—1950-ல் இராமநாதபுரத்தில் மங்கையர் மாநாட்டுத் தலைவர். சென்னை லேடி வில்லிங்டன் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர். சமயச் சொற்பொழிவுகள் பல செய்பவர்

**இராஜேஸ்வரி அம்மையார், எ. த. M. A. L. T.,** :—1943-ல் மதுரையில் மங்கையர் மாநாட்டுத் தலைவியார். இராணி மேரிக் கல்லூரியில் பௌதிகக் கலைப் பேராசிரியராகவிருந்தவர். " சூரியன் " முதலிய பல நூல்களை இயற்றியவர். சமயச் சொற்பொழிவுகள் பலவற்றை நிகழ்த்தியவர்.

**இராஜேசுவரி அம்மையார், சு.** :—1951-ல் குன்றக்குடியில் சைவமங்கையர் மாநாட்டுத் தலைவியார், ஞானியார் சுவாமிகள் மாணவி. தமது வாழ்க்கைத் துணைவர் திரு. பு. ர. சுவாமிநாதனுருடன் பல சைவ சபைகளில் சொற்பொழிவு நிகழ்த்துபவர்.

**ஈசுவரவடிவு அம்மையார்,** :—1953-ல் ஈரோட்டில் சைவ மங்கையர் மாநாட்டில் தலைவியார். திருநெல்வேலி மாவட்டத்தில் இன்னிசையோடு சமயப் பிரசாரம் செய்பவர். தமிழ்ப் பெரியார் C. D. நாயகம் அவர்களின் மருமகள்.

**காமாக்ஷியம்மையார், அ. கு. M. A.** :—1947-ல் கோயம்புத்தூரிலும், 1955-ல் சிதம்பரத்திலும் சமாஜ மங்கையர் மாநாட்டுத் தலைவியார். ஞானியார் சுவாமிகளின் மாணவி. சேலம் முனிசிபல் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர். சித்தாந்தம் பத்திரிகையில் பல கட்டுரைகள் எழுதுபவர், சமய விரிவுரைகள் பல நிகழ்த்துபவர். சமாஜச் செயலாளராகப் பல ஆண்டுகள் பணி செய்த திரு. க. அரங்கசாமி முதலியார் அவர்களின் புதல்வியார்.

**கிருஷ்ணவேணியம்மையார், பண்டிதை** :—1932-ல் கூவத்தில் சமாஜ மங்கையர் மாநாட்டுத் தலைவியார். லேடி வில்லிங்டன் பயிற்சி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பல ஆண்டுகளிருந்தவர், வைணவ சங்கத்தின் சார்பில் பல நூல்கள் வெளியிட்டுள்ளவர்.

**சரோஜினி மாணிக்கவாசகம் அம்மையார்** :—1933-ல் கரந்தையில் சமாஜ மங்கையர் மாநாட்டுத் தலைவியார், மறைமலையடிகளின் மருமகள்.

**சிவகாமியம்மையார்** :—1948-ல் யாழ்ப்பாணத்தில் சைவமங்கையர் மாநாட்டுத் தலைவியார். தூத்துக்குடி பாகம்பிரியாள் மாதர் சங்கத்தைப் பல ஆண்டுகளாக நடத்திவருபவர். சித்தாந்த சாத்திரங்களை முறையாகப் பயின்றவர்.

**திருவரங்க நீலாம்பிகையம்மையார்** :—1931-ல் தூத்துக்குடியில் சமாஜ மங்கையர் மாநாட்டுத் தலைவியார். மறைமலையடிகளின் புதல்வி. பற்பல தமிழ் நூல்களை வெளியிட்டவர்.

**தில்லைக் காமாக்ஷியம்மையார்** :—விருதுநகரில் 1954-ல் சமாஜ ஆண்டு விழாவை, மாதர் மணிவாசக சங்கத்தின் சார்பில், மிகச் சிறப்பாக நடத்தியவர். அந்த சங்கத்தின் மூலமாக நாடார் வகுப்புப் பெண்மணிகட்கும் பிறருக்கும் பற்பல அரிய சமயத் தொண்டுகள் புரிபவர்.

**மரகதவல்லி சிவபூஷணம் அம்மையார், B. A., L. T.** :—1953-ல் சென்னையில் சமாஜ மங்கையர் மாநாட்டுத் தலைவியார். சென்னை A. R. C. பெண்கள் உயர்நிலைப்பள்ளியின் தலைமையாசிரியர். திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களின் புதல்வி.

# முதல் தொண்டர்

அ. கு. காமாட்சியம்மையார், எம். ஏ.

**பா**ரில் பிறக்கும் பச்சிளங்குழந்தை பருவம் பருவமாய் வளர்வதைக் கண்டு பெற்றோரும் மற்றோரும் பெரிதும் மகிழ்வர். அதற்கு மாறாக வளர்ச்சியில் மாற்றம் காணுவிடில் கலங்குவர். எனவே பருவத்திற்கேற்ற—காலத்திற்கேற்ற மாற்றமே வளர்ச்சியின் அறிகுறியாக இருந்து வருகிறது. இவ்வுண்மை எல்லாத் துறைகட்கும் பொருந்துவது போல் சமயத்துறைக்கும் சாலவும் பொருந்தும். ஒவ்வொரு சமயத்தாரும் காலத்திற்கேற்றவாறு கருத்தையும் வாழ்வையும் மாற்றிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளனர்.

புறச்சமயங்களாம் பரசமயங்களிடையே சிக்குண்டு பரிதவித்த இடைக்காலத்தே நம் சைவ சமயமும், சிறப்புடன் வாழ, தனக்கே உரிய தனிச் சின்னங்களோடு தழைத்தோங்க, சின்னங்களும் சடங்குகளும் சமய வாழ்க்கைக்கு மிக மிக இன்றியமையாதனவா யிருந்தன. ஆனால் அறிவும் ஆராய்ச்சியுமே வளர்ந்தோங்கும் இக்காலத்தில் வெறும் சமயத் தோற்றத்தைக் காட்டிலும் செயலின் ஏற்றமே பெரிதும் போற்றப்படுகின்றது. சமய வாழ்க்கை என்றுமே இரு கூறாகவே இருந்தது. தனது ஆன்ம முன்னேற்றத்திற்காகத்தான் இறைவனுக்கு வழிபாடு செய்தல் ; மன்னுயிர்க்கெலாம் தம்மாலியன்ற தொண்டு புரிதல் என்ற இரண்டினைத்தான் மகேசுரன் பூசை, மாகேசுரர் பூசை எனக் குறித்தனர். சீவகாருண்யத்தின் மூலமே சிவனது கருணையைப் பெறலாம் என்ற கருத்தும் இருந்தது.

"அன்பே சிவம்" என அன்பின் அடிப்படையில் அமைந்தது தான் நம் சைவ சமயமும். ஆனால் அன்பின் அறிகுறி – அன்பின் வெளியீடு – சொல்லுஞ் செயலுமே யாகும் – திருத்தொண்டேயாகும். எனவே தான் சிவனடியாரெலாம் தொண்டரென்றும் அவர் தம் சிறப்பினையுரைக்கும் பெரிய புராணம் தொண்டர் புராணமென்றும் பெயர் பெற்றன. அறுபத்து மூவருள் அடியவர்க்கு அன்னமளித்தோரும் ஆடை வழங்கினோரும் அமைந்துள்ளனர். அடியவர் ஆடைகளைத் துவைத்துக்கொடுக்கும் திருத்தொண்டினை ஏற்றார் ஒரு தொண்டர். உண்ணும் கலனை ஓடளித்துவந்தார் ஓரடியார். ஒப்பிலாத்தொண்டர் அப்பர் பெருமானே தளர்வுற்ற மேனியொடும்

தன் கைப்பட உழவாரப் படையால் முள்ளெடுத்து புல்லைப் போக்கி "உழவாரப் படையாளி" என்று புகழ்ப்பெற்றார். இவர்க்கும் இத் தொண்டின் சிறப்பை முதன் முதலில் கற்பித்தவர் இவரது தமக்கையான திலகவதியாரே யாவர்.

சீறடியார் திருவலகுந் திருமெழுகுந் தோண்டியுங் கொண்டு
ஆறணிந்தார் கோயிலினுள் அடைந்தவரைக் கொடுபுக்கார்.

மங்கல நூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள் தாங்கிய அவ்வம்மையின் திருத்தொண்டுதான் என்னே! கன்னிப் பெண்களும் கைம்பெண்களுங் கூட கலங்காது கைத்தொண்டு புரியலாம் வாரீர் என அழைப்பது போலன்றோ அமைந்தது திலகவதியாரின் உலக வாழ்க்கை. இங்ஙனம் ஆணும் பெண்ணும் அடியார்க்குத் தம்மாலியன்ற தந்நிலைக்கேற்ற திருத்தொண்டு ஏதேனுமொன்றைச் செய்தே அன்பையும் அருளையும் பெருக்கிக் கொண்டனர். திருக்கூட்டத்தார் ஏதேனுமொரு கைத் தொண்டினைக் (Manual Service) கடமையாகவே கொண்டனர் என்பதை,

"கைத் திருத்தொண்டு செய்கடப் பாட்டினர்"

என்ற அடியால் சிறப்பித்தார் சேக்கிழாரும். அப்பரும் ஆளுடைய பிள்ளையும், நாட்டில் பஞ்சமும் பட்டினியும் மக்களை வாட்டியபோது திருவீழிமிழலையில் பொற்காசு பெற்று மக்களுக்கு அன்னமளிக்கும் அருந்தொண்டினை ஆற்றினர். இவ்வாறு சைவப் பெருமக்கள், எங்கும் நிறைந்துள்ள இறைவனை அன்புமிக்க அடியவரிடத்தும் கண்டு அவனது ஆலயமாகவே வணங்கினர்.

"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"

என்பதன்றோ சிவஞான போதத்தின் இறுதியடிகள் — முடிந்த முடிபு. ஆயினும் நம் அடியாரெலாம் இவ் வரும்பெருந் தொண்டினை சிவனடியார்க்கு மட்டுந்தானே இயற்றினர் என்று இக்காலத்தவர் குறை கூறலாம். ஆயினும் அது இழுக்கன்று. தம்மாலியன்ற தொண்டாற்ற ஓரெல்லையை வகுத்துக்கொள்ளுதல் குறையாகாது. மேலும் எத்தகைய வேறுபாடுமின்றி ஆருயிரனைத்துமே ஆண்டவனது ஆலயமென்ற அருங் கருத்தும் அக்காலத்திலேயே சைவ உலகிற்குப் புதியதன்று. திருமூலநாயனார் தமது திருமந்திரத்தில் மக்களனைவருமே நடமாடுங் கோயில்கள் எனக் குறிப்பர். மேலும் ஒருபடி சென்று அசையாக் கோபுர ஆலயத்துறையும் அரனுக்குக் கொடுக்கும் பொருள் அத்தனையும் பாமர மக்களுக்குப் போகாமலிருக்கலாம். ஆனால் நடமாடுங் கோயில்களான மக்களுக்குச் செய்யும் தொண்டனைத்தும் அவர் உள்ளுறையும் ஆண்டவனுக்கும் நேரடியாகச் செல்லும், என்று

மிகப் புரட்சி மயமான முறையிலே கூறிச் சென்றார். இன்று ஆலயப் பொருளில் ஒரு பகுதியையேனும் ஏனைய அறத்தொண்டிற்கும் பயன் படுத்தவேண்டும் என்ற கருத்துக்கு எத்துணை எதிர்ப்பு எழுகிறது! மும்மையும் உணரும் முனிவரான திருமூலனார் இதனையெல்லாம் முன்னரே அறிந்து அன்றே கூறிச் சென்றனர் போலும்!

படமாடக் கோயிற் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே.

ஏதோ இவ்விருபதாம் நூற்றாண்டின் எழில் தோற்றமாய் மக்கட் சேவை — சமூக சேவை என்று பெரிதும் பேசப்படும் தொண்டின் சிறப்பை எவ்வளவு நன்றாய் எடுத்துரைக்கின்றது இப்பாட்டு.

எனவே நம் சைவப் பெருமக்கள் தன்னலம் கருதாது பிறர் நலம் பேணும் பெரு நோக்குடனே ஏதேனும் குறிக்கோள் ஒன்று உடையாராய் வாணாட்களை வீணாக்காது தொண்டு புரிந்து வந்தனர். தொண்டர் நிலை இவ்வாறெனின், தொண்டர் தலைவன் — இல்லை, தொண்டர் தம் தொண்டன் — சிவபெருமானின் சிறப்புதான் என்னே! தொண்டர் தம் இன்றியமையாச் சிறப்பு கந்தை மிகையாங் கருத்துடைய எளிமைத் தோற்றமேயாகும். சிவனாரும் இவ்விலக்கணப் படியே யாரும் விரும்பாத எலும்பும் பாம்பும் ஏற்றார் அணியாக. பகட்டான பட்டாடையின்றி தோலாடை யுடுப்பர். தோற்றத்தால் மட்டுந்தான் தொண்டரா? இல்லை. அவருக்குத் தொண்டல்லாது வேறு துணையில்லை என்று மற்றொரு பழுத்த தொண்டரான அப்பர் பெருமான் மதிப்பிதழ் மனமுவந்தளிக்கிறார்.

“ தொண்டலால் துணையுமில்லை தோலலால் உடையுமில்லை ”

அடியவர்க்காக எத்தொண்டு புரியவும் சித்தமாயிருப்பர் என்பது யாவரும் அறிந்ததே. ஆயினும் அவராற்றிய தன்னலமற்ற பிறர் நலம் பேணும் மகத்தான தியாகம் உள்ளுந்தோறும் உள்ளுந்தோறும் உள்ளத்தை உருக்கவல்லது. திருப்பாற் கடலைக் கடைந்தக்கால் தோன்றிய ஆலகால நஞ்சினைக் கண்டு அஞ்சிய தேவர் அஞ்சல் என்று அரனை அடைந்தபோது அதனைத் தானுண்டார்.

வடங்கெழு மலைமத்தாக வானவர் அசுரரோடு
கடைந்திட எழுந்த நஞ்சங் கண்டுபல் தேவர் அஞ்சி
அடைந்துநுஞ் சரணம் என்ன அருள்பெரி துடைய ராகித்
தடங்கடல் நஞ்சம் உண்டார் சாய்க்காடு மேவி னாரே. —அப்பர்

அதனைக் கண்டஞ்சிய அம்பிகை ஆருயிர்க் கணவனது கண்டத்தைப்

பிடிக்க கருநிறக் கறையாய் நின்றுவிட்டது. திருநீலகண்டன் என்ற திருப்பெயரும் கிடைத்தது. நஞ்சு அணியாயிற்று.

" பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் " —குறள்

[நாகரிகம்=கண்ணோட்டம், இரக்கம்]

என்ற திருக்குறளுக்குச் சிறந்த இலக்கியமாய் என்றும் விளங்குவ தாயிற்று அவ்வருஞ் செயல். நெஞ்சில் நின்றாலும் நஞ்சு நஞ்சு தானே! அஞ்சல் புகுந்த அமரரும் அம்பிகையும் இரவெலாம் விழித்திருந்து வழிபட்டனர். அதுவே சிவராத்திரியின் சிறப்பு—இன்றும் விஞ்ஞான, வைத்திய முறைப்படி நஞ்சுண்டவரை இறவாமல் காக்க உறங்காமல் இரவெலாம் விழிக்கச் செய்தல் கையாளப்படுவது ஒப்பு நோக்கத் தக்கது ! இவ்வாறு தன்னலங் கருதாது அஞ்சாது நஞ்சுண்ட செயல் செயற்கரிய செயலன்றோ ! இதனினும் அரிய செயல் ஒன்றிருக்க முடியுமா !—இதனை வியந்தே அப்பர் பெருமான்,

" பொங்கி நின்றெழுந்த கடல் நஞ்சினைப்
பங்கி உண்டதோர் தெய்வமுண்டோ சொலாய் ;"

என்றும்,

சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சவா மூவாச்
சிங்கமே !....................

என்றும் புகழ்ந்து பாடுகின்றார். எனவே சைவ சமயத்தைச் சார்ந்தோ ரனைவரும் தன்னலங்கருதாது பிறர்நலம் பேணித் தொண்டு புரிதல் வேண்டும் என்பதனைச் செயல் முறையில் காட்டிய தொண்டர் தலைவ ரான சிவபெருமானன்றோ முதல் தொண்டராவார் !

———

# சொல்வேந்தரின் நல்விருந்து

க. வடிவேலாயுதம், எம். ஏ.
தாம்பரம் கிறிஸ்தவர் கல்லூரியில் தமிழாசிரியர்.

சைவ உலகிலே பக்தி வழியினைப் பின்பற்றி முக்தியடைந்த பெரியோரே நாயன்மார்கள் எனச் சிறப்பிக்கப்படுகின்றனர். இவ்விதம் தனியடியாராகத் திகழ்கின்ற அறுபத்துமூவருள் எட்டு திருமுறை தந்த நால்வரும் போற்றுதற்குரியர். 'நாலுபேர் போன வழியே போ' என்பது பழமொழி. அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற சமயகுரவர்கள் நால்வரும் சிவபெருமானை நேரிலே கண்ட சிவஞானச் செல்வர்களாம். தாங்கள் பெற்ற இன்பத்தை 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற அருள் உள்ளத்தாலே தேவார திருவாசகமாகத் திருவாய் மலர்ந்தருளினர். அவையே பன்னிரு திருமுறைகளுள் எட்டாகத் திகழ்கின்றன.

அந்நால்வரும் வெவ்வேறு வகையான வழிகளில் இறைவனைப் பாடியுள்ளனர். சற்புத்திரமார்க்கம் என்னும் வழியிலே சிவபெருமானை வழிபட்டார் ஞானசம்பந்தப்பிள்ளையார். அதாவது தன்னைப் புதல்வனாகவும் இறைவனைத் தந்தையாகவும் நினைந்து வழிபட்டார். திருநாவுக்கரசு நாயனார் தாஸமார்க்கம் எனப்படும் ஆண்டான் அடிமை வழியிலே இறைவனை இறைஞ்சினார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனைத் தோழராகப் பாவித்து உரிமையோடு பாடியருளினார். அதனால் தம்பிரான் தோழர் எனச் சிறப்பிக்கப்பட்டார். மணிவாசகப் பெருமான் பரம்பொருளைப் பரமகுருவாகப் பாவித்து வழிபட்டுள்ளார். ஒவ்வொருவர் பாக்களும் வெவ்வேறு சிறப்பியல்புகள் பெற்று மிளிர்வதைக் காணலாம்.

இவர்களுள் 'நாவுக்கரசு' என்று சிவபெருமானால் அருளப் பெற்ற திருப்பெயரைத் தாங்கிய சொல்வேந்தர் துறவு வாழ்க்கையை மேற்கொண்டு, நெடுங்காலம் வாழ்ந்து உலக அநுபவம் மிக்கவராகத் திகழ்ந்தார். தவிரவும் சமண சமயம் புகுந்து அங்கே தருமசேனர் என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். இவையெல்லாம் அவர் தேவாரத்திற்கு உருக்கத்தையும் சைவ சமயத்தில் அழுந்திய அன்பையும் அவருக்கு நல்கின. அவர் தேவாரத்தின் பல சிறப்பினையும் சுருங்கிய அளவில் எழுதுதல் அரிது. எனினும் சிந்தனைக்கு நல்விருந்தாயுள்ள சில பண்புகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

அப்பரடிகள் பாடிய பதிகங்களுள் இன்று நமக்குக் கிடைத்திருப்பவை 312 திருப்பதிகங்களே. இவருடைய தேவாரம் 4, 5, 6 ஆகிய திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. திருவிருத்தம், திரு நேரிசை திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் முதலிய பா வகைகளைத்

திறமையாகக் கையாண்டுள்ளார். தாண்டகத்தை இவர் கையாண்டது போல வேறு யாருமே கையாளவில்லை. அதனால் 'தாண்டக வேந்தர்' என்றே சிறப்பிக்கப்படுகின்றார். அப்பாடிகள் இறைவனிடத்துக் கொண்ட பேரன்பினையும் திருத்தொண்டின் உறைப்பினையும்,

இடையறாப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும் உழவா ரத்திண்
படையறாத் திருக்காமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானப் பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும் துதித்துவாழ்வாம்

என்ற காஞ்சிப் புராணப் பாடல் ஓவியமென விளக்கிக் காட்டுகின்றது.

அப்பாடிகள் 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்பதையே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டார். 'கிடப்பதே' என்பதி லுள்ள ஏகாரம் கிடப்பதன்றி வேறுபயன் கருதாமையைக் குறிப்பதை உணரலாம். பகவத்கீதையில் வரும் 'தொழில் செய்யத்தான் உனக் கதிகாரமுண்டு. அதன் பயன்களில் எப்பொழுதுமே உனக்கதிகார மில்லை. செய்கையின் பயனைக் கருதாதே' என்ற கருத்தை மேற் கண்ட அப்பாடிகள் வாக்குக் குறிப்பாக உணர்த்துவது நோக்கத் தக்கது.

உலக மக்களை நோக்கி விளித்து உபதேசம் கூறுமுகமாக ஈசனின் எளிய தன்மையைப் பலவிடங்களில் விளக்கியுள்ளார். பழுந்தால் உண்ணாத மாந்தரில்லை. அப்படிப்பட்ட பழமாக உள்ள இறைவனை யாவரும் எளிதில் வணங்கிப் பயனடையலாம் என்ற கருத்தை,

மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈசனெ னுங்கனி
இனிது சாலவும் ஏசற் றவர்கட்கே

என்ற பாடலால் விளக்குந்திறம் போற்றற்குரியது. அங்ஙனம் கனி போன்று சுவை நல்கும் ஈசன்கழலினை நினைவோர் இம்மை, மறுமைப் பயனை நிச்சயம் அடைவர் என்பதை,

இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மை யேற்பிற வித்துயர் நீத்திடும்
எம்மை யாளும் இடைமரு தன்கழல்
செம்மை யேதொழு வார்வினை சிந்துமே

எனும் திருப்பாட்டால் தெளிவுறுத்துகிறார். இவ்வண்ணம் அருள் புரியக் காத்திருக்கும் இறைவனை நினையாதவர்களை 'அறமிருக்க மறம் விலைக்குக் கொண்ட பேதையாக இழித்துரைக்கிறார்.

'இவ்வாறு அருளுகின்ற ஈசன் ஒருவன் இருக்கின்றானா? அஃது உண்மையாயின் அவன் எங்கிருக்கிறான்? அவனை ஆராய்ந்து அடைய

முடியுமா?' என்றெல்லாம் ஆணவத்தாலே உலகாயதம் பேசுகின்ற மக்களுக்கு,

நீருமாய்த் தீயுமாகி நிலனுமாய் விசும்புமாகி
ஏருடைக் கதிர்க ளாகி இமையவர் இறைஞ்ச நின்று
ஆய்வதற் கரியராகி அங்கங்கே யாடு கின்ற
தேவர்க்குந் தேவ ராவர் திருப்புக லூரனாரே

என்றும்,

விறகில் தீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே

என்றும், விறகில் மறைந்திருக்கும் தீயும், பாலில் கலந்திருக்கும் நெய்யும் போல உலகத்துப் பொருள்களிலே கலந்து நிற்கும் இறைவனின் தன்மையை விளக்கி, உணர்வெனும் கயிற்றால் கடைய அவன் வெளிப்படும் பாங்கினைச் சொல்வேந்தர் தெரித்த முறை வியக்கத் தக்கதாம்.

இறைவனின் பேரருளைக் குறிக்குமிடத்து மக்களுடம்பின் இழிவினையும் பரம்பொருளின் உயர்வினையும் விளக்கியுள்ளார். இறைவன் அறிவுப்பிழம்பாக ஒளிர்வதோடு சிறந்த ஞானிகள் சென்றடையும் பேறாகவும் விளங்குகிறான். வேதத்திற்கும் அப்பாற்பட்டு வேதத்துச் சியினையும் கடந்து சொலற்கரிய சோதியா யுள்ளான். ஆனால் நிலையில்லாத மனித உடம்போ, முடைநாற்றம் பொருந்தியதாயுள்ளது. 'புனைவன நீங்கில் புலால் புறத்திடும்' தன்மையது. அங்ஙனம் இழிந்த புலாலுடம்பையும் அருட்பெருக்காலே தன் இருப்பிடமாகக் கொண்ட பரமசிவனை விடாது பற்றிக் கொண்டதாகக் கூறுகிறார். இதையே,

நற்பதத்தார் நற்பதமே ஞான மூர்த்தி
நலஞ்சுடரே நால்வேதத் தப்பால் நின்ற
சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய் இதுவுன் தன்மை
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலா வாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன்
கனகமா மணிநிறத் தெங்கடவு ளானே.

[நற்பதத்தார் - ஞானிகள், சொற்பதம் - வேதசிரம்]

எனும் திருத்தாண்டகம் விளக்கா நின்றது.

எவ்வுருவை உள்ளத்தே வழிபட்டாலும் அவ்வுருவில் சிவபெருமான் தோன்றி அருளும் திறத்தை,

'ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய்
நிற்கின்ற அருளும் தோன்றும்'

என்ற அடியால் விளக்கிப் போந்தார்.

இவ்வடியோடு, 'யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார்தாம் வருவர்' என்ற சிவஞான சித்தியார் அடிகள் ஒப்பு நோக்கத்தக்கன.

எல்லாச் சமயத்தையும் தன்னுள் அடக்கிக்கொள்ளும் சைவ சமயத்தின் நிறைந்த தன்மையை,

'விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ்செய்து
எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்ற தாகும்'

என்ற சொல்வேந்தரது சமயப் பொதுநோக்கு விளக்குகின்றது. அவ்வண்ணமே சிவனடியார்கள் எத்தகைய தாழ்ந்த குலத்தவராயினும் தாம் வணங்கும் தகுதியுடையவர் என்று அப்பரடிகள் கூறுவது போற்றத் தக்கது. சாதி, சமயங்களுக்கு அப்பாற்பட்ட அவரது சிவப்பற்று இதனால் புலனாகின்றது. இதையே,

அங்க மெலாம் குறைந்தழுகு தொழு நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே.

என்ற தனித் திருத்தாண்டகம் விளக்குகின்றது.

சொல் வேந்தர் பெருமிதம் தோன்றப் பாடிய இடங்கள் பலவுள்ளன. அவரது பெரு வீரத்தை,

'நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம் நரகத்தி லிடர்ப்படோம்'

'மண் பாதலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட்டு இருசுடர்வீழினும் அஞ்சல் நெஞ்சே'

என்ற பகுதிகள் விளக்குகின்றன.

நெஞ்சினுக்கு அறிவுறுத்தும் வகையால் உலகினர்க்குப் பல உண்மைகளை விளக்கியுள்ளார். விரிவஞ்சி விடுத்தனம். உலகியல் பாசங்களை நீக்கி இறைவனை வழிபட்டால் உய்யலாம் என்பதை,

'மனைவி தாய்தந்தை மக்கள் மற்றுள சுற்றமென்னும்
வினையுளே விழுந் தழுந்தி வேதனைக் கிடமாகாதே
கனையுமா கடல்சூழ் நாகை மன்னுகா ரோணத் தானை
நினையுமா வல்லீ ராகில் உய்யலாம் நெஞ்சி னீரே'

என்னும் திருநேரிசையால் தெள்ளத் தெளியக் கூறுகின்றார். இவ்வாறு பல சிறப்பியல்புகளைச் சொல்வேந்தரின் பாடல்கள் பெற்றுள்ளன. விரிப்பின் பெருகும். அவரது பாடல்களை உள்ளன்போடு ஓதி உய்தி பெறுவோமாக.

---

# நம்பியும் நகைச்சுவையும்

பு. ஆலாலசுந்தரஞ் செட்டியார், எம். ஏ.
தலைமைத் தமிழாசிரியர், தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரி

சுந்தரர் தேவாரத்தினை தோத்திரக் கண்கொண்டு நோக்குவர் பலர்; சாத்திரக் கண்கொண்டு நோக்குவர் சிலர்; ஆனால் ஆளுடைய நம்பி அவர்களின் அருள் வாக்கினை இலக்கியக் கண்கொண்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். நாவான் நுகரப்படும் அறுவகைச் சுவையினும் செவியான் நுகரப்படும் ஒன்பான் சுவைகள் என்றும் நம் உள்ளத்தே நின்று நிலவி இன்பம் பயப்பனவாம். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சமநிலை எனப் பொருட்சுவை ஒன்பான் வகைப்படும். இச்சுவைகள் செவி வாயிலாக அன்றிக் கண் வாயிலாகவும் நிகழப்பெறும். எடுத்துக்காட்டாகப் பித்தன் ஒருவனது செய்கையைக் கண்டபோது நமக்கு நகைச்சுவை தோன்றும். இதுவன்றிப் பித்தன் செய்கையை ஒரு புலவன் பாடினால் அப்பாட்டினைப் படிக்கும்போதும் நகைச்சுவை தோன்றும். இவ்வாறே பிற சுவைகளும் செவிகளுக்கும் கண்களுக்கும் இன்பம் பயப்பனவாம்.

ஆசிரியர் தொல்காப்பியனார் இச்சுவை ஒவ்வொன்றும் தோன்றுதற்கு நந்நான்கு காரணங்கள் காட்டுகின்றார்.

"எள்ளல் இளமை பேதைமை மடனென்று
உள்ளப்பட்ட நகைநான் கென்ப" — தொல்: மெய்ப்பாட்டியல்-4

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின்படி எள்ளல் இளமை பேதைமை மடமை என்ற நான்குபற்றி நகைச்சுவை தோன்றும் என்பது பெறப்படுகின்றது. "எள்ளல் என்பது, தான் பிறரை எள்ளி நகுதலும் பிறரால் எள்ளப்பட்டவழித் தான் நகுதலுமென இரண்டாம். இளமை என்பது தான் இளமையாற் பிறரை நகுதலும் பிறர் இளமை கண்டு தான் நகுதலுமென இரண்டு. பேதைமை என்பது அறிவின்மை. மடமை என்பது பெரும்பான்மையுங் கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை. இவையுந் தன் பேதைமையால் நகுதலும் பிறன் பேதைமையால் நகுதலும், தன் மடமையான் நகுதலும் பிறன் மடமையான் நகுதலுமென இவ்விரண்டாம்" என்பார் பேராசிரியர்.

இறைவன் திருவருளைப் பெறுதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனச் சாதனங்கள் நான்கு என்பர் பெரியோர். இவற்றை வடமொழியாளர் தாசமார்க்கம், சத்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனக் கூறுவர். சைவ சமய குரவரான நால்வரும் இந்த நான்கு மார்க்கங்களையும் வற்புறுத்தியுள்ளனர். திருநாவுக்கரசர், திரு

ஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனர், மாணிக்கவாசக சுவாமிகள் என்ற நால்வரும் முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு சாதனங்களையும் வற்புறுத்தியுள்ளனர். இது அன்னர் வாழ்க்கை வரலாற்றில் அறியக் கிடக்கும் உண்மையாகும். எனவே, சுந்தரர் சிவபெருமானிடம் வைத்திருந்த தொடர்பு, நண்பர் இருவரின் நட்பினைப் போன்றதாகும். நம்பியாரூரரைச் சிவபெருமானர் தமது நண்பராக ஏற்றுக்கொண்டார் என்பதை,

"வாழிய மாமறைப் புற்றிடங்கொள் மன்னவன் ஆரருளாவோர் வாக்குத்
தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம் நாம்முன்பு தொண்டுகொண்ட
வேள்வியில் அன்றுநீ கொண்டகோலம் என்றும் புனைந்துநின் வேட்கைதீர
வாழிமண் மேல்விளை யாடுவாய்என் றாரூரர் கேட்க எழுந்ததன்றே"

— தடுத்தாட்கொண்ட புராணம்-1279

என்ற பெரிய புராணச் செய்யுள் எடுத்துக் காட்டுகின்றது. "தோழமையாகத் தந்தனம்" என்ற தொடரில் தந்தனம் என்ற சொல்லின் நயம் கண்டு இன்புறத் தக்கதாகும். "தா என் கிளவி ஒப்போன் கூற்றே" (தொல்: எச்ச-50) என்ருர் தொல்காப்பியனர். ஒரு நண்பர் மற்ெருரு நண்பருக்கு ஒரு பொருள் அளித்தால் அவர் அப் பொருளை நண்பருக்குத் "தந்தார்" என்றே சொல்லவேண்டும். ஏனெனில் தா (தருதல்) என்ற சொல் ஒத்த நிலையுடைய இரண்டு நண்பர் பேசும்போது கையாளவேண்டிய சொல்லாகும். இது கருதிப் போலும் சேக்கிழார் தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம் எனப் பாடியுள்ளார். ஏனெனில் ஈ என்ற சொல் இழிந்தோன் கூற்று என்றும், கொடு என்ற சொல் உயர்ந்தோன் கூற்று என்றும் கூறுவர் தொல்காப்பியர். இறைவன் நம்பியாரூரரைத் தோழராகக் கொண்டதால் அடியவர் நம்பியாரூரரைத் தம்பிரான் தோழர் என்றே அழைத்தனர். தம்மை இறைவன் தோழராக ஏற்றுக்கொண்டதை நம்பியாரூரர் தமது பாடல்களில் பல்வேறு இடங்களில் குறிப்பிட்டுள்ளனர். எடுத்துக்காட்டாக,

"ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யுந் துரிசுகளுக் குடனுகி"

— திருவாரூர் - பழம்பஞ்சுரம்

"...நன்னைத் தோழமையருளித் தொண்ட னேன்செய்த துரிசுகள் பொறுக்கும்
நாதனைநள் ளாறனை அமுதை நாயி னேன்மறந் தென்னினைக் கேனே"

— திருநள்ளாறு - தக்கேசி

என்ற வரிகள் ஈண்டுச் சிந்திக்கத்தக்கன.

ஒத்த நிலையுடைய நண்பர் இருவர் நகைச்சுவை தோன்ற எள்ளி நகையாடல் இயல்பன்றோ! எள்ளல், இளமை, பேதைமை, மடமை என்ற நான்குபற்றி நகைச்சுவை தோன்றும் என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளேன். சுந்தரர் இறைவனை நோக்கி நிந்தாஸ்துதியாகச் சில

பாடல்கள் பாடியுள்ளார். அப்பாடல்களில் நகைச்சுவை தோன்றக் காணலாம். காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலுக்கு மேற்கில் ¾ மைல் தூரத்தில் திருஓணகாந்தன்தளி உள்ளது. இங்குள்ள சிவபெருமானைப் பாடிய சுந்தரர் “திருஓணகாந்தன்தளியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள பெருமானே! கச்சியம்பதியில் திருக்காமக் கோட்டத்தில் காமாட்சி அம்மையார் 32 அறங்கள் செய்துவரத் தாங்கள் ஊராரிடம் பிச்சை கொள்வதன் காரணம் யாது” எனப் பாடியுள்ளார். இறைவி அறங்கள் செய்ய இறைவன் இரத்தல் முறையாமோ? எனக் கூறுவதில் நகைச்சுவை தோன்றுகிறது.

“வாரிருங்குழல் வாள்நெடுங்கண் மலைமகள்மது விம்முகொன்றைத்
தாரிருந்திட மார்புநீங்காத் தையலாள்உல குய்யவைத்த
காரிரும்பொழிற் கச்சிமூதூர்க் காமக்கோட்டம் உண்டாகநீர்போய்
ஊரிடும்பிச்சை கொள்வதென்னே ஓணகாந்தன் தளியுளீரே”
— திருஓணகாந்தன்தளி - இந்தளம்

இது எள்ளல் பற்றிய நகைச்சுவைக்கு எடுத்துக்காட்டாகும். அதே பதிகத்தில் 9-ம் பாட்டிலும் நகைச்சுவையினைக் காணலாம்.

“வாரமாகித் திருவடிக்குப் பணிசெய்தொண்டர் பெறுவதென்னே
ஆரம்பாம்பு வாழ்வதாரூர் ஒற்றியூரேல் உம்மதன்று
தாரமாகக் கங்கையாளைச் சடையில்வைத்த அடிகேள்உந்தம்
ஊரும்காடு உடையுந்தோலே ஓணகாந்தன் தளியுளீரே”
— திருஓணகாந்தன்தளி - இந்தளம்

ஓணகாந்தன்தளியுளீரே! உமது ஆரமோ பாம்பு, நீங்கள் வாழும் ஊர் யாருடையதோ? (வாழ்வதாரூர்) ஒற்றியூரும் உம்முடைய தன்று, (அதுவும் அடகு வைக்கப்பட்டது). உமது ஊர் காடு, உடையும் தோல், அப்படி இருக்க உம்மிடத்தில் அன்புகொண்டு உமது திருவடிக்குப் பணிசெய்யும் தொண்டர் உம்மிடத்துப் பெறும் பொருள் யாது உள்ளது? என்பதே அப்பாட்டின் பொருளாகும். இதில் அமைந்துள்ள நகைச்சுவை கண்டு இன்புறத் தக்கதாகும். இப்பாட்டும் எள்ளல் பற்றித் தோன்றும் நகைக்கு எடுத்துக்காட்டாகும். இதே கருத்தினைச் சுந்தரர் திருப்பைஞ்ஞீலி திருப்பதிகத்திலும் கூறியுள்ளார்.

“ஏடுலாமலர்க் கொன்றைசூடுதிர் என்பெலாமணிந் தென்செய்வீர்
காடுநும்பதி ஓடுகையது காதல்செய்பவர் பெறுவதென்”
— திருப்பைஞ்ஞீலி - கொல்லி

கொன்றைமாலை தரித்த பெருமானே! தாங்கள் எலும்புகள் அணிந்திருக்கிறீர்கள். தாங்கள் வசிப்பதோ காடு. தங்கள் கையில் உள்ளது ஓடு. எனவே தங்களிடத்து அன்புடையவர் பெறும் பொருள் யாது? என்ற கருத்தில் அமைந்துள்ள இச்செய்யுளும் எள்ளல் பற்றித் தோன்றும் நகைச்சுவைக்கு எடுத்துக்காட்டாகும்.

இனி, பேதைமை காரணமாகத் தோன்றும் நகைச்சுவைக்குச் சுந்தரர் திருப்பாடலில் சிறு உதாரணங்களைக் காண்போம். இறைவனைப் பித்தன் என்றே பாடியவர் சுந்தரர் என்பதை நாம் அறிவோம். திருச்சோற்றுத்துறைத் திருப்பதிகத்தில் நம்பியாரூரர் இறைவனைப் "பேதைப் பெருமான்" என்றே கூறியுள்ளார். சிவபெருமான் திருப்பாற்கடலில் தோன்றிய ஆலகால விஷத்தை உண்டதால் சுந்தரர் அவரை நஞ்சு உண்டிட்ட பேதைப் பெருமான் எனப் பாடியுள்ளார்.

"ஓதக் கடல்நஞ் சினையுண் டிட்ட
பேதைப் பெருமான் பேணும் பதியாம்
சீதப் புனலுண் டெரியைக் காலும்
சூதப் பொழில்சூழ் சோற்றுத் துறையே"
— திருச்சோற்றுத்துறை – கவுசிகம்

திருநாவுக்கரசு சுவாமிகளும் இறைவன் நஞ்சுண்டதைத் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார்; இறைவன் வெண்தலை ஓடு ஏந்தி ஊர்பலி கொண்டும் அவர் அந்த உணவினை உண்டாரில்லை. அவர் உண்டது நஞ்சேயாகும் எனப் பாடியுள்ளார்.

"வெண்தலை கையில் ஏந்தி மிகவுமூர் பலிகொண் டென்றும்
உண்டது மில்லை சொல்லில் உண்டது நஞ்சு தன்னை"
— திருஆலவாய் – திருநேரிசை

உண்ண உணவிருக்க நஞ்சு உண்பார் உலகில் உண்டோ? என்னே அவர் பேதைமை என இரங்குகின்றார் நாவுக்கரசர். இச் செய்யுளும் பேதைமை காரணமாகத் தோன்றிய நகைச்சுவைக்கு உதாரணமாகும்.

மகளிர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வண்ணம் ஆடவர் அழகிய ஆடை அணிதல் இயல்பாகும். ஆனால் மலைமகள் அஞ்ச மத யானைத் தோல் போர்த்துள்ளார் சிவபெருமான் என நகைச்சுவை தோன்றப் பாடியுள்ளார் நம்பியாரூரர்.

"மலைக்கு மகள்அஞ்ச மதகரியை உரித்தீர்
எரித்தீர் வருமுப் புரங்கள்" — திருப்புத்தூர் – இந்தளம்

இந்தச் செய்தியினைத் திருஞானசம்பந்தரும் தமது தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளார். சிவபெருமான் மலைமகள் அஞ்ச யானைத்தோலைப் போர்த்துள்ளார். பழைய தொண்டர்காள்! இறைவன் பான்மையைப் பாருங்கள். இது முறையாமோ கூறுங்கள்! என்ற கருத்தில் அமைந்துள்ளது கீழ்க்காணும் செய்யுள்.

"பழையதொண்டர்கள் பகருமின்பல வாயவேதியன் பான்மையைக்
கழையுலாம்புனல் மல்குகாவிரி மன்னுகண்டியூர் வீரட்டன்
முழவமொந்தை முழாவொலிக்க முழங்குபேயொடுங் கூடிப்போய்ப்
பரவுவானவர்க் காகவார்கடல் நஞ்சமுண்ட பரிசதே"
— திருக்கண்டியூர் வீரட்டம் – கொல்லி

இறைவன் நஞ்சுண்டதையும், யானைத்தோல் போர்த்ததையும், புலித் தோல் போர்த்ததையும், சுடுகாட்டில் ஆடுவதையும் மணிவாசகப் பெருந்தகையாரும் தமது திருவாசகத்தில் பாடியுள்ளார்.

> “ சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத் தொழும்பையும் ஈசற்கென்று
> விரிப்பிப்ப னென்னை விடுதிகண் டாய்விடின் வெங்கரியின்
> உரிப்பிச்சன் தோலுடைப்பிச்சன் நஞ்சூண்பிச்சன் ஊர்ச்சுடுகாட்(டு)
> எரிப்பிச்சன் என்னையும் ஆளுடைப்பிச்சனென் றேசுவனே ”
>
> — நீத்தல் விண்ணப்பம்-49

இச்செய்யுள் பேதமை காரணமாகத் தோன்றும் நகைச்சுவைக்கு எடுத்துக் காட்டாகும். ‘வெறுத்தற்குரிய இவ்வுலக வாழ்வை எள்ளி நகையாடுவேன். யான் ஈசனுக்கே தொண்டு செய்வேன். இறைவனே! என்னைக் கைவிடப் போகின்றாய். என்னைக் கைவிடின் கொடிய யானைத்தோலைப் போர்த்த பித்தன், புலித்தோலை ஆடையாக உடுத்த பித்தன், நஞ்சை உணவாகக் கொண்ட பித்தன், சுடுகாட்டு மத்தியில் ஆடும் பித்தன், ஆட்கொள்வதற்குத் தகுதியற்ற என்னையும் அடிமையாகக்கொண்ட பித்தன் என்று நின்னை ஏசுவேன்’ எனப் பேதைமை காரணமாக நகைச்சுவை தோன்றப் பாடியுள்ளார் மாணிக்கவாசக சுவாமிகள். மக்கள் செய்கைகளோடு மாறுபட்ட செயல்களையுடையவர் பித்தர். “ஊண், உடை, உறையுள் மூன்றையும் மாறுபடக் கோடல் பித்தர் செயல்களாகும். யானைத்தோலைப் போர்வையாகவும், புலித்தோலை உடையாகவும் கொண்ட பித்தன் என்றதனால் உடையின் மாறுபாடும், நஞ்சுண்ட பித்தன் என்றதனால் உணவின் மாறுபாடும், சுடுகாட்டெரியில் நடமாடும் பித்தன் என்றதனால் உறையுளின் மாறுபாடும் புணைதல் அறிக. இம்மூன்றினாலும் முறையே இறைவனுடைய முடிவிலாற்றலும், பேரருளுடைமையும் முழுமுதற் றன்மையும் ஆகிய பெருமையே வெளிப்பட்டு நிற்றல் அறியத்தக்கது” எனப் பண்டிதமணி அவர்களின் கதிர்மணி விளக்கவுரை கண்டு ஒப்பு நோக்கிச் சிந்திக்கத்தக்கது.

இதுகாறும் சுந்தரர் தேவாரத்தில் நகைச்சுவைக்கு எடுத்துக் காட்டாகவுள்ள சில பாடல்களைக் கண்டோம். அவைகளோடு ஒப்புமை யுடைய பிற தேவாரங்களையும் திருவாசகத்தினையும் கண்டோம். நகைச் சுவையே யன்றி அழுகை இளிவரல் முதலிய பிற எண்வகைச் சுவை களுக்கும் சுந்தரர் தேவாரத்தில் எடுத்துக்காட்டுக்கள் உள்ளன. அவை களை ஈண்டு விரித்துக் கூறின் கட்டுரை விரியும் எனக் கருதி நகைச் சுவை ஒன்றோடு இக்கட்டுரையினை முடித்துக் கொள்கின்றேன். தோத்திரப் பாடல்களிலும் இலக்கியச் சுவைகள் நிரம்பியுள்ளன. அவற்றினைத் தமிழ் மக்கள் இலக்கணக் கண்கொண்டு ஆராய்ந்து படித்து இன்புறுவார்களாக.

---

# சிற்றின்பத்துறையில் பேரின்பநெறி

வித்துவான்: செ. வேங்கடராம செட்டியார்
தலைமைத் தமிழ்ப்பேராசிரியர், திருப்பதி S. V. O. கல்லூரி

சிற்றின்பத்துறை என்றது அகப்பொருள் துறையை. பேரின்பநெறி என்றது, முத்திக்கு வழியாகிய சைவசித்தாந்த நெறியை. அகப்பொருள் துறைகளைக்கூறிய நூல்களில் மிகப்பழமையானது தொல்காப்பியம் என்னும் நல்லிலக்கண நூலாகும். தொல்காப்பியர் அகனைந்திணையைப்பற்றிக் கூறும்பொழுது, "மக்கணுதலிய அகனைந்திணை" என்று கூறியுள்ளார். இதனால் அகன் ஐந்திணையும் அதனுட்டுறைகளும் மக்கள் ஆணும் பெண்ணுமாய் நுகரும் சிற்றின்பத்தைக் குறிப்பனவே யொழிய, பலமாசு நீங்கிய உயிர் மெய்ப்பொருளோடு கலந்தநுபவிக்கும் பேரின்பத்தைக் குறிப்பனவல்ல என்பது தெளிவு. தொல்காப்பிய இலக்கணத்தைப் பின்பற்றி யெழுந்த பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும் ஆகிய சங்க நூல்களில் அகப்பாடல்கள் எல்லாம் மக்கள் அநுபவித்த சிற்றின்பத்தைப்பற்றி விரித்துரைப்பனவே. திருக்குறள் காமத்துப்பாலு மன்னதே. புலவர் பெருமக்கள், மன்னரையோ வள்ளல்களையோ புகழ எண்ணினும் அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு மக்கணுகரும் சிற்றின்பத்தையே சிறப்பித்துப் பாடியுள்ளனர். தொல்காப்பியத்திற்குப் பின் அகப்பொருளிலக்கணத்தைக் கூறவந்த நூல், இறையனார்களவியல். இறையனார் செய்த இந்நூலினும் இம்மண்ணுலக மக்கள் துய்க்கும் சிற்றின்பத் துறைகளே பேசப்படுகின்றன. இந்நூற்கு உரைகண்ட நக்கீரனாரும் இக்கருத்தையே விரிக்கின்றார். பிறப்பினும் குடிச்சிறப்பினும் அறிவினும் உருவினும் திருவினும் பண்பினும் நண்பினும் எல்லாம் ஒத்த தலைவன் தலைவி அநுபவித்த சிறந்த சிற்றின்பத்தைக்கூறும் அகப்பொருளைப் படிப்போர் அத்தகைய இன்பத்தைத் தாமும் பெற விழைந்து முயன்றும் பெறவியலாமையின் தவஞ் செய்தேனும் அதைப் பெறவேண்டும் என்ற முயற்சியுடையராய்த் தவஞ் செய்யப் புக அப்பொழுது மிக்கோர் அவர் முயற்சி கண்டு 'வேண்டிய வேண்டியாங்கு எய்தற்பயத்ததாகிய தவத்தைச் செய்து நிலையிலாத சிற்றின்பத்தைப் பெறவோ விழைகின்றீர்? எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாகிய உயர்ந்த பேரின்பத்தைப் பெறவேண்டித் தவஞ் செய்க' என்று ஏவுவர். அவரும் அவர் சொல்வழி நின்று தவஞ் செய்து வீடு பெறுவர். எனவே சிற்றின்பத்தைக் கூறும் நூலும் பேரின்ப வீட்டிற்கு ஏதுவாகும் என நாட்டினார் நக்கீரர். இதனால் சிற்றின்பத்தைச் சிறப்பிக்கும் இறையனார் களவியலும் வீட்டிற்கு நேரே காரணமாகாதென்பதும் பஞ்சினாலாகிய படாம் என்பது போலப் பாரம்பரையான் ஏதுவாகும் என்பதும் புலனாகும்.

இறையனார் களவியலுரையில் எடுத்துக்காட்டியுள்ள பாண்டிக்கோவை என்ற நூல் கோவைகளுள் பழமையானது என்னலாம். தொகை நூல்களில் தொடர்பின்றித் தனித்தனியாகப் பாடப்பெற்ற கருத்தையும் துறைகளையும் ஒரு கதைபோலத் தொடர்புபடுத்திக் கோத்த காரணத்தால் கோவை என்று பெயர் பெற்றது. பாண்டிக்கோவை என்ற பெயர் கண்டவுடன் பாண்டியனைப் பாட்டுடைத் தலைவனாக்கொண்ட நூலே இஃது என்பது புலனாகும். அகப்பொருள் துறைகளை நிரல் படக் கோத்த அப்புதுவகையான நூலில் நுவலப்பட்டதும் மக்கள் ஆணும் பெண்ணுமாய் அன்பால் நுகரும் சிற்றின்பமேயாகும்.

பாண்டிக் கோவைக்குக் காலத்தால் முற்பட்ட தேவாரத்தில் சில பாடல்கள் அகப்பொருட்டுறையில் பாடப்பெற்றுள்ளன. ஒத்த தலைவன் தலைவிபால் உள்ள ஒருமித்த அன்பே இவ்வுலகில் ஈடும் எடுப்பும் இன்றி நின்றுயர்ந்ததாகலின் அக்காதல் நெறியே இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள அயரா அன்பினைத் தெரிவித்தற்குச் சிறந்த நெறியாம் என்று கருதி இறைவனைத் தலைவனாகவும் உயிரைத் தலைவியாகவும் கொண்டு தேவார ஆசிரியர்கள் பாடியுள்ளனர். வைணவத்திலும் இந்நெறியைப் பின்பற்றி நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்கள் அகத்துறைப் பாடல்களைப் பேரின்பநெறி விளக்குவனவாகப் பாடியுள்ளனர். ஆயின் அவையெல்லாம் பாண்டிக் கோவைபோல எல்லாத் துறைகளையும் முறைப்படக்கோத்த கோவையாக அமையவில்லை. ஆங்காங்குச் சில துறைகளே பாடப்பட்டுள்ளன. மணிவாசகப் பெருமானியற்றிய திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் நூல் அகப்பொருள் துறைகளை முறையுறக்கோத்த கோவை நூலாகும். அது பாண்டிக் கோவை போல மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொள்ளவில்லை. அகப்பொருட்டுறையில் பாடப்பட்ட சில தேவாரப் பாடல்கள் போல இறைவனைக் கிளவித் தலைவனாகவும் கொள்ளவில்லை. பாட்டுடைத் தலைவனாகத் திருச்சிற்றம்பல முடையானைக் கொண்டு, கிளவித் தலைவனைப் படைத்துக்கொண்டு கோவையிலக்கணத்தில் ஒரு புது நெறிகாட்டித் திருக்கோவையாரைப் பாடினார் மணிவாசகர் எனலாம். சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு புது நெறியில் பாடிய நூலாதலின் இதற்குத் 'திரு' என்ற அடையினையும் 'ஆர்' என்ற உயர்திணைப் பலர்பால் விகுதியையும் கொடுத்துத் திருச்சிற்றம்பலக் கோவையார் என்று சிறப்பித்தனர் புலவர். திருக்கோவையார் என்றும் வழங்குவதுண்டு.

இந்நூலைப் படிப்போர் அகப்பொருள் துறைகளில் கூறப்பட்ட கருத்துக்களினும் பாட்டுடைத்தலைவனாகிய திருச்சிற்றம்பல முடையானைப்பற்றி ஆண்டு ஆண்டு கூறப்பெறும் கருத்துக்களில் ஈடுபாடு பெரிதுடையாராவர் என்பது தெளிவு.

• " ஈசற்கு யான்வைத்த அன்பினகன்றவன் வாங்கியவென்
பாசத்திற் காரென் றவன்றில்லை யின்னொளி போன்றவன் தோள்

பூசத்திருநீ றெனவெளுத் தாங்கவன் பூங்கழல் யாம்
பேசத் திருவார்த்தையிற் பெருநீளம் பெருங்கண்களே. "

என்ற பாடலைக் காண்க. தலைவியின் விரிந்த கருத்து வெளுத்து நீண்டு ஒளியுடன் விளங்கும் கண்களின் வனப்பை விவரிக்கும் இப் பாடலில் தலைவியின் கண்ணழகைவிட அதற்குவமையாகக் காட்டியுள்ள சமயப் பொருள்களில்தான் படிப்போர் கருத்துப் பெரிதும் ஈடுபடும் என்பது கூறவும் வேண்டுமோ ? உடம்பிற்கு நன்மைதரும் மருந் தருந்தாத சிறுர்க்கு வெல்லம் பூசியருந்தச் செய்வதுபோல உயிர்க்கு நன்மைதரும் மெய்ஞ்ஞானக் கருத்துக்களை விரும்பிப் படிக்காத மக்கட்கு அவர் விரும்பும் சிற்றின்பத் துறையில் வைத்து அம்மெய்ஞ் ஞானக் கருத்துக்களை விளக்கியுள்ளார் மணிவாசகப் பெருமான். இவ்வாறு உவமையாகவும் தில்லைக்கு அடையாகவும் இறைவன் பெருமையை விரவிக் கூறு நூல் இத்திருக்கோவையார் என்க. அந்நூலில் கோத்துள்ள அகப்பொருட்டுறைகள் யாவும் மக்கள் நுகரும் சிற்றின் பத்தைக் குறிப்பனவேயாம். இங்ஙனமின்றி இந்நூலுள் ஒவ்வொரு துறையும் இறைவனுக்கும் உயிர்க்கும் உள்ள தொடர்பைக் குறிப்பா லுணர்த்து மென்னின் ஏனைத் தஞ்சைவாணன் கோவை போன்ற நூல் களும் அச்சிறந்த தொடர்பை யுணர்த்தின எனக்கொள்ளல் வேண்டும். என்னை ? துறை வகைகளில் திருக்கோவையார்க்கும் ஏனைக் கோவை நூல்கட்கும் பெரிதும் வேறுபாடின்மையான் என்பது.

மாணிக்கவாசகர் திருக்கோவையார் மூலம் சிற்றின்ப நெறியினும் சிவ சிந்தனையையே எழுப்பிய புது நெறியைப் பின்பற்றிப், பிற்காலத் துக் கவிச்சக்ரவர்த்தியாகிய கச்சியப்ப முனிவர், திருத்தணிகைப் புரா ணத்துக் களவுப்படலத்தில் சித்தாந்த சைவ நெறியை மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். களவுப்படலம் என்பது முருகப் பெருமானுகியவேட னுக்கும் குறமகளாகிய வள்ளிக்கும் நிகழ்ந்த இன்ப அன்பு நிகழ்ச்சி களைக் கோவைப்படுத்திக் கூறும் பகுதியாகும். கோவைகளில் பெரும் லும் நானூறு துறைகளையே கோப்பது மரபு. இக்களவுப் படலத்துக் கோவையில் அத்துறைகளையே விரித்து ஐந்நூறு துறைகளாக அமைத் துள்ளார். குயச்சிறுர் திரிகையில் வைத்த பசுமண்ணிற்குத் தாம் வேண்டிய வடிவு கொடுப்பதுபோலக் கல்வியிற் பெரியராய கச்சியப்ப முனிவர் தம் மாசறு நுண்ணறிவால் நுனித்துணர்ந்த சைவ சித்தாந்த நூற்கருத்துக்களைத் தாம் விரும்பியவிடங்களில் விரும்பியாங்கு அழ குறத் தெளிவுபடுத்தி எளிமையாக்கியுள்ளார். அவற்றுள் சில காண்பாம்.

இயற்கைப் புணர்ச்சியும் இடந்தலைப்பாடும் பாங்கற் கூட்டமும் நிகழ்த்திப் பாங்கியர் கூட்டத்தை விரும்பிய தலைவன், தலைவியின் உயிர்த் தோழியை யடுத்துத் தன் குறைகூற எண்ணுகின்றான். காதல் நெறி யில் தலைவன் உயிராகவும் தலைவி உடலாகவும் கூறப்படுதலும் இந்நிலை மாற்றிக் கூறப்படுதலும் மரபு. தலைவியாகிய உடலோடு உயிராகிய தன்னைச் சேர்க்கவேண்டும் என்பதுதான் தலைவன் தோழியின்பால்

எதிர்பார்க்குமுதவி. இந்த உதவி செய்தற்குரிய தோழிக்குச் சித்தாந்த நெறியிலிருந்து ஓரிய கருத்தையெடுத்து உவமையாக்கியுள்ளார் கச்சியப்ப முனிவர். இவ்வுலகிற்கு நிமித்த காரணனாகிய இறைவனுக்கு அவனருட் சக்தியே துணைக்காரணமாயிருந்து உலகத்தையுண்டாக்கி உடலில் உயிர்களைச் சேர்த்துப் போகம் துய்க்கச் செய்வான் என்பது மெய்ந்நூற் கருத்து. இத்தகைய அரிய கருத்தை எளிதில் விளங்குமாறு தோழிக்கு உவமையாக்கியுள்ளார்.

> " உடங்கிய மெய்யுயிர் ஊழின்பகுதி யுணர்ந்துறுத்தத்
> தொடங்கிய மெய்யருள் வீரட்டகாசத் துணைமுதல் போல்
> நடங்கிய நுண்ணிடை மாதொடு எம்பால் நவலாத இன்பம்
> அடங்கிய முன்னிற்கு மாயிழைத் தோழிக்கு அறை குதுமே "
> —திருத்தணிகை - களவு - 191

என்பது காண்க. உடம்பொடு உயிர் ஒன்று படும்படியாக அதன் ஊழ்வகை யுணர்ந்து சேர்க்கத் தொடங்கிய நெருங்கிய அருளாகிய வீரட்டகாசப் பெருமானின் துணைக்காரணம்போல், அசைகின்ற நுண்ணிய இடையையுடைய தலைவியோடு எம்மிடத்துச் சொல்ல முடியாத இன்பம் பொருந்துதற்குத் துணைக்காரணமாய் முன்னின்று கூட்டுதற்குரிய தோழிக்குச் சொல்லுவோம் என்பது பொருள். துணைமுதல்—துணைக்காரணம். மெய்யருளாகிய துணைமுதல் என்க. தணிகையிலுள்ள சிவபிரான் வீரட்டகாசப் பெருமான் ஆதலின் நிமித்த காரணனாகிய அவன் துணைக்காரணத்தை வீரட்டகாசத் துணை முதல் என்றார். உடங்கிய, அடங்கிய என்பன செய்யியவென் வினையெச்சங்கள். மெய்யொடு என 'ஒடு' விரிக்க. மெய்யொடு உயிர் உறுத்தத் தொடங்கிய என இயையும். அடங்கிய நிற்கும் என்க. அடங்குதல் - பொருந்துதல். முன்னிற்றல் - துணைக்காரணமாதல். காரியத்திற்கு இன்றியமையாததாய் முன்னிற்பது காரணம் என்பது தருக்கநூல் முடிபாகலின் துணைக்காரணமாதலை முன்னிற்றல் என்றார். தலைவனும் தலைவியும் ஒன்றுபட்டுத் துய்க்கும் இன்பம் இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குச் சொல்லவியலாததாகலின் 'நவலாத இன்பம்' எனப்பட்டது. முன்னிற்றற் குரிமையுடைய தோழியை 'முன்னிற்கும் ஆயிழைத் தோழி' என்றார். ஊழின் பகுதி யுணர்ந்து மெய்யொடுயிர் உடங்கிய, உறுத்தத் தொடங்கிய துணைமுதல் போல் என உவமை கூறினமையால் இயற்கைப் புணர்ச்சியும் இடந்தலைப்பாடும் பாங்கற் கூட்டமும் முன்னிகழ்த்திய முறைமை யுணர்ந்து தலைவியாகிய உடம்பில் தலைவனாகிய உயிரைச் சேர்த்தற்குரியவள் தோழி என்பது புலனாகும். இப்பாடல், 'பாங்கியைக் கண்டவன் பகரவலித்தல்' என்னும் துறையாகும். இச்சிற்றின்பத்துறையில் மெய்ந்நூல்களில் அரிதில் உணரத்தக்க பேரின்பநெறி எளிதில் விளக்கப்பட்டவாறறிக. காரியமாகிய இவ்வுலகிற்கு இறைவன் நிமித்த காரணன் என்பதும் அவன் அருளாகிய சத்தி அவனுக்குத் துணைக்

காரணம் என்பதும் உயிர்களின் ஊழ்வகை யுணர்ந்து அவ்வூழிற் கேற்ற உடம்பில் அவ்வுயிரை ஒன்றுவித்துப் போகங்களை நுகர்விப்பது அச்சத்தியின் தொழில் என்பதும் அவ்வருட்சத்தியின் துணையின்றி உயிர் உடம்போடு கூடிப் போகத்தை நுகர்தல் இயலாதென்பதும் சித்தாந்த சாத்திரங் கூறும் பேரின்ப நெறியாதல் காண்க.

நாற்ற முதலியவற்றான் தலைவியின் வேறுபாடுணர்ந்து தலைவன் அன்பு நிலையையுங் கண்ட தோழி, 'இன்றியமையாத நம் துணை யின்றியும் நம் தலைவியோடு இத்தலைவற்குக் கலப்புண்டாயிருக் கின்றதே; இந்தக் கலப்பினை நோக்கினால் ஓருயிர் அருட்சத்தியின் துணையின்றி இருட்கேவலநிலையைக் கடந்து பின் சகலத்தில் ஆணவம் கன்மம் மாயை யென்ற மும்மலங்களும் நீங்கப் பெற்றுப் பின் சுத்த நிலையில் எல்லாப் பொருளினுங் கலந்து நின்றே அவற்றில் பற்றின்றி அவை யெல்லாவற்றையும் கடந்து விளங்குகின்ற கடவுளாகிய வீராட்டகாசப் பெருமானைக் கலந்து நின்றதுபோலும் என்று வியந்து இப்பொருளுவமையாக அவள் கூறும் பாடல் வருமாறு :

" மருளுங்கடந்து மருண்மாயை கன்மவகை கடந்தவெப்
பொருளுங் கடந்தவிர் வீரட்டகாசப் பொருளொடுயிர்
அருளுங் கடந்து கலந்ததொப்பாம் என்னளவுங் கடந்து
இருளுங் கடந்த குழலியொடான இவர்கலப்பே "

—திருத்தணிகை - களவு - 215

என்பது. 'அலர் முலைப்பாங்கி அன்பு கண்டுவக்தல்' என்ற அகப் பொருள் துறையில் அமைந்த இப்பாடலில் உயிர், கேவலம் சகலம் சுத்தம் என்ற மூன்று நிலைகளை யடைதற்கு உரிய தென்பதும் இருட் கேவலத்தில் அறிவு விளக்கம் பெறாதிருந்த உயிர் சிவனருளாகிய சத்தியின் உதவியால் தநுகரண புவன போகங்களைப் பெற்றுச் சகல நிலையிலிருந்து பின் அவ்வருட்சத்தியின் உதவியால் மும்மலப் பாசம் நீங்கப் பெற்றுச் சிவமாகிய செம்பொருளோடு சேர்தல் முறையாம் என்பதும் அருட்சத்தியின் உதவியின்றி உயிர் செம்பொருளோடு கலத்தல் இயலாதென்பதும் தெளிவாக விளக்கப்பட்டிருத்தல் காண்க. வீராட்டகாசப் பொருளொடுயிர் அருளுங் கடந்து கலந்த தொப்பாம் என்றது இல்பொருளுவமை. தோழி தன் துணையின்றியும் அவர் கூட்டம் நிகழ்ந்துள அருமை புலப்படுத்தவே இத்தகைய இல்பொருளை யுவமையாகக் கூறினாள். மருள் இரண்டனுள் முன்னது இருட் கேவலம். பின்னது ஆணவமலம். (அருளும் என்புழி உம்மை சிறப் பும்மை. மருளும் இருளும் என்புழியும் உம்மை அப்பொருளவே. எப்பொருளும் என்புழியும்மை முற்றும்மை).

இனி, இரந்து பின்னின்ற தலைவனைத் தோழி, தலைவியின் இளமை முதலிய கூறி உடன்படாது விலக்க அந்நிலையில் தலைவன், துன்ப மீதூரப்பெற்று நெஞ்சொடு சில சொல்லுகின்றான். உயிர் மும்மலத்

தோடு கூடியிருக்கும்பொழுது அருட்சத்தியே திரோதான சத்தியாக மாறி மலம் பக்குவப்படும் பொருட்டு அதற்குத் துணையாய் நின்று நடாத்தி உயிர்க்குத் துன்பஞ் செய்யும். இருவினை யொத்து மலபரிபாகம் ஆனவுடன் அக்கருணை மறமாகிய செய்கை மாறிக் கருணையெனப்படும் முன்னைப் பராசத்தி யுருவாய் அவ்வுயிர் மாட்டுப் பதிந்து அவ்வுயிரைச் செம்பொருளில் சேர்த்து இன்புறுத்தும் என்பது சைவ சித்தாந்த சாத்திரங் கூறும் பேரின்ப நெறியாகும். இந்நெறியைச் சிற்றின்பத் துறைக்கு உவமையாக்கி அருட்சத்தியே உயிரின் மலம் பரிபாகம் எய்தும் பொருட்டுத் திரோதான சத்தியாய் அம்மலத்திற்குத் துணையாய் நின்று உயிரோடு மாறுபடுவது போலத் தோன்றினும் பின்னர் மலத்தோடு கூடியிருந்த தன்னிலை தேய்ந்து மலபரிபாக மெய்தி தணிந்துள்ள உயிரைத் தழுவிக் கொண்டு ஒன்றுகின்ற முன்னைய ஈசன் அருளாகிய சத்திபோலத் தோழியும் என் காதல் உணர்ச்சி கனியும் பொருட்டு என்னைத் துன்புறுத்தி என்னொடு மாறுபட்டவள்போல அருமை செய்து அகற்றினும் பின்னர் அந்நிலை மாறி நின்று என் கருத்தை யுடன்பட்டுத் தழுவி வெறுக்கத்தக்க பெருந்துன்பம் அடைகின்ற என்னிலை நோக்கி யிரக்கங் கொண்டு தலைவியொடு சேர்ப்பாளாயின் யான் இரந்து பின்னிற்றலும் பெரிதினிதே என்று விளக்குகின்றான் தலைவன்.

“ பின்னிலை வேட்டலும் பெரிதினிதே பின்னர் மாறிநின்று
தன்னிலை தேய்ந்து தணியாருயிரைத் தழீஇக் கொடொன்று
முன்னிலை யீசன் அருள்போல் தழுவி முனிதுயர் கூர்
என்னிலை நோக்கி யிரங்கவல்லார்ப் பெறினேழை நெஞ்சே ”

—களவு - 256

என்பது காண்க. ‘பின்னர் மாறிநின்று தழுவி நோக்கி யிரங்க வல்லார்ப் பெறினினிதே’ எனவும், ‘தன்னிலை தேய்ந்து தழீஇக்கொடு ஒன்றும் அருள்’ எனவும் இயைக்க. தேய்தல்: மலத்திற்கு அநுகூலமாய் நின்ற திரோதான சத்தி நிலை படிப்படியாய்க் குறைந்து மாறுதல். இப்பாடல் சத்திநிபாதத்தை எவ்வளவு தெளிவாக விளக்குகின்றது காண்மின் !

இவ்வாறு அருட்சத்தியைத் தோழிக்கு உவமையாகக் கூறுவது போலவே தலைவிக்கு உவமையாகவும் கூறியுள்ளார் புலவர். தலைவியைப் பெறாது தாழ்துயர் எய்துகின்ற தலைவனைத் தேற்ற எண்ணிய தோழி, தன் மாட்டுத் தலைவிக்குப் பேரன்புண்டு என்பதை விளக்குகின்றாள். தான் பெரு வெள்ளத்தில் நீந்திச் சோர்வால் புனலோடு போக நேர்ந்தால் தலைவி சோர்விலளாயினும் தன்பாலுள்ள காதன்மையால் தன்னுடன் பிரியாது வெள்ளத்திலும் வருவாள் என்று தலைவியின் அன்பு நிலை யுணர்த்தும் தோழி அதற்குவமையாகப் பேரின்ப நெறியாகிய சித்தாந்தத்தின் சீரிய கருத்தைக் கூறுகின்றாள். உயிர் மலத்தோடு

கூடிய நிலை பெத்த நிலை எனப்படும். இறைவன் அருள்வழி நில்லாது மாறுபட்ட உயிர் இருள் மலத்தோடு அத்துவிதமாய்க் கலந்து அவ் விறைவனை மறந்திருக்கும். இத்தகைய பெத்த நிலையிலும் அவ் வுயிருடன் இருந்து அதற்குதவ எண்ணுகின்ற இறையருள் இருளிலதா யிருந்தும் உயிர்மேலுள்ள அன்பால் இருள் மலத்திலிருக்கும் அவ் வுயிரின்வழி நிற்கும் தன்மையே அவ்வுவமையாகும்.

" திருகிய ஆவி யிருள்வழி நிற்பச் செறிந்தவிருள்
அருகிய ஈசன் அருளும் அதன்வழி நிற்பது போல்
பெருகிய நீரிற் பெயரின் உடங்கு பெயர்குவளால்
கருகிய பூங்குழற் காரிகை யீதிவள் காதன்மையே" —களவு - 210

என்பது காண்க. அருகுதல் - இல்லையாதல். இங்குத் தோழிக்குவமை உயிரையும் தலைவிக்குவமையாக அருட்சத்தியையும் கூறியுள்ளமை காண்க. இப்பாடல், 'மதியுடன் படுப்ப வலித்த பாங்கி கதுவிய வுரிமை மதியுடன் கிளத்தல்' என்னும் துறை யமைந்தது. பெத்த நிலையை உவமை கூறித் தெளிவு படுத்தியுள்ளார்.

இனித் 'தலைவி வருந்தி நாண் விடுத்தல்' என்ற துறையில் தலைவிக்கு உயிரை உவமையாக்கிக் கூறியுள்ளார்.

" மல மாயை கன்ம மொழியினல்லால் முத்தி வாழ்க்கையில்லை
குலமார் மடமச்சம் நாணொழிந்தாலன்றிக் கூட்டமில்லை"—களவு - 67

என்பது காண்க. தலைவி, தன் நாணம் மடம் அச்சம் ஆகிய பெண் பாற்குணங்கள் மூன்றும் நீங்கினலன்றி அன்பரோடு கூட்டம் நிகழாது என்பதை விளக்க எடுத்துக் காட்டுவமையாக ஆணவம் கன்மம் மாயை என்ற உயிர்க்குற்றங்கள் மூன்றும் ஒழிந்தாலன்றி முத்தி வாழ்க்கை யில்லை யென்பதைக் காட்டியுள்ளாள். இதில் சிற்றின்பத்திற்குவமை யாகப் பேரின்பத்தை யெடுத்துக்காட்டி எவ்வளவு தெளிவாக அழகாக விளக்கியிருக்கின்றார் என்பதையும் முத்திப் பேற்றிற்கு வழி எவ் வளவு சுருங்கிய சொற்றொடரில் எவ்வளவு தெளிவாக விளக்கப்பட் டிருக்கின்றது என்பதையும் காண்மின். தெரியாத பொருளை விளக்கு தற்குத் தெரிந்த பொருளை உவமை கூறுதல் மரபு. கவிச்சக்கரவர்த்தி யாகிய கச்சியப்ப முனிவர் அம்மரபை மாற்றித் தெரிந்த சிற்றின்பத் துறைகட்கு எளிதில் தெரிதற்கரிய பேரின்ப நெறியை உவமை கூறித் தெளிவுபடுத்தியுள்ள அருமை நவில்தொறும் நயமிகப் பயப்பதாகும். சிற்றின்பத் துறைகளைக் கொண்ட இக்களவுப் படலத்தைப் படிப்போர் சித்தாந்தத் தெளிவுடையராய் மெய்ஞ்ஞானம் கை வரப்பெற்று வீடடைதல் வேண்டும் என்ற கருத்தினராய்க் கச்சியப்ப முனிவர் சாத்திரங்களில் எளிதில் விளங்காத அரிய இடங்களை யெல்லாம் இவ்வாறு உவமை முகத்தான் எளிமையாக்கித் தந்தமை தமிழ்நாடு செய்த தவப் பயனேயாகும்.

# திருக்கோவையாரில் ஒரு செய்யுள்

சு. குமாரசாமி, புதுச்சேரி கல்வே கல்லூரியில் ஆசிரியர்

"யாவையும் பாடிக் கோவை பாடு" என்னும் பழமொழியால் கோவை பாடுதலின் அருமை புலனும். கோவைகள் பலவற்றுள்ளும் திருக்கோவையாரே சிறந்தது. இதனைப் "பலகாற் பழகினும் தெரியா உளவேல், தொல்காப்பியம் திருவள்ளுவர் கோவையார், மூன்றினும் முழங்கும்" என்பதனால் அறியலாகும். அன்றியும் சாமிநாத தேசிகர் "மாணிக்கவாசகர் அறிவாற் சிவனே என்பது திண்ணம். அன்றியும் அழகிய திருச்சிற்றம்பல முடையார் அவர் வாக்கிற் கலந்திருந்து அருமைத் திருக்கையால் எழுதினர்" என்று கூறுவதனாலும் அதன் பெருமையை யறியலாம். மாணிக்கவாசகர் நூலியற்றியது சிவன் புகழ்ச்சியில் விருப்பமுடையன் போலும் என அறிஞர்கள் கூற ஏதுவாயிற்று. இதனை,...' தன்னை நீ புகழ்ந்துரைத்த பழுதில் செய்யுள் எழுதினன் அதனால் புகழ்ச்சி விருப்பன் போலும் இகழ்ச்சியறியா என்பணிவானே' என்பதனாலறியலாம். அவர் வாக்கிற் கலந்திருந்து பாடினர் என்பதை நோக்கின் தற்புகழ்ச்சிக்காரன் எனவும் கூறலாம். 'பூவெனப் படுவது பொறிவாழ் பூவே' என்றாற்போலக் 'கோவை யெனப்படுவது திருக்கோவையாரே' என்க. அது திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் பெயருடைத்தேனும் திருக்கோவையாரென்னும் பெயரானே பெரும்பான்மையும் வழங்கப்படுதலானறிக. அறிஞர்கள் கூர்ந்து நோக்கித் திருக்கோவையாரை அரசெனவும், திருவெங்கைக் கோவையை அமைச்சு எனவும் கூறுவதையும் நோக்குக. திருக்கோவையாரில் சிற்றின்பப் பொருளும் பேரின்பப் பொருளும் கலந்து பாடப்பட்டுள. பேரின்பப் பொருள் நுண்ணுணர்வுடையார்க்கே புலனும்; எனினும் சில பாடல்களில் பலரும் கண்டின்புறுமாறும் அமைந்துளது. அதனை "ஈசற்கு யான்வைத்த...கண்களே" எனவும், "புரங்கடந்தான் அடி...மாயவனே" எனவும் வருவனவற்றாலறிக. இனி இதன்கண் ஒருசெய்யுளை எடுத்து அதன்பாலுள்ள நயங்களைக் காண்பாம்.

விசும்புற்ற திங்கட் கழுமழப் போன்று விம்மிவிம்மி
அசும்புற்ற கண்ணோ டலனுய் கிடந்தரன் றில்லையன்னுன்
குயம்புற்றரவிடை கூரெயிற்றூறல் குழன் மொழியின்
நயம்புற்றி நின்று நடுங்கித் தளர்கின்ற நன்னெஞ்சமே!

இது தலைவியின் விலையருமை கேட்ட தலைமகன் தன்னெஞ்சோடழிந்து கூறுகிற்றல்.

*இதன் பொருள்:—அரனது தில்லையொப்பாளுடைய முலை, புற்றின்கண் வாழும் பர்ம்பு போலும் இடை, கூரிய எயிற்றின்கணூறிய நீர், குழலிசை போலு மொழி என இவற்றின்கண் கிடந்த இன்பத்தையே கருதிவிடாது நின்று அவளது அருமை கருதாயாய் நடுங்கி வருந்தா நின்ற நல்ல நெஞ்சமே, விசும்பைப் பொருந்திய திங்களைத் தரவேண்டி யழும் குழவியை ஒத்து நீரருமை பொருந்திய கண்ணையுடையையாய்ப் பொருமிப் பொருமி இனிக் கிடந்தலறுவாயாக—என்பது.*

*விசும்பு என்பது இங்குத் தெளிந்த வானையே குறிக்கும். என்னை? முகில்களான் மறைபடாது தெளிந்த வானின்கண் விளங்கும் திங்களே குழவியின் கண்களைத் தன் வயமாக்கி அதன் கருத்தை யீர்க்கவல்ல தாகலான். உடுக்களிடையே விளங்கும் திங்கள் தோழியரிடையே விளங்கும் தலைவிக்கு உவமையாகும். விசும்புற்ற திங்களென்பது தலைவி எய்தற்கரியளென்பதைக் குறிக்கும். யாரேனும் தன் கையி லுள்ள பொருளை எய்தற்கரிய தென்பாராயின் கேட்போர் இது ஆகாயத்தினின்றும் கொணரப்பட்டதோ என்று கேட்டலானறிக. திங்கட் கழும் என்பதிலுள்ள அழும் என்பது பெறுதல் குறித்து நின்றது. அது மழ என்பதனாற்பெற்றாம். இம்மணிதன் பொருட்கழும் எனவும் இம்மகவு காசுக்கழும் எனவும் கூறியவழி முறையே அழும் என்பது இழப்புக் குறித்தும் பெறுதல் குறித்தும் வருதல் காண்க. எனவே தலைவியைப் பெற்று அவளோடு ஆடக்கருதினான் தலைவன் என்பது புலனாம். மதியை மகவு ஆடக்கருதியே அழைத்தலைப் பிள்ளைக் கவியில் அம்புலிப் பருவத்தால் அறிக.*

*விம்முதல் என்பது கடலில் ஒன்றன்பின்னொன்றாகத் தோன்றும் அலைகளைப்போன்று துன்பத்திற்றோன்றும் ஒருவகை அழுகைச் செயல். கடல்போன்ற துன்பத்தை அடைக என்பான் விம்மி விம்மி அசும்புற்ற கண்ணோடலறாய் என்றான். விம்மல்கள் அலைகட்கும், அசும்பு கரைக்கண் வந்து தோன்றும் நீருக்கும், அலறுதல் ஒலிக்கும் உவமைகளாகும். மெய்ப்பாட்டோடு அலறின் கண்டாட்கு(தோழிக்கு) அகக்கண்ணிடையே அருணீர் ததும்பும் என்பது கருதி அசும்புற்ற கண்ணோடலறாய் என்றான். கிடந்தலறாய் என்பது எப்பொழுதும் அழுதவண்ணம் இருக்க என்றபடி. 'அழுதவண்ணம் கிடக்கின்றாளவள்' என்றால் இடம் விட்டுப் பெயராது அழுகின்றாள் என்று பொருள் தராது எப்பொழுதும் அழுது கொண்டே யிருக்கின்றாள் என்று பொருள் தரலை நோக்குக. திங்கட்கழும் குழவியைக் கண்ட அயலார் வாளா செல்லக் குழவிக்குரியார் அக்குழவிக்கு வேண்டுவன செய்தல் போல அயலவர் வாளா நிற்க, நமக்குரியளாகிய தோழி வேண்டுவன செய்வாள் என்று தன்னெஞ்சிற்குக் குறிக்கவே 'திங்கட்கழும் மழப் போன்று அசும்புற்ற கண்ணோடு அலறாய்' என்றான். அவளையடைதலே பிறவிப்பயன் எய்தியதாகும் என்று கருதித் தில்லையனாள்*

என்றான். சிற்றின்பம் பேரின்பத்திற்கு வழிகாட்டி என்பர் அறிஞர். அன்றியும் தில்லை எய்தினார் முத்தி எய்துவர் என்பதைச் சிதம்பரம் காண முத்தி என்பதனாலு மறிக.

காமக் கடலைக் கடக்க ஏதுவாயிருக்கும் கடமாதல் பற்றிக் குயத்தை முன்குறித்தான். கூரிய பல்லின் வழிச் சிறிது சிறிதாக வந்து நுகர்வதற்கு இனிமை செய்தல் பற்றிக் கூரெயிற்றாறல் என்றான். இக்காலத்தும் சுவை காண்பார் பலர் குளிர்ந்த தீவிய நீரை அருந்தும் பொழுது சிறிது சிறிதாக வாயிற் பெய்து சுவைத் தருந்தல் காண்க. இதனைக் கிளி முதலியன உண்டற்றொழிலானு முணரலாம். நுகர் பொருளை மிகுதியும் வாயிற் பெய் துண்பார் பொருளின் சுவை காண்டலின்றாம். உணவிற்கு எயிற்றாறலே இனிமை தருவது என் பார் கூற்றையும் நினைவுகூர்க. இனிமை மிகுதி குறித்துக் குழன் மொழி என்றான்.

குயம் முதலிய நான்கும் தலைவனைத் தம்வயமாக்கிய இயல்புபற்றிக் குயம்......மொழியின் நயம் பற்றி என்றான். "பற்றி நின்று" என்பது வேறு கருதாமை குறித்து நின்றது. நடுங்கித் தளர்கின்ற நெஞ்சமே என்பது ஆற்றாமையைக் குறிக்கும் குயம் முதலியன. தந் நலங்களை நுகர்வித்து நீங்கியவழி இறவாது பின்னரும் பெறலாம் என் றிருக்கும் திண்மையை வியந்து நன்னெஞ்சமே என்றான். இதனை இறந்துபடல் நேருமோ என்னும் அச்சத்தால் ஆறுதல் கூறும் வழி யாக அசும்புற்ற கண்ணோடலறாய் என்று கூறியதனாலறியலாம். வாய் விட்டலறல் துன்பக் குறைவுக் கேதுவாகும். சிலர் தங்கள் துன்பத் திற்கு வாய்விட்டழுதாலும் நலமாகும் என்று கூறுதலை நோக்குக.

இத்துணையும் இப்பாடலின்கண் கூறப்பட்ட சிற்றின்பப் பொருளை நோக்கினோம். இனிப் பேரின்பப் பொருளை நோக்குவாம்.

தோழி தலைவிக்குப் பரிசம்கூற முடியா தென்பது இறைவன் ஒப்புயர்வற்றவன் என்பதைக் குறிக்கும். எனவே, அன்பானன்றி அவனை எய்த முடியாதென்பது பெறப்படும். இதனானன்றே தலைமக ளருமையைக் கேட்ட தலைமகன் கூற்றாக விம்மி விம்மி அசும்புற்ற கண்ணோடலறாய் என்றாரடிகள். அன்புண்மையை அழுகை தெரிவிக் கும். இதனை,

> அன்பிற்கு முண்டோ அடைக்குந்தா ழார்வலர்
> புன்கணீர் பூசல் தரும்

என்பதனானறிக. இறைவனையடைய அன்புச் செல்வத்தையே பெருக்க வேண்டும் என்பதைக் குறிக்கவே "சிற்றிடைக்கே விலை செப்ப வொட்டார் கலம்பாவிய முலையின்விலை என்நீ கருதுவதே" எனத் தோழி கூற்றாகக் குறித்தாரடிகள். அன்பைச் செல்வம் என்னலாமோ

எனின் அதன் குழவியை அருட்செல்வம் என்று கூறலின் கூறலா மென்க. அழுகையின் மிகுதி அன்பின் மிகுதியைக் குறிக்கும். அழுதலே இறைவனை அடைதற்குச் சிறந்த வழியாகும். 'அழுதாலுனைப் பெறலாமே' என அடிகள் பிறிதோரிடத்துக் கூறலையும் நோக்குக. 'நிலை பெற்றிருக்கக் கருதுவையாயின் நெஞ்சே ஆரூரா என்றென்றே அலறு நில்லே' என நாவுக்கரையர் கூறுவதையும் நோக்குக. மாணிக்க வாசகர் அழுதவண்ணமே இருந்து இறைவனை எய்தியவர் என்பதைத் "தொழுத கை தலைமீதேறத் துளும்பு கண்ணீருள் மூழ்கி அழுதடி அடைந்த அன்பன்" என அடிகளாரைக் கூறுவதாலறியலாம். மெய்ப் பாட்டோடலறித் தலைவியின் குறிப்புப்படி ஒழுகும் தோழியின் அருளைப் பெற்றுத் தலைவியை யடைய முயறல் இறைவன் சங்கற்பத்தின் படியாகவும் செய்யும் சக்தியின் அருள்பெற்று அவள்மூலம் இறைவனை யடைதல் கூடும் என்பதையே குறிக்கும். "குயம் புற்றரவு.........நன் னெஞ்சமே!" என்பது உலகப் பற்றுக் கட்டுண்டுழலாது இறைவன் திருமேனி முதலியவற்றையே நினைந்து நினைந்து உருகி உருகி அவ னையே அடைய விரும்பும் நெஞ்சின் நல்லியல்புடைமையைக் குறிக்கும்.

இவ்வாறு காதலும் கண்ணுதலைத் தொழும் அன்பும் கலந்து காணப்படும் திருக்கோவையாரை அன்பர்கள் அனைவரும் பயின்று அழகிய திருச்சிற்றம்பல முடையானுக்கு ஆளாகி இவ்விருவகை இன்பங்களையும் எய்துவார்களாக.

---

# ஒரு பண்டைத் திருமுகம்

வித்துவான். பாலூர்-கண்ணப்ப முதலியார்
*தமிழ்த்துறைத் தலைவர், புதுக்கல்லூரி, சென்னை-14*

செம்மை சான்ற திருந்திய மொழிகளில் தன்னேரில்லாத் தகைமை யொடு விளங்குவது நந்தம் தண்டமிழ் மொழி யென்பது எவர்க் கும் ஒப்பமுடிந்த முடிபாகும். இம்மொழி சிறந்து விளங்குவதற்கு உரிய காரணங்கள் பலவாக இருப்பினும், அவற்றுள் ஒன்று இம் மொழி இலக்கண இலக்கியங்களைப் பெற்றுத் திகழ்வதனாலேயே என்க. நந்தம் செந்தமிழ் இலக்கிய இலக்கணங்களில் தலை சிறந்தது என்பதை, மேனாட்டு அறிஞர்கள் பலரும் ஒருமிக்கக் கூறியிருப்பதி லிருந்து நன்கு உணர்ந்துகொள்ளலாம். "இலக்கியப் பெருமையில் இலத்தீன் மொழியையும் வெல்ல வல்லது தமிழ்" என்று வின்ஸ்லோ பெருமகனார் கூறி இருப்பதை ஒரு சான்றாகக் காட்டலாம். இத்தகைய பெருமை மிக்க மொழியில் கடித அமைப்பில் அமைந்த இலக்கியத்தி னைப் பற்றிச் சிறிது ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கடிதம் என்னும் பொருள்கொண்ட சொற்கள் : முடங்கல், திருமுகம், மடல், ஓலை முதலியன. இங்ஙனம் ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் இருத்தலை நோக்குங்கால், கடிதம் எழுதுதலில் நம்மவர்கள் தலைசிறந்து விளங்கினர் என்பதையும், அக்கடிதங்கள் வெறும் செய்திகளை அறிவிக்கும் திருமுகங்களாக இன்றி, பொருட் செறிவுடைய மடல்களாகவும் திகழ்ந்தன என்பதையும் சிலப்பதிகாரம், சிந்தாமணி, திருமுறைகள், தனிப்பாடல் திரட்டு போன்ற நூல்களில் பரக்கக் காணலாம்.

இத்திருமுகங்கள் மேற்கு நாட்டு அறிஞர்கள் போற்றுகின்ற செஸ்டர்பீல்டு, சிஸரோ, ஷில்லர், ஹரேஸ் வால்போல், ஜான்ஸன், கூப்பர் போன்றவர்களின் கடிதங்கட்கு எட்டுணையும் பின்வாங்குதலின்றிச் சிறப்புடையனவாக உள்ளன. "கடிதம் எழுதுவதோர் ஒப்பற்ற அருங்கலையாகும்" என்று செஸ்டர்பீல்டு தன்மகன் பிலிப்புக்கு அறிவுறுத்தியிருக்கும் கருத்தை நம்மவர்கள் பன்னூறு ஆண்டுகட்கு முன்பே நன்கறிந்தவர்கள் என்பதில் ஐயம் எழ இடமில்லை.

இக்காலத்தில் கடிதம் எழுதும் முறைகளைக் கண்டு அவை மேனாட்டு அறிஞர்களின் போக்கைத் தழுவி எழுதப்படுகின்றன என்று கூறி வியப்புறுகின்றவர் ஒருசிலர். அதாவது, மேற்கு நாட்டவர் தாம் கடிதம் எங்கிருந்து வருகின்றது என்பதை அறிவிக்க, முன்னர் வருகையினைக் (From) குறித்துப் பின்னர் இக்கடிதம் இன்னாருக்கு (To) எழுதப்படுகிறது என்பதையும் குறிப்பிட்டு, அதன் பின்னர்ச் செய்திகளை (subject matter) அறிவிக்கின்றனர் என்று கூறிப் பெருமிதம் கொள்கின்றனர். இம்முறைகளை நம் செந்தமிழ்மொழி உணராதார்க்கு இதனை நன்கு விளக்கவே நம் பதினோராம் திருமுறைக்கண் முதலில் விளங்கும் திருமுகப்பாசுரத்தினைத் துணைக்கொள்வோமாக. அப்பாசுரம்,

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரும் மாற்றம்
பருவக் கொண்மூஉப் படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்கும் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே

என்பது. இது திருவாலவாயுடையாரால் சேரமான் பெருமாள் நாயனாருக்குப் பாணபத்திரரது வறுமை தீரப் பொருள் கொடுத்து உதவு

மாறு எழுதப்பட்டதாகும். இக்கடிதத்தில் "மதிமலி...சிவன் யாம்" என்பது வரையில் இன்னாரிடமிருந்து இது வருகிறது என்பதும், "பருவக் கொண்மூஉ...சேரலன் காண்க" என்பது வரையில் இன்னாருக்கு எழுதப்படுகிறது என்பதும், "பண்பால் யாழ்பயில்...வர விடுப்பதுவே" என்பதுவரையில் எழுதப்படும் செய்தி இன்னது என்பதும் எத்துணை அழகாக பொறிக்கப்பட்டுள்ளன என்பதை நாம் நினைந்து பார்க்குங்கால் தமிழ்மொழியின் இலக்கிய நுட்ப அமைப்பின் முறைமை நன்கு புலனாகின்றதன்றோ? செஸ்டர் பீல்டு தம் திருமகனை பிலிப்புக்கு எழுதிய கடிதத்தில் "கடிதம் எழுதுவது ஓர் அருங்கலை" என்பது உண்மைதான் என்பதை மேலும் இத்திருமுகப் பாசுரங் கொண்டே உணர்வோமாக.

இப்பாசுரம் பேரறிவுப் பொருளாய் விளங்கும் இறைவரால் எழுதப்பட்டது என்பது தொன்றுதொட்ட முடிவாகும். "இறைவரோ, "பேரறிவே, இன்பப் பெருக்கே, பராபரமே" என்று தாயுமானார் வாக்கிற்கும், "சிறந்த அறிவு வடிவமாய்த் திகழும் நுதற்கண் பெருமானே!" என்ற சிவப்பிரகாசரது மொழிக்கும் பொருளாய் விளங்குபவர். அத்தகைய பேரறிவுப் பிழம்பாகிய இறைவரால் பாடப் பெற்ற இத்திருமுகப் பாசுரம், சொல்நோக்கும், பொருள்நோக்கும், தொடைநோக்கும், மற்று எந்நோக்கும் கொண்டு இலங்குவது என்பதைக் கூறவும் வேண்டுமோ? இத்திருமுகப் பாசுரத்தினைத் தொடங்கும் பொழுதே இறைவனார் "மதிமலி புரிசை" என்று தொடங்கி மதுரையின் மதிலின் மாண்பைப் புலப்படுத்தத் தொடங்குகிறார் அன்றோ? மதுரையின் மதில் பல மாட்சிமைப்பட்ட அறிஞர்களின் அறிவுக்கூறுபாடுகள் பெற்று விளங்கியது என்பதைச் சிலப்பதிகாரம் மதில்களில் அமைந்த பொறிகள் இன்ன என்பதைக் குறிப்பிட்டிருப்பதிலிருந்து உணரலாமன்றோ? இதனை உட்கொண்டன்றோ "மதிமலிபுரிசை" என்றனர் மதிமுடி சொக்கேசர்.

"மாடக்கூடல்" என்பதும் பொருள் பொதி தொடராகும். மதுரையம்பதியின் குடிவளத்தையும், அக்குடிமக்கள் வாழும் கட்டட அமைப்புக்களையும் காட்ட எழுந்த தொடரே இது. இவ்வாறே நாட்டின் மாடங்களைச் சிறப்பித்து "செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கி" என்று ஞானசம்பந்தப் பெருமானார் நவில்வதனாலும் அறிந்துகொள்ளலாம்.

"அன்னம்பயில் பொழில் ஆலவாய்" என்பது மதுரையம்பதியின் நீர்வளத்தையும் நில வளத்தையும் குறிப்பதாகும். நீர் மிக்கு இருந்தாலன்றி அன்னங்கள் வாழா அன்றோ? "அன்னங்கள் பயிலும் ஆலவாய்" என்பதனால் நகரில் பல சோலைகள் அமைந்து அச்சோலைகளில் நீர் நிலைகளும் பொருந்தி மக்கள் மாலை நேரங்களில் நறுமணமும்,

நல்லதென்றலும் துய்க்க நகரினை அமைத்திருந்தனர் நகராண்மைக் கழகத்தினர் என்பதும் தெரியவருகிறதன்றோ? இதனால், அக்கால நகராண்மைக் கழகத்தினர் நற்றொண்டும் புலனாகிறது.

இங்ஙனம் இறைவனார், மதுரையம்பதியின் மாண்புறு வளங்களை முன்னர் அறிவித்து, தம் திருமுகத்தினைத் தொடங்குவதன் உட்பொருள், வளமற்ற, வரண்ட, நகரத்தினின்று எழுதப்பட்டதன்று என்பதும், பாணபத்திரரது வறுமையைப் போக்கத்தக்க வளம் இல்லாதது போலும் என்று சேரர் எண்ணுதிருக்கும் பொருட்டும் இவ்வாறு மதுரையினைச் சிறப்பித்தனர் என்க. எழுதுகின்றவர் இறைவர் என்பதையும் பண்டும், இன்றும் என்றும் உள்ள பொருள் என்பதையும் அறிவிக்க "மன்னிய சிவன் யாம்" என்ற தொடர்மூலம் விளக்கியருளினர்.

அடுத்தாற்போல், சேரமான் பெருமாள் நாயனார் சிறப்பையும் எடுத்தியம்ப எண்ணி, அவர்க்குரிய சிறப்புக்களுள் கொடைச்சிறப்பினையே விதந்து கூற உளங்கொண்டு "பருவக் கொண்மூஉப் படியென பாவலர்க்கு உரிமையின், உரிமையின் உதவி" என்று வரைந்தனர். சேரர் பெருமானார், கொடைக்குணத்தில் ஒப்பாரும், மிக்காரும் இன்றித் திகழ்ந்தனர் என்பதைச் சேக்கிழார் பெருமானார் "இம்பர் உலகில், இரவலர்க்கும், வறியோர் எவர்க்கும் ஈகையினால் செம்பொன் மழையாம் எனப்பொழிந்து" என்று செப்பியதனாலும் தெள்ளிதின் உணரலாம். சேரன்மரபே பொதுவாகப் புலவர்களுக்குப் பொன்னும் பொருளும் ஈந்து புகழ்பெற்றது என்பதைப் பதிற்றுப் பத்து என்னும் சங்கமருவிய நூலால் சங்கையறத் தெளிகின்றோமல்லமோ? இந்த மரபு உரிமை சேரர் பெருமானார்க்கு இருத்தல் கருதியும், நினைவுபடுத்தக் கருதியும், "உரிமையின், உரிமையின்" என்றனர். இந்த அளவில் சேரர் பெருமானாரது புகழினைப் புகழ்ந்து நிறுத்தினாரல்லர் நீலமேனிவால் இழைபாகத்தொருவர். அம்மன்னரது, குடையினையும் சிறப்பிக்க எண்ணியவராய், "குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ் செருமா உகைக்கும் சேரலன் காண்க" என்றனர். இவ்வாறு, குடையினைச் சிறப்பித்ததன் நோக்கம், அக்குடை வெயிலை மறைப்பதற்கு மட்டும் உரியதன்று குடிமக்களின் துன்ப வெம்மையை மறைக்கவும் வல்லது, காக்கவும் வல்லது என்பனவற்றை அறிவிக்கவே என்க. இக்காரணங்களைப்பற்றியே மன்னர்களின் குடைகள் மாண்புற்றிலங்குகின்றன என்பதை,

"கண்பொர விளங்கும்நின் விண்பொரு வியன்குடை
வெயில்மறைக் கொண்டன்றே வருந்திய குடிமறைப் பதுவே"

என்ற புறநானூற்றடிகளாலும்,

" திங்களைப் போற்றுதும், திங்களைப் போற்றுதும்
கொங்கலச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
அங்கண் உலகளித்தலான் "

என்ற சிலப்பதிகார நூலாலும் அறிந்து கொள்ளலாம்.

"செருமா உகைக்கும் சேரலன் காண்க" என்று கழறிற்றறிவாரை சுட்டிக்காட்டியதன் நோக்கம் பின்னால் இவர் நம்பி ஆரூருடன் கைலைக் கேகுங்கால், கலினமாவில் கடிது ஊர்ந்து செல்லவேண்டி இருக்கும் குறிப்பினை முன்கூட்டி அறிவிக்கும் பொருட்டே ஆகும். இவ்வாறு பின்னர் நிகழ்வதை முன்னரே அறியும்வண்ணம் சில அருந்தொடர்கள் அமைந்துவிடுவதை இன்தமிழ் இலக்கிய நூல்களில் இனிதுறக் காணலாம். தயரதன் தன் திருமகனை இராமனை, கௌசிக முனிவருடன் அனுப்ப விழைந்து, அவனை அழைக்கக் கட்டளையிட்ட பணியாளரிடம் 'திருவின் கேள்வனைக் கொணர்மின்' என்று கட்டளை இட்டனன் அன்றோ? இராமன், திருவுக்குக் கேள்வனாதற்கு முன்பே அவனைத் திருவின் கேள்வன் என்று குறிப்பிட்டது, பின்னர் சீதையைத் திருமணம் முடித்தலை முன்கூட்டி அறிவிக்கும் மங்கலச் சொல்லாகவன்றோ அமைந்துவிட்டது? இங்ஙனம் பின்னால் நிகழ்வதை முன்னால் அறிவிக்கும் சொற்றொடர்களை அமைப்பதற்குக் கம்பர் யாங்ஙனம் உணர்ந்தனர்? அவர் திருமுறைகளை நன்கு பயின்ற பயிற்சியினால் என்று கூறின் மிகையாகாதன்றோ?

" செருமா உகைக்கும் சேரலன் காண்க "

என்ற தொடர்ப் பொருளைச் செல்வன் சிந்தித்ததன் பயனன்றோ?

" திருவின் கேள்வனைக் கொணர்மின் "

என்று செப்பச் செய்தது?

இங்ஙனம் தம் நாட்டையும், சேரர் பெருமானார் சிறப்பையும் புகழ்ந்து கூறிய இறைவர் தாம் கடிதம் தந்து அனுப்பும் பாணபத்திரரையும் சேரர்க்கு அறிமுகப்படுத்திவைக்க விரும்பியவராய் முன்னர் அவரது இசைப்புலமையினை உணர்த்த வேண்டி "யாழ்பயில் பாணபத்திரன்" என்று குறிப்பிட்டருளினர். அவ் யாழ்ப் பயிற்சியினையும் நன்முறையில் பெற்றவர் என்பதை, "பண்பால் யாழ்பயில் பாண பத்திரர்" என்ற தொடரால் விளக்கியருளினர். யாழ்ப்பயிற்சி உடையராயினும், கல்விச் செருக்குக் காரணத்தால் கடவுளை மறந்த கயவர் அல்லர் எம்மால் உன்பால் அனுப்பப்படுவர் என்பதை நன்குணர்த்த "எம்பால் அன்பன்" என்று எடுத்து மொழிந்தனர். "எம்பால் அன்பன்" என்று எடுத்து மொழிந்ததனால் "நாம் அன்புடையோம் அல்லமோ" என்று சேரர் நினையாதிருக்கும்வண்ணம், மிக்க விழிப்

புடன் " தன்போல் என்பால் அன்பன் " என்றும் எழுதி மன்னர்க்கு அத்தகைய எண்ணம் எழாதவாறு செய்தனர்.

என்னே இறைவர்தம் பேரறிவுடைமை! யாமா அதனை அளவிட்டு கூறவல்லர்? தம்மால் அனுப்பப்படுபவர் வறுமையுற்ற காரணத்தால் உம்பால் அனுப்புகின்றோம் என்று கூறி பாணபத்திரர்க்கு இழுக்கு உண்டாகுமாறு செய்ய எண்ணமற்றவராய், அவரது மாண்பு மணக்க " காண்பது கருதிப் போந்தனன் " என்றே திருமுகத்தில் தீட்டியருளினர். இவ்வாறு எழுதி முடித்து முடங்கலினைக் கொடுத்தனுப்பின் பொருள்கொடாமல் சேரர் அனுப்பிவிடுவரோ என்ற ஐயத்தினராய் " மாண் பொருள் கொடுத்து " என்றும் குறிப்பிட்டுப் பொருளினை அளிக்குமாறு தூண்டினர். ஒருக்கால் சிறு பொருள் கொடுத்துச் சென்று வருக என்று செப்பிவிடுவரோ என்று சிந்தித்த சிவனார், பெரும் பொருளைக் கொடுக்க என்று கட்டளையிடுவார் போல " மாண் பொருள் கொடுத்து " என மாண்புற மடலை வரைந்தனர். இந்த அளவிலும் திருமுகப் பாசுரத்தினைத் தீட்டி முடிக்காது இறுதியில் "வர விடுப்பதுவே" என்று வரைந்து முடித்துள்ளதை என் சிற்றறிவு கொண்டு என்னென்று செப்ப வல்லேன்? ஆ! " வர விடுப்பதுவே " என்னும் செழும் தொடரைப் பன்முறையும் பன்னிப் பன்னிச் சிந்திக்க வேண்டியவராகின்றோம். இத் தொடரின் ஆழ்பொருள் அமைப்பினை அனுபவிக்கவேண்டியவராகின்றோம்.

பாணபத்திரர் யாழ் இசையில் வல்லவர். அத்துடன் இறையன்பும் எய்தப் பெற்றவர். மேலும் இறைவனால் அனுப்பப்பட்டவர். இன்னோரன்ன சிறப்புடைய சீரியரைச் சின்னாளேனும் உடன்வைத்து உவகையும் உறவுங்கொள்ளவேண்டும் என்று உளங்கொண்டு சேரர் பெருமானார் பாணபத்திரரை நிறுத்திக் கொள்ளாதிருக்கும் பொருட்டே "வர விடுப்பதுவே" என்றனர். நாளும் யாழிசை கேட்டு இன்புறும் இறைவர் யாங்ஙனம் பாணபத்திரரைத் தணந்திருப்பர்? ஏழிசையாய், இசைப்பயனாய் இருப்பவரன்றோ இறைவர். ஆகவே உடனே பொருள்தந்து அனுப்பிவைக்க உளங்கொண்டே " வர விடுப்பதுவே " என்று கட்டளையிட்டருளினர். இத்தகைய மாண்பொருள் பலவும் மாண்புறப் பெற்ற இத்திருமுகப் பாசுரத்தினைப் பல்காலும் பயின்று பேரின்பப் பொருளைப் பெற்று இனிது வாழ்தல் நம் கடமையாகும்.

# திருமுருகாற்றுப்படையில் உவமைகள்

அ. நா. ப. திருஞானசம்பந்தன், Banker, திருவண்ணமலை

திருமுருகாற்றுப்படை என்பது திருமுருகனிடத்தே ஆற்றுப்படுதலை உடையதென ஏழாம் வேற்றுமை தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய் நின்று, இப் பிரபந்தத்தைக் குறிப்பதாயிற்று. திருவென்னும் பலபொருள் ஒரு சொல், வடமொழியில் ஸ்ரீ என்பது போல, தமிழ் மொழியில் திரு என்ற சொல், புண்ணிய தீர்த்தங்கள், மூர்த்திகள், புண்ணிய தலங்கள், அடியார்களின் பெயர்கள் முதலியனவற்றிற்குச் சேர்த்து ஆளப்பட்டு வருகின்றது. திரு என்பது கண்டோரால் வியக்கப்படும் தன்மையுடையது என்று பேராசிரியரும் புகல்கின்றார். அங்ஙனமே, உயர்ந்த செந்தமிழ் மொழியில், முருகப் பெருமான் பெயரில் நக்கீரதேவ நாயனாரால் தோற்றுவிக்கப் பெற்ற இந் நூலுக்கும் திரு அடைமொழியாகக் கொண்டு வழங்கப்பெறுகின்றது.

புலவர் பெருமக்கள் தாங்கள் இயற்றும் நூல்களில் இயற்கைப் பொருள் உவமைகளைத் தோற்றுவித்துக் கற்போர்க்கு, எளிதில் விளங்கும் வண்ணம் அமைக்கும் பெற்றியைப் பெற்றவர்கள். இடைக் காலப் புலவர்களில் பல்லோர் விழலுக்கு இறைத்த நீர்போல, பயனற்ற உவமைகளைக் கையாண்டுள்ளதையும் காண்கின்றோம். பலர் ஒன்றுக்கும் உதவாத உவமைகள் கூறி மகிழ்ந்துள்ளதையும் காண்கின்றோம். மிடுக்கிலா ஒருவனை வீமனே என்றும், விறல் விசயனே என்றும், கொடுக்காத ஒருவனைப் பாரியே என்றும், அழகற்றவனை குன்றுதோறுடும் குமரனே எனவும், கொடுஞ்சிலை மதனவேள் எனவும் சில புலவர்கள் புகழ்வதுபோலல்லாமல், செந்தமிழ்ப் புலவரான நக்கீரர் முருகப்பெருமானை ஏத்திப் போற்றி வந்தித்து, அவரையும் அவரைச் சார்ந்த பொருள்களையுமே உவமித்து உளம் மகிழ்வெய்துகின்றார். அவர் கண்டு இன்புற்ற உவமை நயங்கள் சிலவற்றை நாமும் கண்டு, முருகப்பெருமான் திருவடிப் பேற்றிற்கு இலக்காவோமாக!

துயிலெழுந்தவுடன் கடலைக் காணும் பேறு பெற்றவர்கள் பலர். மாலை நேரத்தில் தங்கள் மெல்லியலாருடன், குளிர்ந்த காற்று வாங்க கடற்கரைக்குச் செல்கின்றவர்களும் பலர். இங்ஙனம் காண்போருக்கும், கடலிடத்துச் செல்வோருக்கும் இறையருள் தோய்ந்த எண்ணம் எழுந்ததாகவோ, எழுவதாகவோ தெரியவில்லை. செந்தமிழ்ப் புலவர் வாழ்ந்த இடம் கடற்பகுதியைச் சார்ந்த ஊர் அல்ல. ஏதோ ஒரு சில நேரத்தில், கடலைக் கண்டு களித்திருப்பார் அவர். மனக்கண்முன் கடலை அமைத்து, அக்கடலை ஒரு மயிலுக்கு உவமிக்கின்றார். காலையில் தோன்றும் இளைய செஞ்ஞாயிற்றை, என்றும் இளையனாய் விளங்

கும் திருமுருகப்பெருமானுக்கு உவமிக்கின்றார். காலைக் கதிரோன் நீலத் திரைக்கடலினின்றும் எழுங் காட்சி, திருமுருகப்பெருமான் மயில்மேல் ஏறி உலகம் உய்யப் புறப்படும் காட்சியாக அமைகின்றது என்று கண்டு உளம் பூரிக்கின்றார் புலவர் பெருமகனார்.

> "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
> பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டா அங்கு"

இறைவனின் சீர்த்தி மிக்கத் தாள்களைப் பற்றிப் பேசாத புலவர்கள் இல்லை. இறைவனின் நற்றாள்களைத் தொழுவதினால், கலைப் பொருளும், அதனாற் பெறப்படும் மெய்ப்பொருளும் நம்மைச் சார்கின்றன என்று திருவள்ளுவரும் இயம்புகின்றார். அவன் தாள்களைச் சார்வார்க்குப் பிறவிநோய் நீங்கும்என்பதையும் மெய்ஞ்ஞானிகள்புகன்றுள்ளனர். இக்கருத்தைச் செந்தமிழ்ப் புலவர் அழகுற விளக்குவதையும் காண்போம். திருமுருகப்பெருமான் தம்மை அடைந்த அன்பர்களைப் பிறவிக் கடலிலே வீழாமல் தாங்கும் பொருட்டு, அவர்களிடத்துள்ள அறியாமையைக் கெடுக்கும் வலிமையாகிய பாதங்களையும், பகைவராகிய அசுரர்களை வதைத்த இடியைப் போலும் பெருமையாகிய கையையும் உடையவர் என்கின்றார் பெரும்புலவர்.

> "உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்தாள்
> செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை"

திருமுருகப்பெருமான் ஏறி பவனி வரும் யானையைப் பற்றிச் செந்தமிழ்ப் புலவர் உவமித்துப் பேசுவது பெருமித நீர்மையது. அந்த யானை கூர்மையாகிய நெற்றியை யுடையதும், அங்குசம் வெட்டிய வடு உடையதும், பொன்னரி மாலையானது அசையவும் தோன்ற உள்ளது என்கின்றார். அந்த யானை இயமனைப் போன்ற, தடுத்தற்கரிய வலியினை உடையது. அது புறப்பட ஆரம்பித்தால், காற்று எழுந்தாற் போன்றிருக்கும் என்று கூறி, அவ் யானையின்மேல் முருகப்பெருமான் ஏறி பவனி வருவதாகக் கூறுகின்றார்.

> "வைநுதி பொருத வடுவாழ் வரிநுதல்
> வாடா மாலை யோடையொடு துயல்வரப்
> படுமணி யிரட்டு மருங்கிற் கடுநடைக்
> கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பிற்
> கால்கிளர்ந் தன்ன வேழமேல் கொண்டு"

திருமுருகப்பெருமானை வழிபட கற்றுணர்ந்தடங்கிய முனிவர்களும், தேவ புருடர்களும் செல்கின்றார்கள். அவர்களைப் பற்றி வர்ணனை செய்துள்ளதைக் கண்டு இன்புறத் தகுந்ததாகும். முனிவர்கள், மரவுரியை உடையாகச் செய்த உடையினை யுடையவரும், எக்காலத்தும் புகையை முகந்தாற் போன்ற அழுக்கற விளங்கும் வடிவினை

யுடையவர்களும், மான்றோல் போர்த்த தசை கெடுகின்ற மார்பில் கோன்வை தோன்றி விளங்கும் உடம்பினை உடையவர்களும், பகற்பொழுதில் உண்டி கொள்ளாதவர்களும், பலவற்றையுங் கற்றவரும், சிறிதும் அறியாத அறிவினை உடையவர்களும், பலவற்றையுங் கற்றவர்களுக்கும் தாம் எல்லையாகிய தலைமையுடையவர்கள் என்கிறார். இவர்கள் முதுமையைக் குறிக்க வரும்பொழுது, வடிவாலும் நிறத்தாலும் அழகு பொருந்தி, வலம்புரி சங்கைப் போலும் வெள்ளிய நரைமுடியினை உடையவர்கள் முனிவர்கள் என்கிறார் நக்கிரதேவர்.

" சீரொடு வலம்புரி புரையும் வால்நரை முடியினர் "

பதினொன் வகையாகிய உயர்ந்தநிலைபெற்ற கணங்களுள், தாரகைகள் பூத்தாற்போன்ற தோற்றத்தை யுடையவர்களும், கடலினிடத்தேசேர்ந்து காற்றுஎழுந்தாற்போன்ற செலவினைஉடையவர்களும் காற்றிடத்தே நெருப்பு எழுந்தாற்போன்ற வலியினையுடையவர்களாகியும், நெருப்புப் பிறக்கும்படி இடி இடத்தாற்போன்ற குரலினை உடையவர்களாகியும், அழகோடு பெருமானை வழிபட, ஆகாயத்திலே எழுந்தருளிக் காணும்படியாகக், கேடில்லாத கற்பினையுடைய தெய்வயானையோடு திருஆவினன்குடியின் கண்ணே முருகப்பெருமான் எழுந்தருளினர் என்று இயம்புகின்றார் பெரும்புலவர்.

" மீன்பூத் தன்ன தோன்றலர் மின்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
வுருமிடித் தன்ன குரலினர் விழுமிய
வுறுகுறை மருங்கிற்றம் பெறுமுறைகொண்மார் "
அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவுஇல் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவினன்குடி அசைதலும் உரியன் அதாஅன்று

குன்றம் எறிந்தும், குன்றப்போர் செய்தும், அமரர் இடர் தீர்த்தும், என்றும் இளையனுய் விளங்கும் திருமுருகப் பெருமானை தேவர்கள், முனிவர்கள், செந்தமிழ்ப் புலவர் பெருமக்கள் ஆகியோர் வழிபட்டு உய்ந்தனர். அதுபோல் நாமும் அப்பெருமானை வழிபட்டு மனக்கவலை தீர்ந்து வாழ்வோமாக !

# காரைக்காற் பேய்

கோ. பாலசுந்தர நாயகர், எம். ஏ.
தமிழ் ரீடர், S.V.O. கல்லூரி, திருப்பதி

உலகத்தில் வாழும் மக்கள் பேயென்றால் அஞ்சுதலும் இகழ்தலும் செய்யா நிற்பர். இதற்குக் காரணம், பேய்கள் அருவருக்கத்தக்க உருவமும் தீச்செயலும் உடையனவாக எழுதப்பட்டும் சொல்லப்பட்டும் வருவதேயாம். பேய்களை உருவத்தாலும் செயலாலும் பேய்த்தன்மையுடையவை என்றும், செயலால் பேய்த்தன்மையுடையவை என்றும் இருவகையாகக் கூறுவர். முன்னைய பிரிவிற் சேர்ந்தவை பரணி முதலிய நூல்களிற் கூறப்பட்டுள்ளவை. அவை பிறப்பாலேயே பேயாயின. பின்னைய பிரிவிற் சேர்ந்தோர் செயலால் மட்டும் பேய்த் தன்மை பெற்றுப் பிறப்பாலும் வடிவத்தாலும் மக்கள் தன்மையுடையவர்கள். இதனை,

> "உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்(து)
> அலகையா வெண்ணப் படும்"

எனவும்,

> "பேயரே எனக்கி யாவரும் யானு மோர்
> பேயனே எவர்க்கும்"

எனவும் கூறியவாற்றால் உணரலாம். ஆயினும், வடிவத்தாற் பேயும் உள்ளத்தாலும் செயலாலும் தெய்வமுமாகிய ஒரு பேய் உண்டு. அப் பேய் காரைக்காற் பேய். எத்தகையோரும் தாம் பேயாதலை விரும்பார். "உருவின் மிக்கதோர் உடம்பது பெறுதலு மரிதே" என்றாங்கு அழகும் சிறந்த தோற்றமும் உடைய உடலைப் பெறுதலே சிறந்த பேறெனக் கருதுவர். அவருள்ளும் மகளிரே இயற்கையழகையும் செயற்கையால் மிகுதிப் படுத்தக் கருதிப் பலமுறைகளை மேற்கொள்ளும் வழக்கம் எக்காலத்திலும் உண்டு.

எனினும், காரைக்காற் பகுதியிற் றோன்றிய புனிதவதி யம்மையார் மட்டும் தமக்குப் பேய் வடிவமே வேண்டுமென்று சிவபெருமானிடம் முறையிட்டு அதனைப் பெற்று மகிழ்ந்தனர். அவர் தம் உடல், அதற்கு உரிமையுடைய தம் கணவனுக்குப் பயன்படாமற் போனமையால், அவ்வழகிய உருவைப் பிறர் காண்டலும் பெருந் தவறெனக் கருதிக் கற்புக் கடம்பூண்டமையும், இறைவன், பேய்க் கூட்டங்கள் களிக்கச் சுடலையில் ஆடுகின்றமையின் தாமும் பேய்ஆயின் அக் கூத்தினைக் கண்டு மகிழ்ந்து இன்புற்றிருக்கலாம் எனக் கருதினமையும் அதற்குக் காரணம் ஆம். புறத்தார்க்கு இவர் பேயாகக் காணப்

படினும், அகத்தில் இறைவன் மாட்டுப் பெருக்கெடுத்தோடும் சிறந்த அன்பு ததும்ப நின்றார்.

> " ஆங்குநின் தாள்கள்போற்றும் பேய்வடி வடியேனுக்குப்
> பாங்குற வேண்டும் என்று பரமர்தாள் பரவி நின்றார் "

என்னும் பெரிய புராணச் செய்யுள் அவர் பேய் வடிவைப் பெற்றதற்குரிய காரணத்தை அறிவிக்கின்றது. 'பாங்குற' வேண்டும் என்று வேண்டியதிலிருந்து அவ்வடிவத்தை எத்துணைப் பெருமையுடையதாக அவர் கருதினர் என்பது விளங்கும்.

இவர் தம் அன்பினைக் கண்ட உமையம்மையார், எப்போதும் எவரும் பெற்றிலாத பேய் வடிவத்தையும், கயிலை மலைமேல் தலையினால் ஏறிவரும் அன்புப் பெருக்கினையும் வியந்து, " எம்பெருமான் ஓ ரற்பின் யாக்கை அன்பென்னே " என்று கூறத்தகும் சிறப்பினை இவர் பெற்றனராதலின் இவர் வடிவாற் பேயரே யன்றி உள்ளத்தால் தேவர் முதலியோரினும் சிறந்து தெய்வத் தன்மை பெய்தினராளுர் என்று அறிகின்றோம்.

அன்றியும், இவர் தாம் வேண்டியபடியே பேய் வடிவம் பெறுதற்கு எங்ஙனம் இயலும்? எனில், மன்றுளாடுவார் அருளும், இவர் தம் மேல் நெறி உணர்வும் இயைந்தமையால் அவ்வடிவம் இவருக்குக் கிடைத்ததென்க. மேல் நெறியாவது சரியை முதலிய நான்கு நெறிகளுள் மேம்பட்ட ஞான நெறி; " பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் " என்று இவர் கூறும் மேலை நெறி; மேலைப்பிறப்பிற் செய்த நன்னெறி; அடியவரைப் பணிய திருநெறி என்னலாம். சேர்தல்—இடைவிடாது தியானித்தல்.

இப் பேய் வடிவம், மண்ணவரும் விண்ணவரும் வணங்கத் தக்கதாய், தத்துவ காரியங்களால் உண்டான மாயா உடலை பொழித்த ஞான வடிவம். அதனாற்றான், இவர் பேய் வடிவம் பெற்ற பின்னர் மிக விரைவில் திருக்கயிலையை அடைந்தார். நுண்ணிய ஞான வடிவு மனத்தினும் விரைந்து செல்லும் தன்மைத்தாகலின், மிக அரிதின் முயன்று பன்னாட்கள் நடந்து சென்றாலன்றி அடைய வியலாத கயிலையை எளிதில் குறுகிய காலத்தில் இவர் அடையத் தக்கவராயினர். இங்ஙனம் ஞான வடிவத்தோடு தம்பால் வந்த இவ்வம்மையாரைச் சிவபெருமான் " அம்மையே " என விளித்தது இவர் தம் பேய் வடிவைக் கருதாது ஞான வடிவத்தைக் கருதியதனாலேயேயாம் என்க.

எனினும், இவர் தம்மைப் பேய் எனக் கூறிக்கொள்வதையே சிறப்பெனக் கருதி, அவ்வடிவத்தை விளக்கி,

> " காடு மலிந்த கனல்வாய் எயிற்றுக் காரைக்காற் பேய் "

என்றும்,

" செடி தலைக் காரைக்காற் பேய் "

என்றும் கூறியருளியது காண்க.

யாழ்க்கோடு செவ்விதாதல் போல, இவர் காட்சிக்கு வெறுக்கத் தக்க வடிவுடையரேயாயினும், கருத்துக்குச் செவ்வியும் தெய்வத் தன்மையும் உடையவராக இருந்தார். இவர் பாடியவை, அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, மூத்த திருப்பதிகங்கள் என்பன. இவற்றுள் அம்மையார் பேய் வடிவம் பெற்ற உடனே பாடியவை முன்னைய இரு நூல்கள். பின்னைய பதிகங்கள், இறைவன் ஆணை பெற்றுத் திருவலங்காட்டின் எல்லைக்குள் தலையால் நடந்து சென்று ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியை அடைந்த பின் பாடப் பட்டவை.

அற்புதத் திருவந்தாதி என்பது அம்மையார் செய்த அற்புதச் செயலை விளக்குவதன்று. அற்புதத்தால் அவர் பேய் வடிவு கொண்ட பின் பாடப்பட்டதாதலின் அப்பெயர் பெற்றது என்றும், பதினோராந் திருமுறையில் அமைந்துள்ள ஏனைய திருவந்தாதிகளினின்றும் வேறு படுத்தி அறிவித்தற்காக " அற்புதம் " என்னும் அடைமொழி கொடுக் கப்பட்டது என்றும் கூறுவர். அங்ஙனமே, தேவாரத் திருப்பதிகங் கட்கு இரண்டு மூன்று நூற்றாண்டுகள் மூத்தவையாக இவர் பதிகங்கள் இருத்தலின் மூத்த திருப்பதிகங்கள் எனப் பெற்றனவென்றும், சுடலை யில் மூத்த பேய்களோடு கூடி இறைவன் ஆடும் திருக்கூத்துச் செய்திகளை இவை விரித்துரைக்கின்றமையின் இப்பெயர் பெற்றன வென்றும், வயதாலும் ஞானத்தாலும் மூத்தவர்க்கே இவை பெரிதும் பயன்படுந் தன்மையாதலாலும் 'மூத்த'வென்னும் அடை கொடுக்கப் பட்டன வென்றும் கொள்ள இடம் உண்டு.

பெரிய புராணத்தில் ஆசிரியர் சேக்கிழார் கூறியருளிய முறைப்படி நோக்கின் இப்பதிகங்கள் இரண்டும் பின்னிடம் பெறுதற்குரிய ஆயினும், தொகுப்பாசிரியர் இவற்றின் (மூத்த) சிறப்பினை நோக்கி முதற்கண் வைத்தனர் போலும்.

அற்புதத் திருவந்தாதியிற் காணப்படும் சிறந்த பாக்கள் பல வற்றுள் ஈண்டைக்குப் பொருந்தும் ஒரு பாட்டினைக் காண்போம் :

" பெறினும் பிறிதியாதும் வேண்டேம் நமக்கீ(து)
உறினும் உறுதொழியு மேனும்—சிறிதுணர்த்தி
மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்றன் பேயாய
நற்கணத்தி லொன்றாய நாம் "

என்பது அப்பாட்டு. இப்பாட்டிலுள்ள ஒவ்வொரு சொல்லும் பொருட் சிறப்புடையவை. அவற்றை முழுதுங் கூறின் பெருகுமென்று கருதி ஒருசில கூறுவாம்.

முழுதும் விளக்காது சிறிதோருணர்வைக் கொடுத்து அனற் கண்ணை நெற்றியில் வைத்த சிவபெருமானது நல்ல பேய்க் கணத்தில் ஒன்றாகிய நாம், எமக்குக் கிடைத்த இப் பேய்க் கூட்டத்தின் தன்மை எமக்கு வந்தாலும் வாரா தொழிந்தாலும் இப்பேயின் தன்மையைத் தவிர வேறொன்றையும் விரும்பமாட்டோம், என்பது இப்பாட்டின் திரண்ட பொருள்.

அங்குள்ள பேய்கள் பிறப்பாற் பேய்களாய், சிவகணங்களாய் எண்ணப்பட்டு இறைவன் தாள்களைப் போற்றி அவனோடு எப்போதும் கூடியிருந்து, அவனுக்குக் குற்றேவல் செய்து, அவனது இனிய திருக் கூத்தினைக் கண்டு சிறப்பெய்தும் பெருமையுடையவை. இவர் இடைக் காலத்தில் அப்பேய் வடிவைப் பெற்றார். ஆதலின், அவற்றின் தன்மை தமக்கு உறுமோ? உறா தொழியுமோ? என்று ஐயப்பட்டு, "நமக்கீ துறினும் உறா தொழியுமேனும்" என்றார். ஈது—இப்பேய் களின் தன்மை. இதனால், அப் பேய்கள் உயர்ந்தனவென்று கொண்டு, அவற்றின் தன்மை தமக்கு எய்தினும் எய்தா தொழியினும், அவை களோடு எண்ணப்படுதலே உயர்வுடைத் தென்று கருதினார் என்பது பெறப்படும். தொண்டரோடு கூடியிருத்தல் கிடைத்தற்கரிய பேறாதலி னாலும், அவர்களை ஈசன் திறமே பேணிக் கவராதே தொழவேண்டு மாதலினாலும், அவர்தம் நலம் பயக்கும் கூட்டுறவே வீடுபேறெனப் படுதலினாலும் அதனையே வேண்டிப் "பிறிதியாதும் வேண்டோம்" எனவுங் கூறினார்.

சிறிதுணர்த்தலாவது, முற்று முணர்ந்த இறைவன் உயிர்களுக்கு உணர்த்துவது உயிர்களின் தன்மைக் கேற்ப சிறிதாயிருத்தலும், அவ் வுணர்வே அவனை யறிந்து அவன் தாளடைதற்குப் போதியதாதலும், அதுவே பெரிதாதற்குரியதாதலும் பெறுகின்ற தன்மையாம். "மற் றொருகண் நெற்றிமேல் வைத்தான்" என்னும் தொடரால், உலகிற் சிறிது உணர்த்தியவை பரிதி, மதி என்னும் இரு கண்களே எனவும், மற்றைய கண்ணைச் சிறிது திறக்கினும் உலக முழுதும் அழியுமாதலின் அதனை நெற்றியின்மேல் வைத்தான் எனவும் அறிகின்றோம்.

"இறுமாந்திருப்பன் கொலோ ஈசன் பல்கணத் தெண்ணப்பட்டு" என்று கூறியது போல, இவர் பேய்க்கணத்துள் எண்ணப்பட்டு ஒன்றி யுள்ள சிறப்புண்மை தோன்ற "நற்கணத்தி லொன்றாய நாம்" என்றார். இங்கு, "நாம்" எனப் பெருமிதந் தோன்றக் கூறியதையும், பிறவிடங் களில் "நான்" எனக் கூறியதையும் நோக்கி வேறுபாடறிக. விரிப்பிற் பெருகுமாதலின் இத்துடன் அமைகின்றேன்.

இவர் காலம் கி. பி. நான்கு அல்லது ஐந்தாவது நூற்றாண்டாகும். இது தனியாக ஆய்தற்குரித்து.

---

# நடமாடும் நம்பன்

திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை, பி. ஏ., பி. டி.

**முன்னுரை :**—கடல் சூழ்ந்து பரந்த இவ்வுலகம், அசைவனவும் அசையாதனவுமானவற்றால் ஆனது. ஆயினும் இதற்கும் அசைவு என்னும் இயக்கம் உண்டு. இவைகளை இயக்கும் ஆற்றலுடையான் ஒருவன் உண்டு. அண்டமுதல் அணுவரையிலுள்ள சராசர பேதங்களை இயக்கநேரும் இறைவனுக்கு இயல்பான அசைவு இல்லை. இரண்டு அல்லது மூன்று பந்துகளை மேலெறிந்து ஒன்றும் கீழே வீழாமல் பிடித்து வேடிக்கை காட்டுபவன், மேலும் கீழுமாக மாறி மாறிவரும் பந்துகளுக்கு ஏற்பத் தன் உடலையும் கைகளையும் வளைத்து அசைந்து கொடுப்பதைப் பார்க்கலாம். அதேபோல, அகில புவனங்களும் அசைவுகொண்டு இயங்கவேண்டி, இறைவனும் ஆட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இத்தகைய அசைவுதான், 'நடம்' 'நடனம்' 'கூத்து' என்ற பல பேர் கொள்ளுகிறது. இதனை இயற்றும் இறைவனையே நாம் அனைவரும் நம்பி அடையத்தக்க 'நம்பன்' என்போம். எனவே இம்மூர்த்தி 'நடமாடும் நம்பன்' ஆகிறான். இம் மூர்த்தம் பரசிவம் அருளினால் உருமேனி தரித்துக்கொண்ட இருபத்தைந்து திருமூர்த்தங்களில் ஒன்றாகும்.

**கூத்தப்பிரான் திருவுரு :**—இப்பிரான் உரு பதினாறு வகைத்து என்ப. விரிவு இங்கு வேண்டா. பொதுவாக அப்பிரானைக் காணும் பேறுபெற்றார் காட்டும் நிலையில் அவரது திருவுருவை ஒருவாறு எண்ணுவோம். பனித்த சடை ; குனித்த புருவம் ; கொவ்வைக் கனிபோன்ற சிவந்த வாய்; அதினின்று அரும்பும் புன்முறுவல், பவள மேனி ; அதில் பூசிய பால்போல் வெண்ணீறு ; தூக்கிய இடது திருவடி ; ஊன்றிய வலது மலரடி ; மலரடிக்கீழ் முயலகன் ; ஒரு கையில் உடுக்கை ; 'அஞ்சல்' என்ற குறிப்புடைய அமைத்த கரம் ; வீசியகரம் (கஜஹஸ்தம்) விளக்கிக்காட்டும் அபிநயம், ஒரு கையில் அனல் என்பன இவ்வுருவம் காணும் எவற்கும் புலனாவன. இனி ஒவ்வொன்றின் சிறப்பை ஆராய்வோம்.

**பனித்த சடை :**—உயர்ந்த குளிர்ந்த நிலையன். பற்றற்ற பரம யோகி. தஞ்சமென் றடைந்தவர்களைத் தாங்கியருளும் தயவாளன். பல்லில் விஷமுள்ள பாம்பும், நல்ல அமுதமூறும் மதியையும் சூடிப் பாம்பொடு திங்கள் பகைதீர்த்த பண்பு முதலிய வெளிக்காட்டி நிற்கும்.

**குனித்த புருவம் :**—வில்லைப்போல் மேலேறி வளைந்த புருவம். புருவம் என்றாலே வளைந்ததுதான். ஆனால் கூத்தனார் தம் திருப் புருவம் வில்லைப்போல் வளைந்திருப்பது பாதகலை வல்லார்கட்கே விருந்

தாய் அமைந்த மெய்ப்பாடு (Action) ஆகும். அதிக கவலை கொண்டார்க்கே, புருவம் வில்லிட்டு வளையும் என்பது அநுபவத்தில் காண வேண்டும். 'உயிர், உடல், கருவி, கரணம், புவனம், போகம் ஆதியவை தந்தும் அவற்றின் அருமை பெருமைகளை அறிந்து, பயன் கொள்ளாது எண்ணிலிப்பாவிகள் நழுவுகின்றனரே' என்ற வான் கருணையால் எழுந்த கவலை புருவத்தை வில்லிடச் செய்தது.

**கொவ்வை செவ்வாய் - புன்முறுவல் :**—எங்குச் சென்றாலும் மக்கள் நல்வரவு கூறி இன்முகங் காட்டலையே விரும்புவர். அதனால் தான் நமது தாண்டவவேந்தரும், தம்மிடம் ஒரு சிலரேனும் பிறவிப் பெரும்பயன் கொள்ளுதற்கு உற்றனரே என்ற மகிழ்ச்சியால் முகத்தில் மலர்ச்சியும் இளமுறுவலும் " என்று வந்தாய் ?" என விசாரிக்கும் திருக்குறிப்பும் தெரியவைக்கிறார்.

**பவளமேனி, தவள நீறு :**—தன்னிடத்து இட்ட பொருள்களைப் புனிதமாக்கும் எரிநெருப்பின் நிறம் பவளம். அதுபோன்ற திருமேனி அடியார்க்கு அருள எடுத்த அற்புதப் குறிப்பது. தவளநீறு - பூசுநீறுபோல் உள்ளும் புனிதரென்பதும், உயர்ந்த பனித்த சடையான பதம் பெற எண்ணுவோர்க்கு அமைந்த சிவசின்னத்தையும் குறிக்கும். இன்னும் உளவெலாம் கொள்க.

**தூக்கிய திருவடி :**—இது இடது திருவடியாகும். இறைவனது இடப்பகுதி தேவியின் பகுதி என்பர். இனி உயிர்களை அருளால் எடுத்து பேரானந்தவாரியில் அழுத்தும் ஐந்தாந் தொழிலான 'அருளலை'க் குறிக்கும் அற்புதம் உடையது அத் திருவடி. அருட் சத்தி வடிவது என்னலுமொன்று. இதுவே 'குஞ்சிதபாதம்' ஆகும்.

**ஊன்றிய மலரடி :**—இது வலக்கால். இதன் கீழ் ஆணவமான முயலகன் என்ற பூதம் நசுக்கப்பட்டிருக்கும். ஊன்றிய திருவடி, பரமனது ஐந்தொழில்கள் தம்முள் நான்காவது தொழிலான 'மறைத்தல்' (திரோபவம்) குறித்தது. குழந்தை யுண்ணவேண்டிய சோற்றை மறைத்துவைத்துச் சிறிது சிறிதாய் ஊட்டுமாபோலே, வினைப் போகங்களை உயிர்கள் நுகர்வுசெய்ய மறைத்தூட்டும் மாண்பை ஊன்றிய மலரடி உரைக்கின்றது.

**உடுக்கை :**—உலகப் படைப்பின்போது அணுத்துகள்களை ஒன்றுகூட்டும் பரநாதத்தை உண்டாக்கும் தன்மையைக் காட்டுவது. விஞ்ஞான முறையில் ஒரு இசைக் கருவியினின்றும் எழும் ஒலி அணுக்களை ஒன்று கூட்டவல்லது என்பதனை மேனாட்டறிஞர் பலர் சோதனையுடன் காட்டியுள்ளனர். இதைப் பற்றிய விவரங்கள் அடியேன் எழுதியுள்ள 'நடமாடும் நம்பன்' என்ற விரிந்த நூலில் விளக்கியுள்ளேன். எனவே உடுக்கை நம்பெருமான் 'படைப்புக் கடவுளும் நானே' என்ற குறிப்புடையது. "சராசரப் பகுதி தானே வகுத்ததுன் தமருகக் கரமே" என்ற திருவாக்கு நோக்குக.

**அமைத்த கரம் :**—ஆன்மாக்கள் பிறவிப் பெருங்கடற் சுழியில் அகப்பட்டு "அலந்தோம்! அந்தோ! அருள்செய் சிவனே!" என வந்து பரமனடியில் தஞ்சமென விழும்போது அவர்களை 'அஞ்சேல் என்று அருள் செய்வான்' அமைந்துள்ளது அபயகரம். இது படைக்கப்பட்ட உயிர்களை உடலாதிகள் உதவிக்காக்கும் 'அளித்தல்' என்ற தொழிலைக் குறித்தது என்னலுமாகும்.

**வீசியகரமும் குறிப்பும் :**—ஆகாத பொருளை உதறித் தள்ளும் போது வீசிய கையின் மெய்ப்பாடு விளங்கும். இங்கு, ஆகாத மாயையை உதறித் தள்ளிய குறிப்பு விளங்க அக் கைத்தலம் அமைந்துளது. இக்கரத்தை உற்று நோக்கினல் ஒரு விரல், தூக்கிய திருவடியையே சுட்டி நிற்கின்ற அருமை தெரியவரும். இதனை அழகுற ஆடுங் கலையறிந்த குமரகுருபரர் கூறுவது நெஞ்சத்தை அள்ளுவதாகும்.

உயிர்கள் பல்வேறு பிறவி புக்கு அல்லற்பட்டுக் 'கதி கூடுமா?' என்ற கவலையுடன் ஆடும் கூத்தனை அணுகுகின்றன. பெருமான் இளமுறுவலால் அவரது வருத்தத்தை மாற்றி அவர்கட்கு ஆறுதல் கூறுமுகத்தான் "கதி (உறுதியாய்க்) கூடும் வருந்தாதீர்" என்கிருன். அதற்குரிய உபாயமும் அவனது திருக்கூத்தில் தெளிய வைக்கிருன். இடது கையாகிய வீசிய கரத்தின் திருவிரலால் தூக்கிய காலைமட்டும் சுட்டிய வண்ணம் 'இந்த ஒரு காலை மட்டும் (ஒருதரம்) கும்பிட்டால் போதும் என்று அமைத்த கரத்தால் அருளுகிருன்.

"கூடும்கதி ; ஒருகால் கும்பிட்டால் போதுமென
நாடும் அபிநயத்தை நண்ணிற்ருல்—ஓடியகண்
காதனர் காண ஒருகால் காட்டி கைஅமைத்து
நாதனர் செய்யும் நடம்."

என்கிருர் குமரகுருபரர்.

**அனல் கை :**—அனலேந்திய கை தான் 'அழித்தலும் வல்லான்' என்பது காட்டியது.

**பிற குறிப்புக்கள் :**—இத்திருக்கூத்தைத் தரிசித்தோர் பல்வேறு அநுபவங்கள் பெற்றனர். நமது ஆளுடைய நம்பிகள் இந்த நடனம் கண்டபோது பெற்ற அநுபவத்தை,

"ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள அளப்பரும் கரணங்கண் நான்கும்
சிந்தையே யாக குணமொரு மூன்றும் திருந்து சாத்து விகமேயாக
இந்து வாழ்சடையான் ஆடும் ஆனந்த எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியுள் மலர்ந்தார்"

எனத் தெய்வச் சேக்கிழார் திறம்பட அருளினர்.

இக்கூத்தின் சிறப்பை

"மாதொரு பாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே
ஆதியு முடிவுமில்லா அற்புதத் தனிக்கூத்து"

எனவும், ஐந்தொழிலடைவினது என்பதை

"தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தே உற்ற திரோதாயி;முத்தி
நான்ற திருவடியில் நாடு"

எனவும் வரும் திருவாக்குகளானறிக. இத்திருக்கூத்து காணப்பெற்றால் மனிதப் பிறவி இவ்வுலகில் வேண்டப்படுவதே என்ற கருத்தை,

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"

என்று அப்பரடிகள் அருளுவது கொண்டு நாமும் நடமாடும் நம்பன் திருநடம் கும்பிடப் பெற்றுப் பிறவிப் பெரும்பயனைப் பெறுவோமாக.

---

# மழையோ மழை!

திருமதி. இராஜரத்தினம் அம்மையார், எம். ஏ., எல். டி.
எம். இ. எஸ். தலைமைத் தமிழ் ஆசிரியை, லேடி வில்லிங்டன் போதனைமுறைப் பெண் கல்லூரி, சென்னை

மழை என்ற சொல்லைக் கேட்டவுடனே உள்ளம் குளிர்கிறது. உவகை மிகுகின்றது. மாந்தருக்கு மட்டுமா இத்தகைய உணர்ச்சி எழுகிறது? செடி கொடிகளும், வானம்பாடி முதலிய பறவைகளும் தலையைத் தூக்கி வானத்தையே நோக்கி நிற்பதேன்? இப்பெற்றியினாலேயே வள்ளுவர் "வான் சிறப்பு" என்று ஒரு அதிகாரம் வகுத்து அதில் மழையின் பெருமையைச் சிறப்பித்து உரைத்துள்ளார். உலகத்தைக் குறிக்கும்போதும் 'வானோக்கி வாழும் உலகம்' என்றார்.

உலகில் தருமம் செம்மையாக நடைபெறுமானால் வானம் பொய்யாது என்பது பெரியோர் துணிபு. ஒரு மன்னனை வாழ்த்தப்போந்த ஔவைப் பிராட்டியார் 'வரப்புயர' என்று வாழ்த்தினாராம். வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும்,

குடி உயரக் கோல் உயரும், கோல் உயரக் கோன் உயர்வான் என்பது அம் மூதாட்டியார் அனுபவத்தில் பழுத்ததோர் உண்மையாகும். 'அன்ன மயம், பிராண மயம்' என்பதற்கேற்ப, 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற நல்லுரையும் வழங்கி வருகிறது. இத் தகைய சிறப்பினையுடைய உணவுப் பொருள்கள் விளைய மழை இன்றி யமையாததன்றோ? செயற்கை முறைகளால் பனிக்கட்டியைத் தெளித்து மேகத்தைப் பொழியச் செய்வது இயற்கை மழையைப்போல் அத்தனை சிறந்த பயனுடையதல்ல வென்பது பல்லோர் முடிவு. இயற் கையை ஒட்டிப் பார்த்தால் ஒன்பது நாள் வெயிலும் ஒருநாள் மழை யும் இருத்தல் வேண்டும். இதனையே மும்மாரி என்று பண்டையோர் புகழ்ந்தனர். அவ்வாறு மழை பொழிந்தால் விளைவு குன்றாது. மேலும் நோய்க் கிருமிகள் செயலற்றுப்போம். இக்காலத்திலோவெனில் ஆண்டு மும்மாரி பொழிதலே அரிதிலும் அரிதாக இருக்கிறது.

பல நாட்டினரின் பழக்கங்களையும் பார்க்குங்கால் மழையை வேண்டிப் பெற்றவர்கள் பெரும்பாலும் பெண்களே என்று தெரி கிறது. பர்மா தேசத்தில் மழை பொழியத் தவறினால் பெண்களை நோன்பு நோற்கச் செய்து, கடவுளை வழிபட்டு வெறுங் குடங்களுடன் குறிப்பிட்ட மலைகளுக்குச் சென்று அங்குள்ள நீரினைக் குடத்தில் நிரப்பிக்கொண்டு வரச்செய்வார்களாம். அவ்வாறு அப் பெண்கள் நீர் நிறைந்த குடங்களுடன் மலையிலிருந்து இறங்கும்போதே மழையும் பொழியுமாம்.

தங்கள் நலனையும் உலகத்தவர் நலங்களையும் விரும்பியே திருவா திரை நோன்பு அல்லது மார்கழி நோன்பு நோற்கப்பட்டு வருகிறது. மலையாள தேசத்திலும், செட்டி நாட்டிலும் இவ்வழக்கமானது, இப் போதும் இருந்து வருகிறது. தமிழ் இலக்கியங்களாகிய திருப்பாவை யும், திருவெம்பாவையும் இப் பாவை நோன்பினைப்பற்றி விரிவான முறையில் கூறுகின்றன. இந்நூல்கள் எழுந்த காலத்தில் மழையானது பொய்க்காமல் பொழிந்து வந்தது. ஆயினும் பக்த சிரோமணிகளாகிய ஆண்டாளும், மாணிக்கவாசகப் பெருமானும் பாடிய இவ்வரிய பாடல் களை முறையாக ஓதி வந்தால் மழைவளம் குன்றாது என்பது நம்பிக்கை.

ஆண்டாளும், மாணிக்கவாசகரும் கடவுள் அருளைத் தாம் பெற வேண்டுமென்றும் உலகத்தவர் அருள் மழையையும் நீராடலுக்கு வேண்டிய நீரையும் பெறவேண்டு மென்றும் வேண்டுகின்றனர். திருப் பாவை பாடிய ஆண்டாள், தன் பாவனா சக்தியினாலே கோ குலத் தில் உதித்த கோபிகைகளுள் ஒருத்தியாகி, கண்ணபிரானுடைய அரு ளைப் பாடிக்கொண்டே நீராடச் செல்லுகின்றாள். செல்லும்போது வீதியிலே உள்ள தன் தோழிகளையும் அழைத்து அவர்களையும் கண்ண னுடைய கீர்த்தியைப் பாடும்படித் தூண்டுகிறாள். அவ்வாறு செய்வ

தால் தங்களுக்குக் கடவுள் அருளும் உலகத்தோருக்கு மழையும் உண்டாகும் என்னும் குறிப்பினைக் கொண்ட செய்யுளைப் பார்ப்போம்.

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி நாங்கள்
நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந் நெலூடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்."

மேலும் மழைக் கடவுளை நோக்கிப் பின்வருமாறு பாடுகின்றார்.

"ஆழி மழைக் கண்ணா! ஒன்று நீ கை கரவேல்!
ஆழியுள் புக்கு முகந்து கொடார்த் தேறி
ஊழி முதல்வன் உருவம் போல் மெய் கறுத்து
பாழி யந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழி போல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழை போல்
வாழ உலகினிற் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந் தேலோ ரெம்பாவாய்."

மழைக் கடவுடளே! நீ கடல் போலப் பரந்து தோன்றி, கடலில் புகுந்து அங்குள்ள நீரை யெல்லாம் எடுத்துக்கொண்டு ஆகாயத்தில் ஏறி வந்து எம்பெருமான் மேனி போலக் கறுத்துத்தோன்றி, வலிய தோளினையுடைய பத்மநாபனுடைய கையிலிருக்கும் சுதரிசனம் என்னும் சக்கரம் போல மின்னலை மின்னச் செய்து, அவனுடைய மற்றொரு கையிலுள்ள சங்கைப் போல முழங்கி இடி இடித்து, பகைவர்களைக் கண்டவுடனே அவன் எவ்வாறு காலந் தாழ்த்தாமல் சார்ங்கம் என்னும் வில்லை உதைத்து அம்பு மழை பொழிவானோ அவ்வாறே நன்றாக மழையைப் பொழியக் கடவாய். அப்பொழுதுதான் உலகமானது வாழ்ந்திருக்கும். மேலும் அப்பிரவாக நீரில் பெண்களாகிய நாங்களும் நீராடி நோன்புநோற்க இயலும் என்பதே இதன் கருத்தாகும்.

கடவுளுடைய அருள் மழையையும் கருணை மழையையும் வேண்டி நிற்கும் ஆண்டாளின் பரந்த நோக்கத்தைப் போற்றுதல் வேண்டும்.

மேற்கண்ட முறையிலேயே நமது சைவ சமய குரவர் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசகப் பெருமானும் தாம் திருவண்ணாமலையில் வாழ்ந்து வருங்கால், மார்கழித் திங்களில் அங்குள்ள பெண்கள்

வைகறையில் துயிலெழுந்து ஒருவரையொருவர் கூவி யழைத்துச் சென்று நீராடி அண்ணாமலையின் அடியிணைகளைத் தொழுது இறைஞ்சி யதைக் கண்ணுற்று, அப்பெண்கள் பாடுவது போலத் திருவெம்பாவை யைப் பாடியருளினர். நீராட்டத்திற்கு வேண்டிய மழையையும், நடராஜப் பெருமானது அருள் மழையையும் வேண்டி நிற்கின்றார். அப்பாடல் பின்வருமாறு :—

"முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆள் உடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலை குலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங் கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன் அருளே
என்னப் பொழியாய் மழையே லோ ரெம் பாவாய்!"

மேகமே, நீ கடலில் புகுந்து நீரைக் குடித்து, அதனால் கடலில் நீரில்லாமற் செய்து, நீ உண்ட நீரை ஆகாயத்தில் சேர்த்து ,சூலுண்ட கருமேகமாகச் செழித்து, எம்முடைய தலைவியாகிய மாயோள் அதாவது உமாதேவியைப் போன்ற கருமேனியைத் தாங்கி, உமையம்மையின் இடையில் தோன்றும் மேகலையைப் போல மின்னல்கள் மின்னப் பெற்று, அவளுடைய திருவடியில் ஒலிக்கும் சிலம்பொலிபோல் இடி இடித்து முழங்கி, அவளுடைய அழகிய வளைந்த புருவம் போல மழை வில்லை வளைத்து, அவளுடைய நாயகனாகிய சிவபெருமானுடைய அன்பர்களுக்கு அவள் அருள் புரியுமாறு போலநீ மழையைப் பொழிய வேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றார்.

மேல் நாட்டிலிருந்து நம் நாடு போந்த திரு. போப் ஐயரவர்கள் திருவாசகம் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். தமிழ் மொழியும் படித்து இரசிக்க முடியாத அன்பர்கள் திருவெம் பாவையை ஆங்கிலத்திலேனும் படித்துப் பயனுறுதற்கு வாய்ப்பிருக் கிறது. திருப்பாவை, திருவெம்பாவையாகிய இரண்டு நூல்களையும் ஆண்டு முழுவதும் வைகறையில் படிக்கலாம், அல்லது மார்கழி மாதத்தி லேனும் படிக்க வேண்டும். இல்லையானால் இயன்றபோது அதனைப் படித்து அதன் பொருளைப் பிறருக்குங் கூறி, ஆண்டாளும், மாணிக்க வாசகப் பெருமானும் போன்று பிறர் இன்புறக் கண்டு மகிழ்தல் நலம்.

# ஊசியும் நூலும்

வ. பா. தாமரைக்கண்ணியார்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் பொன்விழா மலருக்கு ஒரு கட்டுரை எழுதியனுப்ப வேண்டும் எனப் பணித்த கடிதம் எனக்குக் கிடைத்தபோது, பொழுது போக்குக்காக என் மேஜை விரிப்புக்கு வர்ண நூலினால் சித்திரம் பின்னிக்கொண்டிருந்தேன். கட்டுரை மிக அவசரமாகக் கேட்கப்பட்டபடியால், அதன் தலைப்பை உடனே நிச்சயித்துவிட வேண்டுமென்று கருதி, என் கையிலிருந்த ஊசியையும் நூலையுமே கட்டுரைக்குத் தலைப்பாக ஈந்துவிட்டேன். அதன் பிறகுதான், கட்டுரையின் பொருளைப்பற்றிச் சிந்தித்தேன். அவ்வாறு சிந்திக்கும்போது, என் தங்கை திடுமென என் அறையிற் போந்து, வாளா கிடந்த வானொலி பெட்டிக்கு மின்விசை ஏற்றி, திருச்சி நிலையத்தை வைத்தாள். யாரோ ஒரு புண்ணியவான் 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே' எனத் தொடங்கும் தனித் திருத்தாண்டகத்தின் ஈற்றடியாகிய 'காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே, காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே' என்பதை ஆனந்த பைரவி ராகத்தில் மிக உருக்கமாகப் பாடிக்கொண்டிருந்தார். உடனே என் கட்டுரைக்குப் பொருள் கிடைத்துவிட்டது. 'கேட்பித்தால் ஆரொருவர் கேளாதாரே' என வாய்க்குள் பாடிக்கொண்டே, ஈசனருளை நினைந்து எழுதத் தொடங்குகிறேன்.

* * * * *

சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தை எழுதும் போது மூவர் பெருமக்களின் அருளிச் செயல்களை எத்துணை மதித்துப் பொன்னேபோல் போற்றி, அவைகட்கு விளக்கந் தந்திருக்கிறாரென்பதை ஒல்லும் வகையில் பல தடவை எடுத்துக் காட்டியுள்ளேன். சிறப்பாக, சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநள்ளாற்றிலே தக்கேசிப் பண்ணில் பாடிய ஒரு திருப்பாட்டில், 'அற்புதப்பழ ஆவணம்' எனச் சொல்லிவிட்டுப் போக, அவர் வரலாற்றை எழுதப்புகுந்த சேக்கிழார், ஆவணத்தை மட்டுமன்றி, அது அற்புதமானதென்பதையும் காட்ட எடுத்துக்கொண்ட முயற்சிகளைச் சித்தாந்தம் 1954 மார்ச் இதழில் வெளிவந்த ஒரு கட்டுரையில் (பக்கம் 119-123) விளக்கினேன்.

இதுபோழ்து, நாவுக்கரசர் நல்லுரைகளை நமது தொண்டர்சீர் பரவுவார் எவ்வாறு நயந்து போற்றுகின்றாரென்பதை விளக்குவதே இக்கட்டுரையின் கருத்தாகும்.

"காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே?
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே!"

என்னும் தனித்திருத் தாண்டகத்தின் ஈற்றடியைக் கண்ணுதலான் கேட்பிக்க யான் கேட்டேனென்று சொன்னேனல்லவா?

இந்த அடி அன்பர் உள்ளத்தை அள்ளும் சிறப்புடையது. இத் தாண்டகத்தின் சிறப்பைக் கருதித்தான் போலும், மயிலை இளமுருகனார் அடங்கன் முறைப் பதிப்பில் (பக்கம் 978-பாட்டு 7175) இது முழுவதும் தடித்த எழுத்துக்களில் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. இக் கடைசி வரியை விளக்க அகராதியோ, நிகண்டோ தேவையில்லை. சான்றோர் கவியாதலால், அது மிகத் தெளிவாயிருக்கிறது.

சிவபோத முனைப்பினால், "யானே எல்லாவற்றையும் காண்கின்றேன்" எனத் தருக்கித் திரியும் அறிவிலிகட்கு நாவுக்கரசர் இப்பாட்டால் நல்லறிவு புகட்டுகிறார். யாதொரு பொருளையும் இறைவன் காட்டினால்தான் நாம் காணமுடியும். அதை நாம் பார்க்கலாகாதென அவன் திருவுளப்பாங்கு இருக்குமானால், நாம் எத்துணை முயன்றாலும் அதைக் காண இயலாது. "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்னும் தாயுமானாரது திருவாக்கும், "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்னும் மணிவாசகமும் ஈண்டுச் சிந்திக்கற்பாலன. சூரபதுமன் குமாரக் கடவுளின் பேருருவத்தைக் கண்டதும், அருச்சுனன் கண்ணபிரானின் விசுவரூபத்தைக் கண்டதும், அக்கடவுளர்கள் அளித்த விசேஷப் பார்வை ஆற்றலாலல்லவா?

இவ்வரிய கருத்து சேக்கிழாரது உள்ளத்தைப் பெரிதும் கவ்வியது. இதற்கு விளக்கந்தரும் ஒரு வாய்ப்புக்காக அவர் காத்திருந்தார். அவ்வாய்ப்பு கண்ணப்ப நாயனார் புராணத்தில் அவருக்குக் கிடைத்தது. கண்ணப்பர் வரலாறு சைவ மெய்யன்பர்கட்கு நன்கு தெரியுமாகலின், அதனை விரிவாகச் சொல்லும் செயலினை இங்கு மேற்கொள்ள மாட்டேன். சம்பந்தப்பட்ட இடத்தை மட்டும் சுட்டிக் காட்டுவேன்.

கண்ணப்பர் குடுமித் தேவருக்கு ஊன் படைத்தது முதலிய செயல்களைக் கண்ட சிவகோசரியார், அவற்றை அநுசிதம் எனக் கருதினார். மீண்டும் மீண்டும் இவை நிகழ்வன கண்டு மனம் சலித்துப் போனார். கண்ணப்பர் திருத்தொண்டினை ஆதி சைவ முனிவருக்குக் காட்டத் திருவுளங் கொண்டார் காளத்திநாதர். எனவே, இறைவன் முனிவர் கனவில் எழுந்தருளி,

"உனக்கவன்றன் செயல்காட்ட நாளைநீ ஒளித்திருந்தால்
எனக்கவன்றன் பரிவிருக்கும் பரிசெல்லாம் காண்கின்றாய்;
மனக்கவலை யொழிக"

எனக் கட்டளையிட்டார். அவ்வாறே சிவகோசரியாரும்,

" முன்னைநாள் போல்வந்து திருமுகலிப் புனல்மூழ்கிப்
பன்முறையும் தம்பிரான் அருள்செய்தபடி நினைந்து
மன்னுதிருக் காளத்தி மலையேறி முன்புபோல்
பிஞ்ஞகனைப் பூசித்துப் பின்பாக ஒளிந்திருந்தார் "

சிவலிங்கத்தின் பின்னாலேயே முனிவர் ஒளிந்திருந்தார் என சேக்கிழார் கூறும் செய்தியினை அன்பர்கள் நன்றாகக் கருத்திலிருத்திக் கொள்ளல்வேண்டும். பின்னால் இதைப்பற்றி யான் குறிப்பிட நேரிடும்.

நிகழ்ச்சிகள் வேகமாக நடக்கின்றன. கதையின் இறுதிக் கட்டத்துக்கு வந்துவிட்டோம். கண்ணப்பர் தமது எஞ்சிய கண்ணையும் அம்பின் நுனியால் பெயர்க்கப் போகிறார். இதைக் கண்ட தேவதேவர் தரித்திலராகிக் கண்ணப்பர் கையைத் தமது திருக்கரத்தால் பற்றிக் கொள்கிறார். இவ்வரிய காட்சியை சிவகோசரியார் கண்டாரென்பதைச் சேக்கிழார் உள்ளப் பரவசத்தோடு சித்தரிக்கும் அழகைப் பாருங்கள் :

" கானவர் பெருமானார்தங் கண்ணிடந் தப்பும்போதும்
ஊனமுதுகந்த ஐயர் உற்றுமுன் பிடிக்கும்போதும்
ஞானமா முனிவர் கண்டார்........."

என்பது சேக்கிழாரின் தெய்வத் திருவாக்கு.

எனவே, இறைவன் காட்டினார். சிவகோசரியார் கண்டார். " காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே " என்னும் தேவாரத்திற்கு இலக்காகத் திகழ்கிறார் சிவகோசரியார்.

அன்பர்களே, இதுகாறும் நாடகக் காட்சியின் ஒரு பக்கத்தைக் கண்டீர்கள். அதன் மறுபக்கத்தை இப்போது பார்க்கலாம் :

குடுமித் தேவரின் கண்ணொன்றில் குருதி வடிதலைக் கண்ட காளத்தி வேடர் தன்வசமிழந்தார் ; பதறிப் போனார் ! சீற்றமும், பரிபவமும் ஒருங்கே அவரை ஆட்கொண்டன. முதற்கண், வருத்தத்தைவிடச் சீற்றந்தான் மேலோங்கி நின்றது. யார் இந்த அடாத செய்கை செய்தார் எனச் சினந்து, வில்லும் அம்புங் கொண்டு அம்மலைப் பிரதேசமெங்கும் தேடினார். யாரும் அவர் கண்ணுக்குப் புலப்படவில்லை. அப்படிப் புலப்பட்டிருந்தால்......அதை எழுதவே என் கை கூசுகிறது. பிற்காலத்தில், ' பழியதனைப் பாராதே ' சுந்தரர் கண்களைப் படலத்தால் மறைத்த சிவபெருமான், இப்போது அடாதபழி விளையுமென்றஞ்சி, கண்ணப்பர் கண்களைப் படலத்தால் மறைத்துவிட்டார்போலும் ! இச் செய்தியைக் கூறும் சேக்கிழார் திருவாக்கு சுவைத்து இன்புறுதற்குரியது.

......தேறி 'யாரிது செய்தார் ?' என்று
எழுந்தனர் திசைக ளெங்கும் பார்த்தனர் எடுத்தார் வில்லும்
வாளியும் தெரிந்துகொண்டு 'இம் மலையிடை எனக்குமாறு
மீளிவெம் மறவர் செய்தார் உளர்கொலோ ? விலங்கின் சாதி
ஆளிமுன் னுகியுள்ள விளைத்தவோ ? அறியேன்' என்று
நீளிருங் குன்றச்சாரல் நெடிதிடை தேடிச் சென்றார்.
வேடரைக் காணூர் ; தீய விலங்குகள் மருங்குமெங்கு
நாடியுங் காணூர்..........

எனச் சேக்கிழார் சுவைபடக் கதை நடத்திக்கொண்டு போகிறார். எனவே இறைவன் காட்டவில்லை. கண்ணப்பர் காணவில்லை. "காண் பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே" என்னும் தேவாரத்திற்கு இலக்காகத் திகழ்கிறார் கண்ணப்பர்.

இறைவன் சிவகோசரியாரைக் கண்ணப்பருக்குக் காட்டாமைக்கு காரணம், அந்தணர் வேடரது அம்புக்கு இரையாகக் கூடாதே என்னும் கருணையே எனப் பலரும் சொல்வது வழக்கம். இஃது ஒப்புக் கொள்ளத் தக்கதே யாயினும், ஒரு ஸ்தூலமான காரணந்தான். சூக்கும காரணம் மற்றொன்றுளது. சிவகோசரியார் சரியை நெறியில் நின்று சாலோக பதமுத்தி யடைவதற்குத் தக்கவராயிருந்தார். கண்ணப்பரோ அந்நிலையைக் கடந்து, அன்பே உருவமாகி, கலப்பற்ற ஞான நெறிக்கண்" நின்றவராவார். இதனைச் சேக்கிழாரே தீஞ்சுவைத் தமிழில் சொல்வதைக் கேளுங்கள் :

" திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணுமுன்னே
அங்கணர் கருணை கூர்ந்த அருள்திரு நோக்கமெய்தித்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட்டகல நீங்கிப்
பொங்கிய ஒளியினீழற் பொருவிலன் புருவமானார்."

எனவே முத்தி நெறியில், சிவகோசரியார் கண்ணப்பரைக் கண்டு பயனடைதற்குரியவர். கண்ணப்பரோ, சிவகோசரியாருக்கு எட்டாத அதீத நிலையிலிருந்தமையால், அவரைக் கண்டு பெறும் பயன் யாதானுமில்லை. ஆகவேதான், வேடனை அந்தணருக்குக் காட்டிய சிவபெருமான் முன்னவருக்குப் பின்னவரைக் காட்டவில்லை.

இதுகாறுங் கூறியவாற்றால், பிரிவரிய ஊசி வழி பின்தொடரு நூல்போல, நாவுக்கரசர் சூத்திர வடிவமாக அருளிச் செய்த சொற்றொடருக்குச் சேக்கிழார் பெருமான், அதையொட்டித் தமது காவியத்தில் விளக்கக்கூறிய அருமையினை நேயர்கள் அறிந்து மகிழ்வார்களாக. ஊசி சிறிது, நூல் பெரிது. இத்தகைய இடங்கள் இன்னும் பல பெரிய புராணத்தில் உள்ளன. மேலே நூல் என்றது வெறும் பருத்தி நூல் மட்டுமன்று ; சேக்கிழாரது தெய்வத் திருநூலாகிய பெரிய புராணத்தையுங் குறிப்பதாகும்.

---

# திருமுறைகளில் இசை

சங்கீதம் ப. சுந்தரேசன், குடந்தை

திரு நெறிய தமிழ் மொழியாம் நம் தாய் மொழியில் உள்ள பன்னிரு திருமுறைகள் எனும் பனுவலில், திருஞான சம்பந்தர் அருளிய பாடல்கள் யாவும், பண், பாணியிற் (தாளத்தில்) பொருந்தப் பாடப் பெறுவதாகும். சுந்தரர் பாடல்களும் அவ்வாறே. நாவுக்கரசர் பாடல் களில், குறுந்தொகை, நேரிசை, விருத்தம், தாண்டகம் இந்நான்கு வகைப் பாடல்கள் நீங்கலாக மற்றப் பாடல்கள் யாவும் முற்கூறியவாறே பாடப் பெறுவனவாகும். திருவாசகப் பாடல்களிற் சில பாணியோடு பாடுதற்குரியனவாக இருந்தபோதிலும், சிறப்பாக அப்பாடல்கள் யாவும் ஆளத்தி முறையில் பாடப்பெறுவதே சாலச் சிறந்ததாகும்.

திருவிசைப்பாப் பாடல்கள் யாவும் பாணியுடன் பாடப்பெற்ருல் தான் அவைகட்குரிய பண்ணின் பெருமை பல விளங்கும். பல்லாண் டுப் பாடற்குரிய பண் பஞ்சமம் ஆதலால் பாணியுடன் பாடுவதே முறை. மூவர் பாடல்களில் இல்லாத சாளரபாணி எனும் பண் ஒன்று திருவிசைப் பாவில் இருப்பது அறியற்பாலது. பாடி எனும் (இராகத்தில்) பண்ணில் திருவிசைப்பாக்களைப் பாடுவதும் வழக்கென சிலர் கூறுவர். இன்றையத் தென்னிந்திய இசையில் மிக மிக அருகி விளங்கும் அந்தப் பாடிப் பண் இக்காலம் பதினைந்தாவது மேளமாகிய மாயா மாளவ கௌளையிற் பிறந்ததென எடுத்தல், சரிமபதபநிச் படுத்தல் ச் நிப தா ப ம ரீ ச எனும் உருவில் உளது.

பதினொராந் திருமுறையில் உள்ள பதிகம் இரண்டு பழைய நைவளப் (நட்டபாடை) பண்ணில் ஒன்றும் இந்தளப் பண்ணில் ஒன்றும் இருக்கின்றதே! அஃதிரண்டும் பாணியுடன் பாடுதற் குரியனவேயாம். இவை காலத்தால் முற்பட்ட மூத்த திருப்பதிகங்கள் ஆனமையினாலே பழைய (அடங்கன் முறை) பதிப்புகளில் முதலில் நட்டபாடைப் (கொங்கை திரங்கி) பதிகம் அச்சிடப்பெறும். இக்காலம் இவ்வழக்கு அருகிவிட்டதன்றோ! ஆகவே, பன்னிரு திருமுறைகளில், திருஞான சம்பந்தர் அருளிய திருப்பதிகங்கள் ஙஅச-ம் திருநாவுக் கரசர் அருளிய திருப்பதிகங்களில் உக-ம் சுந்தரர் அருளிய க00 பதிகங்களும், திருவிசைப்பாப் பதிகங்கள் உஅ-ம், திருப் பல்லாண்டுப் பதிகம் க-ம், காரைக்கால் அம்மையாருளிய மூத்ததிருப் பதிகங்களில் பண் பெயர் குறிக்கப்பட்டுள்ள இரண்டு பதிகங்கள் மட்டும், ஆக ருஙகூ பதிகங்கள் பண்பாணியுடன் அதாவது இராக தாளத்துடன் பாடப்பெறுவனவாகும். மற்றைய பாடல்களும் (யாவும்) இசையுடன் பாடுவதற்குரியன, ஆயினும். அவை வெறும் ஆளத்தி முறையில் அதாவது ஆலாபன முறையில் மட்டுமே பாடற்குரியனவாம்.

இனி இவற்றின் பண்களைப் பற்றி அறியலாம் :—பண்:— (1) நட்டபாடை, (2) தக்கராகம், (3) பழந்தக்க ராகம், (4) தக்கேசி, (5) குறிஞ்சி, (6) வியாழக் குறிஞ்சி, (7) மேகராகக் குறிஞ்சி, (8) யாழ் முரி, * (9) இந்தளம், (10) சீகாமரம், * (11) காந்தாரம், (12) பியந்தைக் காந்தாரம், (13) நட்ட ராகம், (14) செவ்வழி, (15) காந்தார பஞ்சமம், (16) கொல்லி, (17) கொல்லிக் கௌவாணம், (18) கௌசிகம், (19) பஞ்சமம், (20) சாதாரி, (21) பழம் பஞ்சுரம், (22) புற நீர்மை, (23) அந்தாளிக் குறிஞ்சி, * (24) செந்துருத்தி, (25) சாளரபாணி ஆக உரு பண்களில் அமைந்த திருப்பதிகங்கள் பண்பாணியுடன் பாடப் பெறுவன என்பதை நன்கு உணரலாகும்.

மேற்கூறிய பண்களின் திருமுறைப் பாடல்களைத் தமிழ்நாட்டில் பரம்பரையாகப் பாடிவருபவர்கள் பலர் உண்டு. அவர்களில் பெரும் பாலோர் அடிப்படையான இசைப் பயிற்சியும் அதில் ஆழ்ந்த உழைப்பும் இல்லதிருத்தலானும், மற்ற மக்களும் அன்னாரைக் குறிப்பிட்ட சில காலங்களில் மட்டுமே பயன்படுத்திக் கொண்டு மற்ற நாட்களில் கோயிற் சிற்றேவலாளர்களில் ஒருவகைக் கொண்டு பொருட்படுத்தாதிருந்து விட்டமையாலும், மேலும் ஒரு சிலர் உழைப்பாளிகளாக இருந்தால் அவர்களைத் தமிழ் மக்களே ஆதரிக்காமலும், கவலை கொள்ளாதும் இருந்து விட்டமையாலும் மேற்கண்ட பரம்பரையினர் ஏதோ பாடசாலைகளில் பாடங்கேட்ட முறையில் மனப்பாடமாகக் கற்று இக் காலம் வரை ஒரு வகையாகப் பாடி வருகின்றனர். எவ்வாறேனும் இவர்கள் பாடிய போதினும் மிகப் பழைய முறை ஒன்று இவர்களை யறியாமலேயே ஒட்டிக்கொண்டுளது. இஃதுமில்லாது போனல் திருமுறைப் பாடல்கள் யாவும் பாடப்பெறுவதா? படிக்கப் பெறுவதா? என்ற ஐயப்பாடன்றோ தோன்றக் கூடும்! நிற்க.

பழக்கத்தில் பாடுகின்ற முறை எவ்வாறாயினும் திருமுறைப் பாடல்கள் தூய தமிழ் மக்களிற் சிறந்த ஆன்றோர்களின் திருவாக்கு ஆதலால், பழந் தமிழ் மரபினை ஒட்டியே பாடப்பெற்ற அப்பாடல்களின் அமைப்பு முறை தமிழ் மொழி வழிவந்த தொன்றன்றோ?

ஆகவே தமிழ் மொழியின் தன்மையாகிய இயல், இசை, ஆடல், என்னென்ன உண்டோ, அவையேதான் திருமுறைகளிலும் இருக்க வேண்டும். அக்கருத்து பற்றியே, தமிழின் ஒரு கூறும் இசைத் தமிழ் எனும் பகுதியை ஆராய்ந்தறிந்தால் இப் பண்களின் இலக்கணம் நன்கு விளங்கிவிடக் கூடும். ஆனல் இசைத் தமிழாராய்ச்சியோ, தமிழைத் தமிழாகவே காண்பார்க் கன்றி மற்றோர்க்கு விளக்கம் பெறாத நிலையிற்றான் இருந்து வருமென்பதை நாம் காய்தலுவத்தலின்றி நன்கு உணரவேண்டும்.

* இவ்வகையில் வழிகாட்டிய பெருந்தகை அருட்டிரு விபுலாநந்த அடிகளாராவார். அவரடிச் சுவட்டினைப் பின்பற்றியும் அடியேனது

சிற்றறிவிற்கு எட்டியவளவில் ஆராய்ந்த முறையிலும் எனது இசைப் பயிற்சியின் துணை கொண்டும், நமது தெய்வத் திருமுறைகளில் செறிந்து நிற்கும் பண்களில் ஒருசிலவற்றிற்கு மட்டும், வழக்கில் உள்ள உண்மை, முதலியவற்றைக் கூறி மூன்று பண்களுக்கு மட்டும் அதன் இலக்கணத்தினை அறிந்த அளவில் எழுதத் தொடங்குகின்றேன். அறிஞர்கள் உண்மை காண்பார்களாக.

மிகப் பழைய இசைத்தமிழ் நலம் பல பொதிந்து கிடக்கும் சிலப் பதிகாரம் எனும் தனித் தமிழ் நூலின் உரையாசிரியருள் ஒருவர் அடியார்க்கு நல்லார் என்பார். அந்நூலில் இசைத்தமிழ்ப்பகுதிக்கு சில நுட்பவுரைகளை இடையிலே கூறும்பொழுது, அவற்றின் முத லிசையை நினைவு படுத்தும்பொருட்டு "இவற்றுள் முற்றோன்றியது தாரம் அது வந்த வழிக் கண்டு கொள்க" எனக் கூறுவார். அதாவது இசை ஏழில் முதலிசை தாரம் எனப்படும் என்பதாம். பழைய ப்பாணர்கள் யாழ்க்கருவியில் கட்டப்பெற்ற முதல் நரம்பிற்கு, தாரம் என்றே பெயரிட்டனர்.

தாரம் என்ற சொல் முதல் என்ற பொருளையும் தரும். அஃதெவ் வாறெனின், அச் சொல்லின் பகுதி தார் விகுதி அம்; ஆகும்.

> " தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
> போர்தாங்கும் தன்மை யறிந்து " —குறள்

தமருட் தலைப்பாதல் தார் தாங்கி நிற்றல் - புறப்பொருள் இங்கு தார் எனும் சொல் முதற் படையைக் குறிக்கும். ஆகவே தாரம் எனும் சொல் இசைத் தமிழில் முதல் இசையை (நரம்பை)க் குறிக்கும் என்பதாம். இக்கருத்தினை நமது ஞானசம்பந்தரும்

> " தக்க பூமனைச் சுற்றக் கருளோடே
> தாரம் உய்த்தது பாணர்க் கருளோடே "

எனக் கூறி அஃதும் பாணனார் பணி புரிந்த திருவாலவாய்த் திருவிய மகப் பதிகத்தில் திருவாய் மலர்ந்தருளி நம்மனோரை உய்த்துணர வைக் கின்றார். ஆனமையினாலே பழந் தமிழில் (இசையில்) தாரம் எனும் இசைத் தமிழ்ச் சொல் முதலிசையே என்பதனை நன்கறிந்துணரலாம். நிற்க.

பழைய முல்லை நில மக்களால் ஆக்கப்பட்ட வில் யாழ் எனுங் கருவியில் முதலில் ஐந்து நரம்புகளே கட்டப் பெற்றன. குழற் கருவியும் மிகப் பழங்காலத்தில் ஐந்து துளைகளுடனே இருந்ததாம். அவ்வைந்திசைகளையும் பழந் தமிழர்—தாரம் - குரல் - துத்தம் - உழை - இளி - எனக் கூறினர்கள். இந்நிரலே பழைய ஐந்திசைப் பண் களில் முதற்பண்ணுக்குரிய நிரலாகும். இம் முதற்பண்ணினை பழந் தமிழர் தாரம் என்ற பெயராலேயே குறிப்பிட்டனர். இந்த தாரப்

பண் இக்காலம் வரை நம்நாட்டில் (இசைத்துறையில்) சிறந்த முறையில் வழக்கில் இருந்துவருகிறது. தாரப் பண்ணின் இசைநிலை, அலகு நிலை வருமாறு :—

### தாரப் பண்

| இசைநிலை | தாரம் | குரல் | துத்தம் | உழை | இளி |
|---|---|---|---|---|---|
| அலகுநிலை | 0 | சு | அ | யிஉ | யிஎ |

இப் பண் இசைத் தமிழிற்கே அடிப்படையாக முதன் முதலில் தோன்றி ஐந்திசைப் பண்ணாக நின்று முதற் பண்ணாகவும் திகழ்ந்தமையால் ஆசான் திறம் - என்ற பெயரால் சிலப்பதிகார காலத்தில் விளங்கிற்றுதலால் அருந்தமிழாளர் இளங்கோவடிகளால் சிலம்பு புறஞ்சேரி யிறுத்த காதையில் "பாய்கலைப் பாவை பாடற்பாணி ஆசான் திறத்தின் அமைவுற" எனக் கூறப்பட்டது. இவ்விடத்தில் அரும்பத வுரைகாரர் "ஆசான்திறம் - காந்தாரம்" எனக் கூறி "ஆசான் என இசைத்தமிழில் ஒரு பண்ணிற்குப் பெயராகவும் கூறுப" எனக் கூறிப் போந்தார்.

இக்கருத்தினையும், உண்மையினையும் - வழக்கினையும் ஒருங்குணர்ந்த அடியார்க்கு நல்லாரெனும் பெரியார், இதே பகுதிக்கு "ஆசான் திறம் - காந்தாரம், ஆசானுக்கு அகச்சாதி காந்தாரம், புறச்சாதி சிகண்டி, அருகு சாதி தசாக்கிரி, பெருகு சாதி சுருதி - காந்தாரம்" என விரித்துக் கூறி "பண், பண்ணியற்றிறம் திறம், திறத்திறம் என்பன சம்பூரணம், சாடவம், ஔடவம், சதுர்த்தம் என வடமொழிப் பெயரானும் வழங்குப. அவற்றுள் இது திறங்கூறிற்று" எனவுங் கூறித் தெளிவு செய்கின்றார். என்னே ! உரையாசிரியர்களின் திறமை !

இக் கருத்துகளால், ஆசான்திறம் என்ற ஒரு பண்ணே காந்தாரம் எனப் பெயர் பெற்றது எனவும் அது திறம் எனவும் அதாவது (ஔடவம்), ஐந்திசைகளையே கொண்டது எனவும் நன்கு அறிந்து உய்த்துணரக் கிடக்கின்றது. ஆயினும், தாரப்பண்ணிற்கும் இதற்கும் என்ன தொடர்பு ? அதனைச் சற்று விளக்கலாம்.

யாழ்ப் பாடலின் வழி யெழுந்த தாரப்பண் கண்டப் பாடலில் அதனிசை நிலைகள் ஒவ்வொன்றும் தனக்கேயுரிய ஒவ்வொரு குறியீட்டு எழுத்தினையுடையதாதல் வேண்டும். முதலிசையாகிய தாரம், உயிர் எழுத்துக்களில் முதலெழுத்தாகிய 'அ' எனும் எழுத்தினையும், மெய் எழுத்துக்களில் முதலெழுத்தாகிய 'க' எனும் எழுத்தினையும், குறியீட்டு எழுத்துகளாகக் கொள்வது இயற்கை. க. அ. இவ்விரண்டும் கா என நின்று கா எனுங் குறியீட்டினையுடைய தாரம், கா+தாரம் காவாகிய தாரம், காவாந்தாரம் என, காத்தாரம் என வலிந்தும் காந்தாரம் என மெலிந்தும் நிற்கலாயிற் றென்பதாம்.

மேலே கண்ட கருத்துக்களால் பழைய இசைத்தமிழில் முதன் முதல் தோன்றிய ஐந்திசைப் பண்ணாகிய தாரப்பண் காலவகைக்கேற்ப ஆசான்திறம் எனப்பட்டு பின்னரும் குறியீட்டு எழுத்தினைக் காரண மாக் கொண்டு காந்தாரம் எனப் பெயர் பெற்றுள்ளது என நன்கு விளங்குவதைக் காணலாம். இத்தார ப்பண்ணின் இசைநிலைகளின் அலகு நிலைகளை அருட்டிரு விபுலாநந்தப் பெருந்தகையார் கணித முறையில் பிழையறக் கண்டு கூறியுள்ளார். அதனையே முன்னர் நாமும் அட்டவணையிற் குறித்தோம். அதனைக் கொண்டு இக்காலம் பழைய தாரப்பண் என்ன இராகம் எனக் காணலாம். இதனையும் அட்டவணைப்படுத்தி எழுதவேண்டும்.

| எண் | இசை நிலை | அலகு நிலை | தற்கால இசைப் பெயர்கள் |
|---|---|---|---|
| க | தாரம் | 0 | ஷட்ஜம் |
| உ | குரல் | ச | சதுச்ருதிருஷபம் |
| ங | துத்தம் | அ | அந்தரகாந்தாரம் |
| ச | உழை | ய௩ | பஞ்சமம் |
| ரு | இளி | யஎ | சதுச்ருதிதைவதம் |

இவ்வட்டவணைப்படி ஷட்ஜம் சதுச்ருதிருஷபம், அந்தரகந் தாரம், பஞ்சமம், சதுச்ருதிதைவதம் உள்ள ஔடவ (திறம்) ராகம் மோகனம் என வழங்கி வருவதை இக்கால இசைவாணர்கள் எல்லோ ரும் நன்கு அறிவர். ஆதலால், தேவாரத் திருமுறையில் உள்ள காந்தா ரப்பண் இக்காலம் மோகனராகம் என்பதை நன்கு அறியலாம். திரு வாசகம் பெரும்பாலும் மோகனத்தில் (காந்தாரத்தில்) பாடுவது வழக்கு என்பதனையும் இங்கு நினைவு கொள்ளலாம்.

மேலும் மேற்கண்ட இசை நிலையை குரல் முதலாகப் பாலையுரு விற் காண குரல், துத்தம், உழை, இளி, தாரம் என நிற்கும். இவற்றின் அலகு நிலைகள்.

| குரல் | துத்தம் | உழை | இளி | தாரம் |
|---|---|---|---|---|
| 0 | ச | கூ | ய௩ | யஅ |

இப்பண்ணிற்குப் பெயர் குறற்பண் எனப்பட்டது. இது ஏழிசை முறையில் செம்பாலையின் திறமாகக் கொள்ளப்பட்டு செந்திறம் என வும் கூறப்பட்டது. இதனைப் பிங்கலந்தை நிகண்டில் செந்திறம் (என் பது) செந்துருத்தி எனக் கூறப்பட்டது. இதனையும் அட்டவணைப் படுத்திக்காணலாம்.

| எண் | இசை நிலை | அலகு நிலை | தற்கால இசைப் பெயர்கள் |
|---|---|---|---|
| க | குரல் | 0 | ஷட்ஜம் |
| உ | துத்தம் | ச | சதுச்ருதிருஷபம் |
| ங | உழை | கூ | சுத்தமத்யமம் |
| ச | இளி | ிங | பஞ்சமம் |
| ரு | தாரம் | ிஅ | கைசிகிநிஷாதம் |

இவ்வட்டவணைப்படி ஷட்ஜம், சதுச்ருதிருஷபம், சுத்தமத்யமம், பஞ்சமம், கைசிகிநிஷாதம் எனநிற்கும் திறம் (ஔடவம்) மத்யமாவதி இராகமென இக்கால இசையுலகு நன்கறியும். இதனால் பழைய குரற் பண் (ஐந்திசைப் பண்களில் இரண்டாவது) செந்திறம் எனப்பட்டு, செந்துருத்தியாகி இக்காலம் மத்யமாவதி என விளங்குகிறது என நன்கு அறியலாம். ஏழாந் திருமுறையில் இன்றியமையாத ஒரு பதிகம் "மீளாவடிமை" செந்துருத்திப் பண்ணில் அமைந்ததாகும். மீளாவடிமை எனும் பாடல் இக்காலம் பாடிவரும் வழக்கில் மத்யமாவதி இராகமே யாகும். என்னே விந்தை!

இப்பண் மட்டும் இத்துணை நூற்றாண்டாக மாறுதல் இல்லாமல் அப்படியே இருப்பதற்குக் காரணம் என்ன? செந்துருத்திப் பண்ணில் திருமுறைகளில் ஒரே பதிகந்தானே இருந்து வருகிறது! அதனாற்றான் மாற்ற முடியவில்லை போலும்! மேலும் ஏதோ ஒரு சமயத்தில் தானே இப்பாடலும் பாடப்பெறுகிறது!

மேலும் மேற்கூறிய ஐந்திசைப் பண் முறை மூன்றாமிசையாகிய துத்தம். முதல் அட்டவணைப் படுத்தினால்

| எண் | இசை நிலை | அலகு நிலை | தற்கால இசைப் பெயர்கள் |
|---|---|---|---|
| க | துத்தம் | 0 | ஷட்ஜம் |
| உ | உழை | ரு | சாதாரண காந்தாரம் |
| ங | இளி | கூ | சுத்த மத்யமம் |
| ச | தாரம் | ிச | சுத்த தைவதம் |
| ரு | குரல் | ிஅ | கைசிகநிஷாதம் |

இவ்வட்டவணைப்படி ஷட்ஜம், சாதாரண காந்தாரம், சுத்தமத்யமம், சுத்த தைவதம், கைசிகநிஷாதம் என நின்ற திறம் (ஔடவம்) இக்காலம் இந்தோளம் எடுப்படுவதை இசைப் பெரும்புலவர் பலரும் அறிவர்.

இதுவே பழந்தமிழ் மக்களால் துத்தப்பண் எனக் கூறப்பட்டது. அன்றியும் இப்பண் முன்றோன்றிய தார முறையில் (ஐந்திசைப்பண் முறையில் அதாவது முதல்முறையில் தாரப்பண்ணாகிய ஆசான்திற

மெனும் காந்தாரம் நிற்க, இரண்டாம் முறையில் சூரற்பண்ணாகிய செந்திறம் எனும் செந்துருத்தி நிற்க, மூன்றாம் முறையில் துத்தப் பண்ணாகிய இந்தளம் என நின்றது. அதாவது முன்னிரண்டு பண்களும் பின்னிரண்டு பண்களும் நிற்க, இது இடையில் தளம்போன்று நிற்றலாலும், மேலும் சற்றுக் கூர்ந்தறிவோமாயின் நடுவே (திட்டு போன்று) துருத்தி (ஆற்றிடைக்குறை) போன்று நிற்றலாலும் (துத்தம், துந்தம், துருத்தி எனும் சொற்கள் ஒரு பொருட்கிளவி என ஆராய்ச்சியாளர் கூறுவதுபோல்) இந்தளம் எனப் பெயரிடப்பட்டது. இந்தளம் இந்தோளம் ஆயிற்று.

இதன் சீரிய பழைய இலக்கணத்தினை நம் தெய்வச் சேக்கிழார் பெருமானும்,

> "முறையால்வரு மதுரத்துடன் மொழியிந்தள முதலில்
> குறையாநிலை மும்மைப்படி கூடுங்கிழ மையினல்
> நிறைபாணியின் இசைகோள்புணர் நீடும்புகழ் வகையால்
> இறையான்மகிழ் இசைபாடினன் எல்லாம்நிக ரில்லான்"

என விதந்தோதினர். இப்பாடலுக்கு யாம் எழுதிய விரிவுரையினை, தருமபுர ஆதீன வெளியீடான ஞானசம்பந்தம் எனும் (10—6—55-ல் இருந்து) திங்கள் வெளியீட்டில் காணலாம்.

ஆகவே, பன்னிரு திருமுறைகளில் உள்ள பண்களில் காந்தாரம், செந்துருத்தி, இந்தளம் என்ற மூன்று பண்களும் மிகப்பழைய இசைத் தமிழிற்கு அடிப்படையாக முன்தோன்றிய தாரமுறையில் ஐந்திசைப் பண்களில் உள்ள மூன்று பண்களே என்பதும் அவை இக்கால இசையுலகில் நம் நாட்டிலேயே நம்மிடையே காந்தாரம் மோகனம் எனவும், செந்துருத்தி மத்யமாவதி எனவும், இந்தளம் இந்தோளம் எனவும் பெயரளவில் மட்டுமே மாறுபாடுற்று விளங்குகிறது என நாம் நன்கு அறிவோமாக.

வாழ்க இசைத் தமிழ்! வாழ்க திருமுறைகள்!! வாழ்க சிவநெறி!!!

## B. சாத்திரங்கள்

# “அவையே தானே ஆதல்”

வித்துவான் மு. அருணாசலம் பிள்ளை
*தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்*

இத்தொடர் சிவஞான போதம் இரண்டாம் சூத்திரத்து முதல் அதிகரணத் தொடராகும். இது, உலகிற்கு நிமித்தகாரணனாகிய முதல்வன், தன்பால் ஒடுங்கிய உலகத்தை உயிர்களின் பொருட்டு மீளத் தோற்றுவிக்குங்கால் அவ்வுயிர்களோடு ஒன்றாய் நிற்பனோ வேறாய் நிற்பனோ உடனாய் நிற்பனோ என்ற ஐயப்பாட்டின்கண், ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்பன் என்பதை வலியுறுத்தற்கு எழுந்ததாகும். இக்கருத்திற்கேற்ப இச்சூத்திரத் தொடரிலுள்ள ‘ஆதல்’ என்பதனை அவையே என்பதனோடும் இயைத்து, அவையே யாதல், தானே யாதல் என இரண்டு கூறாகவும், இரட்டுற மொழிதல் என்னும் நூற்புணர்ப்பால் மீட்டும் இத்தொடரை ஆற்றொழுக்காக அவையே தானே யாதல்என ஒன்றாகவும் வைத்துப் பொருள் கொள்ளல்வேண்டும். இங்ஙனங் கொள்ளுங்கால் இத்தொடர் அவையேயாதல், தானே யாதல், அவையே தானே யாதல் என மூன்றுவகைப்படுவதாகும்.

இவற்றுள், அவையேயாதல் என்பது, சங்கார காரணனாகிய முதல்வன், கலப்பினால் உடலின் உயிர்போல அவ்வுயிர்களேயாகி நிற்றலாகும். அஃதாவது, உடல் அழியாதிருத்தற்கு உயிர் அதனோடு கலந்து உடல் வேறு தான் வேறு என்னும் வேறுபாடின்றி அவ்வுடலேயாய் நிற்றல் போல, உயிர்கள் நிலைபெறுதற்கு முதல்வன் அவற்றோடு கலந்து உயிர்கள் வேறு தான் வேறு என்னும் வேறுபாடின்றி அவ்வுயிர்களேயாய் நிற்றல் என்பதாம். இஃது ஒன்றாய் நிற்றல் எனவும், அபேதம் எனவுங் கூறப்படும்.

தானேயாதல் என்பது, கண்ணின் ஞாயிறுபோலப் பொருட்டன்மையால் அவ்வுயிர்களின் வேறாதலாகும். அஃதாவது, கண் உலகப் பொருளைக் காணுதற்கு ஞாயிற்றின் ஒளி துணையாதல் வேண்டும். அதன் துணையில்லையேல் கண் ஒன்றனையுங் காணமாட்டாது. கண் காணுதற்கு ஞாயிறு துணையாய் நிற்பினும் ஞாயிறு வேறு, கண் வேறேயாம். அதுபோல, உயிர்கள் அறிதற்கு முதல்வன் துணையாய் நின்று அறிவித்தல் வேண்டும். அவன் அறிவித்தாலன்றி உயிர்கள் தாமாக

ஒன்றனையும் அறியமாட்டா. உயிர்கள் அறிதற்கு முதல்வன் துணையாய் நின்று அறிவித்தாலும் பொருட்டன்மையால் முதல்வன் அவ்வுயிர்களின் வேறே யாவன் என்பதாம். இது வேறாய் நிற்றலெனவும் பேதமெனவுங் கூறப்படும்.

அவையே தானேயாதல் என்பது, உயிர்க்குயிராதல் தன்மையால் கண்ணொளியின் உயிரறிவுபோல உடனாய் நிற்றலாகும். அஃதாவது, உடலின்கண் உயிர்கலந்து நிற்றலால் உண்டாய அறிவும், ஞாயிற்றின் துணைபெற்ற கண்ணொளியுஞ் சேர்ந்து ஒரு பொருளைக் காணும்போது, உயிரறிவானது கண்ணொளி வேறு, தான் வேறு என்னும் வேறுபாடின்றிக் கண்ணொளியோடு கூடி அப்பொருளிற் செல்லுமாறுபோல, உயிர்கள் இன்பத் துன்பங்களை நுகர்தற்கு முதல்வன் அவ்வுயிர்களுடன்கூடி, உயிர்கள் வேறு தான் வேறு என்னும் வேறுபாடின்றி உயிர்க்குயிராய் நின்று, அவ்வின்பத் துன்பங்களுக்குக் காரணமான விடயங்களில் உடன் செல்லுதலாகும். இஃது உடனாய் நிற்றலெனவும் பேதா பேதமெனவுங் கூறப்படும். இம்மூன்று நிலைகளும் முதல்வனுக்கும் உயிர்களுக்குமுள்ள அத்துவித நிலையை உணர்த்துவனவாம்.

வேதமானது 'பிரமம் அத்துவிதம்' எனக் கூறுகின்றது. அத்துவிதம் என்பதற்கு இரண்டில்லை யென்பதே பொருளாதலின் பிரமப் பொருளைத் தவிர இரண்டாவது பொருளில்லை யென்று கொள்ளுதல் வேண்டும். அவ்வாறன்றி முதல்வன் வேறு உயிர்கள் வேறு என இரண்டு பொருள்கள் உள்ளனவென்பதும், முதல்வன் அவ்வுயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்பன் என்பதும் பொருந்துவன ஆகாவெனின், அத்துவிதம் என்னும் சொல்லுக்குப் பொருள் கொள்ளுதலிற் கருத்து வேறுபாடு உண்டு. அச் சொல்லின் உண்மைப் பொருள் இன்னதென அறிந்துகொண்டால் இத்தடை யெழுதற்கு இடன் இல்லையாகும். ஆதலின் அச் சொற்குப் பிறர் கூறும் பொருளும், அப்பொருளை விளக்குதற்கு அவர்கள் எடுத்தாண்டுள்ள உவமைகளும் பொருந்தாமை காட்டி, அப்பால் அதன் உண்மைப் பொருள் காண்போம்.

அத்துவிதம் என்னும் வடசொல், ந - துவிதம் என்னும் இரண்டன் புணர்ப்பால் ஆயது. இவற்றுள் முன்னின்ற நகர வுயிர்மெய், தன்முன் உயிர்முதல் மொழிவந்தால், ந் - அ, எனப் பிரிந்து, அந் - என மாறி, வருமொழி முதலிலுள்ள உயிரேற இடங்கொடுத்து நிற்கும். எடுத்துக்காட்டாக அநகன் என்ற சொல்லைக் கொள்ளலாம். இச்சொல், ந - அகன் ; ந - அ, அகன் ; அந் - அகன் ; அநகன் என்றாயது. அநங்கன், அநுசிதம் முதலான சொற்களும் இவ்வாறு புணர்ந்தனவேயாம். இனி மெய்ம் முதல் மொழிவந்தால் நகர மெய் கெட்டு அகரம் மாத்திரமாய் நின்று, ந - களங்கன், அகளங்கன். ந - பயன், அபயன் எனப்புணர்ந்து நிற்கும். ஈண்டு வருமொழியாகிய

துவிதம் என்பது மெய்ம் முதல்மொழி யாதலின் ந - துவிதம் என்னும் இரண்டும் சேர்ந்து அத்துவிதம் என்றாயிற்று. இந் நகரம், இன்மை அன்மை மறுதலையாகிய பல பொருளுணர்த்தும். அவற்றுள் இன்மைப் பொருள்பற்றி இரண்டு இல்லை யெனக்கொண்டு, பிரமப் பொருளைத் தவிர வேறு பொருளில்லை ; பொன்னும் பணியும் போல முதல்வனும் உயிரும் அபேதமே யென்பர் கேவலாத்துவிதிகள் என்னும் ஏகான்மவாதிகள்.

இனி, அத்துவிதம் என்னும் அச்சொல்லுக்கு அநீதி, அதன்மம் என்றாற்போல மறுதலைப் பொருள்கொண்டு முதல்வனும் உயிர்களும் இருளும் வெளியும் போலப் பேதமே யென்பர் துவைத வாதிகள் என்னும் மாத்துவர். அநீதி யென்பது நீதியின் மறுதலை. நீதி யென்பது ஒன்று இருந்தாலன்றி அநீதியென்ப தொன்று இல்லையாய் முடியும். எனவே மறுதலைப் பொருள் கொள்ளுங்கால் நீதியும் உண்டு அநீதியும் உண்டு என்பது பெறப்படும். அதன்மம் என்பதும் இத்தன்மையதே. இவ்வாறே அத்துவிதம் என்ற சொல்லுக்கு மறுதலைப் பொருள்கொண்டு, துவிதமும் உண்டு அதன் மறுதலையாகிய ஏகமும் உண்டு ; அஃதாவது உயிர்களும் உண்டு முதல்வனும் உண்டு. இரண்டும் இருளும் வெளியும் போலப் பேதமே யென்பது இவர்கள் கருத்து.

விசிட்டாத்துவிதிகள் என்னும் வைணவர்களும் ஏகான்ம வாதிகளைப் போலவே அத்துவிதம் என்பதற்கு இரண்டில்லை யென இன்மைப் பொருளே கொண்டு, கடவுள் ஒன்றே ; இரண்டில்லை யெனவும், ஆனால், உயிரும் உலகமும் உண்டு ; அவை பல ; அவையெல்லாம் அக் கடவுளின்பால் அடங்கி நிற்கும் எனவுங் கூறுவர். இவர்கள் கடவுளின் வேறாக உயிரும் உலகமும் உண்டு என்றதனாற் பேதமும், அவை கடவுளின்பால் அடங்கிநிற்கும் ; தனித்து நில்லா என்றதனால் அபேதமுங்கொண்டு, இப்பேதா பேதக் கொள்கைக்குச் சொல்லும் பொருளும் உவமையா மென்பர்.

இம் முத்திறத்தார் கொள்கைகளையும் அவர்கள் காட்டும் உவமை வாயிலாக நோக்குவாம்.

## அபேதவாதமும் பொற்பணியுவமையும்

பொன் என்னுஞ் சொல் குறிக்கும் பொருள் வேறு. பணி (அணிகலம்) யென்னுஞ் சொல் குறிக்கும் பொருள்வேறு. அது போலப் பிரமம் என்னுஞ் சொல் குறிக்கும் பொருள் வேறு. உயிர் என்னும் சொல் குறிக்கும் பொருள் வேறு. ஆயினும், பொன்னையின்றிப் பணிகள் என வேறில்லாமைப் போலப் பிரமப் பொருளையின்றி உயிர்களென வேறில்லை. பொன் ஒன்றே பல அணிகளாயினாற் போலப் பிரமப் பொருளொன்றே பலவுயிர்களாயின. ஆதலின் இரண்டும் ஒன்றே யென்பது ஏகான்மவாதிகள் கொண்டமுடிபா

கும். இம் முடிபு பொருந்தாது. எவ்வாறெனில், பொன் தானே பணியாதல் இல்லை ; பிறன் ஒருவனுற் பலவாறு சிதைத்துப் பல்வேறு பணிகளாகப்படுகின்றது. இவ்வுவமை கொள்ளின் பிரமப் பொருளின் முழுமுதற்றன்மைக்கு இழுக்காகும். மேலும், பொன்னின் நிறம் குணம் முதலிய தன்மைகளெல்லாம் பணிகளிற் காணப்படுதல் போன்று பிரமப் பொருளுக்கு உரிய முற்று முணர்தல் வரம்பில் ஆற்றல் தன்வயம் உடைமை முதலான பண்புகளெல்லாம் உயிர்களின்கட் காணப்பெறுதலும் வேண்டும். வினைக்கீடாகப் பிறந்தும் இறந்தும் இன்பத் துன்பங்களை நுகர்ந்து உழலும் உயிர்களின்பால் முற்றுமுணர்தல் முதலான குணநலங்கள் இல்லையென்பதை நாளுங் கண்கூடாக் காண்கின்றோம். இவ்வாறாகவும், உண்மை அறிவு இன்பவடிவாக விளங்கும் பிரமப் பொருளை ஆணவ முதலிய அழுக்குக்களோடு கூடிய உயிர்களாகக் கூறுதல் கழுவாயில்லாததோர் வழுவுமாகும். ஆதலின், முதல்வனும் உயிர்களும் அபேதமேயென்றலும், அதற்குப் பொற்பணியுவமை கூறுதலும் பொருந்தாவாம்.

## பேதவாதமும் இருள்வெளியுவமையும்

(ஈண்டு வெளியென்றது ஒளியைக் குறிப்பதாகும்)

இருளும் வெளியும் போல முதல்வனும் உயிர்களும் பேதமேயென்ற துணிபுடையவர்கள் துவைதவாதிகள். இவர்கள் கூறும் இருள் வெளியுவமையால் முதல்வன் வேறு உயிர்கள் வேறு என்பது பெறப்படுமாயினும், உவமையின் இயல்புகளோடு முதல்வனுக்கும் உயிர்களுக்கும் உள்ள இயல்புகள் முற்றும் மாறுபடுவனவாம். எவ்வாறெனில், இருள் உள்ளவிடத்து ஒளியும் ஒளியுள்ளவிடத்து இருளும் ஒருபோதும் இருத்தல் இல்லை. இவ்விரண்டும் ஒன்றற்கொன்று பகைப் பொருள்களாகும். மேலும், ஒளியால் இருள் மாய்ந்துபோம். இவை உவமத்தின் இயல்புகள். இதுபோல் முதல்வன் உள்ளவிடத்து உயிர்கள் இல்லை யென்றாதல் உயிர்கள் உள்ளவிடத்து முதல்வன் இல்லை யென்றாதல் கூறுவது பொருந்தாது. இவ்விரண்டும் நட்புடையன. முதல்வன் அருள் பெற்றுப் பேரின்பப் பெரு வாழ்வு வாழவேண்டுவது உயிர். ஆதலால் முதல்வனும் உயிர்களும் இருளும் வெளியும் போலப் பேதமே யென்றலும் பொருத்த முடையதன்று.

## பேதாபேதவாதமும் சொற்பொருளுவமையும்

முதல்வனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பு பேதாபேதமே யென்றும், அதற்குச் சொல்லும் பொருளும் உவமையா மென்றுங் கூறுவர் விசிட்டாத்துவிதிகள். சொல்லும் பொருளும் வேறாயிருப்பினும் ஒரு சொல்லைக் கூறும்போது அதன் பொருளும் உடன் தோன்

றுதல் போல, முதல்வனும் உயிரும் வேறாயினும முதல்வனைக் கூறும் போது அவனது நிறைவின்கண் அடங்கியுள்ள உயிர்களும் உடன் தோன்றும் என்பது இவர்கள் கருத்து. இக்கருத்தும் பொருத்த முடையதன்று. எவ்வாறெனில், சொல் இருக்குமிடம் வேறு. பொரு ளிருக்கும் இடம் வேறு. அஃதாவது, தாமரை யென்ற சொல் இருக்கு மிடம் வாய். அச்சொல்லாற் குறிக்கப்பெறும் பொருள் இருக்குமிடம் ஒரு நீர்நிலை. இவ்வுவமை வேறாயிருத்தற்குப் பொருந்துமன்றி ஒன் றாயும் இருத்தற்குப் பொருந்தாது. இவ்வுவமையைக் கொள்வதாயின் முதல்வன் இருக்குமிடம் வேறு, உயிர்கள் இருக்குமிடம் வேறு எனக் கொள்ளுதல் வேண்டும். கொண்டால் முதல்வனையின்றியும் உயிர்கள் தனித்திருக்குமென்பது பெறப்பட்டு முதல்வனது முழு நிறைவுக்கு இழுக்காய் முடியும். முதல்வன்பால் உயிர்கள் அடங்கி நிற்பன ஆதலின் வேறாதல் இல்லை ; அபேதமே யெனின், அங்ஙனம் அபேதங்கொள்ளின், அவ்வுயிர்கள் எய்தும் இன்பத் துன்ப நுகர்ச்சி முதலியவெல்லாம் முதல்வனுக்கும் உண்டு என்னல்வேண்டும். எனவே முதல்வனுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு பேதாபேதமே யென்ற லும், அதற்குச் சொற்பொருளுவமை கூறுதலும் பொருந்தாவாம்.

இங்ஙனம் முதல்வனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பு பற்றி ஒவ்வொன்றே கூறும் பிறசமயக் கோட்பாடுகள் குறைபா டுடையனவாதல் கண்டு அவற்றை விடுத்து, அத்துவிதம் என் னும் சொல்லுக்கு இரண்டு அன்று என அன்மைப் பொருள் கொண்டனர் சுத்தாத்துவித சித்தாந்த சைவர்கள். முதல்வனும் உயிர் களும் பொருட்டன்மையால் வேறு வேறாயினும், கலப்பினால் ஒன்றே யாம். இரண்டு பொருள் கலப்பினால் ஒன்றுபட்டிருத்தலைக் குறிப் பதற்கே வேதம் அத்வைதம் எனக் கூறிற்று. அவ்வாறன்றிப் பொருள் ஒன்றாகவேயிருப்பின், இன்மை முதலிய பல பொருள் தந்து ஐயம் விளைப்பதாய அத்வைதம் என்னும் சொல்லாற் கூறாமல் "பிரமம் ஏகம்" எனத் தெளிவுபடக் கூறியிருக்கும். அன்றியும், முதற்பொருள் ஒன்றேயுள்ளதாயின் அது தன்னைத்தானே அத்துவிதம் (ஒன்று) எனக் கூறிக்கொள்ளுதல் பயனில் கூற்றாம். பிறர்க்குப் பயன்படவே கூறிற்று எனின், அப்பயன் அடையும் உயிர் வேறு இருத்தல்வேண் டும். மேலும், எண்ணுப் பெயர் மேல்வந்த நகரம், ந - ஏகம், அநேகம் ; ஒன்று அல்ல என அன்மைப் பொருளுணர்த்திப் பொதுமையில் நிற்பதன்றி, அப்பிரகாசம் அநீதியெனப் பிறபெயர்கள் மேல்வந்த நகரம் போல இன்மை மறுதலைபாகிய பொருள் உணர்த்துதல் வழக் கின்கண் இல்லை. ஆதலால், துவிதம் என்ற எண்ணுப் பெயர்மேல் வந்த நகரம், இரண்டு அன்று என அன்மைப் பொருளே உணர்த்து மென்பது சித்தாந்த சைவர்கள் கொண்ட முடிபாகும். இம்முடிபிற் கேற்ப ஒன்றாதல் வேறாதல் உடனாதல் ஆகிய மூன்று இயல்புகளையும் இவர்கள் காட்டும் திருட்டாந்தங்களின் வாயிலாக இனிக் காண்போம்.

## ஒன்றாய் நிற்றல்

முதல்வன் உயிர்களோடு ஒன்றாய் நிற்றல், உடலின்கண் உயிர் போல்வதாகும் என்பது மேலே கூறப்பட்டது. அவ்வுவமையின் பொருத்தத்தை மீண்டும் நோக்குவாம். உயிரானது எழுவகைத் தாதுக்களாற் கட்டப்பட்ட உடம்பினையும், ஐம்பொறி முதலிய கருவிகளையும் பற்றி நிற்கும். அங்ஙனம் நிற்கும்போது அவ்வுயிரோடு கூடிய உடம்பிற்குச் சாத்தன் கொற்றன் முதலிய பெயர்களுள் ஒன்று இடப்படும். அப்பெயர் உடம்பிற்கு இடப்பட்டதேயன்றி உயிருக்கு இடப்பட்டதன்று. உடம்பிற்கிட்ட அப்பெயரால் சாத்தா எனப் பிறனொருவன் அழைத்தவழி அவ்வுயிர் என்ன? என்று கேட்கிறது. அதற்குக் காரணம் உயிர், தான் வேறு உடல் வேறு என்னும் வேறுபாடின்றி அவ்வுடலோடு கலந்து நிற்றலேயாகும்; பிறிதில்லை. அவ்வாறு கலந்து நிற்பினும் உயிர் உயிரே; உடம்பு உடம்பேயாம். அஃதாவது உயிர் அறிவுடைப் பொருளே. உடம்பு அறிவில் பொருளே என்பதாம். உயிர் உடம்பாகமாட்டாது. உடம்பு உயிராகமாட்டாது. எனினும், உயிர், உடலை நான் என்பதனால் உடம்பாயும், என்னுடல் என்பதனால் உடம்பின் வேறாயும் நிற்கும். உடம்பு உயிராகவும் நில்லாது. அதனைப் பிரிந்து வேறாகவும் நில்லாது. அதுபோல, முதல்வன் உயிர்களுடன் கலந்து நிற்பன் ஆயினும் முதல்வன் முதல்வனே (முற்றுணர்வுடையவனே); உயிர் உயிரே (சிற்றறிவுடையதே). முதல்வன் உயிராகமாட்டான். உயிர் முதல்வனாகமாட்டாது. எனினும், முதல்வன் உயிர் நிலைத்தற்காக அதனுடன் கலந்து நிற்றலால் உயிராயும், உயிருக்கு அறிவித்தலால் அதனின் வேறாயும் நிற்பன். உயிர் முதல்வனாகவும் நில்லாது அவனின் வேறாகத் தனித்தும் நில்லாது. இவ்வியைபுகளால் உடலின் உயிர் என்ற உவமை நன்கு பொருந்துமாறு காணலாம். இஃது ஒன்றாய் நிற்பினும் ஒன்றாதல் இல்லையென்பதனையும் புலப்படுத்து நிற்றல் உணரத்தக்கது.

## வேறாய் நிற்றல்

வேதம், அத்துவிதம் என்றதுமன்றிப் 'பிரமம் ஏகம்' எனவும் ஓதுதலால் அதற்குமாறாக உயிர்கள் வேறு உண்டெனக் கொள்ளுதலும், அவ்வுயிர்களோடு முதல்வன் ஒட்டி ஒன்றாய் நிற்பன் எனக் கூறுதலும் பொருந்தாவெனின், ஏகம் என்ற சொல்லுக்குப் பொருள் ஒன்று என்பதே, பிரமம் ஏகம் என்றதன் கருத்துப் பதிப்பொருள் ஒன்றே; இரண்டில்லையென்பதேயாம். இக்கருத்துணராது பதிப்பொருள் ஒன்றேயுள்ளது. உயிர் முதலிய பொருள் வேறொன்றுமில்லையென்று கூறுதல் பொருந்துவதன்று. மேலும், பதிப்பொருள் ஒன்றேயென்று கூறுகின்றவன் ஒருவன் உளன். அவன் அப்பதிப் பொருளின் வேறாகிய பசு எனப்படுவன் என்று அறிதல் வேண்டும்.

பதியும் அறிவுடைப் பொருள். அதனை அறிகின்றவனும் அறிவுடைப் பொருளே. அவனைப் பசு என்றல் பொருந்தாது எனின், அவன் பாசத்தோடு கூடி நிற்றலாற் பசு எனப் பட்டனன் என்பதாம். இவ்வாறு வேற்றுமை கூறுதல், பிரமம் இல்லையாயின் வேறொரு பொருளுமில்லை யென்னும் மறைமொழியோடு மாறுபடுமேயெனின், மாறுபடாது அகரஉயிரும் அதனையொழிந்த எழுத்துக்களும் வெவ்வேறாகவுள்ளன, அகரம் முயற்சி விகாரத்தானன்றி வாயைத் திறந்த அளவில் இயல்பாகிய நாத மாத்திரையானே பிறப்பது. பிற எழுத்துக்களெல்லாம் வேறு வேறான முயற்சி விகாரங்களாற் பிறப்பன. ஆயினும், வாயைத் திறவாதபோது இவ்வெழுத்துக்கள் நம் செவிப்புலனுக்குக் கேட்குமாறு எழுத்தொலிகளாய்த் தோன்றுதல் இல்லை. வாயைத் திறந்து உச்சரித்த பின்பே தத்தமக்கு உரிய முயற்சி வேறுபாட்டால் எழுத்தொலிகளாய்த் தோன்றுகின்றன. இதனால் வாயைத் திறந்த அளவில் தோன்றும் அகரவொலி பிற எழுத்தொலிகளோடு கலந்திருக்கின்றதெனக்கொண்டு, அகரவுயிர் இல்லையாயின் அக்கரங்களில்லை யெனக் கூறுவர். அதுபோல, எங்கும் நிறைந்துள்ள பதிப்பொருளின் நிறைவுக்குள் உயிர்கள் அடங்கி நிற்றலைக் கொண்டு பதிப்பொருள் இல்லையாயின் ஒருபொருளும் இல்லையென வேதங் கூறிற்று. அவ்வளவே யன்றி இரண்டாவதாக ஒரு பொருளும் இல்லையென்றல் அதன் கருத்தன்று. இதனால், பதிப்பொருளின் வேறாக உயிர்கள் உண்டென்றலும், அவ்வுயிர்களோடு பதிப்பொருள் ஒன்றாய் நிற்றலேயன்றிப் பொருட்டன்மையால் வேறாய் நிற்றலும் உண்டெனக் கொள்ளுதலும் பொருந்தும் என்க. முதல்வனும் உயிரும் வேறாதலையுணர்த்தும் இவ்வுவமை வேறு அன்றாதலையும் உணர்த்தி நிற்றல் நினைவிற் கொள்ளத்தக்கதாம்.

## உடனாய் நிற்றல்

வேதம், பிரமப்பொருளை ஏகமென்றும், அத்துவிதமென்றும் கூறுகின்றது. அவற்றுள் ஏகம் என்பதற்குப் பிரமப்பொருள் ஒன்றே யென்று பொருள் கொண்டால், அத்துவிதம் என்பதற்கும் இரண்டில்லை ஒன்றே என்று பொருள் கொள்ளுதலே பொருத்தமாகும். அவ்வாறன்றி, ஏகம் என்பதற்கு ஒன்றென்றும் அத்துவிதம் என்பதற்கு இருபொருளின் கலப்பென்றும் பொருள் கொள்ளுதல் வேதத்தொடு முரணுமெனின், முரணாது. எவ்வாறெனின் பண்ணும் அதனோடு பிரிப்பின்றி நிற்கும் ஓசை போலவும், பழமும் அதனோடு பிரிப்பின்றி நிற்கும் சுவை போலவும் எங்கும் நிறைந்துள்ள முதல்வன் திருவருள் உயிர்களோடு பிரிப்பின்றி நிற்கும். இவ்வாறு பிரிப்பின்றி நிற்றலை யுணர்த்துதற்கு அத்துவித மென்னும் பிரமப் பொருள் ஒன்றே; இரண்டில்லை. என்பதை யுணர்த்துதற்கு ஏகமென்றும் வேதங் கூறினமையால் அவை தம்முள் முரணுமாறில்லை. ஈண்டு உடனாய் நிற்றலாவது, முதல்வன் திருவருள் எங்கும் நிறைந்

திருத்தலால் உயிர்கள் செல்லுமிடமெல்லாம் தான் செல்லாமல் நின்றாங்கு நின்றே ஆங்காங்குள்ள உயிர்களோடு பிரிப்பின்றி நிற்றலாகும். இதனால், இஃது உடன் ஆகாமையையும் உணர்த்துதல் நோக்கத்தக்கது. மேலே கண்ணொளியின் உயிரறிவு என்றதும், ஈண்டுப் பண்ணும் ஓசையும் என்றதும் உடனாய் நிற்றற்குச் சிறந்த உவமைகளாகும்.

ஒன்றாய் நிற்றல் வேறாய் நிற்றல் உடனாய் நிற்றல் ஆகிய மூன்றற்கும் வேறு வேறு உவமை கூறுதல் பல முடிபுகளை யுடையது என்னுங் குற்றமாகும் எனின், அக்குற்றம் வாராமைப் பொருட்டு ஒருமையில் வைத்தே ஆசிரியர் மெய்கண்டார் விளக்கியும் இருக்கின்றார். அஃது எவ்வாறெனின், அரக்கை உருக்கி, உருக்கப்பட்ட அவ்வரக்கினோடு கற்பொடியைச் சேர்த்தால் அக்கற்பொடியானது அவ்வரக்கினோடு ஒன்றாய்க்கூடி நீக்கமின்றி நிற்கும். அதுபோல, முதல்வனும் உயிர்களோடு கூடி நீக்கமின்றி உடனாய்நிற்பன். உருக்கிய அரக்கினொடு சேர்த்த கற்பொடி பிரிக்க முடியாமையால் ஒன்றாயும், பிரிக்க முடியாதாயினும் கற்பொடியெனத் தோன்றுதலால் வேறாயும், அரக்கு முழுதும் கற்பொடி காணப்படுதலால் உடனாயும் நிற்குமாறு போல, முதல்வன் உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் அத்துவிதமாய் நிற்றலை இவ்வுவமை யொன்றனால் விளக்கியிருத்தல் கூர்ந்து நோக்கி யின்புறற் பாலதாம்.

முதல்வனும் உயிரும் பேதமே யென்றும் அபேதமே யென்றும் பேதாபேதமே யென்றுங் கூறிப் பிணங்கும் பிறசமயக் கொள்கைகளை மறுத்து, அம்மூவகை நிலையும் முதல்வனுக்கு உண்டு என்பதைப் புலப்படுத்தும் 'அத்துவிதம்' என்ற சொல்லின் உண்மைப் பொருளை "அவையே தானே யாதல்" என்ற ஒரு சிறு தொடராலும் எடுத்துக் காட்டுக்களாலும் மெய்கண்ட தேவர் விளக்கியிருக்குந் திறன் அறிந்து போற்றுதற்குரிய தொன்றாகும். இவ்வருமைப்பாடு குறித்தன்றே "பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித, மெய்கண்டார்" என அவர் பாராட்டப் பெறுவாராயினர்.

வழிநூலாசிரியரும் "பொற்பணி போல் அபேதப் பிறப்பிலதாய் இருள் வெளிபோற் பேதமும், சொற்பொருள்போற் பேதா பேதமுமின்றிப் பெருநூல் சொன்ன அறத்தினால் விளைவதாய், உடலுயிர் கண்ணருக்கன் அறிவொளிபோற் பிரிவரும் அத்துவிதமாகும் சிறப்பினதாய், வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்" என்று மேற்கூறிய கருத்துக்களை வலியுறுத்தி யிருத்தல் அறிந்து கடைப் பிடித்தற்குரியதாகும்.

மெய்கண்ட தேவர் திருவடி வாழ்க !

# உலக வழக்கிலும் ஆணவம் ஆளப்படுகின்றதே

வித்துவான் - ஆ. சிவலிங்கனார், விரிவுரையாளர்,
ஸ்ரீமத் சிவஞானபாலைய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி, மயிலம்

ஓரு கிராமத்தில் ஒரு நெசவாளர் குடும்பத்தில் ஒரு தாய் இராட்டையில் நூல் சுற்றிக்கொண்டிருந்தாள். அந்நூலின் தொகுதி (சிட்டை) இரண்டு முழத் தொலைவில் இருந்த ஆலை என்ற கருவியில் மாட்டப்பட்டிருந்தது. அவ்வாலையிலிருந்து இராட்டையில் உள்ள டப்பியில் (சோடு) அந்நூல் சுற்றப்பட்டது. எனவே ஆலையிலிருந்து இராட்டையில் உள்ள டப்பிக்கு நூல் வந்துகொண்டிருந்தது. குடும்பத் தலைவி அதனைச் சுற்றிக்கொண்டிருந்தபோது அவள் மூன்று வயதுடைய ஆண்குழந்தை ஆலைக்கும் இராட்டைக்கும் இடையில் குறுக்கே ஓடினான். அதனால் நூல் அறுந்தது. அதைக்கண்ட குழந்தை சிரித்துப் புதிய விளையாட்டைக் கண்டுவிட்டதாக மகிழ்ந்தான். தாய் நூல் அறுந்ததைக் காட்டி, 'இனி இவ்வாறு குறுக்கே ஓடாதே' என்றுகூறி நூலை இணைத்து மீண்டும் சுற்றினாள். குழந்தை சிரித்துக்கொண்டே மீண்டும் அவ்வாறு குறுக்கே ஓடினான். நூல் அறுந்தது. தாய் சினந்து கூறிப் பின் இணைத்துச் சுற்றினாள். குழந்தையானவன் சினந்து கூறியதையும் பொருட்படுத்தாமல் தன் போக்கிலேயே மறுபடியும் குறுக்கே ஓடினான். நூலும் அறுந்தது. அதுவரையிலும் தாயுடன் பேசிக்கொண்டு பக்கத்திலிருந்த அடுத்த வீட்டுப் பாட்டி, இடையிடையே அவனைக் கடிந்துகூறியும் கேளாமையால், தாயைப் பார்த்து 'என்னடி! உன் மகன் இப்படித் துள்ளுகிறானே?' என்றாள். உடனே தாய், 'அது ஆணவம்கொண்டு அழியுது' என்று பதில்கூறிக் குழந்தையை ஓரடி கொடுத்து நிறுத்தி, நூலை இணைத்துச் சுற்றினாள். அடிபட்ட குழந்தை தன்செயலை விட்டு அழுதான். தாயும் மனமிரங்கி அவனை அருகில் அழைத்து அணைத்துக்கொண்டு ஆறுதல் கூறினாள். இவர்கள் வீட்டிற்கு ஓர் அலுவலைமுன்னிட்டுச் சென்றயான் இவற்றைக் கவனித்தேன். தாய் சொன்ன ஆணவம் என் மனதில் ஒலித்தது—ஒலித்துக்கொண்டேயிருக்கிறது. அதன் இலக்கணத்தை எண்ணிப் பார்த்தேன். அதன் விளக்கமே இக்கட்டுரை.

முதலில் குறுக்கே ஓடியபோது குழந்தைக்கு நூல் அறும் என்ற உணர்வு இல்லை. அறுந்தது கண்டதும் அதையே தன் விளையாட்டுக்குக் காரணமாகக் கொண்டான். பின் தாய் சமாதானமாகச் சொல்லியும் சினந்து சொல்லியும் கேட்கவில்லை. முடிவில் அடிபட்டான். தன் செயலையும் விட்டான். இக் குழத்தையைத் தாய், 'ஆணவம் பிடித்து

அழிகிறது'' என்றாள். இதனால் ஆணவம் என்பது, அறியாமையுடையது; (அதாவது தானே யறியாதது—இன்னும் விளக்கமாகக் கூறின் தான் தொழிற்பட்டால் வினையும் பின்வினைவையும் அறியாதது என்னலாம்.) அறிவிக்கவும் அறியாதது; சினந்து கூறினும் தீய மானத்தோடு தொழிற்படுவது, முடிவில் அடக்கப்படும் தன்மையது என்று அறியலாம்.

புராணங்களும் நமக்கு ஆணவத்தின் இலக்கணத்தை யிவ்வாறு தான் அறிவிக்கின்றன. கந்த புராணத்தில் சூரபதுமன் வரலாறு இதை நன்கு விளக்கக் காணலாம். சூரபதுமன் ஆணவம் கொண்டவன்—ஆணவ வடிவினன். சாத்திரம் பயின்றோர் அவனை ஆணவமாகவே உருவகிப்பர். முற்கூறிய இலக்கணம் அனைத்தும் அவனிடம் இருக்கக் காணலாம். சூரபதுமன் செயல் தேவர்களைத் துன்புறுத்தியதாம். அவன் செயலைத் தீயது என்று அவன் மகன் பானுகோபன், தம்பி சிங்கமுகன் முதலியவர்கள் எடுத்துக் கூறியும் கேட்டானில்லை. அவன் அகந்தையை அழிக்கவந்த இறைவனும் முருகனும் தூதன் வீரபாகு மூலம்அறிவித்ததே யன்றித் தானும் அறிவித்தும் அவன் அறிந்தானில்லை. நாலறுவது குழந்தைக்குத் தெரிந்தும் தன் விளையாட்டைவிடவில்லை. சூரபதுமனும் தேவர் துயர் தெரிந்தும் அவரைச் சிறை வீடு செய்யவில்லை. தாய் சொற்கும் குழந்தை செவிசாய்க்கவில்லை; முருகனே நேரில் உணர்த்தியும் அவன் கேட்கவில்லை. தாய் தன்னை யடிப்பாள் என்று தெரிந்தும் குழந்தை நாலறுப்பதை நிறுத்தவில்லை; 'முருகன் இறைவன்; அவன் தன்னைத் தண்டிப்பன்' என்று அறிவு வந்தும் தீய மானம் தடுக்கச் சூரனும் தன் பிடிவாதத்தை விடவில்லை. முடிவில் குழந்தை தாயால் அடிபட்டு அழுதான்; சூரனும் இறைவனால் அகந்தை ஒழிக்கப்பட்டான். தாயும் குழந்தையின் பிடிவாதத்தை யடக்கினாள்; குழந்தையைக் கொல்லவில்லை; அணைத்துக் கொண்டாள்; முருகனும் சூரபதுமனின் பிடிவாதத்தை அடக்கினான்; அவனை ஒழிக்காது அருள் புரிந்தான்.

குழந்தை—தாயின் செயல் கொண்டும், சூரபதுமன்—முருகன் செயல் கொண்டும் நாம், ஆணவமானது அழிக்கப்படற்குரியதே யன்றி, ஆணவம் கொண்டவன் அழிக்கப்படற்குரியவன் அல்லன் என்பதை உணரலாம்.

இனி ஆணவ இலக்கணத்தைச் சிவஞான முனிவர் தொகுத்துக் கூறுமாற்றைக் காண்பாம்.

சகசமலம் ஞானதிரோதகமாய்த் திரவியமாய் அறியாமைக்குணத்ததாய்ச் செம்பிற் களிம்புபோல உயிரின் குற்றமாய் அநாதிபந்தமாய்ச்—சடமுமாய்ப் பலவுமாயின் அழிவெய்துமாகலின் அனாதி பந்தமாதல் பெறப் படாமையின்,—ஒன்றேயாய், விஞ்ஞானகலர். பிரளயா

கலர், சகலர் என்னும் உயிர்ப் பாகுபாட்டிற் கேதுவாய், உயிர்கள் தோறும் தனித்தனி வெவ்வேறாய் மறைத்து நின்று தத்தம் கால வெல்லையில் நீங்குவனவாகிய சத்திகள் பலபல உடைத்தாய், உயிர்கள் மூன்றவத்தைகளும் படுதற்கு மூல காரணமாய், நித்தமாய், வியாபக மாய், வியாபக உயிர் அணுத்தன்மை படுமாறு செய்தலின் ஆணவம் என்னும் பெயர்த்தாய்ப், பசுத்துவம், பசுநீகாரம், மிருத்யு, மூர்ச்சை, மலம், அஞ்சனம், அவித்தை, ஆவிருதி என்றற் றொடக்கத்துக் கார ணக் குறிகளுமுடைத்தாய் நிற்பதெனவும், படலம் படர்ந்த கண் ஞாயிற்றின் சந்நிதியில் நிற்பினும் படலத்தான் அவ்வொளியையிழந்து இருளின் அழுந்துமாறு போல, முதல்வன் சந்நிதியில் நிற்பினும் சோபான முறையின் அறிவிக்கஅறியும் தன்மைத்தாய உயிர் அநாதியே அறிவித்தால் அறியமாட்டாமையின் அவ்வறிவை யிழந்து அறியாமை யாய் அழுந்துதலின் அஃது அவ்வுயிர்க்குப் பந்தமாயிற் றெனவும் உணர்க.'' (சிவஞானபோத மூலமும் சிற்றுரையும் பக். 133-134. ஔவை. சு. பதிப்பு.)

இவ்வாறு ஆணவத்திற்கு இலக்கணம் கூறினர் சிவஞான முனிவர். இவற்றுள் நூலறிவாலும் அனுபவ அறிவாலும் உணரவேண்டிய இலக் கணங்கள் தவிர, அறியாமைக் குணத்தது, உயிர்க் குற்றமாவது, அணுத் தன்மைபடுத்துவது, (விரிவாக அறியும் அறிவைச் சுருக்கி யறியாமை யுடையதாக்குவது) கண் படலம் போன்றது ஆதலின் போக்கப்படற் குரியது (போக்குதல் என்பது ஆற்றல் அழிக்கப்படல் என்பதாம்) என்பனவற்றை முதலிற் கூறிய நிகழ்ச்சியாலும் வைத்து உய்த்துணர லாம். எனவே ஆணவ இலக்கணம் எளியமுறையில் உலக வழக்கிலும் பொதிந்து கிடக்கின்றது என்னலாம்.

---

# மன்னவன் மகன்

**புலவர்மணி – வித்வான். ரு. இரத்தின தேசிகர்**
*தலைமைத் தமிழாசிரியர், கழக உயர்நிலைப் பள்ளி, திருவாரூர்*

உலகம் இன்று குடி ஆட்சியில் இயங்குகின்றது. முடிமன்னர் ஆண்ட காலமும் ஒன்றிருந்ததல்லவா? மன்னர் ஆண்ட அந்த நாளிலே மன்னனொருவன் வீரர் புடை சூழ வேட்டையாடுதல் நிமித்தம் காடு நோக்கிச் சென்றான். அப்போது அம்மன்னனின் மகன் — ஒன்று மறியாத இளம்பிள்ளை — தந்தை எங்கே — எதற்குச் செல்கின்றான் என்பதையும் உணராது, தானும் உடன்வரவேண்டுமென்று பிடிவாதம் செய்தான். தந்தைதன்பன்மாட்டு வைத்த அன்பால் உடன் அழைத்துச் செல்லத் துணிந்தான். எல்லோரும் காட்டை அடைந்தனர்.

பணியாட்கள் அழகியதொரு கூடாரத்தைக் காட்டில் அமைத்தார்கள். மன்னவனும், மகனும் மற்றவரும் சிறிது நேரம் தங்கி இளைப்பாறினர். சிறுவன் அயற்சி மிகுதியால் உறங்கத் தொடங்கினன். வேந்தனும் வீரரும் வேட்டைமேற் சென்றனர். சிறிது நேரத்தில் குழந்தை விழித்து எழுந்தான். பணியாளர் குழந்தையை விளையாடச் செய்து களிப்பூட்டினர். தன்னை மறந்து விளையாடுகின்றான் குழந்தை.

விளையாட்டின் வேகத்திலே குழந்தை காவலாளர்கள் கண்களையும் மறைத்து மாயமாய்ப் பறந்து காட்டின் உள்ளே சென்று விட்டான். ஐந்து வயது நிரம்பிய பாலகன் திசை தெரியாது திகைக்கும் நேரத்திலே வேடுவர் சேரியில் உள்ள வேடுவர் குழந்தையைக் கண்டனர். அரச இலக்கணம் அமைந்த அந்தக் குழந்தையைக் கண்ட அளவிலே அதற்கு இனிய தேனும் கனியும் கொடுத்துத் தம் வேடுவச் சேரிக்குக் கொண்டு சென்றுவிட்டனர். பல வேடிக்கைகளைக் காட்டினர். தந்தையைப் பிரிந்த துயரத்தை மறைக்கச் செய்தனர். மன்னவன் மகன் வேடுவர் மகனாயினன். அரச குடும்பத்தின் பழக்கங்களை மறந்தான். வேடுவரது பழக்கவழக்கங்களை மேற்கொண்டுவிட்டான்.

வேட்டையாடி மீண்ட வேந்தன் கூடாரத்தே குழந்தையைக் காணாது தேடி, அகப்படாமையால் வருத்தத்துடன் அரண்மனை சேர்ந்தான். யாண்டுகள் பல கழிந்தன. குழந்தை பிரிந்த கவலை மட்டும் மன்னவனை விடவில்லை. ஒருநாள் அரசன் வேட்டை குறித்துக் காடு சென்றான். காட்டில் இருபது பிராயமுடைய கட்டிளங்காளை — வேடுவர் கோலத்தோடு அரசனது கண்ணிற்பட்டான். அவனது முகத்தோற்றமும் உடல்கட்டும் மன்னனுக்கு மயக்கத்தை உண்டாக்கின. “இவன் உண்மை வேடுவனா? இல்லை! இல்லை! பதினைந்து ஆண்டுகட்கு முன் நம்மைவிட்டு மறைந்த கான்முளையின் கனிந்த வடிவமன்றோ இது! என்று எண்ணினன். அவ்வேடுவனோடு உரையாடினன். முடிவில் அவன் தன் மகனே என்று துணிந்தான். கட்டித் தழுவினன், முத்தமிட்டான். தான் அவன் தந்தை என்பதைப் பல வழிகளில் புலப்படுத்தினன். பின்னர் உடன் அழைத்துச்சென்று அரச இன்பத்தில் அமர்ந்திருக்கச் செய்தான்.

இந்தக் கதையைத்தான் ஒத்திருக்கிறது நமது நாடகமும். நாம் உயிர்களாகிய குழந்தைகள். நமக்குத் தந்தை பரம்பொருளாகிய ஆண்டவன். வேடரிடைப்பட்ட வேந்தன் மகன் தன்னை மறந்திருந்தது போல, இவ்வுலக வாழ்வென்னும் மறைப்பில் ஐம்புலன்களின் வயப்பட்டு இறைவனையும் மறந்து நம்மையும் மறந்து நிற்கின்றோமாம். இதனையே மணிவாசகப் பெருந்தகையாரும் “இந்திரிய வயமயங்கி” என்று அருளிப் போந்தார்கள்.

இம்மயக்கம் அற்ற நிலையை நாம் அடையவேண்டும். எப்படி அடைவது?" அவனருளாலே அவன்தாள் வணங்கி, "அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்" "காண்பார் ஆர் கண்ணுதலாக் காட்டாக்காலே" என்றெழுந்த மறைமொழிகளுக்கிணங்க இறைவன் திருவருள் துணைசெய்தாலன்றி ஐம்புலச் சூழலைவிட்டு அகலமுடியாது. அதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? மெய்யறிவாகிய ஞானத்தைப் பெறுவதற்குச் சரியை, கிரியை, யோகம் என்கின்ற நெறிகளிலே பயின்று வரல்வேண்டும். பயின்று வந்தால் இறைவனருள் கிட்டும் எப்படிக் கிட்டும்.

"கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றி
குருபரன் என்றோர் திருப்பேர் கொண்டு—திருநோக்கால்
ஊழ் வினையைப் போக்கி"

என்றபடி இறைவன் மானிடச்சட்டை தாங்கித் தோன்றி சகலர் என்று சொல்லப்படும், மும்மலமுடைய நமக்குப் பலவகைத் தீக்ஷை முறைகளைச் செய்து உண்மையை உணர்த்தி மன்னவன் தன் மகனை வேடுவரினின்றும் பிரித்துத் தானாக்கிக் கொண்டதுபோல, நம்மையும் தன் அடிக்கீழ் இருத்தி என்றும் இடையறாத இன்பத்தினை நுகரச் செய்வன்.

"அந்தணனாவதும் காட்டி வந்தாண்டாய்"

என்ற மணிமொழியின் கருத்தும் இதுவே.

இவ்வுண்மைகளை எல்லாம் நமக்குப் பரக்க உணர்த்துவன:

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அந்நிய மின்மையின் அரன்கழல் செலுமே"

என்ற சிவஞானபோதம் எட்டாம் சூத்திரமும் இதனைச் சார்ந்த உதாரண வெண்பாக்களும் ஆகும். வழிநூலாகிய சிவஞான சித்தியாரும் இக்கருத்தினையே,

"மன்னவன் தன் மகன் வேடர் இடத்தே தங்கி
வளர்ந்தவனை அறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும் என்மகன்நீ என்றவரிற் பிரித்துப்
பெருமையொடும் தானாக்கிப் பேணுமா போல்
துன்னிய ஐம்புல வேடர் சூழலில் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறும் தொல் உயிரை
மன்னும் அருட் குருவாகி வந்தவரின் நீக்கி
மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்"

என்ற விருத்தத்தில் தெளிவுபடுத்துகின்றது.

---

# சிவஞான சித்தியார்

வயிநாகரம். வே. இராமநாதன் செட்டியார்
'செட்டிநாடு இதழாசிரியர்' தேவகோட்டை

மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் சிவஞானபோதத்தின் விரி நூலாகச் சைவ சித்தாந்த உண்மைகள் அனைத்தும் விளங்கப் பரபக்கமும், சுபக்கமுமாகிய இரண்டு பெரும் பிரிவுகளுடன் திகழுவது சிவஞான சித்தியார். ஆர் என்னும் உயர்வு சிறப்பு விகுதி கூட்டி அமைக்கப் பெறுகின்ற நூல்கள் இதுபோல இன்னும் ஒரு சிலவே தமிழ்மொழியில் உள்ளன.

பதி, பசு, பாசமாகிய முப்பொருள்களின் உண்மையையும் இயல்பையும் எடுத்துக்கூறும் முதனூல்கள் சிவாகமங்களாகும். சிவாகமங்களில் கூறப்பெற்ற முடிந்த முடிபாயுள்ள பொருள்களை மெய்கண்ட தேவநாயனார் சிவஞானபோதத்தின் வாயிலாகத் தமிழில் அறிவுறித்தியருளினார். முப்பொருளுண்மையைத் தெளிய அறிவுறுத்தற்குரிய மெய்ஞ்ஞானம் அவருக்குத் திருக்கயிலாய பரம்பரையிலிருந்து கிடைத்தது.

நூலறிவு, உண்மையை அறிவதற்கு ஓரளவு சாதனமாயிருக்குமேயன்றி அதனை முற்ற முடிய உணர்த்திவிடும் ஆற்றலுடையதாயிருக்க மாட்டாது. இருபத்தெட்டு ஆகமங்களையும் எழுத்தெண்ணிப் படித்தார் திருநந்தி தேவர். அதனால் அவருக்குக் கிடைத்த பயன் என்ன? ஐயப்பாடுகளே. "தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வாராது" என்பது நம் நாட்டுப் பழமொழி. கற்ற கல்வி முற்றுப்பெற அக்கலையில் வல்ல ஆசிரியனது அருள் வேண்டும். அஃதில்லாத வழி எவ்வளவு படித்தும் பயனில்லை.

"கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள் கற்று மறிவில்லாதவென்" எனவும், "நூலறிவு பேசி நுழைவிலாதார் திரிக" எனவும், "கற்றாரை யான் வேண்டேன், கற்பனவும் இனி அமையும்" எனவும் வருகின்ற ஆன்றோர் திருவாக்குகள் இங்கே நினைவு கூர்தற்குரியனவாம்.

நூலறிவாற் பெற்ற ஐயப்பாட்டைத் திருநந்தி தேவர் சீகண்ட பரமசிவத்தின் அருளுபதேசத்தால் அகற்றிக் கொண்டார். அங்ஙனம் அவர் பெற்ற அருட்பேற்றுப் பயன் அவரளவில் நின்றுவிடவில்லை. மாதவஞ் செய்த தென்றிசையிற் பிறந்தவர்களாகிய நமது நல்லூழால் மெய்கண்டதேவர் வாயிலாக நமக்குக் கிடைத்தது.

மெய்கண்ட தேவருக்கு முன்னர்த் தோன்றி வாழ்ந்திருந்த அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் சிவாகமக் கடலைக் கரைகண்ட பெரி

யார் என்றாலும் மெய்கண்ட தேவரது அருளுபதேசம் கிடைக்கும் வரையில் சிவஞான ஊற்றம் அவருக்கு உண்டாகவில்லை. திருமுறைகளிலும், சிவாகமங்களிலும் அவருக்கு இருந்த பற்றுக்கு அளவே கிடையாது. செல்லுமிடங்களுக்கெல்லாம் சிவாகமச் சுவடிகளையும், திருமுறைச் சுவடிகளையும் வண்டிகளிலேற்றிக்கொண்டு செல்லுகின்ற பழக்கம் அவர்பால் இருந்ததென்று அறிகிறோம்.

அவரது சிவாகமத் தேர்ச்சியைச் சகலாகம பண்டிதர் என்னும் சிறப்புப் பெயரினாலும், திருமுறைப் பற்றை அச்சுத களப்பாளர் மகப்பேறு வேண்டியபோது திருமுறையைக் கயிறு சாத்திப் பார்த்து அதற்குரிய வழியை அவருக்கு அறிவுறுத்தியதனாலும் அறியலாம்.

சந்தான குரவருள் முதலாமவராகிய மெய்கண்டதேவர் செய்தருளிய சிவஞான போதத்திற்குச் செய்யுள் வடிவமான ஒரு உரை எனச் சிவஞானசித்தியாரைச் சொல்லலாம். சித்தியார் நூலின் பெருமையை அளவிடத் தருமை ஆதீன முதற்குரவரான குருஞானசம்பந்த மூர்த்திகள் "பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப் பாதி போதும்" எனவும், தாயுமான அடிகள் "பாதி விருத்தத்தா லிப் பார்விருத்தமாக வுண்மை, சாதித்தார் பொன்னடியைச் சாருநாளெந் நாளோ" எனவும் கூறியுள்ளவை போதிய சான்றுகளாகும்.

சிவஞான போதத்திற்கு விளக்கம் சொல்ல வந்த கடவுள்மா முனிவர் "நின்ற சிவம் ஒன்று, அதனைத் தேர்தல் ஞானம், நிகழ் போதம் தேர்ந்ததனைத் தெளிதலாகும்" என்று கூறினர். ஒன்றாயுள்ள சிவத்தைத் தேர்ந்து தெளிதற்குக் கருவியாயுள்ளது சிவஞானபோதமெனவே, அத்தெளிவின் பயனாயுள்ள சித்தியை இந்நூல் அளிக்கும் என்பது உணரத்தக்கதாகும்.

சிவஞான சித்தியார் பரபக்கம் முந்நூற்றொரு திருவிருத்தங்களையும், சுபக்கம் முந்நூற்றிருபத்தெட்டு திருவிருத்தங்களையும் கொண்டிருக்கின்றன. உலகத்திலே நிலவுகின்ற எண்ணில்லாத சமயங்கள் அனைத்தும் இருபத்தைந்தனுள் அடங்கிவிடும். அவற்றையே அகச்சமயம் ஆறு, அகப்புறச் சமயம் ஆறு, புறச்சமயம் ஆறு, புறப்புறச் சமயம் ஆறு, சித்தாந்தச் சைவம் ஒன்று என்று சொல்லுவர்.

மற்றைச் சமயத்தாரெல்லாரும் தத்துவங்களையே காட்சியெல்லைகளாகக் கொண்டு அவற்றிற்குமேல் எதுவுமில்லை யென்ற முடிவில் அமைந்துவிடச் சித்தாந்த சைவம் மட்டும் முப்பத்தாறு தத்துவங்களையும் கீழ்ப்பொருள்களாகக் காட்டி மெய்ப் பொருளாகிய சிவத்தோடு உயிர்களைச் சேர்க்கவல்ல பெருமையுடையதாகத் திகழ்கின்றது.

பிற சமயத்தாரும் கூறுகின்ற பிருதிவியிலிருந்து தொடங்கும் தத்துவங்கள் சித்தாந்த சைவத்திற்கும் உடன்பாடுடையனவே எனினும் அவைகள் அவ்வந் நிலைகளுக்கேற்பத் தொடர் புண்மைகளேயன்றி நிலையான இறுதி யுண்மைகளாகாவாதலின் அப்பிற சமயங்களும்

சைவ சமயத்தின் படிகளே யென்று பெரியோர் கூறினர். அதனாலேயே பரபக்கம் பிறசமயக் கொள்கைகளை எடுத்துக்கூறி அவற்றின் பொருந்தாமையாகிய மறுதலையையும் உணர்த்துகின்றது.

பரபக்கத்தில் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட மதங்கள் பதினான்கு. அவை முறையே, உலகாயதம், சௌத்திராந்திகம், யோகாசாரம், மாத்தியமிகம், வைபாடிகம், நிகண்டவாதம், ஆசீவகம், பட்டாசாரியம், பிரபாகரம், சத்தப் பிரமவாதம், மாயாவாதம், பாற்கரியம், நிரீச்சுரசாங்கியம், பாஞ்சராத்திரம் என்பனவாம்.

'வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள், வேறுரைக்கும் நூலிவற்றின் விரிந்த நூல்கள்'' என்பது சிவஞான சித்தியார். முதல் நூலென்று பிரமாணமாகக்கொள்ள வேண்டியவை சிவாகமங்களே. அவற்றைப் பிரமாணமாகக் கொள்ளாதவை புறப்புறச் சமயங்களென்றும் வேதத்தை உடன்பட்டுச் சிவாகமங்களைப் பிரமாணமாகக் கொள்ளாதவை புறச் சமயமென்றும், வேத சிவாகமங்களை உடன்பட்டு அவற்றோடு அவற்றிற்கு மாறுபட்டுள்ள பசு நூல்களையும் பிரமாணமாகக் கொள்ளுபவை அகப்புறச் சமயமென்றும், வேதசிவாகமங்களையே பிரமாணமாகக் கொண்டு முத்தி நிலைகளில் மாறுபடுபவை அகச் சமயமென்றும் குறிக்கப்பெறும்.

இந்த முறையில் பரபக்கம் புறப்புறம் புறச்சமயக் கொள்கைகளை ஆராய்ந்து அவற்றின் பொருந்தாமையை உணர்த்தச் சுபக்கம் சித்தாந்த சைவ உண்மைகளை விளக்கும் வகையில் அகப்புறமும் அகமுமாகிய சமயங்களின் கொள்கைகளை எடுத்துக்காட்டி அவற்றின் பொருந்தாமையைத் தெளிவுபடுத்துவதாயிற்று. பொருளை நிச்சயித்துக்கொள்வதற்கு இன்றியமையாது வேண்டப் பெறுவதாகிய அளவை யிலக்கணத்தை இருபது பாடல்களில் ஆசிரியர் அமைத்துத் தந்திருப்பது வேறு எந்த ஆசிரியரிடத்தும் இல்லாததும், முடியாததுமான ஒரு செயல் என்பதை அறிஞருலகம் நன்கு தெரிந்து பாராட்டுகின்றது.

சுபக்கத்தை முதனூலுக் கேற்பப் பன்னிரண்டு பிரிவுகளாக வகுத்துக்கொண்டு முதல்மூன்று பிரிவுகளில் முறையே பதி, பாச, பசு உண்மைகளையும், இரண்டாவது மூன்று பிரிவுகளில் முறையே பசு, பாச, பதியிலக்கணங்களையும், மூன்றுவது மூன்று பிரிவுகளில் உயிர் இறையடிபெறும் அருமை, அதற்குரிய வழியாகிய தீக்கைமுறை, ஞானிகள் ஒழுக்கம் ஆகியவற்றையும், நான்காவது மூன்று பிரிவுகளில் முறையே பாசநீக்கம், சிவப்பேறு, சீவன்முத்தர் இயல்பு ஆகியவற்றையும் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

தோற்றம் நிலை யொடுக்கத்தையுடைய உலகம் அந்நிலைகளை அடையாத இறைவனாலேயே இயங்குகின்றதென்பதும், அவ்விறைவன் சங்கார காரணனாகிய சிவபெருமானே யென்பதும் இந்நூலின் முதற் சூத்திரத்தில் விளக்கப்பெற்றுள்ளது. முதல்வன் உலகுயிர்களுடன் கலப்

பால் ஒன்றாயும், பொருளால் வேறாயும் செலுத்துந் தன்மையாம் உடனாயும் இருக்கின்றானென்பதையும் உயிர்களின் கன்மத்துக் கேற்பத் தனுகரணாதிகளைக் கொடுத்து அவற்றிற் கலந்து பிரிவின்றி அவன் இருப்பானென்பதையும் இரண்டாம் சூத்திரம் அறிவிக்கின்றது. உயிர் உடம்பிற்கு வேறாய் உடலைப் பொருந்தியிருந்து புண்ணிய பாவங்களைச் செய்து அவற்றின் பயனை நுகர்ந்து ஐந்து அவத்தைகளையும் அடைதலை மூன்றாம் சூத்திரம் சொல்லும்.

அந்தக்கரணங்கள் நான்கினையும் அறிந்து அவற்றைச் செலுத்துதலும், தடுத்தலும் செய்கின்ற உயிர் அவற்றின் வேறாயது என்பதை விளக்குவது நான்காஞ் சூத்திரம். பொறி புலன்கள் உயிரினது உதவியால் விடயங்களை அறியினும் உயிரை அறியாதவாறு போல உயிர் முதல்வனது உதவியால் விடயங்களை அறியினும் அவனை அறியாது. அவ்விறைவனே எல்லாவற்றையும் அறிந்து உயிர்களுக்கு அறிவிப்பான் என்பது ஐந்தாஞ் சூத்திரப் பொருள். சுட்டியறியப் பெறுவனவெல்லாம் சடமாய் அழிவெய்துவனவாதலினாலும் எவ்வாற்றானும் அறியப் பெறாதன இப்பொருளேயாதலாலும் இறைவன் இவ்விரண்டுமின்றிச் சித்தும் சத்துமாயிருப்பானென்பதை ஆறாஞ் சூத்திரம் அறிவிக்கும்.

சத்தாகிய சிவமும் அசத்தாகிய பாசமுமின்றிச் சதசத்தாக நிற்பது உயிரென்பதை ஏழாஞ் சூத்திரத்தாலறிகிறோம். பொறி புலன்களின் வசப்பட்டுத் தன்னையும் தனது தலைவனையும் அறியாது மயங்கி நிற்கும் உயிருக்கு இறைவன் குருவாய் வந்து உபதேசித்து ஞானம் உதிக்கச் செய்வானென்பது எட்டாஞ் சூத்திரத்தாலறியப் பெறுவது. பிரபஞ்சங்களின் வாயிலாக நிகழும் பாச அறிவும் தன் முனைப்பால் எழும் பசு அறிவும் நீங்கப் பதிஞானம் கைவரப் பெற்றவருக்கே இறையருள் கூடுமென்பதை ஒன்பதாஞ் சூத்திரம் உணர்த்தியது.

சிவஞானிக்குக் கன்மநுகர்ச்சி யில்லையாதலின் வினையில்லையாக, அதனால் மற்றைப் பாசங்களும் ஒழிவதைப் பத்தாஞ் சூத்திரமும், சீவன்முத்தருக்கு உடம்பழியப் பாமுத்தியாமாற்றைப் பதினொராஞ் சூத்திரமும், சிவஞானியர் வாசனாமலந் தாக்காதிருத்தற் பொருட்டுச் சாதிக்கற்பாலனவற்றைப் பன்னிரண்டாஞ் சூத்திரமும் விளக்குகின்றன.

வேதாகமங்களைக் கற்று முடிவு காணுதற்கு ஒருவனுக்குப் பல பிறவிகள் வேண்டும். அவ்வாறு காணும் முடிவும் ஆசிரியனது அருள் பெற்றாலன்றி நிறைவுடையதாய் அமையாது. இந்த நிலையில் முடிந்த முடிபான உண்மையை எளிதில் எடுத்துப் புகட்டுகின்ற சிவஞானக் கருவூலமாகச் சித்தியார் இலங்குகின்றது என்பதொன்றன்றி வேறு சொல்ல என்ன இருக்கிறது ?

நலம் பெருகுக !

# உண்மை விளக்கம்

சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார், பி.ஏ.

உண்மை விளக்கம் என்பது மெய்கண்ட சாத்திரங்கள் என்று சொல்லப்படும் சைவ சித்தாந்த ஞான நூல்கள் பதினான்கனுள் ஒன்று. அதனை இயற்றியவர் திருவதிகை மனவாசகங் கடந்த நாயனார். இவர் மெய்கண்ட தேவ நாயனாரின் நேர் மாணாக்கர்களுள் ஒருவர் என்பதும் இவர் ஊரும் பெயரும் நூற்பெயரும் அந்நூலின் இறுதியில் இவர் இயற்றியுள்ள,

> " மன்னதிகை வாழு மனவாசகங் கடந்தான்
> மின்னனைய வாழ்வி லுறு மெய்கண்டான்—பன்மறைகள்
> வண்மைதரு மாகமநூல் வைத்த பொருள் வழுவா
> உண்மை விளக்கஞ் செய்தானுற்று "

என்னும் வெண்பாவினால் அறிகின்றோம். நூற் பெயரை நூலின் றொடக்கத்திலும் கூறியுள்ளார். உண்மை விளக்கம் என்பது இந் நூலுக்கு ஆசிரியர் இட்ட பெயர். இந்தச் சில செய்திகள் தாமும் இவர் இந் நூலில் தாமே சொல்லிச் சேர்த்திராவிடில் அறியவாராது போயிருக்கும். நமது நாட்டில் நூல்களியற்றிய பெரியோர் சரிதங்கள் கர்ண பரம்பரையாக அங்குமிங்கும் மாறுபாடான நிலையில் வழங்கப்படுவதன்றி நம்பிக்கையான ஆதார பூர்வமாக எழுதிவைக்கப் படாதது பெருங்குறையே யாகும். இந்நூல் மேலே கூறிய இறுதிப் பாட்டுடன் 55 வெண்பாக்களாலாகியது.

இந் நூலில் சைவ சித்தாந்தத்தின் உண்மைகளை யெல்லாம் சாரமாக வடித்தெடுத்து ஆறு வினாக்களாக ஆக்கி அவற்றிற்கு வரையறுத்து விடை கூறுமுகத்தால் சுருக்கிக் கூறப்பட்டுள்ளது. Elements of Saiva Siddhantham என்றும், 'Saiva Siddhantha primer என்றும் இதனைக் கூறலாம். இது வேத சிவாகமங்களின் சாரமாவது என்று ஆசிரியர் கூறுகிறார் " பண்மறைகள் வண்மை தருமாகம நூல் வைத்த பொருள் வழுவா உண்மை விளக்கம் " என்று தொடக்கத்திலும் இறுதியிலும் கூறுமாற்றாலறிக.

திரிபதார்த்த நிச்சயமே சைவசித்தாந்தமாவது. திரிபதார்த்தமாவன : பதி பசு பாசமென்பன. பாசம், ஆணவம் மாயை கன்மமென மூவகைப்படும். பாச நீக்கத்துக்கும் சிவப்பேற்றுக்கும் சாதனமாகவுள்ளது நாதனட மஞ்செழுத்து. ஆக இவ்வகையால் ஆறு வினாவாக்கி முழுதும் அடக்கிக்கொண்டார்.

> ஆறாறு தத்துவமேது[1] ஆணவமேது[2] அன்றே தான்
> மாறா வினையேது?[3] மற்றிவற்றின்—வேறாகா
> நானேது?[4] நீ யேது?[5] நாத னடமஞ் செழுத்துத்
> தானேது?[6] தேசிகனே சாற்று.

இறுதி வினவை நாதனடம் - என்றும் அஞ்செழுத்து என்றும் இரண்டாகக் கொள்வாரு முண்டு. இரண்டையும் ஒன்றாக "ஏது?" என்று கூறுமாற்றாலும் விடையில் ஒன்றாகவே சேர்த்துக் கூறியிருத்த லானும் அது பொருந்தாது.

இந்நூலை ஆசிரியர் தமது ஆசாரியராகிய மெய்கண்ட தேவநாயனாரை முன்னிலைப்படுத்தி அவரது தோத்திரமாகவும், மாணாக்கன்வினாவும் அதற்கு ஆசாரியன் விடையுமாக வினாவிடை உருவமாக இயற்றியுள்ள மையால் பொருள்களைத் தனித்தனி வரையறைப்படுத்தி மனங்கொள்வ தற்கு இலகுவாக அமைந்துள்ளது. இதுபோலவே உமாபதி சிவாசாரி யார் தமது ஆசாரியராகிய மறைஞான சம்பந்த நாயனாரை முன்னிலைப் படுத்தி வினாவெண்பா என்னும் ஞான சாத்திரத்தை இயற்றியுள்ளார்; ஆனால் அதில் வினா மட்டுமுண்டு. விடை கூறப்பெறவில்லை.

முதல் வினா - ஆறாறு தத்துவம் ஏது? என்பது. இதற்கு விடை 5 முதல் 22 வரையுள்ள 17 வெண்பாக்களால் கூறுகிறார். தத்துவங்கள் என்பது, இங்கு மாயா மலத்தைக் குறிக்கும். இதன் விடையினுள் 24 ஆன்ம தத்துவங்களும், 7 வித்யா தத்துவங்களும் 5 சிவ தத்துவங்களுமாக வகுத்து அவற்றின் பெயரும் தொழிலும் பிறவும் சொல்லப்பட்டன. தத்துவ சொருபமே இந்த உடம்பும் அதன் தொழில்களும் இருப்புமாவன ஆதலின் இவற்றைச் சற்று விரிவாக உரைத்தருளினார்.

இரண்டாவது வினா: ஆணவம் ஏது? மூன்றாவது வினா: மாறா வினை ஏது? இந்த வினாக்களிரண்டும் முன் சொன்ன மாயாமலம் நீங்க லாக, மும்மலங்களுள் எஞ்சிய ஆணவம், கன்மம் என்னுமிரண்டு மலங் களையும் பற்றியன; ஆணவத்தின் உருவம் அறியாமை, கன்ம மலத்தின் உருவம் சுக துக்கங்கள் என்று மிகச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் ஒரே பாட்டில் (23-வது பாட்டு) விடை கூறுகிறார்.

> "அறியாமை ஆணவ நீ, ஆன சுகதுக்கம்
> குறியா வினை யென்று கொள்"

இந்த இரண்டு மலங்களினுண்மையை அடையாளங்களாலறியும் வகை கூறப்பட்டது.

நான்காவது வினா: (மற்றிவற்றின் வேறாகா) நானேது? இவ் வினாவைக் கேட்கும் முகத்தால் "வேறாகா, என்னையெனக் கறியக் காட்டீர்" என்று கேட்கின்றான் மாணவன். "வேறாகா" என்றது ஆன்மா முன் சொன்ன மும்மலங்களிலழுந்தி மலசொரூபியாய்த் தத்துவங்களாகிய உடம்பே தானாக, ஆணவமே தானாக, சுக துக்கங் களே தானாகத் தன்னை வேறு பிரித்துணர்ந்து கிடந்த நிலையினையும் தன்னை அவற்றினின்றும் வேறு பிரித்துணர வேண்டிய நிலையினையும்

உணர்த்தி நின்றது. இதற்கு விடை கூறும் முகத்தால் ஆன்மா தன் இருப்பை வேறு பிரித்துணரும் வழியை இரண்டு உதாரணங்களாற் கூறுகிறார். ஒன்றாவது : I. எல்லாப் பொருள்களும் மூன்று வகையுள் அடங்கும் ; அவையாவன (1) அறிவில்லாத பொருள் : அறிவித்தாலும் அறியாதது ; அசித்து; (2) அறிவும் அறியாமையும் உடைய பொருள் : அறிவித்தால் அறிவது - சித் அசித்து; (3) அறிவே முழுதுமானது : அறிவிக்காமலே அறிவது - சித்து - என்பன. இவற்றுள் அசித்துச் சித்தின் முன் பொருந்தாது ; சித்துப் பொருள் அசித்தை அறியாது. இவை யிரண்டையும் பகுத்தறிவது இரண்டன் தன்மையும் பொருந்திய சித் அசித்தாகிய ஆன்மா. அதுதான் நீ. II. இரண்டாவது ஆறு சுவை களும் தம்மை ஒன்றனை யொன்றறியா. இவ்வாறனையும் ஒருவன் சுவைத்து இவை இன்னின்ன என்று கூறுதல் போல் தத்துவங்களை ஒன்றொன்றாய் நாடி உணர்ந்து ஓதி அதில் பொருந்திய அறிவாய் நின்ற பொருள்தான் நீ.

ஐந்தாவது வினா : நீ ஏது? "பொன்றாத நம்முருவம் போதியின்" என்று வினவுகின்றான் மாணவன். மேலே பாசத்தையும் பசுவையும் விளக்கிய ஆசிரியர் இதற்கு விடை கூறும் முகத்தால் பதியின் இருப்பை அதன் உபகாரத்தால் 3 வகையாகக் கருதியுணரக் கூறுகிறார். (1) சூரியன் புறக்கண்ணுக்குப் பொருள்களைக் காட்டுவதுபோல உள்ளத்தில் அறிவின்கண்ணே நின்று பொருந்தி யறிவிப்பது பதிப் பொருளாகிய நாம். (2) ஐம்பொறிகளுள்ளும் பொருந்தி ஆன்மா அறிவிப்பது போல ஆன்மாவாகிய உன் அறிவிலே பொருந்தாமற் பொருந்திய நாம் உனக்கு அறிவித்திடுவோம். (3) எல்லா எழுத்துக் களுள்ளும் அகரம் பொருந்தி நிறைந்து இயக்கி இருப்பதுபோல எல்லா உயிர்களுள்ளும் உயிர்க்குயிராய்ப் பொருந்தி இயங்குகின்றோம் நாம்.

ஆறாவது வினா - நாதனடமஞ் செழுத்துத்தானேது? இது முக்கிய மான பெரும் பொருள்கள் அடங்கிய வினா. ஐந்தொழிற் பெருங் கூத்தை இறைவர் ஐந்தெழுத்தாலே இயற்றுகிறார். திருக்கூத்துத் திருவைந்தெழுத்தின் உருவம். "சிட்டன், சிவாயநம

**கூத்து** வென்னுந் திருவெழுத்தஞ்சாலே, அபாயமற நின்றாடு வான்" திருவைந்தெழுத்தும் அம்பலக் கூத்தன் ஆடும் திருமேனியில் பொருந்தும் நிலைகளையும் அவையியற்றும் தொழில் களையும் இதன் விடையில் விரித்திருக்கிறார். நகர முதலாக யகரம் இறுதியாக வரும் ஐந்தெழுத்தும் திருவடி முதல் தொடங்கித் திருமுடி வரை பொருந்தியிருப்பது ஒரு வடிவம் - இது இலயாங்கம் என்னும் திருவுருவப் பிழம்பு - இதினின்றும் அவயவங்களும் தொழில்களும் பிரிந்து கூடும்போது வருவது போகாங்கமாகிய வடிவம். அது சிகார ஆதியாக வரும் பஞ்சாக்கரத்தைப் பொருந்தியிருப்பது. அது முறையே சிருட்டியாதி அருள் ஈறாக வரும் ஐந்தொழிலையும் செய்யும்.

" சேர்க்குந் துடி சிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கிலிறைக்
கங்கி நகரம் அடிக் கீழ் முயலகனுர்
தங்கு மகாமது தான் "

" தோற்றந் துடியதனிற் ரேயுந் திதியமைப்பிற்
சாற்றியிரு மங்கியிலே சங்காரம்—ஊற்றமா
வூன்று மலர்ப்பதத்தே யுற்ற திரோத முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு "

" மாயை தனை யுதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய வமுக்கியருள் தானெடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியி லான்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார் பரதம் தான் "

ஓங்காரமாகிய பிரணவமே கூத்தப்பெருமான் கோலத்திற்கொண்ட திருவாசியாகும். 51 அக்கரங்களும் அத் திருவாசியில் விளங்கும் சுடர்கள். இதுவரை நடம் அஞ்செழுத்தாலமைந்த ஐந்தெழுந்து படியைப் பற்றி விளக்கினுர். இனி, ஐந்தெழுத்தைப் பற்றித் தனியாகச் சில பொருள்களை விளக்குகிறுர். சிவனும், அருளும், ஆவியும், திரோதமும், மலமும் என்னும் ஐந்து பொருள்களையும் உட்கொண்ட அடைவுடையது சிவாயநம என்னும் திருவைந்தெழுத்து. இதனை விதிப்படி எண்ணினுல் அருளானது அணுவை (ஆன்மாவை) இருளானது தீரச் சிவத்தே யாக்குவிக்கும் என்பது இதன் பொருள். இதனை நம் முதலாக ஓதினுல் அருள் நாடாது - சிம் முதலாக விதிப்படி யோத வேண்டும் - சூரியன் சந்நிதியிலே சந்திரன் ஒளியானது பேதமற நிற்கின்றது போல முத்தி நிலையில் இறைவன் திருவடியில் ஆன்மா அணைந்து இன்பத்திலழுந்தியிருக்கும்.

பதியினைப் போலவே பசு பாசங்களும் நித்தம் எனப்பட்டதே : அப்படியாயின் முத்தி நிலையில் இம் மூன்றன் நிலைகளையும் காட்டுக என்று வினவிய மாணவனுக்கு ஆசாரியர் அந்நிலையில் பதிபசு பாசம் சுத்த அனுபோகமாகிய நிரதிசயமான ஆனந்தத்தை அனுபவிப்பது ஆன்மா; அவ்வானந்தத்தைக் கொடுப்பவன் பதியாகிய இறைவன் ; அதனைத் தடை செய்யாமல் நிற்பதனுல் விளைவிப்பது மலம் ; என இம் மூன்றின் நிலைகளையும் கண்டு கொள்க என்று விளக்குகிறுர்.

இம் முத்திநிலையை இம்மையிலே பெற்றுச் சீவன்முத்தராய் ஆனந்தித்திருக்கும் சீவன்முத்தர்கள் அந்த நிலை பிறழாமலிருக்கும் பொருட்டுக் குரு லிங்கம் சங்கமம் என்னும் மூன்றிடங்களிலும் கற்றுவின் மனம்போல க்கசிந்து கசிந்தே யுருகிப் பத்தி செய்து நின்று மல வாதனை தாக்காமற் காத்திடுவர். இவ் வுண்மை யெல்லாம் மேலும் அனுபவமுடைய தேசிகர்கள்பால் கேட்டறிந்து கொள்ளத்தக்கன.

குருலிங்க சங்கமம்

மெய்கண்ட தேவநாயனாரது நேர்மாணுக்கர்களாகிய அருணந்தி சிவனாரும் இத்திருவதிகை மனவாசகங் கடந்த நாயனாரும் ஆகிய இருவருள், முன்னவர் தாம் உபதேசிக்கப் பெற்ற சிவஞான போதத்தை விரித்துச் சிவஞான சித்தியார் என்ற நூல் செய்தனர்; பின்னவர் தாம் கேட்ட சைவ சித்தாந்த ஞான சாத்திரத்தின் அடிப் படையான உண்மைகளை யெல்லாம் தொகுத்து வரையறுத்துக் கற்ப தற்கும் மனங்கொள்வதற்கும் எளிதாக இந் நூலை அருளிச் செய்தார் இதனை யெல்லாரும் மனங்கொளப் பயின்று பயன்பெற்றுய்வார்களாக.

---

# சித்தாந்த முத்தி

ராவ்சாஹிப் நல். முருகேச முதலியார், பி. ஏ.

சைவ சித்தாந்தத்தில் முத்தி இலக்கணம் செப்பிய சிறப்பைச் சிறிது கூறும் இக்கட்டுரை. சிவாநந்தானுபவமே சித்தாந்த முத்தி யென்று சாத்திரங்கள் சாற்றும். இவ்வனுபவத்தைப் பிற பெயர்களும் கூறுவதுண்டு. சிவதரிசன மெனினும், சிவஞானமெனினும், பரமா னந்த போகமெனினும், சிவப்பேறெனினும், சிவசாயுச்சியமெனினும் ஒக்கும். சிவானுபவம் எப்போது நிகழுமென்பதை சிவப்பிரகாசம் பின்வருமாறு பகரும்: "திரிமலமு மகலவுயி ரருள்சேர் முத்தி திகழ் முத்தி யிது முத்தித் திறத்ததாமே."

இது பந்தமகன்ற காலத்துப் பெறும் பெற்றியாதலால் "அறிவ னொடு அறிவு பிரியாப்பெற்றி" என்று சங்கற்ப நிராகரணம்விரிக்கும். இது எப்பொழுது எய்தும் எனின் பரமஞானத்தால் எய்துமென்று சிவஞான சித்தியார் சாற்றும்:

"பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர்...சீவன்முத்தர் சிவமே கண்டிருப்பர்."

பரஞானம் எய்தும் வகையைச் சிவஞான போதம் ஒன்பதாம் சூத்திரம் தெற்றென விளக்குகிறது.

" ஊனக்கண் பாசம் உணராப் பதியை,
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி,
உராத்துணைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணும் அஞ்செழுத்தே "

அதாவது, பாச ஞானத்தால் அறியமுடியாத முதல்வனை அவனது திருவடி ஞானமாகிய கண்ணினால் சிந்தையின் கண்ணே நாடில் பேய்த் தேர்போன்ற பாசக்கூட்டம் நீங்கிப் பிறவித் துயராகிய வெப்பம் விலகும். அவ்வண்ணம் கண்ட காட்சி சலியாமைப் பொருட்டு அப் பொருள் பயக்கும் திருவைந்தெழுத்தே சாதனம் என்று உணரப் பெறும். இச்சாதனம் எதற்கு எனின் ஞேயம் காட்சிப்பட்ட விடத் தும் பயிற்சி வயத்தால் பழைய சிற்றுணர்வை நோக்கி நிற்குமாதலின், அவ்வாதனை நீக்குவதற்கு, இந்த முத்தி பஞ்சாக்கர தியானத்தினால் பெறும் யோக மார்க்கம், பூரண நிலையை எய்தச் செய்யும். இதுவே சிவானந்தம் என்ற முத்தி நிலையென்று கூறுவர் பெரியோர். ஆனந்தம் என்பதற்கு நிறைவு என்பதே பொருள். இதையே இன்பம் சுகம் என்றும் கூறுவது வழக்கு. பூரண நிலையில் இன்பம் புறப்பொருள் களைப் பற்றி வரும் இன்பம் அன்று. "முத்தியில் முற்றுணர்வு முதலிய எண் குணங்களின் விளக்கமே இன்பமாவதன்றி, வேறாய் இன்ப மென்பதொன்றில்லை" என்று விளக்குகிறார் சிவஞான முனிவர். மூலப் பகுதியின் காரணமாக சாத்துவிக குணம் ஆன்மாவின் மேம் பட்டு விளங்குதல் உலக இன்பம். முத்தி நிலையில் கைகூடும் இன்பம் அதுவன்று. " அதுவதுவாய் அழுந்தி நின்றறிதலே அனுபவமெனப் படுமாதலின், அதுபோல ஆன்மாவின் வேறாய்ச் சிவன் கண்ணேயுள வாகிய முற்றுணர்தல் முதலிய எண்வகைக் குணங்களும் ஆன்மாவின் மாட்டு மேம்பட்டு விளங்கும் விளக்கமே சிவானந்த வின்பம்" என்று கூறுவர் சிவஞான முனிவர்.

இவ்வனுபவத்தினைச் சமயாசார்ய மூர்த்திகள் கூறியுள்ளதே பிரமாணமாகும்.

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா யார்கொலோ சதுரர்
அந்தமொன்றில்லா வாநந்தம் பேற்றேனி யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான் திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே யீசா உடலிடங் கொண்டா யானிதற் கிலனோர் கைம்மாறே "

என திருவாசகத்திலும்,

" ஆனந்த வெள்ளத் தழுந்துமோ ராருயிர்க்கொண்
டானந்த வெள்ளத் திடைதிளைத் தாலொக்கு மம்பலந்சே

ரானந்த வெள்ளத் தழுந்து வோனருள் பெற்றவரி
ஞநந்த வெள்ளம் வற்ருது முற்ரு திவ்வணி நலமே"

எனத் திருக்கோவையாரிலும் கூறியது காண்க. இந்த ஆனந்த வெள்ளமே புலனுணர்வைத் தீர்த்து இறைவன் திருவடி நிறைவை மீளாது சாரும் என்பதைச் சிவஞான போதம் எட்டாம் சூத்திரம் நான்காம் அதிகரணம் பின்வருமாறு கூறும் :—

" சிறை செய்ய நின்ற செழும்புனலின் உள்ளம்
சிறைசெய் புலன் உணர்வில் தீர்ந்து—சிறைவிட்டு
அலைகடலிற் சென்றடங்கும் ஆறுபோல் மீளாது
உலைவிலான் பாதத்தை உற்று "

முத்தி நிச்சயம் இருபத்திரண்டாம் பாட்டு சித்தாந்த முத்தி யிலக்கணத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கூறுகிறது :

" உள்ளமல நீங்கி யோங்கு சிவாநந்த
வெள்ளந் திளைத்ததுவாய் மேவுதலே—கள்ளவிழ்பூங்
கொத்தார் விரிசடையார் கூறுசிவாக மத்திற்
சித்தாந்த முத்தியெனத் தேறு. "

சித்தாந்த சைவமல்லாத ஏனைச் சமயத்தாருக்கும் முத்திகளுள வாம். அம்முத்திகள் படிமுறையில் நிலம் முதல் நாதம் ஈருகிய முப்பத்தாறு தத்துவங்களில் ஒவ்வொன்றிலே நிலைபெறுவன. உலகாயதர் முதல் ஏகான்மவாதிகள் வரை கருதும் முத்தி வகைகளைச் சிவப்பிரகாசம் ஐம்பதாம் பாட்டும் சிவஞான பாடியமும் கூறியுள்ளன. உலகாயதர் சிற்றின்ப போகமே முத்தியென்பர், பௌத்தரில் சௌத்திராந்திகர் பஞ்சகந்தங்கள் (உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம்) அழிவதே முத்தி யென்பர். அருகரில் நிகண்டவாதிகள் திரிகுணங்கள் (ஞானவரண்யம், பசி, கந்தம்) அடங்குதலே முத்தி யென்பர். பிரபாகரர் கன்ம நாசத்திலே ஆன்மா அறியுந் தொழிலின்றி பாடாணம்போல் கிடப்பதே முத்தியென்பர். பேதவாதிகள் திருவருளால் ஆணவமலம் கெட ஆன்மா நித்தியசுத்தனுய் விளங்குவதே முத்தி யென்பர். உருவசிவ சமவாதிகள் நித்திய மங்கள திவ்விய சரீரத்தைப் பெற்றிருத்தலே முத்தியென்பர், கர்மயோகிகள் காய சித்தியால் காயம் இறவாதிருத்தலே முத்தியென்பர். சாங்கியர் பிரகிருதியையும் புருடனையும் பகுத்துணருங்கால் தோன்றும் அவிச்சையே முத்தி யென்பர். ஜீவான்மாவினிடத்தில் தோன்றி மாயு முபாதிகளை நீக்கும் விவேக ஞானமே முத்தியென்பர் மாயாவாதிகள். பாற்கரியர் ஆன்மா வானது தனது இச்சா ஞானக் கிரியைகளோடு பிரமத்திற் சென்றழிந்து பிரமத்தினேடு ஒன்ருவதே முத்தியென்பர். அட்ட சித்திகளே முத்தி

யென்பர் சித்தர்கள். மேற்சொன்ன முத்தி இலக்கணங்களெல்லாம் முப்பத்தாறு தத்துவங்களுக்கு உட்பட்டவைகளாதலின் அவைகளைப் "பழிசேர் முத்தி" யென்று சிவப்பிரகாசம் கூறும். ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் நீங்க, ஆன்மா சிவத்தினது திருவருளைக் கூடும் முத்தியே நிலைபெற்று விளங்கும் சிறந்த முத்தி யென்று சித்தாந்த சாத்திரம் சாற்றும்.

சித்தாந்தத்தில் கூறப்பட்ட முத்தியிலக்கணமே உண்மை என்பது ஆராய்ச்சிக்கும் அறிவுக்கும் புலனாகும். முத்தி நிலையில் சிவனடி சேர்தல் என்பதற்குச் சிவனருள் பெற்று நிறைவு பெறுதல் என்பது பொருள். "அடியெனு மதுவும் அருளெனு மதுவும் அறைந்திடில் நிர்க்குண நிறைவு" என்று தாயுமானவர் கூறுவர். அந்நிறைவே சிவாநந்த பரவசம். அதுவே முத்தி.

---

# கட்டளைகளும் சிறு சாத்திர நூல்களும்

தி. கி. நாராயணசாமி நாயுடு

சைவ சித்தாந்த சாத்திரத்திற்கு உரிய கட்டளை நூல்களைச் சித்தாந்தக் கட்டளைகள் என்பர். சாத்திர தத்துவத்தையும் அவற்றின் இயல்புகளையும் ஆசிரியர் இன்றி ஆராயத் தலைப்படும் அன்பர்களுக்கு இவை பெரிதும் துணை செய்யும். பொருளை, உரைநடையில் வரையறைப்படுத்தி உரைப்பன, கட்டளைகள். ஞானமிர்தம், துகளறுபோதம் முதலிய நூல்களைக் கற்கப் புகுமுன் அறிந்து கொள்ளவேண்டிய பொருளின் ஒழுங்குமுறையை உணர்த்த, முறையே ஞானமிர்தக் கட்டளையும், துகளறுபோதக் கட்டளையும் தோன்றின. அத்துவா, அவத்தை, அளவை, பிராசாதம் இன்ன பிறவற்றைச் சிறப்பாக விளக்கவும் நூல்கள் உள. அவை வருமாறு :—

*1. சிவப்பிரகாசக் கட்டளை
§2. திருவாலவாய்க் கட்டளை
†3. ஞானமிர்தக் கட்டளை
4. சித்தாந்த மரபு‡ 7/257
†5. திரிபதார்த்த சிந்தனை
§6. சித்தாந்த தத்துவ லட்சணம்

§7. மரபு
†8. சித்தாந்தப் பிரகாசிகை
†9. பூப்பிள்ளை அட்டவணை
10. பதி பசு பாசப் பனுவல்‡ 13/438
¶11. சித்தாந்தக் கட்டளை
¶12. சித்தாந்த சாதனக் கட்டளை
¶13. சித்தாந்த தசகாரியக் கட்டளை
14. துகளறு போதக் கட்டளை‡ 8/161
15. அத்துவாக் கட்டளை‡ 9/235
16. அவத்தை தெரிசனம்‡ 9/390
17. அளவை அட்டவணை‡ 9/385
18. தத்துவானுபோகக் கட்டளை‡ 11/201
19. பிராசாத விதி‡ 13/303
20. மெய்ப்பொருளிந்தின் தசக்கிரமக் கட்டளை‡ 13/357
$21. சுத்த சிவப்பிரகாசக் கட்டளை

---

*தருமை ஆதீன வெளியீடு. §கிடைப்பது அருமை. †சை. சி. நூ. கழக வெளியீடு. ‡சித்தாந்தம் மலரும் பக்கமும். ¶பூவை கலியாணசுந்தர முதலியார் இயற்றியன. ரிப்பன் அச்சக வெளியீடு. $துறைசை ஆதீன வெளியீடு.

**C. தத்துவம்**

# முடிந்த முடிபு

சைவப் புலவர் - P. A. நடேச பிள்ளை, நாகர்கோவில்.

வேதம் என்ற சொல் "வித்" என்னும் தாதுவினடியாய்ப் பிறந்தது. வித் என்றால் அறிவு எனப் பொருள்படும். வேதாந்தம் என்றால் அறிவின் முடிவு, அல்லது ஞானத்தின் முடிவு எனப் பொருள் கொள்ளத் தக்கது. சைவம், சித்தாந்தம் எனும் இரண்டு சொற்களும் இயைந்து சைவ சித்தாந்தமாயிற்று. சைவம் என்பது சிவ சம்பந்தமுடையது என விரியும். 'சிவம்' என்ற தாதுவினடியாய்ப் பிறந்த பெயரே சைவமாயிற்று. திலம் என்ற சொல்லிலிருந்து தைலம் என்ற சொல் தோன்றியதே போன்றது. திலம் என்றால் எள், தைலம் என்றால் எண்ணெய். மொழி முதலிகரம் ஐகாரமாய்த் திரிதல் வடமொழிப் பண்புகளில் ஒன்று என்பது இரு மொழி இலக்கணங்களையும் நன்கறிந்த பெருமக்களின் கருத்து. சித்தாந்தம் என்பதன் பொருள் முடிந்த முடிபு என்பதாம். எனவே சைவ சித்தாந்தம் என்பதற்குச் சைவ சமயத்தின் முடிந்த முடிபு என்பதே பொருள்.

சைவ மரபுபற்றித் தோன்றிய யாவரும் சைவராகார். "பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா" என்பதுபோல் பிறப்பினால் யாரும் சைவரல்லர். சிவ வழிபாடு, சைவாசாரம் முதலியவற்றைக் கடைப்பிடித்தொழுகும் யாவரும் சைவரே. அவர் பிறப்பினால் எக்குடிப் பிறப்பினும் அவர்தான் உண்மைச் சைவராவர்.

ஊனுணவு கொள்ளாதவரைச் சைவரென்றும், ஊனுண்பவரை அசைவரென்றும் மக்கள் கூறத் தலைப்பட்டனர். ஊனுணவு கொள்ளாதார் சைவ ஆசாரங்களில் ஒன்றாகிய ஜீவகாருண்யத்தை மட்டும் கைக்கொள்வதால் அங்ஙனம் அழைக்கப்பட்டனர். "அன்பே சிவம்" என்ற பொன் மொழியின் அடிப்படையில் எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுவதால் அவர் சைவரென்று அழைக்கப்பட்டனர். சைவ சமயத்தின் சின்னங்களாகிய விபூதி, ருத்திராட்சம் தரித்துக் கொண்டும் சிவபூஜை எடுத்துக்கொண்டும் புலால் உண்பராயின் அன்னவர் சைவரே யல்லர். ஆடு, கோழி முதலிய உயிர்கள் தாங்கியுள்ள சடலங்களெல்லாம் சிவாலயங்களே என்ற உண்மையை அவர் உணரவில்லை.

> "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
> வள்ளல் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்"

என்ற மூல மந்திரத்தை அன்னார் உணர்வாராக.

சைவ வாழ்வு சிவாகமங்களிற் கூறிய நெறியில் இயங்குவது, வைதிக வாழ்வு வேதங்கள் விளம்பிய நெறியில் நடப்பது. நம் அருட் பெரியோர்கள் இரண்டு இன்ப வழிகளைக் காட்டினர். ஒன்று வேதாந்த வழி. இன்னொன்று சித்தாந்த வழி. வேதாந்தம், "நான் அவன்" "அது நீ ஆகிறாய்" என்று கூறி மௌனமாகும். ஆனால், நீ அதுவாதல் எங்ஙனம்? இப்பொழுது அதுவாகாமலிருப்பானேன்? அவ்விதம் ஆகாமல் தடுப்பதற்கு ஒன்று உளது. அதுவே தடை. தளை அல்லது பாசம். சித்தாந்தம் இப்பொருள்களை அலசி, அலசி உண்மையை வெளிப்படுத்துகின்றது. ஆனால் இவ்விரு நெறிகளும் ஒன்றே என்றும் சாதித்துப் போயினர் நம் மகான்கள். "வேத நூல் சைவ நூல் என்றிரண்டே நூல்கள், வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்கள், ஆதிநூல் அநாதி அமலன் தருநூ லிரண்டும்" என்ற அருணந்தி சிவாசாரியாருடைய அருள் வாக்குகளை நாம் ஊன்றி உணர வேண்டும்.

நமது நாட்டு மொழிகளுள் மிகவும் தொன்மையும் பெருமையும் வாய்ந்தன இரண்டு. ஒன்று வட மொழி. மற்றது தென் மொழி. இரு மொழிகளும் நிலவியிருக்கும் நாடுகளிற்றோன்றிய ஒரே கொள்கையே வட மொழி பயின்ற இடத்தில் வேதாந்தமென்றும், தென் மொழி பயின்ற இடத்தில் சித்தாந்தமென்றும் ஆயின என்பது ஒரு சில அறிஞர்களின் எண்ணம். பின்னர் இரண்டும் வெவ்வேறாகக் கருதப்பட்டன. வேற்றுமை யுணர்ச்சியும் வாதப் போர்களும் நிகழலாயின. இவ்வேற்றுமை யுணர்ச்சியைப் போக்கக் கருதிய நம் சமய ஆசாரியர்கள் தமது பாசுரங்களில்,

"வடமொழியும், தென்மொழியும், மறைகள் நான்கும் ஆனவன்காண்"

என்றெல்லாம் பொறித்துச் சென்றனர்.

"வடமொழி தென்மொழி யெனவே வந்த விரு விழியவற்றுள்
கெடுவழக்குத் தொடர்பவரே கிழக்கொடு மேற்குணராரே"

என்ற பேராசிரியர் சுந்தரம் பிள்ளை கூற்றும் போற்றற்பாலது. அதுவுமன்றி மொழிச் சச்சரவுகளைப் பற்றி அவர்கள் எவ்வளவு தூரம் மனம் புழுங்கிக் கூறினர் என்பதும் புலப்படும்.

வட மொழியில் சமய சாத்திரமாய்த் திகழ்வது வேதம். தென் மொழியில் சமய சாத்திரமாய்த் திகழ்வது ஆகமம். அதன் பின்னர் சிவஞான போதம் முதலிய பதினன்கு சாத்திரங்களும் தோன்றின. சிவஞான போதச் சூத்திரங்கள் பன்னிரண்டும் வடமொழி நூலாகிய இரௌரவாகமத்தில் காணப்படுகின்றன. வடமொழியிலிருந்துதான் சிவஞான போதம் மொழிபெயர்க்கப்பட்டது என்பது ஒரு சாரார் கூற்று. ஆனால் ஒரு சிலர் சிவஞான போதத்தை வடமொழியிலும் இயற்றி இரௌரவாகமத்தில் புகுத்திவிட்டனர் என்று கூறுகின்றனர். ஆனால் இந்த ஆராய்ச்சியிற் புகுந்து மண்டையை உடைத்துக்கொள்வது வீணாகும். வடமொழியிலும்

தென்மொழியிலும் சித்தாந்தக் கருத்துக்கள் ஒரே முறையில் இருக்கின்றன என்பதை உணர வேண்டும். என்றாலும் சில தமிழ்ச் செய்யுட்களில் கீழ்க்கண்டவாறு காண்கின்றோம்.

" வேதம்பசு, அதன்பால் மெய்யாகமம் நால்வர்
ஓதும் தமிழ் அதனின் உள்ளுறுநெய்—போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்த தமிழ்நூலின் திறம் "

" வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம் "

" வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த ஆராவமுத அருங்கனி
பிழிந்த சாரங்கொண்டது சைவ சித்தாந்தம் "

என்றெல்லாம் பெருமக்கள் பாடினர்.

திருஞான சம்பந்தர் புராணம்,

" வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க "

என்று ஆரம்பமாகிறது. வேதமாகிய ஒரு பெருவழிக்கு சைவமாகிய ஒரு துறை இன்றியமையாததாகிறது. வேதம் மந்திரம் என்றும், சைவம் - தந்திரம் என்றும் கூறுதல் மரபு. தந்திரமென்பது ஆகமம். மந்திரம் - நினைவு, தந்திரம் - நினைவின் பரிணாமமாகிற செயல். மந்திரமாகிய வேதம் மூலம். தந்திரமாகிய ஆகமம் உரை. வேதம் விதை போன்றது. ஆகமம் மரம்போன்றது. நினைவின்றிச் செயலில்லை. செயலுண்டானால் நினைவும் இருந்தே ஆகவேண்டும். எந்தச் செயல் நிகழ வேண்டுமாயினும் முன்னரே அஃது நினைவில் தோய்ந்திருத்தல் வேண்டும் என்று அநுமானிக்கலாம். எதையும் நினைந்தே செய்வது வழக்கம். ஆகவே நினைவு போன்ற வேதம் வழியாகவும், செயல் போன்ற சைவம் துறையாகவும் போற்றப் பட்டன.

" மந்திரமும் தந்திரமும் ஆனார் போலும் "

" வேத மோடாகமம் மெய்யாம் இறைவனூல்
ஓதும் பொதுவும் சிறப்பு மென்றுன்னுக
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேத மதனில் பெரியோர்க்க பேதமே."

" வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள் "

என்ற அநுபூதிமான்களுடைய திருவாக்குகள் சிரமேற்கொள்ளத் தக்கன.

• சிவத்தையடைவதற்கு வேதநெறியும், சைவத் துறையும் ஒன்றிய வைதிக சைவம் வேண்டற்பாலது. வைதிக சைவம் உலகில்

பல பெயர்களால் வழங்கப்படுகின்றதென்றாலும் பொருளில் மாறுபாடில்லை. அது ஒரு கூட்டத்தாருக்கு மட்டும் உரியதல்ல. இந்த அகில உலகத்திற்கும் அது சொந்தம். வேதநெறி தழைத்தோங்கவும், சைவத்துறை விளங்கவும், பூத பரம்பரை பொலியும் பொருட்டும் ஞானசம்பந்தப் பெருமான், "அம்மே அப்பா" என்று அழுததாய் நமக்கு உணர்த்தப்படுகிறது. சம்பந்தர் தம் பொருட்டு அழவில்லை எனவும், இந்த அகில உலகமும் உய்யும் பொருட்டு அழுத தாயும் நாம் காண்கின்றோம். இதை சேக்கிழார் சுவாமிகள், "புனித வாய் மலர்ந்தழுத" ஞானசம்பந்தர் என்று குறிப்பிட்டார். ஏனெனில் தம்பொருட்டு, சுயநலக் கொள்கையோடு செய்த ஒன்றிற்குப் புனிதம் அல்லது தூய்மை ஏற்பட முடியாது. பிறர்நலம் பொருட்டு எழும் எண்ணமே புனிதமுடைத்து. அதுவே உண்மைத் தொண்டாகும்.

"தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளர்"
"யாம்பெறும் இன்பம் பெறுகஇவ் வையகம்"

என்றெல்லாம் நம் இலக்கியங்கள் எழில் பெறக் கூறுவதை யாண்டும் காணலாம்.

வேதம் மந்திரத்தாலாயது. மந்திரம் என்பது "மந்த்ரம்" என்ற பதத்தின் திரிபு. மந்+த்ரம் எனப் பிரிக்கலாம். மந்=நினைப்பது; த்ரம்=காப்பது. மந் - என்றால் மனஸ் என்றும், மனிதன் என்றும் பொருள்படும். எனவே நினைப்பதால் காப்பாற்றப்படும், மனசால் காப்பாற்றப்படுவது, அல்லது மனதைக் காப்பாற்றுவது, மனிதனைக் காப்பாற்றுவது என்றெல்லாம் பொருள் விரிக்கலாம். மனதால் காப்பாற்றப்படுவது என்பதை எடுத்துக்கொண்டோமென்றால் மனனத்துக்கு உரியன என்றாகின்றது. மனனம் பண்ணுவதால் மனம் ஒருமைப்பட்டு மனம் தூய்மையடைகிறது. மனம் தூய்மை பெறுவதால் மனிதன் காப்பாற்றப்படுகிறான். ஆகவே மனிதனைக் காப்பாற்றும் பண்பு மந்திரங்களுக்கு ஏற்படுகிறது.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரமென்ப"

என்று மந்திரத்திற்கு தொல்காப்பியர் இலக்கணம் வகுத்தனர். நிறைமொழி மாந்தர் எனப்படுவோர் முற்றறிவுடையோர் எனப் பொருள்படும். மாந்தர் அந்நிலையை அடைவது எப்பொழுது? பசு ஞானம், பாச ஞானங்களை அகற்றி பதி ஞானத்தில் (Divine life) செல்லும் ஆன்மாவிற்கு அவ்விதம் மந்திரங்களைக் கூறும் மாண்பு ஏற்படுகின்றது. அன்னாருடைய மொழிகளே மந்திரமென்றாகின்றன. இந்நிலை எய்திய மாந்தரையே "அவனே தானே யாகி, ஏகனாய் இறைபணி நிற்கும் நிலை" என்று நம்முடைய சாத்திரங்கள் செப்பும்.

நிற்க. நமது சாத்திரம் பதி, பசு, பாசம் (God, soul, & matter) என்ற முப்பொருள்களை உணர்த்துவது. அதையே உலகு, உயிர், கடவுள் என்றும் கூறுவர். உலகு மாறுதலடையும் உள்பொருள், உயிர் அறியாமை விரவிய அறிவாகிய உள்பொருள், கடவுள் அறியாமையே இல்லாத முற்றறிவுடைய உள்பொருள். கடவுள் அறியாமையே இல்லாத கட்டற்ற முற்றறிவுடையதாகலின் அஃது அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த வடிவாய் நீக்கமற நிறைந்தும், யாவற்றையும் கடந்தும் நிற்கும் தன்மையுடையது. எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் கடவுளின் நீங்கி உலகும், உயிரும் பிரிந்து தனித்தியங்கா. இரண்டும் கடவுளின் அகண்டத்தில் கலந்தே நிற்கும். உயிராகிய ஒன்றுக்கு உலகும், கடவுளும் வேண்டும். உலகும், உயிரும் இல்லையேல் கடவுளை உணர்வோரும் இலர். உலகைக்கொண்டே கடவுள் உயிருக்கு நலனைச் செய்து உயிரைப் பக்குவப்படுத்தித் தன் எண் குணங்களையும் பதியவைத்து அநுபூதி கொடுக்கின்றார். ஆகவே முப்பொருள்களும் இவ்வாறு ஒன்றுக்கொன்று இன்றியமையாத தொடர்புகளை யுடையன.

பண்டை மக்கள் முதலில் உலகுண்மையையும், பின்னர் உயிருண்மையையும், அதன் பின்னர் இறை உண்மையையும் படிப்படியாய் அறிந்திருத்தல் வேண்டும் என்பது சரித்திர ஆசிரியர்கள் கருத்து. இம் முப்பொருள்களுள், எங்குமுள்ள கடவுள், உலகு, உயிரில் கலந்து நிற்றலை அவர்கள் நாளடைவில் உணர்ந்தார்கள். இக் கலப்பே பின்னர் அத்துவிதம் என்று சொல்லப்பட்டது. கடவுள் ஊடுருவி நிற்றலால் Immanent, உட்கடந்து நிற்றலால் transcendental, யாவற்றையும் செயற்படுத்துவதால் that which moves everything என்று கூறுவர். "Divine intelligence is behind the very heart of things" என்று இன்றைய விஞ்ஞானம் கூறும். இதனையே ஒன்றாய், வேறாய், உடனாய்க் கலந்திருப்பதாய் நம் சாத்திரம் கூறுகின்றது. கடவுள் கலப்பினால் உடலின் உயிர்போல அவ்வுயிர்களேயாயும், பொருட்டன்மையால் கண்ணின் அருக்கன்போல் அவற்றின் வேறாயும், உயிர்க்குயிராந் தன்மையால் கண்ணொளியின் ஆன்ம போதம் போல் உடனுமாய் நிற்கின்றான் என்பதை உய்த்துணரலாம். கடவுள் சத் + சித் + ஆனந்தம். சத் - அழியாதது 'existence', சித் - அறிவு 'Consciousness', ஆனந்தம் - இன்பம் 'bliss'. இக் கருத்துக்களை வேதாந்தமும் சித்தாந்தமும் தெளிவாகக் கூறியதைப் பரக்கக் காணலாம்.

முப்பொருளைப் பற்றியும் அத்துவிதத்தைப் பற்றியும் ஆராய்ச்சி முதிர முதிர பலதிறப்பட்ட கருத்து வேற்றுமைகளும் தோன்றலாயின. இவ்வேற்றுமைகளால் நன்மைகளுமுண்டு; அதே சமயத்தில் தீமையும் விளைந்தது. ஆனால் சரித்திர வாயிலாய் ஆராயும்பொழுது வேதாந்தத்திற்கு கால வரையறை கூறலாம். சித்தாந்தத்திற்கு அவ்விதம் கூற இயலாது. வேதகாலத்தைப்பற்றிச் சரித்திரம், காலத்தை நிர்ணயித்து விட்டது. சித்தாந்தம் காலம் கடந்த ஒரு கொள்கை. சித்தாந்தம் ஒரு காலத்தில் உலகெலாம் பரவி இருந்தது. இப்பொழுது

நிலவியிருக்கும் பல்வேறு மதங்களின் தத்துவங்களெல்லாம் முன்னர் பரவி இருந்து உலகமெல்லாம் அரசு செலுத்திய சித்தாந்தத்தின் சிதைவுகளே யன்றி வேறல்ல. அது மட்டுமல்லாமல் வேதாந்தமே சித்தாந்தத்தினின்றும் தோன்றியது என்பது ஒரு கூற்று. இதை நாம்கூறினால் மிகைபடக் கூறுவதாய் எண்ணக்கூடும். புதைபொருள் நிபுணராகிய சர் ஜான் மார்ஷல் என்ற ஆங்கிலேயர் கருத்தைப் பார்ப்போம். அவருடைய மொழியிலேயே கொடுக்கின்றேன். "Among the many revelations that Mohenjo Daro and Harappa have had in store for us, none perhaps is more remarkable than this discovery that Saivism has a history going back to the chalcolithic age or perhaps even further still, and it thus takes its place as the most ancient living faith in the world."

ஆனால் வடமொழியில் தோன்றிய வேதம் நாளுக்கு நாள் பெருகலாயிற்று. அதனிடமுள்ள ஞானப் பகுதியாகிய உபநிடதம் கடல்போலப் பெருகி மன்பதையையே கவர்ந்தது என்னலாம். அக் கடலின் ஆழம் காண்டல் அரிதெனவுணர்ந்த வியாசர் முயன்று வெற்றிகண்டார். அவர் வேதாந்த சூத்திரமெனும் அமுதைக் கடைந்தெடுத்து உலகுக்கு அளித்தனர். அதுவே "பிரம சூத்திரம்" எனவும் வழங்கலாயிற்று.

இவ் வியாச சூத்திரத்துக்கு வேண்டும் விளக்கம் கொடுக்கும் பொருட்டு அறிஞர்களால் பாடியங்கள் இயற்றப்பட்டன. பாடியங்கள் தோன்றுவதற்கு முன்னர் யாதொரு வேறுபாடுமின்றி இருந்த நிலை மாறி சிவாத்துவிதமென்றும், கேவலாத்துவிதமென்றும், விசிஷ்டாத்துவிதமென்றும், துவிதமென்றும், இன்னும் பிறவுமாகப் பல பிரிவுகள் தோன்றலாயின. இப் பிரிவுகளின்மீது செடி கொடிகளும் படர்ந்து உண்மையை மறைத்தன. இப் பாடியங்களை அடிப்படையாய்க் கொண்டு மடங்களும், தனித்தனிச் சம்பிரதாயங்களும் தோன்றி வேறுபாடுகளை மிகைப்படுத்தின. முப்பொருளுண்மைகளுள் ஒவ்வொரு பொழுதும் ஒன்றைவிட்டு ஒன்றைப்பாடியக்காரர்கள் கையாண்டனர். அதனால் வாழ்வு குலைந்து மக்கள் மயங்கினர்.

புத்தர் தோன்றிய கால நிலையைக் கவனித்தால், மக்கள் வேதத்தின் பெயரால், வேள்வி செய்கிறோமென்று கூறி ஜீவகாருண்ய ஒழுக்கத்தினின்றும் வழுவிக் கொலை வேள்விகளில் முயன்றிருந்தனர். அப்பொழுது புத்தர் தோன்றி கடவுளுண்மையைப் பற்றி வலியுறுத்தாமல் கொல்லாமையை நிலைநாட்டிச் சென்றனர். ஆகவே அது ஓர் சீர்திருத்தமாகக் கருதாமல் தனி மதமாகவே கருதப்பட்டது. அவர் பின் வந்த மக்கள் கடவுளை மறந்து கொல்லாமையை மட்டும் மேற்கொண்டனர். பிறர் கொடுக்கும் புலாலை வேண்டுமளவும் புசிப்பர். அதன் விளைவாய் நாத்திகம் பரவ ஏதுவாயிற்று. இதனை வெருட்ட சங்கரர் திருவவதாரம் செய்தார். சங்கரர் அறிவாகிய கடவுளின்

உண்மையை நன்கு வலியுறுத்தி மக்களை அவர் பக்கம் திருப்பினர். அவர் உலகு, உயிர் உண்மைகளைச் சம்பிரதாயமாய்க் கையாண்டனர். ஏனெனில் அக்கால நிலைக்கு அவரியற்றிய தொண்டு மிகவும் பொருத்தமானதும் போற்றுதற்குரியதுமாகும். எனவே நாத்திகம் அடங்கி, ஆத்திகம் மீண்டும் தலைதூக்கியது. அவர் தோன்றி இத்தகைய உபதேசம் செய்திராவிடில் கடவுளுண்மைக்கே இடமின்றிப் போயிருக்கும். சங்கரர் காலத்திற்குப் பின்னர் கடவுளுண்மை என்ற கருத்தில் மட்டும் மக்கள் உறைவு பெருமல் மற்றப் பொருள்கள் இல்லை என்பதில் மட்டும் உறைந்து நிற்கத் தலைப்பட்டனர். இதனால் சங்கரர் காட்டிய கடவுள் கொள்கைக்கும் இடர் நேர்ந்தது. அந்த இடரைப்போக்க மீண்டும் இராமாநுஜர் திருவவதாரம் செய்து ஜகஜீவபர (ஜகம், ஜீவன், பரம்) உண்மையை நிலைநாட்டி, ஆண்டான் அடிமைத் திறத்தை வலியுறுத்திச் சென்றனர். ஆனால் பாடியம் வகுத்த மகான்களைக் குறை கூறுவதல்ல. அவர்கள் அவ்வக் காலத்திற்கேற்ப மக்களை நல்வழிபடுத்த முயன்றனர். கால நிலையை ஆராயின் அவர்கள் கூற்று முற்றிலும் பொருத்தமெனத் தெளியலாம். முப்பொருளுண்மையைப் பற்றியும், அத்துவிதத்தைப் பற்றியும், மாறுபட்ட கருத்துக்களும் குழப்பங்களும் தோன்றிய காலத்திலேதான் மெய்கண்டார் தோன்றிச் சிவஞானபோதம்என்ற சீரிய சாத்திரத்தை உபதேசித்தனர். சிவஞான போதம் என்ற சாத்திர இலக்கணம் தோன்றுவதற்கு,பன்னிருதிருமுறைகளும்இலக்கியமாய் அமைந்தன. சிவஞான போத தத்துவங்களுக்கேற்ப வாழ்ந்து காட்டிய நாயன்மார்களுடையவும், ஆழ்வார்களுடையவும், சமய குரவர்களுடையவும் வாழ்க்கைக்கு ஆதாரம் காட்டவே சிவஞானபோதம் எழுந்தது என்று கூறினும் மிகையல்ல. ஆகவே பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உலகெங்கணும் பரவி இருந்த சித்தாந்தத்தை விளக்க, நூல் வடிவில் எழுந்தனவே பதினன்கு சாத்திரங்களுமாகும். நூல் வடிவில் அமைவதற்கு முன்னர் சித்தாந்தக் கருத்துக்கள் கொள்கையளவிலும், அநுட்டானத்திலும் இருந்து வந்தன என்பது நாம் அறிவதொன்ரும். ஆகலின் சித்தாந்தம் இன்று நேற்றுத் தோன்றியதல்ல வெனவும், மிகவும் தொன்மையுடைய மக்கள் முதன் முதல் அநுட்டித்த மதமெனவும் நாம் முடிந்தறியும் ஒரு நிலையாகும்.

---

# தொடர்ச்சி

தருமை ஆதீனப் புலவர், சித்தாந்தரத்நாகரம், மதுரகவி, வித்துவான்

திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

தொடர்ச்சி என்பது (தொடர்+சி) தொடர்தல் என்னும் தொழிலைக் குறிக்கும் பெயர்ச்சொல். படர்ச்சி அடர்ச்சி என்பன போல்வது இது. 'அறத்தின் திரியாப் படர்ச்சி வழிபாடு' என்பதில் படர்தல் என்னும் தொழிலைக் குறித்தல் அறிந்ததே. அவ்வாறே தொடர்தலைக் குறிப்பது தொடர்ச்சி. இங்கு, தொடர்தலாகிய தொழிலையும் அத்தொழிலைச் செய்யும் முதலையும் குறித்தே இக் கட்டுரை எழுதப்படுகின்றது.

உயிர்கள் முதன்முதலாகப் பெற்றுள்ளது ஆணவத் தொடர்ச்சி, அடுத்தது மாயைத் தொடர்ச்சி, அதனோடு வினைத்தொடர்ச்சி, இவை காரணத்தொடர்ச்சி, இவற்றின் காரியத்தொடர்ச்சிக்குக் கணக்கில்லை. இவற்றுள்ளும் ஆணவத் தொடர்ச்சியே ஏனைத்தொடர்ச்சிகளுக்குக் காரணம். மாயாகாரியங்கள் இல்லையேல், வினை நிகழ்ச்சியே இல்லை. வினைக்குப் பற்றுக்கோடு மாயை என்னும் உண்மை இதனால் அறியலாம். தொடர்ச்சியைப் பற்று எனலும் பொருந்தும். உள்ளம், உரை, உடல் மூன்றும் தொடரின் தொடர்ச்சி, பற்றின் பற்று. அறிவின் தொடர்ச்சி முடிவானது. ஆன்மாவும் கடவுளும் அறிவுடைய பொருள்கள். அவை அறிவால் தொடர்தற்கு ஏற்புடையவை. "பொன்னம்பலத்தாடும் சொக்கனே எவர்க்கும் தொடர்வரியாயைத் தொண்டனேன் தொடருமா தொடரே" (திருவிசைப்பா. 9) என்பதில், தொடர்தல் அவ்விரண்டற்கும் உரித்தாதல் உணரலாம். 'தொடர் வரியாயை' என்றதில், உடல், உரை, உள்ளம், உணர்வு நான்கனாலும் தொடர்வதற்கு அருமையை உணர்த்தினர். "பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதி ஞானத்தாலே நேசமோடும் உள்ளத்தே நாடிப் பாத நீழற் கீழ் நில்" என்னும் சிவாகம வசனத்தால் பாசஞானம் பசுஞானம் ஆகிய ஈருணர்வும் தொடர்வரிதாதல் விளங்கும். பதிஞானமே தொடர்தற் கருவி என்பதும் உறுதியாயிற்று. ஆகவே, கடவுளைத் தொடரக் கடவுளுணர்வே உயிர்கட்குக் கருவி. மற்றெல்லாக் கருவிகளும் அக் கருவியைப் பெறத் துணையாதல் வேண்டும்.

கடவுளைத் தொடர்தற்கு அவனுணர்வு கருவி. அவனுணர்வைத் தொடர்தற்குக் கருவி, பொருள்,காட்டு, காலம் முதலியனவும் குரூப தேசமும் மரபு பிறழாமல் வாய்த்தல்வேண்டும். (சித்தியார். 234-5 பார்க்க). அவை வாய்த்தல் இன்றி,புகழ்வரவும் பொருள் வரவும் பற்றிய 'யான்' 'எனது' என்னும் செருக்கால் அழியும் பொருள்களுள் ஒவ்வொன்றையோ பலவற்றையோ தொடர்ச்சியாக்கொண்டு, சிற்றின்பமும் பெருந்துன்பமும் அடைதல் அறிவிற்கு ஏற்றதன்று. அத் தொடர்ச்சி எல்லாம் கடவுளைக் காட்டா, "நாட்டற்று, நாடும் பொருள் அனைத்தும் நானுவிதமாகத், தேடும் இடம் அன்று சிவம்" என்பதால் அவ்வுண்மை புலப்படும். உணர்வுக்குத் தொடர்ச்சி முடிவடையும் இடமே கடவுளிடம். அதற்குமேல் தொடர்ச்சி இல்லை. "ஓட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித், தேட்டற்று நின்ற இடம் சிவம் ஆம்" என்றதும் அதையே. இங்கு, ஓட்டு, தேட்டு, நாட்டு என்ற மூன்றையும் ஓட்டம், தேட்டம், நாட்டம் என்று கொள்ளல் வேண்டும். ஓட்டம் அற்று நின்ற உணர்வு பதியை முட்டித் தேட்டம் அற்று நிற்றலே நாட்டம். அத்தகைய நாட்டம் அற்று,பலவகையாகப் பொருள்களை நாடித் தேடுதல் வேண்டாதது. பல வேறு தொடர்ச்சிகளையும் போக்கும் தொடர்ச்சியே 'பற்றை அறுப்பதோர் பற்று' 'பற்றினுட் பற்றைத் துடைப்பதொரு பற்று' எனப் பெற்றது. அத்தொடர்ச்சி கைவரப், பற்றின்மையைப் பற்றுதல் வேண்டும். "ஏ சிவ ஞானி! இருமைப் பயனை விரும்புவார்க்கு அவற்றை நுகர உடல் முதலியவற்றைக் கொடு. எனக்கு அவை வேண்டா. பற்றில்லாமையிற் பற்றுண்டாக்கு" என்று வேண்டும் முறை இச் சிவப்பிரகாசர் திருவாக்காலும் அறியப்படும்.

" இருந்து மேனியோடு இம்மை மறுமையில்
பொருந்து போகம் புரி; சிவ ஞானி! நீ,
விரும்புவார்கட்கு; எனக்கு அருள் மெய் விழைந்து
அருந்தும் ஆசை யிலாமையில் ஆசையே "

—சிவஞானபாலையசுவாமிகள் கலம்பகம் - 16

இங்கு, பொய்யா மொழிகளும் நினைவில் முன் நிற்கும். 'பற்றற்றான் பற்றினைப் பற்றுவிடற்குப் பற்றுக.' அது வாய்த்தவர்க்கு வேறு தொடர்ச்சியும் வேண்டுமோ? எல்லாத் தொடர்ச்சிக்கும் இன்றியமையாத உடற்றொடற்சியே ஒழிந்தால், பிற தொடர்ச்சிகள் எவ்வாறு ஏற்படும்? " மற்றும் தொடர்ப்பாடு எவன் கொல்? " பிறப்பு அறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை.'

பற்று அற்றான் பற்றும் தொடர்ச்சியாகும். பற்றற்றானும் தொடர்ச்சி யாவன். உலகியலில் வைப்பாட்டியைத் 'தொடர்ச்சி' என்று வழங்குவது இன்றும் உண்டு. அவளும் அவனும் ஒருவர்க்கொருவர் 'தொடர்ச்சி' ஆவர். அவ்வாறே ஆன்மாவும் கடவுளும் 'தொடர்ச்சி' ஆவர். 'உலப்பிலா ஆநந்தம் ஆய தேனினைச்

சொரிந்து புறம் புறம் திரிந்த செல்வம்' கடவுள். அதனால், அவ்வாறு புறம் புறம் திரிதலாகிய தொடர்ச்சி கடவுட்கு உரியதாய், அப் பெயர் எய்தும். 'தொண்டனேன் தொடருமா தொடரே' என்றதால், ஆன்மாவின் தொடர்ச்சி பெறலாயிற்று. ஆயினும், ஆன்மாவைத் தொடர்ச்சியாகக் கொண்டதால் கடவுட்கு யாது பயன்? கடவுளைத் தொடர்ச்சியாகக் கொண்ட ஆன்மாவிற்கே 'அந்தமில்லா ஆநந்தம்' ஆம். ஆகவே, பற்று அறுப்பதோர் பற்று தொடர்ச்சி ஆகிய கடவுளைத் தொடர்ந்து பற்றை அறுத்தல் ஆன்மாவின் தலையாய கடன். பற்றறுத்தல் என்றால் என்ன? பாசம், பாசஞானம், பசுஞானம், பசுத்துவம் ஆகிய நான்கையும் நீக்குதலே ஆகும். "பற்றற பற்றற என்பதெல்லாம் பசுபாசம் விடல், மற்று ஒரு பற்றறல் இல்லை என்றால்...சிற்றம்பல நாடி...தபோதனரே ஒழிந்தே இரும் உம்மையும்" என்னும் உபதேசத்தை இங்கு உணர்தல் நன்று.

எப்பொருளையும் பற்றலாகாது என்று அறிவு அசைவற இருக்க முயன்றால், அவ்வறிவொடு மனம் விரைந்து எழும். காரணம் யாது? பழக்கமே. அறிவு மனத்தைப் பிடிப்பது பிறப்பு. விடுப்பது இறப்பு. மனத்தை 'நிறுத்தி ஒடுக்குதலே முத்தி,' அதை 'விடயத்து ஓடவிடுக்குதலே பந்தம்' என்றலும் உண்டு. ஒடுக்குதல் ஆவது, அறிவு மனத்தோடு கூடாதிருப்பதே. ஒடுக்க ஒடுக்க விரைந்து எழுவது மனத்தியல்பு. அதனொடு கூடாமையே அதற்குமேலான உபாயம். கூடாத அறிவினை மனம் ஒன்றும் செய்யாது. நம்மனம் எத்தனையோ பொருள்களோடு தொடர்ச்சி இல்லாமல் இருக்கின்றது. அதற்கு என்ன காரணம்? நம் அறிவு அம்மனத்தோடு அப்பொருள்களின் திறத்தில் கூடாமையே ஆகும்.

எல்லாப் பொருள்களையும் தேடி அழிக்காமல் காத்துக்கொண்டிருந்த ஒருவன், உடலைவிடுங் காலத்தில், ஓர் இமைப் பொழுது அவ்வுடலிலே தங்கியிருக்கவேண்டி, அப்பொருளெல்லாவற்றையும் கூடாகக் கொடுத்து, ஆயுளைப் பெறுதல் ஒல்லுமோ! ஒல்லாதன்றே? அதனால், அத் தொடர்ச்சிகளால் ஏதேனும் பயன் உண்டோ? பயனில்லாத முயற்சி என்? பயனுவதுதானே வேண்டும்? அதை எப்போதும் தொடர முயலல்வேண்டும். அஃது எளிதில் எய்தாது. அதைத் தொடர்வரே தொண்டர். அவரைத் துக்கம் முதலிய எவையும் தொடரமாட்டா. அவை தொடராமல் தொடர்ந்து காக்கும் கடவுளைவிட்டு மற்றவற்றைத் தொடர்தல் அறிவாகாது. "தொடரும் தொண்டரைத் துக்கம் தொடர்ந்துவந்து அடரும் போது அரனுய் அருள் செய்பவர்" கடவுளே. 'தொடரும்' என்றதற்குச் செயப்படுபொருள் கடவுள். வினைமுதல் தொண்டர். 'அரன்' என்பது இங்கு அழிப்பவன் என்ற பொருளது. துக்கத்தைத் தொடராமல் அழிப்பவனுகி என்றதாம்.

மருளவாவும் மனம் மயக்கத்தை விளைக்கும். பொருளவாவுக்கும் அதுவே காரணம். அருளவாப் பொருளவாவைப் போக்கும். அருளவாவை நிலைபெறச் செய்வதற்குச் சிவநாமத்தை இடைவிடாது ஓதி, நாவிற்கும், மனத்திற்கும், அறிவிற்கும், உணர்விற்கும் பழக்கம் முற்றுறச் செய்தல்வேண்டும். அதுவும் பழக்கம் தவிரப் பழகுவதாகும். சிவனெனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி யெம்மானைப் பிடித்துத் திரிந்து, தொடர்ச்சி அறுமல் பலநாள் பவாதி நாமத்தால் அழைத்தல் வேண்டும். "இவன் என்னைப் பலநாள் அழைத்துவரும் தொடர்ச்சியை ஒழிய விடாமல் கடை (வரையில் விடா)ப்பிடி உடையவனுக இருக்கின்றுன்" என்று முன்னின்று திருவருள் புரிவார் கடவுள்.

இராப்பகல் முழுதும் இடைவிடாமல், சிவநாம ஜபம்செய்து வருதல் நெடுங்காலப் பழக்கத்தால் ஆவதே. அதனுல், காலை, பகல், மாலை, நள்ளிரா ஆகிய நாற்பொழுதில் எப்பொழுதேனும் ஓதிவரும் பழக்கத்தை அடைந்து, பின்னர், எப்போதும், கடவுளாகிய தொடர்ச்சியை மறவாமையால் அமைத்த மனக் கோயிலுள் இருத்தி வழிபட்டு உய்யலாம்.

" துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்தி ராதே
அஞ்செழுத்து ஓதின் நாளும், அரனடிக்கு அன்பதாகும்
வஞ்சனைப் பாற்சோ றாக்கி வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமு தாக்கு வித்தார் நனிபள்ளி அடிகளாரே "

# சைவ சமயம்

புலவர்-முருகவேள், B.O.L.

1. [1]தொன்று தொட்டே தமிழ்நாட்டில்
        தோன்றி, மிகவும் சிறப்பினதாய்
    நின்று நிலவி வழங்கிவரும்
        நிகரில் பழைய பெருஞ்சமயம் !
    இன்றை உலகில் அறிவியலார்
        இன்னும் காண்டற் கியலாத
    ஒன்றை யல்ல உண்மைபல
        உணர்த்தி நிற்கும் அருஞ்சமயம் !

2. [2]சிந்து வெளியின் நாகரிகம்
        சிறக்க விளக்கும் செழுஞ்சமயம் !
    இந்த உலகிற் பிறசமயம்
        எதற்கும் இல்லாப் பலநலங்கள்
    சிந்தை மகிழக் கண்டுணர்ந்து
        சிறந்த சான்றோர் புகழ்சமயம் !
    அந்த மிலாநற் பெருநோக்கால்
        அனைத்தும் தழுவும் அருட்சமயம் !

3. [3]உலகம் முழுதும் ஒருகாலத்
        துலவிப் பரந்து வளர்ந்தோங்கி,
    அலகில் பெருமைத் தமிழ்மொழியோ
        டறிவிற் சிறந்த தமிழர்களின்

---

1. "Saivism is the most elaborate, influential and intrinsically valuable of all the religions of India. It is a pre-historic, purely South-Indian and Tamil religion."

—*Dr. G. U. Pope*

2. "Among the many revelations that Mohenjo-Daro and Harappa have had in store for us, none perhaps is more remarkable than this discovery that Savism has a history going back to the chalcolithic age or perhaps even further still, and it thus takes its place as the most ancient living faith in the world." —*Sir John Marshall*

3. "The practice of 'Linga Worship' was so general as to have spread itself over a large part of the habitable

கலைகள் குணங்கள் நாகரிகம்,
கருதும் மாட்சி முதலவெலாம்
நிலவச் செய்த பெருஞ்சீர்த்தி
நிலையின் மிக்க நீள்சமயம்!

4. சங்க காலத் தமிழ்நெறிதான்
தளர்ந்து பெரிதும் தடுமாறி
மங்கு நிலைமை எய்தியக்கால்,
மாண்போ டதனை வளர்த்தளிக்கத்
துங்க நால்வர் பெருமக்கள்
தோன்றி, நாட்டிற் புத்துணர்ச்சி
பொங்கி வழியத் தொண்டாற்றிப்
போற்றிக் காத்த பொருட்சமயம்!

5. சிவம்தான் தூய தமிழ்ச்சொல்லே;
செம்மை என்னும் சொல்லடியா
உவந்து தோன்றி வழங்குவதாம்;
உண்மை இதனைத் தெளிந்துணர்க!
நயந்து சைவ நன்னெறியை
நல்ல தமிழர் நெறிஎன்றே
வியந்து மகிழ்க! என அறிஞர்
விளக்கித் தேற்றும் மெய்ச்சமயம்!

---

globe, for it flourished for many ages in Egypt and Syria, Persia, Asia Minor, Greece and Italy; it still is in vigour in India and many parts of Africa and was even found in America on its discovery by the Spaniards, being regarded as the most sacred object of worship and consecreted by religion. The culture was associated with the very idea and sentiment which was regarded as ennobling to man." —*Westropp*

4. "At the very dawn of Tamilian civilisation, of which we catch a glimpse through the Tholkappiam the oldest Tamil work extant, we find the views about God, soul and matter and salvation to have become thoroughly sound and complete." —மறைமலை அடிகள்

6. அற்பு தங்கள் அருட்செயல்கள்
யாரும் காணப் பலஇயற்றிப்
பொற்பு மிகுநற் பெருங்குரவர்
புனித நால்வர் பெருமக்கள்
உற்று மிகஇஞ் ஞாலமெலாம்
ஓங்கிப் பரவு கெனத்தங்கள்
நற்பண் பாம்பே ரிரக்கத்தால்
நமக்கா வளர்த்த நறுஞ்சமயம் !

7 [5]ஒருநன் மொழியும் ஒருநாடும்
உடைய தாகாத் தெய்வநல்ம்
மருவிப் பலவாம் நூல்வளங்கள்
வாய்ந்து, சிவத்தின் அருள் ஊற்றாய்த்
திருவின் மிகுந்த தேவார
திருவா சகநற் றிருமுறைகள்
பொருவின் றுடைத்தாய்ப் பொலிந்தோங்கிப்
புகழ்மிக் குயர்ந்த பொற்சமயம் !

8. அறிவின் முடிந்த முடிபாக
அருமை பெருமை பலநிறைந்து
செறியும் [6]“சைவ சித்தாந்தம்’
என்னும் சிறந்த கொள்கையினை,
நறிய அளவும் அறிவியலும்
நல்லோர் அடைவும் நடைமுறையும்
நெறியின் அமையக் கொண்டொளிர்ந்து
நிலைபெற் றிலங்கும் நெடுஞ்சமயம் !

---

5. " In no literature with which I am acquainted has the individual religious life—struggles and dejections, its hopes and fears, its confidence and triumph—received a delineation more frank and more profound. "

—*Sir Charles Eliot*

6. " Saiva Siddhantha philosophy is the choicest product of the Dravidian intellect."—*Dr. G. U. Pope*

" The recent devolopments of western philosophy and physical science go every inch to prove the truth and value of all the fundamental doctrines, that are peculiar only to Saiva Siddhantha and not to any other religion or philosophy, ancient or modern." —மறைமலை அடிகள்

9. இறையே உயிரே உலகென்றே
இலங்கும் மூன்று பெரும்பொருளும்
முறையே அளவை நெறிநின்று,
முன்னும் பின்னும் முரணாமே
நெறியே ஆய்ந்து தடைவிடையால்
நிறுத்தும் மறுத்தும் மெய்ந்நிறீஇக்
குறையே எவரும் உணர்வுடையார்
கூறற் கொல்லாப் பொதுச்சமயம் !

10. [7]மேலை நாட்டின் அறிஞருமே
மிகவும் வியந்து பாராட்டும்
சால நல்ல பன்முடிபும்
தருக்க நெறியில் அறிவியலும்
ஞாலத் தெருட்டி அறிவுறுக்கும்
தூய நல்ல எழிற்சமயம் !
ஏல மிகச்சீர் திருத்தத்திற்
கிகலா தியைந்த இன்சமயம் !

11. இல்லென் வழக்கர் முதலாகச்
சிவாத்து விதிகள் ஈறாகச்
சொல்லும் வழக்கர் பற்பலரும்
சொல்லா நிற்கும் எத்துணையோ
பல்ல வழக்கும் கடந்துசென்று
பண்டைத் தமிழர் மறைமுடிவாம்
நல்ல வழக்கே தழீஇ நின்று
நலமே வளர்க்கும் நற்சமயம் !

12. ஒன்றாய் வேறாய் உடனாகி
உயிர்கள் தம்மோ டொருங்கியைந்து,
நின்றே அருளால் அவற்றினுக்கு
நயந்து கண்டும் காட்டியுமே

---

7. Rev. H. R. Hoisington, Dr. Carl Graul, Rev. G. U. Pope, Rev. G. M. Cobbon, Rev. H. W. Schomerus, Prof. R. W. Frazer, Rev. Mr. Gowdie, Mr. J. N. Farquhar, Rev. T. Foulkes, Rev. G. E. Phillips, Rev. C. A. Clayton, Rev. John. H. Piet and others.

நின்றே உதவும் இறைவனருள்
நிலையை, அத்து விதப்பொருளா
வென்றே உணர்த்தி மெய்கண்டார்
விளக்கி நிறுவும் மேற்சமயம் !

13. சிற்பம் ஓவம் இசைக்கூத்துச்
சிறப்பே மிக்க பிறகலைகள்
பொற்பத் தழைத்தே ஆங்காங்கும்
புதுமை புனிதம் பேரழகு
பற்ப லார்ந்து விளங்கநின்று
பண்டைத் தமிழர் நாகரிகத்தின்
வெற்றித் தூணும் கோயில்பல
மிகவும் உடைய சீர்ச்சமயம் !

14. கருதி யுணர்ந்து கலைஞரெலாம்
களித்து வியந்து மெய்ம்மறக்க
வரையும் வடிவிற் சிறந்துயர்ந்தே
மாட்சி மிகும் [8]அம்பலவாணர்
அரிய சிறப்பின் [9]அம்மையப்பர்
[10]ஆலின் நீழல் அமர்செல்வர்
முருகன் அழகு வடிவமெலாம்
முன்னி அமைத்த முதற்சமயம் !

---

8. "Of the numerous metal images found in the Tamil country and Ceylon, the Nataraja type, is one of the great creations of Indian art. The movement of the dancing figure is so admirably balanced that while it fills space, it seems nevertheless to be at rest, in the sense that a spinning top or a gyrostat is at rest; thus realising the unity and simultaneity of the Five Activities (Pancha Krithya) which the symbolism specifically designates...... Every part of such an image as this, is directly expressive; not of any mere superstition or dogma, but of evident facts. No artist of today, however great, could more exactly or more wisely create an image of that energy which science must postulate behind all phenomena. It is Poetry; but nevertheless Science." —*Sir S. Radhakrishnan*

15. எல்லா உயிரும் விழைந்துமிக்
        எய்த முயலும் இன்பதனை
    நில்லா உலகில் எய்துதற்காம்
        நெறியே அறியார் மிகமயங்கிப்
    பல்லாற் றானும் பலப்பலரும்
        பலவே குழற, அன்றொன்றே
    நல்லா றென்று கண்டுணர்ந்து
        நலக்கத் தெருட்டும் உயர்சமயம் !

16. சைவ சமயம் மிகச்சிறந்த
        தமிழர் சமயம் ! பழஞ்சமயம் !
    மெய்யிற் செறிந்த விழுச்சமயம் !
        விரிந்த நோக்கின் வியன்சமயம் !
    பொய்யில் கேள்விச் சான்றோர்கள்
        போற்றிப் புகழ்ந்த பெருஞ்சமயம் !
    வையம் முழுதும் இதுபரவி,
        மக்கள் நலமே மிகவாழ்க !

---

9. "The image of 'Artha Nariswara' is India's recognition of the mutual relationship of man and woman, the idea of the co-operative, interdependent, separately incomplete but mutually complete masculine and femine functions. The husband and the wife are to each other the best of friends, the essence of all relationship, the fulfilment of all desires, the very life itself. So is the husband to the wife and the wife to the husband."

—*Sir S. Radhakrishnan*

10. The pictures of Siva (Dakshina Moorthy), Buddha and hundreds of other saints illustrate the truth grasped by Plato and Aristotle also, that the supreme end of man is contemplation, the freedom and the peace of understanding."

—*Sir S. Radhakrishnan*

# திருச்சிற்றம்பலம் யாது?

வித்துவான் - ந. ரா. தேவராசன்,
தமிழாசிரியர், நகராட்சிக் கழக உயர்நிலைப்பள்ளி, சைதாப்பேட்டை, சென்னை

" திருச்சிற்றம்பலம் " என்பது சைவப் பெருமக்கள் அனைவராலும் "மூல மந்திரம்" போல வழங்கப்படுகின்றது. சைவத் திரு முறைகளையோ, பிற சாத்திர தோத்திர நூல்களையோ படிக்கத் தொடங் கும்போதும், படித்து முடிக்கும்போதும் அவர்கள் மொழிவது இத் தொடரேயாம். ஏதேனும் எழுதுங்காலையும் "திருச்சிற்றம்பலம்" என்று தொடங்கி அவ்வாறே முடிப்பது சைவ மரபு.

எந்தச் சொல்லையும் அதன் பொருளறிந்து வழங்கல் வேண்டும். பொருளறியாமல் ஒரு சொல்லை வழங்குவதனால் பெரும்பயன் கோடல் இயலாது. "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர்" என்ற மணிவாக்கு இங்கு நோக்கத்தக்கது. இக் கட்டுரை யில் "திருச்சிற்றம்பலம்" என்பதன் பொருள் என்ன என்பதைக் காண்போம்.

**இயற்கையும் இறையும் :—** குடத்தைக் கொண்டு அதை ஆக் கிய குயவன் உண்மையை அறிதலைப் போல இவ்வுலகைக் கொண்டு இதைப் படைத்த முழுமுதல் ஒன்று (கடவுள்) உண்மையை முன்னோர் அறிந்தனர். குடத்திற்கு மண் முதற் காரணமாகவும், தண்ட சக்க ரங்கள் துணைக்காரணமாகவும், குயவன் நிமித்தக்காரணமாகவும் இருத் தல் போல இவ்வுலகிற்கு இம் மூன்று காரணங்கள் யாவை என அவர்கள் ஆராயலாயினர்.

உலகமானது மண், நீர், தீ, வளி, வான் என்னும் ஐம்பூதங்களின் சேர்க்கையால் ஆயது என்றும், உயிர்களின் உடலங்களும் அவ்வாறு ஆயினவே என்றும் அன்னோர் உணர்ந்தனர்.

"அண்டத்திலுள்ளது பிண்டத்தில்" என்பது முதுமொழி. நமது முன்னோர்கள் அண்டத்தையும் பிண்டத்தையும் பகுத்துப் பகுத்துணர்ந்து அவற்றின் நிலைக்களமான அடிப்படைப் பொருள்கள் (தத்துவங்கள்) 36 உள்ளன எனத்தீர்மானித்தார்கள். உடம்பு (ஆன்ம) தத்துவம் 24. உணர்வு (வித்தியா) தத்துவம் 7. உணர்த்தும் (சிவ) தத்துவம் 5. இவற்றின் விவரங்களை தத்துவக் கட்டளை முதலிய நூல்

களில் பரக்கக் காணலாம். இத் தத்துவ ஆராய்ச்சியின் ஒரு சிறு கூறே இக்காலத்திய விஞ்ஞான ஆராய்ச்சி என்க. விஞ்ஞானம் பருமை (தூல தத்துவ)ப் பொருள்களாகிய பூத, பௌதிக ஆராய்ச்சியோடு நிற்கிறது. சித்தாந்த சாத்திரங்களோ நுண்மை (சூட்சும தத்துவ)ப் பொருள்களையும் ஆராய்ந்தவை.

நம் முன்னோர் இத் தத்துவ ஆராய்ச்சியோடு நின்றுவிடாமல் அத் தத்துவங்களினூடே விரவியும் அவற்றைக் கடந்தும் உள்ள முழு முதற் பொருளொன்று உள்ளதையும் உணர்ந்தார்கள். தத்துவங்கள் வாயிலாகவே தத்துவங் கடந்த பரம்பொருளை அறிந்தார்கள். தத்துவங்கள் சடப்பொருள்கள்(அறிவில்லாதவை); ஆகவே அவற்றிற்கு வேறாய் அவற்றை இயக்குகின்ற ஒரு சித்துப் பொருள் (அறிவுப் பொருள்) இருக்க வேண்டுமன்றோ! அதன் அருள் இயக்கத்தினாலேயே தத்துவங்கள் தொழிற்படுவதை அறிந்தனர். பூதங்களின் சேர்க்கையும் (உலக் உடம்புகளின் படைப்பு), அவற்றின் இயக்கமும், உயிர்களினுடைய பொறி, புலன், அந்தக்கரணங்கள் முதலிய கருவிகள் தொழிற்படுதலும், இவற்றிற்கு மேற்பட்ட (வித்யா, சிவ) தத்துவங்கள் தொழிற்படுதலும்—ஆகிய இவற்றிற்கெல்லாம் முழுமுதற் பரம்பொருளின் அருள் ஆற்றலே காரணமாகும். மேற்கூறிய தத்துவங்களையும் சாத்திர நூல்கள் பொதுவாக "மாயை" எனக் கூறும். அம் மாயா காரியமே உலகமும் உடம்புகளும். ஆகவே அண்ட பிண்டங்களுக்கு மாயை முதற் காரணம்; இறைவனது அருட்சக்தி துணைக் காரணம்; இறைவன் நிமித்த காரணம் என்று முன்னைய ஆன்றோர் முடிவு கட்டினர்.

நிமித்த காரணமாகிய ஆண்டவன் மேற்கூறிய தத்துவங்களோடு ஒன்றாய், உடனாய், வேறாய் இருக்கின்றான். இம் முறையிலேயே ஆண்டவனை நமது முன்னோர் உணர்ந்து போற்றினர்,

**சான்றுகள் :—1.** இறைவன் தத்துவங்களோடு ஒன்றுதல் :—

"பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே" — மாணிக்கவாசகர்

"இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி" — அப்பர்

"வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி
ஊனாகி, உயிராகி........" — மாணிக்கவாசகர்

"கூறும் நாவே முதலாக கூறும் கரணம் எல்லாம் நீ"
— மாணிக்கவாசகர்

"அண்ட பகி ரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி" — தாயுமானர்

இத் தொடர்களின் பொருள் வாயிலாக இறைவன் தத்துவங்களோடு ஒன்றாய் விரவி நிற்கும் நிலையை அறிகின்றோம். (விரிவஞ்சி விளக்கம் விடப்பட்டது.)

**2.** உடனாதல் :—

" அருக்கனில் சோதி அமைத்தோன் ; திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன் ; திண்திறல்
தீயின் வெம்மை செய்தோன் ; பொய்தீர்
வானில் கலப்பு வைத்தோன் ; மேதகு
காலின் ஊக்கம் கண்டோன் ; நிகல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் ; வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன்." — திருவாசகம்

" துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என்னெஞ்சம் துறப்பிப்பாய் நீ " — அப்பர்

" ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே " — அப்பர்

இச்சான்றுகளால் இறைவன் தத்துவங்களின் உடனாகி இருப்பதை உணர்கிறோம்.

**3.** வேறாதல் :—

" உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் " — சேக்கிழார்

" சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க " — திருவாசகம்

" கற்பனை கடந்த சோதி " — சேக்கிழார்

தத்துவங்களையும் அவற்றின் வாயிலாக உயிர்களையும் ஆட்டுவிப்பவன் ஆண்டவனே. அவன் தனது அருளாற்றலால் தானே ஆடி அவைகளை ஆட்டுவிக்கின்றான்.

ஆண்டவன் ஏன் ஆடவேண்டும்? நிழற் கண்ணாடியில் தோன்றுகின்ற நம் நிழல் (பிரதிபிம்பம்) ஆடவேண்டுமானால், நாம் ஆடித்தானே ஆகவேண்டும்! அதுபோல, "பேரா இயற்கை" வடிவாயுள்ள இறைவன் ஆடுவதனால்தான் தத்துவங்கள் இயங்குதல் கூடும்.

" ... ... ... ... சந்ததமும்
நீக்கமின்றி ஆடிநிழல் அசைப்பான்போல் புவனம்
ஆக்கி அசைத்தருளும் ஆணையும்......"

என்று குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவில் இவ்வுண்மையை விளக்கியிருத்தல் காண்க.

அண்ட பிண்டம் முதலிய தத்துவங்களின் ஓயா, ஒழியா இயக்கமே ஆண்டவனின் "திருக்கூத்து" (நடனம்) எனப் பண்டைச் சான்றோர்களால் கூறப்பட்டது. அண்ட பிண்டங்களின் தோற்றம், நிலைபேறு, ஒடுக்கம் ஆகிய மூன்றோடு உயிரறிவின் மறைப்பும், விளக்கமும் ஆகிய இரண்டும் சேர்ந்த ஐந்தொழில்களே அத் திருக்கூத்தின்

பயனும். இவ் வுண்மையை விளக்குவதே கூத்தப்பெருமானின் திருவுருவ அமைப்பு.

" தோற்றம் துடியதனில் ; தோயுந்திதி அமைப்பில் ;
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு " — உண்மைவிளக்கம்

[துடி - உடுக்கை, திதி - காத்தல், அமைப்பு - அமைதி காட்டும் காதலம், அங்கி - அக்கினி, நெருப்பு, திரோதம் - (மல) மறைப்பு, நான்ற மலர்ப்பாதம் - தூக்கிய திருவடி.]

பஞ்சகிருத்திய நடனமாகிய திருக்கூத்தை ஆண்டவன் எங்கிருந்து ஆடுகின்றான்? அம்பலத்திலிருந்து ஆடுகின்றான். (அம்பலம் - சபை.)

அந்த அம்பலம் எங்கிருக்கின்றது? இயக்கம்—ஆட்டம்—அசைவு உள்ள இடமெல்லாம் அம்பலமே. அண்டபிண்டங்களாகிய பூதங்களினியக்கம், பொறிகளின் இயக்கம், புலன்களின் இயக்கம், கன்மேந்திரியங்களின் இயக்கம், அந்தக்கரணங்களின் இயக்கம், வித்தியா தத்துவங்களின் இயக்கம், சிவ தத்துவங்களின் இயக்கம்—இவையெல்லாம் அம்பலத் திருக்கூத்தே—ஆண்டவனின் நடனமே.

" அம்பல மாவது அகில சராசரம்
அம்பல மாவது ஆதிப் பிரானடி
அம்பல மாவது அப்புதீ மண்டலம்
அம்பல மாவது அஞ்செழுத் தாமே "

என்றும்,

" பூதங்கள் ஐந்தில் பொறியில் புலனைந்தில்
வேதங்கள் ஐந்தில் மிகும் ஆகமந்தன்னில்
ஓதும்கலை காலம் ஊழியுடன் அண்டப்
போதங்கள் ஐந்தில் புணர்ந்துஆடும் சித்தனே "

என்றும் திருமந்திரம் கூறுதல் காண்க. இச்சான்றுகளால் "அம்பலம்" என்பது ஒருவாறு விளக்கப்பட்டது. இனித் திருச்சிற்றம்பலம் என்பது யாதெனக் காண்போம்.

திரு + சிறு + அம்பலம் = திருச்சிற்றம்பலம். 'திரு' என்பது அடைமொழி ; இங்கு தெய்வத் தன்மையை விளக்குவது. சிறிய அம்பலம் - சிற்றம்பலம் ; பெரிய அம்பலம் - பேரம்பலம். ஈண்டுச் சிறுமை, பெருமை என்பன முறையே நுண்மை (சூட்சுமம்), பருமை (ஸ்தூலம்) நிலைகளை உணர்த்தும். எனவே பருப்பொருள்கள் (ஸ்தூல தத்துவங்கள்) ஆகிய பூதங்களும் அவற்றைச் சார்ந்தவையும் பேரம்பலமாகும். மிக நுண்பொருள்கள் (சூக்கும தத்துவங்கள்) ஆகிய அந்தக்

காரணம் முதலியன சிற்றம்பலமாகும். மிக நுண்ணிய (சூட்சும) தத்துவம் "சித்து"—உயிரின் அறிவு. அதுவே சித்சபை—சிற்றம்பலம். சித்சபையே சிதம்பரம் எனவும் வழங்கப்பெறும். சித்+அம்பலம்= சிதம்பரம். சித் - அறிவு ; அம்பரம் - ஆகாயம் அல்லது பரவெளி அல்லது அம்பலம். எனவே உயிர் அறிவு—நம் அறிவு—ஆண்டவனின் நடன சபை என்பது பெற்றும்.

" அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறைநிற்கும் நிறைந்து " — திருவருட்பயன்

எனவும்,

" அகரமென அறிவாகி உலகமெங்கும் அமர்ந்து
அகரஉகர மகரங்கள் தம்மால் " — விநாயக புராணம்

எனவும்,

" அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே " — திருமூலர்

எனவும் ஆன்றோர்கள் அருளிச் செய்திருத்தல் காண்க.

திருவள்ளுவரும் இறைவனை "வாலறிவன்" என்றார். நம் அறிவிற்கு அறிவாய் விளங்குபவன் ஆண்டவன். அறிவு வடிவமே அவன்றன் இயல்பான வடிவம். "சத்தாகி என் சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே" என்றார் தாயுமானவரும்.

அறிவுக்கு அறிவாயுள்ள பேரறிவு நீக்கமற யாண்டும் நிறைந்தது. "இகபரம் இரண்டினும் உயிருக்குயிராகி எங்கும் நிறைகின்ற பொருள்" அதுவே. எனவே சிதம்பரம் இல்லாத இடமில்லை. இப்பூவுலகின்கண் தில்லை க்ஷேத்திரத்தில் உள்ள "சிற்றம்பலம்" இந்தப் பேருண்மையை நுட்பமாக உணர்த்துவதனால்தான் அந்த க்ஷேத்திரம் இப்பூவுலகிற்கு "இதயத்தானம்" எனப் பேசப்படுகின்றது. எங்கும் உள்ளது சிதம்பரம் என்பதை உணர்த்தவே ஆன்றோர் ஒவ்வொரு சிவாலயத்திலும் அம்பலக் கூத்தன் சந்நிதியை அமைத்தனர். திருமந்திரம் அருளிய திருமூலர் நாம் உய்யும்பொருட்டு இவ்வுண்மையைக் கீழ்வருமாறு அருளியிருத்தல் காண்க :—

" எங்கும் திருமேனி ; எங்கும் சிவசக்தி ;
எங்கும் சிதம்பரம் ; எங்கும் திருநட்டம் ;
எங்கும் சிவமாய் இருத்தலால் எங்கெங்கும்
தங்கும் சிவனருள் தன்விளை யாட்டதே."

ஆண்டவன் நம்மைக்கடைத்தேற்ற நம்அறிவில் இரண்டறக்கலந்திருந்து —நம் அறிவிற்கு அறிவாய் இருந்து ஆங்கு ஐந்தொழிற் றிருநடம் புரிகின்றான். உயிர்களுக்குப் பற்று (ஆதாரம்)—அறிவு ; அவ்வுயிரறிவுக்குப் பற்று பரமன்—இஃதே நம் முதியோர் கண்ட முடிபு.

> " பற்றுக்குப் பற்றய்ப் பரம னிருந்திடம்
> சிற்றம்பலம் என்று சேர்ந்துகொண் டேனே "

என்பது திருமந்திரம்.

இதுகாறும் கூறியவற்றால் ஒவ்வோர் உயிரினிடத்தும்—நம் ஒவ்வொருவரிடத்திலும் சிதம்பரம்—சிற்றம்பலம் இருப்பதை ஒருவாறு அறிகின்றோம்.

> " சிற்றம் பலமும் சிவமும் அருகிருக்க
> வெற்றம் பலம் தேடி விட்டோமே "

என்று பட்டினத்தடிகள் கவன்றார் !

நாம் " உள்ளும் புறம்பும் ஒரு தன்மைக் காட்சியராய் " திருச்சிற்றம்பலத்தை இடையறாது தரிசித்துக்கொண்டிருந்து பேரானந்தப் பெருவாழ்வை யடைய நம்மெல்லோர்க்கும் திருவருள் துணை புரிவதாக.

திருச்சிற்றம்பலம்.

---

# ஒரு குறள் எடுத்த பெரிய வடிவம்

வல்லை – பாலசுப்பிரமணியம், பி. ஏ.

குமாரக் கடவுள் பேருருவம் கொண்டதைக் கந்த புராணத்தில் கண்டோம். அனுமன் விசும்பு கொள்ளாமல் நெடிதுயர்ந்த செய்தியினை இராம காதையில் படித்தோம். கண்ணபிரான் விசுவரூபம் எடுத்ததை மாபாரதத்தில் அறிந்தோம். சிவபெருமான் விண்ணும், மண்ணும் பாதலமும் பற்றாமல் அனல் பிழம்பாகி நின்றதனை அருணாசல புராணத்தில் காண்கின்றோம். ஆனால், திருவள்ளுவ தேவர் இயற்றிய தெய்வத் திருநூலில் காணப்படும் எந்த ஒரு குறட்பாவும் விசுவரூபம் எடுத்த வரலாற்றினை யாண்டும் கண்டிலம். அஃதப்படியாயின், மேற்சொன்ன தலைப்பு பொருந்துமாறு யாங்ஙனமென நேயர்கள் வினவுவது எனக்குக் கேட்கிறது.

ஒரு குறள் வெண்பா நெடிதுயர்ந்த வடிவம் எடுத்ததாக வரலாறு ஒன்றும் இல்லையாயினும், தற்கால விஞ்ஞானிகள் அணுவின் ராட்சச வடிவத்தைத் தரிசனம் செய்து, அதன் அளவிலா ஆற்றலை அழிவிற்கும் ஆக்கத்திற்கும் பயன்படுத்துமாறு போல, வள்ளுவப் பெருந்தகையின் ஒவ்வொரு குறளும் அத்தகைய பேருருவம் எடுப்பது சாத்தி

யமே எனப் பண்டைப் புலவர்களில் இருவர் கருதலாயினர். இவர் களின் ஒருவர் பெண்பாலார். மற்றவர் ஆண்பாலார்.

"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்
குறுக தறித்த குறள்"

என்னும் அவ்வையார் புகழுரையினையும்,

"மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞாலமுழுது நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவரும் தம்குறள் வெண்பாவடியால் வையத்தார்
உள்ளுவ எல்லாம் அளந்தார் ஓர்ந்து"

என்னும் பரணரது திருவள்ளுவ மாலைப் பாடலையும் காண்க.

தான் தோன்றிய காலத்தே தன்னோடு ஒரு புதிய சகாப்தத் தையே தோற்றுவித்துக்கொண்டே எழுந்த திருக்குறளைப் பிற்காலத் துப் புலவர்கள் எப்படி எப்படி யெல்லாமோ போற்றிப் பாராட்டி னார்கள். அவற்றில் ஒருவிதம், ஒரு குறளின் கருத்தை அமைத்து ஒரு காவியமே புனைந்திட்டமையாகும். சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம் ஆகிய இந்த மாபெரும் காவியங்கள் ஒவ்வொன்றிற்கும் அடிப்படையாக ஒவ்வொரு குறட்பா அமைந் திருக்கும் பெற்றியை யான் காட்ட முடியும். ஆனால், இவை விரி வான கட்டுரைகளுக்குப் பொருள்களாய் இருத்தலின், அச்செயலை மேற்கொள்ளாது விடுக்கின்றேன்.

தெய்வச் சேக்கிழார் பெருமான் இத்தகைய காவியப் புலவர் களில் ஒருவர் ஆவர். அவர் திருக்குறளில் நன்கு தோய்ந்து அதைக் கற்றிருந்தார் என்பதை அவர் வரலாறு ஒன்றே விளக்கிவிடும். அவர் சோழ மன்னனின் அரசவை ஏறியதற்குக் காரணம் அவர்தம் திருக் குறள் கல்வியே யல்லவா? யான் மேலெடுத்துக் காட்டிய அவ்வையார், பரணர் பாடல்கள், சேக்கிழாரது கருத்தைப் பெரிதும் கவர்ந்தன. அப்பாடல்களின் நோக்கத்தை நிரூபிக்கத் தாம் ஒரு காவியம் புனைய வேண்டுமெனத் துடித்துக்கொண்டிருந்தார். அவருக்கு இத்துடிப்பு ஏற்பட்ட காலமும் சிவகதை பாடுமாறு அனபாய குலோத்துங்க சோழன் அவரை வேண்டிக்கொண்ட காலமும் கங்கை யமுனைச் சங்கமம் போல் ஒன்றுபடவே, தமிழும் சைவமும் செய்த நற்றவத் தின் பயனாகப் பெரிய புராணம் தோன்றியது.

இனி, இன்தமிழ்ச் செய்யுளால் எடுக்குமாக்கதை இயற்று வதற்கு அடிப்படையாகச் சேக்கிழார் எந்தக் குறட்பாவைத் தேர்ந் தெடுத்தார் என்பது நாம் அடுத்து ஆராயத் தக்கதாகும். இவ்வாராய்ச் சியில் நாம் அதிகம் இடர்ப்படாமலேயே, நுண்ணிய இலக்கிய நோக் குடையவர்களின் கண்ணெதிரே அக்குறள் தானே வந்து நிற்கிறது.

பாயிரத்துள் மூன்றும் அதிகாரமாகிய நீத்தார் பெருமையில் ஆருவது பாட்டாகிய,

" செயற்கரிய செய்வார்பெரியர், சிறியர்
செயற்கரிய செய்கலா தார் "

என்பதே அக்குறள் ஆகும்.

ஆயின், இக்குறளைத்தான் சேக்கிழார் தம் காவியத்திற்கு மூலப் பொருளாகக் கொண்டார் என்பதற்குச் சான்று யாது? பெரிய புராணத்தில் கூறப்பெற்றுள்ள திருத்தொண்டர்கள் செயற்கரியன செய்தவர்களா? என்ற வினுக்கள் அடுத்தடுத்து எழுகின்றன. இவ்விரண்டாம் வினுவிற்கு யான் விடையிறுக்க வேண்டாதபடி, சிவராஜ யோகியாராகிய பட்டினத்துப் பிள்ளையார் பதில் சொல்கிருர். யாருமே செய்தற்கரிய காரியத்தைப் பட்டினத்தார் செய்தாரெனத் தாயுமானவர் கூறுகின்ருர் :

" பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல்
யாரும் துறத்த லரிதரிது "

என்பது தாயுமாஞர் திருவாக்கு. அவ்வாறு பாராட்டப்பெற்ற பட்டினத்தாரோவெனில், தாமே செய்தற்கரிய சில செயல்களை வேறு சிலர் செய்ததாகப் பரவசத்துடன் பாடுகிருர் :

" வாளால் மகவரிந்து ஊட்டவல்லேனல்லன் ; மாதுசொன்ன
சூளால் இளமை துறக்கவல்லேனல்லன் ; தொண்டு செய்து
நாளாறில் கண்ணிடந்து அப்பவல்லேனல்லன் ; நான்இனிச் சென்று
ஆளாவது எப்படியோ திருக்காளத்தி அப்பனுக்கே "

என்பது பட்டினத்தார் பாடல். இதில் குறிக்கப்படுகின்ற சிறுத்தொண்டர், திருநீலகண்டர், திருக்கண்ணப்பர் ஆகிய மூன்று பெரியார்களும் பெரிய புராணத்தில் பேசப்படுகின்ற திருத்தொண்டர்கள் ஆவார்கள். பானைச் சோற்றுக்கு - ஒரு சோறு அல்ல - மூன்று சோறு பதங்காட்டிவிட்டார் பட்டினத்தார். ஆகவே, எஞ்சிய அறுபது அடியார்களும் செய்தற்கரிய செய்தவர் தாம் எனக் கொள்வதற்குத் தடை யாது ?

அது மட்டுமல்ல. செயற்கரிய செய்வார் பெரியர் அல்லவா ? தாம் அத்தகைய பெரியார்களைப் பற்றிய வரலாறுகளையே சொல்கிருர் என்னும் கருத்துப்பட, பல இடங்களில் திருத்தொண்டர்களைப் பெரியார் என்றே சேக்கிழார் குறிப்பிடுகிருர். இப்படிப்பட்ட இடங்கள் எண்ணிறந்தன ஆகும். எடுத்துக்காட்டாக மூன்று இடங்களைமட்டும் குறிப்பிடுவேன் :

(1) தடுத்தாட்கொண்ட புராணம்—செய்யுள் 105—செய்தவப் பெரியோன்
(2) இளையான்குடி மாறநாயனர் புராணம்—செய்யுள் 27—அப்பெரியவர்.
(3) எறிபத்த நாயனர் புராணம்—செய்யுள் 46—பெரியோர் செய்கை.

இவற்றையெல்லாம் நோக்கும்போது, திருத்தொண்டர் புராணத்திற்குப் ' பெரியர் புராணம் ' எனவும் ஒரு வழக்காறுண்டு என்னும் சிலருடைய கொள்கைக்கு ஏது இருக்கிறதென்றே எண்ணத் தோன்றுகிறது.

இவ்வாறெல்லாம் ஐயம் திரிபு மயக்கங்களால் நாம் அவதிப்படலாகாது என்னும் பேரருள் கருணையால், சேக்கிழார் பெருமான் ஓரிடத்திலே திருத்தொண்டர் ஒருவரை "செயற்கரும் செய்கை செய்த தீரன்" எனக் குறிப்பிட்டுள்ளார். (இயற்பகை நாயனார் புராணம் 29) மேலெடுத்துக் காட்டிய திருக்குறள் சொற்றொடரை அப்படியே எடுத்தமைத்துக் கொண்டதன் மூலம், தாம் அக்குறளைத் தான் அடிப்படையாகக் கொண்டு காவியம் புனைந்திருப்பதாகக் குறிப்பாய்—ஆனால் உறுதியாய்—விளக்கிவிட்டார். அதிலும், "செயற்கரும் செய்கை செய்த தீரனே" என்பதைக் கவிக்கூற்றாகவோ மற்றக் கதா பாத்திரங்களின் கூற்றாகவோ அமைக்காமல், சிவபெருமானே இயற்பகை நாயனாரை ஓலமிட்டு அழைப்பதுபோல் அமைத்திருக்கும் நயம் அறிந்து சுவைத்தற்குரியதாகும்.

இதுகாறும் கூறியவாற்றால், "செயற்கரிய செய்வார் பெரியர்" என்னும் திருக்குறள் சொற்றொடரை அடிப்படையாக வைத்தே பெரிய புராணக் காவியம் எழுந்ததென்பது சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டாகிவிட்டது.

மேலே, ஒரு குறள் எடுத்த பெரிய வடிவம் எனத் தலைப்புக் கொடுத்தேனல்லவா? அரைக்குறள் எடுத்த பெரிய வடிவம் என அதை மாற்றி அமைத்துக்கொள்ளுமாறு நேயர்களை வேண்டிக்கொள்கிறேன். ஏனெனில், செயற்கரிய செய்த பெரியார்களைப் பற்றிப் பெரிய புராணம் பேசுகிறதேயன்றி, செயற்கரிய செய்கலாகாத சிறியார்களைப் பற்றி அஃது யாண்டும் எதுவும் கூறாமையானென்க.

இறுதியாக, நேயர்களுக்கு ஒரு தோராயக் கணக்கு கொடுக்கப் போகிறேன். பெரிய புராணத்தில் மொத்தம் 4286 செய்யுள்கள் இருக்கின்றன. ஒவ்வொரு செய்யுளிலும் தோராயமாக *முப்பது சொற்கள் இருக்கின்றன என வைத்துக்கொள்வோம். ஆக மொத்தம், $4286 \times 30 = 1,28,580$ சொற்கள் இருக்கின்றன. மூன்று சொற்களை உடைய அரைக்குறள், சுமார் லட்சத்து இருபத்து எட்டாயிரத்து ஐநூற்று எண்பது சொற்கள் கொண்ட பெரிய புராணமாக வளர்ந்ததென்றால், பின்னது முன்னதன் விசுவரூபம் எனக் கோள்வதற்குத் தடை யாது?

---

* முப்பது என்னும் எண், மாதிரிக்காக காரைக்கால் அம்மையார் புராணத்தில், ' மான மிகு தருமத்தின் ' எனத் தொடங்கும் முதல் பாட்டிலிருக்கின்ற சொற்களை எண்ணிப் பெறப்பட்டது.

# சங்க காலத்தில் சிவன்

அ. மு. பரமசிவானந்தம், B.O.L., M. Litt.
தமிழ் விரிவுரையாளர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை

தமிழ் நாட்டில் சமய உணர்ச்சியே இடைக்காலத்தில் தோன்றிய தெனவும், பண்டைக் காலத்திலெல்லாம் தமிழர்கள் கடவுள் பற்றியே கவலையற்றிருந்தார்களென்றும் இன்று சிலர் வாதிட வருகின்றனர். அவர்கள் இடைக்காலத்தெழுந்த சமய நூல்களை யெல்லாம் அறவே உலகிலிருந்து அகற்றிவிட வேண்டுமெனவும், அனலிலிட்டுப் பொசுக்க வேண்டும் எனவும் கூடப் பேசுகின்றனர். சங்க காலத்திலும் - ஏன்? - அதற்கு முன்னரும் கூடத் தமிழ் நாட்டில் கடவுள் நெறி போற்றப்பட்டிருந்ததை அறியாமையினால் உண்டாகும் இடர்ப்பாடு அது. அவர்கள் கொள்கைப்படி, சமயம் பற்றிய நூல்களை யெல்லாம் அழிக்க வேண்டுமாயின் தமிழ் நாட்டில் ஒரு இலக்கியம் கூட வாழ முடியாது? இலக்கியங்களை இல்லையாக்கிப் பின் எதைக் கொண்டு இவர்கள் ' தமிழர் பண்பாடு ' என்று கூறிப் பெருமை அடைவர்?

தமிழ் நாட்டு வரலாறு தெரியும் நாள்தொட்டு இன்று வரைத் தமிழர் வாழ்வில் சமயம் பங்கு கொண்டுதான் வந்துள்ளது. மிகப் பழைய இலக்கணமாகப் போற்றப் பெறும் தொல்காப்பியத்தில் கடவுள் நெறி போற்றப்படுவதை அறியாதார் யார்? நிலத்தை நான்காகப் பகுத்து, அவற்றிற்குத் தீணைநிலைத் தெய்வங்கள் நால்வரையும் உண்டாக்கிக் காட்டும் ' மாயோன்மேய காடுறை உலகமும் ' என்ற சூத்திரம் அன்றைய மக்கள் போற்றிய கடவுளரைக் காட்டவில்லையா? ' கொடிநிலை, கந்தழி, வள்ளி ' என்ற மூன்றையும் தெய்வத்தொடு சார்த்திக் காட்டும் உரைகளைப் பயின்றோர் அதன் உண்மையை அறிவார். அனைத்தினின்றும் விடுபட்டுப் பற்றற்ற ஒரு பரம்பொருளே ' சந்தழி 'யாகப் போற்றப் படுகின்றது. கந்து என்றால் கட்டு அல்லது பாசம். அப்பாசம், அழிய அதிலிருந்து விடுபட்டதே கடவுளாகும். அனைத்தையும் கடந்து நிற்கும் ஆண்டவனைக் கடவுள் என்கின்றோம். அத்தெய்வத்தையே தொல்காப்பியனார் ' கந்தழி ' என்ற பெயரில் குறித்தார் என்பர். தொல்காப்பியர் காலம் குறைந்தது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாகவாவது இருக்கவேண்டு மென்பது ஆராய்ச்சியாளர் முடிபு. எனவே அந்தக் காலம் தொடங்கி அல்லது தமிழ் நாட்டு வரலாறு தெரியும் அந்தநாள் தொட்டுக் கடவுள்நெறி தமிழரால் போற்றப்பட்ட ஒன்று என்பது தேற்றமாகின்றது.

பழங்காலத்தில் தமிழ் நாட்டில் கடவுள்நெறி இருவகைச் சமயங்களாகப் போற்றப்பட்டன. கடைச் சங்க காலத்தினிறுதியில் சமணமும் பௌத்தமும் தமிழ் நாட்டில் தழைத்தோங்கின என்றாலும், அதற்கு

முன்னர் சைவம் வைணவம் என்ற இரண்டுமே வழக்கத்தில் இருந்தன என அறிகின்றோம். கடைச் சங்க இலக்கியங்களாகிய பத்துப் பாட்டு, எட்டுத் தொகை என்ற இரு தொகுதிகளிலும் சிவனும் திருமாலும் பல்வேறு இடங்களில் நன்கு போற்றப்படுகின்றனர். அந் நிலையில் சைவ சமயமும் சிவ வழிபாடும் அன்று எவ்வாறு போற்றப்பட்டன என்று அறிவதே இக் கட்டுரையின் நோக்கம்.

சிலர் அப்போது சைவம் வாழ்ந்ததே யன்றி, சிவபெருமானைப் பற்றிய பல கதைகளும், அவர் உருவத் தோற்றமும் அக்காலத்தில் இல்லை என வாதிப்பர். அதுவும் அவ்வளவு சரியான வாதமாக அமையாது. சங்க இலக்கியங்களிலே சிவன் நீண்ட சடையுடையவனாகப் போற்றப்படுகின்றான். ஆலமரத்தின் அடியில் தங்கிக் காட்சி தருகின்றான். பிறை சூடிய பிஞ்ஞகனாகவும், முக்கண்ணனாகவும், முப் புரங்களை எரித்தவனாகவும், கணிச்சி என்னும் படையை உடையவனாகவும், இடபக் கொடியை உடையவனாகவும் நீலகண்டனாகவும் பல பாடல்களில் அச்சிவன் போற்றப்படுகின்றான். இவைகளை யெல்லாம் அச் சங்க காலப் பாடல்களின் வழியே புகுந்து காணின் அக்காலத்திய சைவ நெறியையும் அச் சைவர் தம் வழிபடு கடவுளாகிய சிவனையும் பற்றி நன்கு அறியலாம்.

சங்க இலக்கியங்கள் என்பவை பத்துப் பாட்டு எட்டுத் தொகை என்ற இரு தொகை நூல்களே என்பதை மேலே அறிந்தோம். அவற்றுள் பழங்காலத் தமிழ் நாட்டைப் பலவகையில் காண முயல்கின்றனர் ஆராய்ச்சியாளர். அவ்வாராய்ச்சியின் வழியே நாமும் செல்லின் சங்க காலத்தில் சைவமும் சிவனும் போற்றப்படுவதை அறிவோம்.

'நன்று ஆய்ந்த நிமிர்சடை முது முதல்வன்' (புற. 166) என்று புறநானூறு சிவனைக் குறிக்கின்றது. நிமிர்ந்த சடைமுடியுடைய மிகப் பழமை வாய்ந்த தலைவன் என்பது பொருள். இதை முனிவர் மேல் ஏற்றிச் சொல்லுவர் சிலர். முனிவர்களே அந்தச் சடைமுடிக் கோலத்தைச் சிவ வடிவு பற்றியே பெற்றார்கள் என்பது சமய உள்ளக் கிடக்கை. எனவே முனிவர் என்று சொன்னதும், அவர் மூலம் இத் தொடர் சிவனையே குறிப்பதாகும். எனவே சடையுடைச் சங்கரன் என்பது அவர் போற்றிய தமிழ்க் கடவுளாகும்.

சிவபெருமான் நீலகண்டத்தையுடையவன், நீறணிந்த காரணத்தால் பால் போன்ற நெறியை உடையவன். இந்த உண்மையைக் கடைச் சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையார் அழகுபடக் காட்டுகின்றார். தின்றால் நெடுங்காலம் வாழவைக்கும் நெல்லிக் கனியைத் தான் உண்ணாது, ஔவைக்குக் கொடுத்தான் அதிகன். ஔவை உண்டபின் அந்தச் சாவா மருந்தின் திறத்தை யெல்லாம் புகழ்ந்துரைத்தான். கேட்ட ஔவை ஒருபுறம் மகிழ்ந்தாளேனும் மறுபுறம் அதிகனின் கொடை உளத்தை நோக்கித் துணுக்குற்றாள். அவனை அவள் வாய்

வாழ்த்திற்று. என்னவென்று? அவன் சிவன் போன்று நெடுங்காலம் வாழ வேண்டுமென வாழ்த்திற்று.

> " பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
> நீலமணி மிடற்று ஒருவன் போல
> மன்னுக பெரும நீயே " —புறம். 91

என்ற அடிகளில் தான் எத்துணைச் சிறப்பாகச் சிவன் தன்மையை ஔவையார் விளக்குகின்றார்.

இக் கறைக் கண்டத்தையும், அச்சிவன் திரிபுரம் எரித்ததையும் விளக்கும் மற்றொரு பாடலையும் இங்கு நாம் காணல் வேண்டும். மேரு மலையே வில்லாகவும், பாம்பே நாணாகவும் கொண்டு திரிபுரங்களை எரித்த வரலாறு அழகாகப் புறப்பாட்டில்போற்றப்படுகின்றது. அவர்தம் திரி புரப் போரில் அமரர் மகிழ்ந்தனர். அவுணர் அழிந்தனர். அவர்க்கு அவ்வாறு திரிபுரமெரித்து வெற்றி தந்தவன் கறைக் கண்டனாகிய நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமான். இந்த உண்மைகளை யெல்லாம் சில அடிகளில் அழகாகத் தரும் அச் சங்கப் பாடல் படித்து இன்புறத் தக்கதன்றோ ! இதோ அவ்வடிகள்

> " ஓங்குமலைப் பெருவில் பாம்புநாண் கொளீஇ
> ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
> பெருவிற லமரர்க்கு வென்றி தந்த
> கறைமிடற் றண்ணல் காமர் சென்னிப்
> பிறை நுதல் விளங்கும் ஒருகண் " —புறம். 55

சங்க இலக்கியங்களுள் ஒன்றாகிய சிறுபாணாற்றுப்படை ஆயினைப் பற்றிப் பாராட்டும்போது அவன் சிவனுக்கு ஆடை அளித்தவன் எனப் போற்றுகின்றது. அச் சிவனை ' ஆலமர் செல்வன் ' என்றே குறிக் கின்றது அது.

> " நீல நாகம் நல்கிய கலிங்கம்
> ஆலமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த
> சாவம் தாங்கிய சாந்தபுலர் திணிதோள்
> ஆர்வ நன்மொழி ஆயும் " —சிறுபாண். 96–99

என்பன அவ்வடிகள்..

இராவணனைப் பற்றிய வரலாறு நாடறிந்தவொன்று. இராவணனைப் பாராட்டுகின்றவரும் பழிப்பவரும் உள்ளனர். அவன் ஆற்றல்கள் பலவற்றுள் அவன் கைலையை எடுக்க முனைந்ததும் ஒன்று. ஆனால் அவன் அதில் வெற்றிபெறவில்லை. அந்த நிலையைத் திருநாவுக்கரசர் கூடப் பாராட்டுகின்றார். எடுக்க முடியாது வருந்தி இறைவனைப் பாட, அவன் அவ் விராவணனுக்கு அருள் புரிந்தான் என்பது வரலாறு.

இக் கதையினைக் கடைச் சங்க நூலாகிய கலித்தொகைப் பாடல் ஒன்று நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

மேருமலையை வில்லாக உடைய இறைவன் கைலைமலையில் வீற்றிருக்கின்றான். பக்கத்தில் உமையம்மையார் விற்றிருக்கின்றனர். அவர்கள் தங்கியிருக்கும் அந்த மலையை எடுக்க நினைக்கிறான் ஒருவன். ஆம். அவன் சாதாரணமானவன் அல்லன். பத்துத்தலை உடையவன். இருபது தோள்கள் உடையவன். அத்தனைத் தோள்களையும் அம் மலையின் கீழ்க்கொண்டு சென்று மலையைத் தூக்க நினைக்கின்றான். எடுக்க நினைத்த காரணத்தை அக் காலப்புலவர் விளக்கவில்லை. நினைத்து கீழ் புகுந்து விட்டான். ஆனால் முடியவில்லை. தோள்கள் நெரிந்தன. துயருற்றான். இந்த நிலையைக் கலித்தொகை ஆசிரியர் படம் பிடித்ததை ஒப்பக் காட்டுகின்றார்.

“ இமைவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந் துயர்மலை இருந்தனனாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையின் கீழ்ப்புகுந்து அம்மலை
எடுக்கல் செல்லாது உழைப்பவன் போல் ” —கலி. 38

என்ற அடிகள் எண்ணத் தக்கன அல்லவோ !

இக் கலித்தொகையின் மற்றொரு பாடல் (114) ‘ மிக்கொளி தாழ் சடை மேவரு பிறைநுதல், முக்கண்ணன் ’ என்று சிவனைப் பாராட்டுகின்றது. ‘ பெரும்பெயர்க் கணிச்சியோன் மணிமிடறு ’ என்று அவனது நீலகண்டத்தையும் கணிச்சிப் படையையும் பாராட்டுகின்றது மற்றொரு கலித்தொகை (105). கலியின் 26-ம் பாடல் அவனை ‘ ஆனேற்றுக் கொடியோன் ’ எனப் பாராட்டுகின்றது.

இனி அகநானூறு என்னும் மற்றொரு சங்கத் தொகுதி அவனை முக்கண்ணன் என்றும், அவன் தங்குமிடம் ஆலமுற்றம் என்றும் அழகுறக் காட்டுகின்றது. அகவொழுக்கத்தைப் பாடவந்த புலவர்களெல்லாம்கூட இவ்வாறு ஆண்டவனை உவமை வாயிலாகவும் பிற வாயிலாகவும் பாராட்டுகின்றார்கள் எனின் அக்காலத்தில் சிவனும் அவனைப் போற்றும் சைவமும் பெற்றிருந்த உயர்வு பேசற்பாலது.

‘ ஞாலம் நாறு நலங்கெழு நல்லிசை
நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்
ஆல முற்றம் ’ —அகம். 181

என்றது அகப் பாடல்.

இவ்வாறு சங்க காலப் பாடல்கள் பல சிவனைப் பாராட்டுகின்றன. இன்னும் எத்தனையோ காண இயலும். சான்றுக்கு இவ்வொன்றிரண்டு போதும் என நினைக்கின்றேன். சிவன் மட்டுமன்றிச் சைவத் தொடர்

புடைய முருகனைப் பற்றிய பாடல்களும் பலஉள. பத்துப் பாட்டில் முதற் பாட்டாகிய திருமுருகாற்றுப்படை முழுதுமே இம் முருக வழி பாடுதானே. தமிழ் நாட்டில் முதன் முதன் தோன்றியதென இன்று காணப்படும் வழிபாட்டு நூல் இத் திருமுருகாற்றுப்படையே. அதிலே முருகன் ஏற்றத்தையும், சைவச் சிறப்பையும் நக்கீரர் அழகுபடக் காட்டுகின்றார். பரிபாடல் என்னும் சங்க நூல் முருகனையும் திரு மாலையும் போற்றுகின்றது. இன்னும் சங்க இலக்கியங்களில் சைவக் கொள்கைகளாகிய, தொடரும் பிறவிகள், புண்ணிய பாவங்கள், முதலிய பலவும் வழிபாட்டு முறைகளும் பேசப்படுகின்றன.

இவைகளை யெல்லாம் வைத்து நோக்கின் 'சிவ வழிபாடு தமிழ் நாட்டில் இடைக் காலத்தில் வந்தது என்றும் ஆகவே தமிழர் சமயக் கருத்து உள்ளவர்கள் அல்லர் என்றும்' கூறுவார் வாதம் பயனற்றது என விளங்கும். தமிழன் சமயப்பற்று அற்றவன் என்பது, சங்க இலக்கியங்கள் அனைத்தும் இல்லையாகச் சொல்லின் ஒருவேளை இயல லாம். ஆனால் சங்க இலக்கிய மின்றேல் தமிழன் வாழ்வே இல்லையே!

மேலே கூறியவாற்றால், தமிழர் மிகப் பழைய காலம் தொட்டே சமய நெறிபற்றி வாழ்ந்தவர் என்பதும், சங்க காலத்தில் தமிழ்நாட்டில் சைவமும் வைணமும் நிலைபெற்றிருந்தன என்பதும், சிவனைப்பற்றி வழங்கும் பல வரலாறுகளும் கதைகளும் சங்க காலத்திலேயே தமிழ் நாட்டில் வழங்கி வந்தன என்பதும் அவற்றால் சிவன் தமிழரால் பழங் கால முதற்கொண்டே வழிபடப் பெற்ற ஒரு பெருந் தெய்வம் என்பதும் தேற்றம்.

---

காஞ்சிபுரத்தில்

# தமிழ் மாபாடியத் தலைவர்

திரு. வி. திருஞானசம்பந்த முதலியார், தமிழாசிரியர்,
பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகச்
செயலாளர்

தேசமெல்லாம் புகழ்ந்தாடுங் கச்சித் திருநகர்க்கண் திருவாவடுதுறை ஆதீனக் கிளை மடாலயம் ஒன்று இருக்கின்றது. அது காஞ்சியில் ஆளுடைய பிள்ளையார் பாளையத்தில் வேகவதி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது. இங்கு மெய்கண்டதேவ நாயனர் மூல உருவமும், கச்சியப்பமுனிவர், சிவஞான முனிவர்களின் மூல உருவங்களும், கச்சியப்ப முனிவர் சமாதி நிலையமும் உள்ளன. இம் மடாலயத்தில் மாதவச் சிவஞான முனிவர்பெருமான் பன்னிரு மாணவர்களுடன் வீற்றிருந்து தெய்வச் செந்தமிழ் மாபாடியம் செய்தருளினர். இதுவே

சிவஞான மாபாடியமாகும். இப் பாடியம், சைவசித்தாந்த சாத்திரங்களின் தலைநூலாய், தமிழ்மொழிக்கோர் சிரோ ரத்தினமாய், சித்தாந்த சைவத் திறத்தின் நுணுக்கமான அரிய கருத்துக்களை வேறெந்த நூலினும் காண இயலாதனவாகக் கொண்டு விளங்குவதாய் இயங்கி வருகின்றது.

சிவஞான மாபாடியத் தலைவர், கி. பி. 17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் காஞ்சி மடாலயத்தில் தங்கி இருந்தனர். அக்காலத்தில் செங்குந்தர் குலத்தலைவர் மணியப்ப முதலியார் என்பவர் சுவாமிகளைப் பாதுகாத்து வந்தனர். சுவாமிகள் தனித்து நீராடுவதற்கு ஒரு திருக்குளமும், சிவபூசை செய்யத் திருமண்டபமும், யோகிருக்கக் கல்லறைக் குகைகளும் முதலியார் அமைத்துக் கொடுத்திருக்கின்றனர்.

சுவாமிகள் முப்பதுக்கு மேற்பட்ட செய்யுணூல்களும், இலக்கண நூற்களும், தருக்க நூலும், உரைநடை நூல்களும் இங்கிருந்தே இயற்றியுள்ளனர். மணியப்ப முதலியாரின் வேண்டுகோளால் காஞ்சிப் புராணம் இயற்றினார். பின் கடைசியாகத் தமிழ் மாபாடியம் எழுதத் தொடங்கினர். சுவாமிகள் மாணவர்களுக்குப் பாடம் கற்பித்த கூடமும், நூல்களியற்றிய திண்ணையும், மாபாடியம் எழுதிய மண்டபமும் இன்றுமுள்ளன. சுவாமிகள் இங்கிருந்த காலங்களில் அநேக அதிசய நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. அவைகளை விரிக்கிற் பெருகும். சைவாபிமானிகள் காஞ்சித் தல யாத்திரைக்கு வருங்காலம் மறவாது வந்து தரிசிக்க வேண்டிய தமிழ் மாபாடியத் தலைவர் இருந்த மடாலயம் இன்றும் நின்று நிலவுகிறது. இது தற்சமயம் காஞ்சி மெய்கண்டார் கழகத்தார் பார்வையிலிருந்து வருகிறது. சிவஞான சுவாமிகளின் திருவடிகள் நடமாடிய திருமடாலயம் வாழ்க.

திருச்சிற்றம்பலம

---

# சைவ சமயம் தமிழ்நெறியே

**வித்துவான் சி. அருணைவடிவேலு முதலியார்,**
*தமிழாசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்*

பாரதகண்டத்தில் மிகப் பழைய காலத்தே தோன்றி நெடுநாட்களுக்கு முன்பே மறைந்த சமயங்கள் சில; இடைக்காலத்தே தோன்றி இடைக்காலத்தே மறைந்த சமயங்கள் சில; சைவ சமயம் ஒன்றே தோற்றம் அறியப்படாது தொன்றுதொட்டு இன்றுகாறும் நின்று நிலவிவரும் சமயமாகும். இது சைவ சமயத்தின் மரபுரை மட்டுமன்று; வரலாற்று நெறியினர் தாமும் உடம்பட்டது.

சைவ சமயம் ஒழிந்த ஏனைச் சமயங்கள் வரலாற்று நெறியினரால் கால வரையறை கூறப்பட்டும், தத்தம் வழி நிற்பவரால் தோற்றம் இன்மை பேசப்பட்டும் நிற்கும். எடுத்துக் காட்டாக, பௌத்த சமயத்தை, "கி. மு. 6-ம் நூற்றாண்டில் நேபாள நாட்டில் 'கபிலவஸ்து என்னும் நகரத்தின் அரசனாகிய 'சுத்தோதனன்' அவனது மனைவி 'மாயாதேவி' என்பவர்க்கு அருமைப் புதல்வராய்த் தோன்றிய 'சித்தார்த்தர்' என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது" என்பர் வரலாற்று நூலார். ஆயினும் அதனைத் தோற்றம் இன்றி என்றும் உள்ள ஒரு நெறியாகவே அச்சமயத்தினர் கொள்வர். அவர் கூறுமாறு :

"இறைவன் பெருங்கருணையாளன் ஆகலின், அவன் உயிர்கள் படும் துன்பத்தினைக் கண்டு இரங்கி, புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி மற்றும் பலவாகிச் செல்லாநின்ற தாவர சங்கமங்களாகிய எல்லாப் பிறப்பிலும் எக்காலத்திலும் பிறந்து அவற்றிற்குத் துன்ப நீக்கம் உண்டாகும் வழியை உணர்த்தியருளுவன். அம்முறையில் அவன் மானுடப் பிறப்பில் வருங்கால் புத்தன் என்று அழைக்கப்படுவன்; அதனால், உலகில் தோன்றி மறைந்த புத்தர்கள் பலர் ; இனித் தோன்றும் புத்தர்களும் பலர்" என்பது.

'இங்ஙனமாகலின் சித்தார்த்தரும் மேற்கூறிய புத்தருள் ஒருவரேயன்றி, அவர்தாமே ஆதிபுத்தரும் அல்லர்; புத்தர் என்று சொல்லப்படுவார், சித்தார்த்தர் ஒருவர்தாமும் அல்லர்' என்பதும், 'ஆதி புத்தர் இன்னார் என்பதும், அவரது தோற்றம் முதலியனவும் நம்மனோரால் அறியவாராது' என்பதும் அவரது கருத்து.

இங்ஙனமே ஆருகத (ஜைன) சமயத்தினை வரலாற்று நூலார், (சித்தார்த்தருக்குச் சிறிது முன்னோ பின்னோ) வர்த்தமான மகாவீரர் காலத்தில் அவரால் தோற்றுவிக்கப்பட்டதெனக் கூறுவர். ஆருகதர் அவ்வாறின்றி, "மேலே வெளியில் உள்ள பொன்னெயில் வட்டத்திருக்கும் அருகக் கடவுள் சொல்ல, அச்சொற்களை அங்குள்ள சித்தர் கேட்டு நிலவுலகிற்குத் தரவந்த நெறியே ஆருகத சமயம்" எனவும் "அச்சமயத்தின் வழிநின்று வீடு பெற்றோர் 'தீர்த்தங்கரர்கள்' எனப்படுவர்" எனவும், "அத்தகைய தீர்த்தங்கரர்களுள் வர்த்தமான மகாவீரரும் ஒருவர்" எனவும் கூறுவர்.

பிறசமயத்தினரும் இங்ஙனமே யாதானும் ஓராற்றால், தங்கள் சமயம் காலவரையறையைக் கடந்தது, என்றும் உள்ள சமயம் எனவே கூறிக்கொள்வர். அங்ஙனம் அவர்கள் தம் அறிவுகொண்டு தங்கள் சமயம் காலவரையறையைக் கடந்து என்றும் உள்ள சமயம் என்பதை எத்துணைப் பொருத்தமாகக் கூறினும், அவர்தம் கூற்றினை வரலாற்று நூலார் கொள்ளாது, தாம் கூறும் காலவரையறையைக் கூறியே போதற்குக் காரணம், அச்சமயங்கள் அவர் கூறும் கால எல்லைகட்கு முன்பு

இருந்தன என்றற்கு யாதோர் அறிகுறியும் காணப்படாமையேயாம். இந்நிலை சைவ சமயத்திற்கு இல்லை.

சைவ சமயத்தினர் தங்கள் சமயத்தின் வரலாற்றினைக் கூறுமாறு இது: "உலகத்தைப் படைத்த இறைவன், அப்படைப்புக் காலத்தே உயிர்கள் உண்மை உணர்ந்து உய்தற் பொருட்டு 'வேதம்' என்னும் பொது நூலையும், 'சிவாகமம்' என்னும் சிறப்பு நூலையும் அருளிச் செய்தான்; அவற்றுள் வேதத்தின் நுண்பொருளைச் சிவாகமத்தின் வழித்தெளித்துக் காட்டிவரும் நெறியே சைவ சமயம்."

இதனால், வேத சிவாகமங்கள் காலவரையறைக்கு உட்படாதன எனக் காட்டி, அது வாயிலாகச் சைவ சமயத்தினது தோற்றம் கால வரையறைக்கு உட்படாதது எனக் காட்டப்படுதலை உணரலாம்.

இவற்றுள் வேதசிவாகமங்கட்கு வரலாற்று நூலார் கால வரை யறை கூறுவர். ஆயினும், அவற்றின் வழியது எனப்படும் சைவ சம யத்தின் தோற்றத்திற்கு அவர் காலவரையறை கூறமாட்டார்; இதுவே, மேற்காட்டிய முறையில் சைவ சமயத்திற்கு உள்ள ஒரு தனிச் சிறப்பு.

"வேதங்கள் ஆரியர் இந்திய நாட்டிற்கு வந்தபொழுது சிந்து நதிக்கரையில் அவரால் செய்யப்பட்டன" என்பதும், "ஆகமங்கள் ஆரியர் வந்த பின்னர்த் தமிழர் தம் கொள்கைகளை விளக்குதற் பொருட்டு வடமொழியில் எழுதினர்" என்பதும், "ஆரியர் வருதற்கு முன்பே இந்திய நாட்டில் சிவ வழிபாடு செழிப்புற்றிருந்தது" என்ப தும் வரலாற்று நூலார் கூறும் கூற்றுக்கள். ஆரியர் வருவதற்கு முன்பே, அஃதாவது வரலாற்று நெறியின்படி வேத சிவாகமங்களுக்கு முன்பே சிவ வழிபாடு பரதகண்டத்தில் செழித்தோங்கி இருந்த தென்று வரலாற்று நூலார் கூறுதற்குக் காரணம், சிந்து வெளிப் பகுதி யில் 'மோகஞ்சதாரோ,' 'ஹாரப்பா' என்னும் இடங்களில் புதை யுண்டு கிடந்து, அண்மையில் அகழ்ந்து காணப்பட்ட நகரங்களிற் காணப்படும் சில வலிய சான்றுகளேயாம். அவற்றிற்கு முன்பே இருக்கு வேதம் முதலியவற்றிற் காணப்படும் சில குறிப்புக்கள் பற்றி வரலாற்று நூலார் இக் கருத்தை ஒருவாறு வெளியிட்டுவந்தனர் எனி னும், இவை கிடைக்கப்பெற்ற பின்பு இக்கருத்து அவர்கட்கு வலி யுற்றதாய்விட்டது.

"சிவ வழிபாடு ஆரியர் வருவதற்கு முன்பே பரத கண்டத்தில் செழிப்புற்றிருந்தது" என வரலாற்று நூலார் கூறுகின்றனரேயன்றி, அஃது எப்பொழுது தோன்றிற்று என்பதைக் கூறமாட்டாதார் ஆகின்றனர். ஆகவே, சிவவழிபாட்டு நெறியாகிய சைவசமயம் தனக்கு முதனூல்களாக இஞ்ஞான்று சொல்லிக் கொள்ளும் வேத சிவாகமங்கட்குக் கால வரையறை ஓராற்றாற் கூறப்படினும், அவற்றின் வழித்தாயது எனப்படும் சைவ சமயத்திற்குக் கால வரையறை ஓராற்றா னும் கூறப்படாமை தெளிவு.

இனிச் சிந்துவெளியில் ஆரியர் வருகைக்கு முன்பே சீரிய வாழ்க்கையை உடையவராய்த் திகழ்ந்த மக்கள் தமிழ் மக்களே என்பதும் வரலாற்று நூலார் கூறுவதொன்றாகலின் அவர்களது நெறியாகிய சிவவழிபாட்டு நெறியும் தமிழர் நெறியே என்பது சொல்லாமலே அமையும்.

இங்ஙனமாகவும், இக்காலத்திற் சிலர், முன்னோர் சென்ற வழியே தாமும் செல்லுதலாகிய மரபு நிலையையும் பற்றாது, வரலாற்று நெறியிலேயும் முற்றிலும் செல்லாது, வரலாற்று நூலார் கூறுவனவற்றை, இந்திய மக்களிடையே 'ஆரியர், தமிழர்' என்னும் வேற்றுமையை உண்டாக்கும் அளவிற்கே பயன் படுத்திக்கொண்டு, "சிவ வழிபாடு—ஏன்? சமயம் என்பதே ஆரியரால் தமிழரிடையே புகுத்தப்பட்டன" எனக் கரைவர். அக் கரைவினால், சில இளைய தமிழ் உள்ளங்கள் கரைந்து சமயப் பற்றை விடுத்து ஓடுவவாகின்றன. அவைகளை அவற்றிற்கு விருப்பமான வரலாற்று நெறியானே தடுத்து நிறுத்தி, அகலமும் ஆழமும் உடையனவாய்ப் பயன்படச் செய்தல் அறிஞர் கடனாகும்.

வரலாற்று முறைகொண்டு, இந்திய மக்களை 'ஆரியர்' என்றும், 'தமிழர்' என்றும் பிரித்துக் காணும் வழி சிவ வழிபாட்டு நெறி தமிழர் நெறியே யாதலை மேலே காட்டினாம்.

இனி, இஞ்ஞான்று பரத கண்டத்திடைக் காணப்படும் சமய நூல்களும், கடவுள் வழிபாட்டு முறைகளும், சமயச் சடங்குகளும், பிறவும் எல்லாம் ஆரிய மொழியாகவே காணப்படுதல் பற்றியும், ஆரியத்தினையே தமது மொழியெனக் கொண்டு ஏனைய இந்திய மொழிகளைப் புறக்கணிப்பாகக் கருதுவோர் இந்திய மக்களில் ஓர் உயர்ந்த இனத்தவராகவும் சமயத் தலைவராகவும் காணப்பட்டு வருதல் கொண்டும், 'ஆரியராவார் வேற்றுநாட்டினின்றும் போந்தவரே' என்னும் அளவிற்கே வரலாற்று நூலினைத் தெரிந்து, ஏனைய பகுதிகளில் அதன்கண் தெளிவில்லாதவராய், "சமயம் என்பதே ஆரியரால் தமிழரிடைப் புகுத்தப்பட்டது" எனக் கூறுவார் கூற்றுப்பற்றி ஒருசில சொற்கள் சொல்லவேண்டுவது இன்றியமையாததாகின்றது.

'ஆரியர் இந்திய நாட்டிற்கு வந்தபொழுது அவர்கள் பண்பாடில்லாதவராகவே இருந்தனர்' எனவும், 'அக்காலத்தில் இந்திய நாட்டில் வாழ்ந்தவர் தமிழ் மக்களே' எனவும், 'அவர்கள் அப்பொழுது சீரிய வாழ்க்கை உடையவராகவே இருந்தனர்' எனவும் வரலாற்று நூலார் கூறுவன, 'சமயம் என்பது ஆரியருடையதே' என்பார்க்கும் உடன்பாடானவையே. அங்ஙனமாக, இருசார் மக்களும் கலக்கும் காலத்தில், இந்நாட்டில் சீரிய பண்பாட்டுடன் வாழ்ந்த பெரும்பான்மையரான மக்களால், வேற்று நாட்டினின்றும் பண்பாடின்றி வந்த சிறுபான்மையரான மக்கள் மாற்றம் எய்தினர் என்றலே பொருந்

துவதன்றி, வேற்று நாட்டினின்றும் பண்பாடின்றி வந்த சிறுபான்மை யரான மக்களால், இந்நாட்டில் சீரிய பண்பாட்டுடன் வாழ்ந்த பெரும் பான்மையரான மக்கள் மாற்றம் எய்தினர் என்றல் எங்ஙனம் பொருந் தும் ? பொருந்தாமையால், வேற்று நாட்டினின்றும் போந்த ஆரிய மக்கள், இந்நாட்டில் வாழ்ந்திருந்த தமிழ் மக்களது சீரிய வாழ்க்கை யைக் கண்டு, அந்நிலையினைத் தாங்களும் அடையப் பெரிதும் முயன்று, தமிழ் மக்களிடையே அன்றாட வாழ்க்கையிலும், சிறப்பு நிகழ்ச்சிகளி லும் இயல்பாகக் காணப்படும் ஒழுக்க முறைகளையும் பிறவற்றையும் தங்கள் மொழியில் ஒழுங்குபட்ட நூல்களாக்கிக்கொண்டு, அவற்றைத் தம் இனத்தவர்க்கு ஓதுவித்தும், பயிற்றுவித்தும் வந்தனர் எனக் கொள்ளுதலே பொருந்துவதாம்.

இங்ஙனமாகவே, ஆரிய மொழியில் பல மாறுதல்கள் உண்டாகி, நூல்களும் பல்குவவாயின. ஆரியர் இந்தியாவின் பல பகுதிகளிலும் சென்று தங்கினமையாலும், தமிழ் மக்களது அன்றாட வாழ்க்கை முதலியவற்றிற்கு அவரது மொழியில் நூல்கள் ஏற்பட்டமையாலும் ஒழுக்க நெறி, வழிபாட்டு முறை முதலியவற்றிற்கு நாளடைவில் ஆரிய மொழியே மொழியாயிற்று. அதனாலே, நாளடைவில் ஆரிய மக்கள் உயர்ந்தோராகவும், சமயத் தலைவராகவும் கொள்ளப்பட்டனர். இது அவர் தம் உழைப்பின் பயனெனக் கொள்ளல் வேண்டும். இதனானே 'சமயம்' என்பது ஆரியர் வருகைக்குப் பின்பே தமிழ ரிடைத் தோன்றிற்று என்றல் கூடாமை யறிக.

அன்றியும் சமயச் சார்பான நூல்களும் பிறவும் ஆரிய மொழியின வாகவே காணப்பட்ட போதிலும், சமயக் கொள்கையினை இனிது விளக்கும் சொற்கள் பல, தமிழ்ச் சொற்களாகவே தமிழில் அன்றும் இன்றும் இருந்துவருகின்றன. அவை : கடவுள், இறைவன், இயவுள், புத்தேள், அணங்கு, கூற்றம், சூர், பேய், கழுது, கூளி, பாரிடம், கொற்றவை, அறம், மறம், ஊழ் முதலாகப் பல. இவைகளால் குறிக்கப் படும் பொருள்கள் பலவும் தமிழர் கொள்கை ஆகுமானால், தமிழ் மக்களைச் சமயக்கொள்கை இல்லாதவர் என்றல் எங்ஙனம் இயலும் !

மேலும், வரலாற்று முறை பற்றி இந்திய மக்களை ஆரியர், தமிழர் எனப் பிரிப்பவர் 'ஆகமங்கள் தமிழ் மக்களாற் செய்யப்பட்டன' என வரலாற்று நூலார் கூறுதலை மறந்துவிடுதல் கூடாது. இன்னும் 'உபநிடதங்களுட் சிலவும் அத்தகையன' என்பது அவர் கருத்தென் பதையும் உணர்தல் வேண்டும். ஆகவே, சில பல கருத்துக்கள் சொல் லால் வடமொழியாகக் காணப்படுதல் கொண்டும், வடநூல்களில் காணப்படுதல் கொண்டுமே அவைகளை ஆரியருடையன என்று கூறி விடுதல் கூடாததாம். எந்த ஒரு மாறுபட்ட கொள்கைக்குங்கூட அக் கொள்கையினர் அக்காலத்தில் வடமொழியில் நூல் செய்திருத்தல் இங்கு நினைக்கத்தக்கது.

அங்ஙனமாயினும் இஞ்ஞான்று ஆரியர் ஒழுக்கங்களும், தமிழர் ஒழுக்கங்களும் கலந்துள்ளன என்றே கூறவேண்டி யிருத்தலால், தமிழர் நெறியை இன்னதெனத் துணிதல் எவ்வாறெனின், தமிழ் மக்கள் அனைவர்க்கும் ஒப்ப உடன்பாடாக உள்ள பழந் தமிழ் நூல் களில் காணப்படும் நெறியே தமிழர் நெறியெனக் கொள்ளல்வேண்டும். ஏனெனிற், கூறுதும் :

இரண்டு இனத்தவர் ஒருங்கு கலந்து வாழும் நிலை ஏற்பட்ட பொழுது, அவ்வவ்வினத்தில் உள்ள பெருமக்கள் தத்தம் நெறியினைப் பாதுகாத்தற்கு ஆவன செய்வர். அங்ஙனம் செய்யப்பட்டவையே பழந் தமிழ் நூல்கள் எனப்படும் சங்கத்துச் சான்றோர் செய்யுட்கள். சங்கச் செய்யுட்கள் எனப்படும் பாட்டும், தொகையும், திருக்குறளும் தமிழ் மக்கள் அனைவர்க்கும் உடன்பாடாய பழந் தமிழ் நூல்களாம். ஆகவே, அவற்றுள் யாண்டும் ஒருபடித்தாய்ப் பேசப்பட்டுவரும் நெறியே தமிழர் நெறியாமென்க. அவற்றது நெறியையும் தமிழ் நெறி அன்றெனக் கழித்து வேறொரு நெறியினைத் தமிழர் நெறியாக எவரே னும் கூறப்புகுவராயின், அதற்குச் சான்று ஏதும் இன்மையின், அஃது அரங்கின்றி வட்டாடியதனோடு ஒப்பதேயாகும்.

இதனால், தமிழ் நெறியினை ஆராயப்புகுவார் அதன் காலத்தைத் தனித் தமிழ்க் காலம், வேதாகம காலம், சங்க காலம் என மூவகைப் படுத்தி ஆராயலாம். அவற்றுள், 'தனித் தமிழ்க் காலத்துத் தமிழர் நெறி சிவ வழிபாட்டு நெறியே' என்பது முன்பே காட்டப்பட்டது. வேதாகம காலத்திலும் சிவவழிபாடே முதன்மையாகக் கொள்ளப்பட்ட தென்பதற்குத் தக்கனது வரலாறே போதிய சான்றாம். இன்னும் வேதங்களால் குறிப்பிடப்படும் முழுமுதற் கடவுள் சிவபெருமானே என்பதனை இனிது விளக்கும் ஆராய்ச்சி நூல்களாக அன்று முதல் இன்று வரையும் தோன்றி வளர்ந்தவை பல. அவற்றின் கருத்துக்களை எல்லாம் இங்கு எடுத்துக்கூறப் புகின் மிக விரியும்.

இனிப் பழந்தமிழ் நூல்களை நோக்குமிடத்து அவைகளினும் சிவபிரானுக்கே முதன்மை பேசப்படுகின்றமை தெரியலாம். பத்துப் பாட்டுள் ஒன்றாகிய 'மதுரைக்காஞ்சி' என்னும் நூலில், மக்கள் ஆடவரும் பெண்டிருமாகத் தம் குழந்தைகளுடன் சிவபிரானைத் தலைவ னாகக் கொண்டு கடவுளர் வழிபாட்டினைச் செய்யச் சென்றமை கூறப் படுகின்றது. (அடி 453—66) புறநானூற்றில் ஒரு பாடல் (56) கடவுளர்களை எடுத்தோதுமிடத்துச் சிவபிரானை முதற்கண் வைத்துக் கூறுகின்றது. மற்றொரு பாடல் (166) அப்பெருமானை "முது முதல் வன்" எனக் குறிப்பிடுகின்றது. இன்னொருபாடல் (6) பாண்டிய மன்னனை நோக்கி, "முக்கட் செல்வரது கோயிலை வலஞ்செய்யுமிடத்து மட்டுமே உன்குடை பணிவதாகுக" என்று கூறி அவனை வாழ்த்து கின்றது. இங்ஙனம் கூறப்படும் தமிழ் மரபு நோக்கியே இளங்

கோவடிகளும், சீத்தலைச் சாத்தனாரும் தங்கள் காப்பியங்களில் சிவ பிரானை, "பெரியோன்" எனவும், "இறையோன்" எனவும் குறிப் பிடுவதும், தேவர் கோட்டங்களில் நாள்தோறும் விடியல் வழிபாடு செய்யுங்காலத்தும், ஆண்டுதோறும் சிறப்பாக விழா வெடுக்குங் காலத் தும் சிவபிரான் கோயிலை முதலாகக்கொண்டே செய்யப்பட்டன எனக் கூறுதலும் செய்வாராயினர். இங்ஙனம் பழந்தமிழ் இலக்கியங்களில் பலதிறத்தாற் பெறப்பட்டுக் கிடக்கும் சிவபிரானது முதன்மையை இன்னும் விரிக்கிற் பெருகும்.

இனித் திருக்குறள் பொதுமறையாகலின், அது சிவபிரானை உருவு, பெயர் முதலியவற்றாற் சுட்டிக்கூறாது, அப்பெருமானது இயல்பினையே இறைவன் இயல்பாகப் பெறவைக்கின்றது. அதற்குக் காட்டாகச் சில வருமாறு :

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேரா தார்" எனவும், "பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" எனவும் கூறியவற்றால், பிறவி நீங்குதற்கும், பிறவிக் குக் காரணமான பற்று நீங்குதற்கும் இறைவனடியைச் சேர்தலும், பற்றற்றான் பற்றினைப் பற்றுதலும் இன்றியமையாதன எனக் குறிப் பிட்டமையின், இயல்பாகவே பிறவி இன்மையும், இயல்பாகவே பற்றின் மையும் உடையானே இறைவன் என்பது பெறப்பட்டது. "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்" என்பதனுள் உலகிற்கு முதல்வனை "உலகியற்றியான்" எனக் குறிப்பிடுதலானும், "முறை செய்து காப் பாற்றும் மன்னவன் மக்கட்கு - இறையென்று வைக்கப்படும்" என்பத னுள் "காப்பாற்றும்" எனக் கூறிய குறிப்பினாலும், "ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு - ஆழி எனப்படுவார்" என்பதனுள், முதல்வன் ஆணையால் தோன்றி நிற்கும் உலகிற்கு, அவன் ஆணையானே 'ஊழி பெயர்தல்' என்னும் இறுதிக்காலம் உளதாவதாம் என்பதனை உட்கொண்டு கூறினமையானும், உலகத்தைப் படைத்தல், காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களை உடையவனே இறைவன் என்பது பெறப்பட்டது. "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று - நிலை யாமை காணப்படும்" என்பதனால், பற்றுள் வழிப் பிறவியறாமையும் பற்றில் வழிப் பிறவி உறாமையும் எதிர்மறையாற் பெறப்பட்டன. படவே, உயிர்கள் நலங்கருதியானும் பிற எவ்வாற்றானும் பிறவி உறாதவனே பற்றற்றான் எனப்படும் இறைவன் என்பது பெறப் பட்டது. "மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கலுற் றார்க்கு உடம்பும் மிகை" என்றதனால், பற்றறுத்துப் பிறவிப் பெருங் கடலை நீந்த வேண்டித் தன்னை அடைந்தார்க்கு உடம்பென்னும் சிறைக் கூடம் எவ்வாற்றானும் இல்லையாம்படி தகர்த்து, அவர், முன்னர் உடம்புகொண்டு காலத்தானும், இடத்தானும், முன்னிலைப் பொருளா னும் வரம்புபட்டு நின்று நுகர்ந்த இன்பம் போலாது, எவ்வாற்றானும்

வரம்பின்றி உளதாகும் உள்ளின்பமாய், அவர்களால் இனைக்கப்பட்டு நிற்கும் இன்பப் பொருளாகின்றவனே இறைவன் என்பது பெறப் பட்டது. இவ்வியல்புகள் அனைத்தும் ஒருங்கே பொருந்தியவனுகச் சிவபிரான் ஒருவன் அல்லது பிறரொருவரும் யாண்டும் கூறப்படாமை தெளிவு.

இங்ஙனமாகவே தனித் தமிழ்க் காலம் முதலாக இன்றுகாறும் காணப்பட்டுவரும் பரதகண்டத்துச் சமய நிலைகளை நோக்குங்கால் சைவ சமயம் தமிழ் நெறியேயாதல் தெற்றென விளங்கலால் சைவ சமயத்தினையே தழைக்கக் கொண்டுள்ள தமிழ் மக்கள் வரலாற் றுணர்ச்சியால் தோன்றும் ஆரியர், தமிழர் என்னும் வேறுபாடு பற்றி அதன்கண் ஐயுறுதல் வேண்டா எனக் கூறி அமைவாம். இன்னும் விரிப்பிற் பெருகுமென்க.

---

# சைவத் தொண்டு

ஜி. வரதராசன், பி. ஏ.

நிலவுலகம் தோன்றின நாள்தொட்டு இன்றுகாறும், மக்கள் உலகம் பல வகையில் முன்னேறிக் கொண்டுதான் வருகிறது. ஒரு ஒரு காலத்தில் ஒரு ஒரு வகையில் மக்கள் தங்கள் முன்னேற்றத்தைக் கருதி உழைப்பாராயினர். மக்கள், முதல் முதலில் உணவையும், உடையையும் பெறுவதற்கும், அவற்றை ஒழுங்குபெறச் சுவையுடைய தாக்குவதற்கும், பலவகை உணவுகளைக் கண்டுபிடிப்பதற்கும், என்ன அரும்பாடு பட்டிருப்பர் என்பதை அகக்கண்ணுல் ஆராய்ந்துபார்த் தால் அதன் அளவு தெரியும். அப்படியே உடைக்கும் உழைத்திருப் பர். பேச முயற்சித்த மனிதனின் ஆற்றலை என்னென்று இன்று கூறமுடியாது. மொழியை உண்டாக்கி மொழித்துறைக்குப் பாடு பட்ட மக்கள் கூட்டம் எவ்வளவோ சமுதாயத்துக்குத் தொண்டு செய் திருக்கிறது என்று அறிகிறோம். அங்ஙனமே, நன்முக உண்டு உடுத் திப் பேசி வளர்ந்த கூட்டம், மனிதவாழ்வின் லட்சியத்தையும் அறிந்து சமுதாயத்துக்குத் தொண்டு செய்துள்ளது. அத்துறைதான் சமயத் துறை எனப்படும்.

இன்றைய உலகமும் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்ட பெரும் உலகந்தான். விஞ்ஞானத் துறையில் இருநூறு ஆண்டுகளாகப் பெரு முயற்சியும், ஆராய்ச்சியும் நிகழ்ந்து வருகிறது. எல்லா நாட்டிலும், மக்களைக் கவரும்படியான பெரும் பெரும் நிகழ்ச்சிகளும், விஞ்ஞான வளர்ச்சிகளும், வியக்கத்தக்க அத்தனைக் கண்டுபிடிப்புகளும் நிகழ்ந் திருக்கின்றன. கடலில் (நீரில்) மூழ்கவும், விண்ணிற் பறக்கவும்,

நிலனுள் வாழவும் ஆற்றலைப் பெற்றுவிட்டான். நீரின் ஆற்றல், நிலத்தின் வன்மை, காற்றின் அசைவு இவற்றை ஓரளவு பயன்படுத்தும் நிலை பெற்றுவிட்டான். மனிதன் விஞ்ஞானம் பருப்பொருள் ஆராய்ச்சியில், பயனைக் கொடுக்கும் நிலையினை ஆராய்ந்து அத்துறையில் மேலும் மேலும் முயற்சி செய்துகொண்டே இருக்கிறான். அறிவுக்கு எல்லையில்லை யல்லவா? ஆகையால் ஆராய்ச்சியும் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே யிருக்கிறது. வளர்ந்து கொண்டேதான் இருக்கும்.

அணு சகாப்தம் என்று கூறி வருகின்றனர் இன்றைய நிலையை. அணுவின் ஆற்றலைப் பயன்படுத்த அறிந்துகொண்ட காலம் இது. அழிப்பதற்குப் பயன்படும் என்றபோது, உலகமே நடுங்குகிறது. ஆக்க வேலைக்கும் பயன்படுத்தலாம் என்றபோது சிறிது சமாதானம் உண்டாகிறது. குண்டு வீச்சினாலேயே நடுங்கின உலகம், அணு வீச்சினால் என்ன பாடுபடும்? அச்சம்தான்! நடுக்கம்தான்! என்ன முடிவு? எல்லோருக்கும், அறிவுடையார் அனைவருக்கும், சமுதாயம் வாழ வேண்டும், வளர வேண்டும் என்கின்ற எண்ணமுடையார் அனைவருக்கும் விஞ்ஞான ஆராய்ச்சி மேம்பட்ட இந்த நாளில் ஒரே கவலை. நீங்காத கவலை. வழிதெரியாத் தடுமாற்றம், சமாதானம் வேண்டும், அழிவு வேலைகள் நிற்கவேண்டும், அழிவுத்துறை ஆராய்ச்சி கூடாது என்ற பலப்பல நினைவுகள். அனைவருக்கும் ஒருமித்த ஒரே நினைவுடைய முடிவு ஏற்பட வழியில்லை. என்ன கொடுமை!

மனித உலகம் பல இடங்களில் வாழ்கிறது. அந்த மனித சமுதாயத்துக்கு இயல்பாக அமைந்த சில குணங்கள் உண்டு. இடத்தால், காலத்தால், சூழ்நிலையால் மாற்றமடையும் நிலையும் உண்டு. ஆனால் எப்படி உடலுறுப்புக்கள் ஒன்றாக அமைந்துள்ளனவோ அப்படியே உள்ளுறுப்புக்களும் மக்களுக்கு ஒன்றாகத்தானிருக்கும். மனமும், மனச் செயலும் ஒன்றாகவே மக்கள் சமுதாயம் பெற்றிருக்கிறது. அம் மனச்செயல் இடத்துக்கும், காலத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப செயல்படுமே அன்றி, நினைவுகளும் பிறவும் ஒன்றே என்றறிதல் வேண்டும். ஆகையால் இன்றைய உலகத்தில் மனித சமுதாயம் விஞ்ஞானத்தால் அச்சமும், நடுக்கமும் விட்டு ஒன்றி வாழ்வதற்கு, உண்மையில், மனித லட்சியத்தை எடுத்துக்கூறி, அமைதி பெற்ற நல்வாழ்வு பெறுவதற்குத் தொண்டு செய்வதே. உண்மையாகக் காலத்துக்கேற்ற தொண்டும், ஒரு மனிதன், உண்மையில் சமுதாயத்துக்குச் செய்யவேண்டிய கடமை ஆகும்.

ஒரு நடுத்தெருவில் இரு பெரும் பிரிவினர், தங்களுடைய ஆற்றலுக் கேற்ற வகையில் பெரும் போர் செய்கின்றனர். அந்த நேரத்தில் அங்கே வாழும் ஒரு அறிவுடையான், அன்புடையான் செய்யவேண்டிய கடமை என்ன? தொண்டு என்ன? அவர்கள் சோர்வடையாதபடி

உணவு கொடுப்பதா? அல்லது அவர்கள் போர் முடியாதபடி ஆயுதம் கொடுப்பதா? அல்லது அவர்களுடையவன்மையைவளர்த்துப் பலமுடையார் வெற்றி பெறவும், பலமிழந்தார் தோல்வி காணவும் துணை செய்வதா? இவையன்று. அவர்கள் செய்யும் போரின் அறிவின்மையையும், அவர்கள் கூடி வாழ்தலின் உயர்வையும், மக்கள் கூடி வாழ வந்தவர்கள் என்ற உண்மையையும், லட்சியத்தையும் எடுத்துக் காட்டிப் போரினைத் தவிர்த்து ஒன்றி வாழும்படிச் செய்வதே அறிவுடையார் கடமையாகும். அன்புதான் அத்தொண்டினைச் செய்யும். அன்புதான் தன் நன்மையைக் கருதாது பிறரும் இன்பம் அடைய வேண்டும் என்ற எண்ணத்தை எழுப்பும். இந்த அடிப்படை உண்மையில் எழும் உண்மைச் சமயமே சமுதாயத் தொண்டினைச் செய்து சமுதாயத்துக்கு வழிகாட்டினதாகவும் அமையும்.

உலகத்தில் எத்தனையோ பெரியவர்கள், தோன்றி சமுதாயத் தொண்டினைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் அத்தனைபேரும் காலத்துக்கு ஏற்றவாறு, அரசியல் வாழ்க்கையிலும், சமுதாய வாழ்க்கையிலும் ஒன்றிச் சீர்திருத்தம் செய்து மக்களுக்கு வழிகாட்டி, வாழச் செய்ய வந்தவர்கள்தாம். ஏசுநாதர், புத்தர், மகம்மது நபி முதலாகக் காந்தியடிகள் வரையிலும் பல பெரியவர்கள் சமுதாயத் தொண்டு செய்து மக்களுக்கு வழி காட்டியவர்கள். அவர்கள் அத்தனை பேரும் தங்கள் வாழ்நாளை ஒழுக்க வழியில் நடத்தி, மக்களையும் அவ்வழியில் நிற்க வழி வகுத்தவர்களே.

நம் தமிழ் நாடு பண்டைப் பழம் பெருமையுடையது. எண்ணற்ற இலக்கியங்களையும் சமய நூல்களையும், வரலாற்றுச் சான்றுகளையும் உடையது. பல போறிஞர்களையும், பல பெரியார்களையும் பெற்று விளங்கியது. வீரத்தில் ஒரு இராஜேந்திரனும், அறிவில் ஒரு திருவள்ளுவரும், ஆன்மநேயத்தில் ஒரு திருநாவுக்கரசரும் போதுமே. அத்தனைப் பெருமையுடைய நம் தமிழ்நாடு இன்று எந்நிலை பெற்றுள்ளது? ஏன்? என்ன செய்ய வேண்டும்? ஒவ்வொரு தமிழ் மகனுடைய எண்ணத்திலும் எழவேண்டிய வினாக்களல்லவா இவை.

நம் நாட்டுப் பண்டைய சமய வாழ்க்கை சைவ வாழ்க்கை என்று கருதுகிறோம். இது நம்முடைய கொள்கைமட்டும் அன்று. மேலை நாட்டு ஆராய்ச்சித்துறை போனவரும் முடிவு கூறுவது. உலக முழுதும் ஒருகால் இந்தச் சைவ முறையும், இலிங்க வழிபாடும் நடைபெற்றுளது என்று புதைபொருள் ஆராய்ச்சியாளர் காண்கின்றனர். இதனை நம் முன்னோர் எப்படிப் பரப்பியிருப்பர் என்றெண்ண வேண்டாவா? பிற நாட்டார் போல வன்பு வழியில் புகுத்தியிருக்க முடியாது. அன்பு வழியில்தான் புகுத்தியிருக்க வேண்டும். கவர்ச்சி எங்கே உண்டாகும். அன்பினால்தான் எவரையும் கவர முடியும். வன்பு, வற்புறுத்தலினால் பணிய வைக்க முடியுமே தவிர மனமொப்பி

ஏற்றுக்கொள்ளச் செய்யாது. ஆகையால் உலகெங்கும் அன்பினால் பிணைத்து, அனைத்துலகையும் தன் வயப்படுத்தி ஆட்சிகொண்ட தமிழினம், தன்னிடத்திலேயே பல பிரிவுகளையும், பல வேற்றுமை உணர்ச்சிகளையும் அநாகரிகப் போக்கையும், வாழ வழி தெரியா வளர்ச்சி குன்றிய இனமாக ஆயிரம் ஆண்டுகளாகக் காணக்கிடப்பது ஏன் ? நினையுங்கள் ! நினையுங்கள் ! வழி தானே விளங்கும்.

அன்பு வளரவேண்டும். சமுதாயம் ஒன்றென்ற நினைவு வேண்டும். எப்படி அன்பு வளரும் ? எப்படிச் சமுதாயம் ஒன்றென்னும் நினைவு எழும் ? எங்கே குறை ? மனத்தில்தான் குறை. வழி வழியாக வளர்ந்துவிட்டது அந்தக் குறை ! என்ன குறை அது. அதுதான் தன் நலப்பற்று. தான் நன்மை அடைய வேண்டும். தானே பெரியவன். தன் வாழ்வே பெருக வேண்டும் என்ற தீய நினைவு. இஃது எப்படியோ நோய்போல் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழினத்தில் புகுந்துவிட்டது. அதனால் தமிழர் உயர்ந்தனரா ? இல்லை. அடியோடு தாழ்ந்தனர். பிற நாட்டார், பிற இனத்தார் கண்டு எள்ளி நகையாடும் அந்த அளவுக்கு இழிந்துவிட்டனர். மாற்றம் வேண்டும். மறுபடியும் வளர்ச்சி வேண்டும். விழுந்தவன் விழுந்தே விடலாகாது. எழுந்திருக்க வேண்டும். அன்புள்ள தமிழ் மக்களே ! உணர்ச்சியினால் எழுங்கள். நாமனைவரும் ஓரினம், மக்கள் சமுதாயமே ஓரினம், யாதும் ஊர், யாவரும் கேளிர் என்று உலகுக்கு உணர்த்திய தமிழினம் நாங்கள் என்று எழுங்கள் ! இந்த உணர்ச்சியோடு எழுவது எளிதன்று. உள்ளத்து ஒளி உண்டாயின் வாக்கினில் ஒளி உண்டாகும். உள்ளமும் வாக்கும் உயர்ந்த ஒளிபெறின் செயல் நற்செயலாகும். ஆகையால் அன்பு நெறியைக் கடைப்பிடித்து அனைவரையும் ஒன்றென நினைக்க வேண்டும். அன்பு நெறிக்கு இன்றியமையாதது தன் நலப் பற்றுக் குறைதலே.

தன் நலப்பற்றுக் குறைவது எப்படி ? ஆராய்ச்சி வேண்டும். புற ஆராய்ச்சி அன்று. உள் ஆராய்ச்சி. பற்று என்பது என்ன ? உடைய பொருளை விடாமல் இறுகப் பிடித்துக்கொண்டிருப்பது. பொருள், வீடு, மனைவி, மக்கள் இவை நாம் பெற்றுள்ளோம். இவை அனைத்தும் நம்முடையது என்ற நினைவு பற்று. விட்டுப் பிரியவும் முடியாது. பிரியவும் மாட்டோம். இதனை நீண்டு ஆராயவேண்டும். உலகம் விரிந்தது. சமுதாயம் பலகோடி. வாழ்வு பலவகை. அடையும் இன்பமும் பலப்பல. அவற்றுள் நாம் எந்த அளவு ? நம் பொருள் எவ்வளவு ? நம் வீடு எம்மாத்திரம் ? நாம் அடையும் இன்பம் என்பது என்ன ? நினைத்தால் உண்மை விளங்கும் ! இம்மியும்கூட இராது ! அப்போது உள்ளமும் விரிவடையும் ! இவையனைத்தும் நாமாகக் கற்பனை செய்துகொண்ட இழிநிலைதான் என்பது புலனாகும். ஆகையால் அனைவரையும் காண அனைத்தையும் அறிய என்ன செய்ய வேண்டும்.

புறப்பற்று நீங்க வேண்டும். எப்படி நீங்கும்? அனைத்துக்கும் உரியதாய், அனைத்தையும் உடையதாய், அதற்கும் அப்பாற்பட்ட பொருளாய் ஒன்று இருக்க முடியுமா? அப்படி ஒரு பொருள் இருந்தால் அப்பொருளை அடைந்து நாம் அந்த அன்பு நிலையைப் பெற முடியும். எண்ணுங்கள்! இங்கேதான் சிவம் பிறக்கிறது. எப்பொருளுமே உயிர்ப் பொருள், எல்லாம் அணுவின் மயம். அணுவின் ஆற்றல் அகண்டமானது. அதனோடு இருபெரும் சக்திகள் இயங்குகின்றன. இஃது இன்றைய அணு ஆராய்ச்சி. எப்பொருளும் இறைவன் உறை கோயில். இறைவன் அன்பு வடிவினன். அன்பினால் எப்பொருளையும் இயக்குகிறான். அனைத்தும் இயங்குகின்றன. இது நம் முன்னோர் கண்ட முடிபு. நாம் இன்றைக்கு என் செய்வது. அன்பை, சிவத்தைக் கடைப் பிடிப்பதா? அணுவைப் பிடிப்பதா? என்ன செய்தால் நம் வாழ்வு மலரும். வினாவுக்கு விடைவேண்டும்.

அணுவைப் பிடித்தால் அழிவில் சேர்க்கும், அன்பைப் பிடித்தால் ஆக்கத்தில் சேர்க்கும். அன்பைப் பிடிக்க தன் நலப்பற்று விடவேண்டும். தன் நலப்பற்றுவிட, யாதும் ஊர் யாவரும் கேளிர் என்ற எண்ணம் வேண்டும். அன்பு தானே வளரும். பற்றுக் குறையும். பற்றற்ற கண்ணே அன்பு வடிவன் ஆவான். சிவமாவான். சிவமே அன்பு, அன்பே பற்றற்ற நிலை. பற்றற்ற நிலையில் உள்ளவன் சிவன். பற்றற்றான் சிவன். பற்றற்ற சிவன் தாளைப் பற்றினால், அன்பு பெருகி, அனைத்துயிரும் ஒன்றென்ற எண்ணம் மலர்ந்து ஆக்க வழிகண்டு சமுதாயம் வளரும். திருவள்ளுவர் இவ்வுண்மையினை உலகியல், ஆன்ம இயல் இரண்டுக்கும் பொருந்த உயர்ந்த அறிவுரை, அறவுரையாக, சமய நுட்பமாக, தமிழர் கண்ட முறை வழுவா முடிவாக வளர்த்துக் கூறுகிறார்.

சைவ மெய்யன்பர்களே! இன்றைய உலகில் உண்மைச் சமயம், உண்மைச் சைவம் வளர வேண்டுமானால் குறுகிய மனப்பான்மை குறைய வேண்டும். எவ்வுயிரும் ஈசன் உறை கோயில் என்ற எண்ணம் வேண்டும். விரிவிலா அறிவினர்கள் வேறொரு சமயம் செய்து எரிவினாற் சொன்னாலும், அன்பால் அதனை உளங்கொண்டு அவரையும் அன்பினால் பிணைக்க வேண்டும். சமய வேற்றுமை, சாதி வேற்றுமை, மொழி வேற்றுமை களைந்து அன்பு பெருகி அனைவரையும் அணைந்து வாழவேண்டும். நோயுற்றாரை மருத்துவன் காணும் கண்கொண்டு இரங்கிக் காண வேண்டும். அறிவற்றாரை ஆசான் காணும் கண் கொண்டு இரங்கிக் காணவேண்டும். பசித்தாரை வள்ளல் காணும் கண்கொண்டு காண வேண்டும். பசித்தார்க்கு உணவும், பிணியாளர்க்கு மருந்தும், ஏழைகட்கு அறிவும் கொடுத்து அன்பினால் சைவம் மலரச் செய்ய வேண்டும். நம் முன்னோர் அன்பினால் சிவத்தை அன்பாம் சிவத்தைக் கண்டனர். எப்படி? அன்பு செலுத்தித் தன் பற்றைக் குறைத்துப் பிறர் நலம் பேணி அன்பை வளர்த்துச் சைவத்தை

வளர்த்தனர். உலகெங்கும் சைவம் தழைத்தது. தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவனாய் விளங்கினான். நாமும் பற்றுக் குறைந்து, பிறர் நலம் பேணி, அன்பு பெருக்கிச் சைவத் தொண்டினை வள்ளுவர் கண்டவாறே செய்து வாழ்வோமாக.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு —திருமறை.

---

# அரியானை

வித்துவான். G. சுப்பிரமணியப் பிள்ளை, M.A., B.L.
தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

எங்கள் ஊர்ப் பிள்ளையார் கோயிலில் சிறுவர் சிறுமிகளுக்காகத் தேவார வகுப்பு நடந்து வந்தது. நாடோறும் அவர்கள் தேவாரப் பாடல்களைப் பாடிவந்தனர். விநாயகர் சதுர்த்தி விழாவன்று பிள்ளைகள் வந்து சுண்டல் வாங்குவதற்காகக் கூடி நின்றனர். அங்குள்ள பெரியவர் ஒருவர், பிள்ளைகள் இரைச்சலை நிறுத்தி, சரி இப்பொழுது எல்லாரும் பிள்ளையார் பாட்டைப் பாடுங்கள் என்று உத்தரவிட்டார். உடனே பிள்ளைகள் பாடத் தொடங்கினர்.

“ அரியானை யந்தணர்தஞ் சிந்தை யானை
யருமறையி னகத்தானை யணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கடங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே ”

[அகத்தானை - உள்ளிருப்பவனை. கரியானை - கருநிறமுடைய திருமாலை. கனைகடலை - ஒலிக்கின்ற கடலை. குல வரையை - பெரிய மலைகளை.]

குழந்தைகள் பிள்ளையார் பாட்டென்று இப்பாடலைப் பாடிக் கொண்டிருக்கையில் பெரியவர் இதைக் கேட்டுத் தலையை ஆட்டிக் கொண்டே சுவைப்பதையும் கண்டேன். திகைத்துப் போனேன். உடனே நான் பெரியவரை நெருங்கி “ தாங்கள் பிள்ளையார் பாட்டுப் பாடச் சொன்னதற்குப் பிள்ளைகள் அவ்வாறு பாடாது சிதம்பரத்தில் அப்பர் பாடிய திருத்தாண்டகப் பாடலையல்லவோ பாடினார்கள் ” என்று கேட்டேன். ஆம். அது ஆறும் திருமுறையின் முதல் பாட்டு. முதலில் விநாயகர் வணக்கம் தானே பாடுவார்கள். அதிலும் ஆனைமுகக் கடவுளை ஆனை ஆனை என்று அமைத்துப் பாடியிருக்கிறார். அரியானை, சிந்தையானை, அகத்தானை, கரியானை, பெரியானை, புலியூரானை என்று ஆறுமுறை ஆறாந்திருமுறை முதற்பாட்டில் வந்திருக்கிற அழகே அழகு. இதில் இன்னொரு சிறப்பும் உண்டு.

ஆறுமுகக் கடவுள் வள்ளியை மணக்க யானை உருக்கொண்ட அண்ணனை ஆனை, ஆனை என்று ஆறுமுறை கூறிய நயம் மேலானது என்று கூறி நிறுத்தினர். நான் பெரிதும் வருந்தினேன். அப்பொழுது தான் அரியானை என்று அப்பர் பாடியதன் அருமைப்பாடு நன்கு புலனுயது. பாட்டின் பொருளைத் தெரியாதிருப்பதே தவறு. பொருளைப் பிழைபட உணர்வது அதனினும் பெருந்தவறு. சொற்பாவும் பொருள் தெரிந்து தூங்காதார் மனத்திருளை வாங்கமாட்டான் இறைவன் என்று அப்பரே கூறியுள்ளார். தில்லைக் கூத்தனை ஏத்த வெடுத்த பாடலைப் பிள்ளையார் பாட்டு என்று நினைப்பது அறியாமைதான். இப்பாடல் பலராலும் அடிக்கடி பாடப்படுவது. ஆனல் சிலரே இதன் பொருளைத் தெரிந்திருப்பார். சிதம்பரநாதனைத் தெரிவதற்கு இப்பாடலின் பொருளை நன்கு தெரிவது நலம். அவன் எல்லார்க்கும் எளிதில் தெரியமாட்டான் அல்லவா? 'பொருளாளனைப் புகுந்தாண்டு புரந்தரன் மால் அயன்பால் இருளாயிருக்கும் ஒளிநின்ற சிற்றம்பலம்' என்றூர் மணிவாசகரும்.

சேக்கிழார் பெரிய புராணம் பாடுவதற்காகத் தில்லைக்கு வந்தார். கோயில் வழிபாடு செய்து மண்டபத்தினுட் புகுந்தார். எழுத்தாணியைக் கையில் எடுத்தார். எப்படித் தொடங்குவது என்று திகைப்புத் தோன்றியது. கூத்தப்பிரானை நினைந்து வேண்டினர். தொண்டர்புராணம் என்னும் வாணிகத்தை ஊதியத்தோடு நடத்துவதற்கு முழுமுதற் கடவுள் முதல்கொடுத்து உதவினன். 'உலகெலாம்' என்று வானில் எழுந்தது ஒரு குரல். உலகெலாம் என்பதையே முதலாக வைத்துச் சேக்கிழாரும் தொடங்கினர். ஆனல் அதனை எவ்வாறு முடிப்பது? உலகெலா முதலாக் கொண்ட மூர்த்தியன், உலகெலாம் போற்றும் உத்தமன் : என்று இவ்வாறு எத்தனையோ முறையில் முடித்திருக்கலாம். சேக்கிழார் அவ்வாறு எழுதவில்லை. தில்லையில் அப்பர் பாடிய முதலாவது திருத்தாண்டகப் பாடலின் முதலடியிலுள்ள முதலாவது சொல் அதாவது 'அரியானை' என்னும் சொல் அவர் உள்ளத்திலே ஊன்றிப் பதிந்திருக்கவேண்டும். சேக்கிழாரைப்போல் தேவாரத்தைச் சுவைத்துப் பொருள் கண்டவர்கள் வேறு யாரும் இல்லையல்லவா? அரியானை என்பதன் அரும்பொருளை அவர் பலகாலும் சிந்தையில் அலசிப்பார்த்து ஆராய்ந்திருக்கிறூர் போலும்! இறைவன் திருவருளும் கைகொடுத்து உதவியது. அதன் விளக்கவுரையாக 'உலகெலா முணர்ந்து ஓதற்கு அரியவன்' என்று பாடிவிட்டார். பெரியபுராணம் கடவுள் வாழ்த்தின் முதலடி அப்பர் பாடலின் அரியானை என்பதற்கு ஒரு விளக்க விரிவுரையாக அமைந்துவிட்டது. உலகத்து உயிர்களெல்லாம் மனத்தால் உணரவும், வாயால் ஓதவும் அரியவன் : இறைவன் மனவாசகம் கடந்தவன் தானே!

கடவுள் மனம் வாக்குக்கு எட்டாதவன். மாற்றம் மனம் கழிய நின்றவன் என்றெல்லாம் சொல்வர். உலகு எலாம் என்பதற்கு உலகத்து உயிர்கள் எல்லாம் என்று பொருள்கொள்வதோடு, உலகு—உலகத்தோரால், எலாம்—எல்லா இயல்புகளையும் தன்மை

களையும் என்றும் பொருள் கொள்ளலாம். உலகத்துயிர்களால் தனது அனைத்தியல்புகளையும் அறிந்து பேசுவதற்கு அரியவனாய் இருப்பவன் இறைவன். எவராலும் இறைவனது முழுதியல்பையும் எக்காலத்தும் எவ்வாற்றானும் அறியமுடியாது. ஒருவாறு ஒருசிறிது தான் உணர்ந்து ஓதமுடியும். இவ்வாறு ஏகதேசமாக அறிவதன்றி இறைவனுடைய முழுத்தன்மையையும் மனதால் நினைக்கவும் முடியாது. நாவால் சொல்லவும் முடியாது. இறைவன் பாச அறிவாலும் பசு அறிவாலும் அறியப்படாதவன். மலபரிபாகம் காரணமாக ஊறுகின்ற இறைவனுக்குரிமையான சிறப்புடைய அன்பிலே விளைகின்ற திருவருள் ஞானத்தால் உயிருக்குயிராய் நிற்கும் இறைவனை ஒருவாறு அறிதல் கூடும். இவ்வித அருமையும் எளிமையும் உள்ளமை கருதியே அப்பரடிகள் அரியானை என்று கூறினதும், அந்தணர்தம் சிந்தையானை என்று தொடர்ந்து கூறினார். அப்பரடிகளின் திருவாக்கான அரியானை என்ற சொல்லை அருள்மொழித்தேவரின் ' உலகு எலாம் உணர்ந்து ஓதற்கரியவன் ' என்ற திவ்விய வாக்கோடு ஒன்ற வைத்துக்காணும் விளக்கத்தினால் அடையும் தெளிவு நம்மைப் பெரிதும் மகிழ்விப்பதாகும். தில்லையில்பாடிய இப்பாடலில் அந்தணர் என்றது தில்லைவாழந்தணர்களைச் சிறப்பாகவும், எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுவோரைப் பொதுவாகவும் குறிப்பதாக நாம் கொள்ளலாம். வேறு எந்த இடத்தையும் விட ஈர இரக்கம் உள்ள நெஞ்சத்தைச் சிறந்த மலராகக்கொண்டு அங்கே வீற்றிருப்பது இறைவனுடைய அருளுந் திறமைக்கு ஒரு தக்க சான்றாகும். சந்ததமும் வந்தனைசெய் அந்தணர்தம் சிந்தையிலே வந்திருக்கும். இறைவன் வேதங்களினுள்ளும் உறைகின்றான். ஓதற்கு அருமை உடைமையின் அருமறை என்றார். அருமையான அந்த மறைகளை எப்பொழுதும் ஓதுகின்றவர்கள் அந்தணர்கள் ஆதலின், அன்னார் சிந்தையுள் இறைவன் உறைவனாயின், இவ்வாறு மறையினுள்ளும் சிந்தையினுள்ளும் உறையும் கடவுள் மிக நுண்ணியனாய் இருத்தல்வேண்டும். ஆதலின் அவனை அணு என்றார். அணுவை ஆங்கிலத்தில் ஆடம்(Atom) என்னும் பொருள்வர வாகீசர் அணுவை என்று இப்பாடலிற் குறித்திருப்பது இக்காலத்திற்கு மிகவும் பொருத்தமாயிருக்கிறது. அணுவைப் பிரித்துப் பார்த்தால் அதனுள் புரோட்டான்ஸ், எலெக்டிரான்ஸ், நியூடான்ஸ் என்று எவ்வளவோ மிகமிக நுண்ணிய பொருள்கள் காணப்படும் என்றும், அவை ஒன்றையொன்று சுற்றிச் சலியாது நடனமாடிக் கொண்டிருக்கின்றன என்றும் விஞ்ஞானம் கூறுகிறது. அத்தகைய நுண்ணிய பொருள்களை "அணுவினைச் சத கூறிட்ட கோணிலும் உளன்" என்று கம்பர் பாடுவர். சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம் பரம்பொருள் அணுவினுக் கணுவாய் இருக்கின்ற தன்மையை இத்தன்மைத்து என்று யாராலும் அளவிட்டுச் சொல்ல முடியாது. அதனையே ' யார்க்கும் தெரியாத தத்துவனை ' என்று அப்பர் இங்குப் பாடியுள்ளார். ஆனால் வெறும் தத்துவப் பொருளாய் இருப்பவன் ஐம்பூதங்களின் சேர்க்கையாலாகிய உடலோடு கூடி மாயையில் அழுந்திக்கிடக்கும் உயிர்களுக்கு என்னதான் இன்

பஞ் செய்யமுடியும் என்று எண்ணக் கூடும் அல்லவா? அதைத் தவிர்க்கவே தேனைப் பாலை என்று நாம் அறிந்த பொருள்கொண்டு கூறினர். தேனும் பாலும் இன்சுவை யூட்டி இன்பம் பயப்பன. தேனையோ, பாலையோ ஒன்றை மட்டும் கூறியிருக்கலாம். ஆயினும் இரண்டையும் சேர்த்தே கூறினர். அதனல் இன்சுவையோடு கூட இறைவனின் வடிவழகையும் நம் மனக் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார். சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனியம் மானைச் செந்தேன் நினைப்பூட்டுகிறது. அவன் பால்வண்ணநாதன் ஆவதைப் பால் நினைப்பூட்டுகிறது. பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறு கொண்ட அம்பலத் தாடியைத்தேனைப் பாலை என்ற சொற்களால் நாவுக்கரசர் நயம்பட நவின்றுள்ளார். தேன் சிவனது செம்மேனியையும், பால் வெண்ணீற்றையும் குறிக்கும் தத்துவப்பொருளாய அருவத் திருமேனி யோடு நீறிலங்கு செம்மேனியாகிய உருவத் திருமேனியையும் உடையன் நம் இறைவன். மேலும் அணுவாயும் தத்துவமாயும் நின்று இன்பம் பயக்கும் இறைவன் பரந்துகிடக்கும் பாரனைத்திலும் பதிந்து காண்கிறான். நிரந்து கிடக்கும் உயிரனைத்திலும் நிலவி நிற்கிறான். ஞாயிறு, திங்கள், நெருப்பு என்னும் இவைகளுக்கு ஒளிகொடுக்கும் சுடர்ப்பொருளாய் இருக்கிறான். தேவாதி தேவனாய்த் திகழ்கிறான். படைப்புக் கடவுளாகிய நான்முகனுக்கு நாதனாய் இருக்கிறான். காத்தற் கடவுளாகிய கரிய நிறத் திருமாலினுள்ளும் திணிந்து நிற்கிறான். சிவன் வேறு, விஷ்ணு வேறு என்று சைவர்கள் கருதுவதில்லை. இருகடவுளும் ஒன்றே என்று சைவ சித்தாந்தமும் முழங்குகின்றது.

தில்லைக்கோயிலின் திருச்சந்நிதியிலே கோவிந்த ராஜப் பெருமானையும் நடராஜப் பெருமானையும் ஒருங்கே கண்டு வழிபடும் வாய்ப்பு நமக்குக்கிடைத்திருப்பதே இவ்வுண்மையை வலியுறுத்துவதாகும். சிவபெருமான் தீயையும் காற்றையும் மற்றும் பூதங்களையும் கடலையும் மலையையும் ஒன்றாகக் கலந்து நின்று அனைத்தும் தானாகும் பெருமையையுடைய பெரியவனாகவும் இருக்கிறான். இவ்வாறு எல்லாப்பொருள்களிலும் கலந்து நீக்கமற நிறைகின்ற தன்மையனான இறைவனைப் பெரியானை என்றார் அப்பர். அப்பெரியவன் எங்கே இருக்கிறான் என்றால் எல்லாரும் பெரும்பற்று (பேரன்பு) கொள்ளுதற்கு இடனாகிய புலியூரிலேயே கோயில் கொண்டிருக்கிறான். வியாக்கிரபாதரென்னும் புலிக்கால்களையுடைய முனிவர் வழிபடும் பெருமை யுடைத்தாதலின் சிதம்பரம் புலியூர் என்னப்பட்டது. பிறவா யாக்கைப் பெரியோனாகிய தில்லைப் பெம்மான் பெயரையும் புகழையும் மறவாமல் நினைந்துபாடி வழிபடும் நாளே நல்ல திருநாள். நாம் பிறந்த பயனை அடையும் பெருநாள். இன்பம் பயக்கும் நாள். கூத்தப் பிரானின் பெயரையும் புகழையும் மறந்து பேசாத நாள் நாம் பிறவாத நாள். துன்பம் பயக்கும் நாள். பிறவாநாள் என்பது நல்வாழ்வு வாழாது தீவினை புரிந்து துன்பமுறும் தீயநாள் எனக் கொள்ளுதல் வேண்டும்.

# அயல் நாட்டவரும் சைவ சித்தாந்தமும்

சாம. இராமலிங்கம், எம். ஏ.
தத்துவ விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்

சைவ சித்தாந்தப் பேரவையின் பொன் விழா தில்லைப் பெருவெளியில், அண்மையில் நடக்க இருப்பது சைவ உலகம் அறிந்து மகிழ்வ தொன்ருகும். தனி யொருவன் வாழ்வில் ஐம்பதாண்டு நிறைவுறுதல் பெரிதும் சிறப்பிற்குரிய தொன்ருகும். ஐம்பதாண்டு ஒரு நிலையம் தொடர்ந்து தொண்டு ஆற்றுமேல் பொன் விழா காணும் ஏற்றம் உறுகிறது. நமது பேரவை தமிழகம் எம்மருங்கும் சைவ ஒளி பரப்பிய செஞ்ஞாயிறு ஆகும். ஈழத்திலும் ஓராண்டு பேரவை, ஆண்டு நிறைவு நிகழ்ச்சியினைக் கொண்டாடியது.

சைவக் கருவூலமாகிய பன்னிரு திருமுறைகளையும் பதினன்கு சாத்திரங்களையும் ஆயிரமாயிரம் படிகள் அடக்க விலைக்கு அச்சிட்டு ஏழையும் எளியவனும் பெற்று உவக்கும் வகையில் உதவியது பேர வையின் தொண்டுகளில் தலைசிறந்த ஒன்று ஆகும். சைவ உலகில் சைவப் பெருமக்கள் ஒன்று திரண்டு செவ்வையாகப் பல்லாண்டுகள் முறையே நடத்திய, நடாத்தும், இன்னும் பல்லாண்டுகள் நடத்தவும் இருக்கும் ஒரு பேரமைப்போடு கூடியது சைவ சித்தாந்த மகா சமாஜ மாகும்.

அயல் நாட்டவருள் பொதுவாகத் தமிழுக்கும் சிறப்பாகச் சைவ சமயத்திற்கும் பணிபுரிந்தவர் பலராவர். அப் பணி புரிந்தார் அனை வரையும் குறித்து நீண்டதொரு கட்டுரை வரைந்து நம் நன்றியைப் புலப்படுத்துதல் நம் தலையாய கடமையாகும். ஆதலின் நம் சைவ சமயத்துக்குத் தொண்டு செய்த மேனுட்டவருள் இக்கட்டுரையில் ஒரு சிலரைப்பற்றிச் சற்று விரிவாகவும் ஏனையோரைப்பற்றிக் குறிப்பாகவும் எழுத விழைகிறேன்.

அயல் நாட்டவருள் தமிழகம் போந்து தமிழ் மொழியின் செம்மை யெலாம் ஒருங்கே உணர்ந்து தமது வாழ்வின் பெரும் பகுதியைத் தமிழ் பயில்வதிலும், பயிற்றுவதிலும் கழித்துத் தமது கல்லறையின் கல்லில் "தமிழ் மாணவன்" என்று பொறிக்கப் பெறவேண்டும் என்று பெரிதும் விழைந்த பெருமகனர், போப் ஐயராவார்கள். தமிழனின் இரு கண்களெனப் பெரிதும் போற்றத்தகும் திருக்குறளும் திருவாசக மும் போப் அவர்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன. திருக் குறளையும், திருவாசகத்தையும் உலகப் பெரு மொழியாகிய ஆங்கிலத் தில் மொழி பெயர்த்து, நாளும் விரிந்து வருகின்ற ஆங்கில மொழி பயில் உலகம் அறிந்து இன்புற வைத்த பெருமை போப்பையரவர் களுக்கே உரியதாகும். திருவாசக மொழிபெயர்ப்பின் முன்னுரையில்,

அவர் வாதவூர் அண்ணலைப் பற்றி வரைந்துள்ள செய்திகள் நமது கருத்தைக் கவர்கின்றன. சைவ மக்களின் உள்ளத்தில் திருவாசகம் எந்த இடம் பெற்றிருந்தது என்பதனை அக்குறிப்புக்களின் வாயிலாக நன்கு உணரலாம். அன்றும் இன்றும் உலவி வரும் ஒரு முதுமொழியான 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பது மிக்க பொருத்தமானதொன்று ஆகும். இவ்வாசகத்தினைப் போப் அவர்கள் குறிக்கின்றார்கள். திருவாசகம் பயில்வார் நெஞ்சு நெக்குருகி நிற்றல் இயல்பென்பதும் திருவாசகப் பாடல்களை அத்தகைய உணர்ச்சிக்கு உட்படாது பயில்வது இயலாததென்பதும் அவர்தம் கருத்தாகும். இறையுணர்வு மிக்க உயிர்கள் வேட்டு நிற்கும் தூய்மை, அமைதி, ஒருமை நலம் (Mystic union) பரிணமித்து விளங்கும் பாடற்றொகுதிகளுள், தலைசிறந்த இடத்தினைத் திருவாசகம் பெறுதற்குரியது என்பது போப் அவர்தம் குறிக்கத்தக்கக் கருத்தொன்றாகும். ஏனைய சமய குரவர்களது திருமுறைகளை விடத் திருவாசகம் தமிழ் மாணவனது உள்ளத்தில் இடம்பெற வேண்டும் என்கிறார். திருவாசகத்தைப் பற்றிப் போப் அவர்கள் கொண்டுள்ள பிற கருத்துக்களை அவர்தம் மொழிபெயர்ப்பின் முன்னுரையில் காணுமாறு வேண்டுகிறேன்.

தமிழர் தம் மெய்ப்பொருள் துணிபுகளை (Philosophical truths) விரித்துரைக்கும் சித்தாந்தத்தை "திராவிடனின் ஒள்ளிய அறிவில் முகிழ்த்த பெரும் பொருள்" (Choicest product of the Dravidian intellect) எனக் குறித்திருத்தல் அவர் கொண்டிருந்த கருத்தினை நன்கு விளக்குகிறது. மேலும் சைவ சித்தாந்தம் மக்களிடைப் பெரிதும் பரவி இருந்தது என்பதும், அச்சமயம் தன்னகத்துக் கொண்டுள்ள நலங்களால் பிற சமயங்களைவிடச் சிறந்து விளங்குவதாகவும் குறிக்கின்றார். வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டதாய்த் தமிழ் மக்களின் உள்ளங்களைப் பன்னூறு ஆண்டுகளாய்க் கவர்ந்து வருவது என உணர்த்துகிறார். இப்பெரியாரது திருக்குறள் மொழிபெயர்ப்பினைக் குறித்து ஈண்டுப் பேசவேண்டுவதில்லை. அத்தொண்டும் தமிழுக்குச் செய்த தலையாய தொண்டு ஆகும்.

H. W. Schomerus என்பார் ஜெர்மானிய மொழியில் சித்தாந்தத்தைப் பற்றிச் சீரிய ஒரு நூல் எழுதியுள்ளார். அண்மையில் சித்தாந்தத்தைப் பற்றி வெளிவந்த சில பனுவல்களில் இந்த ஜெர்மானியப் பெரியார் நூலினின்றும் பற்பலப் பகுதிகள் மேற்கோள்களாகத் தரப்பெற்றுள்ளன. இன்றும் ஜெர்மனியில் வாழும் மற்றொரு பெரியார் ஃப்ரெட்ரிக் ஹெய்லர் (Friedrich Heiler) என்பவர் ஆவர். இவர் மார்பர்க் பல்கலைக் கழகத்தில் பல சமயங்களையும் ஆய்ந்து ஒப்புமை கண்டு சமயங்களின் அடி நிலை உண்மைகளையும் முடிநிலை முடிபுகளையும் உணர்ந்தவராவர். அவரது ஆய்வு நலம் சான்ற நூல் "பிரார்த்தனை" என்பதாகும். இப்பனுவலில் நமது மணிவாசகப்

பெருந்தகையை ஆறு இடங்களில் குறிப்பிட்டு இறையுணர்வு மிக்க சமயச் சான்றோராகக் (Mystics) குறிக்கின்றார். 'போப்' அவர்களின் ஆங்கில மொழி பெயர்ப்பின் துணைகொண்டே திருவாசகத்தின் உட்கிடக்கையை நுணுகி உணரும் நுழைபுல மிக்க ஃப்ரெட்ரிக் ஹெய்லரை (Friedrich Heiler) சைவ உலகம் மறத்தலாகாது.

Hoisington, M. R. Tattuva Kattalei, Law of the Tattuvam : A synopsis of the Mystical Philosophy of the Hindus; ஹாய்சிங்டன் என்னும் பெரியார், "தத்துவக் கட்டளை, தத்துவத்தின் அறம்; இந்துக்களின் சமய உணர்வு, ஒருமை நலத்தின் (Mysticism) பிழிவு" என்னும் ஒரு சீரிய நூலினைப் பசுமலை சமயக் கல்லூரியின் வெளியீடாகத் தந்துள்ளார். இப்பெரியாரது பிறிதொரு நூல், "சிவஞானபோதத்தின் பன்னிரு சூத்திரத்தின் மொழி பெயர்ப்பாகும்." அந் நூலுக்கு முன்னுரையாக அமைந்துள்ள பகுதியில் பல சைவ சித்தாந்த நுண்பொருள்களை விளக்கியுள்ளார்கள். அந் நூலின் ஆங்கிலத் தலைப்பு வருமாறு: "Siva-Jnanabotham, Instruction in the knowledge of God. A Metaphysical and Theological Treatise".

Siva-Nana-Bodham; A manual of Saiva Religious Doctrine ; Translated from the Tamil with synopsis, exposition etc. By the Late Gordon Matthews, M.A., B.Litt. "கார்டன் மேத்யூஸ்" என்பவர் சென்னைக் கிறித்துவக்கல்லூரியில் பல்லாண்டுகள் பேராசிரியராகத் திகழ்ந்தவர். ஓய்வு கொண்டு தம் தாய் நாடு திரும்பிச் சிவஞான போதத்தின் பன்னிரு சூத்திரங்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தந்துள்ளார். அந் நூலின் முன்னுரையில் பன்னிரு சூத்திரங்களையும் தமிழ் மொழியில் காணப்பெறுகின்ற முறையிலேயே ஆங்கில மொழி எந்த அளவிற்குச் சுருங்கிய சொற்கள் இடந்தருமோ (Condensation of thought and conciseness of expression) அந்த வகையில் தருகின்றார். பின்னர் சிவஞான போதத்தில் காணுவது போல் ஒவ்வொரு சூத்திரத்தின் சூர்ணிகை, அதிகாரணம் ஆகிய விளக்கப் பகுதிகளை, மொழி பெயர்த்துத் தருகின்றார். இதன் பின்னர் பதினெட்டாவது நூற்றாண்டில் திகழ்ந்த உரையாசிரியர் சிவஞான யோகியின், "திராவிடமாபாடியத்தினின்று" மேலும் விளக்கப் பகுதிகளை மொழிபெயர்த்துத் தருகின்றார். இப்பகுதியில் மெய்கண்ட சூத்திரம் தரப்பெறுகிறது. அதை அடுத்த நிலையில் அதிகாரணம், உதாரணம் ஆகியவற்றின் மொழிபெயர்ப்பு அமைகிறது. நூலின் இறுதிப் பகுதியில் வடமொழியில் அமைந்துள்ள சிவஞான போதச் சூத்திரங்களின் மொழிபெயர்ப்பினைத் தருகிறார்.

ஆங்கிலத்தில் அமைந்துள்ள மொழி பெயர்ப்புகளில் தலைசிறந்த இடம், "கார்டன் மேத்யூஸ்" அவர்களின் மொழி பெயர்ப்பு பெறு

கின்றது. காரணம் மேற்கண்ட வகையில் மிகத் தெள்ளிய ஒரு ஆங்கில ஆக்கம் அமைவது அரிது. இவ்வாக்கம் சிவஞான முனிவரின் பேருரையைத் தழுவி எழுதப்பெற்ற விளக்கப் பகுதிகளையும் கொண்டுள்ளமை, மேலும் நூலுக்குப் பெருமை தருகின்றது. அன்றியும் வடமொழியில் காணும் சிவஞானபோத சூத்திரங்களின் மொழி பெயர்ப்பு ஒப்புமை ஆய்வுக்கு (comparative studies) பெரிதும் துணை செய்யும். சைவ சித்தாந்தத்தினை ஆங்கிலத்தில் பயிற்றவும் அதனைக்குறித்துச் சொற்பொழிவுகள் ஆற்றவும் வேண்டியவர்கள் இப்பனுவலை நன்ருகப் பயிலல் வேண்டும்.

கார்டன் மேத்யூஸ் அவர்களின் மொழிபெயர்ப்பு 'ஆக்ஸ்பர்ட்' பல்கலைக்கழகத்தின் வெளியீடாகும். மேத்யூஸ் மறைந்த பிறகு, ஒரு 'நிதி'யின் பொருட்டுணைகொண்டு வெளியிடப்பட்டது.

இதுகாறும் போப், ஷொமீரஸ், ஹாய்சிங்டன், கார்டன் மேத்யூஸ் ஆகிய ஆங்கிலப் பெரியார்களது சைவசமயத் தொண்டினை அவர்களது ஆங்கில வெளியீடுகளின் துணைகொண்டு அறிந்தோம். அடுத்து நம்மிடை வாழும் அமெரிக்க அறிஞர் ஒருவரது சைவத் தொண்டினைக் குறித்து அறிவோம்.

John H. Piet, " A Logical presentation of the Saiva Siddhanta Philosophy". ஜான்பீட் என்பவர் தற்பொழுது வேலூரின்கண் அமைந்துள்ள "ஊரிஸ்" கல்லூரியில் துணைத்தலைவராகப் பணியாற்றி வருகிறவர். இவ்வறிஞர் அகவையால் மிக இளையர். இவர் அமெரிக்கக் கொலம்பியப் பல்கலைக் கழகத்திற்குப் பேரறிஞர் பட்டம் பெறவேண்டி எழுதிய நூலே இங்கு நாம் குறிப்பது ஆகும். (Submitted in partial fulfilment of the requirements for the degree of Doctor of Philosophy in the Faculty of Philosophy of Religion and Ethics, Columbia, Columbia University). 'பீட்' அவர்கள் தமது நூலுக்குத் தந்துள்ள தலைப்பு மிகவும் கவருவதாகும். அளவை நெறியில் (a logical presentation) சைவ சித்தாந்த விளக்கம் தரப் பெறுகிறது. ஆங்காங்கு நூலின்கண் சைவர்களது மெய்ப்பொருள் துணிவின் சிறப்புக்களைத் தருகின்ருர்கள். மேலும், அளவை நெறி பிறழாது கருத்துக்கள் அமையும் நிலையினையும் வலியுறுத்தியுள்ளார்கள்.

நூலின் முற்பகுதியில் முன்னுரையும், சிவஞான போதத்தைப் பற்றி ஒரு மிகப் பொதுவான (Outline) கருத்தும் அமையக் காண்கிருேம். முதல் ஆறு சூத்திரங்களை விரிவாக ஏறக்குறைய எழுபது பக்கக்களில் விளக்குகிருர்கள். (General Sutras) ஏனைய சூத்திரங்களைச் சிறப்பான முறையில் விளக்கி (Special Sutras) நூலின் இறுதிப் பகுதியில் சித்தாந்தத்தின் சிறப்புகளை ஆய்வுக் கண்கொண்டு

ஆய்ந்து பல கருத்துக்களைத் தெரிவிக்கின்றார். சில உண்மைகளை அமெரிக்கர் தெள்ளிதின் உணராது குறைகளெனக் குறிக்கின்றார்கள். சித்தாந்தத்தில் ஏழு உண்மைகள் சிறப்பிடம் பெறுகின்றன என்றும், அவற்றின் அளவை நெறியில் உணர்த்த இயலாதென்றும், அவற்றை நம்புதலே வேண்டுமென்றும் குறிக்கின்றார்கள். 'பீட்' அவர்களின் கருத்துக்களை இங்கு மறுத்தற்கில்லை. சித்தாந்தப் பயிற்சி 'பீட்' அவர்கட்குப் "பேரறிஞர்" பட்டத்தினைப் பெற்றுத்தந்தமைக்குப் பெருமகிழ்ச்சி கொள்கிறோம். நூலில் 'பீட்' அவர்களின் பெரு முயற்சி புலனாகிறது. சைவ உலகில் உள்ள சில பேரறிஞர்களைக் கலந்து சில பகுதிகளுக்கு பீட் அவர்கள் விளக்கம் பெற்றுள்ளார்கள். ஆயினும் நூலின் இறுதிப் பக்கத்தில் (பக்கம்-180) குறித்துள்ள குறைகளைச் சைவப் பேரறிஞர்களிடத்தில் கூறி அவர்களது மறுமாற்றங்களை வெளியிட்டுத் தமது முடிபினைத் தெரிவித்திருந்தால் அறிஞர் உலகம் அறிந்து இன்புறும்.

சைவ சித்தாந்தத்தைப் பற்றி வெளிவந்துள்ள பிற சமயத்தாரது ஆங்கில நூல்கள் :—

David Navamani Nadar: An English translation of St. Maykanda Deva Nayanar's Sivagnanabotham. "டேவிட் நவமணி நாடார்" என்பவர் மெய்கண்டாரது சிவஞான போதத்தினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தந்துள்ளார். இந்நூல் திருச்சிராப்பள்ளி நாஞனுகூகா அச்சகத்தில், 1927-ல், வெளியிடப்பெற்றுள்ளது. இந்நூல் எனக்குக் கிட்டிலது.

'பந்தர்க்கர்' என்பவர் (Bhandarkar) சைவ சித்தாந்தத்தைப் பற்றித் தமது நூல் ஒன்றில் குறிக்கின்றார். இது "வைணவம், சைவம், பிற சிறு சமயங்கள்" என்னும் தலைப்பில் வெளியிட்ட நூலில் காணுகின்ற சிறு குறிப்பே யாகும்.

மெக்னிகால் (Machnicol) என்பாரும் தான் எழுதிய ஒரு நூலில் சித்தாந்தத்தைக் குறிக்கின்றார். 'பார்த்' (Barth) என்பாரும் சமயங்களைப் பற்றித் தான் எழுதிய ஒரு நூலில் சைவத்தைப் பற்றிக் குறிக்கின்றார்.

இன்று நம்மிடை வாழ்கின்ற பரஞ்சோதி அம்மையார் (Miss. Violet Paranjothi) "லக்நௌ" (Lucknow) பல்கலைக் கழகத்தில் மெய்ப்பொருளியல் பேராசிரியராகப் பணியாற்றுகிறார்கள். இவ்வம்மையார் சென்னைப் பல்கலைக் கழகத்திற்குப் பேரறிஞர் பட்டம் பெறவேண்டி 1938-ல் "மெய்கண்ட சாத்திரங்களின் வாயிலாக அறியக் கிடக்கும் சைவ சித்தாந்தம்" என்னும் தலைப்பில் விரிவான ஒரு கட்டுரை தந்தார்கள். அப்பெரு நூலில்தான் காலம்சென்ற பேரறிஞர் சூரியநாராயண சாஸ்திரியார் அவர்களது தலைமையிலும் மேற்பார்வையிலும் எழுதப்பெற்ற கருத்துக்களைக் குறித்துள்ளார்கள். மேலும்

சைவ சித்தாந்தத்தை அத்வைதக் கண்கொண்டு (absolutist standpoint) நோக்கிப் பலபல குறைகள் கண்டார்கள்.

ஈழ நாட்டில் பேராசிரியராகத் திகழ்ந்து அண்மையில் மறைந்த, "சிவபாத சுந்தரம்" என்பவர் பரஞ்சோதி அம்மையாரது நூலில் காணப்படும் ஐயங்களுக்கு விளக்கமாகவும் சில கருத்துக் களுக்கு மறுப்பாகவும் ஒரு நூல் வெளியிட்டார்கள். இந்நூலின் முற்பகுதியில் சிவஞான போதத்தின் சுருக்கமான விளக்கமும் அமைந்ததால் அந்நூலுக்குத் தலைப்பு இவ்வாறு அமைந்தது: "An outline of Shivagnanabodham with a Rejoinder to a Christian critic."

இவ்வம்மையார் 1953-ம் ஆண்டு தனது நீண்ட கட்டுரையைச் சுருக்கியும் மூன்று புதிய தலைப்புகளில் பல கருத்துக்களையும் சேர்த்துச் சிறிய அளவில் வெளியிட்டார்கள். முன்னைய நூலும், இந் நூலும் லூசாக் கம்பெனியார் - லண்டனில் (Luzac and Co., London) வெளியிட்டனர். இரண்டாவது வெளியீட்டில் காணப் பெறும் குறித்தகு மாற்றமாவது, தாம் அத்வைதக் கண் கொண்டு நோக்காது சித்தாந்தக் கருத்துக்களைத் தாம் அறிந்த வகையில் விளக்குவதாகும். இதனை முன்னுரையில் நமக்குத் தெளிவாகக் கூறி விடுகிறார்கள். 'பீட்' அவர்களது நூல் இவ்வம்மையாரது முதல் வெளியீட்டுக்குப் பின்னர் வெளி வந்ததாகும். இவ்வம்மையாரது இரண்டாவது நூல் முதல் நூலைவிடச் சிறந்தது என எவரும் தயங் காது ஒத்துக்கொள்வர். காரணம் அம்மையார் முதல் நூல் எழுதிய பொழுது சில வெளியீடுகள் அவர்கட்குக் கிட்டவில்லை. இரண்டாவது நூலிலே அம்மையார் அவர்கள் எழுதுவது அறிந்த உடன் ஒரு பேரன், பர் அவர்கட்குப் பல அரிய வெளியீடுகளைத் தந்து உதவியுள்ளார்கள். இவ்வம்மையாரது தொண்டு சித்தாந்தத்தை ஆங்கிலத்தில் பயிலும் மாணவர்களால் பெரிதும் பாராட்டப்படுகிறது. இரண்டாவது நூலி லும் அம்மையார் ஐயங்களாகக் கிளக்கும் பகுதிகள் சிலவற்றிற்கு மறுப்புக் காணுதல் கூடும். அப்பணி இங்கு மேற்கொள்ளக் கூடுவ தொன்றன்று.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தற்பொழுது மெய்ப்பொரு ளியல் துறையில் பல ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் தா. ஐ. ஏசு தாஸன் M.A., M.Litt. என்பவர் பல்கலைக் கழகத்திற்கு எம்.லிட். பட்டம் பெற வேண்டி வரைந்த நூல் "சைவத்தின் உட்பிரிவுகளா கிய பல கொள்கைகள்" என்பதாகும். (Schools of Saivism) சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் பதினான்கினுள் ஒன்றாகிய சங்கற்ப நிராகரணத்தைப் பெரிதும் தழுவி எழுதப் பெற்றுள்ளது. சித்தாந்த சைவம் எங்ஙனம் பிற சைவங்களினின்றும் மாறுபடுகிறது என்று தெள்ளிதின் உணர இவர்களது நூல் பெரிதும் துணை செய்யும். ஏசு

தாஸன் அவர்கள் சைவசமயத்தைப் பற்றி ஒரு சிறு நூல் வெளியிட்டுள்ளார்கள். அது கோவை, "கிறித்தவ சிஷ்ய சங்கத்தின்" வெளியீடாக அமைந்துள்ளது.

சித்தாந்த மாணவர்கள் ஈடுபடாத ஒரு புதிய துறையில் பணியாற்றிய பெருமை ஏசுதாஸ் அவர்களுக்கு உண்டு. பல கொள்கைகளையும் ஒருங்கே பல நூல்களின் ஆய்வால் தொகுத்துத் தந்துள்ளார்கள். இவர்கள் சென்ற ஆண்டு தமிழ் நலம் சான்ற "தனிநாயக அடிகள்" நடத்தும் செவ்விய ஆங்கில இதழாகிய (Tamil Culture) வெளியீடு ஒன்றில் "ஆணவ மலத்தைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள், எடுத்துக்காட்டுகள்" அனைத்தையும் தந்துள்ளார்கள். (Concept of Anava Mala in Saiva Siddhanta.)

இக்கட்டுரையின் பிற்பகுதியில் குறிக்கப்பெற்ற அனைவோரும் நம் நாட்டவர்களே. அயல் நாட்டவர்கள் அல்லர். ஆயினும் ஆங்கிலத்தில் அவர்தம் வெளியீடுகள் அமைந்ததால் ஈண்டுக் குறிக்கப்பெற்றன. ஆக, இக்கட்டுரையில் சைவ சமயத்திற்கு அயல் நாட்டவர்கள் செய்த தொண்டும் நமது நாட்டவர் அயல் மொழியாகிய ஆங்கிலத்தில் செய்த தொண்டும் குறிக்கப்பெற்றன. நூல் வடிவில் போந்தனவற்றைக் கொண்டோம். சீரிய வெளியீடுகளில் இடம் பெற்ற கட்டுரைகளில் பலவற்றைப் பற்றிக் குறிப்புக்கள் கண்டனனேயன்றி அவற்றைப் பயிலும் பேறு பெற்றிலேன். ஆதலால் இவற்றை விடுத்து நூலளவில் எனது கருத்தைப் பதித்து எழுதலாயினேன். சைவ சமயப் பேரவை, அயல் மொழியாகிய ஆங்கில மொழியிலும் ஜெர்மானிய மொழியிலும், புறச் சமயத்தவர்களால் எழுதப்பட்டுள்ள நூல்களைப் பற்றித் தனது பொன் விழாவில் சைவ உலகிற்குத் தெரிவித்தல் கடனாகும் என்று கருதி இக்கட்டுரை எழுதப்பெற்றது. நமது சமயத் தோன்றல்களாகிய மறைமலையடிகள், ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை ஆகியவர்களது ஆங்கில வெளியீடுகள், மேனாட்டவர் சைவத்திற்குத் தொண்டு புரியப் பெரிதும் துணைநின்றன.

---



ஆர். மாசிலாமணி முதலியார்



எஸ். குப்புசாமி முதலியார்




வள்ளியம்மையார்



எஸ். பாலசுப்பிரமணிய முதலியார்



ஏ. எஸ். மாணிக்கம்




டி. மாணிக்கம் செட்டியார்



எம். குப்புசாமி நாயக்கர்




டி. சுப்பிரமணியம் செட்டியார்




ஆடூர் - எம். இரத்தினசபாபதிப் பிள்ளை
(பொன்விழா வரவேற்புக் குழுவின் தலைவர்)



எஸ். இரத்தினசாமி செட்டியார்
(பொன்விழா வரவேற்புக் குழுவின் செயலாளர்)



க. அரங்கசாமி முதலியார்



வா. தி. மாசிலாமணி முதலியார்

# சித்தாந்த சைவத்தின் முதற்பொருளும் அணையும் நெறியும்

க. வச்சிரவேல் முதலியார், பி. ஏ., எல். டி.

சமய நெறிகள் அனைத்தும் மக்களுக்கு ஒழுக்க நெறியைப் போதிப்பனவே. அந்நெறி ஒருவர் பிறரோடு பகையின்றி இயைந்து அமைதியாக வாழ வாயிலாக உள்ளது; மேலும், ஒருவர் உள்ளத்தில் எழும் பலதலைப்பட்ட உணர்வுகள் ஒழுங்குபட வளர்ந்து, செம்மையாகத் தொழிற்பட்டுத் தமக்கும் பிறர்க்கும் அமைதி, இன்பம், நன்மை என்பவற்றை உண்டாக்கவும் உதவுகின்றது.

இத்தகைய நெறியை எடுத்துக்கூறும் சமயங்களுட் பல, மக்கள் உள்ளம் ஒழுக்க நெறியைப் பற்றுதற்பொருட்டு, அந்நெறியின் தலைவனாக ஒரு தெய்வத்தை அல்லது ஆசிரியனை உடன்பட்டுக்கொள்ளும். அத்தெய்வம் ஒழுக்க நெறியை நியமிப்பதாகவும், பயன்தருவதாகவும் கற்பிக்கப்பெறும். சித்தாந்த சைவம் இப் பொது இலக்கணத்திற்கு விலக்கு அன்று. ஆயினும், இது தெய்வத்தைக் கொள்ளும் முறைக்கும் பிற சமயங்கள் கொள்ளும் முறைக்கும் வேறுபாடு உள்ளது.

பிற சமயங்களுட் கொள்ளப்படும் தெய்வங்கள் குடியாட்சி முறையிற் கொள்ளப்படும் சட்டத்துக்குட்படு தலைவர் (Constitutional Head of a Democratic Republic) போல, இன்றியமையாமை காரணமாக, இனியது, நல்லது எனப் புனைந்து கொள்ளப்படும் கற்பனைப் பொருளாக முடிகின்றன. சித்தாந்த சைவத்துள் அவ்வாறு இல்லை. இதன்கண், கடவுள், புறப்பொருள்களையே கண்டு அறிந்து வரும் கீழ்நிலையில் கேட்டும் ஆராய்ந்தும் உய்த்துணர் பொருளாக இருப்பினும், மெய்யுணர்வு உடையார்க்கு இவ்வுடம்புள்ளபோதே தலைப்பட்டு உணரப்படும் அனுபவப் பொருளாவது. சித்தாந்த சைவத்தில் கடவுளைத் தலைப்பட்டுணரும் அனுபவமே வாழ்க்கையின் முடிந்த குறிக்கோள். பிற சமயங்களுள் சமயநெறிக்கண் கொள்ளப்படும் தெய்வமும் வேறே, தத்துவ ஆராய்ச்சியிற் கொள்ளப்படும் முதற்பொருளும் வேறே (God of Religion and the Absolute of Philosophy are different) ஆயின், சித்தாந்தத்துள் இரண்டும் வேறுவேறு அல்ல; அவை ஒரே பொருளைப்பற்றிய இருவகைக் கருத்துணர்வு. சித்தாந்த சைவ நெறியின்படி, எல்லா உயிர்களும் சைவமே. அஃதாவது, சிவசம்பந்தம் உடையவையே. அவை இச் சம்பந்தத்தை உணராமைக்குக் காரணம் அவற்றை இயல்பாகப் பற்றியுள்ள அக மாசு. உயிர்கள் மாசு அகன்று முதற்பொருளைத் தலைப்பட்டுணரும் அனுபவம் பெறுதற்குச் சாதனமாகவே பிறவி உள

தாயிற்று; இவ்வுலக வாழ்வும், ஒழுக்க நெறியும், சமய நெறியும் அதன் பொருட்டே முதல்வனால் அமைக்கப்பட்டவை.

இறைவன் உயிர்களின் வாழ்முதல்; அவற்றின் உணர்வின் முதல். ஐம்பொறிகளும் உயிரால் உள்நின்று செலுத்தப்பட்டுப் பொருள்களை அறிந்துவருதல் போல, உயிர்களும், உயிர்க்கு உயிராகிய முதல்வனால் உண்ணின்று உணர்த்தப்பட்டே பொருள்களை அறிந்து அநுபவித்து வருகின்றன. ஆயினும், ஐம்பொறிகள் தமக்கு முதலாகிய உயிரை அறியாததுபோல, உயிர்களும் தமக்கு முதலாகிய இறைவனை அறியாது, தாமே செய்வதாகவும், நுகர்வதாகவும், பிறர் செய்வதாகவும் நுகர்வதாகவும் உணர்ந்து வருகின்றன. இதனால் உளதாகும் 'யான்', 'எனது' என்னும் செருக்கினால்தான் பிறவிக்குக் காரணமாகிய நல்வினை தீவினை உளவாகின்றன. 'யான்' 'எனது' என்பவை அற்ற இடமே இறைவன் திருவடி விளங்கும் இடம்.

பிறவிக்கடலில் உள்ள உயிர்களை இறைவன் திருவடிக்கண் சேர்க்கும் புணையே அவன் அருளாணையால் உலகில் நிகழும் ஒழுக்கநெறி. ஒழுக்கநெறி அறம் எனப்படும். அறத்திற்குச் சார்பாவது அன்பு. அன்பால் அறமும் அறத்தால் அன்பும் வளரும்; அவ்விரண்டானும் இன்பம் பெறலாகும். அன்பு உயிரின் பண்பு; அதனை அறத்தான் வளர்த்துக்கொள்ளவே உயிர்க்கு உடம்போடு கூடிய தொடர்பு இறைவனால் உளதாயிற்று.

முதற்கண் தொடர்புடையார்மாட்டு நிகழும் அன்பு, வளர்ந்து முறுகும் நிலைக்கண், தொடர்பு பற்றுது எல்லா உயிர்கள் மாட்டும் செல்லும் அருளாக மாறும். இவ்வாறு அருளும் அறமும் நிறைந்த உள்ளம் மாசற்று விளங்கும். அவ்விளங்கு நிலைக்கண் தோன்றுவதே மெய்யுணர்வு. அதனால் செம்பொருளைத் தலைப்பட்டு நின்று ஒழுகி உலகப் பற்றைத் தீரவிட்டுப் போா இன்பத்தமரும் நிலையே வீடுபேறும்.

ஆகலின்,

எவ்வுயிரும் நீங்கா துறையும்இறை சிவனென்று
எவ்வுயிர்க்கும் அன்பா யிரு.

# திரு ஐந்தெழுத்து

டாக்டர். அ. சிதம்பரநாத செட்டியார், எம். ஏ., பிஎச். டி.
தமிழ்ப் பேராசிரியர், அண்ணமலைப் பல்கலைக் கழகம்

சைவ சிந்தாந்த நூல்கள் இறைவனை அடையச் சாதனமெனச் சிறப்பாகக் கூறுவது திரு ஐந்தெழுத்து ஆகும். அவ்வைந்தெழுத்து "நமசிவாய" என்பது என்று சிலரும், "சிவாயநம" என்பது என்று சிலரும் கூறுவார்கள். சிவாயநம என்றிருந்தால், சிவனுக்கு வணக்கம் என்று பொருளாகும் என்று கூறுவார்கள். சிவாய என்பது ராமாய என்பதுபோலச் சிவனுக்கு என்று பொருள்படுகின்ற நான்காம் வேற்றுமை வடமொழிச் சொல்லாகும். எனவே, சிவாயநம என்பேோர் வடமொழி மந்திரத்தினின்று இது வந்தது என்ற முடிவினை ஒப்புக்கொள்பவராவர். ஆயினும், திரு. கா. சுப்பிரமணியப் பிள்ளை (எம். ஏ., எம். எல்.) போன்றவர்கள் சிவாயநம என்பது வடமொழியி னின்று வந்ததன்று எனப் பலவகையாலும் வற்புறுத்தியுள்ளார்கள். "நமசிவாய" என்பது ஒரு அடையாளத் தமிழ் மந்திரம் எனவே, திரு. கா. சுப்பிரமணியப் பிள்ளையவர்கள் "தமிழர் சமயம்" என்ற நூலிற்கொண்டனர். இந்த மந்திரத்தில் உள்ள ஐந்தெழுத்துக்களும் குறிப்பாக ஏதோ பொருள் உணர்த்துவதாகக் கொள்ளுதல் வேண்டுமே யன்றி, நேரே பொருள்படும் சொற்களைத் தாங்கி நிற்பதாகக் கொள்ளு தல் பொருந்தாது என்பது அறிஞர் பலருடைய கருத்து. சிவனுக்கு வணக்கம் என்று பொருள் கொள்ளுவதாயிருந்தால், 'சிவாய' என்பதும் 'நம' என்பதும் வடமொழிச் சொற்களாதல் அறிக. அவற்றையே தமிழ் மக்கள் பண்டுதொட்டுக் கையாண்டனர் என்று கூறுகின்ற கருத்துப் பொருந்தாது. சைவசிந்தாந்த நூல்களும் இக்கருத்தினை வற் புறுத்துவனவல்ல. ஒவ்வொரு எழுத்துக்கும் அறிகுறி வகையான் ஒவ்வொரு பொருள் உண்டு எனவே சிந்தாந்த நூல்கள் கூறுகின்றன. காட்டாக, உண்மை விளக்கத்தில் வருகின்ற சில வெண்பாக்களைக் கொண்டு ஒவ்வொரு எழுத்தும் எதனைக் காட்டுகின்றது என்று அறி தல் இயலும். சிவபெருமானுடைய கூத்து வடிவு இவ்வைந்தெழுத் தைத் தாங்கி இருப்பதாக மனவாசகம் கடந்தார் கூறியுள்ளார். 'ந' என்ற எழுத்து இறைவனுடைய அடியையும், 'ம' வயிற்றையும், 'சி' தோள்களையும், 'வா' முகத்தையும், 'ய' முடியையும் காட்டுவதாக அவர் கூறினர்.

ஆடும் படிகேள்நல் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி லேநகரம்—கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்.

என்ற வெண்பாவினை நோக்குக. அன்றியும், இறைவனுடைய நடி-யில் வலதுகைத் துடி 'சி' என்ற எழுத்தைக் காட்டுவதாகவும், அடைக்கலம் அளிக்கும் கை 'ய' என்ற எழுத்தைக் காட்டுவதாகவும், இடது கையில் உள்ள நெருப்பு 'ந' என்ற எழுத்தைக் காட்டுவதாகவும், இடது காலில் மிதித்துக்கொண்டிருக்கிற முயலகன் 'ம' என்ற எழுத்தைக் காட்டுவதாகவும் அவர் விளம்பியுள்ளார். மேலும், துடி கடவுள் ஆக்கும் திறம் உடையவர் என்பதைக் காட்டுவதுபோல், அடைக்கலம் தரும் கை அளிக்கும் தொழிலைக் காட்டுகின்றது என்றும், நெருப்பு அழிக்கும் தொழிலைக் காட்டுகிறது என்றும் அவர் பகர்ந்தார். முயலகன் என்பது மறைக்கும் தொழிலைக் காட்டுகிறது என்றும், வீசுகின்ற கை தூக்கிய திருவடியை நோக்கி இருப்பதால், அஃது அருளுதல் தொழிலைக் குறிப்பது என்றும் அவர் கூறியுள்ளமை அறியப்படும்.

திருமந்திரத்தில் திருமூலரும் திரு ஐந்தெழுத்துக்களைப் பற்றிக் கூறுகின்றவர் அது முத்திறப்படும் என்று சொல்லிப் பருத்த ஐந்தெழுத்து, நுண்ணிய ஐந்தெழுத்து, மிக நுண்ணிய ஐந்தெழுத்து என அது பெயர்பெறும் என்று குறிப்பிடுகின்றார். இவற்றை 'ஸ்தூல பஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம், அதிசூக்கும பஞ்சாக்கரம் என்றும் விளம்புவர். திருமூலர் 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்து, பருத்த ஐந்தெழுத்து என்று கருதினார். அவ்வைந்தெழுத்து உலக மக்களுக்கு ஒரு கனி போன்றது எனவும், அதை மக்கள் தின்று பார்த்தால் தித்திக்கும் எனவும் கூறினார். 'சி' என்ற எழுத்து சிவனையும், 'வ' என்பது அருட்சத்தியையும், 'ய' என்பது ஆன்மாவையும், 'ந' என்பது மலமாயையையும், 'ம' என்பது பாசமலத்தையும் குறிப்பனவாக அவர் எடுத்துரைத்தார் :

> சிவன்சத்தி சீவன் செறுமல மாயை
> அவஞ்சேர்த்த பாச மலமைந் தகலச்
> சிவன்சத்தி தன்னுடன் சீவனர் சேர
> அவஞ்சேர்த்த பாசம் அணுககி லாவே.

'நமசிவாய' என்பதை மாற்றிக் கூறினால் 'சிவாயநம' என்று ஆவதை எவரும் எளிதில் உணரலாம். 'நமசிவாய வாழ்க' என்றே மாணிக்க வாசகர் இயற்றிய திருவாசகம் தொடங்குகின்றமை, யாவராலும் அறியப்பட்டது. திருமூலர்,

> ஒன்றுகண் டேன்இவ் வுலகுக்கு ஒருகனி
> நன்றுகண் டாய்அது நமசிவா யக்கனி
> மென்றுகண் டால்அது மெத்தென் றிருக்கும்
> தின்றுகண் டால்அது தித்திக்கும் தானே

என்றார். அன்றியும்,

ஒன்றுகண் டீருல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீருல குக்குயி ராவது
நன்றுகண் டீர்இனி நமசிவா யப்பழம்
தின்றுகண் டேற்கது தித்தித்த வாறே

என்றும் மற்றோரிடத்தில் கூறினார்.

சிவாயநம என்ற மந்திரத்தை உள்ளத்தில் அமுதூறும்படி உரைத்திடல் வேண்டுமென்பது அவரால் பலவிடங்களில் வற்புறுத்தப்பட்டிருக்கின்றது. இம் மந்திரங்கள், உரிய குருவினால் மக்கட்கு அருளப்படத் தக்கன என்று பலர் விளம்புவர். அதனால்தான் போலும், மாணிக்கவாசகர் "யானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்" என்று கூறினார். அவர் கருத்துப்படி "சிவாயநம" என்று குருவினால் உபதேசிக்கப்படுதற்கு ஒருவர் தவம் செய்திருத்தல் வேண்டுமென்பது அறியப்படுகிறது. ஆயினும், இக்காலத்தில் குரு ஒருவருடைய அருளின்றி ஒருவர் 'சிவாயநம' என்றோ, 'நமசிவாய' என்றோ ஒரு மந்திரத்தைத் தாமே எடுத்துப் பேணிக் கொள்ளுவாரேயாயின், அதுவும் தவிர்க்கத் தக்கது ஒன்றன்று. 'சிவாயநம' என்பது தான் நுண்ணிய ஐந்தெழுத்து என்றும், அது நாளடைவில் "சிவசிவ" என்றேகூட மாறிவிடும் என்றும் கூறுவர். "சிவசிவ என்றே தெளிகிலர் ஊமர், சிவ சிவ ஆகும் திருவருளாமே" என்றும், "சிவ சிவ என்றிலர் தீவினையாளர், சிவ சிவ என்னச் சிவகதி தானே" என்றும் திருமூலர் சொல்லியுள்ளவை அறியத்தக்கன. இனி, மிக நுண்ணிய ஐந்தெழுத்து எனக் கூறப்படுவது சிவயசிவ என்பதன் அடியாகப் பிறக்கின்ற "சி" என்ற மந்திரமாகும் என்பது அறியப்படுகிறது.

"சிவாய நமஎனச் சித்தம் உருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ என்றென்றே சிந்தை
அவாயம் கெடநிற்க ஆநந்தம் ஆமே"

என்றார் திருமூலர்.

தொல்காப்பியர் கருத்துப்படி, மந்திரம் என்பன நாம் அறிந்த எழுத்துக்களால் ஆக்கப்படும் ஒரு தொகுதி என்பது அறியப்படுகிறது. நாமறிந்த எழுத்துக்களையே ஒரு வகையான் அறிஞர் சிலர் ஒரு வாய்பாடு போலக் கூட்டித் தர, அவை நாளடைவில் ஒரு பயன் தந்துவருதல் உண்டு என்று மக்கள் நெடுங்காலமாக நம்பி வருகின்றனர். அதனால்தான் தொல்காப்பியரும்,

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்றார். மறைமொழி என்பது இரகசியமான சொல் என்று பொருள்

படும். அவ்வாறாயின், சிவாயநம என்ற மந்திரத்திற்குச் "சிவனுக்கு வணக்கம்" என்று யாவரும் அறிந்த பொருள் இருத்தல் இயலாது. தமிழ் எழுத்துக்களுள் சிலவாகிய இந்த ஐந்தெழுத்துக்கள் ஒரு பயன் கருதி இவ்வாறு தொல்முது சூரவர் ஒருவரால் சேர்க்கப்பட்டன என்று கருதுதலே ஒத்ததொன்றாம். உயிர்கள் இறைவனைச் சத்தியின் அருள் துணையாக அடைதல் உண்டு என்பதுதான் சித்தாந்தத்தின் முடிவு. இதனை விளக்குவதே "சிவயசிவ" என்ற மந்திர வகையின் கருத்து என்பதைப் பெரியவர்கள் விளக்கியுள்ளார்கள். மலமாயையையும், பாசமலத்தையும் குறிக்கின்றனவாகிய "நம" ஆகியவை சிவயசிவ என்ற மந்திரத்தில் விலக்கப்பட்டிருத்தல் காண்க. அஃதாவது மாயையினின்றும், பாசத்தினின்றும் விடுபட்ட உயிர்கள் சத்தியின் அருளால் சிவனை எய்தும் என்று குறிப்பிப்பது நோக்கம் என்பது அடியில் வருவனவற்றால் விளங்கும். "ய" என்பது உயிரைக் குறிக்கும் என்று முன்னரே கண்டோம். அந்த உயிர் இருமருங்கிலும் சிவ சிவ என்ற ஒலிகளையே பெற்று நிற்றல் சிவயசிவ என்பதனுள் காணப்படும். இறைவன் அருளினால் தோன்றிய உயிர்கள் இறைவன் அருளால் மீண்டும் இறைவனை அடையும் என்பது இதனால் மெய்ப்பிக்கப்படுகின்றது. இறைவனை அடையும் உயிர்களினின்று மாயையும் பாசமும் விலகி நிற்கும் என்ற கருத்தும் சிவய சிவ என்பதில் "நம" இல்லாமையால் அறியப்படும். உமாபதி சிவாசாரியரும் திருவருட்பயன் என்னும் நூலில்,

> ஆசினவா நாப்பண் அடையா தருளினால்
> வாசியிடை நிற்கை வழக்கு.

என்று கூறினார். ஆன்மா அருளாகிய வகரத்திற்கும் சிவமாகிய சிகரத்திற்கும் இடையே நிற்கும் என்றார்.

வேறு சிலர் "சிவயசிவ" என்று கொள்வதற்குப் பதில் "சிவயவசி" என்று கொண்டு எழுதியுள்ளார்கள். அவ்வாறு கூறுவது பழைய மரபோடு ஒத்து வரவில்லையாயினும், அங்ஙனம் கூறுவது அறவே தப்பு என்றும் நாம் சொல்லிவிடுதல் இயலாது. இங்ஙனம் கொள்ளுவோர்கள் "சிவயவசி" என்பதில் "ய" என்ற எழுத்திற்குப் பின் சத்தியைக் குறிக்கும் "வ" வரப்பெற்றுள்ளமையையும், சிவனைக் குறிக்கும் "சி" வரப்பெற்றுள்ளமையையும் காட்டுவர். அவர் கருத்து, ஆன்மா சத்தியருளினால் இறைவனை அடைகின்றது என்பது "ய" என்பதற்குப் பின்னால் "வசி" வந்தமையால் விளக்கப்பட்டதாயிற்று என்பது. இந்த இடத்தில் "சிவசிவ" என இல்லையே எனக் கருதுவது அத்துணைப் பொருத்தமாக மாட்டாது. ஏனெனின், மந்திரம் என்பன மறைந்துள்ள பொருளை உணர்த்துவனவேயாம் ஆதலின் என்க. "சிவயவசி" என முன்னோர்கள் வழக்கு உண்டா

இல்லையா என்பது நம்மால் முற்ற முடிய அறுதியிட்டுக் கூற ஒண்ணாத தொன்று.

" ஓசைதரும் ஐந்தெழுத்தை விதிப்படி உச்சரிக்க,
உள்ளத்தே புகுந்தளிப்பன் ஊனமெலாம் ஓட "

எனச் சிவஞானசித்தியார் கூறும். விதிப்படி உச்சரித்தல் என்பது வல்லார் வாய்க்கேட்டு உணரத் தக்கதொன்றும்.

இவ்வாறு " சிவாயநம " என்றே, " நமசிவாய " என்றே, "சிவயசிவ" என்றே உச்சரிக்கின்றவர்கள் முடிவில் "சிவ" என்றும், " சி " என்ற வகையாலும் கூட ஒலி யெழுப்பி மகிழும் இயல்பினராகி விடுவர் என்று ஊகித்தறிதல் கூடும். திருமூலர் இம்மந்திரங்களை வற்புறுத்தினாராயினும், பிறிதோரிடத்தில் " சிவபெருமான் " என்று அழைத்தாலே இறைவன் வந்தருளுவான் என்றவாறு பின்னர்ப் பேசி யுள்ளமை அறியப்படுகிறது. மந்திரத்தின் நுண்பொருள்களை அறிய மாட்டாத எளிய மக்கள் தாமும் " சிவபெருமான் " என்று அழைத் தலே சாலும் என்பது அவர் கூறிய ஒரு செய்யுளால் அறியப்படுகிறது.

" சிவபெரு மானென்று நானழைத்து ஏத்தத்
தவபெரு மானென்று தான்வந்து நின்றான்
அவபெரு மானென்னை ஆளுடை நாதன்
பவபெரு மானைப் பணிந்துநின் றேனே "

என்பது அச்செய்யுள். இதனால் கூறப்படுவது தக்க குரு ஒருவர் கிடைத்து அவரால் மந்திர உபதேசம் நிகழ்த்துவிக்கப் படவேண்டு மென்று காத்திராமல் ஒருவர் இங்கே கூறப்பட்ட மந்திரங்களுள் யாதானும் ஒன்றைத் தமக்குத் தாமே தேர்ந்தெடுத்துக்கொண்டு, அவ்வாறு ஓதிப் பயன்பெறுதல் கூடும் என்பதும், அதுவும் இயலாதவர் " சிவபெருமான், சிவபெருமான் " என்று வாளா கூறுதலும் போதும் என்பதுமாம்.

# பேராசிரியர் சுந்தரம் பிள்ளையும் சைவமும்

டாக்டர்-வ. ஆ. தேவசேநாபதி, எம். ஏ., பிஎச். டி.,
தத்துவ ஆராய்ச்சியாளர், சென்னைப் பல்கலைக் கழகம்

திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி செய்த பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை அவர்களுடைய நூறும் ஆண்டு விழா, நம் சைவ சித்தாந்த சமாஜத்தின் ஐம்பதாம் ஆண்டு விழாவோடு சேர்ந்துவருவது பெருமகிழ்ச்சிக்குரியது. தமிழுக்கும் சைவத்திற்கும் பேராசிரியர் செய்துள்ள தொண்டின் பெருமை அளவிடற்பாலதல்ல. வடமொழியிலும் ஆங்கிலத்திலும் சிறப்பாகக் காணப்படும் நாடகத் துறை தமிழ்மொழியில் இல்லாதது குறித்து வருந்திய பேராசிரியரின் தமிழன்பு ஆக்கத் திறனுடையதாதலால் அவ்வன்பு அவரையே ஒரு சிறந்த தமிழ் நாடகம் எழுதத்தூண்டியது. அவர் எழுதிய மனோன்மணீயத்தின் உட்பொருளாகவும் இடையிடையேயும் அமைந்துள்ள சித்தாந்தக் கருத்துக்கள் நாம் அறிந்து இன்புறத் தக்கவை. எடுத்துக்காட்டாகச் சிலவற்றை மட்டும் இங்கே பார்ப்போம்.

திருவாசகத்தின் பெருமை, பொதுவாகத் தமிழ் மக்களும் சிறப்பாகச் சைவர்களும் அறிந்து பாராட்டுவது என்றாலும், பேராசிரியர் அதன் பெருமையை எடுத்துரைப்பதில் தனிநயம் உளது. “அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன், யாது நீ பெற்ற தொன்றென்பால்?”, எனவே, “சங்கரா! யார் கொலோ சதுரர்?” என்று மாணிக்கவாசகர் இறைவனைக் கேட்கிறார். இக்கேள்விக்கு விடை போன்றுளது பேராசிரியரின் தமிழ்த்தெய்வ வணக்கத்தில் உள்ள மாணிக்கவாசகரைப் பற்றிய பாராட்டு.

> “கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றே அம்பலத்துள்
> உடையாருன் வாசகத்தி லொருபிரதி கருதினதே.”

மாணிக்கவாசகரிடம் இறைவன் பெற்றது ஒன்றல்ல - இரண்டு: அவர் வாசகமாகிய திருவாசகமும் திருக்கோவையாரும். கடையூழிக் காலத்தில் வேறு எவரும் வேறெதுவும் இல்லாமற் போனாலும் இறைவனைப் போலவே நிலைத்து நிற்கக்கூடியவை மாணிக்கவாசகரின் அருள்நூல்கள் என்பது பெறப்படுகிறதல்லவா?

எதற்கும் அருளை முதன்மையாகக் கொள்ளுவது சைவத்தின் சிறப்பு. அதற்கேற்ப, அருள்வழி நின்று நாடகம் இயற்றுவதாக உளது, ‘அவையஞ்சின நெஞ்சொடு கிளத்தல்’:

> “அமைய அருளனைத்தும் ஆட்டுமேல் நெஞ்சே
> சுமைநீ பொறுப்பதென்ன் சொல்லாய்—நமையுமிந்த

நாடகமே செய்ய நயந்தால் அதற்கிசைய
ஆடுவம்வா நாணம் அவம்."

நாடகத்தில் தலைவியும் தோழியும் விளையாடும்போது, பாடுவதும் சிவனுடைய புகழையே. எடுத்துக்காட்டாக ஒன்றைப் பார்ப்போம்.

" துணையறும் மகளிர்மேற் சுடுகணை தூர்ப்பவன்
அணைகிலனரன் முன்னென் றூடாய்க் கழல்
அணைந்து நீறுறு னென்றூடாய் கழல்."

'சிவகாமி சரிதம்' என்று இடையில் வரும் கதையும் தத்துவ நுண்பொருள் உள்ளதாகக் கொள்ளலாம்.

" சிவகாமி யானுனது சிதம்பரனே " என்னச்
செப்புமுன மிருவரு மற்றோருருவ மானோர்
எவர்தாமுன் னணைந்தன ரென்றிது காறுமறியோம்
இருவரு மொன்றாயின ரென்றே யறையுஞ் சுருதி.
... * * * *
ஆழிபுடை சூழுலகம் யாவு நலமேவ
அறத்துறை புகுந்துயிர்க ளன்புவெள்ளம் மூழ்க
பாழிலலை வேனுடைய பந்தனைகள் சிந்த
பரிந்தருள் சுரந்தமை நிரந்தரமும் வாழ்க "

என்ற வரிகள் சைவ சமய இலக்கியத்தில் நன்கு ஈடுபட்ட உள்ளத்தினின்றும் வருபவை என்பது வெளிப்படை.

சேரநாட்டரசனை புருஷோத்தமனைப்பற்றிப் பாண்டிய நாட்டரசன் கூறுவது சிவபரம்பொருளுக்கும் பொருத்தமல்லவா ?

" வேதம் வகுத்த வியாசன் வியந்து
போற்றினும் பொருட்டா யெண்ணான் ; புலையன்
சாற்றுத லொருகால் தான்மகிழ்ந் தாடுவான்
ஒருவன்தன தடி யிணையணைந் துறவே
பெரிது விரும்பினும் பெருமை பாராட்டுவன்
மற்றோர் மனிதன் சற்று மெண்ணாதே
செருப்பால் மிதிக்கினும் விருப்பா யிருப்பான்
மலரிடிற் காய்வன்; பரவிடின் மகிழ்வன்
பெரியோர் சிறியோர் பேதைய ரறிஞர்
உரியோ ரயலோ ரென்றவ னொன்றும்
உன்னான் ஆயினு மின்னவை யாவும்
பிரபுத்துவ மலாற் பிறவல."

சுந்தரமுனிவரின் சீடர்களான நிஷ்டாபரர், கருணாகரர் உரையாடுவதிலும் கருணாகரரின் கருத்து சித்தாந்தக் கொள்கையின் அடிப்படையில் எழுந்ததே :

... * * நங்குரு நாதன்
ஈனனு மென்னையு மிழுத்தடி சேர்த்த
வானநற் கருணையே வாழ்த்தியிங் கென்னுல்
ஆனதோர் சிறுபணி யாற்றலே யெனக்கு
மோனநற் சித்தியும் முத்தியும் யாவும்
... * * * பொய்யாயினுமென்
பொய்யோ பாருப் புரையறு குரவன்
பரிந்து நந்தமக்கே சுரந்தவிக் கருணை.
... * * *
... * * * அருள்
தன்னிடை மூழ்கித் தானெனல் மறந்து
நெருப்பிடை யிழுதென நெக்கு நெக்குருகி
இருப்பவர் பிறர்க்கா யிராப்பக லுழைப்பர்
ஒருபயன் கருதார் அருள் கருதுவதென் ?
அகிலமுந் தாங்கும் அருளிலோ ரங்கமாச்
சகலமுஞ் செய்வர் அஃதவர் சமாதி
எங்கெலாந் துக்கங் காணினு மங்கெலாம்
அங்கம் கரைய நின்றாற்றி " ஐயோ,
எம்மையுங் காத்த இன்னரு ளிவரையுஞ்
செம்மையிற் காக்க "என மொழி குளறி
அழுது வேண்டுவதே யன்றி
விழுமிய முத்தியும் வேண்டார் தமக்கே."

மனோன்மணீயம் உலகியல் வழக்கை யொட்டிய தலைவன் தலைவியைப்பற்றிய நாடகமாக அமைந்தாலும் அதற்குத் தத்துவ நுண்பொருள் உண்டு என்று பேராசிரியர் முகவுரையில் கூறுகிறார். நுண்பொருளை உணர்த்துவதற்காக ஒவ்வொரு அங்கத்தின் ஈற்றிலும் வரும் கலித்துறைப்பாக்களின் கருத்து வருமாறு :

**முதல் அங்கம் :** தனுகரணங்களைத் தானெனும் தன்மை வந்தால் அருள்வழி நிற்கமுடியாது.

**இரண்டாவது ,, :** உயிரும் இறைவனும் ஒருவர்மீதொருவர் ஆசை கொள்ளல்.

**மூன்றாவது ,, :** அநுபூதியாலன்றி உபதேசார்த்தம் வெளிப்படாது.

**நான்காவது ,, :** ஞானமில்லாத வைராக்கியம் நன்றல்ல.

**ஐந்தாவது ,, :** அகங்காரம் அற்றபோது அருள்வழிப்படுதல்.

இவ்வாறாக மனோன்மணீயத்தை ஒரு சிறந்த சைவ சித்தாந்த இலக்கியமாக அமைத்துள்ள பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தமிழுக்கும் சைவத்திற்கும் நிலையான தொண்டு செய்திருக்கிறார்.

# தில்லைக் கலம்பகம்

**வித்துவான் – வை. சுந்தரேசவாண்டையார்,**
*ஆசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்*

**நூலாசிரியர் :—** இரட்டையர். இவ்வாறு இரு புலவர் ஒன்றாய்ப் பப்பாதி பாடல் பாடிவந்தனர் என்பது வேற்று மொழிகளிற்காணாத வியப்பாகும். இவர்கள் வரலாற்றைப் புலவர் புராண முடையார் இனிது எடுத்தோதினர். கோவை-சி. கு. நாராயணசாமி முதலியார் என்பவரும் ஒரு நூலால் வெளியிட்டுள்ளார்.

"வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர் செயங்கொண்டான் விருத்தமென்னும்
ஒண்பாவிற் குயர்கம்பன் கோவையுலா அந்தாதிக் கொட்டக் கூத்தன்
கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள் வசைபாடக் காள மேகம்
பண்பாக வுயர்சந்தம் படிக்காச லாலொருவர் பகரொ ணாதே"

என்ற தனிப்பாடலால் இவர்கள் கலம்பகம் பாடுவதில் வல்லுநர் என்பது அறியலாகும். இந்நூல் தவிர திருவாமாத்தூர்க் கலம்பகம் முதலியனவும் இவர்கள் பாடியனவே. செம்பாகமான இன் கவியால் சிலேடை முதலிய பாட, இயல்பிலேயே வன்மை படைத்தவர்கள் இவர்கள்.

**இவர்கள் காலம் :—** காளமேகப் புலவரைப்பற்றி இவர்கள்

" ஆசு கவியா லகில வுலகெங்கும்
வீசு புகழ்க் காள மேகமே......"

எனப் பாடியுள்ளனர். அப்புலவர் திருமலைராயனைப் பாடியவர். அழிந்துகிடக்கும் திருமலைராயன் பட்டினமும் (டாக்டர். திரு. உ. வே. சாமிநாத ஐயர் எழுதியுள்ளது) நமது சோழ நாட்டில் ஓடும் திருமலைராயன் ஆறும் அவனை நினைப்பூட்டுவன. ஆகலின் திருமலைராயன் காலமாகிய கி. பி. *பதினைந்தாம் நூற்றாண்டின் இடைப் பகுதியே இரட்டையர் காலமெனத் துணியலாம். இனி நூலுக்கு வருவோம்.

**தில்லைக் கலம்பகம் :—** ஏனைக் கலம்பகங்கள் போலவே பலவகைப் பாடலும் இடையிடையே வெண்பாக் கலித்துறையும் பதினெண் உறுப்பும், காலத்தான் மருவிய பிச்சியார், கொற்றியார், இடைச்சியார், ஆகிய பிறவுறுப்பும் தழீஇ அகப்பொருட்டுறைகள் பல நிரம்பி நிலவுகிறது.

---

*தென் இந்தியக் கல்வெட்டுத்தொகுதி இரண்டு, பக்கம் 118, கல்வெட்டு எண் 23-ல் காணப்பெறும் இத்திருமலைராயன் காலத்துக் கல்வெட்டு, சகம் 1377-இல் தோன்றியதைக் குறிப்பிடுகின்றது. சகம் 1377 + 78 = கி.பி. 1455 ஆகும். எனவே இவன் காலம் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டின் இடைப் பகுதியாகும்.

**தில்லையின் பெருமை** :—இத்திவ்விய தலம் *பஞ்ச பூத தலங்களுள் ஆகாயலிங்கத் தலம். பஞ்ச சபைகளுள் பொற்சபை யென்றும், ஓர் பாடலால் மிக அழகாகக் கூறப்படுகிறது. அது " கடல்விட நுகர்ந்த காசினி லிங்கம் " எனத் தொடங்கும் முப்பத்திரண்டாம் பாடலாம். இனிச் சிதம்பரத்தின் இடவிசேடங்களை யெல்லாம் பதியணிமை சாற்றல் என்னும் அகப்பொருட்டுறையுள் வைத்து ஓதுகின்றனர். அப்பாடல் " நிதம்பட " என்னும் 52-ஆம் பாடலாம். இதனுட் கூறும் நூற்றுக்கால் மண்டபம் சிவகங்கைத் தீர்த்தத்தின் மேற்பாலுள்ளது. திருமூலட்டானம் 69-ஆம் பாடலில் கூறப்படுகிறது. சிவகங்கைத் தீர்த்தம்,

" வஞ்ச மான பரசிவ கங்கையே
மன்னு தீர்த்தம் பரசிவ கங்கையே "

(செய்யுள்-17) என்பது முதலிய இடங்களிற் கூறப்படுகிறது.

" சீரணங் கண்ட திருநீல கண்டர்பரி பூரணங் கண்ட புலியூர் " என்னும் பாடலில், திருநீலகண்ட நாயனார் முத்தி பெற்றமையும், " மெய்யருந்தவர் கோவையெழுதிச் சிவந்தன " எனப் புயவகுப் பினுள் வைத்துப் பெருமான் அருந்தவப் பெரியோராகிய திருவாதவூரடிகள் கூறத் திருக்கோவையாரை எழுதினமையும் கூறப்படுகிறது.

" தில்லை மூவாயிரவர் பூசைபுரி பாதம் தேவருட னேயிருவர் தேடரிய பாதம் " எனத் தொடங்கும் 18-ஆம் பாடலில் தில்லை மூவாயிரவர் பெருமையும், காளிசெயலும், புலிப்பாதர், பதஞ்சலி யார் செயலும் கூறப்படுகிறது. இவ்விருவரும் பிரியாது நின்று நடங்காண்டலை இந்நூலுட் பல இடங்களில் அழகுற எடுத்துக் கூறுகின்றனர். அவற்றுள் " காதி லிரண்டுபேர் கண்டோ ரிரண்டு பேர் " எனத் தொடங்கும் பாடலும், அஞ்சத்தகும் பாம்பும் புலியும் முன்றிலினிடத்ததாகவும், அஞ்சாது என்மகள் திருநடம் தொழு தற்குத் துணிந்து எழுகின்றாள் என்னும் கருத்துள்ள நான்காம் பாடலும் குறித்தற்குரியன. பாலகனார்க் கன்று பாற்கடலீந்தருளியதை நர மாமிச பட்சணியாய்ச் சிறுத்தொண்டர் பசுங் குழவித் தசை விரும்பின இவர், ஒரு புலிக்குட்டி வரக்கண்டால் அதைக் கொன்றுண்ணக் கருதாமல் பாற்கடலூட்டக் கருதினது என் ? என்னும் கருத்தை,

" ...சிறுத்தொண்ட ருவகை யாட, நடையாடு பசுங்குழவித் தசை விரும்பினார் புலியூர் நம்பர் பாரி னிடையாடு புலிக்குருளைக் கெப்படி பாற்கடலூட்ட வெண்ணினரே " என்னும் 73-ஆம் பாடல் பகுதியில் குறிக்கின்றனர்.

---

*ஐவகை மன்றுதோறாடிய வள்ளல் காமுறக்
குன்றுதோறாடிய குமரற் போற்றுவாம். —கந்தபுராணம்

இனி வேறு கலம்பகக்காரிடத்துக் காணாத தனிச் சிறப்பு இவர்கள் வாக்கிற் காலம் என்னும் உறுப்பிற் காணப்படுகிறது. அது கார் முதலிய ஆறுகாலங்களுக்கும் பாடல் அமைந்திருத்தலாம். உறுப்புக்களுள் இடைச்சியாரைக் கோனார் என்பதன் பெண்பாலாகிய கோனிச்சியார் என்று கொண்டு,

" கோனிச்சி யார்கரும்பு தனையிச்சி யாரிவரைத் தெரிசித் தோர்கள்
ஏனிச்சி யார்மதவே ளிரதியைக்கண் டாலுமவ ரிச்சியாரே "

எனக் கூறுகின்றனர் (பாடல்-37). இதனோடு,

" பொருவிச்சீர் போராசை பூண்பிச்சீர் சண்டையிடு பூச லெல்லாம்
வருவிச்சீர் மடலேற வைப்பிச்சீர் சிவன்புலியூர் வரும்பிச் சீரே "

என்னும் பிச்சியாரும் பாராட்டத் தக்கதாகும். திருத்தில்லை, நெய்தலும் மருதமும் ஆகிய இருதிணை வளனும் உடையதாக இதனுட் கூறுங் கருத்து, கடலையண்மையிலுடைமை பற்றிப் போலும். தலங்கள் சிலவற்றை அடைமொழியின்றித் தொகுத்துக் கூறும் அருமை ஏனைச் சில கலம்பகங்களிற்போல இதனுள்ளும் காணப்படுகிறது. அதனை "குன்றென உயர்ந்தவர்" என்னும் 29-ஆம் பாடலுட் காண்க.

இக்கலம்பகத்துப் பாடல் ஒவ்வொன்றும் சுவை நிரம்பியன ஆதலின் முற்றும் படித்து மகிழ்தற்குரிய இந்நூலில் ஒரு சிறிது மட்டும் காட்டிய இக்கட்டுரையை விரிவஞ்சி இத்துடன் நிறுத்துகின்றேன்.

---

# பத்தாம் அடியார்

ராவ்பகதூர் - தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.,
Retired Personal Assistant to the Inspector General of Registration

அப்பர் பெருமான் அருளிய திருக்கருகாவூர்த் திருத்தாண்டகத்தில் இறைவனைப் " பத்தாம் அடியார்க்கோர் பாங்கனுமாம் " என ஓதி உள்ளார். " பத்தாம் அடியார் " என்பதின் பொருளை ஆய்வாம். உண்மை அடியார்களின் அகத்துள் விளங்கும் இலக்கணம் மூன்று என்ப; அவைதாம் (1) மானத ஜெபம் (2) மானத சிவபூஜை (3) உள்ளத்தே பரம்பொருள் தோற்றம் அளித்தல். அகத்திலக்கணம் மூன்றும் எப்போது விளங்குகின்றனவோ அப்போது புறம்பாய்த் தோன்றும் இலக்கணம் பத்து என்ப; அவைதாம் :—(1) கண்டம் தழுதழுத்தல் (2) நா அசைதல் (3) இதழ் துடித்தல் (4) நடுக்கம் உறல் (5) மயிர் பொடித்தல் (6) அங்கம் வெதும்பி வியர்த்தல் (7) தள்ளாடி விழுதல் (8) கண்ணீர் பிலிற்றல் (9) கலுழ்ந்து இரங்

கல் (10) ஆர்வத்தால் பரவசப்படுதல். இவ்விலக்கணங்களை உடைய அடியார்கள் புண்ணியர்கள்; வீடு பேறு பெறுவார்கள். திருநீறும் கண்டிகையும் புனைந்தவர்களிடம் மேற்சொன்ன இலக்கணங்கள் இல்லாவிடினும் அவர்களைக் கண்டால் வணங்கி, உபசார மொழிகளைக் கூறவேண்டும் என்றெல்லாம் உபதேச காண்டம் எடுத்துரைக்கின்றது.

"சுந்தரர்க்காய் பரவை முன்றில் தூதுநடந்
தருள் குழகன் தொண்டர்க் கெல்லாம்
அந்தரமாம் இலக்கணமூன் றவைகளின்மா
னத ஜெபமே ஆதி ஆகும்
சிந்தைசெய் மானதத் தியற்றும் சிவபூஜை
யோரிரண்டாம் தேர்ந்து நேடும்
புந்திமகிழ் பிரமம் வெளிப் படன்மூன்றாம்
சின்னமிவை புனிதம் ஆமால்."

"இந்த இலக்கண மூன்றும் முன்னுணர்ந்த
முனிவர்களால் இயம்பப் பட்ட(து)
அந்தரமாம் இவைகளில் யாதொரு வருக்கெப்
போதுண்டாம் அப்போ தற்று
வந்திடுமெய் யியற்புறம்பாய்த் தோற்றுமிலக்
கணம் பத்து வழங்கும் பாசத்
தொந்தவினை யனைத்தும் ஓரீஇச் சித்தாந்தம்
தெளிந்துணர்ந்த தொண்டர் ஆமால்."

"கண்டமிசை தழுதழுத்தல், நா அசைதல்,
இதழ் துடித்தல், கம்ப மாதல்,
விண்டுமயிர் பொடித்தல், அங்கம் வெதும்பியே
விதிர்விதிர்த்து வெயர்த்தல், நில்லா(து)
எண்டிசைதள் ளாடிவிழல், விழிகண்ணீர்
பிலிற்றல், கலுழ்ந் திரங்கல், ஆர்வம்
கொண்டுபர வசப்படுதல் இவைபத்தும்
அடியார்க்குக் குறிகள் அம்மா."

உபதேசகாண்டம்—ஞானவரோதயர் 919 - 921.

இதனால் 'பத்தாம் அடியார்' என்பதன் பொருள் புறத்திலக்கணம் பத்தும் உடைய அடியார் என்பது வெள்ளிடை மலைபோல விளங்குகின்றது. இதனையே "பத்துக்கொலாம் அடியார் செய்கைதானே" என்றார் அப்பர் விடந்தீர்த்த திருப்பதிகத்திலும் (4-18-10); "பத்துடையீர் ஈசன் பழஅடியீர்" என்றார் மணிவாசகரும். (திருவெம்பாவை 3); "பத்துடை அடியவர்க் கெளியவன் பிறர்களுக் கரிய வித்தகன்" என்றார் நம்மாழ்வார் (திருவாய்மொழி 1-3-1); "தொண்டர் மெய்யிற் றுலங்கும் இலக்கணம் உண்டோர் பத்து" என்றார் கோனேரியப்பர் (உபதேச - சிவ புண்ணியம் 25). இப்

பொருளை வைத்துக்கொண்டு, பிறவகையிற் பொருள் உரைப்பதுடன் " எட்டினோ டிரண்டும் அறியேனையே " என வரும் திருவாசக அடிக்கும் (திருச்சதகம் 49), " எட்டிரண்டும் அறியாத என் செவியில் " என வரும் திருப்புகழ் அடிக்கும் (சிதம்பரம் திருப்புகழ் 'கட்டி முண்டகர' எனத் துவக்கும் பாடல்). - அடியார்க்கு உரிய இலக்கணம் பத்தும் இல்லாதவனாகிய நான்' என்றும் பொருள் காணலாம் அன்றோ !

**வாழ்த்து**

தவம் பெருக்கும் அடியார்க்கோர் எய்ப்பினில்வைப்
பாக நிகழ் தன்மை வாய்ந்தே
அவம் பெருக்கும் பவந் தொலைய மனந்திருத்திக்
குணந்திருத்தும் அருமை வாய்ந்து
நவம் பெருக்குங் கோள்களவை செயுஞ் சேட்டை
தனைக் குலைக்கும் நலங்கள் பெற்றுச்
சிவம் பெருக்குஞ் சித்தாந்தப் பத்திரிகை
பல்லாண்டு செழித்து வாழ்க. (1)

சித்தாந்த உண்மையெலாம் சீராகவே ஐந்து
பத்தாண்டு நன்கு பரப்பிவரும்—சத்தாண்ட
சித்தாந்தப் பத்திரிகை சீர்சிறக்கப் பல்லாண்டால்
வித்தாண்ட தன்மைவளம் மிக்கு. (2)

---

# மெய்யன்பு

சுவாமி மதுரானந்தா, வெள்ளிமலை, நாகர்கோவில்

அன்பின் அருமறையாகிய திருவாசகத் திருமுறையிலே பிரார்த்தனைப் பத்திலே, " பெறவே வேண்டும் மெய்யன்பு " என்று ஓர் அடி வருகின்றது. அந்த மெய்யன்பின் நிலையையும், அநுபவத்தையும் திருவாசகத்தின் துணைகொண்டு இங்குச் சற்றுச் சிந்திப்போமாக. "மெய்யன்பு " என்ற சொற்றொடரிலே மெய் என்ற பதத்தை ஆராய்வோம். எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், மாறாத, மாயாத, அசைவற்ற, அளவற்ற ஒன்றையே மெய்ப்பொருள் என்று சொல்ல முடியும். அந்த மெய்ப்பொருளே பரம்பொருளாகிய இறைவன். அவன்பால் வைத்த பேரன்பே மெய்யன்பாகும். மற்ற அன்பெல்லாம் ஆன்மீகத் துறையிலே பொய்யன்பு என்றுதான் கொள்ளப்படுகின்றது. இவ்வுண்மையை மேற்படித் திருவாசகப் பாசுரத்திலே,

" ......பெறவே வேண்டும் மெய்யன்பு, போா, ஒழியா, பிரிவில்லா
மறவா நினையா அளவிலா, மாளா இன்ப மாகடலே "

என்று வெளிப்படுத்துகின்றார்.

இறைவன்பால் வைத்த பேரன்பும் ஓரொருகால் உள்ளத்தே தோன்றி மறையின் அது முழு மெய்யன்பாகாது. எதனாலும் தடைபடாத முடிவுறாத பேரன்புதான் மெய்யன்பு ஆகும் என்ற கருத்து, மேற்சொன்ன பாடலின் முதலடியின் பிற்பகுதியிலே, " அறவே பெற்றார்நின் அன்பர் அந்தமின்றி அகம் நெகவும்" என்று வருகின்றது. " அந்தமின்றி அகம் நெகவும்" என்பதும், வேறிடங்களில் "அன்பு, நிரந்தரமாய் அருளாய் கண்டாய்" என்பதும், " இடையறா அன்புனக்கு" என்பதும் ஒரு பொருளினவாம். " நினைப்பற நினைந்தேன்" என்றதும் அதுவே.

அந்த மெய்யன்பைப் பெற்றவர்கள் பெறற்கரிய பேறு அனைத்தையும் பெற்றவர்கள். அவர்கள் அதற்குப் புறம்பான ஒன்றையும் விரும்பாதவர்கள். ஏனையோர்தாம் உலகப் பொருள்களை நாடி இறைவனைத் துதிப்பர் என்ற குறிப்பை, முன் கூறிய பாசுரத்திலே இரண்டாவதடியில் உணர்த்துகின்றார் :

" அறவே பெற்றார் நின்அன்பர் அந்தமின்றி அகம்நெகவும்
புறமே கிடந்து புலைநாயேன் புலம்புகின்றேன் உடையானே."

இக்கருத்தையே,

" கொள்ளேன் புரந்தரன்மால் அயன் வாழ்வு..."

என்றும்,

" உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனிஅமையும் "

என்றும் வெளியிடுகின்றார்.

உலக ஆசைகளையும் உள்ளத்துக்கொண்டு உடையானை வழிபடுகின்ற நிலையை " நாடகத்தால் உன் அடியார்போல் நடித்து " என்று உரைத்து ஒதுக்குகின்றார்.

இந்த மெய்யன்பே மெய்யின்பத்திற்கு வழிகோலுகின்றது என்பதனை,

" ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே, என்னுடை அன்பே "

என்று கோயிற்றிருப் பதிகத்தில் குறிப்பாயுணர்த்தி, திருவண்டப் பகுதியிலே " முரசெறிந்து " முழக்குகின்றார். திருவாசகத்தின் கண் போன்று விளங்குகின்ற,

" உருவண்டப் பெருமறை என்று உலகமெலாம் புகழ்கின்ற
திருவண்டப் பகுதி எனுந் திருவகவலிலே "

'ஆற்று இன்பம் அலர்ந்து அலே செய்'கின்றது. அங்கே ஊனும், உயிரும் அன்பும், இன்பமும் சிவமும் ஒன்றாகிக் கலந்த அத்துவிதக் காட்சியைக் காணலாம். அவ்வகவற்பாவிலே " அகண்டாகார சிவபோக மெனும் பேரின்ப வெள்ளம், பொங்கித் ததும்பிப் பூரணமாய், ஏகவுரு வாய்க் கிடக்கும்" அற்புதக் காட்சியை மெய்யன்பர்கள் கண்டு பரவச மாவதைப் பாருங்கள்.

" வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே."

மெய்யன்பின் ஆற்றல் அற்புதம், அற்புதம்! அன்பனின் அகத்தே அமுத வெள்ளம் நிறைந்து ததும்பி, மயிர்க்கால் தோறும் தேங்கி, எலும்பையும் துளைத்து ஏறி, ஊனுடல் அருள் தேனுடலாக மாற்றி அமைக்கின்றது. கரும்புக் காட்டைச் சுவைத்து நிற்கும் கட கரியைப் போன்று அன்பனின் ஆன்மா பரபோகத்தில் ஆழ்கிறது.

" உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகந் ததும்ப
வாக்கிறந்த (அ)முதம் மயிர்க்கால் தோறுந்
தேக்கிடச் செய்தனன்; கொடியேன் ஊன்தழை
குரம்பை தோறும் நாயுடல் அகத்தே
குரம்பை கொண்(டு) இன்தேன் பாய்த்து நிரம்பிய
அற்புதமான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவ(து)
உள்ளங் கொண்(டு)ஓர் உருச்செய்(து) ஆங்கெனக்(கு)
அள்ளூறுக்கை அமைத்தனன்; ஒள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்ப(து) ஆக்கினன், என்னிற்
கருணைவான் தேன் கலக்க
அருளொடு பராஅமு தாக்கினன்..."

அருமையினும் அருமையான இந்த அனுபவ உண்மையைத் தற் காலத்தவராய ராமலிங்கரும், ராமகிருஷ்ணரும் வெளியிடுகின்றனர். முந்தியோர்,

" அன்புருவம் பெற்(று) அதன்பின் அருளுருவம் அடைந்து, பின்னர்
இன்புருவம் ஆயினை "

என்றார். பிந்தியோர்,

" ஆன்ம சாதனையின் பயனால், அன்பனுக்கு அன்பு-உடல் வந்தமைகின்றது. அதன் துணையால் அவன் இறைவனோடு ஒன்றி மகிழ்கின்றான்." ' In the course of spiritual discipline, one

get a love-body—With this love-body, the soul communes with God."—Gospel of Sri. Ramakrishna P. 39.

தான் பெற்ற பேரின்பம் எல்லோரும் பெறவேண்டும் என்பது திருவாசக முடையாரது பேராவல். "யான், எனது" என்னும் பொய்யிற் கிடந்து புரளும் உலகத்தை, பெருங் கருணையுடன் மெய் யன்பு வழியில் தன்னுடன் புறப்பட அழைக்கின்றார். யாத்திரைப் பத்திலே அடிகள், "காமம், வெகுளி, மயக்கங்களை விடுங்கள். பொறி புலன்களை அடக்கி இறைவன் திருவருளைச் சிந்தித்து வந்தியுங்கள். அவனது திருப்புகழை வாயாரப் பாடுங்கள். கையார அவன் திருப்பாத பூசை செய்யுங்கள்" என்று உபதேசிக்கிறார். அப்படி மனம் மொழி மெய்களையும் அவன் திருப்பணியில் ஈடுபடுத்தும்போது, "திருகலாகிய சிந்தை திருந்துகிறது. திருந்திய சிந்தையிலே மெய்யன்பு ஊற்றெடுக் கும். மெய்யன்பு பெற்றோர், அதனினும் வேறல்லாத சிவத்துடன் சேர்வர் என்பதுறுதி. ஆதலால் காலந் தாழ்த்தவேண்டாம் அன்பு வழிக்கு ஒருப்பட்டு வாருங்கள்.

"பூவார்சென்னி மன்னன் எம்புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவாது (உ)ள்ளங் கலந்துணர்வாய், உருக்கும் வெள்ளக் கருணையினால்
ஆவாஎன்னப் பட்டன்பாய் ஆட்பட்டீர் வந்(து) ஒருப்படுமின்
போவோங் காலம்வந்ததுகாண் பொய்விட்டு (உ)டையான் கழல்புகவே."

---

# பழைய நினைவுகள்

க. இராமநாதன் செட்டியார், பி. ஏ., பி. எல்.,
சட்டசபை உறுப்பினர், கோலாலம்பூர்.

உயர்தர நீதிமன்றத்தில் எப்பொழுதாவது திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்களைச் சந்திக்க நேர்ந்தால் அவர்களிடம் சைவ சித் தாந்த சமாஜத்தைப் பற்றி அதிகமாக விசாரிப்பேன். அவர்களும் எனது குறுக்கு விசாரணைக்குச் சந்தோஷமாகவே பதில் சொல்லு வார்கள். சமாஜத்தார் வெளியிட்ட அடக்கவிலைப் புத்தகங்கள் எனக்கு உயர்ந்த தொண்டாக மனதில் பட்டது. இத்தகைய சமாஜத்தில் நானும் ஒரு அங்கத்தினனாக இருப்பது எனக்குப் பெருமை என்று எண்ணினேன். கடமை யென்றும் கருதினேன்.

மயிலத்தில் நடக்கவிருந்த மகாநாட்டிற்கு திரு. ம. பா. என்னை அழைத்தார்கள். யானும் சென்றிருந்தேன். அங்கு சாப்பாடு வசதிக ளெல்லாம் அடிவாரத்தில்; சொற்பொழிவுகள் மலைமேலே. அங்கே காற்றோட்டம், அமைதி, அறிவு நிறைந்த சொற்பொழிவுகளில் மூழ்கி

னும். மலைமேலிருந்தார்க்குத் தேங்காய்ப்பால் வேண்டாமென்று பால் கலந்த காப்பியும் இடையிடையே கிடைத்தது. மயிலம் விழாவில் நடந்த இரண்டு விஷயம் மட்டும் மறக்க முடியவில்லை. ஒரு விஷயம் என்னைப் பற்றியது ; மற்றொரு விஷயம் மயிலம் மடாதிபதிகளைப் பற்றியது.

மகா சந்நிதானம் முடிவில் வாழ்த்துரை கூறும்போது தங்கள் மடத்தில் அதிக உபசாரமும் அதிகமான சமயப்பணியும் செய்யமுடியவில்லையே என்று சொல்லி, கண்ணீர் ததும்ப அழுது விட்டார்கள். என் மனமும் கலங்கியது. ஒரு தொண்டும் செய்யாத நான் எவ்வளவு அழுதாலும் போதாதே. அந்த மகாநாட்டில் குலுங்கக் குலுக்கச் சிரிக்கவைத்துப் பேசியவர்கள் சிலர் இருக்கலாம். அவர்களை யெல்லாம் மறந்துவிட்டேன். அழுகை நெஞ்சத்தைத் தொடுவதுபோல் வேறு எந்த உணர்ச்சி பிறர் நெஞ்சைத் தொடும்? இறைவனைப் பிடிக்கவும் அதுதான் வழி எனக் கண்டார் மாணிக்கவாசக அடிகள்.

மற்ற விஷயம் என் விஷயம் என்று சொன்னேன். மயிலத்தில் தான் நான் சமாஜ அங்கத்தினனானேன். அங்கேயே என்னைக் கமிட்டி மெம்பராகத் தேர்ந்தெடுத்தனர். அப்பதவிக்குப் புது அங்கத்தினர் தகுதியற்றவர் என்று சொல்லிப் பார்த்தேன். என் சொல் அம்பலத்தில் ஏறவில்லை.

பின்னர் மதுரையில் சாமாஜ விழா நடந்தது. கூட்டம் ஆரம்பிக்கு முன்னர் யானைகளோடு பெரிய ஊர்வலம் நடந்தது. திரு. வி. க. அவர்கள் தலைமை. கூட்டம் மிக அதிகம். அதற்கு முன்னும், பின்னும் அவ்வளவு மக்கள் வந்ததில்லை. அங்கு "பெரிய புராண சாரம்" என்ற பொருள் கொண்டு பேசினேன். திரு. வி. க. வழக்கம்போல் என் சொற்பொழிவை நிறையப் பாராட்டினார்கள். "அறுபத்துமூவரும் என்னோடு பேசியிருக்கவேண்டும். இல்லையானால் இவ்வளவு அழகாகப் பேச்சு அமைந்திருக்க முடியாது" என்றும் கூறினார்கள். இன்னும் பல பெரியார்களின் பாராட்டும் சொற்பொழிவுக்குக் கிடைத்தது. அங்கத்தினர் கூட்டம் நடந்த பொழுது, பலர், என்னைக் காரியதரிசியாக இருக்கவேண்டுமென்று விரும்பினர். திரு. ம. பா. தம் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ள வேணுமென்று வற்புறுத்தினர். திரு. ம. பா. இருபது ஆண்களுக்கு மேல் சமாஜத்துக்குத் தொண்டு செய்தவர். நேரத்தையும், உழைப்பையும் அளவில்லாது கொடுத்து சமாஜத்திற்குத் தாயாகி, தகப்பனாகி வளர்த்தவர். ம. பா. என்ற எழுத்துக்கள் அவர் சமாஜத்திற்கு அம்மாவும், அப்பாவும்போன்றவர் என்று காட்டுகிறதுஎன யான் கூறுவது வழக்கம். அவருக்குப் பின் அப்பணி செய்வது சிரமம் என உணர்ந்தேன். என் தகுதிக் குறைவையும் உணர்ந்தேன். ஆயினும் பலர் வேண்டினர். திரு. ம. பா., திருவாளர்கள் நாராயணசாமி நாயுடு, பு. ர. சாமிநாதன் இன்னும் பல பெரியார்கள் உதவி செய்வதாக வாக்

களித்தனர். என் தாழ்வும் சோம்பலும் சமாஜத்தின் பெருமையைக் குலைக்குமோ என நான் பயந்தும், அன்பர்கள் இட்டபணிக்கு ஆளாயினேன். தேர்தல் முடிந்ததும் மெல்ல நழுவினேன். எனக்குப் புது வாழ்வு; பெருவாழ்வு. மீனாட்சியம்மையிடம் சென்றேன். என்னால் சமாஜத்திற்குச் சிறப்பு ஏற்படாவிட்டாலும் குறைவு ஏற்படக்கூடாதென்றும் என் தொண்டு எனக்குச் சமய சாதனையாக வேண்டுமென்றும் பிரார்த்தித்தேன். சைவ சமயத் தொண்டிற்குச் சமாஜக் காரிய தரிசி உயிர்நாடி. ஆகையால் ஆற்றல் வேண்டினேன். வணங்கினேன்.

காரியதரிசி வேலைபார்க்கத் தொடங்கு முன்னர், சில முடிபுகள் எடுத்துக்கொண்டேன். (1) சமாஜ ஆண்டு விழாவில் ஒரு பேச்சாளராக என்னைப் போட்டுக் கொள்வதில்லை. (2) ஆண்டு விழாவில் பேச்சாளராக வருகிறவர்களுக்கு இரண்டாம் வகுப்புப் பிரயாணச்செலவு கொடுக்கிறது. (3) மாதக் கூட்டங்களைப் பல இடங்களில் நடத்தத் தூண்டுவது. (4) கோடைகால விடுமுறையில் சாஸ்திர வகுப்புக்கள் நடத்துவது. (5) சமாஜத்தில் அக்கறை காட்டும் கூட்டத்தை விரிப்பது. (6) கூடுமானால் எனது ஊரில் ஓர் ஆண்டு சமாஜ மாநாடு நடத்துவது.

**1.** என் பேச்சு மாதக் கூட்டங்களில் இருக்கும். யான் காரிய தரிசியாக இருந்தபொழுது ஆண்டுவிழாவில் பேசியதே இல்லை. சிவகாசியில் வற்புறுத்தியும் ஒரு விஷயம் எடுத்துப் பேசவில்லை. அறிக்கைகளையும், வந்தனோபசாரங்களையும் பேச்சுக்குமேல் இனிமையாக்க நான் முயல்வதுண்டு.

**2.** எந்த ஆண்டு விழாவிலும் ஒருவருக்கும் மூன்றும் வகுப்புடிக்கட் என் கையால் கொடுத்ததில்லை. பேச்சாளர் மூன்றும் வகுப்பில் வந்தாலும் பாதகமில்லை. இரண்டாம் வகுப்புப் பணமே கொடுத்தோம். ஓர் ஆண்டு விழாவில் சிலருக்கு மூன்றும் வகுப்புச் செலவு கொடுக்கலாமென்று வரவேற்புக் குழுவினர் கூறினர். யான் ஒத்துக்கொள்ளவில்லை. பேச்சாளர்கள் மூன்றும் வகுப்பில் வர ஒப்புக்கொண்டதாக வரவேற்பாளர் மறுமுறையும் எழுதினர். அம்மாதிரி ஒப்புக்கொண்டவர்களைப் பேச்சாளராகப் போடமுடியாது என்று எழுதினேன். இதில் என் முடிவிற்கு விரோதமாக நடந்தால் காரியதரிசி பதவியை விடத் தயாராய் இருந்தேன். கடைசியில் எனது சகோதரி திருமதி புஷ்பம்-நடராஜன் அவர்கள் தலையிட்டார்கள்; பேச்சாளருக்கு இரண்டாம் வகுப்புச் செலவு கொடுப்பதென முடிவாயிற்று. பேச்சாளர்களை மதிக்கவேண்டும். பெருமைப்படுத்த வேண்டும். அப்பெருமைக்குத் தகுதியில்லாதவர்களைப் பேச்சாளர்களாகக் கூப்பிடக்கூடாது.

**3.** **மாதக் கூட்டங்கள்:**—நான் காரியதரிசியாக வருமுன் சில சந்தர்ப்பங்களில் நடந்து நின்றுவிட்டதாகக் கேள்விப்பட்டேன்.

மாதக் கூட்டங்கள் தொடங்கியபின் சமாஜம் ஆண்டுக்கொருதரம் விழிக்காமல் சமாஜம் தொடர்ந்து விழித்திருப்பதாகப் பலருக்கு எண்ணம் ஏற்பட்டது.

4. **கோடை வகுப்பு:**—கோடை வகுப்பு சரியாக நடைபெறுதென்று பலர் எண்ணினர்; மாணவர் அதிகமாக வரமாட்டார்; ஆசிரியர்கள் தொடர்ந்திருக்காமல் இடையிடையே சொற்பொழிவுக்குப் போய்விடுவார்கள். வாத்தியார்கள் இல்லாத நேரத்தில் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க நான் சாஸ்திரம் படித்தேன். முதல் வகுப்பு நடந்தது. திருநெல்வேலி, பாபநாசம் மாணவர்கள் சேர்ந்தனர். கோயிலுக்கு இருவர் வந்து இவ்வகுப்பில் சேர்ந்துகொள்ள வேண்டுமென்று அப்பகுதியிலுள்ள கோயில்களுக்கு அறநிலையப் பாதுகாப்புத் தலைவராய் இருந்த திரு. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் ஆணையிட்டனர். இன்னொருவிதமான கூட்டமும் சேர்ந்தது. சாஸ்திரம் காதில் விழுந்தால் நல்லது என்று பக்கங்களிலுள்ள வயதான பெரியம்மாக்களும் வந்திருந்தனர். கடல்போலக் கல்வி நிரம்பிய சிவஞான முனிவரின் பேரரான திரு. சிவஞானம் பிள்ளை, பி. ஏ., பி. எல். அவர்கள் எங்கள் வகுப்பு முதல் மாணவராகவேண்டுமென வற்புறுத்திச் சேர்ந்துகொண்டார். காசி - பல்கலைக் கழகத்தில் சித்தாந்தப் பேராசிரியராக இருக்கும் திரு. சிவராமன் அவர்களும் ஒரு மாணவர், இன்னும் பல பெரியார்கள். ஒரு நல்ல குடும்பத்தில் மூன்று தலைமுறையில் உள்ளவர்கள் ஒருங்கே பாடங் கேட்டனர். எதிர்பார்த்ததற்குப் பன்மடங்கு சிறப்பாக நடைபெற்றது வகுப்பு. சிதம்பரம், ஸ்ரீவில்லிபுத்தூர், பெரியநாயக்கன்பாளையம் முதலிய இடங்களிலும் வகுப்புக்கள் நன்கு நடைபெற்றன. தெய்வீக வாழ்க்கை வாழ்ந்தோம். அநேகர் வாழ்க்கையில் இவ்வகுப்பு மறையாத மைல் கல்.

5. **விரிவு:**—சமாஜத்தில் பொதுமக்களும், பலதிறத்தினரும் அக்கரைகாட்ட வேண்டுமென்பது (democratize) எனது ஆசை. அதற்காகவே ஒரு மாநாட்டைச் சிவகாசியில் வைத்தோம். இரண்டு சமையல் வேண்டுமென இரகசியமாகக் கேட்டவர் சிலர். ஒரு பொதுச் சமையல்தான் நடைபெற்றது. பள்ளத்தூர் மாநாட்டில் சகசாநந்த அடிகளார் பேசினார்கள். பல ஆண்டுகள் சமாஜத்தில் பேசாதிருந்த பெரும் பேராசிரியர் திரு. சரவண முதலியார் அவர்கள் பேசினார்கள். முஸ்லிம் சகோதரர் ஒருவர் பெரியபுராணத்தைப் பற்றிப் பேசினார்கள். நின்றிருந்த மாதர் மாநாடு திரும்பவும் தொடங்கியது. பெண் பேச்சாளர்கள் தோன்றினர். பள்ளத்தூரிலும் பிற இடங்களிலும் மாநாடு தொடங்குவதற்கு முன்னால் சேரி வேலை செய்தோம். சேரியில் பஜனை செய்தோம். சித்தாந்த மேடை விரிந்து யாவருக்கும் இடங் கொடுத்தது.

6. **பள்ளத்தூர் மகாநாடு:** இங்கு வேறெங்கும் கண்டதில்லை யென்னும்படியான கொட்டகை அலங்காரமும் உணவு வசதி

களும் இருந்தன. முப்பதாயிரத்திற்குமேல் புத்தக வெளியீட்டிற்கு உதவ நகரத்தார்கள் முன்வந்தனர். பேப்பர் விலையின் அதிகத்தாலும் பேப்பர்க் கட்டுப்பாட்டாலும் ஒரு புத்தகமும் வெளிவரவில்லை. எங்களூரில் மகாநாடு, கோடைவகுப்பு, மாதக் கூட்டம் நடைபெற வேண்டுமென்று ஒவ்வொரு அங்கத்தினரும் ஆசைப்பட்டால் எவ்வளவு நல்லது. பள்ளத்தூர் மகாநாட்டிற்குப் பேருழைப்பும், பெருஉதவியும் முதன்மையாக நின்று உதவியவர் திரு. உ. அரு. அருணசலம் செட்டியாரவர்கள்.

சில சமயங்களில் காரியதரிசி என்ற பதவி யில்லாமல் சமாஜத்திற்கு வேலை செய்ய வேண்டுமென்ற ஆசை எனக்கு ஏற்பட்டது. அதற்கு வாய்ப்புங் கிடைத்தது. திரு. அரங்கசாமி முதலியாரவர்கள் வேலையிலிருந்து ஓய்வுபெற்றார்கள். காரியதரிசி பாரத்தை அவருக்குக் கொடுத்தோம். கூட்டவேலைகள் யாவும் நான் அவர்பேரால் செய்வதாக ஏற்றுக்கொண்டேன். என்னிஷ்டம்போல் உபயோகிக்க அவர் பேரை என்னிடம் நம்பித் தந்தார். காசைத் தருவது அதிசயமில்லை; பேரைத்தருவது அதிசயம். ஆறுமாதம் வேலை செய்தபின் மலேயா வரும்படி நேர்ந்தது.

அருட்டிரு. குன்றக்குடி அடிகளார் தலைமையில் கோலாலம்பூரில் ஒரு சமாஜ மாநாடு கூட்டினோம். இரண்டுநாள் சிறப்பாக நடந்தது. எனக்கு அளவில்லா மகிழ்ச்சி. சில நண்பர்களேனும் இந்தியாவிலிருந்து இவ்விழாவிற்கு வந்து கலந்துகொள்ள முடியவில்லையே என்ற ஒன்றுதான் குறை.

சைவத்தைப் பரப்ப மலேயாவில் எனக்கு ஏற்படும் போக்குவரத்துச் செலவுகளைச் சமாஜத்தாரும் இன்னும் சில நண்பர்களும் தருவதாக நான் மலேயா புறப்பட்டு வரும்போது தெரிவித்தார்கள். அந்த நம்பிக்கையை என்றும் மறவேன். ஆனால் பணம் தேவைப்படவில்லை.

நான் சமாஜத்தில் வேலை செய்தபோது எனக்கு உதவியவர்கள் பலர். ஆசி அளித்தவர் அநேகர். என்னைத் தங்களில் ஒருவனாக்கிய குடும்பங்கள் பல. யாவர்க்கும் நன்றி. பலரைப் பேர் சொல்லாது விட்டாலும் அவர்கள் என் முன் நிற்கின்றனர். ஒருவரைமட்டும் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் உயர்திரு C. M. இராமச்சந்திரம் செட்டியார். அவர்கள் படிப்பிலும் அநுபவத்திலும், வயதிலும் என்னைவிடப் பெரியவர். இதுவும் போதாதென்று நான் வக்கீலாக இருந்தபொழுது அவர் அறநிலையப் பாதுகாப்புக் கமிஷனர். இவ்வளவு தளைகளையும் நீக்கி, தம் வேலைகளையெல்லாம் ஒதுக்கிக்கொண்டு முகாங்களும் அதற்குத் தகுந்தாற்போல் வகுத்து முன்பின் சொற்பொழிவுக்கில்லாமல் என் சொற்பொழிவுக்கென்றே வருவார்கள். இது உண்மையென வெகுநாள் எனக்கு நம்பமுடியாமலிருந்தது. அவர்கள் பல சாட்சியம் காட்டிய பின்னரே நம்பினேன். இம்மாதிரி என்னை அளவுகடந்து உற்சாகப்படுத்திய பலருக்கும் கடமைப்பட்டுள்ளேன்.

கடல் கடந்து வாழும் சைவமக்களுக்கு சமாஜம் செய்யவேண்டிய பணி பலஉண்டு. அவைகளில் சில.:

1. சைவ மடங்களும் சமாஜமும் வெளியிடும் நூல்களை இங்கே கிடைக்கும்படி செய்தல்.

2. இராமகிருஷ்ணமடத்தைப்போல் இங்கே சைவ மடத்தின் கிளைகளை ஏற்படுத்தச் செய்தல்.

3. ஆங்கிலமும், தமிழும், சாஸ்திரமும் கற்று, ஒழுக்கமும், பேச்சுவன்மையும், சேவை மனப்பான்மையும் உடைய சொற்பொழிவாளர்களை சமாஜமும், மடங்களும் மலேயாவிற்கு அனுப்புதல்.

சமாஜம் வெகுகாலத்துப் பெருமரம். அதன் நிழலில் சிலகாலமேனும் வளர்ந்தோர் எண்ணிலர். சிலநாள் தங்கி அதன் விதையைக் கொண்டுபோனவர் பலர். அதில் நானும் ஒருவன். அந்நிழலில் தங்கிப் பயன்பெற்று அம்மரத்திற்குத் தண்ணீர் வார்த்துக் கொண்டிருக்கப் பாக்கியம் பெற்ற புண்ணியவான்களுக்கு எனது தாழ்ந்த வணக்கம் உரியதாகுக.

---

# திருவார்த்தையுள் ஒருவார்த்தை

ச. சிவகாமி அம்மையார்,

செயலாளர், பாகம் பிரியாள் மாதர் கழகம், தூத்துக்குடி

"திருவார்த்தை": இது மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்துள்ள திருவாசகத்திலுள்ள ஒரு பதிகம். இதனுள் இறைவன் தன் அடியவர்கட்கு எளியனாய் வந்து அருள் செய்த அழகான பத்துச் செய்திகளைக் கூறி இருக்கிறார். திரு - அழகு. வார்த்தை - செய்தி. இதில் ஒரு செய்தியை விளக்குவது இக்கட்டுரை.

கிழக்குக் கடற்கரை ஓரம். பாண்டி நாட்டிலே உள்ள ஒரு அழகான துறைமுகப்பட்டினம். பரதவர் குலத்திற்குத் தலைவன் ஒருவன். அவனுக்குக் கீழ் பல தோணிக்காரர்கள் உண்டு. அவன் ஏவல் வழி கேட்போர் எண்ணிறந்தோர். சுருங்கச் சொன்னால் அவன் பரதவர் குலத்திற்கே ஓர் அரசன். அவனுக்கு ஏற்ற மனையாள் இருந்தாள்; மக்கள் இல்லை. மகப்பேற்றின்மீது மிகுந்த ஆசை. அவன் ஒரு பக்தன். தனது குறையைக் கடவுளிடத்திலே முறையிட்டான்.

ஒரு நல்ல நாள் கடற்கரை ஓரமாகப் போய்க்கொண்டிருந்தான். அவனோடு கூட அவனது நண்பர்களும், பணியாளர்களும் போனார்கள். கண்ணுக்கினிய காட்சி. மரங்கள் அடர்ந்த சோலை ஒன்று. அதில் நுழைந்தான். திடீரென்று குழந்தையின் அழுகுரல் கேட்டது.

பரதவர் தலைவன் சுற்று முற்றும் பார்த்தான். கண்ணுக்கெட்டிய தூரம் வரை தன்னையும், தன்னோடு வந்தவர்களையும் தவிர யாரும் காணப்படவில்லை. குழந்தையின் அழுகுரல் மறுபடியும் கேட்டது. குரல் வந்த திசையை நோக்கி விரைவாகச் சென்றான். ஒரு புன்னை மரத்தின் நிழலிலே ஓர் அழகான இளங்குழந்தை. பச்சை மாந்தளிர் போன்ற மேனி. பவளம் போன்ற உதடு. கண்ணைக்கவரும் அழகு. பெண் குழந்தை. பரதவர் தலைவன் வியப்போடும் அன்போடும் அக்குழந்தையைக் கண்டான். ஆசையோடு வாரி எடுத்தான். குழந்தை மறுபடியும் அழுதது. மார்போடு அணைத்துக்கொண்டான். அவன் உள்ளமும், உடம்பும் குளிர்ந்தது. "மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்" என்ற வாக்கியத்தை அனுபவத்தில் அனுபவித்தான். முகத்தொடு முகம் வைத்தான். அழகிய சிறு கன்னங்களில் முத்த மிட்டான். அளவிலா இன்பம் அடைந்தான். வீட்டிற்கு விரைந்து வந்து, மனையாளிடம் மகவைக் கொடுத்தான். அருமையாக வளர்த் தான். நண்பர்களும், உறவினர்களும் இதனை அறிந்தார்கள். கூட்டங் கூட்டமாக வந்து குழந்தையைக் கண்டார்கள். பரதவர் தலைவன் ஒவ்வொருவரிடமும் இறைவனே தனக்கு இம்மகவைக் கொடுத்தான் என்று கூறி மகிழ்வடைந்தான். உரிய பருவங்கள் தோறும் திரு நிறையும் சிறப்புக்கள் செய்தான். அப்பெண் மகவு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து மங்கைப் பருவம் அடைந்தாள். எழில் நிறைந்த மேனி. எல்லாவற்றையும் அறியும் ஆர்வம். அறிவறிந்த மங்கை. தன் தோழிமாரோடு நல்ல அறிவு நிறைந்த வார்த்தைகளையே பேசினாள்.

இயற்கையின் வனப்பெல்லாம் உற்று நோக்கினாள். "எப் பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற இலக்கணத்திற்கு இலக்கியமாக விளங்கினாள். தந்தையினிடத்தில், "அப்பா! இந்த மலை எப்படி வந்தது? இந்தக் கடல் எப்படி உண்டாயிற்று? மரம் முன்னே தோன்றிற்றா? விதை முன்னே தோன்றிற்றா? இதனை உண்டாக்கியது யார்? நமக்கு ஒளி தரும் ஞாயிறு எப்படி விண்ணிலே உலவுகின்றது?" என்று நுணுகி, நுணுகிக் கேட்டாள். அவள் கேள்விக்கு தந்தை விடை சொன்னான். 'மகளே! இவைகள் எல்லாம் பேரறிவுடைய ஒரு முதல்வனாலே உண்டாக்கப்பட்டன. அப்பரமனாலே இவை யெல்லாம் ஒரு ஒழுங்குக்கு உட்பட்டு இயங்குகின்றன. அந்த முதல்வன்தான் கடவுள்.' இப்பொழுது அப்பர் பெருமானார் திருவாக்கு ஒன்றை இந்த இடத்திலே நினைத்துப் பார்ப்போம். "**முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்.**" மங்கை கடவுள் என்ற பெயரை முதல் முதலாகக் கேட்டாள். கடவுள் என்ற சொல் காதில் விழுந்த உடனே தன்னையு மறியாது அன்பு பொங்கி எழுந்தது. மேலும் கேட்டாள். 'அப்பா! அந்தக் கடவுள் எப்படி இருப்பார்?' தந்தை சொன்னான்: 'கண்ணே! அவர் ஒப்பற்ற பரம்பொருள் அவர் அழகை எப்படிச் சொல்வது? "இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் என்று" சொல்ல முடியாது. கட்டழகன், கருணை உள்ளத்தன், பணக்காரர் என்று பாரான், ஏழை என்று ஒதுக்கமாட்டான். "**மூர்த்தி அவனிருக்கும்**

வண்ணம் கேட்டாள்.” மங்கை தொடர்ந்து தந்தையிடம் கேட்டாள். ‘அப்பா! அவர் எங்கே இருக்கிறார்?’ “மகளே! அவர் இல்லாத இடமே இல்லை. எல்லா நாடும் அவன் நாடு, எல்லா ஊர்களும் அவனுடைய ஊர். தன் அன்பர்கட்காகச் சிறப்பாக நமது நாட்டிலே கூடல்மா நகரத்திலே கோயில் கொண்டிருக்கிறான். “பின்னை அவனுடைய ஆநர் கேட்டாள்.” நங்கை மறுபடியும் தந்தையிடத்திலே ‘அப்பா! அவரைப் பார்க்க முடியுமா?’ என்றாள். தந்தை சொன்னான்: ‘அன்பு ஒன்றினாலே அவனைப் பார்க்கலாம். வேறு எவ்வழியிலும் அவனைக் காணமுடியாது கண்ணே!’ என்றான். மங்கை அந்த ஒப்பற்ற பரம்பொருளிடத்திலே பேரன்பு கொண்டாள். நாள் தோறும் அவனையே நினைந்து, நினைந்து, நைந்து உருகினாள். அவனே தனக்கு உகந்த மணவாளன் என்று கருதினாள்.

ஒருநாள் கடற்கரையிலே மிகுந்த பரபரப்பு. வலைஞர்கள் பலர் கூடி, ஒருவரோடு ஒருவர் வியப்பான செய்தி ஒன்றைப் பேசிக் கொண்டார்கள். தங்கள் தங்கள் படகுகளைக் கடலிலே செலுத்தினார்கள். ஒரு பெரிய மீன். அற்புத மீன். வலிமைமிக்க மீன். வலைஞர்களுடைய படகுகளை அடியோடு கவிழ்த்துவிட்டது. வலைஞர்கள் பலர் சேர்ந்து அந்தப் பொல்லாத மீனைப் பிடிக்கப் பல முறை முயன்றார்கள். ஒருவராலும் பிடிக்க முடியவில்லை. வலைக்குத் தப்பி ஓடிவிடும். அகப்பட்டாலும் வலையையும் சேர்த்து இழுத்துக்கொண்டு போய்விடும். இந்தச் செய்தி தலைவனுக்கு எட்டிற்று; அவன் உடனே புறப்பட்டுக் கடற்கரைக்கு வந்தான். படகில் ஏறினான். வலையைக் கையில் தயாராக வைத்துக்கொண்டான். மீனின் வருகையை ஆவலோடு நோக்கினான். தலைவனைச் சுற்றிப் பரதவர் பலர் தோணிகளில் காவல் நின்றார்கள். மீனும் பெரு முழக்கத்துடன் சத்தமிட்டுக் கடலைக் கலக்கிக்கொண்டு வந்தது. தலைவன் மீனைப் பிடிப்பதற்கு வலையை வீசினான். மீன் அகப்படவில்லை. தலைவனுடைய படகு குப்புறக் கவிழ்ந்தது. உதவிக்கு நின்றவர்கள் மற்றொரு படகை அவன் அருகே கொண்டுவந்தனர். தலைவன் அப்படகில் ஏறினான். மீனைப்பிடிக்க முயன்றான். முடியவில்லை. மீனால் அந்தப் படகும் அடியோடு கவிழ்த்து விடப்பட்டது. இப்படிப் பல படகுகள் மாறி மாறி, ஏறி நின்று மீனைப் பிடிக்க முயன்றான். மீன் அகப்படவில்லை. அவன் இளைத்துப்போனான். மீனின் வலிமை மிக்க ஆற்றலை வியந்தான். கரைக்கு வந்துவிட்டான். அவன் சொன்னான். ‘எவன் இந்த அற்புத மீனைப் பிடித்துக்கொடுப்பானோ அவனுக்கே என் அருமை மகளை மணம் முடித்துத் தருவேன்’ என்றான். இந்தச் செய்தி நாடெங்கும் பரவிற்று. கடற்கரை ஓரமுள்ள ஊர்கள் பலவற்றிலும் இருந்து பரதவகுல இளைஞர்கள் பலர் இந்த அற்புத மீனைப் பிடித்துக்கொடுத்து, தலைவன் மகளை மணக்க ஆசை கொண்டு வந்தார்கள். மீனை ஒருவராலும் பிடிக்க முடியவில்லை. பல இளைஞர்கள் வருத்தமும் வெட்கமும் அடைந்தவர்களாய் தங்கள் ஊருக்குத் திரும்பினார்கள். மாதங்கள் பல கடந்தன.

ஒருநாள் ஓர் இளைஞன் பரதவர் தலைவன் இல்லத்துள் நுழைந்தான். தலைவனைக்கண்டு 'நான் இந்தக் கடலிலே திரியும் பொல்லாத மீனைப் பிடித்துக்கொடுத்து உமது மகளை மணக்க வந்துள்ளேன்' என்றான். இந்த இளைஞனுடைய அழகும் கம்பீரமும் காண்பவருடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. வீட்டின் உள்ளே இருந்த மங்கை தனது தோழியர் மூலமாக இளைஞன் வருகையை அறிந்தாள். கதவின் இடுக்கிலே வந்து நின்றாள். "கைபுனைந்தியற்றாக் கவின்பெரு வனப்பு." கட்டழகன், கருணை உள்ளம் ததும்பும் முகம், செம்மேனியன், வெண்ணீற்றன், மீன் பிடிக்கும் வலையைத் தோளில் இட்டுக்கொண்டிருந்தான். கதவின் இடுக்கிலுள்ள சிறுவழியாக அவனைக் கண்டாள். முன்னம் அவனுடைய நாமம் கேட்ட நங்கை, மூர்த்தி அவனிருக்கும்வண்ணம் கேட்ட மங்கை, பின்னை அவனுடைய ஆரூர் கேட்ட பெண்ணணங்கு, இப்போது தன் உள்ளத்திலே அன்புக் கோயில் கொண்டு உறையும் அவன் இவனே என்று எண்ணினாள். "பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்." அந்தக் காளையின் அழகிலே மயங்கித் தன்னையே மறந்து நின்றாள்.

இளைஞன் மீனைப் பிடிப்பதற்கு நாள் குறிப்பிடப்பட்டது. இந்த அதிசயத்தைப் பார்க்கப் பல ஊர்களிலிருந்து மக்கள் திரள் திரளாக வந்து சேர்ந்தார்கள். ஒருநாள் விடியற்காலம் கதிரவன் கீழ்த் திசைக் கடலின்கண் உதயமானான். கடற்கரையிலே ஒரே கூட்டம். பெரிய இரைச்சல். பல்வேறு சாதியார், பல்வேறு சமயத்தார் இளைஞன் மீனைப் பிடிக்கும் காட்சியைக் காணக் கூடினார்கள். கதிரவன் தன் இளங் கிரணங்களை அள்ளி வீசினான். அலைகள் பனையளவு உயரம் எழுந்து கரையிலே மோதிச் சென்றன. கரையோரமாகப் பல படகுகள் கயிற்றோடு பிணைத்துக் கட்டப்பட்டுக் கிடந்தன. இளைஞன் ஒரு படகை அவிழ்த்துக் கடலிலே விட்டான். தாவிக்குதித்துப் படகில் ஏறினான். படகை நடுக்கடலில் செலுத்தினான். மீனின் வருகையை நோக்கினான். மீன் வழக்கம்போல வெகு ஆரவாரத்தோடு மோதி அடித்துக்கொண்டு வந்தது. இளைஞன் வலையை விரித்து கடலுக்குள் மீனை நோக்கி வீசினான். சுருக்கிட்டு இழுத்தான். கரையில் நின்றுகொண்டிருந்த மக்கள் இமைகொட்டாது இளைஞனையும் அவன் செயலையும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இப்பெருங்கூட்டத்தின் நடுவில் துடிக்கின்ற உள்ளத்தோடு பார்த்துக்கொண்டிருந்தாள் ஒரு மங்கை. இளைஞன் வெற்றியோடு படகைக் கரைக்குச் செலுத்தினான். பொல்லாத மீனுடன் மீண்டான். மீனைக்கொண்டுவந்து கரையிலே போட்டான். மக்கள் பலரும் வியப்பும் ஆனந்தமும் அடைந்தார்கள். இளைஞன் வெகு கம்பீரமாக நின்றான். கூட்டத்தின் நடுவுள் நின்ற மங்கை, தன்னை வளர்த்து ஆளாக்கிய தாயை மறந்தாள். தன்னை அன்போடு நேசிக்கும் தந்தையை மறந்தாள். தன்னோடு உடன் கூடி ஒன்றாக உண்டு, உடுத்து, விளையாடும் தோழியரை மறந்தாள். தான் மங்கைப் பருவம் அடைந்த பெண் என்பதை மறந்தாள். தன்னைச் சூழ

இருந்த தோழியரை விட்டு விலகி வேகமாக இளைஞன் அருகே வந்தாள். அன்பு பெருக்கெடுத்து ஓடிற்று. தன்னை மறந்தாள். இளைஞன் தோளில் சாய்ந்தாள். செயலற்றுக் கிடந்தாள்.

" அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை,
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே."

இக்காட்சியை மக்கள் இமைகொட்டாது பார்த்து நின்றார்கள். பரதவர் தலைவன் கண்களில் நீர் துளித்தன. தன் அருமை மகளை நோக்கி, 'என் கண்ணே! என்னை மறந்து விட்டாயா? உன்னை சீராட்டிப் பாதுகாத்த உன் அன்னையை மறந்துவிட்டாயா? உன் அருமைத் தோழிமார்களையும் மறந்து விட்டனையோ?' என்று நாத் தழுதழுத்த குரலிலே சொன்னான். மங்கை திடுக்கிட்டு விழித்தாள். நாணத்தோடு ஒருபுறம் ஒதுங்கி நின்றாள். அவளது பவளம் போன்ற உதடுகளில் புன்முறுவல் தவழ்ந்தது. பரதவர் குலத்தலைவன். இளைஞன் கையை ஒரு கையாலும், தன் மகளின் கையை மற்றொரு கையாலும் பிடித்தான். இருவர் கைகளையும் ஒன்றாகப் பொருத்தினான். அங்கு நின்ற மக்கள் அனைவரும் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினர். கூட்டத்திலிருந்து வாழ்க! வாழ்க!! என்ற சத்தம் எழுந்தது. பரதவர் தலைவன் இளைஞனைப் பார்த்து 'அப்பா! மகனே! என் அருமை மகளை உனக்குத் தந்தேன். இன்றே. நான் புனிதனானேன்' என்றான். அவன் உடம்பும் உள்ளமும் சிலிர்த்தது. இளைஞன் மங்கையை நோக்கி முறுவலித்தான். "வா! நாம் போகலாம்" என்றான். வழி எங்கே? கடலைப் பார்க்கவே இருவரும் நடந்தனர். இளைஞன் ஒரு படகில் ஏறினான். மங்கையையும் ஏற்றிக்கொண்டான். இளைஞனின் இடது கை பாவையின் இடது தோளைத் தழுவி நின்றது. படகு நடுக் கடலுள்ளே செல்கிறது. இருவரும் கரையில் நின்ற மக்களைக் கருணையோடு பார்த்தார்கள். கரையில் நின்ற பல்வேறு சாதியாரும் பல்வேறு சமயத்தாரும் தங்களை மறந்து கைகூப்பி நின்று "எங்கள் வாழ் முதலே வணக்கம்" என்று வணங்கினார்கள். எப்படிச் சொல்வது இந்தக் காட்சியை? " பேரருளாளன் பெண்பாலுகந்து அறு சமயம் பணிவகை செய்து படவேறி பாரோடு விண்ணும் பரவி ஏத்த நின்றன்." " மண்ணவர் கண்மழை பொழிந்தார், வானவர் மலர்மழை பொழிந்தார்." படகு போய்க்கொண்டே இருந்தது. கரையில் நின்ற மக்கள் " அண்ணலே! எங்களை விட்டுச் செல்லலாமா? நாங்களும் கடலைக் கடக்க ஆசைப்படுகிறோம் " என்று சொன்னார்கள். ஐயன் ஒருவார்த்தை சொன்னான். "என்னை மனதில் வையுங்கள்." மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம். பிறவிப் பெருங் கடலைக் கடக்கலாம்

என்று சொன்னான். படமொடு மறைந்துவிட்டான். இந்த அழகிய செய்தியை மாணிக்கவாசகப் பெருமானார் காட்டும் பாடலைப் படித்துப் பாருங்கள்.

அணிமுடி ஆதி அமரர் கோமான் ஆனந்தக் கூத்தன், அறுசமயம்
பணிவகை செய்து படவ தேறிப் பாரொடு விண்ணும் பரவி ஏத்தப்
பிணிகெட நல்கும் பெருந்துறைஎம் பேரரு ளாளன் பெண்பா லுகந்து
மணிவலை கொண்டு வான்மீன் விசிறும் வகையறிவார் எம்பிரான் ஆவாரே.

திருச்சிற்றம்பலம்

---

# ஓர் தேவாரந் தரும் பொருள்

சித்தாந்த பிரசங்காமிர்தம் பூ. சமரபுரி முதலியார்

(ஓர் - ஒன்று ; இரட்டுற மொழிதலால் ஓர் முதனிலைத் தொழிற் பெயராய் ஓர்தல், ஆராய்தல் என்னும் பொருளில் அமைந்துள்ளது. அதாவது ஆராய்தற்குரிய என்பது பொருளாம்.)

உலகின்கண் மக்கட் பிறப்பெடுத்தார் யாவரும் நாடுவது இன்பமேயாம். அது பெறுதற்கு அவர்கள் நாடுகின்ற வழிகள் பலவாம். அவ்வழிகள் அவரவர் அறிவு நிலைக்கேற்றவாறு அமைகின்றன. அவ்வழிகளே சமயங்கள் எனப் பேசப்படுகின்றன. ஒவ்வொரு சமயம் ஒவ்வொரு பொருள் உண்மையைத் தன் அகத்தே கொண்டிருக்கும். அத்தகைய பொருள்கள் ஆவன : கடவுள், உயிர், உலகம் ஆகும்.

இம்மூன்றின் உண்மையையும் இலக்கணத்தையும் முடிந்த முடிவாகத் தருக்க முறையில் எடுத்து இயம்பி, உயிர் பெறுதற்குரிய இன்பத்தின் உயர்ந்த நிலையையும் அது பெறுதற்குத் தடையாயுள்ள உலகத்தியற்கையையும் உள்ளவாறு கூறி, அவ்வின்பத்தைப் பெறச் செய்ய வேண்டிய சாதனங்களையும் தெரிவிப்பது சைவ சமயமே.

இவற்றைப் பல்லாற்றானும் விளக்குவன சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் மெய்கண்ட சாத்திரம் பதினான்குமாகும்.

இத்திருமுறைகளுள் மூவர் முதலிகள் அருளிய முதல் ஏழு திருமுறைகளும் தேவாரம் எனப் பேசப்பெறினும், திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியவைகளே தேவாரம் என்று சிறப்பாகச் சொல்லுப. மற்று, திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பாடல்கள் திருக்கடைக் காப்பென்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பாடல்கள் திருப்பாட்டு என்றும் கூறுப.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்துத் திருத்தாண்டகப் பகுதியுள் உள்ள ஒரு பாடலுக்கே அடியேன் இறைவன் திருவருள்

வழிநின்று, நல் ஆசிரியர் உணர்த்தப் பொருள் காண முற்படு கின்றேன்.

அத்தாண்டகம் இதுவாம் :—

திருவாரூர்

1புகையெட்டும் 2போக்கெட்டும் 3புலன்களெட்டும்
4பூதங்களவையெட்டும் 5பொழில்களெட்டும்
6கலையெட்டும் 7காப்பெட்டும் 8காட்சியெட்டும்
9கழற் சேவடி யடிடைந்தார் களைகணெட்டும்
10நகையெட்டும் 11நாளெட்டும் 12நன்மையெட்டும்
13நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலர்களெட்டும்
14திசையெட்டும் தெரிப்பதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்டநாளே.

பொருள் வருமாறு :—

1. புகை எட்டும்=மனம் எட்டுதற்குரிய புகை. ஈண்டு மனம் என்னும்பொருட்டு ; புகு+ஐ=புகை, புகுதல் தொழிற் பெயர். அது செல்லுதற்குரிய மனத்துக்காயிற்று. ; தொழிலாகு பெயர்.

இனி, புகை ஆன்மா என்னவுமாம். எவ்வாறெனின், ஆன்மா முன்னைய சரீரம் விழுந்து, மறு சரீரம் பெறுவதற்கு முன் புகை போலிருக்கும் ; ஆகவே புகை என்பது உவமையாகு பெயராய் ஆன்மா என்னும் பொருள்படவும் நின்று, புகை எட்டும் ஆன்மா எட்டுதற் குரிய என்னும் பொருளை யுடையதாகும். ஆகவே, புகை எட்டும்= மனம் எட்டுதற்குரிய, அல்லது ஆன்மா எட்டுதற்குரிய.

2. போக்கு எட்டும்=குற்றங்கள் எட்டும்.

போக்கு, குற்றம். "போக்கு அறு பனுவல்" என்பதிற்போல. குற்றங்கள் எட்டு. அவை, ஆன்மா இயற்கையாகப் பொருந்தியுள்ள ஆணவமல காரியமாகிய காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், வாட்டம், விசித்திரமுமாம்.

3. புலன்களெட்டும் : புலன்=அறிவு. இங்கே அஞ்ஞானமா கிய அறியாமையை எட்டச் செய்கின்ற, அதாவது அறியாமையை விளைவிக்கின்ற அறிவு. அவை எட்டு.

ஐந்து விஷயங்களும் அழிந்துபோகும் தன்மையுடையன ஆத லால் அஞ்ஞானமாகிய அறியாமையை உண்டாக்குகின்ற அறிவு என்ரும். அவற்ேறாடு அழிந்துபோகும் தன்மையுடைய "கலை, அராகம், வித்தை" மூன்றுஞ் சேர்ந்து புலன்கள் எட்டாயின.

• இவைகளை இறைவன் சீவர்கள் மலம் நீங்கும் பொருட்டு அருள் செய்கின்ருன். மாயாமலம் நீங்க உடலோடு இம்மண்ணுலகத்தில்

பிறப்பித்து, இருவினைகளை நுகரச் செய்து, புண்ணியம் மேலிடில் புண்ணிய உலகத்தில் புகுவித்தும், பாவம் மேலிடில் நரகத்தில் புகுவித்தும், இரண்டும் சமனுறில் மண்ணுலகத்தில் புகுவித்தும் அநுபவிக்கச் செய்து, வினைமுற்றும் நீங்கிய வழி சிவ சீவ ஐக்கியம் பண்ணி அருள் செய்கின்றான். ஆகவே, புலன்கள் எட்டும்=அறியாமையை விளக்கின்ற அறிவு எட்டும்.

4. **பூதங்கள் அவை எட்டும் :** பூதங்களின் காரியமாகிய பூவுலகங்கள், திருவருளால் எழுகின்ற இந்திரிய ஒருமைப்பாட்டால் உண்மைத் தத்துவத்தை உணர்ந்து, அதனால் என்றும் அழிவன என்று மதிக்கும்.

பூதங்கள் ஆகுபெயராய் அவற்றால் ஆக்கப்பட்ட உலகங்கட்கு ஆயின. எட்டும் மதிக்கும் என்னும் பொருளது. அவை பகுதிப் பொருள் விகுதி.

5. **பொழில்கள் எட்டும் :** அதுபோலவே, மற்றப் புவனங்களும் அழிவன என்று மதிக்கும்.

பொழில்கள் என்றது புவனங்களை. இப்பொருட்டாதலை, திருவாதவூரடிகள் " செழும் பொழில்கள் பயந்து காத்து அழிக்கும்" என்று திருவாசகத்தினும், " ஏழுடையான் பொழில் " என்று திருக்கோவையாரினும் கூறியவாற்றானும், " ஏழ் இரும் பொழிலும் " என்று ஞானமிர்தச் செய்யுளில் (கடவுள் வாழ்த்து - அகவல் 1) கூறியவாற்றானும் காண்க.

6. **கலை எட்டும் :** அதுபோலவே அறுபத்து நான்கு கலைகளும் அழிந்துபோவன என்று மதிக்கும்.

7. **காப்பு எட்டும் :** காப்பு என்பது மேற்கூறிய உலகங்களும் கலைகளும் நிலையாக இருக்க வேண்டுமென்று செய்யும் முயற்சிகள். அத்தகைய முயற்சிகளும் அழிவனவே என்று மதிக்கின்ற.

8. **காட்சி எட்டும் :** அவைகளைக் கண்களால் நிலையுடையன என்று ஐயம் அற எண்ணும் எண்ணமும் அழிவுடையன என்று மதிக்கின்ற (காட்சி=எண்ணம்).

9. **கழற் சேவடி அடைந்தார் களைகண் எட்டும் :** களைகண் என்பது ஆதாரம். அதாவது சிவபெருமானுடைய திருவடிகளே ஆதாரம் என்று எண்ணும் எண்ணமும் அழிவுடையனவே என்று தற்போதம் நீங்கிய நிலையில் மதிக்கின்ற.

10. **நகை எட்டும் :** நகை=மகிழ்ச்சி. அதுவும் அழிவுடையதே என்று மதிக்கின்ற (மகிழ்ச்சி என்றது மகிழ்ச்சியைத் தருகின்ற பொருள்களாம்)

11. நாள் எட்டும் : நாள் என்றது, செய்ய வேண்டிய காரியங்களைச் செய்தற்குரிய நாட்கள். அதாவது, சொன்னபடி அன்று செய்தால் அக்காரியம் நடக்கும் என்று விதித்த நாட்கள். அந்நாட்களும் அவ்வாறு ஆகாமல் அழிவனவே என்று மதிக்கின்ற.

12. நன்மை எட்டும் : நன்மை=மக்கள் ஈடேறுவதற்குரிய (காமம் முதலிய குற்றங்களினின்று நீங்கி நல்வழியில் நிற்றற்குரிய) ஞான நெறியில் தலைப்படுதற்குரிய இன்றியமையாத நல்ல குணங்களாகிய கன்மங்களை, அவைகளும் அழிவுடையன என்று மதிக்கின்ற.

13. நலம்சிறந்தார் மனத்தகத்து மலர்கள் எட்டும் : ஐவரால் ஆட்டுணாது பொறிகளை இறைவன்பால் செலுத்தும் நலத்தின் மேம்பாடுடையவருடைய மனத்தினிடத்து உண்டாகும் அட்ட புஷ்பங்களும் (அவை கொல்லாமை, ஐம்பொறியடக்கம், பொறை, அருள் அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பன) அழிவுடையன என்று மதிக்கின்ற.

(அந்த ஞானம் ஞானிகளால் "உறங்கினேன் கையில் பாக்கு நழுவிப் போவது போல் நீங்கும்" என்ற வகையில் அழிவுடையனவே. இதனுல் கொல்லாமை முதலிய குற்றங்களைச் செய்ய வேண்டும் என்பதல்ல.)

14. திசை எட்டும் : நான்கு திக்குகளும் அழிவுடையன என்று மதிக்கின்ற (என்பது ஞானிகள் எந்தத் திசையிலும் திரிவார்கள். அவர்களுக்கு ஒரு திசை என்பது இல்லை ; எல்லாம் ஒன்றே. அதாவது சென்ற சென்ற திசையெல்லாம் நல்ல திசையேயாகும். போகாத திசையிலும் போவார்கள் என்றதால் அஞ்ஞானிகள் போகின்ற அழிகின்ற கண்டங்களிலும் போவார்கள் ; ஞானிகள் போகின்ற முத்தி உலகங்களுக்கும் போவார்கள் ; அவர்களுக்கு ஒரு திசை என்பது இல்லை. அப்படி வரையறையின்றி அழியும் என்று மதிக்கின்ற). தெரிப்பதற்கு= இவ்வுண்மைகளை அடியேற்கு உணர்த்துவதற்கு, - அதாவது இங்கு அடியேன் பிறப்பதற்கு ; அதாவது, அடியேன் கேவல நிலையில் ஆணவத்தால் மூடப்பட்டு, இச்சை, செயல், அறிவு இன்றியிருந்தபோது, கலை, அராகம், வித்தை முதலியவற்றுல் இச்சை, செயல், அறிவு விளக்கமுற்றுச் சகல நிலையை அடைந்து அடியேன் ஞானம் பெற்றுத் தேவரீரை அடைவதற்கு.

முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே - திருவாரூரைத் தேவரீர் படை வீடாகக் கொண்டு எழுந்தருளிய திருநாள் என்பதாம்.

• இதன் பொழிப்பு : மனம் அல்லது ஆன்மா எட்டுதற்குரிய குற்றங்கள் எட்டும், அறியாமையை விளைவிக்கின்ற அறிவு எட்டும்,

பூவுலகங்களும் மற்ற புவனங்களும், அறுபத்துநான்கு கலைகளும், அவைகள் நிலையாக இருக்க வேண்டுமென்று செய்யும் முயற்சிகளும், அவைகள் நிலையுடையன என்று எண்ணும் எண்ணமும், சிவபெருமான் திருவடிகளே ஆதாரம் என்று எண்ணும் எண்ணமும், மகிழ்ச்சியும், நாட்களும், நன்மைகளும், கொல்லாமை முதலிய எட்டு மலர்களும், நான்கு திக்குகளும் அழிவுடையன என்று தற்போதம் நீங்கிய நிலையில் மதிக்கின்ற உண்மைகளை அடியேன் சகல நிலை அடைந்து பின் ஞானம் பெற்று உணர்ந்து தேவரீரை அடைவதற்கு முன்னே பின்னே தேவரீர் திருவாரூரைத் திருக்கோயிலாகக் கொண்டது என்பதாம்.

---

E. பொது

# கதிரவனும் கம்பரும்

திரு. நீ. கந்தசாமி

கருத்தினால் எண்ணமுடியாத பழங்காலந்தொட்டு, மக்கள், கதிரவனை வணங்கி வந்திருக்கிறார்கள். இந்த வணக்கம் காலத்தால் மிகப் பழமையானது மட்டுமல்லாமல் இடத்தாலும் உலகம் முழுவதுமே பரந்திருக்கிறது. ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு நாட்டிலும் அவரவர்கள் அறிவு வளர்ச்சிக்கேற்பக் கதிரவனிடத்தில் கடவுள் நிலையைக் கண்டிருக்கிறார்கள். பழ நாகரீகம் பெற்ற நாடுகளில், எகிப்தியர் கதிரவனைக் கடவுளாகக் கருதி வணங்கி வந்திருக்கிறார்கள். ஏறக்குறைய மூவாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு எகிப்தியரின் பேரரசனாக இருந்த இகநாதன் (Ikhnaton) என்னும் பெருமகன் தன் பேரரசு முழுவதும் கதிரவன் வழிபாட்டைப் பரவச்செய்தார். அவர் கதிரவனைப் போற்றி எழுதிய பாட்டுக்கள் பொருட் சிறப்பும் உணர்ச்சி வன்மையும் மிக்கவை; உலக இலக்கியத்துள் சிறந்த இடம் பெறத் தக்கவை. வான வரம்பில் செங்கதிர் எழும்போது, இயற்கையும் மக்களும் பெறும் உவகையையும், ஒளியையும் அச் செய்யுள்கள் விளக்கும் பகுதி, நம்முடைய திருப்பள்ளியெழுச்சியை நினைப்பூட்டுகிறது. பேரரசன் இகநாதன், உலகம் ஒன்றுபடுவதற்குக் கதிரவன் வழிபாடே சிறந்த துணை செய்ய வல்லது என்று கருதினார். நிறத்தாலும் நிலையாலும் பலவேறு வகைப்பட்ட மக்கள் எல்லோருக்கும், எவ்வித வேறுபாடும் இல்லாமல் ஒரே முறையாக நன்மையைச் செய்கின்ற கதிரவனை, அவர் கடவுளின் குறியாகக் கருதினார். அவர் வணங்கியது கதிரவன்என நம் கண்முன் தோன்றும் உருள் ஒளியாகும் பருப்பொருளை அன்று எனவும், அப்பொருளை இயக்கும் இறைவனையே எனவும், அந்த இறைவனை மக்கள் உள்ளத்தில் உருப்படுத்துவதற்கு ஏற்ற பற்

றுக்கோடாகவே பருதியைக் கொண்டு வணங்குவதாகவும் தன் அறிவுரையில் சொல்லியிருக்கிறார். சுருங்கக் கூறில் 'உலகுக்கொருவனும் இறைவனை'ப் பருதி வட்டத்தில் கண்டார் எனலாம்.

நம்முடைய பழந்தமிழ் மக்கள் கதிரவனைப் பற்றிப் பேசும் இடங்களில்,

"பலர் புகழ் ஞாயிறு" — திருமுருகாற்றுப்படை

"உலகு தொழு மண்டிலம்" — சிலப்பதிகாரம்

"......பலர் தொழத் தோன்றி
ஏமுற விளங்கிய சுடர்" — நற்றிணை

"......உலகு தொழத் தோன்றி
வயங்கு கதிர் விரிந்த வுருகெழு மண்டிலம்" — அகநானூறு

எனப் பல இடங்களில் கதிரவன் உலகு தொழும் ஒருவன் எனப் பாராட்டியிருக்கின்றார்கள்.

கதிரவனின் தோற்றமும் அவரவர்கள் உள்ள நிலைக்கு ஏற்பப் பல தோற்றங்களை நினைவுபடுத்திப் பார்ப்பவர்கள் கருத்தை விளக்கித் தூய்மை செய்திருக்கிறது. பச்சைப்பசேரெனப் பரந்து நின்று ஆரவாரம் ஒருபுறமும் அமைதி ஒருபுறமுமாகக் காட்சியளிக்கும் பெருங்கடலின் கீழ்பால், வானவரம்பில், உள்ளங்கவரும் தண்ணிய செம்மை நிறத்தொடு கதிரவன் காலையில் எழும் தோற்றம், நக்கீரருக்குப் பசும் பொன்மா மயில்மீது முருகப்பெருமான் எழுந்தருளும் காட்சியை உளக் கண்ணில் காட்ட அப்புலவர் பெருமகன்,

"உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல் கண்டாங்கு"

என வியந்து தன் வழிபடு கடவுளைப் போற்றுகின்றார். இதே கதிரவன், மேல் கடலில் மறையும் தோற்றத்தை, மதுரைக் கண்ணத்தனார் என்ற ஒரு சங்ககாலப் புலவர் பார்த்துக்கொண்டிருந்தார். அவர் கடவுட் பற்று நிறைந்தவர்; ஆனால் சமய வேற்றுமைகளில் வெறுப்புடையவர். முழுமுதற் கடவுள் ஒருவனே ஒவ்வொரு சமயத்துள்ளும் அவரவர் வேண்டிய தோற்றத்தில் அருள் செய்கின்றான் என்பது அவருடைய கொள்கை. அக்காலத்துத் தமிழ் நாட்டில், முழுமுதற் கடவுளைச் செம்மேனி எம்மானாகிய சிவபெருமான் தோற்றத்திலும், நீலமேனி நெடியோனாகிய திருமால் தோற்றத்திலும் வழிபடும் சமயம் இரண்டுமே பெரும்பான்மையோரால் பின்பற்றப்பெற்று வந்தன. சமயம் என்ற நிலைமையில் இரண்டு தெய்வங்களையும் ஒன்றாகக் கருதாது அவரவர்கள் பற்றிய சமயக்கொள்கைகளுக்கேற்ப ஏற்றத் தாழ்வு கற்பிக்கவும்

தொடங்கினார்கள். உண்மை நிலையில் தெய்வம் ஒன்றே என்ற தெளிவுடைய நம் புலவர், சமய வேற்றுமைகளைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார். கதிரவன் மறைந்துகொண்டிருக்கிறது; புலவரும் கடலைப் பார்த்தார்; அவர் உள்ளம், பெறற்கரும் பெருநிதி கிடைத்த தொப்ப அளப்பரிய பெருமகிழ்ச்சியில் மூழ்கிவிட்டது. கடலின் நீலப் பசுமை, திருமாலை நினைவூட்டியது; அந்திவானத்தின் செம்மை சிவ பெருமானை நினைவூட்டியது. செவ்வானமும் நீலக்கடலும் ஒன்றி யிணைந்துள்ள காட்சி இருபெருந் தெய்வமும் ஒருங்கிணைந்தரு ளும் தெய்வத் தோற்றத்தைப் புலவர் உள்ளத்தில் எழுவித்தது. உடனே,

> "ஒருகால் ஊர்திப் பருதியஞ் செல்வன்
> குடவயின் மாமலை யறைய...........
> ....................................
> வெருவரு கடுந்திறல் இருபெரும் தெய்வத்து
> உருவுடன் இயைந்த தோற்றம் போல
> அந்திவானமொடு கடல் அணி கொளாஅ
> வந்த மாலை..........."

எனப் புகழ்ந்து பாடினார்.

ஆரியர்கள் மிகமிகப் பழங்காலத்திலிருந்தே கதிரவனைப் பல உரு விலும் பல நிலையிலும் வழிபட்டு வந்திருக்கிறார்கள். பல்லாயிரம் ஆண்டுகளாக அவர்கள் கதிரவனைப் பற்றி எண்ணிய எண்ணங்கள் எல்லாம், ஆரிய மொழிகளிலுள்ள மறை மொழிகளிலும், உண்மை நூல்களிலும், பழங் கதைகளிலும் பலவாறு காணப்பெறுகின்றன. வேத காலத்தும் அதற்கு முன்பும் கதிரவனே முதன்மைத் தெய்வ மாகப் பல இடங்களிலும் பேசப்படுகிறது. கதிரவனுடைய ஒவ்வொரு தோற்றத்திற்கும் தக்க பெயர்கள் கொடுத்து வணங்கியிருக்கிறார்கள். உயிர்த்தொகுதியைத் தோற்றுவிக்கும் பைஞ்சுடராகவும், நிலைபெறுத் தும் கொழுஞ்சுடராகவும், அழிக்கும் வெஞ்சுடராகவும் கொண்டு, முத் தொழிலும் ஆற்றும் முதல்வன் கதிரவனே என்று கருதியிருந்தார்கள் என்று, நாம் கருதக்கூடிய அளவில் கதிரவனைப் போற்றும் மறை மொழிகள் நிற்கின்றன. எல்லா மக்களுக்கும் பொதுவாகவுள்ளவன் என்றும், உலகத்தின் நன்மை தீமைகளைக் கண்டறிகின்றான் என்றும், நாட்களை அளந்து மக்களுக்கு வாழ்நாளை வளர்க்கின்றவன் என்றும், நோய் நொடி தீய கனவு முதலிய தீங்குகளை விலக்குகின்றான் என்றும், பிரிந்த உயிர்கள் அவை அவை தகுதிக்கேற்ற நிலையில் போய்ச் சேரு வதற்கு வாயிலாகவுள்ளவன் என்றும் பல படியாகப் பாராட்டுகின்றன. செஞ்சுடராக உலகை ஒளியாக்கி விளக்கும் கதிரவன், வைகறையில் தூண்டுசுடராகத் தோன்றி மக்களையும் ஏனையவற்றையும் உறக்கம்

நீக்கி ஊக்கமுறச் செய்கின்றான் என்பதைக் கருதி வைகறையில் நீராடித் தூண்டுசுடரை வழிபட்டார்கள். கதிரவனுடைய தோற்ற நிலையாகிய தூண்டுசுடர், ஆரிய மொழியில் சாவித்ரி எனப் பெயர் பெற்றது. சாவித்ரி என்பது தூண்டுதல், ஊக்கமுறச் செய்தல் என்னும் கருத்தின் அடியாகப் பிறந்த தெய்வப் பெயராகும். சாவித்ரியை வழிபடும் காப்பு (மந்திரம்) சாவித்ரி என்ற பெயராலும், அச் செய்யுள் அமைந்துள்ள யாப்பு காயத்ரி என்ற யாப்பு வகையைச் சார்ந்ததானமையின் காயத்ரி என்ற பெயராலும் வழங்கப் பெறுவதாயிற்று. வைகறையில் தூண்டு சுடரை அதற்குரிய காப்புச்செய்யுளால் போற்றித்தொழுவது என்ற நற்பழக்கம், உலகம் எவ்வளவோ மாறுதலை அடைந்தாலும் அடைந்து கொண்டிருந்தாலும் நம் நாட்டில் நிலை பெற்று நிற்கின்றது. உண்மை நூல்கள் தோன்றிய காலத்தில், மக்கள் வழிபடுவது கதிரவன் என்று நாம் காணும் கோள்களுள் ஒன்றாகிய ஒளிப் பிழம்பை அன்று; அப்பிழம்பை நமக்குப் பொறி புலன்கள் கொள்ளுமாறு காண்பித்து நிற்கும் முழுமுதற் கடவுள் ஒன்றையேயாகும் எனக் கருதினார்கள். ஆரிய மொழி உண்மை நூல்களுள் முதன்மைத்தாய மூன்றனுள், முதன்மைத்தான வேதாந்த சூத்திரம், பிரம்ம சூத்திரம் என வழங்கும் வியாசர் தொகை என்னும் பெரு நூலில் முதற் பகுதியின் முதற் பகுதியில் இருபதாவது சூத்திரத்தில் "கதிரவனுள்ளும் கண்ணுள்ளும் இருப்பவனே முழுமுதற் கடவுள்" எனக் காணப்பெறுகின்றது. எனவே காலை வணக்கம் கதிரவனை இடமாகக் காட்டி நிற்கும் முழுமுதற் கடவுளுக்கே என்பது தோற்றமாயிற்று. பின்னர் சமயப் பிரிவுகள் வலிமைபெற்ற நாட்களில் கதிரவனில் நிலைபெற்ற கடவுள் அவரவர்கள் சமயத்தின் தலைமைக் கடவுளார் என்று போற்றத் தொடங்கினார்கள். அவரவர்கள் உளங்கொண்டு உள்ளத்தில் உருவமைத்து வழிபடும் தெய்வத்தையே கதிரவனில் உறைகின்ற கடவுள் எனப் பேசினார்கள். எனவே ஒருவர் எந்தத் திருவுருவம் கதிரவனில் காணப்பெறுவதாகக் கருதிப் பேசுவாரோ அந்தத் திருவுருவமே அவர் வழிபாட்டுத் திருவுருவம் என்று நாம் கருதக்கூடியதாகவும் இருக்கிறது.

தேனும் பாலும்போல் ஆரியப் பண்பும் தமிழ்ப் பண்பும் கலந்த பின்னர், தமிழகத்திலேயும் மேற் கூறிய முறையில் கதிரவன் வழிபாடு நிலவி நிலைபெற்றது. தென்னாட்டில், சிவபெருமானை வழிபடும் சமயமும் திருமாலை வழிபடும் சமயமும் கதிரவனை வணங்கும்போது சிவபெருமானுறையுள் என்றும், திருமால் உறையுள் என்றும் முறையே கொண்டது. ஒரு சிறு பகுதியார் கதிரவனையே கடவுள் எனக் கொண்டும் வழிபட்டு வந்தனர். அக் கூட்டம் சிறிது சிறிதாகக் குறைந்து பெருகிய சமயங்கள் இரண்டனுள் கலந்துவிட்டது.

" அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்கனுவான் அரனுரு வல்லனோ"

என்னும் ஆளுடைய அடிகளின் மொழிகள் இக் கூட்டத்தையே குறிப்பிடுவதுபோல் தெரிகின்றது.

தமிழகத்தின் தனிப் பெருமையாக நிற்கும் உலக கவிஞருள் ஒருவராய கம்பர், கதிரவனை எந்த நிலையில் கருதினார் என்பதே நாம் இங்கு நோக்க எண்ணியது. பெருங்காப்பியங்களை இயற்றும் பெருங் கவிகள், காவியக் கருத்துள் புகுந்து காவிய மாந்தர் உருவெல்லாம் தாங்கித் தம்முடைய தனி நிலையை மறந்துவிடும் இயல்புடையவர்கள். இவர்களுடைய செய்யுட்கள் காவியத்தில் வருகின்றவற்றைக் கொண்டு இவர்களுடைய தனி நிலையைக் காணவியலாது. என்றாலும் சில இடங் களில் இவர்களையும் தாண்டி இவர்களுடைய உள்ளக் கிடக்கை வெளிப் படுவதுண்டு. காவிய மாந்தருடன் கலவாது ஏதேனும் இக் கவிஞர்கள் தாமாகவோ தற்குறிப்பேற்றமாகவோ பேசும் இடங்களில் இவர்கள் தாங்கள் கொண்ட கோலத்தை மறந்து உண்மையைக் காட்டிவிடு வார்கள். கம்பர் பழுத்த தமிழ்ப் பண்புடையவர் ; ஆரியமும் தமிழும் வேறு பிரித்தறியவியலாத கலப்பெய்திய பண்பே இவர் காலத்திய தமிழ்ப் பண்பாகும். இவர் தந்தையார் ஆதித்தன் என்ற பெயரையுடையவர் என்பதை நினைந்து கொள்வோம். கதிரவன் தோற்றத்தைக் கூறவேண்டிய ஒரு இடத்தில் இவர் உள்ளம் காவி யத்தை மறந்து தன் உண்மை நிலைக்குச் சென்றுவிட்டது. இவருடைய மகன் அம்பிகாபதி என்ற ஒரு பழைய வரலாறும் மறந்துவிடக் கூடாது. கதிரவன் கிழக்கே எழுகின்ற ஓவியமும் மக்கள் உள்ளங் களிப் பெய்தி இசை பாடிக் கைகுவிக்கும் தோற்றமும் கம்பர் உள் ளத்தில் எழுந்தன. கதிரவன் கடவுளின் அடையாளம் என்பது நினைந்தாரோ அல்லவோ அறியோம். அவர் உள்ளம் தில்லையம்பலத்தே திருக் கூத்தாடும் கண்ணுதற் பெருமானிடம் சென்றது. கதிரவன் உருவில் கண்ணுதற் பெருமானையே கண்டு,

" எண்ணரிய மறையினொடு கின்னரர்கள் இசைபாட உலகம் ஏத்த
விண்ணவரும் முனிவர்களும் வேதியரும் கரம்குவிப்ப வேலையென்னும்
மண்ணுமணி முழவதிர வானரங்கின் நடம்புரிவான் இரவியான
கண்ணுதல் வானவன் கனகச் சடைவிரிந்தால் எனவிரிந்த கதிர்கள் எல்லாம்"

என்று வாயார மனமாரத் தேனூறுந் தீங்கவியால் பாடித் திளைத்தார்.

---

# பகுத்தறிவும் சமயச் சின்னங்களும்

ந. ரா. ஆடலரசு, சைதை.

**கண்டனம்** :—சமய அன்பர்கள் திருநீறு திருமண் முதலிய சின்னங்கள் அணிவதை வற்புறுத்துவது கண்டு நம் நாட்டில் பகுத்தறிவு வாதிகள் என்று தம்மைச் சொல்லிக்கொள்பவர்கள் பொது மக்களிடம் பலவகையான கேள்விகளைக் கேட்டு, அவைகள் மூடப் பழக்கங்கள் என்றும், அடிமைத்தனத்தின் சின்னங்கள் என்றும், தீயோர்களின் வஞ்சகச் செயல்களுக்குத் திரைகள் என்றும், அவற்றால் மக்களுக்குள் வேற்றுமைகள் விளைகின்றன என்றும், ஆகவே அவற்றை அணிவது வீண் என்றும் கூறி அவர்களைத் திகைக்க வைக்கின்றனர்.

**தெளிவு இல்லை** :—நாட்டு மக்களிற் பெரும்பாலோர் இன்று பொதுக்கல்வி யறிவே இல்லாதவர்களாக இருக்கின்றனர். ஆகவே அவர்களுக்குள் அழுத்தமான சமயக்கல்வி உடையவர்கள் ஆயிரத்துக்கு ஒருவர்கூட இருப்பது அருமையே. இந்நிலையில் பெரும்பாலோர் திருநீறு முதலிய திருச்சின்னங்களைத் தம் குடும்பப் பழக்கமாக அணிந்து வருகின்றார்களே ஒழிய, அவற்றின் பொருளும், பயனும், இன்றியமையாமையும் தெளிந்து அணிகின்றார்கள் என்று எண்ணவும் கூடவில்லை ; எண்ணுவதும் பிழை.

**பகுத்தறிவைப் பயன்படுத்துவதில்லை** :—பகுத்தறிவு வாதிகளின் சொற்பொழிவுகள் சிலவற்றைக் கேட்டவுடன் பண்பாடுபெற்ற இளைஞர்களிற் சிலர் சமயச் சின்னங்கள் அணிந்தவர்களைக் கண்டால் ஏளனக்குறிப்புடன் பார்ப்பதும் பேசுவதும், அவர்களை இழிவான முறையில் நடத்துவதுமாக இருக்கின்றனர். இவை தம் கீழ்த்தரமான பண்பாட்டிற்கு எடுத்துக் காட்டாகிவிடும் என்பதையும் அவர்கள் தம் பகுத்தறிவால் உணர்வதில்லை. அதோடு தம்முடைய கட்சியும், தன் கொள்கைகளை அறிவிப்பதற்கும் பரப்புவதற்கும் தனிக்கொடிகளும் சட்டதிட்டங்களும் சொன்மகுடங்களும் (கோஷங்கள் "தென்னாடுடைய சிவனே போற்றி' "எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்பன போல) கொண்டிருக்கின்றதே என்பதையும் அவர்கள் எண்ணுவதில்லை.

**சீர்திருத்தவாதிகள் கடமை** :—இந்த இழிநிலை மிகவும் பெருகி வருவதால்,பண்பாட்டை வளர்க்க விரும்பும் பெருந்தன்மையுள்ள சீர்திருத்தவாதிகள் சமயச் சின்னங்களைப் பற்றிக் கண்டித்துப் பேசும்போது,கொள்கையளவில் தக்க காரணங்களுடன் கண்டித்துப் பேசி, அவற்றை அணியும் தனிப்பட்டோரிடம் யாரும் தகாத முறையில் நடத்தல் கூடாது என்று அழுத்தமாகத் தெரிவித்தல் வேண்டும். இல்லையேல் நாட்டில் சீர்திருத்தங்களை இனியமுறையில் செய்ய முடியாது.

**எங்கும் போலி இருக்கிறது:**—நிற்க, வயிறு வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்ட போலிக்கூட்டம் சமயத்துறையில் மட்டுமில்லை. எல்லாத் துறைகளிலும், இடங்களிலும் இருக்கின்றன. பல கட்சிச் செய்தித்தாள்களையும் பாருங்கள்! கதர்ச்சட்டை, செஞ்சட்டை, கருஞ்சட்டை, காக்கிச்சட்டைகளில் எத்துணைப் போலிகள் இருந்துகொண்டு நாட்டின் விடுதலைக்கும், புரட்சிக்கும் சீர்திருத்தத்திற்கும், சட்டத்துக்கும் பாடுபடுவதாகக் காட்டிக்கொண்டு மக்களை அலைக்கழித்துக்கொண்டு வருகின்றன என்று தெரியும்.

**வேற்றுமை:**—மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத உண்மைக் கொள்கைகள், நலங்களின்மேல் ஏற்படும் எத்துணைப் பிரிவுகளும் இன்றியமையாதனவே; வரவேற்கத்தக்கனவே. தொழில் துறைகளிலும் கலைத்துறைகளிலும் வேற்றுமைகள் இல்லாவிட்டால் வாழ்வு எப்படி நடக்கும், சுவைக்கும்? வேற்றுமைகளைச் சாதி மனப்பான்மையில் கொள்ளக்கூடாதே அல்லாமல், வேற்றுமைகளே வேண்டாம் என்பது நல்லதா? நடக்கக் கூடியதா?

**உண்மையாளர்:**—வேற்றுமைகளைப் பயன்படுத்திக்கொண்டு தம் குறுகிய வாழ்க்கைக்காக எப்போதும் அமைதியைக் குலைப்பதும் மக்களை ஏய்ப்பதும் போலிகளின் செய்கை. உண்மையாளர்களுக்குள் கருத்துவேற்றுமை இருப்பினும் போராட்டம் நேராது. மாறுக, ஒற்றுமையும் நாட்டு நலத்திற்கேற்பத் தம் வேற்றுமைகளைப் பயன்படுத்தும் பண்பாடும் இருக்கும்.

**உண்மையை விடமுடியுமா?:**—ஆகாத வேற்றின ஆட்சி எதிர்ப்பை வேற்றவர் எதிர்ப்பாகவும், அடாத பார்ப்பனீய எதிர்ப்பைப் பார்ப்பன எதிர்ப்பாகவும், கொடிய முதலாளித்துவ எதிர்ப்பை முதலாளி எதிர்ப்பாகவும் காட்டி அவற்றிற்குரிய நல்லியக்கங்களை அழிக்க நடந்த - நடக்கும் - போலி இயக்கங்கள் எத்துணை! போலிகளின் அட்டூழியங்களை, ஆரவாரங்களைக் கண்டு உண்மையை விட்டுவிடலாமா? விடத்தான் முடியுமா?

**தகுதிப்படுத்த வேண்டும்:**—மக்கள், தெளிவின்மையினால், போலிச் சீர்திருத்தவாதிகளின் உரைகளில் எளிதாக மயங்கிவிடுகின்றனர். எதிர்க்கொள்கையாளர்களின் கொடி உடை முதலிய சின்னங்களை அழிக்க முற்பட்டுவிடுகின்றனர். சின்னங்களை உடையவர்களுக்குள் போலிகளும் இருப்பர் என்பதை மறந்துவிடுகின்றனர். ஆகவே, உண்மைக்கு அடையாளமான சின்னங்களைக் கண்டதும் அவற்றைப் போற்றுவதோ தூற்றுவதோ செய்யாமல், அவற்றிற்குரிய கருத்துக்களும் செயல்களும் உடையவர்பால் இருக்கின்றனவா? அவற்றின் பயன் என்ன? என்று கண்டு போற்றவோ தூற்றவோ செய்யும்படி மக்களைத் தகுதிப்படுத்தவேண்டும்.

**உண்மைக் கல்வி:**—இதற்கு, மக்கள் நல்ல கல்வியறிவு உடையவர்களாக ஆகவேண்டும். தாய்மொழிக் கல்வியே உண்மைக் கல்வி. ஆதலின் அதைப் பெருக்குவதையே பெருநோக்கமாகக் கொண்ட

கட்சியும் அரசும்வேண்டும். அவைகள் அமையாதவரை எந்த நாடும் போலிகளால் இப்படித்தான் சீரழியும்.

**சின்னங்கள் வேண்டும் :**—எந்தச் செயலும் அகத்தும் புறத்தும் ஒத்த உறவோடு நடைபெற்றாலன்றி அதன் பயனைச் சிறப்பாக நாம் அடையமுடியாது. அகத்தே உணர்வாகவும், புறத்தே உருவான அடையாளங்கள் நிகழ்ச்சிகளாகவும் செயல் நடைபெறவேண்டும். வெறும் வேடமோ, வெறும் உணர்ச்சியோ, வெறும் பேச்சோ நல்ல பயனைத் தராது. ஆதலின், எதற்கும் புறச் சின்னங்கள், பற்பல அதிகார நிலைகட்கு உள்ள உடை முதலிய அடையாளங்களைப் போல வேண்டும். அச்சின்னங்களுக்குரிய செயல்கள் இல்லாமல், அவற்றைத் தம் வஞ்சகச் செயல்களுக்குக் கேடயமாகப் பயன் படுத்துவதையே நாம் விடக்கூடாது. அத்தகைய வஞ்சகர்களுக்கு இரட்டிப்புத் தண்டனை கொடுத்தல் வேண்டும்.

இப்படி, உரிய கருத்துக்களையும் செயல்களையும் கண்டு ஒருவரை மதிப்பதற்கும் போலிகளைத் தெரிந்து ஒறுப்பதற்கும் உலகியலில் சின்னங்கள் மிகவும் உதவியாகக் கூட இருக்கும்.

**வஞ்சகம் வெளிப்படும் :**—குறிப்பிட்ட சின்னமும் கொள்கையும் இல்லாதவன் மறைந்து செய்யும் (சமயத்துக்கேற்ற கொள்கை பேசித் தப்பிவிடுவான்) தீச்செயல்களைக் கண்டுபிடிப்பது ஒருவகையில் கடினமாகலாம். அவன் இடத்துக்கேற்றபடி நடந்து உளவறிந்து வஞ்சகம் செய்யலாம். சின்னங்கள் உள்ளவனின் மாறுபட்ட செயல்கள் விரைவில் வெளிப்பட்டுவிடும். அதனால் அவன்நிலை மிகவும் இரங்கத்தக்கதாகிவிடும்.

**வாழ்வின் அடிப்படை :**—இப்படியெல்லாம் எண்ணிப் பார்த்தால் புறச்சின்னங்கள் இன்றியமையாதன என்பது உறுதிப்படுகின்றது. அவை அகவுணர்வையும் உரிய நிகழ்ச்சிகளையும் கட்டாயப் படுத்தும். சின்னங்கள் வேண்டா என்றாலும் அவை எவ்வாறேனும் வேண்டா என்பார் கூட்டத்திலேயே விலக்கமுடியாதபடி நுழைந்து விடும். இது நம் வாழ்வின் அமைதி; அடிப்படை நுட்பம்.

**எண்ணிப் பார்ப்போம் :**—இனிச் சின்னங்கள் அணிவது ஏன் ? என்றும், அவற்றின் கருத்துக்களையும், ஏற்ற செயல்களையும் கொண்டு அவற்றை அணிவது உள்ளபடியே அடிமை மனப்பான்மையையும் மூடத்தனத்தையும் வேற்றுமையையும் காட்டுமா ? என்றும், இறுதியில் திருநீறுபற்றிய சில உண்மைகளையும் எண்ணிப் பார்ப்போம்.

**கருத்துள்ள வாழ்வு :**—மக்கள் வாழ்வு கருத்துள்ளதாக இயங்க வேண்டும். கருத்தற்ற வாழ்வு விலங்கு வாழ்வே. கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும் பரப்புவதற்கும் அவற்றை உணர்ச்சிநிலைக்குக் கொண்டுபோய்ச் செயன்முகபபடுத்துவதற்கும் மனிதன் ஆதிகால முதல் தான்பெற்றுவரும் அடைவுகளால் (அநுபவங்களால்) பற்பல

சாதனங்களைக் கண்டிருக்கின்றான். மேலும் கண்டுகொண்டே வருவான்.

**பல சாதனங்கள் :**—கருத்துப் பரவுதலுக்காக மனிதன் கண்ட சாதனங்களுள் கண் கைச்சாடைகள், ஒலி, வரி அடையாளங்கள், பொருளடையாளங்கள் முதலியன முதன்மையானவை—அடிப் படையானவை.

**விளைவுகள் :**—வாழ்வின் எத்துறைக் கருத்துக்களும் இச் சாத னங்களை அடிப்படையாகக்கொண்ட பல்வேறு செயல்களாகவே உருவெடுத்துப் பரவிச் சிறக்கும். பல்வேறு நாட்டினரின் மொழி யும் இயல் இசை நாடகம் முதலிய கலைகளும், அவற்றின் கருத்துக் களும் செயல்களும் அடங்கிய சமயம் அரசியல் வாணிபம் போர் முதலிய வாழ்வியல் அமைப்புகளுமெல்லாம் இவற்றின் விளைவே.

**வேற்றுமையா ? பயனா ? :**—இவற்றால் வேற்றுமை விளைவது உண்மையே எனினும், வாழ்வின் சிறப்புக்கும், வளத்துக்கும், பல் வகைத் துய்ப்புகட்டும்—ஏன் ? பாதுகாப்புக்குங்கூட—வேற்றுமை இன்றியமையாதது என்பது நுணுகிப் பார்த்தால் தெரியும்.

**சட்டத்தின் துணை :**—வேற்றுமைகளை அழிவுக்குப் பயன்படுத் தாமல் நன்மைக்குப் பயன்படுத்தி அவரவர் போக்கின்படி அவற் றிற்படிந்து நலந் தீங்குகளை அடைவால் அறிந்து முன்னேறுமாறு செய்தல் வேண்டுமே ஒழிய, அவற்றை எல்லாம் ஒழிப்போம் என்று கச்சைக் கட்டுதலினால் ஏதும் பயன் நேராது. அதனால் அவை மேலும் வளர்ந்து கலகமே விளையும். வேற்றுமையால் வரக்கூடிய (தீமைக்குப் பயன்படுத்துவோரால்) தீமைகளை ஒழிக்கவே எல்லாச் சமயங்களும் அரசும் பொது அன்பையும் பொது ஒழுங்கையும் (அதாவது சட்டத்தையும்) வற்புறுத்துகின்றன. வேற்றுமையால் வரும் தீங்குகளை ஒழிக்க அச்சட்டங்கள் துணைசெய்கின்றன.

**அடிமைப்பட வேண்டியதுதான் ! :**—எனவே கருத்தும் பயனும் உண்டு என்று தெரியும் சமயம் (கொள்கை), அரசியல், வாணிபம் முதலிய எத்திற வாழ்வியல் அமைப்புகளுக்கும் அவற்றின் சாதனங் களுக்கும் மக்கள் அடிமைப்படவேண்டியதும், அடிமைப்படுவதும் கட்டாயமும் இயல்புமாகும்.

**மூடத்தனம் என்ன இருக்கிறது ? :**—ஆகவே, அத்தகைய சாதனங் களைக் கடைப்பிடியாகக் கொள்வதும் அவற்றிற்கு அடிமைப்படு வதும் தனிப்பட்ட மனிதரிடத்துப்படும் அடிமைத்தனம்போல இழி வுடையதன்று. இதற்கு மாறாக, கருதியவை தரும் ஏற்றமுடைய தாகவே அமையும். அரசாங்கம் அல்லது வேறு அமைப்புக்களின் கீழ் அலுவல் பார்ப்பது அடிமைத்தனமாயினும், அவற்றை விரும்பி முயலுவார் எத்துணைபேர் இருக்கின்றனர் ! ஏன் ? அவற்றால் அவர்கள் வாழ்க்கைக்கு வசதிகள் ஏற்படுகின்றன. அதுபோலத் தான் சாதனங்களுக்கு அடிமைப்படுவதும். அவற்றால், அவற்றிற்

குரிய அகப்புற வளங்கள் ஏற்படுகின்றன. இதில் மூடத்தனம் என்பது என்ன இருக்கிறது?

**எது மூடத்தனம்?** :—கொள்கைக்கு ஒவ்வாத சாதனங்களிலும், வாழ்க்கைக்கு ஒவ்வாத கொள்கைகளிலும், பயனே இல்லாத சாதனங்களிலும் விடாப்பிடியாக இருப்பதுதான் மூடத்தனம். மேற்கொண்ட கொள்கைகளுக்கும் சாதனங்களுக்கும் உரிய கருத்தும் தொடர்பும் அறியாதிருப்பதும் மூடத்தனமே.

**கண்டிக்கவேண்டும்; கடமையும் செய்யவேண்டும்** : இவற்றுள், முன்னவைகளைத் பகுத்தறிவு வாதிகள் எவ்வளவும் கண்டிக்கலாம்; கண்டிக்கவும் வேண்டும். பின்னவைகளைப் பலரும் அறியுமாறு செய்ய வேண்டுவது உரியவர்களின் நீங்காக் கடமையாம்.

**திருநீறு** :—இக்கடமையை ஒட்டி இந்நாட்டின் பழம்பெரும் சமயமாகிய சிவ சமயத்தின் சாதனங்களுள் முதன்மையானதும் பொதுவானதுமாகிய திருநீற்றை அணிவது பற்றிய சில கருத்துக்களை மட்டும் சுருங்கக் கண்டு இக்கட்டுரையை முடிக்கலாம்.

**நிலையாமை உணர்வு** :—வாழ் நாட்களைச் சிறிதும் வீழ்நாட்களாக்காமல் நன்கு பயன்படுத்திக்கொள்ள, அதன் நிலையாமையை நாம் மறக்காமல் இருக்கவேண்டும். இன்றியமையாத—நீக்கமாட்டாத—இப்பேருண்மையை நாம்அடிக்கடி மறந்தே செயலாற்றி வருகின்றோம். நிலையாமை நினைவு எப்போதும் எல்லார்க்கும் இருக்குமானால் வீண் பழிபாவம் பகை இவைகட்கு உலகில் இடமே இராது.

**திருநீற்றின் பல்வகைப் பயன்கள்—சிறப்புகள்** :—திருநீறு இந்நிலையாமை நினைவை ஊட்டிக்கொண்டிருக்கிறது. மாறிக்கொண்டே இருக்கிற இப் பருப்பொருள் உலகில் மாறாத நிலையில் உள்ள தன்மையைத் தன்னைப்போல் அடையவேண்டும் என்னும் உணர்வையும் கொடுக்கிறது; பூசும் நீறுபோல் உள்ளும் புனிதமாக இருக்கவேண்டும் என்று உணரவும் உணர்த்தவும் பயன்படுகின்றது. சான்றோர்களுடைய தூய உணர்ச்சிகளைப் பெறுதற்கு அவர்கள் திருக்கரங்களிலிருந்து வாங்கத்தக்க எளிய இனிய தூய மென்மைப் பொருளாக இருக்கிறது. மெல்லிய பொருள்களில் உணர்ச்சிகள் எளிதில் பாயும். உணர்ச்சிகளைப் பாய்ச்சித் தரத் திருநீற்றிலும் சிறந்த சாதனம் இல்லை. பலவகை நோய் போக்குல் தன்மையையும் அது பெற்றிருக்கிறது. ஒளிவடிவான கடவுளையே பல்வேறு வடிவில்-நிலையில் வைத்து வழிபடுகின்றோம் என்பதை மறவாமல் நினைப்பூட்டுதற்குத் தீயின் பருப் பொருளாகிய திருநீற்றைவிடச் சிறந்த சாதனம் வழிபாட்டுக்கு வேறு என்ன இருக்கிறது? மற்றச் சமயங்கட்கும் இயக்கங்கட்கும் அமைப்புகட்கும் ஏற்பட்டுள்ள அடையாளங்கள் சாதனங்களைவிட இது மிகப் பழமையும், எளிமையும், தூய்மையும் பொதுமையும் உடையதாக இருக்கிறது. எங்கும் எப்போதும் கிடைக்கக்கூடியதும் கொண்டுபோகக் கூடியதாகவும் இருக்கிறது.

• **அறிந்து முறைப்படி பூசவேண்டும்** :—இன்னும் இதன் சிறப்புகளும் நுட்பங்களும் எத்துணையோ இருக்கின்றன. அவற்றை

முன்னோர் நூல்களிலும், தக்கோர் வாயிலாகவும அறிதல வேண்டும். உடம்பின் உணர்ச்சிக் களங்களான இடங்களில் எல்லாம் திருநீறு நல்லுணர்வுடன் முறையாகப் பூசப்படுதல் வேண்டும். விழிப்பு நிலையில் உணர்வு இயங்குகின்ற புருவ மத்தியிலும் நெற்றியிலும் இது முதன்மையாகப் பூசப்படும்.

**உடலை ஓம்பும் ஒளி மயமாக்கும் :—**நாடோறும் பலகாலும் கருத்தும் பயனும் அறிந்து தக்கபடி உரிய நல்லுணர்வுடன் உடம்பின் உணர்ச்சிக்களங்களில் திருநீறு பூசப்பட்டால் அங்கங்குள்ள உணர் வாற்றல்களைப் பெருக்கி உடலை ஓம்பும் ஒளி மயமாக்கும் என்பதில் எதும் குருட்டுத்தனமில்லை.

**தமிழர் பொது அடையாளம் :—**இத்தகைய இனிய ஒரு நுண் பொருளைப் பல கருத்துக்களும் பொதுளத் தம்மவரின் பொது அடையாளமாகக் கண்டு வழங்குவித்த இந்நாட்டுத் தமிழ் முன்னோர்களின் பேரருளும் பேரறிவும் எண்ணி எண்ணி இன்புறத் தக்கனவாக வன்றோ இருக்கின்றன! அவர்களுக்கு நன்றி செலுத்துகின்ற வகையில் திருநீற்றைத் தமிழர் அனைவரும் தமது பொது அடையாளமாகக் கொள்வது எவ்வளவு நல்லது ? வேற்று மதத்தவர்கள்கூடத் திருநீற்றை ஒரோர் ஒரு காலங்களில் வழங்குகின்றனர்.

---

# தம்பியரின் தன்மை

**ச. கா. சீரங்கம்**

உலகில் அநேக தம்பியர்கள் தோன்றியிருக்கிறார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்க தம்பியர்களைப்பற்றி ஆராய்ந்தால் தம்பியரின் தன்மை எத்தகையது என்பது விளங்கும். இராமாயணத்தில் காணப் படும் தம்பியர்கள் பலர். ஒவ்வொரு தம்பியரின் குணமும் வெவ் வேறாகக் காட்டப்படுகிறது. இராமனுக்கு இரண்டு தம்பியர்கள் குறிப் பிடத்தக்கவர்கள் : ஒருவன் இலக்குவன். மற்றொருவன் பரதன். இதில் முன்னவனைக் காட்டிலும் பின்னவனே சிறந்தவனென்றே கூற லாம். இலக்குவன் தன் அண்ணன் உடன் இருந்தான் என்ற ஒன்றைத் தவிர வேறு கூறுவதற்கில்லை. பரதன் அப்படியல்ல. அண்ணன் நாடு துறந்து காடேகினான் என்ற செய்தி கேள்விப்பட்ட உடனே, புலம்பினான், தானும் மர உரி தரித்தான். அண்ணனை அழைத்து வந்து நாடாளப் பட்டம் சூட்டுவேன் என்று அண்ணனைத் தேடி வந்தான். சித்திரக்கூடப் பருவதம் வந்து சேர்ந்தான். அப்பொழுது இராமன் அத் தம்பியின் நிலையைக் காண்கின்றான்:

புல்லி நின்றனன் புனைந்த வேடத்தைப்
பன்முறை நோக்கினன் பலவு முன்னினன்
அல்லலி னழுங்கினை யைய வாளுடை
மல்லர் தோளினன் வலியனோ என்றான்.

பரதனின் நிலையைக் கம்பர் நமக்குக் காட்டியதோடு நில்லாமல் அண்ண னின் நிலையையும் நமக்குத் தெரியப்படுத்துகின்றார். தம்பி புனைந்திருந்த வேடத்தைப் பலமுறையும் பார்த்து, பலவாறு நினைந்து, முடிவேற் படாமல், சக்கரவர்த்தி நலந்தானே என்று வினவுகிறான். பரதன் தனக்கு அரசு கிடைத்திருந்தும்கூட அதனைத்தான் ஏற்காது துறவு உள்ளம் கொண்டான் என்றால் அதுவே சிறந்ததாகும். அதுபோலவே இலங்கையில் இராவணனுக்குத் தம்பியர் இருவர். ஒருவன் விபீஷணன், மற்றவன் கும்பகர்ணன். இருவரும் அண்ணனுக்கு அறிவுரை பகன்ற வர்கள். எவருடையதையும் இராவணன் ஏற்றானில்லை. அதனால் கோபமுற்ற விபீடணன் அண்ணன்மேல் பகைமை பூண்டு எதிரியி னிடம் சென்று அடைக்கலம் புகுந்தான். ஆனால் கும்பகர்ணனோ அண்ணன் தன் சொல்லைக் கேட்காவிடினும், அண்ணனைக் காட்டிக் கொடுத்தானில்லை. செய்நன்றி கொன்றானில்லை. தனக்கு இராமன் பால் பகை இல்லை என்றாலும் அண்ணன் இதுகாறும் தனக்கு அளித்து வந்த செஞ்சோற்றுக் கடனுக்காக அமர்க்களம் ஏகுகின்றேன் என்று போர்க்களம் சென்று மாண்டான். இதுவே சாலச் சிறந்ததென விளங்குகின்றதல்லவா !

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

என்ற வள்ளுவர் வாக்கு உன்னற்பாலது.

இனி, பாரதத்தில் தருமர் சொல்லுக்குக் கட்டுப்பட்ட தம்பியர் நால்வர். அண்ணன் அவ்வப்போது சொல்லிய அறிவுரைகளுக்குக் கீழ்ப்படிந்தே நடந்தனர் அந் நால்வரும். தம்பியர்கள் கோபித்தெழுந்த நேரத்திலெல்லாம், அண்ணன் அவர்களுக்கு ஆறுதல் மொழி கூறி, அறவுரை கூறினன். அண்ணன் சொல்லுக்கு மறுமொழியாக நால் வரும் சொன்னாலும்கூட அண்ணன் இட்ட ஆணைக்குத் தாழ்ந்தே சென்றனர். கிருஷ்ணனை துரியோதனனிடத்தில் தூது அனுப்பும் போது தருமர் கிருஷ்ணனிடத்தில் சொன்னவை இவை :

முந்தூர்வெம் பணிக்கொடியோன் மூதூரில்
　　நடந்துழவர் முன்றில் தோறும்
நந்தூரும் புனனாட்டின் திறம்வேண்டு
　　நாடொன்றும் நல்கான் ஆகில்
ஐந்தூர் வேண்டவை இல்லெனில் ஐந்திலம் வேண்
　　டவை மறுத்தால் அடுபோர் வேண்டு

என்ற இந்த மொழியைக் கேட்டு அடங்காச் சினம்கொண்ட வீமன் :

அண்ணு ! என்ன சொன்னுய்? எதிரியிடம் சென்று தஞ்சம் கேட்கவா! ஏன் இவ்வளவு தணிந்து சொல்லவேண்டும் ? நமக்குரிய பங்கைக் கொடுப்பதற்கு அவன் என்ன ? அண்ணு ! நீ செய்யும் கொடுமை துரியோதனன் செய்யும் கொடுமையைக் காட்டிலும் கொடுமையாக இருக்கிறதே !

விரிகுழற்பைந் தொடிநாணி வேத்தவையின்
முறையிடுநாள் வெகுளேல் என்று
மரபினுக்கும் நமக்கும் உலகுள்ளளவும்
தீராத வசையே கண்டாய்;
எரிதழற் கானகம் அகன்றும் இன்னமும் வெம்
பகைமுடிக்க இனேயா நின்ருய் ;
அரவுயர்த்தோன் கொடுமையினும் முரசுயர்த்தோய்
உனதருளுக் கஞ்சினேனே

என்று கூறிச் சினந்தெழுந்தான். என்ருலும் அண்ணன் ஆணையைக் கடந்தானில்லை. இவ்வாருகவே மற்றை மூவரும் அதிர் மொழி பேசினும் அண்ணன் ஆணையைச் சிரமேல் வைத்தே செயலாற்றினர்.

அவ்வாறே சைவ நூலாகிய கந்த புராணத்திலும் சூரபன்மனுக்குத் தம்பியாகச் சிங்கமுகன் தோன்றுகிருன். அண்ணன் சூரபன்மன் முருகப் பெருமானேடு போருக்கெழுந்த நேரத்தில் சிங்கமுகன் சொல்லும் அறவுரையும் அறிவுரையும் மற்ற நூல்களில் காட்டப்படும் திறத்தைவிடச் சீரிய முறையில் அமைந்திருக்கிறது. * * * * * * * * * சூரபன்மனைப் பார்த்துச் சிங்கமுகன் சொல்கின்ருன். என் அருமை அண்ணுவே ! நான் சொல்லப்போவதைக் கேட்பாயாக. நான் உன்பால் வைத்த அன்பின் காரணமாகப் புகல்கின்றேன். நான் உனக்கு ஒரு அன்பன் ; அன்பன் எப்படி இருக்கவேண்டுமென்ருல், இதோ நான் சொல்கிறேன்.

பெற்றிடு திருவினில் பிறந்த வெஞ்சினம்
கற்றவர் உணர்வையும் கடக்கும் அன்னது
முற்றுறு கின்றதன் முன்னம் அன்பிஞேர்
உற்றன கூறியே உணர்த்தல் வேண்டுமால்.

ஆகவே போருக்குநீ செல்வதைத் தவிர்ப்பாயாக. மேலும் நீ மன்னன் ; நான் ஒரு பிரஜை என்ற முறையிலும் சொல்கின்றேன். அமைச்சன் என்ற முறையிலும் சொல்கின்றேன், துணைவன் என்ற முறையிலும் சொல்கின்றேன், மேலோன் என்ற முறையிலும் சொல்கின்றேன். நான் சொல்லவில்லை என்ருல் உனக்கு துரோகம் செய்தவனுவேன். எனக்கு நடுவு நீதி சொல்ல உரிமையுண்டு. ஆகவே சொன்னேன்.

மன்னவன் செவியழல் மடுத்த தாமென
நன்னெறி தருவதோர் நடுவு நீதியைச்
சொன்னவர் அமைச்சர்கள் துணைவர் மேலையோர்
ஒன்னலர் விழைந்தவா றுரைக்கின் றார்களே!

என்று நடுவு நீதியை அவ்வளவு வினயமாகச் சொல்கின்றான். மேலும் சிங்கமுகன் இங்கு ஓர் அறிஞரில் அறிஞனாகவே காட்டப்படுகின்றான். அவன் இறைவனின் நிலையை முற்றிலும் உணர்ந்தவனாகவும், அனுபவத்தின் மூலமாகவே அறிவுரை சொல்லப் புகுந்தவனாகவுமுள்ளான். மற்றை நூல்களில் கூறப்படுகின்ற தம்பியரின் நிலையைக் காட்டிலும், இவன் அண்ணன்பால் வைத்த அன்புநிலை சீரியது. அதைக்குறித்தே இவன் அறவுரையும் அறிவுரையும் மிளிர்கிறது. கும்பகர்ணன் போருக்கு எழுங்காலையில் "செஞ்சோற்றுக்கடன்" என்று சொல்லிப் போந்தான். ஆனால் சிங்கமுகனோ "இது கடன் அல்ல; நீ இறந்து படுவதை என்னால் பார்த்துச் சகிக்க முடியாது. நீ என் உடன்பிறந்தான். தகாத முறையில் செல்கிறாய். அறிவு சொல்லியும் கேட்கின்றாயில்லை. ஆகவே உன்பால் வைத்த அன்பு ஒன்றுக்கே என் உயிரை விடப்போகிறேன். அதன்பின் உண்மை உணர்வாயாக" என்று கூறியதோடு நில்லாமல் போருக்கு வரும் ஆறுமுகனைப் பாலன் என்று எண்ணாதே.

"சீலம் இல்லவர்க் குணர வொண்ணாத சிற்பரனைப்
பாலன் என்றனை அவனிடத் திற்பல பொருளும்
மேலை நாள்வந்து தோன்றிய சிறியதோர் வித்தின்
ஆலம் யாவையும் ஒடுங்கியே அவதரித்தது போல்"

என்று கூறும்போது சிங்கமுகன் ஒரு யோகியாகவே காட்சியளிக்கின்றான். அறிவுறையும், அறவுரையும் சொல்லப் போகின்றவர்கள் இந்த நிலையிலன்றோ இருத்தல் வேண்டும்?

இவ்வாறே இதுகாறும் கூறப்படாத நிலையில் அப்பர் சுவாமிகள் நம் கண்முன் காட்சியளிக்கின்றார். இவர் அண்ணனுக்குத் தம்பியல்ல; தமக்கைக்குத் தம்பி. தான் வேறு சமயம் சார்ந்து இருந்த காலத்தும், அக்காளிடம் கொண்ட அன்பு மாறினாரில்லை. அந்த பேரன்பைப் பெருந்தகை சேக்கிழார் சுவாமிகளிடத்திலன்றோ கேட்கவேண்டும். தான் சூலை நோயால் வருந்தியபொழுது, 'தமக்கையிடம் உடனே செல்ல வேண்டுமே! யாது செய்வேன்? எப்படியும் இந்த சமணர்களிடத்திலிருந்து வெளியேற வேண்டும்? என்று கருதி, பெருவிருப்போடு, "பொய்தருமால் உள்ளத்துப் புன் சமணர் இடங் கழிந்து, மெய்தருவான் நெறியடைவார் வெண் புடைவை மெய்சூழ்ந்து, செய்தவமாதர் வாழும் திருவதிகை வந்து," "இலகுமணி மதிற்சோதி எதிர்கொள் திருவதிகையினில் திலகவதியார் இருந்த திருமடத்தைச் சென்

றணைந்தார்." அந்த ஆராக் காதலினால் தமக்கையைக் கண்டவுடனே தாயைக் கண்ட பசுபோல் உள்ளம் பூரித்து உடலெல்லாம் புலகாங்கிதம் அடைய,

வந்தணைந்து திலகவதியார் அடிமேலுற வணங்கி
நந்தமது குலஞ்செய்த நற்றவத்தின் பயன்அனையீர்
இந்த வுடற் கொடுஞ்சூலைக் கிடைந்தடைந்தேன் இனிமயங்கா(து)
உய்ந்து கரை ஏறுநெறி உரைத்தருளும்

என உரைத்துப் பணிந்து வீழ்ந்தார். வீழ்ந்த தம்பியின் நிலையைக் கண்ட தமக்கையின் நிலை எவ்வாறு இருக்கும்? * * * * * * * * * எத்தகைய தீய நெறியில் சென்றிருந்தாலும், தன்னை அடைக்கலம் என்று வந்தவரைக் காப்பதன்றோ சைவப் பெருமக்களின் தலையாய கடனாகும்! ஆகவே,

தாளிணை மேல் விழுந்தயரும் தம்பியார் தமைநோக்கி
ஆளுடைய தம்பெருமான் அருள்நினைந்து கைதொழுது
கோளில்பர சமயநெறிக் குழியில்விழுந் தறியாது
மூளும் அருந்துயர் உழந்தீர் எழுந்திரீர்

என மொழிந்தார். இது வன்றோ அன்பினும் அன்பு! இத்தகைய அன்பின் உயர்வைக் காணும்பொழு தெல்லாம் சைவத்தின் சிறப்பையும், அதைக் கைக்கொண்டு ஒழுகிய நமது மூதாதையர்களின் பெருமையையும் எண்ணி எண்ணி இன்புறுகிறோம்.

---

# Appreciation of Saiva Siddhanta by Western Scholars

*Compiled by T. K. Narayanaswami Naidu*

"Saiva Siddhanta philosophy is the choicest product of the Dravidian intellect.

"The Saiva Siddhanta system is the most elaborate, influential, and undoubtedly the most intrinsically valuable of all the religions of India. It is peculiarly the South-Indian, and Tamil religion......Saivism is the old prehistoric religion of South India, essentially existing from Pre-Aryan times, and holds sway over the hearts of the Tamil people."

*Revd. Dr. G. U. Pope, M. A., D. D.,*
*Thiruvachakam P. IXXIV.*

" There is no school of thought and no system of faith or worship that comes to us with anything like the claims of Saiva Siddhanta."

" The system possesses the merits of great antiquity. In the religious world, the Saiva System is the heir to all that is most ancient in South India. It is the religion of the Tamil people by the side of which every other form is comparatively of foreign origin."

" In the largeness of its following as well as in regard to the antiquity of some of its elements, the Saiva Siddhanta is beyond any other form, the religion of the Tamils and ought to be studied by all Tamil Missionaries.

" We have, however, left the greatest distinction of this system till the last. As a system of religious thought, as an expression of faith and life, the Saiva Siddhanta is by far the best that South India possesses. Indeed it would not be rash to includo the whole of India and to maintain that, judged by its intrinsic merits, the Saiva Siddhanta represents the high water-mark of Indian thought and Indian life, apart of course from the influences of the Christian Evangel."

*Revd. W. Goudie.*
*Christian College Magazine*, XXII 9.

" A system which perhaps from the theistic point of view, is the most valuable of all that have sprung up upon the Indian soil."

" Perhaps nowhere in Indian Theology have theistic ideas found fuller or nobler expression than in this attempt to conceive of an eternal purpose of redemption governing the whole relation of the Supreme Lord to the Universe."

" But it has grasped and set forth in far broader outline than elsewhere in Indian thought the basal conception of Theism that God is a Moral Being, governed first to last by a purpose of compassion."

*Revd. N. Machnicol, M. A., Litt., D.*
*"INDIAN THEISM".*

" No cult in the world has produced a richer devotional literature, or one more instinct with brilliance of inauguration, fervour of feeling and grace of expression."

*Dr. L. D. Barnett,*
*"Heart of India"*

# மலரும் மணமும்

“ மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.”

**பொன் மலர்**


கார்த்திகைக் கடைஞாயிறு (11—12—1955) காலை சமாஜச் செயற் குழுவினர், ‘பொன்விழாவுக்கு இன்னும் இருபது நாட்களேனும் இல்லையே, பொன்விழா மலர் அரும்புவது எங்ஙனம்?’ என்றனர். அந்நிலையில் சிதம்பரம் வள்ளல்கள் திரு. எம். இரத்தின சபாபதி பிள்ளையவர்களும், திரு. எஸ். இரத்தினசாமி செட்டியாரவர்களும் மலர் வெளியிட ரூபாய் ஐந்நூறு உதவுவதாகத் தந்திச் செய்தி அனுப்பினார்கள். செயற் குழுவினர் சுமார் இருநூறு ரூபாய் தர முன்வந்தனர். கோவைகிழார் மூலம் இருநூறு வாக்களிக்கப்பட்டது. இதற்கப்புறமும் குறைந்தது அறுநூறு ரூபாய் தேவைப்படுகிறதே என்ற கவலையோடு செயற் குழு கலைந்தது.

அன்று பிற்பகல் நாலு மணி. விரிஞ்சைப்பதி நோக்கி வழித்துணைநாதர் கோயிலில் விரிவுரையாற்ற விரைந்து சென்றேன். என்னோடு சென்னை, மருந்து வியாபாரம் மேயர் கம்பெனி திரு. ஆர். மாசிலாமணி முதலியாரும், குப்புசாமி கம்பெனி (ஸ்பிரிட் வியாபாரம்) திரு. எஸ். குப்புசாமி முதலியாரும் இருந்தனர். அவர்களிடம் மலரைப் பற்றிப் பிரஸ்தாபித்தேன். மாசிலாமணி முதலியார் “எவ்வளவு தேவை?” என்றார். “ஆறு நூறு” என்றேன். “சரி. நானும், என் சகாக்களும் ஆறுமுகத்திற்கு ஆறு நூறு தருகிறோம்” என்றார். பொன்விழா மலர் மலர்ந்தது.


இவர்களையும், சென்னை, ஸ்பிரிட் வேர் ஹவுஸ் திரு. எஸ். பாலசுப்பிரமணிய முதலியாரையும், வணிகர் - திரு. டி. மாணிக்கம் செட்டியாரையும் சமாஜத்திற்கு அறிமுகப்படுத்தி, அவர்கள் செலவில் உணவு முதலான ஏற்பாடுகளுடன் சமாஜத்தின் நாற்பத்தெட்டாவது ஆண்டுவிழாவைச் சிறப்புற நடத்தித் தந்த பெருமை வாலாஜாபாத் அன்புத்தந்தை திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கே உரியது. இச்சைவப் பெருமக்களுக்குச் சமாஜம் என்றும் நன்றியுடையது.

**மலர்சிலம்படியார்கள்**

இம்மலர் வெளிவர வேண்டுமென்று மிகவும் விரும்பினவரும், அதற்காகப் பெரு முயற்சி செய்தவரும், சமாஜத் தலைவர் திரு. சு. சச்சிதானந்தம் பிள்ளை. அவர் தமது முதுமைக் காலத்திலும் தளராது சைவத்திற்கு ஊண் உறக்கம் பாராது உழைத்து வருகிறார்.



வே. தியாகராய முதலியார்




மு. சின்னசாமி ரெட்டியார்




ஆர். இராஜாமணி அம்மையார்



இராஜரத்தினம் அம்மையார்



தி. கி. நாராயணசாமி நாயுடு



ம. சி. சம்பந்த முதலியார்



மு. நாராயணசாமி முதலியார்



ச. சிவகுமாரன்

அத்துடன் இம்மலர் வெளியீட்டிற்குப் பொருள் திரட்டுதல் முதலிய பொறுப்பையும் ஏற்றுப் பணி செய்கின்றார்.

சமாஜத்தை வளர்த்தும் காத்தும் வந்துள்ளவர் திருவாளர் மயிலை பாலசுப்பிரமணிய முதலியார். அவர்தம் உடல்நிலை குன்றியிருந்தும், இவ்வளவு சுருங்கிய காலத்தில், அன்றாடம் இரவு ஒரு மணியானாலும் புரூப் பார்த்து மறுநாள் காலையில் அச்சகத்திற்குக் கட்டுரைகளை அனுப்பிவந்தார். மேலும் பொன்விழாவிற்கான அரிய ஆலோசனைகளை அவ்வப்போது கூறி உதவியுள்ளார்.

இவர் சமாஜத்திற்கு இருபதாண்டுகளுக்கு மேலாகக் காரியதரிசியாக இருந்து தொண்டாற்றியவர். சமாஜத்தின் அடக்கவிலைப் பதிப்புக்களாகிய பல நூல்களுக்கு அரும்பதவுரை, ஆராய்ச்சிக் குறிப்பு முதலியன நல்கிய அறிஞராகவும் ஆற்றிவந்திருக்கும் அரும்பணிகள் பல. தற்போது சித்தாந்தம் பத்திரிகையின் ஆசிரியராகவும் அறிவுத் தொண்டாற்றி வருகிறார். இவ்வாறு இவர் சமாஜத்திற்குச் செய்துள்ள சேவைகள் பல.

கோவைகிழார் ராவ்பஹதூர் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், சித்தாந்தத்திற்குப் பத்திராசிரியராக முன்பு இருந்து பெருந் தொண்டு புரிந்தார். இவர் இப்போது சமாஜ வரலாற்றை எழுதியும், பொன்விழா மலருக்கு வந்த கட்டுரைகளைத் தொகுத்து அனுப்பியும் உதவியுள்ளார்.

சமாஜத்தின் பத்திரிகையையும், பிற பல நூல்களையும் செம்மையாக அச்சிட்டு வருவது சென்னை "சாது அச்சுக்கூடம்". நமது சமாஜ செயற்குழுக்கூட்ட உறுப்பினரும், சாது அச்சுக்கூட நிருவாகியுமாகிய திரு. மு. நாராயணசாமி முதலியாரும், அவருடன் பணிபுரியும் அன்பர்களும், மிகவும் குறுகிய காலத்தில் பொன்விழா மலருக்காகக் கடைசிநாள் வரை தரப்பட்டுவந்த கட்டுரைகள் பலவற்றையும் ஏற்று நன்றாக அச்சிட்டுத் தந்தனர்.

இவர்களனைவருக்கும் சமாஜத்தின் மனமார்ந்த நன்றி உரியது.

**வெள்ளிவிழா**

பொன் விழாவின்போது வெள்ளி விழாவை நினைக்காதிருக்க முடியுமா! இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன், தென்னார்க்காடு கிழக்குமருதூரில், பெருநிலக்கிழார் திரு. தி. கு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களின் 'சிறிய பெருந்தோன்றலார்' தி. கு. கி. நாராயணசாமி நாயுடு, தம் திருமணத்தை யொட்டி, சமாஜத்தின் வெள்ளி விழாவை மிகவும் சிறப்புற நடத்தித் தந்தார். அப்போது அவ்விழாவிற்குத் தமிழ்த் தாயின் தவப்புதல்வர் - அன்பின் உருவம் - அமைதியின்

உறைவிடம் - சமரச சன்மார்க்க தீபம் - திருவாளர் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் தலைமை தாங்கினார்.

திரு. தி. கு. கி. நாராயணசாமி நாயுடு சமாஜத்தின் தொண்டர் குழாத்துத் தலைவராகப் பணி புரிந்தவர். சமாஜத்தின் அடக்கவிலைப் பெரு நூல்கள் சில வெளிவர முன்பணமுதவியவர். இம்மலர் வெளியீட்டிற்குக் கட்டுரைகள் சேகரித்ததோடு பொருளுதவியும் புரிந்தார்.

### வெண்ணெய்நல்லூரார்

திருவெண்ணெய்நல்லூர் என்றவுடன் "பித்தா பிறைசூடி" என்னும் திருவாக்குக் கேட்கிறது. மெய்கண்டார் முன்னிற்கிறார். கம்பர் காட்சியளிக்கிறார். அத்தகு திருவெண்ணெய்நல்லூர் மிராசுதார் திருவாளர் சின்னசாமி ரெட்டியார் சமாஜத்தினிடம் பேரன்பு கொண்டவர். முருகன் முன்னூல் வெளியிட முதற்பணம் கொடுத்தவர். இன்னும் பலவகையிலும் சமாஜத்திற்கு உறுதுணையாக இருந்து வருகிறார்.

### வேண்டும்போதுதவுவார்

அடக்கவிலைப் பதிப்புக்களால் பெரும் பணியாற்றியது நம் சமாஜம். அவற்றில் முதலாவதாக வெளிவந்த நூல் சுந்தரர் தேவாரம். இதற்கும் மற்ற சில பதிப்புக்களுக்கும் முன்பணம் உதவி ஊக்கியவர், சென்னை ருக்குமணி குக்கர் கம்பெனி உரிமையாளர் திருவாளர் அ. சோமசுந்தரஞ் செட்டியார். இப்பொன்மலருக்கும், இராயப் பேட்டை திருவாளர் வே. தியாகராய முதலியார் உதவியது போலவே திரு. செட்டியாரும் ரூ. 250/ முன்பணம் கொடுத்ததோடு வேறு நன்கொடையும் அளித்தார். இவர் சமாஜத்திற்கு இன்னும் எவ் வகையில் உபகாரம் செய்யாலாமென்று சிந்தித்துக்கொண் டிருக்கிறார்.

### பழநி அடியவர்

பழநிமலை அடிவாரத்தில் "திருவடி" என்னும் பெயரிய இல்லத்தில் உறைபவர் ராவ்பகதூர் க. அரங்கசாமி முதலியார். அவர்தம் வாழ்க்கைத் துணைவியார், ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளின் சிஷ்யை திருமதி ஆதிலட்சுமி அம்மையார். இவர்களும் இவர்களது புதல்வியர்களும் சமாஜத் தொண்டில் மிகவும் ஈடுபட்டவர்கள். திரு. அரங்கசாமி முதலியார், தாம் சமாஜக் காரியதரிசியாக இருந்தபோது, பெரிய புராணத்தை வெளியிட்டார்.

இவர்கள் அனைவர்க்கும் சமாஜத்தின் நன்றி உரியது.

## சமாஜப் பெருங் குடும்பம்

சமாஜத்திற்காக இந்த ஐம்பது ஆண்டுகளில் எத்தனையோ வகைகளில் உழைத்த பெருமக்கள் எண்ணிறந்தவர். இவர்கள் செய்த சைவ சமயத்தொண்டு மகத்தானது. ஒவ்வொருவரைப் பற்றியும் சுருக்கமான அளவிலும் கூறுவதற்கு இயலாத காரணத்தால், "சமாஜ அன்பர்கள்" என்னும் நற்பெயருடன் பல்கிவரும் பெருங் குடும்பத்தினர் எல்லோர்க்கும் பொதுவாக சமாஜம் தனது நன்றியையும் வணக்கத்தையும் செலுத்துகின்றது.

## பொன்னம்பலத்தில் பொன்விழா

ஐம்பதாவது ஆண்டுவிழா அரியதொரு நிகழ்ச்சியாகும். முதலாண்டுவிழா நடைபெற்ற அதே பொன்னம்பலத்தில், திருமதி-சிவகாமியம்மையாரை வாழ்க்கைத் துணையாகக் கொண்ட திரு. நடேசனார் தலைமையில் பொன்விழா நடைபெறவும், பொன்விழா மலர் வெளிவரவும் பேருபகாரம் புரிபவர்கள் திருவாளர்கள் ஆடூர் இரத்தினசபாபதிப் பிள்ளையவர்களும், எஸ். இரத்தினசாமி செட்டியாரவர்களும் ஆவர். கனகசபாபதியின் சந்நிதியில் துவங்கும் இப் பொன்விழா நிகழ, இரத்தினசபாபதியும் இரத்தினசாமியும் ஏற்பாடு செய்திருப்பது, சமாஜத்தின் வைரவிழாவும் கனகசபைத் திருமுன்பிலேயே இவ்விரு பெருமக்களின்துணையால் உரிய பொழுதில் நடைபெறும் என்பதற்கு நல்லதோர் அறிகுறியாக இருக்கிறது.

> " மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
> நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்."

தில்லையம்பதி,
30—12—1955.

ச. சிவகுமாரன்,
காரியதரிசி, சைவ சித்தாந்த மகா சமாஜம்.

அநுபந்தம்

# சைவப்பெரியார் தனிக்கூட்டத் தீர்மானங்கள் முதலியன

1929-ல் திருநெல்வேலியில் கூடிய சைவப்பெரியார் தனிக்கூட்டம் செய்த தீர்மானங்கள் :

1. நல்லொழுக்க வாழ்க்கைக்குக் கடவுள் உண்டென்னும் கொள்கை இன்றியமையாதது.

2. சைவ சமயம் அறிவு ஆராய்ச்சிக்குப் பொருத்த முள்ளதாயும் அன்பு நெறியினையே அடிப்படையாகக் கொண்டதாயும் இருத்தலின் அஃது எக்காலத்துக்கும் எச்சமூக நிலைக்கும் இசைந்ததாயிருக்கிறது.

3. பதி, பசு, பாசம் (இறை, உயிர், தளை) என்னும் முப்பொருள் உண்மையையும், அப்பதி சிவமே யென்பதையும் கடைப்பிடித்தல் சைவ சமயத்தின் கோட்பாடாகும்; சைவ உணவு கொள்ளுதல் சிவ சின்னங்கள் அணிதல் என்பவற்றோடு சரியை, கிரியை, யோகம், ஞானங்களில் அக்கோட்பாடுகட் கிசையப் பயிலுதல் சைவ சமயத்தின் அநுட்டானமாகும்.

4. சைவ சமயத்துக்குப் பிரமாண நூல்களாவன: பன்னிரு திருமுறைகளும் பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களும் அவைகளின் கருத்துக்கு மாறுபடாத வேத சிவாகமப் பகுதிகளும் ஆகும்.

5. சைவ சமயிகள், சைவசமயக் கோட்பாடுகளையும் அனுட்டானங்களையும் மறுக்காத எவ்வித ஆராய்ச்சியுஞ் செய்தல் சைவ சமய விரோதமாகாது.

6. சைவ சமயிகளும் பிறருஞ் செய்யும் சமய ஆராய்ச்சிகளின் முடிபுகள் ஒப்புக்கொள்ளத் தக்கனவா அல்லவா என்று தீர்மானித்தற் பொருட்டுத் தனிக்கழகம் ஒன்று நிறுவி அதற்குரிய சைவ அறிஞர்களைச் சைவ சித்தாந்த மகாசமாஜத்தார் ஆண்டுதோறும் தெரிந்தெடுக்க வேண்டும்.

7. சைவ சமயிகள் கடவுள் உண்டென்னும் கொள்கையைப் பாதுகாப்பதிலும் பொதுநலங் கருதிய அருளொழுக்கத்தைப் பரப்புவதிலும் தம்மோடு இணங்கிவரும் ஏனைச் சமயிகளோடு ஒத்துழைத்தல் வேண்டும்.

8. சைவ சமயமானது பிற சமயங்களைச் சோபான முறையில் தழுவுவதில் சைவ சமயிகள் பிற சமயிகளோடு சகோதரத்துவம் பாராட்ட வேண்டும்.

9. சைவ சமயிகளுள் சைவ ஆசாரமுடைய எம்மரபினர்க்கும் ஆலய வழிபாடு முதலிய சமய உரிமைகள் சமமாயிருத்தல் வேண்டும்.

10. ஆலயத்தில் சென்று வழிபடும் மக்கட்குக் கடவுள் சந்நிதியில் எவ்வகையான உயர்வு தாழ்வுகளும் பாராட்டப்படுதல் கூடாது.

11. பிற சமயத்தினர் சைவசமயக் கோட்பாடுகளையும் அனுட்டானங்களையும் ஒப்புக்கொண்டு சைவசமயம் புகும் தமது விருப்பத்தை ஒரு சைவ சபையாருக்கு எழுத்து மூலமாய்த் தெரிவித்தால், அச்சைவ சபையார் அவ்வறிவிப்பைப் பதிவு செய்துகொண்டு திருநீற்றுப் பதிகத்தையும் பஞ்சாக்கரப் பதிகத்தையும் ஓதுவித்துத் திருநீறு அணிவித்து அவர்களைச் சைவ சமயத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும். அவர்கள் சமய உரிமைகள் அனைத்துக்கும் உரியராவார்கள்.

12. சைவ சமய வளர்ச்சிக்கு வழிகளாவன :—

(1) சைவ கலாசாலை ஏற்படுத்தி, சைவ சமய போதனை செய்வதற்குரிய பிரசாரகர்களைத் தயார் செய்தல்.

(2) அப் பிரசாரகர்களுக்குக் கோயில் மடங்கள், பெருஞ் சைவ சபைகள், செல்வர்கள் முதலியோர்களால் சம்பளம் அல்லது ஊதியங் கிடைக்கும்படிச் செய்தல்.

(3) ஆங்கிலத் தமிழ்க் கல்லூரிகளில் சைவ சமய மாணவர்க்கு அதிகாரிகளிடம் அனுமதி பெற்றுச் சைவசமய போதனை செய்வித்தல்.

(4) சமய நூல் பரிசோதனைகள் நடத்துதலும் தேறியவர்களுக்குப் பரிசளித்தலும்.

(5) சைவ சமய உண்மைகளை விளக்கும் துண்டுப் பத்திரிகைகள் வெளியிடுதல்.

(6) தக்க புலவர்களைத் தெரிந்தெடுத்து அவர்கள் கூடிய கழகவாயிலாக சைவ சமயக் கோட்பாடுகளையும் அனுட்டானங்களையும் யாவர்க்கும் எளிதாய் நன்கு விளக்கும் உரைநடை நூல்களை வெளியிடுதல்.

(7) சைவ சமய உண்மைகளை அறிவியல் நூல் கருத்துக்களோடும் பிற சமயக் கருத்துக்களோடும் ஒத்துப் பார்த்து ஆராய்ச்சி செய்யும் சைவப் புலவர்களை ஆதரித்தல்.

(8) ஆங்கிலத்தில் ஒரு மாதாந்தப் பத்திரிகை நடத்துதல்.

(9) பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட சைவ சமயிகளுள் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு சைவ சபையின் உறுப்பினராயிருக்கும்படி வேண்டிக்கொள்ளல் என்பனவும் ஏனைய பிறவுமாம்.

13. திருக்கோயிலில் செய்யவேண்டிய சீர்திருத்தங்களாவன :—

(1) பூசனை புரிவோர்களுக்குச் சைவ சமய உணர்ச்சி உண்டாதற்குரிய கல்வி பயிற்றுதல்.

(2) அவர்கட்குத்தக்க சம்பளம் அல்லது ஊதியம் கிடைக்கும்படிச் செய்தல்.

(3) சைவ சமயிகளைக் கொண்டே சிவாலயங்களில் வேத பாராயணம் முதலிய கைங்கரியங்கள் அனைத்தையும் செய்வித்தல்.

(4) தக்க ஆதி சைவர்கள் கிடையாத விடத்துத் தகுதியுடைய ஏனைச் சைவ சமயிகள் வாயிலாகப் பூசனைகளை நடத்துதல்.

(5) ஒவ்வொரு சிவாலயத்திலும் பன்னிரு திருமுறைகளைப் பூசனை காலங்களிலே முறையாக ஓதுவித்தல்.

(6) ஆலயங்களில் நுழைந்துள்ள பிரவேசக் கட்டணம் முதலிய வழிபாட்டுத் தடைகளை நீக்குதல்.

(7) சைவசமயக் கொள்கைகட்கும் சிவாகம விதிகட்கும் முரணாகாத முறையில் நித்திய நைமித்திய பூசைகளை நடத்துவித்தல்.

(8) திருவிழாக்களிலே பக்தி ஞானங்களைக் குன்றச் செய்யும் வீணடம்பரச் செலவுகளை நீக்கி, சிவத்துவம் விளங்குதற்குரிய திருமுறைப் பாராயணம்,

சமயப் பிரசங்கம், சைவ அறிஞர் கூட்டம் முதலியவைகளையே நிகழ்த்து வித்தல்.

(9) சிவாலயங்களிலே தேவ தாசிகட்குப் பொட்டுக் கட்டுதலையும் அவர்கள் ஊழியத்தையும் ஒழித்தல்.

(10) திருக்கோயில்களிலும் தேர்களிலும் இப்பொழுது உள்ள இழிவான சிற்பங்களை ஒழித்தல்.

(11) சைவ சமய அறிவும் பற்றும் உடையவர்களையே கோயில் அதிகாரிகளாக நியமிக்கும்படி ஏற்பாடு செய்தல்.

(12) திருக்கோயில்களிலே திருக்குளம் முதலிய எவ்விடத்தையும் சுத்தமாக வைத்தல். புனிதத்திற்கும் பக்திக்கும் இடையூறாகிய கடை வைத்தல் முதலிய வழக்கங்களை ஒழித்தல்.

(13) நித்திய நைமித்திய பூசனை முதலியனவற்றிற்குரிய செலவுகள் நிகழ்ந்தபின் எஞ்சிய நிதியினைக் கொண்டு சமயப்பிரசாரகர் நியமனம், சைவ நூல் புத்தகசாலை, தேவார பாடசாலை, ஆகமபாடசாலை முதலியவற்றை ஏற்படுத்துதல், சிவாலய நிதியினைக் கொண்டு பிற சமயக் கல்விக்குப் பயன்படுத்தா திருத்தல்.

(14) சிவாலயங்களிலே செய்யப்படும் வடமொழி தென் மொழித் தோத்திரங்கள் அனைத்தும் சிவத்தைக் குறித்தனவாகவே இருக்கும்படி ஏற்பாடு செய்தல் என்பனவும் பிறவுமாம்.

14. சைவர்கட்குரிய சோடசகர்மம் தீக்ஷை வகைகள் முதலிய சடங்குகளும் சிவாலயத்தில் செய்யப்படும் கிரியைகளனைத்தும் சைவ சமயிகள் யாவர்க்கும் தெளிவாக எளிதில் விளங்குதற்குரிய முறைகளை ஆய்ந்து கூறுதற்கும் சடங்குகள் செய்விக்கத் தகுதியுடையார் யாவர் என்று துணிதற்கும் அத்தகைய பிறவற்றைத் தீர்மானித்தற்கும், ஸ்ரீமத் சிவானந்தசுவாமிகள், விருதை - சிவ ஞான யோகிகள், குளித்தலை - அரங்கசாமி ஐயர், கா. சுப்பிரமணிய பிள்ளை, ந. மு. வேங்கடசாமி நாட்டார் ஆகிய இவர்களை உறுப்பினராகக் கொண்ட அறிஞர் கழகம் ஒன்று நிறுவப்படுதல் வேண்டும்.

15. ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் சமய விஷயங்களிலே சம உரிமையும் கடமையும் உள்ளன.

16. உயிர்ப்பலி நிறுத்துதல், கொலை மறுத்தல் முதலிய அருளொழுக்கக் கொள்கைகளை (Vegetarianism) யாண்டும் பரவச் செய்தல் சைவ சபைகளின் கடமையாகும்.

17. சைவத் துறவிகட்குச் சமயக் கல்வி பயிற்றுவித்து அவர்களை ஆதரிப்பதுடன், அவர்கள் வாயிலாக, சமயபோதனை செய்விக்கும் பொருட்டும், சைவ சமய வளர்ச்சிக்குரிய எல்லா முயற்சிகட்கும் பொருளுதவி ஆதரித்தற் பொருட்டும் செல்வ மிக்க சைவ மடங்களின் தலைவர்களை வேண்டிக் கொள்வதற்குத் தக்க அறிஞர்கள் சிலரைத் தெரிந்தெடுத்து அம்மடாதிபதிகளிடம் அனுப்ப வேண்டும்.

18. சைவ சித்தாந்த மகா சமாஜத்தை இந்நாட்டிலுள்ள சைவ மக்கட்கெல்லாம் பொதுவாகிய சைவப்பெருஞ் சபையாகக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒவ்வொரு தாலூகாவிற்கும் தனித்தனி சைவ சபைகள் அமைக்கப் பெறுதல் வேண்டும்.

19. ஒவ்வொரு தாலூகாவிலுமுள்ள பிற சைவ சபைகள் தாலூகாச் சைவ சபையின் கிளைச்சபைகளாகவும், ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள தாலூகாச் சைவசபைகள் ஜில்லாச் சைவசபைகளின் கிளைகளாகவும், ஜில்லாச் சைவ சபைகள் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் கிளைகளாகவும் இருக்க வேண்டும்.

20. சைவ சமய வளர்ச்சிக்குரிய நன்னோக்கங்களும் நன்முயற்சிகளும் நிறைவேறுதற் பொருட்டும், உலகம் நலமடைதற் பொருட்டும், சைவருள் ஒவ்வொருவரும் நாடோறும் இறைவனைப் பிரார்த்தனை புரிதலுடன், சைவசபைகளிலும் கோயில்களிலும் வாரந்தோறும் சைவர் பலரும் ஒருங்கு கூடி இறைவனை அன்புமிக்க மொழிகளால் வேண்டிக்கொள்ளுதல் கடமையாகும்.

சைவப் பெரியார் தனிக் கூட்டத்திற்குப் பிரதிகளை அனுப்பிய சபைகள் :—

1. சைவசித்தாந்த மகா சமாஜம், சென்னை
2. தென்னிந்திய சைவசித்தாந்த சங்கம், திருநெல்வேலி
3. சைவசபை, பாளையங்கோட்டை
4. சைவசித்தாந்த சபை, தூத்துக்குடி
5. ௸ திரிச்சிராப்பள்ளி
6. ௸ ஸ்ரீவில்லிபுத்தூர்
7. ௸ பத்தமடை
8. சைவசித்தாந்த சங்கம், பூவாளூர்
9. ௸ குலசேகரன் பட்டணம்
10. சைவ சித்தாந்தக் கழகம், சங்கரன் கோயில்
11. ௸ திருநெல்வேலி
12. சைவப்பிரகாச சபை, கோடமுத்தூர்
13. ௸ விருதுநகர்
14. சித்தாந்தப் பிரகாச சபை, சென்னை
15. சைவ பரிபாலன சபை, சென்னை
16. திருநெறித் தொண்டர் குழாம், தென் திருவிதாங்கூர்
17. திருத்தொண்டர் குழாம்
18. மெய்கண்டார் மாணவர் கழகம், முடிவைத்தானேந்தல்
19. பக்திவிளை கழகம், கோவிற்பட்டி
20. சிவாலய பணிவிடைச் சங்கம், கோவிற்பட்டி
21. கணேச பக்தஜன சபை, வல்லநாடு
22. சித்திவிநாயகர் சபை, ஒட்டப்பிடாரம்
23. பாலசுப்பிரமணிய பக்தஜன சபை, இராயப்பேட்டை, சென்னை
24. செந்திலாதிபன் திருவருட் கழகம், செந்தில்
25. நால்வர் திருச்சபை, சிவகங்கை
26. திருஞான சம்பந்தர் திருவருட் கழகம், பேட்டை

27. திருஞான சம்பந்தர் பஜனை சபை
28. திருஞான சம்பந்தர் சபை, மஞ்சக்கொல்லை
29. திருவள்ளுவர் கழகம், தென்காசி
30. ஷை வீரவநல்லூர்
31. அறத் திருநெறிக்கழகம், சிந்துபூந்துறை
32. பொதுஜன ஊழிய சங்கம், ஆதம்பாக்கம், பறங்கிமலை
33. கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்தட்டான்குடி
34. சாத்தூர் தமிழ்ச்சங்கம், சாத்தூர்
35. சர்வமத சகோதர சங்கம், விஜயபுரம்

பல காரணங்களால் கூட்டத்துக்கு வர முடியாமையால் தங்கள் கருத்துக்கள், ஆதரவு, பற்று, பொருளுதவி முதலியன வழங்கிய பெரியார்களும் சபைகளும் :—

1. தவத்திரு. ஞானியார் சுவாமிகள், புலிசை
2. ,, மறைமலையடிகள், பல்லாவரம்
3. சர். டி. என். சிவஞானம்பிள்ளையவர்கள், பாளையங்கோட்டை
4. திரு. டி. இலக்குமணப் பிள்ளையவர்கள், திருவனந்தபுரம்
5. இலக்கண விளக்கவாசியர் பரம்பரை திரு. சோமசுந்தரதேசிகர், திருவாரூர்
6. திரு. கு. சோமசுந்தர தேசிகர், திருவையாறு
7. ,, வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர், கோயமுத்தூர்
8. ,, சி. கே. சுப்பிரமணிய முதலியார், கோயமுத்தூர்
9. ,, சி. எம். இராமச்சந்திர செட்டியார், கோயமுத்தூர்
10. ,, பரலி. சு. நெல்லையப்பர், சென்னை
11. ,, வை. கந்தசாமி முதலியார், திருப்பாதிரிப்புலியூர்
12. ,, டி. நல்லசிவன் பிள்ளை, சென்னை
13. ,, கோ. வரதராஜ பிள்ளை, தில்லையாடி
14. ,, வா. இராமலிங்கம்பிள்ளை, பேட்டை
15. ,, ஏ. நடேசப்பிள்ளை, மாயவரம்
16. ,, பி. துளசிங்கம், சென்னை
17. ,, தி. க. உலகநாதப்பிள்ளை, திருநெல்வேலி
18. ,, சி. வ. நல்லப்பெருமாள் பிள்ளை, தூத்துக்குடி
19. வைதிக சைவ சம்மேளனம், திருநெல்வேலி
20. ஸ்ரீ சண்முகாநந்த சன்மார்க்க சங்கம், திருமருகல்

# நமக்கு இனி வேண்டுவது யாது?

ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்.

சிவன் என்னும் செம்பொருளுடன் தோன்றிய சைவ சமயம் தமிழகத்தில் அனாதிகாலமாக அரசு வீற்றிருந்து, சென்ற இருபது நூற்றாண்டுகளில் பல தடவைகளில் நலிவுற்றும், மறைந்தும், தோன்றியும் இதுபோது ஒரு தோற்றத்துடன் விளங்குவது நாம் கண்ட தொன்றாகும். சமய வளம் கருதி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பெற்றது இம் மகா சமாஜம். பொன்னம்பலவன் திருவருட் குறிப்பால் சமாஜத்தின் முதற் கூட்டமும் ஐம்பதாம் முறையான பொன்விழாக் கூட்டமும் அவன் திரு முன்னரே நடைபெறுவதும் குறித்தற் குரியதாகும். * * *

சித்தாந்தத்தின் வளர்ச்சி, நம் சமய ஊக்கத்திற்கு ஓர் அறிகுறியாகும். இன்னும் நமக்கு வேண்டுவது யாதெனச் சிறிது கவனிக்க வேண்டும் :

1. சமாஜம், சைவ சமுதாயத்திலிருந்து ஒரு பெருந்திரளான அங்கத்தினர்களைக் கொண்டதாகத் திகழவேண்டும்.

2. அவர்களது ஆண்டுக் கட்டணத்தை அவசியமாகப் பெற்று, சமய வளர்ச்சிக்கான பணிகளில் ஈடுபடுதல் வேண்டும்.

3. திருமுறைகளையும், சமய நூல்களையும் பல்லாயிரக் கணக்காகப் பதிப்பித்து, வீடுதோறும் சைவ மணங்கமழச் செய்தல் வேண்டும்.

4. சித்தாந்தம், இன்னும் அழகிய நன்முறையில் வெளிவருதல்வேண்டும். இம் மாத இதழ் ஒவ்வொருவரும் வாங்கிப் பயன்பெறக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

5. சென்னை அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தாரின் சமய வளர்ச்சிக்கான பூரண ஆதரவும் கீழ்க்கண்டவைகட்குக் கிடைக்கும்படி செய்தல் வேண்டும் :

(a) ஒவ்வொரு கோயிலும், தன் வருவாயில் ஒரு சிறந்த பகுதியைச் சமயப் பிரசாரத்திற்காகப் பயன்படுத்துவதென்பது.

(b) சிறப்புக்களிலும், வாரந்தோறும் ஒரு நாளிலும், திருக்கோயில்களில் சிறந்த சொற்பொழிவுகள் நடத்தவேண்டிய தென்பது.

(c) முக்கியமாக, கோயில்களின் வருமானத்திலிருந்து அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தாரின் வரியைத் தவிர, மீதம் யாவையும், அந்தத் தேவஸ்தானத்தின் நன்மைக்கெனவே, இனிப் பத்து ஆண்டுக்காலம் செலவிடவேண்டும் என்பது.

அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தார் 1925-ஆம் ஆண்டு முதல் உழைத்துவரும் சென்ற முப்பது ஆண்டுகளில், எத்தனை எத்தனை திருக்கோயில்கள் பாழடைந்தும், சிதறுண்டும், சீர்குலைந்து மிருக்

கின்றன என்பதை அன்பர்கள் சித்தாந்தம் வாயிலாக (மலர் 25 - இதழ் 11–12) பார்க்கலாகும். கோயில்களைப் புறக்கணித்து, அவற்றின் வருவாயிலிருந்து ஒரு நிதி திரட்டி, அத்திரளை அரசாங்கத்தாரின் முன் காணிக்கையாகக் கொடுக்கச் சித்தமாக இருந்ததைத் தவிர, சென்ற பத்து ஆண்டுகளில், இந் நிலையத்தார் செய்திருப்பது வேறில்லை. இந் நிலையத்திற்கு நம் சமூகத்தினர் தலைமை தாங்கி யிருந்தும் இச் சீர்கேடு வந்திருப்பது மிகவும் வருந்ததற்குரியதாகும். இப்போது அதன் தலைவ ராகத் திகழும் திருவாளர் உத்தண்டராம பிள்ளை அவர்களாவது இதனைக் கவனிப்பார்களாக. சித்தாந்தம் பத்திரிகையில் குறிக்கப் பட்டுள்ள ஒவ்வொரு கோயிலும் சீர்திருத்தம் அடையவேண்டும். அடக்கப்பட்ட பொருள் வருவாயைக் கொண்ட ஒவ்வொரு கோயிலும் தனது நலத்தையே முதலாகக் கருதவேண்டும். அக்கோயில்கள் பழு தாகாவண்ணம் காப்பாற்றப்படல் மிக மிக அவசியமாகும்.

சமயப் பிரசாரத்துடன், சமயக் கருத்துக்களைத் தாங்கிய இலட்சக்கணக்கான துண்டுத் தாள்கள் விழாக்காலங்களில் ஒவ்வொரு வர் கையிலும் இருக்கும்படியாகச் செய்யவேண்டும். இதன் செலவை, விழாக்களின் பலதிறப்பட்ட செலவுகளில் சிறிது மீதப்படுத்தியும் செய்தல் வேண்டும்.

மதுரை, பழநி, திருச்செந்தூர், ஸ்ரீரங்கம் போன்ற பெருந் தேவஸ்தானங்கள் தனிப்பட்ட முறையில், மாத வெளியீடுகளையும் நடத்தலாகும். பொதுவாக, கோயில் நிருவாகம் நடத்தும் பணியாள ருக்கு இத் துறையில் ஒரு ஊக்கமும், அதிகாரிகளிடமிருந்து ஒரு சலுகையும் இருக்க வேண்டும். இப்போதைய நிலையில், பொதுவாக இக்கூட்டத்தினர் ஒரு அடக்கப்பட்ட கூட்டத்தினர் எனவே சொல்ல லாம். அரசியலாருக்குக் கோயிலின் வரவு செலவு கணக்கைக் காண் பிப்பதுடன் நில்லாமல், நற்காரியங்களைச் செயல் முறையில் நடத்திக் காட்ட அவர்களது ஒரு சுதந்திரம் இருக்கவேண்டும். அப்போதுதான் அவர்களிடம் ஒரு நற்பண்பையும் நற்பணியையும் எதிர்பார்க்க முடியும்.

இவை யாவும் கருதி, சைவ சமூகத்தினரின் பொது அபிப்பிராயங் களை அவ்வப்போது அரசியலாருக்கும், அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தாருக்கும் தெரிவிக்கும். ஒரு பெருங் கழக அமைப்பும், பொது ஜனக் கருத்தைத் (Public Opinion) தெரிவிக்கும் பான்மையும் வேண்டும். இனியேனும் நமது சமயநிலை நல்வளர்ச்சி பெறுவதாக ! மக்கள் தம் வாழ்வில் சிவமணம் கமழப்பெற்று மகிழ்வாராக !

# நமக்கு இனி வேண்டுவது யாது?

ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்.

சிவன் என்னும் செம்பொருளுடன் தோன்றிய சைவ சமயம் தமிழகத்தில் அநாதிகாலமாக அரசு வீற்றிருந்து, சென்ற இருபது நூற்றாண்டுகளில் பல தடவைகளில் நலிவுற்றும், மறைந்தும், தோன்றியும் இதுபோது ஒரு தோற்றத்துடன் விளங்குவது நாம் கண்ட தொன்றாகும். சமய வளம் கருதி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பெற்றது இம் மகா சமாஜம். பொன்னம்பலவன் திருவருட் குறிப்பால் சமாஜத்தின் முதற் கூட்டமும் ஐம்பதாம் முறையான பொன்விழாக் கூட்டமும் அவன் திரு முன்னரே நடைபெறுவதும் குறித்தற் குரியதாகும். * * *

சித்தாந்தத்தின் வளர்ச்சி, நம் சமய ஊக்கத்திற்கு ஓர் அறிகுறியாகும். இன்னும் நமக்கு வேண்டுவது யாதெனச் சிறிது கவனிக்க வேண்டும் :

1. சமாஜம், சைவ சமுதாயத்திலிருந்து ஒரு பெருந்திரளான அங்கத்தினர்களைக் கொண்டதாகத் திகழவேண்டும்.

2. அவர்களது ஆண்டுக் கட்டணத்தை அவசியமாகப் பெற்று, சமய வளர்ச்சிக்கான பணிகளில் ஈடுபடுதல் வேண்டும்.

3. திருமுறைகளையும், சமய நூல்களையும் பல்லாயிரக் கணக்காகப் பதிப்பித்து, வீடுதோறும் சைவ மணங்கமழச் செய்தல் வேண்டும்.

4. சித்தாந்தம், இன்னும் அழகிய நன்முறையில் வெளிவருதல்வேண்டும். இம் மாத இதழ் ஒவ்வொருவரும் வாங்கிப் பயன்பெறக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

5. சென்னை அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தாரின் சமய வளர்ச்சிக்கான பூரண ஆதரவும் கீழ்க்கண்டவைகட்குக் கிடைக்கும்படி செய்தல் வேண்டும் :

(a) ஒவ்வொரு கோயிலும், தன் வருவாயில் ஒரு சிறந்த பகுதியைச் சமயப் பிரசாரத்திற்காகப் பயன்படுத்துவதென்பது.

(b) சிறப்புக்களிலும், வாரந்தோறும் ஒரு நாளிலும், திருக்கோயில்களில் சிறந்த சொற்பொழிவுகள் நடத்தவேண்டியதென்பது.

(c) முக்கியமாக, கோயில்களின் வருமானத்திலிருந்து அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தாரின் வரியைத் தவிர, மீதம் யாவையும், அந்தத் தேவஸ்தானத்தின் நன்மைக்கெனவே, இனிப் பத்து ஆண்டுக்காலம் செலவிடவேண்டும் என்பது.

அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தார் 1925-ஆம் ஆண்டு முதல் உழைத்துவரும் சென்ற முப்பது ஆண்டுகளில், எத்தனை எத்தனை திருக்கோயில்கள் பாழடைந்தும், சிதறுண்டும், சீர்குலைந்து மிருக்

உ

தந்தி : ஜூவெல்லரி　　　　　　　போன் நெ. 22

# ஸ்ரீ நடராஜ விலாஸ்

## ஜூவெல்லரி ஹால்,

## சிதம்பரம்.

※

S. R. சீல் உத்திரவாதமுள்ளது.

தபால்பெட்டி நெ. **14**

எங்களிடம் நாகரீகமான வேலைப்பாடு நிறைந்த பவுன் தங்க நகைகள், சுத்தக் கட்டி வெள்ளி கொலுசுகள், பாத்திரங்கள், ரெங்கூன் வைர ஆபரணங்கள் எப்பொழுதும் ஏராளமாய்க் கிடைக்கும். ஆர்டரின் பேரிலும் தயார் செய்து தருகிறோம்.

※

உரிமையாளர் :

செ. ரெத்தினசாமி செட்டியார்.

*Remember the Name*

# MAYER & COMPANY

Established in 1930

For Everything in the
Drug and Chemical Line :
Patent Medicines, Surgical Instruments and
Hosp:tal Appliances etc., etc.
Suppliers to :
Government, Local Fund Hospitals & Dispensaries
Southern Railways
Corporation of Madras etc., etc.

RATES COMPETITIVE — PROMPT ATTENTION

Phone : 3757 Post Box No. 504 Grams : " **Mayerdrug** "

**16, AYYA PILLAI STREET, MADRAS-3**

---

Walajapet, his birth place, was the first to claim the affections of Sri Masilamani Mudaliar. 1942 saw him constructing a hall for use of the public and the religiously minded to hold congregational and religious discourses, in the town. One could easily perceive the bent of mind of Sri. Masilamani. Religious and true to religion, helping without pomp or prominence the cause of devotees. The Dwajasthambam at Lord Ekambaranathar's temple at Walajapet is a silent testimony to his munificence and religious faith. He renovated the temples of Sri Ekambaranathar and Sundaravinayagar at Walajapet and performed the Kumbabhisheka cermonies. To help the puplic he constructed and established drinking water-pipes—a welcome and selfless gift in these days of water-scarcity.

His further activities are clear proof of future. He became the trustee of local educational institutions like Kannappanayanar Kazhagam, Hindi Primary School etc.

It is the ardent desire of his friends and well-wishers that Sri. Masilamani Mudaliar should live to a ripe old age doling out his charites in the same selfless religious direction. May his business prosper. Lord Ekambaranathar, the Lord of the Universe is truly watching him grow from strength to strength.

*—From the Silver Jubilee Sovenir of the Chemists and Druggists Association, Madras.*

Post Box No. 530 Tel: No. 3181

# S. KUPPUSAWMY & CO.

(THE POPULAR SPIRIT STORES)

15, Venkatachala Mudali Street, P. T., Madras-3

Telegraph Address :—"VINEGAR"

Wholesale and Retail in the Following

*Denatured Spirit*

| | |
|---|---|
| Varnish or French Polish Shelloc Varnish | Aeroplane Brand, Cow Brand, S. K. Brand |
| Phenyle | Bulldog Brand, Lion Brand British Home Brand |
| Table Vinegar | Cow Brand, parrot Brand |
| Castor Oil Cold-drawn | Mother & Baby Brand |

Distilled Water — S. K. & Co.,
Acid Distilled Water — Motor Brand
Omum Water — Butterfly Brand
and also all kinds of paints

Head Office : at MADRAS

Branches :—6, Kalaspalayam, Bangalore City, 19/43, Pattabiramiah Lane, Governerpet Vijayawada, and 168, Long Bazaar, Vellore

---

## எஸ். குப்புசாமி அண்டு கம்பெனி

உரிமையாளர்

சைவம் வளர்க்கும் செம்மல். விரிஞ்சைப்பதி வழித்துணைநாதர் ஆலயத்திற்கு மின்சார விளக்கு அமைக்கும் திருப்பணி புரிந்தவர். வாலாஜாபாத் இந்துமத பாடசாலைக்கு ரூ. 2000 நன்கொடை யளித்தவர். வடலூரில் தைப்பூச விழாவில் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அன்னதானம் செய்பவர். ஜனவரி முதல் தேதிகளில் திருத்தணிகையிலும் அவ்வாறே அன்னதானம் செய்பவர்.

தஞ்சை மாவட்டத்தில் மகிழங்கோட்டையில் ஞானசித்தி விநாயகர் கோவிலில் திருப்பணி செய்து, சிவராத்திரியில் மகேஸ்வர பூசை செய்பவர்.

திருக்கழுக்குன்றத்தில் ஆவணி மூல விழாவில் பெருஞ்செலவில் அன்னதானம் செய்பவரும், சென்னை வண்ணையம்பதியில் வார வழிபாட்டிற்குப் பேருதவி புரிபவரும் மங்கையர் திலகமுமாகிய திருமதி வள்ளியம்மையாரின் சம்பந்தி. குடும்பத்தோடு சைவத்திற்கு உழைக்கும் பேறுபெற்றவர். சமாஜத்தின் 48-ம் ஆண்டு விழாவைச் சிறப்புற நடத்தித்தந்த பெருமகனார். —ச. கீ

Telephone No. 2510. Telegrams 'SPIRITWARE

# SPIRIT WAREHOUSE

P. B. No. **522**

**49, SYDENHAM'S ROAD, MADRAS – 3.**

*Manufacturers of*

High Grade Disinfectants and Wholesale Dealers in Denatured Spirit and Furniture Polish Etc.,

*Contractors to :*

The Supply Department of the Government of India, Railways, Corporations, Municipalities and Government Medical Stores Depot, Madras.

## ஸ்பிரிட் வேர் ஹவுஸ்

உரிமையாளர்

## *S. பாலசுப்பிரமணிய முதலியார்*

வணிகத்துறையில் சிறந்துள்ளவர். அதனோடு வள்ளன்மையும் மிக்கவர். தியாகராயர் கல்லூரிக்கு ரூ. 5000 நன்கொடையளித்தவர். வடலூர் குருகுலம் பள்ளிக்கூடத்திற்கு ரூ. 5000 தந்தவர். வாலாஜாபாத் இந்துமத பாடசாலைக்கு ரூ. 2000/- ஈந்தவர். வடலூரில் அன்னதானத்திற்குப் பெருநிதியளித்தவர். சைவ சித்தாந்த சமாஜத்தின் 48-ம் ஆண்டு விழாவைச் சிறப்புற நடத்தித் தந்தவர். சைவப்பெருமகனார்.

—ச. சி.

சத்தில்லாத உணவு நோய்க்கும் காரணமாகிறது

## சத்துள்ள உணவு எது?

கைக்குத்தலரிசியே சத்துள்ளது. அது சுவை யுள்ளது. போாசிரியர் களும் டாக்டர்களும் அதையே பயன்படுத்துகிறார்கள். வள்ளலார் மாணவர் இல்லத்திலும் எல்லோரும் கைக்குத்தல் அரிசியே உண்கிறார்கள்.

❊

பாடசாலையைச் சேர்ந்த தொழிற்சாலையில் கைக்குத்தல் அரிசியே தயாரிக்கிறோம்.

(நாங்கள் பயன்படுத்துவதோடு விலைக்கும் தருகிறோம்)

**வாலாஜாபாத்தில் விலை**

| | | | |
|---|---|---|---|
| சிறுமணி புழுங்கல் படி | **0-11-0** | கிச்சிலி சம்பா புழுங்கல் படி | **0-12-0** |
| சிறுமணி பச்சை படி | **0-12-0** | கிச்சிலி சம்பா பச்சை படி | **0-13-0** |

❊

சென்னையில் கீழ்க்கண்ட இடங்களில் எங்கள்
கைக்குத்தல் அரிசி கிடைக்கும் :—

**டி. மாணிக்கம் செட்டியார்,** மண்டி,
25, ஆண்டர்சன் தெரு, சென்னை—**1.**

❊

**டி. சுப்பிரமணியசெட்டியார்,** மளிகை,
79, பஸார் ரோட், மயிலாப்பூர், சென்னை—**4.**

## டி. மாணிக்கம் செட்டியார்

வாலாஜபாத் இந்துமத பாடசாலை ஆட்சிக் குழுவின் தலைவர். அப்பள்ளிக்குத் தானமாக மாணிக்கம் அச்சகம் அமைத்துத் தந்தவர். சைவத்திற்குத் தளராது உழைக்கும் தயாளர்.

திருவான்மியூர்க் கோயிலில் திருப்பணிகள் செய்துவரும் திரு. டி. சுப்பிரமணியம் செட்டியாரின் (அரிசி வியாபாரம்) தமையனார். சமாஜத்தின் உழுவலன்பினர்.

—ச. சி.

Tele. Address: 'SHELLPAINT' Telephone : 3642

# A. S. MANICKAM & CO.,

## PAINT MERCHANTS

*Authorized Dealers for :*

*Messrs.*

Shalimar Paint, Colour & Varnish Co., Ltd.

Jenson & Nicholson (India) Ltd.

British Paints (India) Ltd.

East India Paint & Chemical Works Ltd.

Addisons Paints & Chemicals Ltd.

Noble Paint & Varnish Co., Ltd.

and stockists of many popular brands in Paints & Colours, at Reasonable rates.

*ORDERS SOLICITED :*

**46, Venkatachala Mudali Street**

**Madras-3.**

*Long Live Our Police Force and May Their Usefulness Increase !*

❋

Longer in the Service of

**INDIAN INDUSTRIES**

For Supply of Building Materials in South India

# M. KUPPUSAWMY NAICKER

- ❋ Stockists for ACC Nilgiri Brand Portland Cement with 12 Depots in Madras City and at Arcot and Conjeeveram.
- ❋ Stockist **Silvicrete White Cement**
- ❋ Stockist for " **Everest** " Asbestos Cement, Rain Water Pipes and Fittings, etc. and " **Everest** " Corrugated and Trafford Sheetings.
- ❋ Registered Stock-Holder for Iron & Steel Standard materials.
- ❋ Controlled Stock-Holder for Iron & Steel Scrap and defectives.
- ❋ Controlled Stock-Holder for Mysore Pig Iron.
- ❋ Proprietor : The Cement Works, Royapettah, Madras-14 ('PHONE : 85802)

*Madras Stock Yard* :
139, Choolai High Rd.,
Madras.

*Bangalore Stock Yard* :
1, Brind Square,
Mysore Rd., Bangalore City.
(Phone : 3846)

*Importer & Exporter* :

**Head Office : 15, Sembudoss St., Madras-1**
'PHONE : 2489
Tele : " Hamsa ", Madras.

# புத்தக லிஸ்ப்பட்டி


## (Catalogue of Books)


| | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|
| தேவாரம் அடங்கன்முறை | ... | 7 | 0 | 0 |
| 8, 9 திருமுறைகள் | ... | 1 | 0 | 0 |
| திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி— உரையுடன் | ... | 1 | 0 | 0 |
| பெரியபுராணம் | .... | 3 | 0 | 0 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை | ... | 0 | 12 | 0 |
| சிவஸ்தல யாத்திரை மஞ்சரி | ... | 0 | 4 | 0 |
| கந்தரனுபூதி உரை | ... | 0 | 2 | 0 |
| திருமுருகாற்றுப்படை உரை | ... | 0 | 2 | 0 |
| முருகன் மூந்நூல் | ... | 0 | 3 | 0 |
| சிவஞான சித்தியார் முதல் சூத்திரம்— சிவாக்கிர யோகியருரை | ... | 1 | 0 | 0 |
| சித்தாந்த அஷ்டகம் | .... | 0 | 8 | 0 |
| சிவஞான போதம் மொழிபெயர்ப்பல்ல | ... | 0 | 2 | 0 |
| அப்பர் நாடகம் | ... | 0 | 2 | 0 |
| சுந்தரர் நாடகம் | .... | 0 | 2 | 0 |
| சைவ சமயத்தின் தற்காலநிலை | ... | 0 | 4 | 0 |
| கைவல்ய நவநீதம்-உரை | ... | 1 | 8 | 0 |
| சம்பந்தர் தேவாரத்திட்டு | .... | 0 | 1 | 0 |
| அப்பர் ,, | ... | 0 | 0 | 6 |
| சுந்தரர் ,, | .... | 0 | 0 | 6 |
| திருவாசகத்திரட்டு | ... | 0 | 0 | 6 |
| குகார்ச்சனைத் திருமந்திரம் | ... | 0 | 1 | 0 |

கிடைக்கும் இடங்கள் :—

1. திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள், பி. ஏ., பி. எல்.,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1.

2. திரு. ம. சி. நித்தியானந்தம்,
12, தாச்சி அருணசல முதலி தெரு,
மயிலாப்பூர், சென்னை-4.



COVER PRINTED AT RAVAI AND SONS, TRIPLICANE, MADRAS - 5.